ஐரோப்பிய வரலாறு

(கி. பி. 1450 முதல் 1970 வரை)

Thigarajar college library
Madurai

ஆசிரியர்
டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பி.எச்டி.,

மேற்பார்வை :
பா. மாணிக்கவேலு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

ஐரோப்பிய வரலாறு

(கி. பி. 1450 முதல் 1970 வரை)

ஆசிரியர்
டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பி.எச்டி.,

மேற்பார்வை :
பா. மாணிக்கவேலு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.)

ஐரோப்பிய வரலாறு

(கி. பி. 1450 முதல் 1970 வரை)

ஆசிரியர்
டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பிஎச்.டி.,
ரீடர், வரலாற்றுத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

மேற்பார்வை :
பா. மாணிக்கவேலு,
வரலாற்றுத் துறைப் பேராசிரியர்,
அரசினர் கலைக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—April, 1961
Revised Edition—January, 1979
Number of Copies—2000

T.N.T.B.S. (C.P.)

© Government of Tamilnadu

HISTORY OF EUROPE (1450 to 1970 A. D.)

Dr. M. AROKIASWAMY
Revised by P. MANICKAVELU

Price Rs. 6-50

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by:
Ideal Printers,
Madras - 600 006.

அணிந்துரை

(திரு. **செ. அரங்கநாயகம்,** தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினெட்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்களின் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன் வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரண மாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், மெய்ப்பொருளியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய பல துறைகளில் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.


இவற்றுள் ஒன்றான **ஐரோப்பிய வரலாறு** (கி. பி. 1450முதல் 1970 வரை) என்னும் இந்த நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் வெளியான நூலாகும். தமிழ் மக்களின் பேராதரவினாலும் தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டவர்களின் நல்லூக்கத்தினாலும் இதன் முந்தைய பதிப்புப் படிகள் அனைத்தும் விற்பனையாகிவிட்டன. ஆதலின் இப்பொழுது இந்த நூல் மீண்டும் வெளிவருகிறது. இந்நூல் மைய அரசு, கல்வி, சமூகநல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின் கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள் அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளர வேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக் கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

செ. அரங்கநாயகம்

பொருளடக்கம்

		பக்கம்
1.	முன்னுரை ...	1
2.	தற்காலத் தொடக்கம் ...	13
3.	தேசிய நாடுகள் ...	27
4.	சமயச் சீர்திருத்தம் ...	40
5.	சமயச் சண்டைகள் ...	56
6.	பிரான்ஸின் வளர்ச்சி (1610-1660) ...	69
7.	பதினான்காம் லூயி மன்னர் (1637-1715) ...	82
8.	ருஷிய மறுமலர்ச்சி ...	103
9.	பிரஷ்யாவின் எழுச்சி ...	117
10.	பிரஞ்சுப் புரட்சி ...	132
11.	மாவீரன் நெப்போலியன் ...	150
12.	நெப்போலியனுக்குப் பின் ...	173
13.	ஜெர்மானியப் பேரரசு ...	189
14.	இத்தாலியில் தேசியம் ...	203
15.	ஐரோப்பா (1871-1901) ...	209
16.	போரின் வழி (1901-1914) ...	224
17.	முதலாம் உலகப்போர் (1914-1919) ...	231
18.	போரின் முடிவு ...	245
19.	இடைவெளி (1) (1918-1933) ...	251
20.	இடைவெளி (2) (1933-1939) ...	268
21.	இரண்டாம் உலகப்போர் (1939-1945) ...	279
22.	இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஐரோப்பா ...	299
23.	ஒற்றுமையை நோக்கி ஐரோப்பா ...	320
24.	தற்கால நாகரிகக் கூறுகள் ...	330
	துணை நூல்கள் ...	339
	கலைச்சொற்கள் அகராதி ...	340
	ஐரோப்பிய மன்னர்களின் வம்சாவளி ...	345
	பொருட் குறிப்பகராதி ...	348


1453.இல் ஐரோப்பா
தூயரோம் பேரரசு
அஸ்பர்க் உரிமைநாடுகள்
ரஷ்ய பேரரசு
நார்வே
சுவீடன்
வின்லாந்து
பால்டிக் கடல்
ஸ்காட்லாந்து
வட கடல்
அயர்லாந்து
இங்கிலாந்து
டென்மார்க்
அட்லாண்டிக் கடல்
பொமரேனியா
பிரஷ்யா
போலந்து
லிதுவேனியா
மாக்டெபர்க்
சேக்சனி
பிராண்டன் பர்க்
பொஹீமியா
நான்டில்
ஹங்கரி
ஸ்விஸ் தொகுப்பு
மிலன்
வெனிஸ்
ஜீனோவா
புளோரன்ஸ்
துருக்கிப் பேரரசு
கான்ஸ்டான்டி நோபில்
ரோம்
நேப்பிள்ஸ்
சார்டினியா
மத்திய
பெஜ் சுல்தான்
அல்ஜியர்ஸ் சுல்தான்
ட்ரிபோலி சுல்தான்
மால்டா
கரைக் கடல்

1. முன்னுரை

I

ஐரோப்பிய வரலாறு அறியாதவன் அரை மனிதன் என்பது பண்பாட்டு அறிஞரின் கூற்றாகும். வரலாறு எங்கு, எப்போது தொடங்கியது என்பதைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருப்பினும், மத்தியதரைக் கடல் பகுதி பழங்கால வரலாற்றிலே ஒரு முக்கிய இடம் வகிக்கின்ற தென்பதில் எவ்வித எண்ண முரண்பாடும் கிடையாது. வரலாற்றில் தோன்றிய முதல் பண்பாட்டுத் திட்டம் (Civilization) எகிப்தில் என்றும், மெசபோட்டேமியாவிலென்றும், இப்பொழுது இந்தியாவி லென்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆயினும், இந்த நாகரிகங்கள் எல்லாம் மத்தியதரைக் கடல் பிரதேசத்திலிருந்து தோன்றியவைகளே என்று கருத இடமுண்டு. பின்னர்த் தோன்றிய கிரேக்க, ரோம நாகரிகங்கள் வரலாறு கண்ட சிறந்த நாகரிகங்கள். முற்கால நாகரிகங்கள் எல்லாம் ஒரு விதத்தில் மறைந்த பின்னர் சிறந்த நாகரிகம் ஒன்று ஐரோப்பாவிலே உதயமாயிற்று. அது கிறித்துவுக்குப் பின், அவர் ஏற்படுத்திய மதத்தைப் பின்பற்றியது. இதைக் கிறித்தவ நாகரிக மென்றே கூறலாம்.[1] அது ஏறக்குறைய 1500 ஆண்டுக் காலம் ஐரோப்பா முழுவதும் ஆதிக்கம் செலுத்தியது மட்டுமின்றி, உலகம் முழுவதிலுமே தன் செல்வாக்கைப் பரப்பியது. கிறித்தவ ஊழியில்(era) தொடங்கி ஏறக்குறைய 1500 ஆண்டுக் காலம் இதன் ஆதிக்கம் முன் நின்றது.

இந்தக் கிறித்தவ நாகரிகத்தின் முக்கியக் கோட்பாடுகள் இரண்டு. ஐரோப்பா முழுவதற்கும் ஒரே கடவுள் கொள்கை; ஒரே அரசன் என்ற இவையே இக்கோட்பாடுக ளாகும். ரோமானிய நாகரிகமும் இவற்றிற்கு அரண் செய்தது. கி.பி. 4ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியில் கான்ஸ்டன்டைன் என்ற பேரரசர் கிறித்தவ மதத்தைத் தழுவியபோது கிறித்தவ மதக் கொள்கை ஐரோப்பா முழுவதிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இது நடந்தது கி. பி. 321ஆம் ஆண்டில். கி. பி. 800ஆம்

[1] 'Europe is Faith, Faith is Europe.'—*Belloc.*

ஆண்டில் சார்லமேகன் (Charlemagne) என்ற மாபெரும் அரசர் ஐரோப்பாவின் பெரும் பகுதிக்கு மன்னராக நியமிக்கப்பட்டார். அன்று கிறித்தவர்களின் பெருவிழாவாகிய கிறித்துமஸ் பண்டிகை. ரோம் நகரில் கடவுளே ஆராதித்துவிட்டு சார்ல மேகன் எழுந்தார். அப்பொழுது போப்பாக ஆட்சி செய்து வந்த மூன்றாம் லெயோ அவருக்கு ஐரோப்பிய மன்னராகப் பட்டம் சூட்டினார். கி. பி. 800ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 25ஆம் நாள் நடந்த இந்த முடிசூட்டு விழா ஒரு பெரும் நாக ரிகத்தை ஐரோப்பாவில் தொடங்கி வைத்தது. அங்கே ஒரு புதுக் காலம் பிறந்தது. இதையே நாம் பழங்கால ஐரோப் பாவினின்று பிரித்து இடைக்கால ஐரோப்பா என்று கூறுகி றோம். இக்காலம் ஏறக்குறைய 700 ஆண்டுக் காலம் நீடித்தது.

II

நமது ஐரோப்பிய வரலாறு இதன் முடிவிலிருந்து தொடங்கு கிறது. ஆனால், இதன் முடிவு எப்பொழுது ஏற்பட்டது என்று உறுதியாய் யாரால் சொல்லக்கூடும்? பொதுவில் இடைக்காலத் தின் முன் கூறிய இரண்டு இலக்கணங்களைக்கொண்டே இதன் முடிவை அறிஞர் ஒருவாறு கணக்கிட் டிருக்கின்றார்கள். கிறித்தவ மதத் தலைவரான போப்பின் ஆதிக்கமும் திருச்சபை யின் ஆட்சியும் குறைந்தது என்றாலும், ஐரோப்பா முழுவதும் ஒரே ஆட்சி என்ற கொள்கை தன் அளவில் குறைந்தது என்றா லும், இடைக்காலம் அவ்வளவில் முடிந்தது என்று கொண்டு சிலர் 1517-ல் மார்ட்டின் லூத்தர் வொர்ம்ஸ் பட்டணத்தில் போப்பின் உத்தரவைத் தீ வைத்துக் கொளுத்தின அன்று இடைக்காலம் முடிந்த தென்பர். சிலர் 1494-ல் ஃபிரான்ஸ் நாடு இத்தாலியின்மேல் படையெடுத்தபோது இது முடிந்த தென்பர். ஆயினும், இது ஒரு சிறிய அளவில்தான் உண்மை யென்று கொள்ளக்கூடும்; ஏனென்றால், 1517-ல் திருச்சபை யின் பலம் குன்றிற்று என்றும், 1494-ல் தேசிய ஆட்சிகள் ஐரோப்பாவில் தொடங்கின வென்றும் சொல்வது பொருந் தாது. கி. பி. 14ஆம் நூற்றாண்டிலேயே ஜான் விக்லிவ் (John Wycliffe) இங்கிலாந்திலும், போஹேமியாவில் ஹஸ் (Huss) என்பவரும் திருச்சபையை எதிர்த்தார்கள். விக்லிவ் அதன் முக்கியப் பிரமாணமாகிய புனிதப் பொருள் மாறு பாட்டுக் கொள்கையையே (Transubstantiation)[1] மறுத்தார்.

[1] கோதுமை அப்பம் கடவுள் அருளால் கிறித்துவாகவே மாறிவிடுகிறது. திராட்சை ரசம் கிறித்துவின் இரத்தமாக மாறுகிறது. கிறித்துவர்கள் செய்யும் பூசையில் குருவின் மூலமாக இது நடக்கிறது என்ற பிரமாணம்.

இவர்கள் திருச்சபைக்கு விரோதமான பெரும் புரட்சிக்குக் காரணமானவர்கள். திருச்சபையின் ஆதிக்கம் அப்பொழுதே ஒருவிதத்தில் குன்றிவிட்ட தென்று சொல்ல வேண்டும். ஆயினும், இடைக்காலம் அப்பொழுதே முடிந்துவிட்டதென்று நாம் சொல்ல முடியாது. அதுபோலவே 1494-க்கு ஏறக் குறைய 150 ஆண்டுகளுக்கு முன்பே ஃபிரான்ஸ் நாட்டிற்கும் ஆங்கில நாட்டிற்கும் இடையே பெருத்த சண்டை மூண்டது. இதை வரலாற்றுசிரியர்கள் நூறுண்டுப் போர் என்று கூறு கிறார்கள். ஆனல் இந்தச் சண்டை தொடங்கிய 1337ஆம் ஆண்டிலேயே இடைக்காலம் முடிந்துவிட்டது என்று நாம் கூறுவதில்லை.

மக்கள் வரலாறு ஒரு தொடர்ச்சியான பொருள்பற்றியது. அவர்கள் வளர்ச்சி மற்ற உயிருள்ள பொருள்களின் வளர்ச்சி போன்று தொடர்ச்சியான தென்பதால், அவர்கள் வரலாறும் அத்தகையதே யாகும். ஆகவே, இந்த வரலாற்றைப் பல பாகங்களாக நாம் பிரித்தபோதிலும் எங்கு ஒரு பாகம் முடிகிறது, எங்கு மற்றொரு பாகம் தொடங்குகிறது என்பதை நாம் அறுதி யிட்டுக் கூற இயலாது. இவை ஒன்றையொன்று தொடர்ந்தே நிற்கின்றன. நாம் மத்திய கால ஐரோப்பிய வரலாற்றைக் கி.பி. 1000-ல் தொடங்குவதாக வைத்துக்கொண்டால், அது ஓர் ஐந்நூறு ஆண்டுக் காலத்தில் வளர்ந்து சிறுகச் சிறுக மறைந்த தாகக் கொள்ளவேண்டும். கி. பி. 1000 முதல் 1300 வரை மத்திய காலக் கோட்பாடுகள் தம் ஆதிக்கத்தில் வளர்கின்றன. கி.பி. 1300-லிருந்து 1500வரை அவை மெல்ல ஒடுங்குகின்றன.

III

ஐரோப்பிய வரலாற்றின் இடைக்காலத்தை (Middle Ages) வரலாற்றறிஞர் சிலர் இருண்ட காலம் (Dark Ages) என்று குறிக் கின்றனர்.[1] இதிலும் முரண்பாட்டிற்குப் பெரிதும் இடமுண்டு. மத்திய காலத்தில் மக்கள் தம் எண்ணம்போல் நடக்க இடமில்லை. ஐரோப்பா முழுவதுமே நாம் முன்னே கூறியதுபோல் ஒரே அரசனது சாம்ராச்சியம்; அவ்வரசனும் திருச்சபையின் ஆதிக் கத்தின் கீழ் இருந்துவந்தான். அதனல் போப்பின் ஆணைப் படியே எல்லோரும் நடக்கவேண்டிய தாயிற்று. முதலில் விவிலிய நூல் ஒன்றே மக்கள் படிப்பதற்கேற்றது என்ற கொள்கை

[1] இப்பெயரை முதலில் அமலுக்குக் கொண்டு வந்தவர் பிளாவியோ பியோண்டோ (Flavio Biondo). இவர் இக்காலம் கி. பி. 500 முதல் 1500 வரை நீடித்ததென்பார்.

நிலவியது; பிறகு 13ஆம் நூற்றாண்டிலே கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டல் எழுதிய நூல்கள் இலத்தீன் மொழியிலே அச்சிடப் பெற்று மக்கள் அறிவுக்கு உதவின. இவைகளைக் கொண்டே வானத்தையும் பூமியையும் அளக்க வேண்டும், இவற்றில் இல்லாத பொருள் உலகத்தில் அறிவதற்கில்லை என்பது 13ஆம் நூற்றாண்டிலே பொதுவில் மக்கள் கொள்கையாகும். இதனாலேயே இக்காலத்தில் கற்றறிந்தோர் மத்திய காலத்தை இருண்ட காலம் என்று கூறிப் போந்தனர். ஆனால், ஐரோப்பாவின் இந்த வரலாற்றுப் பாகத்தில் மக்கள் ஓர் இருண்ட உலகத்திலே வசித்தார்கள் என்பது இதன் பொருள் அன்று; அப்படிப்பட்ட பொருள் அதற்கு இருக்கவும் முடியாது. ரோஜர் பேக்கன், தாமஸ் அகுயினஸ், தாமஸ் ஆகெம்பிஸ், எராஸ்மஸ் போன்ற பேரறிஞர்கள் இந்தக் காலத்தில்தான் ஐரோப்பாவில் வாழ்ந்தார்கள். 13ஆம் நூற்றாண்டிலேயே தூரதிருஷ்டிக் கண்ணாடி(Telescope), பெரிதாக்கும் கண்ணாடி (Magnifying glass), மாலுமிகளின் திசை காட்டும் கருவி (Mariner's compass) என்றவை பயன்பட்டன. ரோஜர் பேக்கன் பூச்சிகளின் உடலமைப்புக் கூறு, கண்ணுக்கெட்டாக் கிருமிகள் (Microbes) என்பவற்றைப் பற்றிப் பல ஆராய்ச்சிகள் புரிந்தார். இப்போதைவிட அப்போது கடவுள் கொள்கை மக்களைத் திறம்பட ஆட்கொண்டிருந்தது. அதனால் அவர்கள் இவ்வுலகத்தையும் இதன் பொருள்களையும் பற்றி அதிகமாகச் சிந்திக்கவில்லை. பழங்கால கிரேக்கரும் ரோமரும் கடவுளையும் விண்ணுலகத்தையும் இவ் வுலகத்தே கொண்டுவந்து அமைத்தார்கள். இங்கே இன்பமாய் இருப்பதையே அவர்கள் பேரானந்தமாகக் கருதினார்கள். மத்திய காலத்து மக்களோ, கடவுளை ஆகாயத்திலே மேகங்களுள் புதைத்தார்கள். சதா அவரையே அண்ணாந்து பார்த்து இவ்வுலகத்தைக் கண்ணின் நீர்க் கணவாயாகச் செய்து கொண்டார்கள். அவர்களுக்கு அறிவைப் பெருக்குவதற்கு அவசியமும் இல்லை; அவகாசமும் இல்லை.

இடைக்காலம் இருண்ட காலமன்று என்பதற்கு ஒரு சில சான்றுகள் காட்டுகிறோம்.

1. இடைக்கால மக்களின் அரசியல் நிலையை முதலில் எடுத்துக் கொள்வோம். பிரதிநிதித்துவ அரசியல் என்று நாம் இப்பொழுது பேசும் அரசியல் கொள்கை அவர்களுக்கும் தெரிந்திருந்தது. 1302ஆம் ஆண்டிலேயே மக்கள் பிரதிநிதிகள் பிரெஞ்சுப் பாராளுமன்றத்தில் காட்சி அளித்தார்கள். ஜெர்மனி நாட்டிலும் ஏறக்குறைய அதே கால அளவில் பெரிய பட்டணங்

களிலிருந்து பிரதிநிதிகள் டையட் என்று சொல்லப்பட்ட ஜெர்மன் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டார்கள். சுவீடன் நாட்டில் பிரதிநிதித்துவக் கொள்கை 1359-ல் அமலுக்கு வந்தது. டென்மார்க்கில் பழமையான அவர்கள் பாராளு மன்றம் 1314-ல் புதுப்பிக்கப்பட்டது. ஸ்கேண்டிநேவியாவில் மக்கள் சபை கி. பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்தே வழக்கில் இருந்தது என்று சொன்னால், நாம் தற்காலக் கொள்கையாகக் கொள்ளும் மக்கள் ஆட்சி மத்திய கால ஐரோப்பாவிலேயே இருந்தது என்பதற்கு இன்னும் என்ன சான்று வேண்டும்? நம்மை விட இன்னும் ஒரு படி அவர்கள் உயர்ந்திருந்தார்க ளென்று கொள்ளவேண்டும். அவர்களைவிட நாம் அரசியலில் சுயநலம் கொண்டவர்கள். நாட்டுக்கு நாடு தன் நன்மையைக் கோருவதி லேயே நமது அரசியலின் பெரும் பாகம் கழிகிறது. மத்திய கால மனிதர்கள் பெரும்பாலும் பெருநோக்குக் கொண்டவர்கள். ஐரோப்பா முழுவதும் ஒரே நாடு என்ற கொள்கை கொண்ட வர்கள். இந்தச் சர்வதேச மனப்பான்மையை நாம் இப்பொழுது ஒரு பாடமாகக் கற்றுக்கொண்டிருக்கின்றோம். வெண்டல் வெல்கி **ஒரே உலகம்** என்ற நூலை அன்மைக் காலத்தில் எழுதி ஓர் உயர்ந்த மனப்போக்கை எடுத்துரைத்தார். இந்த மனப்போக்கு உண்மையாகவே மத்திய கால மனப்போக்குத்தான். பிளாரன்ஸ் பட்டணத்தில் தோன்றிய டான்டே (Dante) என்ற உலகப் புகழ் பெற்ற அறிஞர், இவ் வுலகப் புகழ் பெறுவதற்குப் பெருங் காரண மாகத் திகழ்ந்தது அவரது ஒருலகக் கொள்கையே ஆகும். அவர் வாழ்ந்தது கி. பி. 13ஆம் நூற்றாண்டிலே; 1265-ல் பிறந்து 1321-ல் அவர் தம் வாழ்க்கையை முடித்துக் கொண்டார். இடைக்காலத்தவர் ஐரோப்பா முழுவதற்கும் தனி மொழியாக இலத்தீன் மொழியை வைத்திருந்தார்கள். அந்த மொழியில் ஒரு நூலை எழுதினால் ஐரோப்பா முழுவதும் அதைப் படிக்கக்கூடும்.

2. இவ்வழியே கலை உலகிற்குப் பெரும்பணி புரிந்தது இடைக்கால ஐரோப்பிய நாடு. பல்கலைக்கழகங்கள் ஐரோப்பா வில் இக்காலத்தில் தோன்றின. கோர்டோவா சாலர்னோப் பல்கலைக்கழகங்கள்; பதுவாப் பல்கலைக்கழகம்; பாரிஸ் பல்கலைக் கழகம் என்ற உலகத்தின் முது பல்கலைக்கழகங்கள் ஸ்பெயின், இத்தாலி, ஃபிரான்ஸ் நாடுகளில் முறையே இந்தக் காலத்தில் தோன்றின. அங்குக் கல்வி பயில்வதற்கு மாணவர் பிற நாடுகளி லிருந்தும் செல்ல முடிந்தது. பாரிஸ் பல்கலைக்கழகத்திலிருந்த வர்களில் ஒரு பகுதியினரே இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தை நிறுவினர்கள். அச்சுப் பொறிகள் தோன்றியதும்

நூல்கள் முதல் முதலாக அச்சேறியதும் இந்தக் காலத்திலேயே யாகும்.

3. வாணிகம், நாடு கடந்து வாணிகம் செய்தல், தங்கம் வெள்ளி நாணயங்கள் கொண்டு பண்டம் மாற்றல் என்ற சமுதாய நலன்கள் பற்றிய பல துறைகளிலும் இடைக்கால ஐரோப்பாவில் பெரு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. வெனிஸ் பட்டணத்து வணிகர்கள் ஷேக்ஸ்பியர் போன்ற பெருங் கவிகளால் பாடப் பெற்றவர்கள். அங்கு உப்பு வாணிகம் திறம் பட நடந்தது. கீழை நாடுகளில் கிடைத்த நறுமணப் பொருள்கள் வெனிஸ் பட்டணம் மூலமாகவே ஐரோப்பாவின் பல நாடு களுக்கும் அனுப்பப்பட்டன. பால்டிக் கடற்கரை நாடுகளில் மீன் பிடிக்கும் தொழில் பெருவாரியாக நடந்தது. மீன்களை டப்பிகளில் அடைத்துப் பிற நாடுகளுக்குப் பால்டிக், வட கடல் பிரதேச வியாபாரிகள் அனுப்பினர்கள். இன்னும் இவர்கள் ருஷிய நாட்டுக் கோதுமையை ஐரோப்பாவின் தென் பகுதிக்கும் மேற்குப் பகுதிக்கும் அனுப்ப உதவினர்கள். கி. பி. 12, 13ஆம் நூற்றாண்டுகளில் பிற நாட்டு வாணிகம் ஐரோப்பிய நாடுகளில் நைல் நதியின் வெள்ளம்போல் பெருகி அவற்றை வளப்படுத்தின என்று வான் லூன் (Van Loon) என்ற ஆசிரியர் கூறுகிறார்.[1]

IV

சில வரலாற்றறிஞர்கள் கி. பி. 800 முதல் கி.பி. 1000 வரை யில் இருண்ட காலம் நீடித்தது என்று கூறுகின்றார்கள். அதுவும் ஏற்புடைத்தன்று. சார்லமேகன் என்ற பேரரசர் ஆட்சி செய்த காலம் இருண்ட காலமாய் இருந்திருக்க முடியாது. அவருடைய வெற்றிகள், அரசு மாண்பு முதலியவையே இதற்குப் போதிய காட்டுகள். அது மட்டுமன்று, கிறித்துவுக்குப் பின் ஆயிரம் ஆண்டுக் காலம் அறிவின்மையில் வாழ்ந்த ஒரு பரந்த கண்டம் திடீரென்று அறிவு பெற்றது என்று கூறுவதும் பொருந்தாது.

இதுவரை நாம் கி. பி. 12, 13ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப் பிய மக்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறினேம். இடைக் கால இலட்சியங்கள் மிக உயர்வு பெற்றிருந்த காலம் இது. இனி வரும் வரலாறு இவற்றைப் பின் தொடர்ந்த இரு நூற்றாண்டு களைப் பற்றியது. இந்தக் காலத்தில் இவை எவ்வாறு மாற்றுருப் பெற்றன என்று காட்டுவதே இனி நாம் சொல்லப் போவதன் நோக்கம்.

[1] Van Loon, *Story of Mankind.*

1. முதலில் தேசிய ஆட்சிகள் வலுப் பெறுகின்றன. மத்திய காலப் பரந்த நோக்கம் இப்போது மெல்ல விலகுகிறது. சிறப் பாகப் ஃபிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் இந்தக்காட்சி வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. மற்ற நாடுகளே வேற்றுமை நோக்கோடு பார்ப்பதில் மட்டும் இது அமையவில்லை. முற்காலத் தில் இங்கு உரம் பெற்று விளங்கிய ப்யூடலிசம் என்ற நிலமானிய முறை மக்களாட்சி முன் ஆட்டம் கொள்கிறது. வியாபாரத்தின் பெருக்கால் சாதாரண மக்களும் ஆக்கம்பெறுகிறார்கள்; நாட்டின் ஆட்சியிலே இடம் பெறுகிறார்கள். நாட்டுக்கு ஒரு மொழி என்ற கொள்கை வலுப் பெறுகிறது. ஃபிரான்சில் பிரெஞ்சு மொழியும், அம்மொழி அரசாங்க மொழியாகத் திகழ்ந்த ஆங்கில நாட்டிலே ஆங்கிலமே நாட்டின் மொழியாகவும் இடம் பெறுகின்றன. அது வரை ஃபிரான்ஸ் நாட்டில் அரசாங்க சேவையில் பணிபுரிந்து வந்த ஆங்கிலப் போர் வீரர்கள் அன்னிய நாட்டினர் என்று ஒதுக் கப்படுகிறார்கள். இங்கிலாந்து கால்வாயில் பிரெஞ்சு, ஆங்கில மாலுமிகளுக்கிடையே அடிக்கடி கை கலப்பு ஏற்படுகிறது. இரு நாடுகளுக்குமிடையே அப்போது ஏற்பட்ட நூற்றாண்டுச் சண் டைக்கு இவைகளும் காரணங்களாக இருந்தனவென்றால், இந்த நாடுகளில் எத்தகைய தேசிய உணர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது ஒருவாறு பெறப்படும்.

நூற்றாண்டுச் சண்டை நிலமானியச் சண்டையாகத் தொடங் கித் தேசிய நாடுகளின் உரிமைப் போராக முடிந்தது என்று ஹேய்ஸ் என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார்.[1] இப்போர் 1453-ல் முற்றுப்பெற்றது. அதன் பிறகு நிலமானிய முறை பிரான்சில் தகர்த்தெறியப்பட்டது; பிரான்ஸ் நாடு தனி நாடாக ஒற்றுமையுடன் விளங்கவேண்டு மென்பது மன்னனின் நோக்க மாகவும் மக்களின் நோக்கமாகவும் ஆயிற்று. 1461ஆம் ஆண்டு இந் நாட்டில் பட்டத்திற்கு வந்த பதினோராம் லூயி மன்னர் இந்த நோக்கம் கைகூடத் திறம்பட முயற்சி செய்தார். எல்லோ ரையும் தம்மோடு கொண்டு செலுத்த அவர் முதல் முதலாகப் பிரபுக்களை அரசியலி லிருந்து ஒதுக்கினார். சாதாரண மக்களி லிருந்து தம் மந்திரி சபையை அமைத்துக் கொண்டார். அவ ருடைய பழங்கால நாவிதனே அவரது சிறந்த ஆலோசனையாளன் என்றால் நிலமானியக் கொள்கைகள் எவ்வளவு தூரம் ஃபிரான்சில் ஒதுங்கியிருக்க வேண்டும்! மன்னர் நாட்டில் பிரயாணம் செய்யும் போதும் மக்கள் தம்மைக் காண வரும்போதும் சாதாரணமான வர்களையே தேடிச் செல்வார். இதனால் இவரை நாட்டில்

[1] Hayes, *History of Europe.*

'சிலந்தி மன்னன் (Spider King) லூயி' என்று அழைத்தார்கள்; அவ்வளவு தூரம் இவர் மற்றவரைக் கவர்ந்து வந்தார் என்பது இதன் பொருள்.

பதினைன்காம் நூற்றாண்டின் இடையில் ஃபிரான்ஸ் மன்னர் இரண்டாம் ஜான் என்பவர் இங்கிலாந்தில் சிறைப்பட்டார். அப்பொழுது மக்களே ஃபிரான்ஸில் அரசாட்சியை நடத்தினர்கள். பிற்காலத்தில் நூறாண்டுப் போர் முடிந்த பிறகு இவர்களே மன்னருக்கு உற்ற துணையாகவும் இருந்தார்கள். நாட்டின் படை வலிமையை உறுதிப்படுத்தத் தேவைப்பட்ட பணத்தைப் பெறுவதற்கு 'டெய்ல்' என்ற வரி விதிக்க மன்னருக்கு இவர்கள் உரிமை யளித்தார்கள். கி. பி. 1500ஆம் ஆண்டில் பிரெஞ்சு மன்னர் வீறுபெற்று விளங்கினர். பிரபுக்கள் மட்டுமல்ல, திருச் சபையும் அவர்க்கீழ் அடங்கின. அங்குத் தேசிய அரசு ஏற்படுத்தப்பட்டது.

ஐரோப்பாவின் வடக்கிலும் கிழக்கிலும் இத்தகைய தேசிய அரசுகளை நாம் இப்போது காண்கிறோம். புனித ரோம ஏகாதிபத்தியம் (Holy roman empire) என்று இதுவரை ஐரோப்பாவின் பெரும் பாகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஜெர்மனி மன்னர் தாமாகவே ஜெர்மனியின் செல்வாக்கில் ஈடுபட்டார். 1250-ல் இரண்டாம் பிரடிரிக் என்ற புனித ரோம பேரரசர் (Holy Roman Emperor) இறந்த பின்னரே இத்தாலி நாட்டை ஜெர்மனியோடு இணைக்க முடியவில்லை. ஏனென்றால், இத்தாலிய மக்கள் தங்கள் தனி ஆட்சியை நிறுவிக் கொள்ள விரும்பினர்கள். ஒரு நூறு ஆண்டு கழித்து நான்காம் சார்லஸ் என்ற பேரரசர் மறுமுறையும் இத்தாலி நாட்டை ஒடுக்க முயன்றார். ஆனால் அதுவும் பயனற்றுப் போயிற்று. ஜெர்மனி நாட்டிலேயே பேரரசரின் ஆட்சி நடைபெறக் கூட்டாட்சி முறையையே பின் பற்ற வேண்டியதாயிற்று. ஒரு பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ஏழு பேர்கள் கொண்ட ஒரு குழுவிற்கு விடப் பட்டது. இந்த ஒழுங்கு முறைகள் 1356-ல் அமலாகிய 'கோல்டன் புல்' (Golden Bull) என்ற கட்டளையில் பிறப்பிக்கப் பட்டன. கி. பி. 1495ஆம் ஆண்டு மாக்சிமில்லியன் பேரரசர் சுவிட்சர்லாந்து நாட்டின் தனி உரிமையையும் ஒப்புக் கொண்டார்.

வடக்கு ஐரோப்பாவில் மார்கிரட் என்ற நார்வீஜிய அரசியார் டென்மார்க் அரசரின் மகளாகவும் இருந்ததால், அவர் காலத்தில் இவ்விரண்டு நாடுகளும் ஒன்றாயின. அவர் தம் முயற்சியினாலேயே சுவீடன் நாட்டையும் இவற்றோடு இணைத்தார்.

இதற்குக் கால்மார் ஒன்றிப்பு (Union of Colmar) என்று பெயர் (1397). ருஷிய நாட்டில் மூன்றும் ஐவன் என்ற அரசர் (1462—1505) நவ்கோராட், வெள்ளை ருஷியா, சின்ன ருஷியா என்ற இவற்றின் பகுதிகள் ஆகியவற்றைக் கைப்பற்றி ருஷிய அரசை ஏற்படுத்தினர்.

மத்தியதரைக் கடற்கரையிலே பதினேந்தாம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துகல், கேஸ்டைல், அரகன் என்ற ஐரோப்பிய நாடுகளோடு, முகமதியர் வசத்தில் கிரனடா என்ற மற்றொரு நாடும் இருந்தது. இவை ஒவ்வொன்றிலும் குறிப்பாகக் கேஸ்டைல், அரகன் நாடுகளில் பாராளும் மன்றம் போன்ற மக்கள் சபை அரசரோடு கூடி ஆட்சியை நடத்திவந்தது. ஆனால், 1469-ல் கேஸ்டைல் நாட்டின் அரசி இஸபெல்லா, அரகன் நாட்டு அரசர் பெர்டினன்டை மணந்ததால் இவ்விரு நாடுகளும் ஒன்றாயின. பிறகு 1492-ல் ஒன்று கூடிய இந்த நாடு கிரனடா முகமதியரைத் தோற்கடித்து அதையும் தன்னோடு சேர்த்துக் கொண்டது. இவ்விதமாய் 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸ்பெயின் நாடும், போர்த்துகல் நாடும் இரு பெரு நாடுகளாக மத்தியதரைக் கடல் பகுதியில் தோன்றலாயின. கிரனடா வெற்றி இப் பெருந் தேசிய மாறுதலுக்கு அடிகோலிற்று. அதே ஆண்டில் முகமதியரும் யூதரும் ஸ்பெயின் நாட்டிலிருந்து வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனால் உண்மைத் தேசியம் ஸ்பெயின் நாட்டில் ஏற்பட வழியாயிற்று.

அதே சமயம் இத்தாலி நாட்டில் மூன்று வகையான சிறு அரசுகள் ஆட்சி புரிந்தன. அவற்றை நாடுகள் என்று சொல்வதைவிடப் பட்டணங்கள் என்று சொல்வதே பொருத்தமானது. அவை. (1) வடக்குப் பட்டணங்கள், (2) மத்திய பாகத்தில் ரோம் பட்டணமும், அதைச் சுற்றிலும் போப்பின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமும், (3) சிசிலிப் பிரதேசம். இத்தாலிய பட்டணங்களின் மத்திய கால ஆட்சிமுறை பிரசித்தி பெற்றது. மிலான், வெனிஸ், ஜினேவா, பிளாரன்ஸ் என்ற பட்டணங்களில் 13ஆம் நூற்றாண்டு தொடங்கிச் சுய ஆட்சி நடைபெற்றது. ஆனால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகையான ஆட்சி நடந்தது; மிலானில் தனி அரசனும், வெனிஸ் ஜினேவா பட்டணங்களில் பிரபுக்கள் கூடிய சபையும், பிளாரன்ஸ் பட்டணத்தில் மக்கள் சபையும் ஆட்சி நடத்தின. ஆயினும், இவை வெளித்தோற்றமே யொழிய உண்மையில் இங்கு நடந்தது வல்லரசாட்சிதான். 14, 15ஆம் நூற்றாண்டின் இத்தாலிய பட்டணங்களின் ஆட்சிக் காலத்தை 'வல்லரசர் காலம்' (Age of

Despots) என்றே வரலாற்றாளர் கூறுவர். மிலான் பட்டணத்தை ஆட்சி செய்த வைகௌண்டி பிரபுக்களும், பிளாரன்ஸ் பட்டணத்தில் ஆட்சி புரிந்த மெடிச்சி பிரபுக்களும் வரலாற்றுப் புகழ் பெற்றவர்கள். இவர்கள் பொதுவாக அறமும் மறமும் அறியாதவர்கள். ஆனால், கலைக்கு இவர்கள் புரிந்த பணி சாலச்சிறந்தது. உதாரணமாக, பிளாரன்ஸ் பட்டணத்தில் அரசு செலுத்திய லாரன்ஸ் மெடிச்சி என்பவர் கலைப் பணியில் உலகப் பெருமை பெற்றவர். இந்தப் பட்டணத்திலிருந்தே மாக்கியவல்லி என்ற அரசியல் ஆசிரியர் தோன்றினர். மெடிச்சி மன்னர்களிடம் செயலாளராகப் பணியாற்றிய இவர் பின், வேலையை விட்டு விலக வேண்டியதாயிற்று. அப்போது இவர் தம் அரசியல் கொள்கைகளை ஒரு நூலிலே வெளியிட்டார். அதற்கு 'மன்னன்' (The Prince) என்று பெயரிட்டார். நாட்டின் நலத்திற்காக மற்ற எல்லாக் கருத்துகளையும் கைவிட வேண்டும் என்பது இவர் கருத்து. நல்லது, கெட்டது என்று பாகுபாடு செய்வது நாட்டின் நலத்திற்கு இடையூறு செய்வதாகும் என்பது இவர் கொள்கை. அக்கால இத்தாலிய அரசியல் நிலைக்கு இவரும் இவர் நூலும் ஓர் எடுத்துக்காட்டாகும். போப்புக்குச் சொந்தமான பிரதேசத்திலும் வேறு நிலை காணவில்லை. இங்கு ஆட்சி புரிந்த சீசர் போர்ஜியா மாக்கியவல்லியின் இலட்சிய மன்னன் என்றால் நாம் வேறு கூற வேண்டுவதில்லை.

2. திருச்சபையின் மதிப்புக் குன்றுகிறது. நாம் மேற்குறித்த சீசர் போர்ஜியாவின் ஆட்சிமுறையே இதை வலியுறுத்துகிறது. இதை ஐரோப்பாவில் மத்திய காலம் மறைவதற்கு ஒரு சிறந்த அறிகுறியாகக் கொள்ளலாம். இதை ஒரு சிறிது விளக்குவோம். திருச்சபையின் பெருமை குன்றுவதற்கு அக்காலத்தில் போப் பதவியை வகித்தவர்களின் குறை மட்டுமல்ல, பொதுவில் காலத்தின் கோலமும் காரணம் ஆகும். மனித வளர்ச்சியிலே ஒரு மாற்றம் ஏற்பட்டது. பல காலம் திருச்சபைக்கு அடங்கி நடந்த மக்கள் இப்போது சுய உரிமை தேடினார்கள். நாம் மேலே குறித்த தேசிய உணர்ச்சியும், அரசியல் உணர்ச்சியும் மக்களைச் சமய உலகினின்று அரசியல் உலகிற்கு அழைத்துச் சென்றுவிட்டன.

இந்நிலையில் கி. பி. 1309 முதல் 1377 வரை போப்பின் பதவி ரோமிலிருந்து அவிக்ஞேன் பட்டணத்தில் வதிந்தது. அது திருச்சபையின் பெருமைக்குப் பெருங் குறை இழைத்தது. ஆயினும், அப்படிப் போப்புகள் அங்குச் செல்வதற்கு முதல் காரணம் எங்கும் வளர்ந்து நின்ற தேசிய உணர்ச்சியே யாகும். எட்டாவது

போனிவேஸ் (Boniface VIII) என்ற போப்பைப் பிரெஞ்சு மன்னன் நான்காம் பிலிப் சிறைப் பிடித்துச் சென்றார். அதற்குக் காரணம் இருவருக்குமிடையே ஏற்பட்ட மனத்தாங்கல் மட்டு மன்று, வலிமை பொருந்திய தன் நாட்டில் போப் இருக்க வேண்டும் என்ற மன்னரது உணர்ச்சியுமாகும். இக் காரணம் கொண்டே போனிவேஸுக்குப் பிறகு போப் பதவிக்கு ஒரு பிரெஞ்சுக்காரரையே தேர்ந்தெடுத்தார்கள். அதன் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் 70 ஆண்டுக்காலம் அந்தப் பதவியை வகித்ததும் இது பற்றியே. 1377ஆம் ஆண்டு பதினோராம் கிரகரி (Gregory XI) போப் அவிக்னோன விட்டு ரோமுக்கு வந்து சேர்ந்தார். ஆயினும், குழப்பம் விளைத்த தேசிய உணர்ச்சி தீர்ந்த பாடில்லை. கிரகரி காலமான பின் ரோம் மக்கள் தங்கள் ஊர்க் காரரையே போப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று ஆர்ப் பரித்தார்கள். குறுகிய நோக்கத்திற்கு இடம் தரக்கூடா தென்று ஆறாம் அர்பன் (Urban VI) என்ற இத்தாலியரை இந்தப் பத விக்குத் தேர்ந்தெடுத்தார்கள். இதனால் முரண்பாடு ஏற்பட்டது. அதைப் பயன்படுத்திக்கொண்ட பிரெஞ்சுக்காரர் தங்களில் ஒரு வரைத் தேர்ந்தெடுத்தார்கள். பிரெஞ்சு நாட்டுடன் சேர்ந்த ஸ்பெயின், நேப்பிள்ஸ், சிசிலி, ஸ்காட்லண்ட் முதலிய நாடுகள் இவரைப் பின்பற்ற, ரோம், ஜெர்மனி, இத்தாலியின் வடபாகம், இங்கிலாந்து முதலிய நாடுகள் போப் அர்பனைப் பின்பற்றியது. இதைத் தீர்த்துச் சமரசம் செய்யப் பிசாவில் கூடிய சங்கம் மற் றொருவரைத் தேர்ந்தெடுத்தது. ஆனால் சமரசத்திற்குப் பதிலாக ஒரே சமயத்தில் மூன்று போப்புகள் ஆட்சி செலுத்தினார்கள். அப்போது புனித ரோமானிய பேரரசராயிருந்த சிஜிஸ்மண்ட் எல்லா தேசப் பிரதிநிதிகளும் கொண்ட ஒரு சங்கத்தைக் கான்ஸ்டன்ஸ் பட்டணத்தில் கூட்டினார். இதுவே இந்தச் சண் டையைத் தீர்க்கமுடிந்தது. ஐந்தாம் மார்டின் (Martin V) கிறித்தவ உலகத்திற்கே போப்பாக நியமனம் பெற்றார் (1417).

ஆயினும், திருச்சபையின் பெருமை குறைந்தது. மக்கள் சமயப்பற் றிழந்தார்கள். நல்ல மனதுள்ளவர்கள் அதிகமாகப் பக்தியில் வளர்ந்து குருட்டு நம்பிக்கைகளுக்கும் மூட வழக்கங் களுக்கும் இடமளித்தனர். ஒரு சிலர் கடவுளின் போதனையை விவிலிய நூலிலேயே காண விரும்பினார்கள். அப்போது எராஸ்மஸ் அதை இலத்தீனில் மொழிபெயர்த்தார். அதைப் பின்பற்றிப் பல மொழிபெயர்ப்புகள் தோன்றின. வேறு சிலர் கடவுளையே தியானித்துப் பலன் பெற எண்ணினர். இதனால் ஒரு வித உள்ளுணர்வுக் கொள்கை (Mysticism) பரவிற்று. இதில் குறிப்பாக நாம் எக்கார்ட் (Eckhart), ஜெரார்ட் குரூட் (Gerard

Groote), தாமஸ் ஆ கெம்பிஸ் (Thomas a Kempis) என்றவர்களைக் குறிப்பிடவேண்டும். இவர்கள் 14, 15ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள். எக்கார்ட் ஒரு ஜெர்மானியர்; சிறந்த அறிவாளி, பேச்சாளர். ரைன் நதிப் பிரதேசத்தில் 14ஆம் நூற்றாண்டின் முற்பாகத்தில் இவருடைய பேச்சு பெருவாரியான மக்கள் மனத்தைக் கவர்ந்தது. இங்கிருந்து வடக்கே ஹாலந்து தேசம் வரை இந்தப் புது முயற்சி பரவியது. ஜான் ருயிஸ்பிரேக் (John Ruysbroeck) என்ற இவருடைய சீடர் ஹாலந்து தேசத்தவர். இவரைப் பின்பற்றி ஜெரார்ட் குரூட், ஹாலந்து தேசத்தில் ஒரு சபையை ஏற்படுத்தினர். சாதாரண வாழ்க்கைச் சந்நியாசிகள் (Brethren of the common life) என்பது இச் சபையின் பெயர். பிற்காலத்தில் 'கிறித்துவைப் பின்பற்றல்' (Imitation of Christ) என்ற மாபெரு நூலை இச் சபையைச் சேர்ந்த தாமஸ் ஆ கெம்பிஸ் எழுதினர்.

இது ஒருபுறமிருக்க, கிறித்துவத்தைச் சேர்ந்த வேறு சில சந்நியாசிகள் எளிய வாழ்வைத் தீவிரமாகப் போதித்தார்கள். இவர்களுக்கு ஞான மார்க்க சந்நியாசிகள் (Spiritual Franciscans) என்று பெயர். இவர்கள் மெல்ல மெல்லத் திருச்சபையின் செல்வ நிலையைத் தாக்கினர்கள். இவர்களில் புகழ் பெற்றவர் வில்லியம் ஆப் ஓக்கேம் (William of Ockham) என்ற ஆங்கிலேய சந்நியாசி. இவர் பிற்காலத்தில் தம் கொள்கையைக் கைவிட்டுப் போப்புக்குப் பணிந்தவர். ஆனால் மார்சிக்ளியோ (Marsiglio) என்ற அரசியல் அறிஞர், திருச்சபை உலக அரசுக்குக் கீழ்ப்பட்டது என்று போதித்தார். ஆங்கில நாட்டில் ஜான் விக்ளிவ்வும் பொஹேமியாவில் ஹஸ்ஸும் திருச்சபையின் ஆற்றலை நேர் முகமாக எதிர்த்தனர். விவிலியத்தைக் கொண்டே கிறித்துவின் போதனையைத் தெரிந்து கொள்ளலாமென்றும், அதற்குத் திருச் சபையின் சேவை தேவையில்லை யென்றும் இவர்கள் போதித் தார்கள். முன் குறித்த புனிதப் பொருள் மாறுபாட்டுக் கொள்கை இப்போது மறுக்கப்பட்டது. கிறித்தவத்தின் முக்கியப் பிரமாணங்களில் ஒன்று மறுக்கப்பட்ட முதல் தடவை இதுதான். ஐரோப்பாவில் ஒரு புது மாற்றம் வரத் தொடங்கிவிட்டது என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் வேண்டியதில்லை. பிற்கால மதமாற்றத்திற்கு இது ஒரு முன்னறிக்கை. ஜான் விக்ளிவ்வை 'மத மாற்றத்தின் விடிவெள்ளி' (Morning Star of the Reformation) என்று அறிஞர் கூறுவது சாலவும் பொருந்தும். ஆனால், மத மாற்றத்திற்கு மட்டுமன்று, ஒரு புது ஐரோப்பாவின் தோற் றத்தையே அவர் முன்னறிவித்தார்.

2. தற்காலத் தொடக்கம்

[கலை வளர்ச்சி-புது நாடுகளைக் கண்டுபிடித்தல்-சமய சீர்திருத்த உணர்ச்சி]

I

தற்கால ஐரோப்பா பலவிதத்தில் ஒரு புது ஐரோப்பாதான். ஆயினும், அதன் சின்னங்கள் குறைந்தது இரு நூற்றாண்டுக் காலமாகவே உருவாகிக் கொண்டிருந்தன. தேசிய அரசுகள் என்று தோன்றினவோ அன்றே இக்கால ஐரோப்பாவும் தோன்றி விட்டது. அவைகளின் வளர்ச்சி ஒரு புது ஐரோப்பாவைக் காலக் கிரமத்தில் உருவாக்கியது. இதை அறிஞர்கள் கி. பி. 1500-லிருந்து கணக்கிடுகின்றார்கள்.

II

இன்னும் பல விதங்களில் புது ஐரோப்பாவின் பிறப்பு அறிவிக்கப்பட்டது. அவற்றில் முதல் இடம் வகிக்க வேண்டியது கலைவளர்ச்சி (Renaissance). இதை வரலாற்றாசிரியர்கள் 'ஐரோப்பாவின் மறு பிறப்பு' என்று விளக்குகின்றார்கள்.[1] கிறித்துவுக்கு முற்பட்ட காலங்களில் கிரேக்க தேசமும் இத்தாலி நாடும் அறிவில் சிறந்து விளங்கின. பிளேட்டோ, அரிஸ்டாட்டல் முதலிய அரசியல் தத்துவ ஞானிகளும், வெர்ஜில், ஹோராஸ் போன்ற கவிகளும் இங்கு அப்போது வாழ்ந்தார்கள். பிறகு அவர்களை ஐரோப்பா மறந்தது. அவர்களின் பெருமை மறுபடியும் இக் காலத்தில் மலர்ந்தது; அதைக் கொண்டு பொதுவில் கலை வளர்ந்தது; இதையே ஐரோப்பாவின் மறு பிறப்பு (Re-birth) என்று கூறிப் போந்தனர். இவ் விளக்கம் முற்றிலும் பொருத்த மானதன்று. நாம் முன்னியலில் குறித்த இடைக்கால வரலாற்றில் மக்கள் வீணே அறிவிலிகளாக மாறவில்லை. கி. பி. 1300 அளவில் எழுதிய டான்டேயும் கிரேக்க, ரோம அறிஞர் களைப் பற்றிப் பேசுவதால் அவர்களை மக்கள் ஒருபோதும் மறக்க வில்லை என்பது பெறப்பட்டது. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இத்தாலியப் பல்கலைக்கழகங்களில் கிரேக்க மொழி பாடமாகவே இருந்திருக்கின்றது. இலத்தீன் மொழி ஒருவிதத்தில் எப்பொழுதுமே இத்தாலிய மொழியாக இருந்தது. கிரான்ட்

[1] இதை 'மறுமலர்ச்சி' என்று கூறுவது மிகப் பொருத்தமானது.

கூறுவதுபோல் மக்கள் கண்மூடித்தனமாக இருந்திருந்தால் இந்த மறு பிறப்புக்கு வழியே இருந்திருக்காது. அவர்கள் கண் திறந் திருந்ததால்தான் இதற்கு வழியாயிற்று[1] என்பது முற்றிலும் பொருத்தமானக் கூற்றுகும்.

பின் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்று சொல்வதற்கு என்ன பொருள் இருக்கக்கூடும் என்ற கேள்வி எழுகின்றது. மத்திய காலத்தில் மக்கள் பெரும்பாலும் திருச்சபையின் அதிகாரத்தின் கீழ் இருந்தபடியால், அக்காலத்திய நூல்களும் கலைகளும் மதத் தைப்பற்றியும் மதத்தின் கோட்பாடுகளுக்குக் கீழ்ப்பட்டும் இருந்தன. ஒரு விதத்தில் உலகக் கலை மறைந்தது. பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் மத ஆதிக்கம் குறையக் குறைய உலகியல் நூல்கள் வளர்ச்சியுற்றன. இதை மேற்நிசை அறிஞர்கள் ஹியுமானிசம் (Humanism) என்று கூறுவார்கள்; அதாவது, கலை இப்பொழுது மனிதனைப் பற்றியதாகச் செல் வாக்குப் பெறுகிறது. கிரேக்க மொழியிலும் இலத்தீன் மொழி யிலும் இத்தகைய நூல்கள் பல எழுதப்பட்டிருந்த காரணத்தால், இப்பொழுது அவைகளுக்கும் செல்வாக்கு ஏற்படுகிறது. இதை மறுமலர்ச்சி என்று சொல்வதிலும் ஒருவிதப் பொருள் இருக் கின்றது.

மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை என்று கூறப்படுபவர் பிரான்செஸ்கோ பெட்ரார்க்கா (Francesco Petrarca) என்ற பிளாரன்ஸ் பட்டணத்து அறிஞராவார். இவரைச் சுருக்கமாகப் பெட்ரார்க் (Petrarch) என்றும் அழைக்கலாம். இவர் கி. பி. 1304முதல் 1374 வரை வாழ்ந்தவர். இவர் இலத்தீன் மொழியில் ஈடுபட்டுச் சிசரோ (Cicero) என்ற பெயர் பெற்ற பேச்சாளரின் இலத்தீன் பிரயோகத்தைக் கூர்ந்து படித்தார். அவருடைய கடிதங்கள் பெட்ரார்க்கின் ஆவலைப் பெரிதும் தூண்டின. வெர்ஜில் (Vergil) என்ற இலத்தீன் கவிஞரின் காப்பி யங்களை ஊன்றிப் படித்து 'ஆப்பிரிக்கா' என்ற சிறு காப்பிய மொன்றைத் தாமே வெர்ஜிலைப் பின்பற்றி எழுதினர். பெட் ரார்க் இவர்களிடம் கொண்ட பற்று சொல்லுந் தரமல்ல; பழங் கால அறிஞரை அன்போடு மதித்து அவர்களுக்கு எழுதின கடிதங் கள் போல் பலவற்றை 'லெட்டர்ஸ்' (Familiar Letters) என்று நூல் வடிவில் வெளியிட்டு இவர்களுக்கு ஆக்கம் தேடினர். இதனால் மறுமலர்ச்சி இயக்கம் வலுப்பெற்றது; பல மாணவர்கள் பெட்ரார்க்கைப் பின்பற்றினர்கள். அவர்களில் ஒருவர் பெயர்

[1] 'Men did not open their eyes because they read classical literature. Rather they had read classical literature because their eyes were already open.'—Grant, *Europe: The story of the Last Five Centuries*, Introdn.

பெற்ற பொக்காச்சியோ (Boccacio). இவருடைய புகழ் பெற்ற நூல் 'டெகேமரோன்' (Decamaron) என்பதாகும்.

மறுமலர்ச்சி இயக்கம் ஐரோப்பாவில் வலுப்பெறுவதற்கு மற்றொரு காரணம், கான்ஸ்டான்டிநோபிள் பட்டணத்தைத் துருக்கியர் பிடித்ததாகும் (1453). இவர்களிடமிருந்து தப்பின கிரேக்க ஆசிரியர்கள் பலர் இத்தாலியிலும் மேற்கு ஐரோப்பாவிலும் வந்து தங்கினர்கள். இவர்களில் மேனுவல் கிரிசோலோராஸ் (Manuel Chrysolorass) ஒருவர். துருக்கியரிடமிருந்து கான்ஸ்டான்டிநோபிள் பட்டணத்தைக் காப்பாற்ற உதவிகோரி பிளாரன்ஸ் பட்டணத்திற்கு வந்தவர்; பிறகு அங்கேயே தங்கி கிரேக்க மொழியை எண்ணற்ற மாணவர்களுக்குப் போதித்தார். அவ்வூரின் பல்கலைக்கழகத்தின் கிரேக்க மொழிப் பேராசிரியராக முதல் முதல் திகழ்ந்தவரும் இவரே.

கிரேக்க, இலத்தீன் மொழிகள் இத்தாலியில் உயிர் பெற்று எழுவதற்கு அந் நாட்டு மன்னர்கள் சிறந்த பணி புரிந்தார்கள். முதலில் தங்கள் பிள்ளைகள் இம் மொழிகளைக் கற்க ஏற்பாடு செய்தார்கள். பிறகு, நாட்டு மக்கள் பயன்பெறும் வண்ணம் இம் மொழிகளில் எழுதப்பட்ட நூல்களைச் சேர்த்துப் பல நூல் நிலையங்களை ஏற்படுத்தினர்கள். இம்மாதிரி நூல் நிலையங்கள் அமைத்தவர்களில் முக்கியமானவர்கள் காசிமோ டெ மெடிச்சி (Coscimo de Medici) என்பவரும், ஐந்தாம் நிக்கோலஸ் (Nicholas V) என்ற போப்புமாவர். மேற்குறித்த மெடிச்சி நூல் நிலையம் இன்றும் ஐரோப்பாவில் புகழ் பெற்று விளங்குகிறது; புகழ் பெற்ற வத்திகான் நூல் நிலையம் ரோம் நகரில் எழுவதற்குக் காரணமானவர் போப் ஐந்தாம் நிக்கோலஸாகும்.

புது இயக்கம் ஆக்கம் பெறுவதற்கு மற்றும் ஒரு காரணம் அப்போது தோன்றிய அச்சுப் பொறி. சீனாவிலிருந்து காகிதம் ஸ்பெயின் தேசம் மூலமாக ஐரோப்பாவில் கி. பி. 10ஆம் நூற்றாண்டில் புகுந்தது. அப்போது தொடங்கி அச்சுக் கோக்கும் தொழிலும் மை செய்யும் தொழிலும் இயங்கத் தொடங்கின. ஆயினும், கி. பி. 1440 அளவிலேதான் தற்போது இயங்கும் அச்சுப் பொறி ஜெர்மனி நாட்டில் மெய்ன்ஸ் (Mainz) பட்டணத்தில் ஜான் குட்டன்பர்க் (Johaun Gutenberg) என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. அப்போது முதல் முதல் அச்சேறிய நூல் விவிலியம், இன்றும் குட்டன்பர்க் விவிலிய நூல்கள் சில காணக் கிடைக்கின்றன.

பழைய மொழிகளின் பெருமை ஐரோப்பாவில் விரைவில் பரவியது. ஹாலந்து நாட்டில் டெசிடெரியஸ் எராஸ்மஸ்

(Desiderius Erasmus), பிரெஞ்சு நாட்டில் குயில்ஹாம் பூதே (Guillaume Bude), ஸ்பெயினில் ஜான் லூயி விவெஸ் (Juan Luis Vives), ஜெர்மனியில் ஜான் ருஷெலின் (Johaun Reuchlin) போன்ற பலர் கி. பி. 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்து இத் துறையில் சிறந்த பணி புரிந்தார்கள். எராஸ்மஸ் என்ற அறிஞர் முதலில் விவிலிய நூலை ஹிப்ரு மொழியிலிருந்து இலத்தீனில் மொழிபெயர்த்தார். அதனல் இம்மொழியின் பெருமை இன்னும் அதிகரித்தது.

பழைய மொழிகள் உறுதிபெற்ற போதிலும் நாட்டு மொழிகள் நசித்துவிடவில்லை. மாறுக, ஐரோப்பாவின் ஒவ் வொரு நாட்டு மொழியும் தனி ஆதிக்கம் பெற்றது. இத்தாலி நாட்டில் முதுமொழிப் பற்றின் தந்தை எனப்பட்ட பெட்ரார்க்கே இத்தாலிய மொழியை ஒழுங்குபடுத்தினர். அவரது கட்டுரை நூல் சிறந்த இத்தாலிய நூலாகும். அவரைப் பின்பற்றி அந் நாட்டில் அரியோஸ்டோ(Ariosto), வில்லானி(Villani), காப்போனி (Capponi) போன்ற பலர் நிகோலோ மாக்கியவல்லி முடிய சிறந்த இத்தாலிய எழுத்தாளர்களாகத் தோன்றினர்கள். மாக்கிய வல்லி இத்தாலிய மொழியிலேயே பிளாரன்ஸ் பட்டணத்தின் வரலாற்றை எட்டுத் தொகுதிகளாக எழுதினரென்றால், அம் மொழிக்கு அப்போது எத்தகைய ஆக்கம் ஏற்பட்டிருக்க வேண்டு மென்பது ஒருவாறு பெறப்படும். ஃபிரான்ஸ் நாட்டில் பிரான்சுஆ ராபெல்லே (Francois Robelais) உரை நடையிலும், பிரான்சுஆ வில்லோ (Francois Villon) கவி எழுதுவதிலும் ஜீன் ப்ரோசார் (Jean Froissart) வரலாற்றுத் துறையிலும் சிறந்த நூல்கள் எழுதிப் பிரெஞ்சு மொழியை வளர்த்தார்கள். ஸ்பெயின் நாட்டில் முதல் ஸ்பேனிஷ் நாடகம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப் பட்டது. ஜெர்மனியில் செபாஸ்டியன் பிரான்ட் (Sebastian Brant) 'அறிவிலிகளின் கப்பல்' (Ship of Fools) என்ற சிறந்த நூலைத் தம் நாட்டு மொழியில் எழுதினர். கலை உண்மையாகவே வளர்ந்துவிட்டது. பிஷர் (Fisher) என்ற ஆசிரியர் கூறுவது போல் சிறந்த கவிஞன் தன் பாட்டைப் பாடிக் காட்டுவதைக் கேட்க இத்தாலி நாட்டிலே கடைகள் மூடப்பட்டன. பெருமகன் என்று சொல்வதற்கு ஒருவன் ஒரு கவி புனைந்திருக்கவேண்டும், பழைய மொழிகளில் பற்றுக் கொண்டவனாக இருக்கவேண்டும், அல்லது ஒரு படத்தைப் பற்றியாவது விளக்கம் கூற வேண்டும் என்ற நியதி அக்காலத்தில் இத்தாலிய வழக்கத்தில் இருந்தது.[1]

மொழி வளர்ச்சியோடு நுண்கலையும் வளர்ந்தது. படம் வரைவது, சிலைகள் செய்வது, அழகிய கட்டடங்கள் கட்டுவது

[1] H. A. L. Fisher, *History of Europe*, Vol. 2.

போன்ற நுண்கலைகளும் வளர்ந்தன. கியாட்டோ (Giotto) வின் படங்கள் பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து பிரசித்தி பெற்றவை. ஆனால் அவற்றைப் பின் தொடர்ந்து புதுப் படங்கள் இப்போது வரையப்பட்டன. அவற்றில் முக்கியமானவை பிரா ஆஞ்செலிக்கோ (Fra Angelico) 16ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் எழுதியவையாகும். அதே சமயத்தில் மசாக்கியோ (Massaccio), போட்டிச் செல்லி (Botticelli) போன்றவர்கள் பிளாரன்ஸ் பட்டணத்தில் புது முறையான ஓவியங்களை எழுதினார்கள். இவர்களின் தலைவராக அப்பட்டணத்து மன்னர் லோரன்ஸோ (Lorenzo) என்பவர் விளங்கினார். அவர் காலத்தில் ஏற்பட்ட கலைச் சின்னங்கள் பலவாகும். அவருக்குப் பிறகு ஓவியக் கலை பிளாரன்ஸ் பட்டணத்தை விட்டு, வெனிஸ், மிலான் போன்ற பட்டணங்களை நாடிற்று. தீசியன் (Titian) என்ற சிறந்த ஓவியக் கலைஞர் வெனிஸ் பட்டணத்தைச் சேர்ந்தவர். ரபேல் (Raphael), மைக்கல் ஆஞ்செலோ (Michaelangelo) போன்ற உலகம் போற்றும் ஓவியக் கலைஞர்கள் ரோமில் போப்பின் ஆதரவில் வளர்ந்தார்கள். முன்னவர் போப்பின் அரண்மனையிலும், பின்னவர் ரோமின் பெரிய கோயிலிலும் தீட்டிய சிறந்த ஓவியங்கள் இன்றும் காணக் கிடக்கின்றன. மைக்கல் ஆஞ்செலோ சிறந்த ஓவியர் மட்டுமல்ல, கட்டடக் கலையிலும், சிற்ப வேலையிலும் கை தேர்ந்தவராக விருந்தார். இத்தாலிய நாட்டைப் பின்பற்றிப் பிரான்ஸ், ஹாலந்து தேசங்களில் சிறு படங்கள் (miniature portrait painting) வரைவதில் ஊக்கம் உண்டாயிற்று. வான் அய்க் (Wan Eycks) சகோதரர்கள், ரோஜர் வான் டெர் வீடன் (Roger van der Weyden), ஹான்ஸ் மெம்லிங் (Hans Memling) போன்றவர்கள் பிளாண்டர்ஸ் நாட்டிலும், டூயரர் (Duirer), ஹால்பேய்ன் (Holbein) என்பவர்கள் ஜெர்மனியிலும், எல் கிரெக்கோ (El Greco) ஸ்பெயின் நாட்டிலும் சிறந்த ஓவியர்களாக இக்காலத்தில் விளங்கினார்கள்.

கட்டடக் கலை இப்பொழுது வளர்ந்ததுபோல் எப்பொழுதுமே வளரவில்லை. பழைய மொழிகளின் வளர்ச்சியைப் பின்பற்றிக் கலைவல்லுநர் கிரேக்க, ரோமானியக் கட்டடக் கலையை வியந்தார்கள். கிரேக்கத் தூண்கள், ரோமரது வளைவுகள் (arches) போன்றவை அவர்களைப் பெரிதும் ஈர்த்தன. புதுக் கலை உணர்ச்சியின் சீரிய பிரதிபிம்பம் ரோமில் அப்போது எழுந்த பெரிய கோயிலாகும். ரபேல், மைக்கல் ஆஞ்செலோவுடன் பிரமான்டி (Bramante), பல்லாடியோ (Palladio) போன்ற சிறந்த சிற்பிகள் வேலை செய்தார்கள். பீசா பட்டணத்து நிக்கோலா (Nicola Pisano), அவர் மகன் கியோவன்னி (Giovanni) போன்ற

வர்கள் அக்காலத்திய சிறந்த இத்தாலியச் சிற்பிகள். இவர்களைப் பின்பற்றி கிளவ்ஸ் சுலுடர் (Claus Sluter) முதலியோர் ஹாலந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளில் தோன்றினர்கள்.

III

கலை வளர்ச்சியானது மொழி வளர்ச்சி, அழகுக்கலை வளர்ச்சி யோடு மட்டும் நின்றுவிடவில்லை; இவற்றைக் கடந்து பொறி இயல் முதலிய புது முயற்சிகளில் ஈடுபட்டது. பதின்மூன்றும் நூற்றாண்டிலிருந்தே இம்முயற்சி தொடங்கியது. தொலை நோக்குக் கண்ணாடி (telescope), பெரிதாக்கும் கண்ணாடி (microscope) போன்றவை ரோஜர் பேக்கன் (கி. பி. 1292-இல் இறந்தார்) காலத்தவை. ஆனால் அப்பொழுது அவைகளுக்கு ஆக்கம் தேடுவார் யாருமில்லை. 16ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சியில் பலர் ஈடுபட்டனர். வான இயலைக் கணிக்கப் பல பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன. கடியாரங்கள் செய்யப் பட்டன. கடல் கடந்து செல்லும் மாலுமிகளுக்கு உதவும் பொருட்டு வான இயல் எழுதப்பட்டது. இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. துப்பாக்கிகள் செய்யப்பட்டன. நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. இரண சிகிச்சை முறை வளர்ந்தது. அதற்கு உதவியாக மயக்க மருந்து கண்டுபிடிக்கப் பட்டது.

தேசிய எழுச்சியுடன் விஞ்ஞானம் கண்ட புதுப் பொருட்கள், அறிவு, பொறி இயல் என்ற இவை கலக்க, புது நாடுகளைக் கண்டு பிடிக்க மக்கள் முனைந்து நின்றனர். ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளாக ஐரோப்பியர் சிலுவைச் சண்டை (Crusades) காரணமாக வெளி நாடுகளுக்குப் பெருவாரியாகச் சென்றிருந் தனர். அதோடு 13ஆம் நூற்றாண்டில் மார்க்கோ போலோ என்ற வெனிஸ் யாத்திரிகர் சைனா வரை சென்று தாம் கண்டதும் கேட்டதும் பற்றி விரிவாக ஒரு நூல் எழுதினர். அதைப் படித்த வர் அதில் கண்ட அதிசயங்களை நேரில் காண விரைந்தனர். இவற்றைவிடப் பெரிதும் ஊக்கம் அளித்தது கொப்பர்நிக்கஸ் (Copernicus) கண்ட உண்மை. கொப்பர்நிக்கஸ் போலந்து நாட்டினர் (1473-1543). இவர் ரோமன் கத்தோலிக்கப் பாதிரி. சிறந்த வான இயல் அறிஞர். உலகம் வட்டமாக இருக்கிறது என்ற உண்மையை இவர் காண்பித்தார். இதைக் கலிலேயோ (Galileo) என்ற இத்தாலிய அறிஞர் உறுதிப்படுத்தினர். இதனால், எங்குச் சென்றாலும் ஒருவன் புறப்பட்ட இடத்திற்கு மறுபடியும் வரக்கூடும் என்ற உறுதி மக்களுக்கு ஏற்பட்டது.

புது நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் முதலில் ஈடு பட்டவர்கள் போர்த்துக்கீசியர்கள். பதின்மூன்றும் நூற்றாண்டி லேயே மூன்றாம் அல்போன்ஸோ (Alphonso III) என்ற அவர்கள் அரசன் ஸ்பெயின் நாட்டின் தென்மேற்குக் கோடியில் அல்கார்வ் (Algarve) என்ற பிரதேசத்தைக் கைப்பற்றி யிருந்தார். அது அவர்களை ஆப்பிரிக்காவின் அருகில் கொண்டுவந்தது. அடுத்த நூற்றாண்டில் அவர்கள் டேன்ஜியர்ஸ் (Tangiers) பட்டணத்தைக் கைப்பற்றி, அதை அல்கார்வின் தலைநகராகச் செய்தார்கள். பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஹென்றி போர்த்துக் கல் நாட்டின் இளவரசனாயிருந்தார். இவருக்கு இயற்கையாகவே கடல் கடந்து செல்லும் ஆவல் மீதூர விருந்தது. இதுபற்றி இவருக்கு ''கப்பலோட்டும் காவலர்'' (Henry the Navigator) என்ற பட்டப் பெயர் ஏற்பட்டது. கி. பி. 1415ஆம் ஆண்டு ஆப்பிரிக்காவின் வடமேற்கு பாகத்தைக் கண்டுவர இவர் புறப் பட்டார். இந்தப் பயணத்தின் வழியே கனேரித் தீவுகள் (Canery Islands), அசோரஸ் (Azores), வேர்ட் முனை (Cape Verde), வேர்ட் முனைத் தீவுகள் (Cape Verde Islands) என்பவை கண்டுபிடிக்கப் பட்டன. செனிகல் நதி (Senegal) யின் முகத்துவாரம் வரை இப் பயணம் சென்றது. கினிக் கரை (Guinea Coast), ஸஹாரா (Sahara) பிரதேசம் என்ற இவ்விரண்டு பிரதேசங்களையும் சரி வரச் சுற்றிப் பார்க்கப் பலரைப் பல பயணங்களில் ஹென்றி மன்னர் அனுப்பினார். ஆனால் அவருக்கு வேண்டியதை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. அதுதான் பிரஸ்டர் ஜானின் (Prester John) பிரதேசம். அது வரை வழி முறையாக ஒரு வதந்தி ஐரோப்பாவில் வெகு நாளாகப் பரவி யிருந்தது. பிரஸ்டர் ஜான் என்ற ஒரு கிறித்துவ குரு கீழ்த் திசையில் ஓர் இராச்சியத்தை ஆளுகிறார் என்பதுதான் அவ்வதந்தி. இந்த இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது ஹென்றியின் அவா. ஆனால் அந்த ஆவல் முற்றுப் பெறுமலே அவர் காலமானார் (1460).

பிரஸ்டர் ஜானின் அரசு உண்மையில் எங்கும் இருக்கவில்லை. 1490-இல் பெட்ரோ டெ கோவில்ஹாம் (Pedro de Covilham) என்பவர் பிளாரன்ஸ் மன்னனின் உதவிகொண்டு பிரஸ்டர் ஜான் பிரதேசம் அபிசீனியாவே என்று நிறுவினார். கிறித்து யுகத்தின் 4ஆம் நூற்றாண்டிலேயே அபிசீனிய மன்னன் கிறித்துவ மதத்தைத் தழுவின காரணத்தால் இத்தகைய வதந்தி உலவக் காரணமாயிற்று என்றும் எண்பிக்கப்பட்டது. ஆயினும், நாடுகள் கண்டுபிடிக்கும் முயற்சிக்கு இந்த வதந்தி (தப்பாக இருந்த போதிலும்) பெரும் பயன் அளித்ததென்றே சொல்ல வேண்டும்.

1486ஆம் ஆண்டு பிரஸ்டர் ஜானைக் காணச் சென்ற பர்தலோமியோ டையாஸ் (Bartholomeo Diaz) நன்னம்பிக்கை முனை[1] (Cape of Good Hope)யைக் கண்டுபிடித்தார். இதன் வழியே வாஸ்கோ டகாமா (Vasco da Gama) 1498-இல் கள்ளிக் கோட்டையை அடைந்தார்,

நன்னம்பிக்கை முனையின் புயல் காற்றுக்கள் ஒரு சிலரை பயமுறுத்தின. ஆகையால் அவர்கள் போர்த்துக்கல்லி லிருந்து மேற்றிசையில் அட்லாண்டிக் சமுத்திர வழியைக் கைப்பற்ற எண்ணினர். உலகம் உருண்டை வடிவமாயிருப்பதால் கீழ்த் திசை நாடுகளை மேற்றிசை சென்று மடையலாம் என்ற நம்பிக்கை இப்பொழுது உறுதிப்பட்டு விட்டது. இதில் முனைந்து நின்றவர் கிறிஸ்டோபர் கொலம்பஸ் (Christopher Columbus). இவர் இத்தாலி நாட்டில் ஜினுவா பட்டணத்தில் ஒரு கம்பிளி வணிகன் மகனுகப் பிறந்தார். சிறு வயதில் பாவியாப் பல்கலைக் கழகத்தில் கணித இயலிலே சிறந்த தேர்ச்சி அடைந்திருந்தார். ஆனல் அவருக்குப்பிரியமான தொழில் கடல் கடந்து செல்வதுதான். கி.பி. 1477-இல் அவர் ஐஸ்லாந்து வரை சென்று வந்ததாகச் சொல்லுவர். ஸ்காட்லாந்தின் வட பாகத்தைச் சுற்றி வந்தவர் போர்த்துக்கல் போந்து அங்கு ஹென்றி இளவரசனுடைய பெருமைகளையெல்லாம் கேட்டார். அவரோடு சென்று வந்த மாலுமி ஒருவரின் மகளை மணந்துகொண்டார். வரவரக் கடல் கடந்து செல்ல வேண்டும், அட்லாண்டிக் கடல் வழியே இந்தியாவுக்கும், அங்கிருந்து சைனு, ஜப்பான் நாடுகளுக்கும் வழி காண வேண்டும் என்பது அவரது ஒரே நோக்கமாக வளர்ந்து வந்தது. இந்நிலையிலே அவர் போர்த்துக்கல் மன்னனது ஆணைக்காகக் காத்திருந்தார். ஆனல் போர்த்துக்கீசியர் நன்னம்பிக்கை வழியில் ஊக்கம் காட்டினதால் கொலம்பஸை ஆதரிக்கவில்லை. பிறகு ஸ்பெயின் நாட்டை அணுகினர். அங்கே கிரனடாவிலிருந்த முகம்மதியர் விரட்டப்பட்டு நாடு முழுவதும் ஒரே அரசாக அப்பொழுது மாறியிருந்தது. பெர்டினன்ட் இசபல்லா அரச தம்பதிகள் மன அமைதி கொண்ட சமயம் கிரனடா வெற்றி 1492ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கிட்டியது. அந்த வருஷம் ஆகஸ்டுத் திங்கள் 3ஆம் நாள் கொலம்பஸ் ஸ்பெயின் அரசாங்கத்தின் ஆணைப்படிக் கீழ் நாடுகளுக்கு வழி கண்டுபிடிக்க அட்லாண்டிக் கடல் வழியே புறப்பட்டார். அடுத்த ஆண்டு மார்ச்சு மாதம்

1. இந்த முனையைக் கண்டபோது அங்கு பெரும் புயல்கள் வீசிக்கொண்டிருந்ததால் டையாஸ் இதைப் புயல் முனை (Cape of Storms) என்று அழைத்தார். ஆனல் பிற்காலத்தில் அதன்வழி இந்தியாவை அடையலாம் என்ற நன்னம்பிக்கை பிறந்தது. எனவே அது நன்னம்பிக்கை முனையானது.

கொலம்பஸ் ஸ்பெயின் நாடடைந்தார். தாம் அட்லான்டிக் கடலில் கண்ட முதல் இடத்தை இந்தியாவென்று நினைத்தார். ஆனல், உண்மையில் அவர் கண்டது அமெரிக்காவின் அருகிலுள்ள மேற்குத் தீவுகளே (West Indies). அதன் பின் அவர் இன்னும் மூன்று பிரயாணங்கள் செய்தார். நான்காவது பயணத்தில் தென் அமெரிக்காவின் கிழக்குப் பகுதியை அடைந்தார். அப் போது அவருக்கு உண்மை ஒருவாறு விளங்கி யிருக்க வேண்டும். ஆயினும், தாம் இந்தியாவுக்கும் சைனுவுக்கும் வழி கண்டுவிட்ட தாகச் சாகும் வரை அவர் உறுதியில் குன்றவில்லை. ஆனல் 1503-இல் அமெரிக்கோ வெஸ்புச்சி என்ற இத்தாலிய மாலுமி கொலம்பஸ் கண்ட இடத்துக்கே வந்தார். அப்போதுதான் ஒரு புது உலகமே அங்கு இருப்பதாக அவர் கண்டார். இது பற்றியே இப் புது உலகம் அமெரிக்கா என்று அழைக்கப்பட்டது.

புயல் முனை ஒரு விதத்தில் நமக்கு அமெரிக்காவைக் காட்டி யது. அதன் வழி சென்ற போர்த்துக்கீசியருக்கும் அவர்கள் அதில் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. வாஸ்கோ டகாமா 1502ஆம் ஆண்டு மறுமுறையும் இந்தியாவை அடைந்தார். மேற்றிசை வழியால் இந்தியாவுக்கு வழி கண்டுபிடிக்க எண்ணிய வர்களில் கொலம்பஸ் தவிர மற்றையோர் தோல்வி அடைந் தார்கள். 1497, 98-ல் கபோ சகோதரர்கள் வடக்கு முனை வழியாக ஜப்பானுக்கும் சைனுவுக்கும், பிறகு இந்தியாவுக்கும் செல்லக்கூடும் என்று நினைத்துப் புறப்பட்டவர்கள் நியூபவுண்ட் லாந்தைக் கண்டார்களேயன்றி, அதற்கப்பால் செல்லக் கூட வில்லை. ஆயினும், இதனல் புது நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன; மக்கள் அறிவு வளர வழியாயிற்று.

கி. பி. 1513ஆம் ஆண்டு வாஸ்கோ நூனெஸ் டெ பல்பா (Vasco Nunez de Balboa) பனுமா கால்வாயைக் கடந்து டேரியன் மலை உச்சியை அடைந்தார். அங்கிருந்து முதல் முதலாகப் பசிபிக் சமுத்திரத்தைக் கண்டார். அது அப்போது பெயரற்ற கடல். அதற்கு இந்த நல்ல பெயரை அளித்தவர் முதலாவதாக உலகம் முழுவதையும் சுற்றி வந்த மெகலன் (Ferdinand de Megellon) என்ற போர்த்துக்கீசிய மாலுமி யாவர். ஸ்பெயின் நாட்டினர் அவருடைய உதவியைக் கொண்டாவது இந்த மேற்கு வழியை அடைய எத்தனித்தனர். 1519ஆம் ஆண்டு மெகலன் 5 கப்பல் களுடனும் 243 மாலுமிகளுடனும் அதுவரை ஐரோப்பியர் காணுத இடங்களை நோக்கிப் புறப்பட்டார்.

ஆறு ஆண்டுகளுக்கு முன் பல்பா கடந்து சென்ற வழியை விட்டு மெகலன் இன்னும் தெற்கு நோக்கித் தென் அமெரிக்காவின்

கரையோரமாகவே சென்றார். அங்கேயும் ஒரு குறுகிய கால்வாய் குறுக்கிட்டது. அதற்கு மெகலன் குறுகிய கால்வாய் (Strait of Magellon) என்றே இப்பொழுது பெயர். ஆனால் அக்காலத்தில் அது மனிதர் காணுத குறுகிய நீர்ப்பரப்பு. தென் அமெரிக்காவின் தென் முனையிலே மனிதர்கள் தென்பட்டார்கள். ஆனால் அவர் களுடைய பாதங்கள் மிக நீளமாக இருந்தன. மறு முனையிலே மனித வாசமே தென்படவில்லை. ஆயினும், அவர்கள் இருப் பதன் அறிகுறியாக இங்கும் அங்கும் நெருப்பெரிவது மட்டும் தெரிந்தது. இவற்றைக் கண்ட மாலுமிகள் ஒரு பாகத்திற்குப் படகோனியா (Patagonia)வென்றும், மற்றதற்கு நெருப்புத் தீவு (Fire Island) என்றும் பெயரிட்டார்கள். குறுகலான கால்வாயில் புயலின் கொடுமை ஒரு புறம், எங்குச் செல்கின்றோம் என்று தெரியாமை ஒரு புறம்—இந் நிலையிலே மெகலன் ஐந்து வாரங்கள் பயணம் செய்ய நேர்ந்தது. மாலுமிகள் குழப்பம் செய்தார்கள். மெகலன் அவர்களைக் கொடுமையாகத் தண்டித்தார்; அவர்களில் இருவரை அந்த ஆளில்லாக் கரையிலே இறக்கிய பிறகே குழப்பம் தீர்ந்தது. அதே சமயம் கால்வாய்ப் பயணம் தீர்ந்து பெருங் கடலினுள் அவர்கள் நுழைந்தார்கள். அப்போது புயலுக்குப் பின் அமைதி என்பது உண்மையாயிற்று. மெகலன் இது ஒரு புதுக் கடல் என்பதைக் கண்டுகொண்டார்; அதற்கு வெகு பொருத்த மாக பசிபிக் கடல் (Pacific Ocean) என்று பெயர் சூட்டினார்.

இந்தக் கடல் வழியே மேற்கு நோக்கி மாலுமிகள் கப்பல் களைச் செலுத்தினார்கள். வரவரக் கடல் அமைதியா யிருந்தும் மன அமைதி குறைந்தது. மெகலன் மட்டும் நம்பிக்கையைக் கைவிடவில்லை. கொப்பர்நிக்கஸின் ஆராய்ச்சி அவருக்கு உறு தியை அளித்தது. கடைசியாக 96 நாட்கள் விடாமல் கடலிலே சென்ற பிறகு தரை தென்பட்டது. அங்குச் சில தீவுகளைக் கண்டனர். அவற்றைத் திருடர் தீவுகள் (Land of the Ladrones) என்று மெகலன் குறிப்பிட்டார். ஏனென்றால் அவர்களுடைய ஒரு சில பொருள்கள் இங்குக் களவு போயின. இந்த நிலையிலேயும் விடா முயற்சியுடன் தம் மேற்கு நோக்கிய பயணத்தைத் தொடர்ந்து நடத்தி 1521ஆம் ஆண்டு அழகிய சில தீவுகளை மெகலன் அடைந்தார். தம் மன்னன் ஐந்தாம் சார்லஸின் புதல்வர் பிலிப் இளவரசர் பெயரை நிலைநிறுத்த இந்தத் தீவு களைப் பிலிப்பைன்ஸ் (Philippines) என்று அழைத்தார்.

மெகலன் தன் மாலுமிகளுடன் இங்கு ஒரு சிறிது காலம் தங்க எண்ணினார். ஆனால் அந்தத் தீவினரோடு ஏற்பட்ட சண்டையில் மெகலன் கொல்லப்பட்டார். இன்னும் சிறிது தூரம் சென்றிருந்


தால் தாம் எண்ணியபடியே சைனுவையும் ஜப்பானையும் அடைந் திருப்பார். ஆயினும், உலகம் சுற்றிய முதல்வன் என்ற பட் டத்தை வரலாறு அவருக்கு வழங்கிவிட்டது. அவருடைய மாலுமிகள் அங்கிருந்து சென்று மொலுக்காஸ் தீவுகள்(Moluccas), போர்னியோ (Borneo) வழியாக இந்து மகா சமுத்திரத்தை அடைந்தார்கள். ஸ்பெயின் நாட்டினர் மேற்கு வழியாக இந்தியாவை இறுதியாக அடைந்துவிட்டார்கள்.

மெகலனது முயற்சி வெற்றி பெற மூன்று ஆண்டுக் காலம் பிடித்தது. ஆயினும் அவரது வெற்றி மிகப் பெரிதாகும். அது விஞ்ஞானத்தின் வெற்றி. கொலம்பஸ் கண்டுபிடித்தது இந்தி யாவையல்ல என்பது இதன் பிறகே உறுதிப்பட்டது. ஸ்பெயின் நாட்டிற்கு அமெரிக்கத் தொடர்பு ஏற்பட்டது. அங்கிருந்து பொன்னும் வெள்ளியும் வந்து குவிந்தன. ஊதியமில்லாமல் வேலை செய்யும் அடிமைகள் அங்கே கிடைத்தார்கள். அமெரிக்கர் தந்த செல்வம் ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் போர் விளைக்கும் நிலையில் இருந்ததால், அப்போது போப்பாக விருந்த ஆறும் அலெக்சாண்டர் (Alexander VI) உலகை இரு பிரிவு களாகப் பிரித்து அதன் ஒரு பகுதியை ஸ்பெயினுக்கும் மற்றதைப் போர்த்துக்கல் நாட்டிற்கும் 1484ஆம் ஆண்டிலேயே வழங்கி யிருந்தார். உலக வரலாறு கண்டிராத முடிவாகுமிது. இதற்கு ''டோர்டிசிலாஸ் பிரிவினை'' (Division of Tordesillas) என்று பெயர். மற்ற ஐரோப்பிய நாடுகள் இதை ஆமோதிக்கவில்லை. ஆனல் மெகலனது வெற்றிக்குப் பிறகு இந்தப் பிரிவினை நீடிக்க வழியில்லாமல் போயிற்று. அதற்குப் பதிலாகப் பிற்காலத்திய மத மாற்றம் ஐரோப்பாவில் வலுப்பெற்றதற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று. ஆங்கில நாட்டில் சர் பிரான்சிஸ் டிரேக் (Sir Francis Drake) மெகலனைப் பின்பற்றி உலகம் முழுவதையும் சுற்றி வந்தார் (1580). வழியில் கையில் கிடைத்த பொருளை எல்லாம் கொண்டுவந்து அப்பொழுது அந்நாட்டை ஆண்ட எலிசபெத் அரசியின் மனத்தைக் குளிர்வித்தார். அவர் கொண்டு வந்த வெள்ளி மட்டும் 27 டன் என்று சொல்லப்படுகிறது. இவ் வளவும் ஸ்பெயின் தேசத்துக் கப்பல்களிலிருந்து எடுத்தவையே. டிரேக்குடன் சேர்ந்து அவர்களைக் கொள்ளை அடிப்பதில் பெரும் பெயர்பெற்றவர்கள் ராலே (Raleigh), ஹாக்கின்ஸ் (Hawkins), கேவண்டிஷ் (Cavendish), கில்பர்ட் (Gilbert), கிரன்வில் (Grenville), இன்னும் பலர். இவர்களுக்கு வரலாறு 'கடல் நாய்கள்' (Sea Dogs) என்று பெயர் சூட்டியது.

IV

கலை வளர்ச்சி உலகியல் அறிவைப் புகுத்தியது. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த அறிவு வளர்ச்சி ஓரளவு உரம் பெற்றது. அதே சமயம் பல புது நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அப்போது மனிதன் ஒரு சிறிய அளவிலிருந்து பெரிய அளவுக்கு வளர்ந்துவிட்டான். உலகாயதம் என்று நாம் கூறும் உலகப் பிடிப்பு அவனுக்கு ஏற்பட்டது. கடவுளின் பெருமையே ஓரளவு குன்றியதுபோல் அவனுக்குத் தோன்றியது. இந்த நிலையில் மத மாற்ற எண்ணங்கள் ஐரோப்பாவில் எழுந்ததில் வியப்பில்லை. இதைப்பற்றி நாம் விரிவாகப் பின் கூறுவோம். இங்கு தற்கால ஐரோப்பா பிறந்தது என்பதற்கு இதுவும் ஒரு சின்னமாக இருந்தது என்ற அளவில் நாம் இதைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.

ஐரோப்பாவின் இடைக்கால வரலாற்றை அறிந்தவர்கள் கி. பி. 1500 அளவிலே அங்கு ஏற்பட்ட சமயப் புரட்சி ஒரு புது யுகத்தையே அறிவித்தது என்பதை மறுக்க முடியாது. ஏறக் குறைய 1500ஆண்டுக் காலம் ஐரோப்பியர் எல்லோரும் ஒருமைப் பாட்டுடன் அனுசரித்த ஒரு மதம் சீர்திருத்தமடைய வேண்டும் என்ற ஒரு பெருங் கிளர்ச்சி இப்போது ஏற்பட்டது. இதன் காரணங்களைப் பொதுவாக இந்நூலின் முன்னுரையில் குறித்தோம். அவை ; (1) தேசிய நாடுகளின் தோற்றம், (2) திருச்சபையின் மகிமை குன்றுதல். இந்த இயலில் நாம் காட்டிய கலை வளர்ச்சியும் புது நாடுகளின் கண்டுபிடிப்பும் மேற்குறித்த இரு காரணங்களுக்கும் உரம் ஊட்டின. புது நாடுகள் கண்டுபிடிப்பதில் மிக அதிகப் பயன் பெற்றவர்கள் போர்த்துக்கீசியரும், ஸ்பெயின் நாட்டினரும். இவர்களுக்கும் திருச்சபைக்கும் வெகு காலமாக நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. போப்பாண்டவரும் இவர்கள் பெருமையைத் தமது பெருமையாகக் கொண்டார். நாம் முன்கூறியதுபோல் உலகத்தையே இருபகுதிகளாகப் பிரித்து இவர்களுக்குப் பங்கிட்டார். இந்நிலையில் மற்ற ஐரோப்பிய நாடுகளில் தேசிய உணர்ச்சி பொங்கியதில் ஆச்சரியமில்லை. அஃதே போல் கலை வளர்ச்சியின் காரணமாய்க் கற்றோர் தாம் கண்ட உலகத்தைப் பற்றி விமரிசனம் செய்ய நேர்ந்தது. கலை கலைக் காகவே (Art for Art's sake) என்பது போன்ற ஒரு கொள்கை அவர்களை நேரடியாகக் குற்றங்களைக் கண்டிக்கத் தூண்டியது. 1500ஆம் ஆண்டில் எராஸ்மஸ் எழுதிய ''குற்றத்தின் பெருமை'' (Praise of Folly) என்ற நூல் இத்தகையதாகும். இதில் குழுக்களின் சோம்பல், செல்வம் இவை போன்றவை கண்டிக்கப்


ஐஸ்லாந்து
ஸ்காண்டிநேவியன் தீபகற்பம்
ஸ்காண்டிநேவியன் மலைத்தொடர்

பட்டன. கலை வளர்ச்சியின் காரணமாய் இந்நூல் அப்போது வழங்கிய எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டது. இத்தாலிய நாட்டில் கலை வளர்ச்சிக்காகப் போப்புக்கள் செய்துவந்த பணிகளையே ஜெர்மனி நாட்டிலும் இன்னும் வட ஐரோப்பா முழுவதிலும், மக்கள் குறை கூறினர்கள். கட்ட டங்கள் கட்டுவதிலும், படங்கள் எழுதுவதிலும் அவர்கள் காட்டிய அக்கறையை மக்கள் உலகாயதமாகக் கருதினர்கள். இரண்டாம் ஜூலியஸ் என்ற போப்பு ரோமில் இப்பொழுது இலங்கும் புனித பீட்டர் மகாலயத்தைத் தொடங்கினர். ஆனல் அதற்குப் போதிய பணம் அவரிடமில்லை. அவர் இறக்கும்போது தொடங்கிய வேலை பாதி அளவே முடிவடைந்திருந்தது. அவருக் குப் பின் வந்த பத்தாம் லெயோ (Leo X) இதைத் தொடர்ந்து நடத்த வேண்டி இதற்காக ஐரோப்பா முழுவதும் பணம் வசூலிக்க ஏற்பாடு செய்தார். இதற்காக அவர் மேற்கொண்ட ஒரு முயற்சி பெரும் விவாதத்திற்கு இடமளித்தது.

இதைக் கண்டுபிடிப்பதற்குக் கிறித்துவ மதக் கொள்கையை நாம் ஒருவாறு அறியவேண்டும். மறு உலக வாழ்விலே பாவத் தோடு இறப்பவர்கள் நரகத்திற்கும், நல் வாழ்வு வாழ்ந்து இறப்ப வர்கள் மோட்சத்திற்கும் செல்கிறார்கள் என்பதும், இந்த இரு திறத்தாருக்கும் இடையிலே இருப்பவர்கள் பரிசுத்தமடையும் வரையில் நரகத்திற்கும் மோட்சத்திற்கு மிடையில் ஓரிடத்தில் தங்கள் பாவங்களுக்குப் போதிய கஷ்டங்கள் வழியாய் கழுவாய் தேடிய பின்னரே மோட்ச வாசலை அடைய முடியுமென்பதும் கிறித்துவக் கொள்கை. இந்தப் பரிகாரத்தை இவ்வுலகத்தி லேயே தானம், தர்மம் போன்ற நற்செயல்கள் மூலமாய்ப் பெறக் கூடும் என்பதும் இக்கொள்கையின் ஒரு பாகம். அதன்படி, பீட்டர் தேவாலயத்தைக் கட்டி முடிப்பதற்குப் பண உதவி தருபவர்கள் தங்கள் நன்கொடைக் கேற்பப் பரிகாரம் பெறக் கூடும். இந்தப் பரிகாரத்தை நாள் கணக்கில் அளவிட்டுப் பணம் கொடுப்போர்க்குத் தரும்படி போப் பத்தாம் லெயோ தமது ஆட் களுக்கு ஆணை பிறப்பித்தார். அவர்கள் இந்தக் கால அளவைக் குறிப்பிட்டுக் கொடையாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு தோல் அட்டை வழங்கினர்கள். இது ஒரு பெரும் குழப்பத்தை உண்டு பண்ணியது. சிலர் திருச்சபைக்கு இத்தகைய அதிகாரம் உண்டா என்று அங்கலாய்த்தார்கள்; ஒரு சிலர் இவ்வளவு கஷ்டப்பட்டுத் தேவாலயம் எழுப்பாவிட்டால் என்ன என்று பிரசாரம் செய்தார்கள். வேறு சிலர் பணம் கொடுத்துப் பாவப் பரிகா ரத்தை வாங்கிப் பத்திரமாய் வைத்துக் கொண்டார்கள். திருச் சபைக்குப் பாவங்களை மன்னிக்க அதிகாரம் கடவுளாலேயே தரப்

பட்டது என்று அவர்கள் விவாதித்தார்கள். ஏழைகளுக்குப் பணமில்லாமலேயே பாவப் பரிகாரம் தரப்பட்டது என்று அவர்கள் போதித்தார்கள்.

பாவமன்னிப்புச் சீட்டு வியாபாரம் (Sale of indulgences) என்பது இதுதான். இது ஐரோப்பாவில் ஒரு பெரும் மதப் புரட்சியை உண்டாக்கியது. அப்போது ஜெர்மனி நாட்டிலே மார்டின் லூத்தர் (Martin Luther) என்ற ஒருவர் இருந்தார். அவர் ஜெர்மனியின் வட பாகத்தில் 1483ஆம் ஆண்டு ஒரு சிற்றூரில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். நாளடைவில் எர்பர்ட் (Erfurt) பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார். அதன் பிறகு அவர் சந்நியாசிகள் சபையில் சேர்ந்து விட்டன்பர்க் (Wittenberg) பள்ளிக்கூடத்தில் வேத சாஸ்திர ஆசிரியராகப் பணி யாற்றினர். அவருடைய ஓய்வு நேரங்களில் விவிலிய நூலை முயன்று படித்ததன் விளைவாக அதில் சொல்லப்பட்டிருப்ப தற்கும் போப்புக்களின் போதனைக்கும் முரண்பாடுகள் இருக் கின்றன என்று அவர் விவாதித்தார். 1511ஆம் ஆண்டு ரோமுக்குச் சென்றவர் போப் ஜூலியஸின் கலை வளர்ச்சித் திட்டங்களைக் கண்டு உலக விவகாரங்களில் அவர் அதிகமாக ஈடு பட்டிருப்பதாகக் கருதி மனம் நொந்தார். இந்த நிலையில் பாவ மன்னிப்புச் சீட்டு விற்பனைக்காக டெட்சல் என்பவர் சேக்ஸனி பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டார். டெட்சலின் முறைகளைக் கண்டு லூத்தர் கொதித்தெழுந்தார். 1517ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தின் கடைசி நாள் அவர் விட்டன்பர்க் கோயிலின் கதவில் பாவமன்னிப்புச் சீட்டு விற்பனை பற்றி 95 ஆட் சேபணைகள் கொண்ட தம் விளம்பரத்தை ஒட்டி வைத்தார். இது பெருங் குழப்பத்திற்கு அடிகோலிற்று. மதச் சீர்திருத்த இயக்கம் அன்றே ஐரோப்பாவில் தொடங்கியது. புது ஐரோப்பாவும் அன்று பிறந்தது என்று கூறுவாரும் உண்டு.

3. தேசிய நாடுகள்

பிரான்ஸ்—ஸ்பெயின்—இத்தாலியச் சண்டைகள்

I

தற்கால ஐரோப்பாவின் முதல் சின்னம் தேசியம் என்பதை முன் கூறினேம். அப்பொழுது எழுந்த தேசிய நாடுகளில் முதல் இடம் வகிக்கக்கூடியவை பிரான்ஸும் ஸ்பெயினும். நூருண்டுப் போர் தேசியத்தின் காரணமாகவே நடந்தது என்று கூற வேண்டும். அது எவ்வாருயினும் அதன் முடிவிலே பிரான்ஸிலும் ஆங்கில நாட்டிலும் தேசியம் வளர்ந்தது என்பதற்கு ஐயமில்லை.

நூருண்டுப் போரில் வெற்றி கண்ட பிரெஞ்சு மன்னர் ஏழாம் சார்லஸ் 1461ஆம் ஆண்டு காலமானர். தேசத்தில் அப்பொழுது அமைதி நிலவியது, அரசாங்கம் நிலைகொண் டிருந்தது; அதோடு, இறந்த மன்னர் நல்லதொரு படையையும் விட்டுச் சென்றிருந் தார். அவருடைய மகனர் பதினேராம் லூயி காலத்திற்கேற்ற மன்னராக வாய்த்தார். அவர் பிரபுக்களை மதிக்கவில்லை; சாதாரண மக்களை மதித்துப் போற்றினர். வன்பும் அன்பும் ஒருங்கே அவரிடம் பணியாற்றின; வஞ்சகமும் நேர்மையும் அவ ரிடம் சமயத்திற் கேற்ப வேலை செய்தன. அவரைப்பற்றி இந் நூலின் முன்னுரையில் நாம் குறித்ததுபோல் ''சிலந்தி மன்னர்'' என்ற பெயர் அவருக்குச் சாலவும் பொருத்தமாகும். நிலமானிய முறை ஒடுங்கித் தேசியம் ஓங்கும் காலம் அவரது ஆட்சியின் காலம். அதை நன்கு அறிந்துகொண்ட லூயி அதற்கேற்ப நடந்து கொண்டார். மன்னரின் ஒற்றர்கள் எங்கும் வேலை செய் தார்கள். அவரும் பல தடவை நாட்டைச் சுற்றி வந்தார். எப் போதும் சாதாரண மக்களோடு பழகினர். பிரபுக்களைத் தவிர்த்து, அவர்களில் கொடியவர்களின் தலைகளைத் துண்டிக் கவும் அவர் தயங்கினதில்லை. ஒரு சமயம் பாரிஸ் பட்டணத்தின் கர்தினலையே இரும்புக் கூண்டில் பூட்டி வைத்தவர் இந்த மன்னர். பிரான்சில் தேசியம் வளர்வதற்கு இவ்விதமாக லூயி சிறந்த தொண்டாற்றினர்.

இவர் அரசாட்சிக்கு வந்தவுடனேயே சில பிரபுக்கள் ஒன்று கூடி இவரை எதிர்த்தார்கள். அவர்கள் பர்கண்டிப் பிரபு சார்

லஸின் (தைரியம் கொண்ட சார்லஸ் அல்லது Charles the Bold என்பது இவரது பட்டப் பெயர்) தலைமையில் ஒன்று கூடி, ''சமூக நலச் சங்கம்'' (League of the Public Good) என்ற ஒரு சங்கத்தை நிறுவினர்கள். பாரிஸ் பட்டணம் அவர்களோடு சேரும் தருவாயில் லூயி அவர்களை அப் பட்டணத்தின் வெளியே எதிர்த் தார். தம் படை வலி போதாத நிலையில் இருப்பதைக் கண்டு அவர்களோடு நேரடியாகச் சண்டை செய்யாமல் தம் படையைப் பெரிதாக்கிக்கொள்ளக் காலவிடையீடு செய்துகொண்டார். இதற்குள்ளாகப் பிரபுக்கள் படை வலிமை யிழக்கத் தொடங் கியது. கடைசியாக இரு திறத்தாருக்கு மிடையே கன்பிளான் என்னுமிடத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது. (Treaty of Conflans). அதில் லூயி பிரபுக்கள் வேண்டுகோள்களைப் பெரிதும் ஏற்றுக் கொண்டார். நாட்டின் நன்மைக்காகவும், தேசியம் வளரவும் சமாதானம் தேவையாயிருந்தது. (அதற்குத் தம்முடைய தற் பெருமை தடையாகா வண்ணம் லூயி நடந்து கொண்டது அவரது அரசியல் அறிவு எனலாம்.) பர்கண்டிப் பிரபுவுடன் சண்டையை நடத்திக் கொண்டு போயிருந்தால் நாடு பாழ்பட் டிருக்கும். ஆங்கிலேயர்கள் இவருடைய உதவிக்கு வர இன்னும் தயாராகக் காத்திருந்தார்கள். அவர்களை அப்படி வரவிடுவது மறுபடியும் ஒரு நூறுண்டுப் போருக்கு வழி கோலுவதாகும். இதை யெல்லாம் லூயி மன்னர் நீண்ட நோக்குடன் ஆராய்ந் துணர்ந்தார். அப்படி யிருந்தும் ஆங்கிலேயப் படைகள் பிரான்ஸ் நாட்டில் பாசறை ஏற்படுத்தின (1475). பணம் கொடுத்து அவைகளைத் திருப்பி அனுப்பும் அளவுக்கு இந்த மன்னர் அரசியல் அறிவு படைத்திருந்தார்.

இவருடைய ஆட்சிக் காலத்தில் (1461-1483) பிரான்ஸில் தேசியம் வளர்ந்ததில் வியப்பில்லை. லூயி திறமை மிக்கவர்; நல்லூழுடையவர். 1477-இல் சார்லஸ் இறந்தார். அவரைப் பின் தொடர்ந்து பட்டத்திற்கு வர அவருக்கு ஆண் வாரிசு இல்லை. ஆகவே அவர் ஆட்சியில் இருந்துவந்த பர்கண்டி, பிக்கர்டி, அர்சூடாய் பிரதேசங்கள் லூயிக்குச் சேர்ந்தன. சார்லஸைத் தொடர்ந்து ஏய்க்ஸ் மன்னனும், பிரிட்டனிப் பிரபுவும் ஆண் சந்ததி இல்லாமலே இறந்தார்கள். ஆகவே மெயின், ஆர்கோ, புரோவென்ஸ், பிரிட்டனி ஆகிய பிரதேசங்கள் பிரெஞ்சு அரசருக்கு உரிமையாயின: ஆகவே லூயி மன்னர் இறக்கும் போது ஒன்றித்த பிரான்ஸ் நாட்டைக் கண்டு மனம் குளிர்ந்தார்; அது மட்டுமன்று; பர்கண்டி, பிரிட்டனிப் பிரபுக்கள் வெற்று ஆட்சியாளர்களாக மட்டும் இருக்கவில்லை. அவர்கள் தங்கள் உரிமையின் கீழ் வாழ்ந்த குடிகளைச் சிறக்கச் செய்திருந்தார்கள்.

இவை யாவும் இப்போது பிரெஞ்சு அரசருக்குச் சொந்தமாயின. பிரஞ்சு நாட்டின் கடற்படை பிரிட்டனியின் கடற் படையிலிருந்து தொடங்கியது. அதேபோல் பிளாண்டர்ஸ் நாட்டின் கலையும் கைத்தொழிலும் பிரான்ஸுக்கு இப்போது சொந்தமாயின. நெசவுத் தொழில் பிரஞ்சு நாட்டில் தொடங்கியது பிளாண்டர்ஸ் நாட்டின் தொழிலாளர் மூலமாகவே யாகும். அது பிரான்ஸின் மூலமாக ஐரோப்பாவில் பரவியது. பிளாண்டர்ஸ் நாட்டின் ஓவியர்கள் சிறந்த திறம் படைத்தவர்கள். எண்ணெய் ஓவியம் (oil painting) முதன் முதல் இந்நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டு அதுவும் பிரான்ஸ் நாட்டின் வழியே ஐரோப்பாவில் பரவியது.

பிளாண்டர்ஸ் நாடு பிரெஞ்சு ஆட்சியின் கீழ் வந்தது பிரான்ஸ் தேசத்திற்குப் பெரும் பயன் விளைத்தது. அப்போது அந்நாடு ஐரோப்பிய வியாபாரத்தின் முன் அணியில் நின்றது. அதன் பலனாக அங்குச் செல்வம் கொழித்தது. இதைத் தொடர்ந்து சிறந்த கலைஞர்கள் தோன்றினர்கள். இத்தாலிய ஓவியர்கள் முற்காலத்திய கலைஞர்களைப் பின்பற்றியவர்கள்; பிளாண்டர்ஸ் கலைஞர்களோ தங்கள் நாட்டில் கண்டவற்றைக் கொண்டே அழகாக எழுதினர்கள். 15ஆம் நூற்றாண்டின் கடைசியில் அவர்களது கலைக்குச் சிறந்தமதிப்பு இருந்தது; வட ஜெர்மன் ஓவியர்களெல்லாம் அவர்கள் கையாண்ட முறையையே பின் பற்றினர்கள்.

லூயி தம் படை வலியை உறுதிப்படுத்த எண்ணினார். மக்கள் சபை (States-General) அதை ஆமோதித்தது. அதற்கென ஒரு நில வரியை ஒதுக்கியது. மன்னர் இதைக்கொண்டு படையைச் சீர்படுத்தினது மன்றிப் பணமுடை யில்லாமலே அரசாட்சியை நடத்தவும் வழி கண்டார். இதனால் அவர் இதன் பிறகு மக்கள் சபையை அழைக்கவில்லை; ஆயினும். மக்கள் அவரிடம் மாறு கொள்ளவில்லை. கி. பி. 1500 அளவில் உண்மையாகவே தேசிய ஆட்சி பிரான்ஸில் ஏற்பட்டுவிட்டது.

II

ஸ்பெயின் நாட்டின் தென் பாகத்தில் முகமதியர் ஆதிக்கம் பெருகி இருந்தது. அவர்களை எதிர்த்துத் தாக்குவதில் அந்நாட்டினர் யாவரும் முனைந்து நின்றார்கள். பிரான்ஸ் தேசத்தில் ஆங்கில எதிர்ப்பு அந்நாட்டை ஒன்றுபடுத்தியது போல், இந்நாட்டில் முகமதிய எதிர்ப்பு வேலை செய்தது. 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை ஸ்பெயின் நான்கு பகுதிகளாக இருந்தது. போர்த்துக்கல், கேஸ்டைல், அரகன், கிரனடா என்ற இவை

நான்கும் உரிமை பெற்ற நான்கு நாடுகளாக விளங்கின. கி. பி. 1479ஆம் ஆண்டு அரகன் நாட்டு மன்னர் பெர்டினண்ட் (Ferdinand), கேஸ்டைல் அரசி இஸபெல்லாவை (Isabella) மணந் தார். இது இவ்விரண்டு நாட்டையும் ஒன்றுக்கியது. இவர்கள் இருவருமே திறமை வாய்ந்தவர்கள்; இவர்களுடைய ஒன்றிப்பின் பயனாகக் கிரனடாவிலிருந்த முகமதியர்கள் துரத்தப்பட்டார்கள் (1492). கிரனடாவும் அப்போது ஸ்பெயின் நாட்டின் ஒரு பகுதி யாயிற்று. போர்த்துக்கல் மிக வலிமை பெற்று விளங்கியதால் அதை ஸ்பெயின் நாட்டோடு சேர்க்கக் கூடவில்லை. ஆனால் ஸ்பெயின் தேசிய வளர்ச்சிக்கு அதனால் ஒரு குறையும் ஏற்பட வில்லை. கேஸ்டைல், அரகன் நாடுகளும் தனித்தனி உரிமைகள் வேண்டின. இரு நாடுகளிலும் தனித் தனி மக்கள் சபை (Cortes) இருந்தது. ஆயினும், இதுவும் நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைக்கவில்லை. இரு பகுதிகளிலும் காலப்போக்கில் ஒரே வழக் கங்கள் ஏற்பட்டன; ஒரே மக்கள் சபை இரு பகுதிகளுக்கும் சட்டங்கள் செய்தது; பழங் கோட்டைகளும், பிரபுக்கள் அரண் மனைகளும் தகர்த்தெறியப்பட்டன; நிலமானியப் படை அழிக்கப் பட்டுத் தேசியப் படை உருவாகியது. நாட்டிலே உள்ள யூதர் களும், முகமதியர்களும் கிறித்துவ மதத்தைப் பின்பற்ற வேண்டும், அல்லது நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற திட்டம் பிறப்பிக்கப்பட்டது. சமய ஊழல்களைத் தடுக்க ஏற் பட்ட மன்றம் (Institution) இப்பொழுது இந்தத் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவரப் பயன் பட்டது.

பதினைந்தாம் நூற்றாண்டு முடியும் முன்னே தேசிய அரசு ஸ்பெயின் நாட்டில் வேரூன்றியது. அரகன் பகுதிக்குச் சொந்த மான நேப்பிள்ஸ், தென் இத்தாலி, சார்டினியா, மால்டா, வட ஆப்பிரிக்காவில் பல துறைமுகங்கள்—இவை யாவும் இப்போது ஒன்றுபட்ட ஸ்பெயின் நாட்டிற்குச் சொந்தமாயின. அரகன் நாடு வணிகர்களுக்குப் பெயர்பெற்றது. மத்தியதரைக் கடல் வழியே அவர்கள் பெரும் வர்த்தகர்களாகத் திகழ்ந்தார்கள். இந்நிலையில் கொலம்பஸ் மேற்கிந்தியத் தீவுகளைக் கண்டுபிடித்து அவற்றையும் ஸ்பெயின் நாட்டுடன் சேர்த்தார்.

III

இந்தச் சமயத்தில் ஐரோப்பாவில் மிகப் பெயர் பெற்று விளங்கியது இத்தாலி நாடு. 13ஆம் நூற்றாண்டின் இறுதியி லிருந்து இந்நாட்டில் அமைதி நிலவியது. அதோடு வியாபாரம் பெருகியது; கலை பெருகியது. இவற்றின் பெருமை பற்றி ஏற்

கெனவே நாம் ஒரு சிறிது கூறினேம். ஆயினும், கலைக்கும் அறிவுக்கும் ஏற்பப் படை வலிமை பெருகவில்லை. இந்நாட்டிலே பல பட்டணங்கள் தனி அரசு பெற்றவை. அவை ஒன்றோடொன்று சண்டை செய்துகொண்டிருந்தன. அதனால் நாட்டுக்கென்று ஒரு படை ஏற்பட வழி இல்லாமற் போயிற்று. பட்டணங்களும் தங்கள் படை வலியை உறுதிப்படுத்தவில்லை. அவை செல்வம் செறிந்தவை. அங்குப் படையில் சேர்ந்து வேலை செய்ய ஆட்கள் கிடைப்பது அருமை. அதனால் அவைகள் கூலிப் படைகளையே (Mercenaries) பெரிதும் நம்பியிருந்தன. ஆகவே பொதுவில் கூறுமிடத்து இத்தாலி 15ஆம் நூற்றாண்டில் செல்வம் கொழித்த, ஆனால் காப்பற்ற, நாடாகவிருந்தது. அதனால் இந்நாட்டைக் கைப்பற்ற மற்ற நாடுகள் ஆவல் கொண்டதில் வியப்பில்லை.

இவ்வித ஆவல் முதலில் பிரான்ஸ் நாட்டில் உதித்தது. அங்கே பதினாராம் லூயி இறக்கும்போது ஐரோப்பாவின் வேறு முடியரசுகளைவிட மிக வலிமை பொருந்திய அரசை யல்லவா தம் மகனுர் எட்டாம் சார்லஸ் மன்னருக்கு விட்டுச் சென்றிருந்தார்! மன்னரும் மக்களும் போர் வேட்கை கொண்டவர்களாக விருந்தார்கள். அதற்குக் காரணம் அவர்களிடமிருந்த பெரும் படையே யாகும். இங்கிலாந்துடனும் பர்கண்டிப் பிரபுவுடனும் அவர்கள் நடத்திய நீண்ட போர்களில் அது போர்ப் பயிற்சியை நன்கு பெற்றிருந்தது. துப்பாக்கி முதலிய புதிய படைக் கலங்களைப் பயன்படுத்துவதில் பிற ஐரோப்பிய நாடுகளைவிடப் பிரஞ்சுப் படை தேர்ச்சி அடைந்திருந்தது. சார்லஸ் தம் தந்தையைப் போல் பேராற்றல் மிக்கவரல்லர்; ஆயினும், தம் படை வலிமையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். பெரும் புகழ் வாய்ந்த, செயற்கரிய செயல் ஏதாவது புரிந்து பெருமை பெற வேண்டும் என்ற ஆவல் அவரை உந்தியது.

ஆகவே, இயல்பாக அவர் நாட்டம் இத்தாலியின் மேல் திரும்பியது. நேப்பிள்ஸ் பட்டணத்தின்மீது உரிமை காட்டி இத்தாலியைத் தாக்க எண்ணினர். இந்த நிலையில் மிலான் மன்னர் பிளாரன்ஸின் தாக்குதலுக்களஞ்சிப் பிரஞ்சு மன்னரின் உதவியை நாடினர். சார்லஸ் இவ் வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு இத்தாலியினுள் தம் படையுடன் நுழைந்தார்.

இதுதான் பிரஞ்சுக்காரரின் முதல் இத்தாலியப் படையெடுப்பு. இத்தாலி நாட்டின் செல்வச் செழிப்பையும் செறிந்த அழகையும் கண்ட பிரஞ்சுக்காரர் வியப்புக் கடலில் ஆழ்ந்தனர். இத்தாலியர் பிரஞ்சுப் படையினரின் திறமையையும் அவர்கள் துப்பாக்கிகளை மிக எளிமையாகக் கையாண்ட விதத்தையும்

கண்டு வியந்தனர். இவ்விதமாய் ஒருபுறம் ஆசையும் மறுபுறம் அச்சமும் பிறந்தன. ஆகவே இத்தாலியை எப்படியாவது கைப் பற்ற விழைந்த பிரஞ்சுக்காரரின் வலிமையைக் கண்ட இத்தாலி யர், அவர்களை எவ்விடத்தும் வன்மையாகத் தாக்கவில்லை. பிளாரன்ஸ், பிசா, ரோம், நேப்பிள்ஸ் என்ற இத்தாலியச் செல்வ நகரங்கள் ஒன்றன் பின் ஒன்றாய்ப் பிரஞ்சுக்காரர் வசமாயின.

இத்தாலி முழுவதுமே பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமாகி விடும் நிலைமை ஏற்பட்டது. ஆனால் அதேபொழுது ஓர் எதிர் பாராத மாறுதல் நிகழ்ந்தது. இத்தாலியிலும் ஐரோப்பா முழுவதிலுமே ஒரு புது அரசியல் ஒழுங்கு அப்பொழுது பேசப் பட்டு வந்தது. இது மிக விரைவில் வளர்ந்து ஐரோப்பிய வல்லரசுகளினிடையே ஒரு பெரு மாறுதலை விளைவிக்கக் கூடியதா யிற்று. இதற்குத்தான் ''வல்லரசு சமநிலை'' அல்லது ''சக்திச் சமநிலை'' (Balance of power) என்ற பெயர் சூட்டப்பட்டது. இச் சொற்றொடருக்கு முடிவான பொருள் கூற முடியாது. ஐரோப்பிய அரசுகளில் எந்த அரசும் மற்ற அரசுகளை அடக்கி ஆளும் வலிமை பெறுவதைத் தடுக்கவேண்டும். அதற்காக வலிமையைப் பெருக்கிக்கொண்டு செல்லும் அரசுக்கு எதிர்ப்பாக வலிமை குன்றிவிட்ட அரசோடு மற்ற அரசுகள் சேரவேண்டும் என்பதே இதன் கருத்து. ஐரோப்பிய வரலாறு இதற்குப் பல இடங்களில் சான்று பகர்கின்றது. எட்டாம் சார்லஸ் இத் தாலியில் வெற்றிகரமாக முன்னேறிச் சென்றதால் அவருக்கு எதிராக மிலான், வெனிஸ் பட்டணங்களோடு ஸ்பெயின் நாட்டு மன்னன் பெர்டினண்ட், பேரரசர் மாக்சிமில்லியன் என்ற இவர்கள் சேர்ந்தார்கள். போப்பும் இவர்களோடு சேர்ந்தார். சார்லஸ் இதை அறிந்தார். இனி அதிக நாள் இத்தாலியில் தங்கினால் அதை விட்டு வெளியேறுவது எளிதன்று என்பதைக் கண்டுகொண்டார். ஆகையால் அவர் நேப்பிள்ளை விட்டுத் விரைவாக வெளியேறினார். வெளியேறிய மன்னர் போர்நோவோ (Fornovo) என்னுமிடத்தில் ஒன்றுபட்ட தம் எதிரிகளைச் சந்தித்துக் கடும் போருக்குப் பிறகு வெற்றி கண்டார் (1495). அதன் பயனாகவே அவர் கெடுதியின்றித் தம் நாட்டை அடைய முடிந்தது. ஆகவே, சார்லஸின் இத்தாலியப் படையெழுச்சி அவருக்கு எவ்வித நன்மையையும் பயக்கவில்லை. ஒரு சிறிது காலம் சில இத்தாலியப் பட்டணங்களைத் தம் கைவசம் கொண் டிருந்ததுதான் இதனால் அவருக்கு விளைந்த பயன். சீக்கிரத்தில் அவர் புகழ் மங்கியது; சில ஆண்டுகளில் சார்லஸ் உயிர் நீத்தார் (1498). அப்பொழுது அவர் வென்ற நாடுகளெல்லாம் அவரிட மிருந்து நழுவின.

எட்டாம் சார்லஸுக்குப் பின் பிரான்ஸில் பட்டத்திற்கு வந்தவர் பன்னிரண்டாம் லூயி என்பவர். இவர் அவருக்கு மைத்துனர். இவர் குடிகள்பால் அன்பு கொண்டவர்; செங்கோல் மூலம் 'நாட்டின் தந்தை' என்ற நற்பெயர் கொண்டவர். ஆயினும், சார்லஸின் வெற்றிகள் வீணானதை எண்ணி மறுபடியும் இத்தாலியப் போரைத் தொடங்கினர். மிலான் மீது பிரஞ்சு அரசருக்கு ஒரு சிறிது உரிமை இருந்தது; வெனிஸ் பட்டணமும் மிலான் மீது கொண்ட பொறுமையால் அவருக்கு உதவி செய்தது: வெற்றி கிட்டியது. அடுத்தபடியாக லூயி நேப்பிள்ஸ் பட்டணத்தை நோக்கித் திரும்பினர். நேப்பிள்ஸின் மீது சொந்தம் பாராட்டப் பிரஞ்சு மன்னரைவிட ஸ்பெயின் மன்னருக்கே அதிக காரணமிருந்தது. இவ்விருவரும் ஒன்று சேர்ந்து நேப்பிள்ஸ் பட்டணத்தைத் தாக்குவதென்றும், வெற்றிக்குப் பிறகு அப்பட்டணத்தைத் தாம் பங்கிட்டுக் கொள்வதென்றும் கிரனடா என்ற இடத்தில் உடன்படிக்கை செய்து கொண்டார்கள் (1500). இதற்குக் கிரனடா உடன்படிக்கை என்று பெயர். இரு வல்லரசுகளின் கூட்டுப் படையை நேப்பிள்ஸ் எதிர்த்து நிற்கக்கூடாமல் சரணடைந்தது. நேப்பிள்ஸ் மன்னர் உடனே சிறை செய்யப்பட்டுப் பிரஞ்சு நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனல் கூட்டுறவாளருக்கு அப்பொழுதுதான் உண்மையான தொல்லைகள் தொடங்கின. நேப்பிள்ஸின் எப் பகுதி யாருக்குச் சொந்தம் என்பதைப் பற்றி கிரனடா உடன் படிக்கையில் தெளிவாகக் கூறப்படவில்லை. ஆகையால் பிரான்ஸுக்கும் ஸ்பெயினுக்கு மிடையே சண்டை மூண்டது. பிரஞ்சுக் காரர் ஒன்றன் பின் ஒன்றுகத் தோல்வியே கண்டனர்; கடைசியாக நேப்பிள்ஸ் பட்டணத்திலிருந்தும் அவர்கள் வெளியேற வேண்டியதாயிற்று.

அப்போது இரண்டாம் ஜூலியஸ் என்பவர் போப்பாக ஆட்சி செய்து வந்தார். அவருக்கு முந்திய போப்பாக விருந்த வரே ஆறும் அலெக்ஸாண்டர். இவரைப் பற்றி நாம் முன்னரே கூறியுள்ளோம். இவர் பிரஞ்சுக்காரரின் கைப்பாவையாக இருந்தவர். ஜூலியஸ் இவருடைய தோல்வியிலிருந்து சில நல்ல பாடங்களைப் படித்திருந்தார். தவிர, இவர் அரசியல் ஆற்றல் மிக்கவர். ஆயினும், அக்காலத்திய அரசியல் நிலை கூர்ந்த மதியினரையும் தோற்கடிக்கும் விதத்தில் அமைந்திருந்தது. ஆகவே வெனிஸ் பட்டணத்தைக் கவரவேண்டு மென்ற பேராசை பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளைப் பிடித்ததுபோல் போப் பாண்டவரையும் பிடித்துக்கொண்டது. மேற்குறித்த நாடுகளின்

மன்னர்களும், போப் ஜூலியஸும் ஒன்று சேர்ந்து காம்பிரேய் என்ற இடத்தில் திட்டம் வகுத்தார்கள் (1508). இதற்குக் காம்பிரேய் திட்டம் என்றும், இவர்களின் கூட்டுறவுக்குக் காம்பிரேய் குழு (League of Cambrai) என்றும் பெயர். வெனிஸ் மிக விரைவிலேயே தோற்றது; அதற்கு இத்தாலியில் சொந்தமான இடங்கள் யாவும் பகைவர் வசமாயின. ஆனால் பாகப் பிரிவினை பற்றி மறுபடியும் இவர்களிடையே சண்டை மூண்டது. போப்பாண்டவர் தமக்குச் சொந்தமான இடங்களும் இதன் பலனாகக் கை நழுவி விடுமோ என்று அஞ்சினார். அப்போதுதான் அவர் வெளிநாட்டினரை இத்தாலியின் உள்ளே நுழைய உதவிய தன் தீமையை உணர்ந்தார். அந்நாட்டின் வலிமை பொருந்திய பட்டணங்கள் தாமாகவே வலிமை குன்றிய பட்டணங்களை ஆதரிக்கத் தொடங்கின. போப்பும் இதன் நன்மையை உணர்ந்து வெனிஸ், ஸ்பெயின், ஐரோப்பியப் பேரரசு என்ற இவற்றைப் பிரான்சுக்கு எதிராக ஒன்று படுத்தினர், இதற்குப் ''புனித சங்கம்'' (Holy League) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. சிறிது காலத்திற்குப் பிறகு இங்கிலாந்தும் இதில் சேர்ந்து கொண்டது. பிரஞ்சு அரசர் தம் வலிமை கொண்ட மட்டும் போராடினார்; ஆயினும், வெற்றி கிடைக்கவில்லை. மேலும் அவர் இத்தாலியில் கொண்ட வெற்றிகளெல்லாம் 1513ஆம் ஆண்டிற்குள் மறைந்தொழிந்தன. அதே சமயம் ஆங்கிலேயர் பிரஞ்சுக்காரரை அவர்கள் நாட்டிலேயே தோற்கடித்தார்கள். இதன் பிறகு இரு திறத்தாரும் சமாதானம் செய்து கொண்டனர் (1515). அப்போது லூயி அரசரின் காலமும் முடியும் நிலையில் இருந்தது.

லூயிக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர் அவர் மைத்துனர் பிரான்சீஸ் என்ற இளைஞர். இயல்பாகவே இவர் போர் செய்து புகழ்பெற எண்ணினார். இவரைப்பற்றி வரலாறு கூறும் விளக்கங்களிலிருந்து இவர் அழகாக வளர்ந்து விளங்கிய வீரர் எனத் தெரிகிறது. இவர் மறுபடியும் இத்தாலியச் சண்டையைத் தொடங்கினர். வெனிஸைத் தவிர வேறு உறவு இவருக்கில்லை. ஆயினும், பழைய கூட்டுறவினர் இவரை எதிர்த்தார்கள். பிரான்சீஸ், முதலாம் பிரான்சீஸ் என்று பட்டம் சூடியவர். இவர் மாபெரும் படையுடன் ஆல்ப்ஸ் மலையைக் கடந்து இத்தாலி நாட்டினுள் நுழைந்தார். மாரிக்னே என்ற இடத்தில் இரண்டு நாள் போர் செய்து வெற்றி கண்டார். பெரு மலையைத் தாண்டியதைக் கண்டு வியந்த இத்தாலியர் அவர் கொண்ட வெற்றியைக் கண்டு சாலவும் வியந்தனர். அக்காலத்தில் சுவிட்சர்லாந்து வீரர்களென்றால் அவர்களை வெல்வது கடினம் என்ற கருத்து இருந்தது. பிரான்சீஸ் மன்னர் மாரிக்னே வெற்றி மூலம் இந்தக் கொள்கை

யைத் தகர்த்தெறிந்தார். அதற்குப் பதிலாகப் பிரஞ்சுக் காலாட் படையின் பெருமை இதற்குப் பிறகு உயர்ந்தது.

இவ் வெற்றியால் பிரான்சீஸ் சிறந்த நன்மைகள் சிலவற்றை அடைந்தார். முதலாவதாக, சுவிட்சர்லாந்து நாட்டுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, அந்நாட்டுப் படைகள் இனி பிரஞ்சுப் படையை எதிர்க்காமல் இருக்க வழி செய்து கொண் டார். இரண்டாவதாக, போப்பாண்டவரோடு சமாதானம் செய்து கொண்டார். நீண்ட காலமாக அவருக்குக் கொடுக்காம லிருந்த காணிக்கைகளைக் கொடுக்க ஒப்புக்கொண்டு பிரான்சீஸ் ஐரோப்பாவில் தமக்கு ஒரு புதிய வலிமையை ஏற்படுத்திக் கொண் டார். சமயத் துறையில் உயர்ந்த பதவிகளுக்கு ஆட்களை அமர்த்தும் பேருரிமை இப்பொழுது பிரஞ்சு அரசருக்குக் கிடைத் தது. போப்புக்கும் பிரான்ஸுக்கும் இப்பொழுது ஏற்பட்ட உறவு முறை 18ம் நூற்றாண்டு வரை மாறுமல் இருந்தது.

1519ஆம் ஆண்டு பேரரசர் மாக்சிமிலியன் காலமானார். இவர் இயற்கையாகவே வலிமையற்ற பேரரசர். ஆயினும், இவர் காலமான பின் பல புதுச் சிக்கல்கள் தோன்றலாயின. பேரரசர் பதவி தேர்தல் மூலம் நிறைவுறக் கூடியது. இப் பதவியை இதுவரை வகித்துவந்தவர்கள் ஜெர்மானியரே யாயினும் அவர்களே அதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்ற நியதி இல்லை. அப்பொழுது சமயச் சீர்திருத்த இயக்கம் (Reformation) வேறு ஜெர்மனியில் தோன்றிக் கொண்டிருந்தது. இக் காரணங்கள் பற்றி முதலாம் பிரான்சீஸ் தாமே அதற்குத் தக்கவரென்று தேர்தலில் போட்டியிட்டார். ஸ்பெயின் மன்னர் சார்லஸும் போட்டியில் கலந்து கொண்டார். இவர் மாக்சிமிலியனுடைய பேரப்பிள்ளை. இவருடைய பாட்டியார் பர்கண்டி நாட்டின் அரசுக்குரியவர். ஸ்பெயின், பர்கண்டி, இன்னும் ஹேப்ஸ்பர்க் குடும்பத்தாருக்குச் சொந்தமான பரந்த இடங்கள் யாவும் இவருக்குச் சொந்தமாயிருந்தன. ஆகவே இவரைப் பேரரசராகத் தேர்ந்தெடுப்பது ஐரோப்பிய வல்லரசு சமநிலையைக் குலைப்ப தாகும். ஆயினும், போட்டியாளர் இருவரும் கைக்கூலி கொடுத்துப் போட்டியில் தீவிரமாக ஈடுபட்டார்கள். ஆனால் சார்லஸ் வெற்றி பெற்றுப் பேரரசர் ஐந்தாம் சார்லஸ் என்ற பட்டமும் சூடினார் (1519).

இருவருக்கு மிடையே அக்கால வழக்கப்படி சண்டை மூள் வதைத் தவிர வேறு வழியில்லை. இரு திறத்தாரும் உடனே துணை சேர்க்கும் உடன்படிக்கைகளில் ஈடுப்பட்டார்கள். இங்கிலாந்து பேரரசர் பக்கம் சேர்ந்தது. 1525-இல் இந்தப் போரின் முதற்

சண்டை நடந்தது. பிரான்சீஸ் பத்தாண்டுகளுக்கு முன் அடைந்த வெற்றிகளை நினைத்து மறுபடியும் இத்தாலியினுள் நுழைந்தார். ஆனால் ஒரே ஆண்டில் பாவியா என்ற இடத்தில் நடந்த சண்டையில் அவர் தோல்வி அடைந்து எதிரிகள் கையில் அகப்பட்டார். பலவந்தமாக ஸ்பெயின் நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்ட பிரான்சீஸ், மேட்ரிட் நகரில் ஓர் உடன் படிக்கையில் கையெழுத்திட வேண்டியதாயிற்று. இதனால் பிரான்சீஸ் பல இடங்களை இழந்து பெருமை குன்றலானார். ஆயினும், அவர் சார்லஸுக்குத் தலை வணங்க மறுத்துவிட்டு ஊருக்கு எழுதின கடிதமொன்றில் ''உயிரையும் மதிப்பையும் தவிர வேறென்றையும் காக்க முடியவில்லை'' என்று குறித்தார்.

சார்லஸ் அடைந்த வெற்றி மிகப் பெரிய வெற்றியாகும். ஆயினும் அதன் காரணமாகவே பிற வல்லரசுகளின் பகை காத் திருந்தது. இதைக் கண்ட பிரான்சீஸ் தாம் கொடுக்க வேண்டிய இடங்களைக் கொடுப்பதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி கிடைக்கவில்லை என்றார். தவிர, மேட்ரிட் உடன்படிக்கை, கட்டாயப்படுத்தப்பட்டது என்றும், ஆகவே அது தம்மைக் கட்டுப் படுத்தமுடியாதென்றும் அவர் கூறிக்கொண்டார். மீண்டும் போர் மூண்டது (1527). ஆனால் அப்பொழுது எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. தம் படைகளுக்குச் சம்பளம் கொடுக்கச் சார்லஸ் பேரரசரால் முடியவில்லை. அக்காலத்திய நாடுகளின் பொருளாதாரம் இத்தகைய நிலையில் இருந்தது. இதன் விளை வாகப் படைக்கலகம் மூண்டது. படையினர் இத்தாலியின் செல்வம் நிறைந்த பட்டணங்களில் ஒன்றைக் கொள்ளை அடித்துத் தங்களுக்குச் சேரவேண்டிய பணத்தை எடுத்துக்கொள்ள எண்ணினர். உடனே பிளாரன்ஸ் பட்டணம் தாக்கப்பட்டது. இம்முயற்சி பழுதுபடவே அவர்கள் ரோம் நகரைத் தாக்கிச் சூறையாடினர். கிரான்ட் என்ற வரலாற்று ஆசிரியர் கூறுவது போல் பழங்காலத்து லம்பாடியர் போன்ற முரடர் கூட அந் நகரத்தை இவ்வளவு கொடுமையாகச் சூறையாடவில்லை. ஏழாம் கிளமண்ட் என்ற போப்பாண்டவர் சிறை பிடிக்கப்பட்டு ஸ்பெயி னுக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆயினும், இதெல்லாம் பிரான்ஸுக்கும் ஸ்பெயினுக்கு மிடையே மூண்ட சண்டையைத் தவிர்க்கவில்லை. இடை இடையே சண்டை நடப்பதும் சமா தானம் செய்து கொள்ளுவதுமாக இப்போர் ஊர்ந்து சென்றது என்று சொல்ல வேண்டும்.

ஜெர்மனி நாட்டில் அப்பொழுதுதான் தொடங்கி யிருந்த சமயச் சீர்திருத்தமும் சண்டையின் வேகத்தைக் குறைத்தது. சார்லஸ் இதை அடக்கவேண்டும் என்ற உறுதியான எண்ணம்

கொண்டவர். ஆகையால் அவர் சண்டையில் முழு மூச்சோடு ஈடுபட வழி ஏற்படவில்லை. போரில் சிறிது ஓய்வு கிடைத்த போதெல்லாம் அவர் இந்தப் புத்தியக்கத்தின் மீது பாய்ந்தார். பிரான்சீஸ் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவராயினும் சார்ல ஸுக்குத் துன்பம் தருவதற்காகவே சமயச் சீர்திருத்தத்தை ஆதரித்தார். ஜெர்மனியில் ஏற்பட்ட இந்தச் சீர்திருத்த இயக்கம் ஒரு விதத்தில் பிரான்ஸ் நாட்டைத் தோல்வியின்றிக் காப்பாற்றியது. அதே போல் பிரான்ஸ் நாட்டிற்கும் ஸ்பெயின் நாட்டிற்கும் சண்டை மூளாமலிருந்திருந்தால் சீர்திருத்த இயக்கம் முளையிலேயே கிள்ளப்பட்டிருக்கும்.

1529-இல் காம்பிராய் என்ற விடத்தில் இரு நாடுகளுக்கு மிடையே சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. ஆனால் இது ஏழாண்டுக் காலமே நீடித்தது. 1536ஆம் ஆண்டு மிலான் பட்டணத்துக் கோமகன் பதவி காலியாயிற்று. இதற்கும் சார்லஸும் பிரான்சீஸும் போட்டியிட்டார்கள். மறுபடியும் போர் தொடங்கியது. நல்ல காலமாக அது முன்போல் கடுமையாக நடத்தப்படவில்லை. 1538ஆம் ஆண்டிலேயே இருவரும் சமாதானம் செய்து கொண்டனர். இதன்படி 10 ஆண்டு காலம் இரண்டு நாடுகளுக்கு மிடையே சமாதானம் நிலவவேண்டுமென்று தீர்மானமாயிற்று. ஆயினும், நான்காண்டுகளுக்கு மேல் சமாதானம் நீடிக்கவில்லை. 1542ஆம் ஆண்டு சார்லஸ் தம் மகனுர் பிலிப் என்பவரை மிலான் பட்டணத்துக் கோமகனுகச் செய்தார். இதனுல் மீண்டும் போர் மூண்டது. இந்தப் போரில் பிரஞ்சுக்காரர்கள் இத்தாலியில் பல வெற்றிகள் பெற்ருர்கள். ஆனுல் ஐரோப்பாவின் பிற பாகங்களில் இரு மன்னர்களும் தம் கருத்தைச் செலுத்த வேண்டியிருந்ததால் இத்தாலியச் சண்டைக்கு ஒரு முடிவு ஏற்பட்டது. 1544-ல் இரு நாட்டினரும் கிராப்பி என்ற இடத்தில் அவரவர்கள் வென்ற இடங்களை அவரவர்களே வைத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவோடு சமாதானம் செய்துகொண்டனர்.

1547-ல் முதலாம் பிரான்சீஸ் காலமானுர். அவருக்குப் பின் அவர் மகனுர் இரண்டாம் ஹென்றி பட்டமெய்தினுர். பிரான்ஸுக்கும் ஸ்பெயினுக்கும் இடையே ஏற்பட்ட போர்க்கோலம் மறுபடியும் உயிர்பெற் றெழுந்தது. அப்போது ஜெர்மனி நாட்டில் சமயச் சீர்திருத்த இயக்கம் வெகு விரைவாகச் சென்றுகொண்டிருந்தது. சார்லஸ் மன்னர் கத்தோலிக்க மதப் பற்றுள்ளவர். ஆகையால் அவர் ஜெர்மனியில் பரவிவந்த புது மதக் கொள்கைகளை எதிர்த்தார். ஹென்றி மன்னர், கத்தோலிக்கராய் இருந்த போதிலும் தம் குல எதிரிக்கு மாருகப் பணி புரிய எண்ணிப் புது மத இயக்கத்தை ஆதரித்தார். தேசியம் அக்கால

மன்னர்கள்பால் எத்துணை ஆதிக்கம் செலுத்தியது என்பதைக் காட்ட இதைவிட வேறு சான்று வேண்டுவதில்லை.

1550ஆம் ஆண்டு ஜெர்மனியில் குழப்பங்கள் ஏற்பட்டன. சார்லஸ் அவற்றை அடக்க எத்தனிக்க, ஹென்றி குழப்பக்காரரோடு சேர்ந்து சார்லஸின் முயற்சி கைகூடா வண்ணம் பார்த்துக் கொண்டார். ஆகையால் சார்லஸ் தம் முயற்சியில் படுதோல்வி அடைந்தார். சார்லஸ் பிரான்ஸ் நாட்டின் எல்லையிலுள்ள மெட்ஸ் பட்டணத்தை முற்றுகையிட்டார். அது அப்பொழுது பிரஞ்சுக்காரர்கள் கையிலிருந்தது. சார்லஸ் நம்பிக்கையோடும் ஊக்கத்தோடும் முற்றுகையை நடத்தினர். ஆனால் அப்பொழுது தான் வந்த பிரஞ்சுக்காரரது புதுப்படை அவரைத் தோற்கடித்தது. இது சார்லஸுக்கு ஏற்பட்ட இரண்டாம் தோல்வியாகும். இதுவே அவருடைய கடைசிப் போராகவும் முடிந்தது. பிரஞ்சு எல்லையினின்று வெளியேறிய மன்னர் மனமுடைந்தார். அதனால் அவர் உடல்நலமே குன்றியது. அரசியலில் அவநம்பிக்கை ஏற்பட்டது. ஆட்சியைத் துறந்து ஆன்ம அமைதி பெறுவதற்காக ஒரு மடத்தில் சேர்ந்துகொண்டார். ஒரு காலத்தில் தம் பேரரசு முழுவதையும் தம் மகன் பிலிப்புக்கு அளிக்க வேண்டுமென்று சார்லஸ் எண்ணி யிருந்தார். ஆனால் அவர் அரசு துறந்தவுடன் அவர் சகோதரர் பெர்டினண்டு என்பவர் ஆஸ்டிரியாவில் பேரரசுக்குச் சொந்தமான இடங்களை யெல்லாம் கைப்பற்றிய தோடு, பேரரசர் என்ற பட்டத்தைப் பெறவும் வழி செய்து கொண்டார். சார்லஸின் மகனார் பிலிப், ஸ்பெயின் நாட்டிற்கும், நெதர்லாந்து, இத்தாலி, இன்னும் புத்துலகில் ஸ்பெயினுக்குச் சொந்தமான இடங்களுக்கும் மன்னர் ஆனார்.

துறவியான சார்லஸ், ஸ்பெயின் நாட்டிலுள்ள யூஸ்ட் என்ற பட்டணத்திலிருந்த துறவிகள் மடமொன்றில் நுழைந்தார். ஆனால் இத்தாலியச் சண்டைகள் நின்றபாடில்லை. தந்தையார் தொடங்கிய போரை மகனார் முன்னின்று நடத்த வேண்டிய தாயிற்று. பிலிப் சிறப்பான பல வெற்றிகள் கண்டார். பிரஞ்சுக் காரர் பிரான்ஸுக்கு வடக்கே செயின்ட் குவின்டின் என்ற இடத்தில் படு தோல்வி அடைந்தனர். பிலிப் மிகு விரைவிலே பாரிஸ் பட்டணத்தை அடையக்கூடும் என்று எதிர்பார்க்கப் பட்டது. அப்போது இங்கிலாந்தின் அரசியான மேரி பிலிப் மன்னரை மணந்தாள். விரைவில் அவருக்கு வெற்றி கிடைக்கும் என்று எண்ணிய நேரத்தில் பிரஞ்சுக்காரர் ஆங்கிலேயரைத் தோற்கடித்துக் கலே என்ற துறைமுகப் பட்டினத்தைக் கைப் பற்றினர். இதற்குப் பிறகு ஆங்கிலேயர் சண்டையில் ஊக்கம் இழந்தனர். மேரி ராணியார் மனம் நொந்தார். கலே கை

நெகிழ்ந்தது அவருடைய இருதயத்தில் எழுதப்பட்டது என்று வரலாற்றுசிரியர்கள் கூறுகிறார்கள். இதன் பிறகு பிலிப்பும் ஊக்க மிழந்தார்.

1559ஆம் ஆண்டு காட்டோ கம்பிரேசிஸ் என்ற இடத்தில் இரு நிறத்தாருக்கும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஸ்பானியர் இத்தாலியில் வென்ற இடங்களை யெல் லாம், மிலான், நேப்பிள்ஸ் உள்பட வைத்துக் கொள்ள வேண்டியது. இவ்விதமாய் இத்தாலி அன்னிய ஆட்சிக்குட் பட்டது. பிரான்ஸ், இந்த உடன்படிக்கையின் மூலம் மெட்ஸ், டூல், வெர்டன் என்ற மேற்றிராணிப் பட்டணங்களுக்குத் (Bishoprics) தலைமையாயிற்று. பிற்காலத்தில் லொரேன் பிரதேசம் முழுவதும் பிரான்ஸுக்குச் சொந்தமாக இது உதவியது. பிலிப்பின் மனைவியான மேரி அரசி அப்பொழுது இறந்தபடியால், அவர் பிரான்ஸின் இளவரசி எலிசபெத்தை மணந்து கொள்ள வேண்டுமென்றும் இதன்படி முடிவாயிற்று.

இந்த உடன்படிக்கை உண்மையிலேயே மிகச் சிறப்பானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். பலகாலம் நடந்துவந்த ஸ்பெயின்—பிரான்ஸ் போர்கள் முடிவடைய இந்த உடன்படிக்கை ஒரு முயற்சி செய்தது. அது பலன் தராமல் இரு நாட்டிற்கும் இடையே பகைமை உணர்ச்சி மேலும் 150 ஆண்டுக் காலம் நீடித்தது. ஆனல் அது உடன்படிக்கையின் குறையால் அல்ல. அக்காலத்திய அரசியல், மத மாற்ற நிலைகளே இதற்குக் காரண மாயிருந்தன. இவற்றைப் பற்றி இனி அடுத்து வரும் இயலில் படிப்போம். காட்டோ கம்பிரேசிஸ் உடன்படிக்கை இத்தாலியச் சண்டைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தது. ஈதொன்றே அதன் சிறப்புக்குப் போதிய சான்றும்.

4. சமயச் சீர்திருத்தம்

லூத்தரின் மதமாற்றம் – கல்வினியம் – ஸ்விங்லி – மதமாற்ற மறுப்பாளர்

I

ஐரோப்பாவில் பதினைந்தாம் நூற்றாண்டு தொட்டே எழுந்த சமயச் சீர்திருத்த உணர்ச்சியைப்பற்றி முன் இயல்களில் குறிக்கப்பட்டது. அதன் பல திறப்பட்ட காரணங்களும் அவ்வப்போது சொல்லப்பட்டன. பொதுவில் வளரும் கலை உணர்ச்சிக் கேற்பச் சமயக் கொள்கைகள் மாறவில்லை. சுமார் இருநூறு ஆண்டு காலமாக இதில் மக்களிடையே முரண்பாடு இருந்து வந்தது. சமயக் கொள்கைகளை மாற்ற முடியாதென்பது ஒரு சாரார் வாதம். அதைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைக்கத் தான் வேண்டுமென்பது மற்றொரு சாரார் கூற்று. ஒன்று வைதீக (கத்தோலிக்க)ச் சமயமாகவும் மற்றது மறுப்பாளர் இயக்கமாகவுமிருந்தன. ஆனால் இப்பொழுது அது ஒரு பலங்கொண்ட இயக்கமாக மாறியது. இது நாம் கண்கூடாகக் காணக்கூடிய காரணம். ஆனால் உண்மையில் சமயச் சீர்திருத்த மனப்பான்மை ஓர் இயக்கமாக மாறுவதற்குக் காரணம் ஐரோப்பாவில் எழுந்த தேசிய உணர்ச்சியே ஆகும். ஆகவே தேசிய நாடுகளின் வரலாற்றிற்குப் பிறகு இந்த இயக்கத்தின் வரலாறு அமைவது மிகப் பொருத்தமாயிருக்கின்றது.

பதினைந்தாம் நூற்றாண்டில் விக்ளிவ், ஹஸ் போன்ற சமயச் சீர்திருத்தவாதிகள் எழுந்தபோது அவர்கள் வெகு சுலபமாக அடக்கப்பட்டார்கள். அதற்குக் காரணம் அப்போது அவர்கள் பிறந்த இங்கிலாந்திலோ, போஹேமியா நாட்டிலோ போதிய தேசிய உணர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் 16ஆம் நூற்றாண்டில் மார்டின் லூத்தரை அவ்விதமாகக் கட்டுப்படுத்தக் கூடவில்லை. பேரரசர் ஆணையையும் மீறி, நாட்டினின்றும் வெளியேற்றப்பட வேண்டிய அவரைச் சாக்சனி நாட்டின் சிற்றரசர் தம் பாதுகாப்பில் வைத்துக்கொண்டார். அதை ஜெர்மனி நாடு முழுவதும் மறைமுகமாக ஆதரித்தது. பிரான்சிஸ் தம் நாட்டின் பகைவரான சார்லஸை வலிமை குன்றச் செய்யக் கத்தோலிக்

கராயிருந்தும் ஜெர்மனியை ஆதரித்தா ரென்றால் தேசிய உணர்ச்சி புது மத மாற்ற இயக்கத்திற்கு ஆதரவு அளித்தது என்பதில் என்ன ஐயம் இருக்கக்கூடும்? மத மாற்ற இயக்கம் இது வரை வலுப் பெருததற்குக் காரணம் மதத்தின்மேல் மக்கள் கொண்ட பேரன்பு. ஆனால் இப்பொழுது தேசியம் என்று சொல்லப்படும் நாட்டுப் பற்று இதை மீறிவிட்டது. ஆகவேதான் பதினாறும் நூற்றாண்டில் மத மாற்றக் கொள்கை ஒரு பேரியக்க மாகவே மாறியது.

இவ்வியக்கம் முதல் முதல் ஜெர்மனி நாட்டில் தோன்று வதற்கும் தேசியமே காரண மென்போம். மார்டின் லூத்தர் யாரும் இதுவரை காணுத ஒருண்மையைக் கண்டதால் அங்கு இவ் வியக்கம் முதல் முதல் பலம் பெற்றது என்று கூறுவது சரியல்ல. தேசிய நாடுகள் வீறுகொண் டெழுந்த காலத்தில் ஜெர்மனி நாடு மட்டும் பல சிற்றரசுகளாய்ப் பிரிந்து ஒற்றுமை குன்றி நிற்பதை ஜெர்மானிய மக்களால் சகிக்கக் கூடவில்லை.[1] இதற்குக் காரணம் போப்பாண்டவரின் அரசியல் நடத்தையே என்று அவர்கள் எண்ணினார்கள். ஆகவே அவரது அரசியல் திட்டத்தை மாற்ற முன்வரும் எவ்வித இயக்கத்திற்கும் அவர்கள் ஆதரவு தரக் காத் திருந்தார்கள். டெட்சல் விற்ற பாவமன்னிப்புச் சீட்டுகள் இங்குப் பெருங் குழப்பத்தை ஏற்படுத்தின வென்றால் அதற்கும் முதல் காரணம் அரசியலாகவே இருந்தது. பேரரசர்கள் ஆளும் ஒன்று பட்ட நாடுகளிலே டெட்சல் கையாண்ட பணம் தண்டும் முறை நடைபெற இயலாததாக முடிந்திருக்கும். ஆனால் ஜெர்மனி சிறு சிறு நாடுகளாகப் பிரிந்திருந்ததால் அவருக்கு இம்முறையைக் கையாள முடிந்தது என்ற எண்ணம் மக்கள் மனத்தை வருத் தியது. இதுபற்றியே லூத்தரின் பிரச்சினைகளுக்கு அங்குச் சிறந்த வரவேற்புக் கிடைத்தது. இது மட்டுமல்ல. அக்காலக் கலை வளர்ச்சியில் ஜெர்மனி நாடு முதல் இடம் பெற்றிருந்தது. அச்சு இயந்திரத்தை முதல் முதல் கண்டுபிடித்தவர்கள் ஐரோப் பாவில் ஜெர்மானியரே, ஐரோப்பாவின் பல பாகங்களில் அதைக் கொண்டு சென்றவர்களும் அவர்களே. 1500ஆம் ஆண்டு முடி வடைவதற்குள் அவர்கள் இத்தாலியில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான அச்சு இயந்திரங்களைப் புகுத்தி யிருந்தார்கள். இவ் வழியாய்ப் பழைய நூல்களையும் புதியனவாக எழுதப்பட்ட நூல் களையும் பெருவாரியாக மக்களுக்கு அளிக்க அவர்களால் முடிந் தது. இக்காரணங்கள் பற்றியே மத மாற்ற இயக்கம் முதலில் ஜெர்மனியில் ஏற்பட்டது.

1. "Luther gained a considerable of his following because he claimed that Germany should be for the Germans." —*Grant.*

இவ்வியக்கம் அங்குப் பலம் பெறுவதற்கு முக்கிய காரணம் அதற்குப் போதிய எதிர்ப்பு இல்லாததே. அப்பொழுது அந்நாட்டில் அரசியல் தலைவராயிருந்தவர் பேரரசர் ஐந்தாம் சார்லஸ். அவருக்கு அரசியல் திறமை போதிய அளவில்லை. அவருடைய அரசுக்குட்பட்ட பிரதேசமோ மிகப் பெரிதாக இருந்தது. ஸ்பெயின், நெதர்லாந்து, ஆஸ்டிரியா முதலிய நாடுகளோடு ஜெர்மனிக்கும் அவர் அரசராயிருந்தார். இன்னும் நேப்பிள்ஸ், சிசிலி, சார்டினியா, ஆப்பிரிக்காவின் சில பாகங்கள், அமெரிக்காவில் தெரிந்த பகுதிகள் இவை யாவும் அவர் கீழிருந்தன. இவைகளைக் கொண்டு ஒருவன் தன்னை வலிமையுள்ளவனாகவும் செய்து கொள்ளலாம்; வலிமையற்றவனாகவும் செய்து கொள்ளலாம். சார்லஸ் உறுதியான உளமின்மையாலும், வீரக் குறைவாலும் தம்மை வலிமையற்றவராகச் செய்துகொண்டார். மாக்சிமிலியன் பேரரசர் இறந்த பின்னர் அவர் ஆட்சியின் கீழிருந்த ஜெர்மனிக்குத் தம்மை அரசராக ஆக்கிக்கொள்ள முடிவு செய்தார். ஆனால் பிரஞ்சு மன்னரின் போட்டியால், மிகுதியான பணம் செலவழித்தே ஜெர்மனியைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார். ஆதலால் பொதுவில் ஜெர்மனி அவரை அரசராகத் தேர்ந்தெடுத்த போதிலும், அது மன ஒன்றிப்பின் பயனாய் ஏற்பட்ட தேர்தல் அல்ல. இந்தத் தேர்தல் 1519ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் நாள் நடந்து முடிந்தது. இரண்டாண்டுகளுக்குப் பிறகே வொர்ம்ஸ் பட்டணத்தில் ஒரு கூட்டம் கூட்டி லூத்தரை நாட்டை விட்டு வெளியேற்ற ஒரு ஆணை பிறப்பித்தார் சார்லஸ் (1521). ஆனால் அதை அமுலுக்குக் கொண்டு வர யாரும் முயற்சி எடுக்கவில்லை. அதற்குப் பதிலாக சேக்சனி, ஹெஸ் என்ற இரு சிறு பகுதிகளின் சிற்றரசர்கள் லூத்தரை ஒளித்து வைத்தனர். சார்லஸ் இதைக் கண்டு அச்சமுற்றாரே ஒழிய, செயலில் ஈடுபடவில்லை. அதற்குப் பதிலாகத் தமது அரசின் ஒரு பகுதியாகிய ஆஸ்டிரியாவை அடுத்த ஆண்டே தம் சகோதரர் பெர்டினண்டின் கண்காணிப்பில் விட்டு வைத்தார். லூத்தர் 1517 ஆம் ஆண்டிலேயே போப்புக்கு எதிராக எழுந்து தம் மத மாற்ற இயக்கத்தைத் தொடங்கி யிருந்தார். ஆனால் 30 ஆண்டுக் காலம் அவர் எதிர்ப்பில்லாமலேயே காலம் கடத்த முடிந்தது. இந்தக் காலத்தில் அவரது இயக்கம் வேர் கொண்டதில் வியப்பு ஏதுமில்லை. டெட்சல் அளித்த பாவமன்னிப்புச் சீட்டுகளை எதிர்த்த லூத்தருக்கே தாம் செய்த செயலின் சிறப்பு முதலில் தெரியவில்லை. நாள் செல்லச் செல்லவேதான் கத்தோலிக்க மதத்தின் அடிப்படையையே தாம் எதிர்த்ததை அவர் உணர்ந்தார். ஏனெனில் டெட்சல் செய்த போதனை, போப்பினால் கற்பிக்கப்பட்டது. அதை எதிர்த்ததால் லூத்தர் போப்

பின் தலைமையையே எதிர்த்துவிட்டார். ஆனால் இதைத் தெரிந்த பின்னும் அவர் தம் கொள்கையை விட்டுக்கொடுப்பதாக இல்லை. 1520-ல் அப்போது போப்பாண்டவரா யிருந்த பத்தாம் லெயோ அவரைத் திருச்சபைக்குப் புறம்பாக்க ஆணை பிறப்பித்தார். லூத்தர் அந்த ஆணையையும் (bill) திருச்சபையின் சட்டத் தொகுதியையும் (Common Law) விட்டன்பர்க் கடைத்தெருவில் கூட்டெரித்தார் (1521). இதற்குப் பின் வொர்மில் கூட்டம் கூடியது. ஜெர்மனிக்கு வெளியே புறம்பாக்கப்பட்ட லூத்தர் அப்பொழுதுதான் விவிலிய நூலை ஜெர்மனியில் மொழி பெயர்க்கத் தீவிரமாகத் துவங்கினார். அடுத்த ஆண்டு நூரம்பர்க் பட்டணத்தில் கூடிய இரண்டாவது கூட்டமும் பயனின்றி முடிந்தது. சார்லஸ் தமது இத்தாலியச் சண்டையிலேயே ஈடு பட்டிருந்தார். இந்நிலையில் சமயக் குழப்பம் வளர்வதைத் தவிர வேறு வழியில்லை.

லூத்தர் சமயச் சீர்திருத்தம் என்று கூறினவுடனே பொது மக்கள் தங்கள் நிலைமை உயரச் சீர்திருத்தம் நடக்க வேண்டு மென்று எண்ணினார்கள். அப்போது ஜெர்மனியில் எப்போதும் எங்கும் நடப்பதுபோல், செல்வர் மேலும் மிகுந்த செல்வர்க ளாகவும், ஏழைகள் மேலும் மிகுந்த ஏழைகளாகவும் விரைவில் மாறிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் உடனே புரட்சி செய்யத் தொடங்கினார்கள். ஜெர்மனியின் தென்மேற்குப் பகுதியில் இப் புரட்சி விரைவாகப் பரவியது. லூத்தர் தமது புரட்சியை முதன் முதல் பாமர மக்களிடையே தோற்றுவித்தார். விட்டன் பர்க்கிலும் அதைச் சுற்றிலுமிருந்த அன்றாட வேலைக்காரர்கள் லூத்தரின் புரட்சி மொழிகளைக் கேட்டிருந்தார்கள். அவருடைய கொள்கைகளுக்கு ஆதாரம் காட்ட 95 காரணங்களை எழுதி விட்டன்பர்க் கோவிலின் கதவிலே அவர் பதித்ததை அவர்கள் கண்டிருந்தார்கள். ஆகவே இப்பொழுது தங்கள் புரட்சிக்கு ஆதரவாக அவர்களும் 12 காரணங்கள் காட்டினார்கள். லூத்த ரைப்போல் அவர்களும் விவிலிய நூலில் ஆதாரம் காட்டினார்கள் (1524). புரட்சி பரவியது; ஆனால் அது கொடூரமாக அடக்கப் பட்டது. லூத்தர், செல்வரின் சலுகையில் வளர்ந்தவர். ஆகையால் அவர் பாமர மக்களை ஆதரிக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்களைத் தண்டித்து அடக்கும்படி அவர் பிரபுக் களுக்கு அறிக்கை விடுத்தார்.

இதற்குப் பிறகு லூத்தரின் இயக்கம் நசித்திருக்க வேண்டும். ஆயினும், பிரபுக்களும் சிற்றரசர்களும் அவருக்குப் பெரிய பக்க பலமளித்தார்கள். 1526, 1529 இந்த இரண்டாண்டுகளில் இரண்டு கூட்டங்களைப் பேரரசர் சார்லஸ், ஸ்பியர் என்ற

இடத்தில் கூட்டினர். லூத்தரின் போக்கைக் கண்டிப்பதே அவற்றின் நோக்கம். காலம் அதற்கேற்றதாகவு மிருந்தது. ஆயினும், பேரரசர் காட்டிய கோழைத்தனம் அவருடைய விரோதி களுக்கு வலிமை அளித்தது. முதல் கூட்டத்தில் ஜெர்மனியின் ஒவ்வோர் இராச்சியமும் சமயத்தைக் கடவுளின் ஆணைப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. உடனே சேக்சனி, ஹெஸ் போன்ற பிரதேசங்கள் லூத்தரைப் பின்பற்றுவதே கடவுளுக்கேற்புடையதாகும் என்று முடிவு செய்தன. மூன்றாண்டுகள் கழித்து இரண்டாவதாகக் கூடிய கூட்டத்தில் பேரரசர் வொர்ம்ஸ் கூட்டத்தின் முடிவை வற்புறுத் தினர். ஆனால் இப்போது அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. ஒரு விதத்தில் சீர்திருத்தவாதிகள் அன்றே எதிர்ப்பாளர்களாக (Protestants) மாறினர்கள்; அதிலிருந்து வலிமை பெற்றார்கள்; எதிர்ப்பாளர் என்ற பெயரும் வளர்ந்தது.

II

1530ஆம் ஆண்டில் இந்த இயக்கம் உறுதிப்பட்டது. இந்த ஆண்டில் ஆக்ஸ்பர்க் உறுதிப்பாடு (Confession of Augsburg) என்ற புரோடஸ்டான்ட் மதத்தின் கொள்கைகள் உருப்பெற்றன. அடுத்த ஆண்டிலேயே இவற்றை ஆதரித்த எல்லா நாடுகளும் ஷ்மால்கால்டென் (League of Schmolkolden) என்ற ஒன்றிப்பில் கலந்தன. சார்லஸ் மன்னரோ இன்னும் உறுதி கொள்ளவில்லை. இவர்களை அடக்கவேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தில் எழுவதற்கு இன்னும் 13 ஆண்டுகள் பிடித்தனவென்றால், எத்தகைய உறுதியின்மை அவரை ஆட்கொண்டிருந்தது என்பது ஒருவாறு விளங்கும். உண்மையில் சமயச் சீர்திருத்த இயக் கத்தின் முக்கியத்துவம் இப்பொழுது அவருக்கு விளங்கவில்லை. ரோமிலிருந்த போப் ஆண்டவருக்கும் விளங்கவில்லையென்றே கூறவேண்டும். இதுவே அதன் வெற்றிக்கு முதற் காரணமாக இருந்தது.

1546ஆம் ஆண்டு சார்லஸ் படை திரட்டிச் சண்டைக்குப் புறப்பட்டார். அதற்கு முன்பே லூத்தர் இறந்து விட்டார். சாக்சனி பிரபு மாரிஸைத் தம்மோடு சேர்த்துக்கொண்டு ஸ்பானிய தளகர்த்தர் ஆல்வாவுடன் தாமே தலைவராகிச் சார்லஸ் எல்ப் நதிக்கரையை அடைந்தார். 1547-ல் முல்பெர்க் என்ற இடத்தில் நடந்த சண்டையில் சார்லஸ் வெற்றி பெற்றார். சாக்சனி எலக்டரும் ஹெஸ் பிரபுவும் சிறை செய்யப்பட்டார்கள். அப்போது பேரரசரின் பெருமை உச்சநிலையி லிருந்தது. எந்நிலை

யிலும் அவர் விரைவாகச் செல்ல எண்ணவில்லை. டிரன்ட் பட்டணத்தில் திருச்சபைக் கூட்டம் ஒன்று கூடுவதாக இருந்தது. அதன் திட்டப்படி ஜெர்மனியின் சமய நிலையை ஒழுங்கு செய்து கொள்வதென்றும், அதற்குள் இடைக்கால முறையாகப் பொதுவில் கத்தோலிக்க வழக்கங்களை அனுசரிக்க வேண்டுமென்றும், அதுவரை மணம் செய்துகொண்ட குருக்கள் தங்கள் மனைவிகளோடு வாழலாமென்றும் ஆக்ஸ்பர்க் என்ற இடத்தில் ஆணை பிறப்பித்தார். ஆனால் கத்தோலிக்க நாடுகள் புரோடஸ்டான்டுகளுக்கு உரிமைகள் தர மறுத்தன. புரோடஸ்டான்டு நாடுகளும் கத்தோலிக்க மதம் தங்கள் எல்லையில் வர மறுத்தன. இதனிடையில் சாக்சனிப் பிரபு மாரிஸுக்கும், ஆஸ்டிரியாவில் ஆட்சி செய்த பேரரசரின் சகோதரன் பெர்டினண்டுக்கும் சார்லஸிடம் மனத்தாங்கல் ஏற்பட்டது. ஜெர்மனியில் ஏறக்குறைய 300 சிற்றரசுகள் இருந்தன. இவைகளில் பல சமயக் காவலர்களைச் சேர்ந்தவை. இவர்கள் புரோடஸ்டான்டு மதத்தைத் தழுவினால் இவர்களுக்குத் தரப்பட்ட நில உரிமை நிற்குமா போகுமா என்ற வினவிற்கு இன்னும் பதில் தரப்படவில்லை. ஆனால் அதற்குள் மாரிஸ் பிரபுவே சார்லஸை எதிர்த்தார். பிரஞ்சு மன்னர் அவருக்கு உதவினார். எதிர்பாராத இந்த எதிர்ப்பால் மனந்தளர்ந்த பேரரசர் மலைகளைக் கடந்து இத்தாலி நாட்டை அடைந்தார்; சிறிது காலம் கழித்து பிரஞ்சு மன்னரை எதிர்த்து மெட்ஸ் பட்டணத்தை முற்றுகையிட்டார். ஆனால் அதை அவரால் கைப்பற்ற முடியவில்லை. இந்நிலையில் அவர் தம் சகோதரர் பெர்டினண்டின் உதவியை நாடினார்.

பெர்டினண்ட் 1555ஆம் ஆண்டு ஆக்ஸ்பர்க்கில் ஒரு கூட்டம் கூட்டி ஜெர்மனியின் சமயநிலைக்கு ஒரு முடிவு காண எண்ணினார். இதன்படி கத்தோலிக்க மதம், லூத்தர் மதம் என்ற இவ்விரண்டினுள் ஒன்றை ஜெர்மனியின் ஒவ்வொரு நாடும் கைக்கொள்ள வேண்டியது. 1532-க்கு முன்பு புரோடஸ்டான்டு மதத்தைப் பின்பற்றிய சமயக் காவலர் தங்களுக்குரிய நிலங்களைத் தாங்களே வைத்துக்கொள்ளவும், அதற்குப் பிறகு புது சமயத்தைத் தழுவின பரிபாலகர்கள் நிலங்களைப் போப்புக்குத் திருப்பித் தந்துவிடவேண்டுமென்றும் முடிவாயிற்று. இது சமயச் சீர்திருத்த முயற்சிக்கு முடிவு காணவில்லை. ஆயினும், இம் முயற்சியின் ஒரு பகுதி இதோடு முடிவாயிற்று.

III

இந்நிலையில் சுவிட்சர்லாந்து நாட்டில் சூயிரிச் (Zurich) என்ற பட்டணத்தில் சுவிங்கிலி (Zwingli) மத மாற்ற இயக்கத்திற்குப்

புத்துயிர் கொடுத்தார். லூத்தரைப் போலவே பாவமன்னிப்புச் சீட்டுகளுக்காகத் திருச்சபையை எதிர்த்துப் பிறகு தலைமையான செயல்களில் திருச்சபையின் போதனைக்கு வேறான கொள்கைகளை எடுத்து ஓதினர் சுவிங்கிலி. இதில் லூத்தருக்கும் இவருக்கும் ஒரு முரண்பாடு இருந்தது. கோதுமை அப்பத்தின் மூலமாகக் கிறித்துவையே உட்கொள்வது என்பது கத்தோலிக்க மத போதனை. இது டிரான்சப்ஸ்டேன்ஷியேஷன் (Transubstantiation) என்று கூறப்பட்டது. அப்பம் என்ற ஒரு பொருள் (Substance) குருவின் ஜெபத்தால் சேசு கிறித்துவாக மாறுகிறது என்பது இதன் பொருள். லூத்தர் இதை மறுத்து அப்பமும் சேசு கிறித்துவும் ஒன்றாக இருப்பதாகப் போதித்தார். இதை அவர் கன்சப்ஸ்டேன்ஷியேஷன் (Consubstantiation) என்று போதித்தார். இவை இரண்டையும் மறுத்து அப்பத்தை வேறு பொருளாகச் செய்வதில்லை, அதைப் பற்றிய பிரார்த்தனை சேசு கிறித்துவின் நினைவாகச் செய்யப்படுவதே யன்றி வேறல்ல (Commemorative ceremony) என்பது அவர் போதனை.

1509ஆம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்தின் வட பாகத்தில் ஜான் கல்வின் (John Calvin) என்ற ஒரு குழந்தை பிறந்தது. வளர்ந்து வயது வந்த பிறகு கல்வின் பாரிஸ் பட்டணத்தில் குருவாவதற்காக வேத சாத்திரம் (theology) கற்கச் சென்றார். பிறகு திடீரென்று அதை விடுத்து ஆர்லியான்ஸ் (Orleans) பட்டணத்திற்குச் சென்று சட்டம் பயிலத் தொடங்கினர். 1533-இல் மத மாற்ற எண்ணங்கள் அவரை ஈர்த்தன. பிரஞ்சு நாட்டில் அப்பொழுது இத்தகைய எண்ணங்கள் கொடுமையாகத் தாக்கப் பட்ட காலம். ஆகையால் கல்வின் அந்நாட்டை விட்டு ரைன் நதி வழியே ஜெர்மனி நாட்டை அடைந்தார். அங்கே பாசல் (Basel) என்ற நகரிலிருந்து அவருடைய ''கிறித்தவ மதக் கொள்கைகள்'' (Institutes of the Christian Religion) என்ற நூல் 1536 ஆம் ஆண்டு வெளிவந்தது. அதே சமயம் ஜினீவா (Geneva) பட்டணம் திருச்சபைக்கு மாறுக எழுந்தது. கல்வின் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். 1538இல் ஒரு சிறு காலம் அவர் அந்நகரை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. ஆனால் பொதுவில் 1536 முதல் அவர் இறுதி எய்தும் வரை இங்கிருந்து ஐரோப்பிய மத மாற்றத்தின் ஒரு முக்கியத் தலைவராக விளங்கினர்.

கல்வினின் கொள்கைகள் ஒரு புது மதத்தையே ஏற்படுத்தின. இதற்கு கல்வினீயம் (Calvinism) என்ற பெயர் எழுந்தது. மத்திய கால ஐரோப்பாவில் அரசுகள் திருச்சபையின் சொல்படி நடந்து வந்தன; லூத்தரது மத மாற்றம் ஜெர்மனி,

இங்கிலாந்து போன்ற நாடுகளில் மதத்தை அரசுகளின் அடியில் கொண்டுவந்தது; இப்போது கல்வின் அரசையும் திருச்சபையையும் தனித்தனி நிறுவனங்களாகச் செய்தார். திருச்சபையை ஆளும் விதத்திலும் ஒரு மாறுதலை ஏற்படுத்தினர். இதுவரை மத குருக்களின் ஆட்சிக்குட்பட்ட திருச்சபையை 6 குருக்களும் 12 குருக்கள் அல்லாதாரும் சேர்ந்த ஒரு சபை (Consistory ஆள வேண்டுமென்ற நவின கருத்தை முதல் முதல் நடைமுறையில் கொண்டுவந்தவர் ஜான் கல்வின். மூன்றுவதாக, வாழ்க்கையில் மிகுந்த ஒழுங்கைப் புகுத்தினவர் கல்வின். அவர் முறையைப் பின்பற்றினவர்கள் பிற்காலத்தில் கடுந்தூய சமயத்தினர் (Puritans) என்ற பெயர் பெற்றனர்.

எப்பொழுது என்ன உண்ணவேண்டும், திருமணங்கள் செய்யும் முறை, பரிசுகள் வழங்கும் முறை, மக்கள் காலப்போக்குக் காகச் செய்யும் கேளிக்கைகள் என்ற இவற்றை யெல்லாம் கல்வின் வரையறுத்தார். தமது கொள்கையைப் பின்பற்றுதவர்களைக் கொன்றுதீர்த்தார். அப்பொழுது ஸ்பெயின் நாட்டிலிருந்து மத மாற்ற இயக்கத்தை ஆதரித்ததால் துரத்தப்பட்ட செர்வீட்டஸ் (Servetus) கல்வினைச் சரணடைந்தார். ஆனால் அவர் கொள்கைகளுக்கும் கல்வினீயத்திற்கும் வேறுபாடிருந்ததால் அவரைத் தீயிலிட்டுக் கொளுத்த ஆணை பிறப்பித்தார் கல்வின்.

லூத்தர், சுவிங்கிலி என்ற இருவருடைய கருத்துக்களையும் ஏற்காமல் அப்பம் மாறுதலைப் (Communion) பற்றி ஒரு புதுக் கருத்தைக் கல்வின் வெளிப்படுத்தினர். 'கம்யூனியன்' என்ற ஆங்கிலச் சொல் இதைக் குறிப்பதற் கேற்ப அப்பத்தின் மூலமாக நாம் கடவுளோடு கலக்காவிட்டாலும் அவருடைய கிருபை (Grace) யை அடைய நமக்கு வழி ஏற்படுகிறது என்பது கல்வினது கொள்கை.

இவ்விதமாகப் பதினேழும் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வினீயம் சுவிட்சர்லாந்து நாட்டில் தொடங்கியது. அதன் பிற்கால வரலாற்றை ஆராயும் முன் ஐரோப்பிய வரலாற்றில் இதன் முக்கியத்தைப் பற்றி ஒரு சிறிது கூற வேண்டும். பிரஞ்சுக்காரர்கள் சிறந்த தர்க்க வாதிகள் (logicians) என்ற புகழ் பெற்றவர்கள். கல்வின் இந்த விதத்தில் சிறந்த பிரஞ்சுக்காரராகத் திகழ்ந்தார். குருக்கள் அல்லாதாரையும் குருக்களோடு இணைத்துத் திருச்சபையை ஆளும் குழுவைக் கல்வின் ஏற்படுத்தினர். ஆனால் உலகியலார்கள் (laymen) எத்தகைய தூய்மை வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதையும் அவர் எடுத்துக்காட்டினர். இதனால் புரோடஸ்டான்டு மதம் உரிமையும் தூய்மையும் அடைந்தது.

அது லூத்தருக்குப் பிறகு வெற்றி பெறுவதற்குக் காரணம் கல்வினீயமே. தூய்மை அடைந்த மக்கள் வீரம் பெற்றார்கள். பிரான்ஸ் தேசத்திலும், ஹாலந்திலும், ஸ்காட்லந்திலும், இங்கிலாந்திலும் சமய எதிர்ப்பாளர் (Protestants) வெற்றி பெறுவதற்குக் கல்வினின் கோட்பாடே காரணமாகும். இதனாலேயே ஹாலந்து நாடு உரிமை பெற்றது. இங்கிலாந்தில் மக்கள் சபை வெற்றி பெற்றது. இன்னும் 1621 ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குச் சென்ற புதுச் சமய மக்கள் பெருவாரியாகக் கல்வினின் கொள்கையைப் பின்பற்றியவர்களே. அவருடைய தூய்மைக் கொள்கையைப் பின்பற்ற இங்கிலாந்தில் வழியில்லை யென்று அவர்கள் ஒரு தனி நாட்டுக்குச் சென்றார்கள். அது பிற்காலத்தில் இப்போது நாம் காணும் அமெரிக்காவாக வளர்ந்தது.

IV

கல்வினீயம் முதல் முதல் பிரான்ஸ் நாட்டில் பரவியது. இதற்குக் காரணம் கூறவேண்டியதில்லை. கல்வின் பிரஞ்சுக் காரர். கல்வினீய நூல்கள் முதலில் பிரஞ்சு மொழியிலேயே எழுதப்பட்டன. பிரஞ்சு பிரபுக்கள் முதல் முதல் கல்வினீயத்தை வரவேற்றார்கள். இதன் மூலம் குருக்கள் ஆதிக்கம் ஒழிந்து தங்கள் ஆதிக்கம் பெருகும் என்று அவர்கள் ஆசையோடு நம்பினார்கள். 1559ஆம் ஆண்டு பிரஞ்சு மன்னர் இரண்டாம் ஹென்றி இறந்த பின்பு அவருக்குப் பின் பட்டத்துக்கு வரப் போதிய வயதுள்ள பிள்ளை அவருக்கு இல்லை. ஆகையால் ஆட்சி அவருடைய தாய் கத்திரீன் டெமெடிச்சி என்பவருடைய கையில் வந்தது. அவள் கொடுமை உள்ளம் படைத்தவள். இதனால் பிரபுக்களுள் வெறுப்பு ஏற்பட்டது. இவர்களில் ஒரு பகுதியினர் நவார் (Navarre) அரசரைப் பின்பற்றினர்; மற்றையோர் கைஸ் (Guise) குடும்பத்தைப் பின்பற்றினர். இவர்களில் கைஸ் பகுதியினர் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றினர்; நவார் பகுதியார் கல்வினீயத்தைத் தழுவினர். முதலில் இரு பகுதியினரிடையே சமாதானம் நிலவப் பிரஞ்சு அரசின் சேன்சலர் பதவி வகித்த லோப்பிடோல் (L' Hopital) ஒரு ஆணை பிறப்பித்தார். அதன்படி புரோடஸ்டான்டுகள் சில நிபந்தனைகளோடு தங்கள் முறைப்படி கடவுளை வழிபடலாம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் இரு திறத்தாரும் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

இந்நிலையில் கைஸ் பிரபு, வாசி (Vassy) என்ற பட்டணத்தைக் கடக்க நேர்ந்தது. அங்கே கல்வினீயத்தார் கூட்ட

மாகக் கூடிக் கடவுள் வழிபாட்டை நடத்திக் கொண்டிருந்தனர். கைஸ் பிரபு தம்முடைய ஆட்களுடன் கூட்டத்தினுள் நுழைந்து. வழிபாட்டை நடத்தினவர்களில் பலரை வெட்டி வீழ்த்தினர் (1562). உடனே பெரும் போர் மூண்டது. தொடங்கிய சண்டை ஏறக்குறைய முப்பதாண்டுக் காலம் நீடித்தது. இப் போர் ஏழெட்டு முறை விட்டு விட்டு நடந்தது. ஒவ்வொரு சண்டையும் ஒரு உடன்படிக்கையோடு முடிந்தது. ஆனால் அந்த உடன்படிக்கை போரை நிறுத்த முடியவில்லை. பொதுவில் கத் தோலிக்கர் பக்கமே வெற்றி யேற்பட்டது. கத்தரீன் அரசி எண்ணியிருந்தால் அவர்கள் உதவிகொண்டு போரைத் தமக்குச் சாதகமாக முடித்திருக்கலாம். ஆனால் அதனால் கத்தோலிக்கர் வலிமை நாட்டில் மிகுந்துவிடும் என்ற கொள்கையால் சண் டையைத் தாமே நீடிக்க விட்டுவிட்டாள்.

முதல் சண்டையில் ஸ்பெயின் தேசம் கத்தோலிக்கருக்கு உதவியது. ஜெர்மனி, சுவிட்சர்லந்து தேசங்கள் புரோடஸ் டான்டுகளுக்கு உதவி புரிந்தன. இவ்விதமாக மூன்று சண்டை கள் எப்பக்கமும் வெற்றி காணுமல் நடந்தன. கடைசியில் கைஸ் பிரபு ஆர்லியான்ஸ் பிரபு கொல்லப்பட்டார். உடனே செயின்ட் ஜெர்மேய்ன் என்ற இடத்தில் உடன்படிக்கை (Treaty of St. Germain) ஏற்பட்டது (1570). இதன்படி யாரும் தன் மனச் சான்றின்படி தன் தொழுகை முறையைக் கைக் கொள்ளவும், பொதுமுறையில் பிரபுக்கள் தங்கள் அரண்மனைகளிலும், சாதாரண மக்கள் குறிக்கப்பட்ட பட்டணங்களிலும் தேவ ஆராதனை நடத்தவும் தீர்மானமாயிற்று. இதன்படி ஒவ்வொரு மாகாணத்திலும் இரண்டு பட்டணங்கள் குறிக்கப்பட்டன. இன்னும், நாட்டின் பல்கலைக் கழகங்களில் புரோடஸ்டான்டு களும் மற்றவர்களைப் போல் வேற்றுமையின்றி ஏற்றுக் கொள்ளப் பட வேண்டுமென்றும் முடிவாயிற்று.

இதன்படி நடந்திருந்தால் காலக்கிரமத்தில் புரோடஸ் டான்டு மதத்தினர் பாகுபாடின்றி நடத்தப்பட் டிருப்பார்கள். ஆனால் அப்படி நடக்கவில்லை. ஒரு புறம் கத்தோலிக்கர் இந்தத் திட்டத்தை வெறுத்தார்கள்; மற்றவர்கள் போதிய சுதந்திரம் தரவில்லை யென்று இதை எதிர்த்தார்கள். 1572ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 24-ம் நாள் பெருவாரியான புரோடஸ்டான்டு மதத்தினர் படுகொலை செய்யப்பட்டனர். அன்று புனித பர்த்த லோமியோ என்பவரின் திருநாள். கிறித்துவின் சீடர்களில் ஒருவ ராகிய இவர் இறந்த வருடாந்திர நாள். அன்று இப் படுகொலை நடந்தபடியால் இதற்குப் பர்த்தலோமியோ நாளின் படுகொலை (Massacre of St. Bartholomeo's Day) என்று பெயர் வந்தது.

அன்று கொல்லப்பட்டவர்கள் கல்வினீயத்தார். இவர்களுக்கு ஹியுக்நோக்கள் (Huguenots) என்று பெயர், பொதுவில் பிரஞ்சு கல்வினீயத்தார்கள் இப் பெயர் பெற்றன ரென்ருலும் சிறந்த கூட்டாளிகள் என்ற பொருள் கொண்ட ஜெர்மன் சொல்லின் திரிபே ஹியுக்நோக்கள் என்ற பெயர்.

ஹியுக்நோக்களைக் கொல்லும்படி தூண்டியது யார் என்பதை இன்னும் தீர்மானமாகச் சொல்ல முடியாது. ஆயினும், கத்தரீன் அரசியின் தூண்டுதலின்பேரில் கைஸ் பிரபுவின் ஆதரவில் இது நடந்தது என்பது ஒருவாறு பெறப்படுகிறது. புரோடஸ்டான்டு களின் தலைவரான கொலிக்னி (Coligny) என்பவர் அப்போது நாட்டின் அரசராயிருந்த ஒன்பதாம் சார்லஸ் மன்னருக்கு மிகவும் பிடித்தவராக இருந்தார். அதனல் தன்னுடைய பெருமையும் செல்வாக்கும் மங்கக் கூடுமென்று பயந்த அரசி, கைஸ் பிரபுவின் உதவியால் கொலிக்னியைச் சுட்டு வீழ்த்த எண்ணினுள். குண்டு வெடித்தது; ஆனல் கொலிக்னி இறக்கவில்லை. இது பெருங் குழப்பத்தை விளைவிக்கும் போலிருந்தபடியால் அதைத் தவிர்க்க மேற்குறித்த படுகொலை நடத்தப்பட்டது. இதில் பலர் இறந்த தாகச் சொல்லப்படுகிறது: சிலர் 7,000 என்பர்; வேறு சிலர் 8,000 என்பர். ஆயினும் ஏறக்குறைய 10,000 பேர் கொல்லப் பட்டிருக்கக்கூடும் என்று வரலாற்ருசிரியர்கள் கருதுகிருர்கள்.

ஹியுக்நோக்களின் படுகொலை நிகழ்த்ததற்கு மாருன பல னளித்தது. கொலிக்னி இறந்தார். அவரோடு இன்னும் பலர் இறந்தார்களென்பது இவர்களை உருக்குப்போல் உறுதிப்படுத் தியது. உண்மைக் கல்வினீயத்தின் உண்மை இப்பொழுது தெரிய வந்தது. மறுபடியும் பழைய உடன்படிக்கைபோல் மற்ருென்று நிகழ்ந்தது. ஆனல் ஒன்பதாம் சார்லஸ் மன்னன் அதே சமயம் இறக்க, அவர் சகோதரர் மூன்ரும் ஹென்றி பட்டமெய்தினர். இவர் சார்லஸைப் போன்றவர் அல்லர். சிறு வயதில் சுறுசுறுப்பா யிருந்தவர், இப்பொழுது சுறுசுறுப் பிழந்து காணப்பட்டார். நல்ல வேளையாக நாட்டின் நலத்தைப் பேண அப்பொழுது மக்களே முன்னணிக்கு வந்து கொண்டிருந்தார்கள். மத வேற்று மையை ஒழித்து பொலிடிக் (Politiques) என்ற மக்கள் கட்சி ஒன்று நவார் ஹென்றி (Henry of Navarre) தலைமையின்கீழ் வளர்ந்தது. ஆயினும், இதில் அங்கத்தினர் பெரும்பாலும் ஹியுக்நோக்களே. ஹென்றியும் புரோடஸ்டான்டு மதத்தைச் சார்ந்தவர். ஆகையால் கத்தோலிக்கர் ஒன்றுகூடிக் கத்தோலிக்கக் கழகம் (Catholic League) ஒன்றைத் தொடங்கினர். இதற்குத் தலைவராக பூர்போன் பட்டணத்துக் கர்தினலான (Cardinal of

Bourbon) ஹென்றியின் [illegible] அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

இப்பொழுது ஒரு பெரும் பிரச்சினை எழுந்தது. கத்தரீன் அரசியின் மக்களில் ஒருவருக்காவது ஆண் குழந்தை இல்லை. ஆகையால் மூன்றும் ஹென்றிக்குப் பிறகு அவருக்கு நெருங்கிய உறவினரான நவார் ஹென்றியே பிரான்சுக்கு அரசராவார் என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. இதற்காகக் கத்தோலிக்கக்கழகம் மூன்றும் ஹென்றியையே ஆதரித்தது. ஹென்றி மறுபடியும் புரோடஸ்டான்டுகளோடு சண்டை செய்ய வேண்டியதாயிற்று. 1587-இல் நவார் ஹென்றி அரசரது படையை கூட்ராஸ் (Coutras) என்ற இடத்தில் தோற்கடித்தார். ஆனால் அதே சமயம் கைஸ் பிரபு ஹென்றி புரோடஸ்டான்டு படையை முறியடித்தார். இவ் வெற்றிக்குப் பிறகு அவர் பாரிஸ் பட்டணத்துள் காலெடுத்து வைத்தார். அவரது செல்வாக்கின் வளர்ச்சியைக் கண்டு பயந்த ஹென்றி மன்னர் அவர் பட்டணத்துள் வரக்கூடாதென்று தடையுத்தரவு பிறப்பித்தார். ஆனால் பாரிஸ் பட்டணம் அப்போது கத்தோலிக்கப் பற்று கொண்டிருந்தது. ஆகவே மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். கைஸ் பிரபு தடை உத்தரவை மீறிப் பாரிஸில் நுழைந்தார். மன்னர் மனம் வெதும்பிப் பட்டணத்தைவிட்டு வெளியேறினர்.

வெளியேறிய மன்னருக்கு எங்குச் செல்வதென்று தெரியவில்லை. ஆகவே அவர் மறுபடியும் கைஸ் பிரபுவுடன் சமாதானம் செய்து கொண்டார். ஆனால் இத்தகைய மன்னனை மதிப்பவர் பாரிஸிலும் இல்லை; வெளியேயும் இல்லை. இதைச் சீக்கிரமே ஹென்றி கண்டு கொண்டார். ஆகவே அவர் மக்களின் பொதுக் கூட்டம் (States-General) ஒன்றைக் கூட்டித் தமக்கு ஆக்கம் தருமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் பொதுக்கூட்டம் முழுவதும் கைஸ் பிரபுவையே ஆதரித்தது. மன்னர் முடி தரித்திருந்தார்; ஆனால் உண்மையான ஆட்சி அவர் கையில் இல்லை. கைஸ் பிரபுவே அதை நடத்தினான் என்பதை அவரே கண்கூடாகக் கண்டு கொண்டார். அதற்குப் பரிகாரமாக கைஸ் பிரபுவையே கொலை செய்வித்தார். அவர் சகோதரர் லூர்போன் கர்தினாலையும் மன்னர் கொல்லுவித்தார்.

ஆனால் இதன் விளைவு மன்னருக்கிருந்த எதிர்ப்பு மேலும்அதிகரித்ததுதான். கத்தோலிக்கக் கழகம் வலுத்தது. ஹென்றி பொலிடிக் கட்சியில் சேர்ந்து நவார் ஹென்றியின் படையோடு பாரிஸ் பட்டணத்தை நோக்கிவந்தார். பாரிஸைக் கைப்பற்றினால் தம்முடைய சிறுமை தீர்ந்துவிடும் என்று அவர்

எண்ணினர். ஆனால் உண்மையில் நவார் பிரபுதாம் ஆட்சி செய்வார் என்று கத்தோலிக்கர் உணர்ந்தனர். ஆகையால் அவர்கள் தூண்டுதலின்மேல் மூன்றும் ஹென்றி கொல்லப் பட்டார். பாரிஸின் வீழ்ச்சி தடைப்பட்டது. ஆயினும் கத்தோலிக்கருக்கும் புரோடஸ்டான்டுகளுக்கு மிடையே இருந்த மனவேற்றுமை வளர்ந்ததே தவிரக் குறையவில்லை. மூன்றும் ஹென்றி பலவீன முள்ளவராலுலும் கத்தோலிக்கப் பற்றுள்ளவர். அவருக்குப் பின் பட்டத்திற்கு வரவேண்டிய நவார் ஹென்றி முற்போக்குள்ள புரோடஸ்டான்டு வாதி. ஆகையால் பெரும்பான்மையான கத்தோலிக்கர் மனம் புழுங்கினர்கள். அவர்களால் நவார் பிரபுவுக்கு ஆதரவு அளிக்கக் கூடவில்லை. ஆகவே அவர் இங்கிலாந்தின் அரசி எலிசபெத்தை எதிர் நோக்கினர். இங்கிலாந்தின் உதவி பெற்று நவார் பிரபு நான்காம் ஹென்றி என்ற பட்டம் சூட்டிக்கொண்டு டியெப்பெ (Dieppe) பட்டணம் நோக்கிப் புறப்பட்டார் (1590). முதலில் ஆர்க் (Arques) என்ற இடத்தில் வெற்றி கண்டார்; அதன் பின் ஐவ்ரி (Ivry) என்ற இடத்தில் மாபெரும் வெற்றி கண்டார். பிறகு பாரிஸ் பட்டணத்தை முற்றுகை யிட்டார். ஆனால் அதே சமயம் ஸ்பெயின் மன்னன் இரண்டாம் பிலிப் தமது தளகர்த்தர் பார்மா (Duke of Parma) மூலம் பாரிஸ் பட்டணத்திற்கு உதவினர். இதனால் ஹென்றி முற்றுகையைக் கைவிட வேண்டியதாயிற்று. பிறகு அவர் ரூஅன் (Rouen) பட்டணத்தை முற்றுகையிட்டார். இங்கும் ஸ்பெயின் படைகள் அவருடைய முற்றுகை முற்றுப் பெறுமல் செய்தன.

இந்த நிலையில் ஹென்றிக்கு ஒரெண்ணம் தோன்றியது. தாது மதக் கொள்கை காரணமாகவே மக்கள் தம்மை வெறுப் பதால் மத மாற்றம் செய்துகொண்டு கத்தோலிக்க மதத்தைத் தழுவிவிட்டால் மக்கள் ஒத்துழைப்புத் தானுகவே வந்துவிடும் என்று நினைத்தார். இதற்கு அவருடைய கல்வினீய நண்பர்களே உதவினர்கள் என்பது மிக விந்தையாகவே இருக்கின்றது. உடனே கத்தோலிக்க மதக் கொள்கைகளைப் படித்து அவற்றை ஒப்புக்கொள்ளுவதாக வாக்களித்துக் கத்தோலிக்கக் கோயிலுக் குச் சென்று மக்கள் மனத்தை மகிழ்வித்தார் (1593). அப்பொழுது பல பட்டணங்கள் அவரை வரவேற்றன. பாரிஸ் பட்டணம் மட்டும் இன்னும் ஸ்பெயின் படைகளின் கையில் இருந்தது. ஆயினும், பெருவாரியான மக்களின் கிளர்ச்சியின் மேல் பாரிஸ் பட்டணமும் வழிவிட்டது, சில காலம் போப்பின் ஒப்புதல் வரவில்லை யென்று சிலர் கலங்கினர். ஆனால் ஹென்றி அவரிடமிருந்து மன்னிப்புப் பெற்றுத் தம் மத மாற்றத்தை

ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். 1598ஆம் ஆண்டு வெர்வின்ஸ் என்ற இடத்தில் ஹென்றி ஸ்பெயின் மன்னரோடு ஒப்பந்தம் செய்துகொண்டு பிரான்ஸ் நாட்டிற்கு அமைதி அளித்தார்.

இவ்விதமாக முப்பதாண்டுப் போர் ஒரு விதமாக முடிந்தது. ஆயினும், பிரான்ஸின் மதக் கொள்கை என்ன என்பது முடிய வில்லை, கல்வினீயத்தார் ஒரு விதத்தில் ஹென்றியின் நடத்தை யைக் கண்டு சீற்றங் கொண்டார்கள். அவர்களை ஆதரிக்க வேண்டியது மன்னரின் கடமை என்பது தெளிவாயிற்று. ஆகவே 1598 ஆம் ஆண்டு நான்டஸ் பட்டணத்திலிருந்து அவர்களுக்கு உரிமையும் ஆதரவும் ஹென்றி அளிக்க முன்வந்தார். இதற்கு ''நான்டஸ் பட்டணத்து ஆணை'' (Edict of Nantes) என்று பெயர். சமயச் சீர்திருத்த வரலாற்றில் இது முக்கியமான இடம் வகிக் கின்றது. கல்வினீயரும் இன்னும் இதர மறுப்புக் கொள்கைக்கார ரும் தங்கள் வழக்கம்போல் வழிபாடு நடத்த உரிமை அளிக்கப் பட்டதுடன், அவர்களுக்கு முறை வழங்கத் தனிப்பட்ட அறமன் றங்களும் ஏற்படுத்தப்பட்டன. அவர்களுக்குப் போதியபாதுகாப்பு அளிக்கப் படைகளும் அளிக்கப்பட்டன. அவர்களுக்கெனச் சில பட்டணங்களும் கோட்டைகளும் அளிக்கப்பட்டன, இது மறுப் பாளர்கள்மனத்தைச் சாந்தப்படுத்தியது. ஆனால் கத்தோலிக்க ருக்கு இது பிடிக்கவில்லை. சமயப் பொறை (toleration) என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவானது. நான்டஸ் ஆணை அப்படிப் பொதுவானதாகவுமில்லை; ஐரோப்பிய சமய வரலாற் றிலேயே ஒரு புதுமையானதாக அவர்களுக்குத் தெரிந்தது. ஆகவே பிரான்சின் மதமாற்றம் ஒரு முடிவுக்கு வராமலே ஹென்றி காலமானார் (1610). அதுவும் கொடியோன் வாளுக்கு இரையானார். சாகும்வரை அவர் உள்ளத்தில் மறுப்பாளர்; வெளித் தோற்றத்திற்கு மட்டும் கத்தோலிக்கர். பிரான்சின் மதநிலையும் இப்படி உறுதிப்படாத நிலையில்தான் இருந்தது.

எனினும் ஹென்றியின் ஆட்சிக் காலம் பிரான்சின் நிலையை ஒரு சிறிது உயர்த்தியது. அவருடைய சிறந்த அமைச்சர் சல்லி (Sully) என்பவரின் யோசனைப்படி கால்வாய்களும், பாதைகளும் அமைக்கப்பட்டன. வேளாண்மையில் புது முறைகள் அமு லுக்குக் கொண்டுவரப் பட்டன. பட்டுப் பூச்சிகள் பிரான்சினுள் முதல் முதல் கொண்டுவரப் பட்டது இக்காலத்தில்தான். பட்டு நெய்யும் தொழில் இப்பொழுது தொடங்கி மிகு விரைவில் உயர் நிலையை அடைந்தது.

V

ஐரோப்பாவின் பல நாடுகளில் மத மாற்றம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலத்தில் ஸ்பெயின் நாட்டில் மட்டும் இத்தகைய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. அது வைதிகக் கொள்கையில் நிலைத்து நின்றது மட்டுமல்ல, மத மாற்றக் கொள்கை ஐரோப்பாவில் தலையெடுக்கா வண்ணம் இருக்க இயன்ற மட்டும் முயன்றது. இதற்கு உதவியாகவே அந்த நாட்டின் தலை சிறந்த வீரர் ஒருவர் பணி புரிந்தார். டோன் இனிகோ லோப்பஸ் டெ ரிகால்டே (Don Inigo Lopez de Recalde) என்ற உயர் குலப் பிரபு ஒருவர் ஸ்பெயின் மன்னனின் தளகர்த்தராகப் பணி புரிந்தவர், திடீரென்று உலக வாழ்வை வெறுத்து, துறவறம் பூண்டார். அவரே பிற்காலத்தில் லோயோலா குடும்பத்தைச் சேர்ந்த இக்னேஷியஸ் (Ignatius Loyola) என்ற பெயர் பெற்றார். இவர் 1540ஆம் ஆண்டு ஒரு சிலரைத் தம்மோடு சேர்த்துக் கொண்டு கிறித்துவுக்காகப் போரிடப் போவதாக அறிவித்தார். இவ்விதமாய் இப்பொழுது நாம் பேசும் சேசு சபை (Society of Jesus) தொடங்கியது. இக்னேஷியஸ் குறித்த போர், கத்தி அல்லது வாள் முனையில் நடத்தும் போரல்ல; அவர் குறித்தது மத மாற்ற எண்ணங்கள் தலையெடுக்காமல் செய்வதே. இதற்காக அவர்கள் ஐரோப்பாவெங்கும் பள்ளிக்கூடங்கள் திறந்து இலவசமாய்க் கல்வி கற்பித்தார்கள். இதன் வழியாய் வைதிகத்தின் உயர்வையும் அவர்கள் போதித்தார்கள். இம் முறை விரைவில் பயனளித்தது. பள்ளிக் கூடங்கள் துரிதமாக வளர்ந்து கல்லூரிகளாகவும் பல்கலைக் கழகங்களாகவும் விரிந்தன. பிரான்ஸ், போலந்து, ஜெர்மனி போன்ற நாடுகளிலும்கூட எதிர்ப்பாளர் அதிகமான வெற்றி பெறுமல் தடுத்தவர்கள் சேசு சபைக் குருக்களே ஆகையால் இவர்கள் சமயச் சீர்திருத்த மறுப்பியக்கத்தின் (Counter Reformation) முன் பகுதியாக விளங்கினர்கள்.

இவர்களுக்கு உதவியாக டிரன்ட் பட்டணத்துக் கூட்டம் விளங்கியது. ஐந்தாம் சார்லஸ் மன்னர் ஸ்பெயினில் ஆட்சி செய்யத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயக் கொள்கைகளை அலசி உறுதிப்பாட்டுடன் முடிவு கூறுவதே சமயச் சீர்திருத்த இயக்கத்திற்குத் தகுந்த தடை என்ற கொள்கை ஐரோப்பாவெங்கும் இருந்தது. ஆனால் அது தடைப்பட்டுக் கடைசியில் 1545 ஆம் ஆண்டு டிரன்ட் பட்டணத்தில் கூட்டப்பட்டது. அது பிறகு பல இடங்களுக்கு மாற்றப்பட்டு 1563-இல் தான் கூட்டம் முடிவடைந்தது. இதன் தீர்மானங்கள் முதலில் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட விவிலிய நூலையே ஆத

ரித்தன. வில்கேட் (Vilgate) என்பது இதற்கு மற்றொரு பெயர். இரண்டாவதாக, நம்பிக்கை இரட்சண்யத்திற்கு உத்தரவாதம் என்ற லூத்தரின் கொள்கை மறுக்கப்பட்டது. என்ன குற்றங்கள் செய்த போதிலும் கடவுள் பேரில் நம்பிக்கை வைத்தால் நாம் இறுதிக் கதி சேர்வது திண்ணம் என்ற லூத்தரின் போதனை மறுக்கப்பட்டது. மூன்றாவதாக, போப்பின் தலைமை உறுதிப் படுத்தப் பட்டது. இவ்விதமாக வைதிகக் கொள்கைகள் மறு படியும் வலுப் பெற்றது பலருக்கு உறுதி அளித்தது; சமயச் சீர் திருத்தத்திற்கு ஆதரவு குறைந்தது.

1542ஆம் ஆண்டு வைதிகக் கொள்கைகளுக்குத் தீங்கிழைப் போரைத் தண்டிக்க அறமன்றம் நிறுவப்பட்டது. இதைப்பற்றி யோசனை கூறினவர் கர்தினல் கரப்பா (Cardinal Caraffa) என் பவர். இவர் பிற்காலத்தில் நான்காம் பால் (Paul IV) என்ற போப்பாகத் திகழ்ந்தார். சந்தேக மூள்ளவர்கள் இதன் முன் விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டனர். சாட்சிகளின் பெயர்கள் முதலாய் அவர்களுக்குச் சொல்லப்படவில்லை. குற்றங்களை ஒப் புக்கொள்வதற்குக் கொடுமையான சித்திரவதைசெய்யப்பட்டது. குற்றம் கண்டபின் அவர்களைத் தண்டிக்க அரசனிடம் ஒப்படைக் கப் பட்டார்கள். இவ்விதமாய் உயிர் இழந்தவர்கள் பலர். இந்த மன்றம் ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு இன்குயிசிஷன் (Inquisition) என்ற பெயர் தரப்பட்டது. இந்தச் சொல்லுக்கு விசாரணை என்பது பொதுப் பொருள். ஆனால் இந்த விசாரணை முறையைப் பற்றிப் பல நூல்கள் இதுவரை எழுதப்பட்டு விட்டன. பொதுவில் கடுமையான முறைக்கு இது எடுத்துக்காட்டாக அமைந்தது. ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் அதன் ஆட்சியின் கீழிருந்த ஹாலந்து போன்ற நாடுகளிலும் இது மிகவும் கொடுமையாக அமல் படுத்தப்பட்டது. ஆயினும், இதனால் வைதிகம் வெற்றி பெற்றதென்று கூற முடியாது. இப்போது அது அடைந்த வெற் றிக்கு முதற் காரணம் சேசு சபையும், டிரன்ட் கூட்டத்தில் முடி வான முடிவுகளுமே யாகும்.

5. சமயச் சண்டைகள்

நெதர்லாந்து சண்டை-முப்பதாண்டுப் போர்

சமயம் சண்டையை அகற்றக்கூடியது. ஆயினும், உலக வரலாற்றில் சமயம் சண்டையை மூட்டுவதாகவே இருந்திருக் கின்றது. சமயம் மக்களுள்ளத்தில் அளக்க முடியாத பற்றை உண்டு பண்ணுகிறது. ஆகவே அது அன்பையோ வெறுப் பையோ அளக்க முடியாத அளவு காட்டுகின்றது. இதனால் ஒரே சமயத்தைச் சேர்ந்தவர்கள் கூடுவதும் வேறு சமயத்தாரை எதிர்ப்பதும் மரபாகிவிட்டது.

நாம் இதுவரை விளக்கிய சமயச் சீர்திருத்தம் இயல்பாகவே போரை எழுப்பியது; பிரஞ்சு நாட்டில் சென்ற இயலில் நாம் படித்ததுபோல் இது பெரும் போருக்கு வித்திட்டது. இப்போது நெதர்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் சமயப் போர் எங்ஙனம் நடந்தது என்பதை விளக்குவோம்.

ஸ்பெயின் நாட்டில் 1555ஆம் ஆண்டு பட்ட மெய்திய இரண்டாம் பிலிப் மன்னர் பொதுவில் எங்கும் வெற்றி கண்ட வீரரல்லர். எப்பொழுதும் அவர் வெற்றியை அணுகுவதும் வெற்றி அவரை விட்டு அகல்வதுமாகவே அவருடைய வாழ்க்கை கடந்தது. பிரான்ஸ் நாட்டுச் சண்டையில் கலந்துகொண்டு பிரஞ்சு முடியையே கைப்பற்றலா மென்று அவர் கருதினர். ஒரு சமயம் இந்த எண்ணம் கைகூடும் போலத் தோன்றியது. ஆனால் நான்காம் ஹென்றி மன்னர் திடீரென்று கத்தோலிக்க மதத்தைத் தழுவினதால் பிலிப்பின் எண்ணம் கைகூடாமல் போயிற்று. அவ்விதமே இங்கிலாந்தோடு அவர் செய்த சண்டையிலும் எதிர் பார்த்த வெற்றி பெருந் தோல்வியாக மாறியது. இவைக ளெல்லாம் ஒரு விதத்தில் பிலிப் செய்த சமயச் சண்டைகள். அதுபோல் 1567ஆம்ஆண்டு அவர் நெதர்லாந்துடன் தொடங்கிய சண்டையிலும் வெற்றி அவர் கையில் வந்தது போல் காட்டித் தோல்வியாக முடிந்தது.

16ஆம் நூற்றாண்டின் சமயச் சண்டையில் பிலிப் நெதர் லாந்துடன் நடத்திய போர் மிகப் பெரிதாகும். நாற்பத்திரண்டு ஆண்டுக் காலம் இந்தப் போர் நடந்தது (1567—1609). ஆல்வா

பார்மா போன்ற அவருடைய பெரும் படைத்தலைவர்கள் இதில் அரசனுடு ஒத்துழைத்தார்கள். நெதர்லாந்து மக்களுக்கோ உண்மையான உதவி எங்கிருந்தும் கிடைக்கவில்லை. அஞ்சோ பிரபு தம்மையே அவர்களின் முன் அரசராகச் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடேயே அவர்களுக்கு உதவ முன் வந்தார். அந்த எண்ணம் பலிக்காது என்று கண்டவுடன் அவர் தமது உதவியை நிறுத்திக்கொண்டார். ஆங்கில நாட்டு அரசியார் எலிசபெத்தும் பழக்கமற்ற படையையே அவர்களுக்குத் துணையாக அனுப்பினார். ஆயினும், பிலிப்புக்குக் கிடைத்தது தோல்வியே.

இந்த விந்தையை விளக்குவதற்கு நாம் முதலில் பிலிப்பின் குணாதிசயங்களைக் கவனிக்க வேண்டும். தம்முடைய முயற்சியோ உழைப்போ இல்லாமல் அவர் பெரியதோர் அரசுக்குத் தலைவ ரானார். அதை வைத்துக் காத்துக்கொள்ளுந் திறமை பிலிப்புக்கு இல்லை. அமெரிக்காவி லிருந்து அவருக்கு வந்த வருவாய்க்குமேல் அவர் அமெரிக்காவின் ஆட்சிக்காகச் செலவழிக்க வேண்டி யிருந்தது. இது ஐரோப்பியத் தலைவர்களுக்குக் கூடத் தெரிய வில்லை. ஆகையால் அவர்கள் காரணமின்றிப் பொறுமை கொண் டார்கள். இந்தப் பொறுமையே பிலிப்பின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக விருந்தது. தவிர, பிலிப் எப்பொழுதும் மேட்ரிட் பட்டணத்தில் வளர்ந்தவர்: வெளிநாடுகளுக்கு அவர் அதிகமாகச் சென்றதில்லை. ஆகையால் முடி மன்னருக்கு இருக்கவேண்டிய உலக அனுபவம் அவரிடமில்லை. மதத்தில் பிகுந்த பற்றுக் கொண்டவர். ஆனால் அதன் காரணமாகவே அவர் சுதந்திரக் கொள்கைகளுக்கு இடங்கொடுக்க மறுத்தார். இதனால் ஒரு விதத்தில் ஐரோப்பா முழுவதும் அவரை வெறுப்புக் கண் கொண்டு நோக்கியது. இந்த நிலையில் பணமுடை வேறு குறுக் கிட்டது. வெளித் தோற்றத்திற்கு அமெரிக்க வெள்ளியும் தங்கமும் வந்து குவிந்ததாகத் தெரிந்தது; ஆனால் உண்மையில் அரசாங்கத்தில் பணமில்லை.

நெதர்லாந்துடன் செய்த சண்டையில் பிலிப் தமது கடற் படை வலியைக் கவனிக்கவில்லை. நெதர்லாந்தியர் சிறந்த கடற் படை கொண்டவர்கள். அவர்களைத் தோற்கடிக்க பிலிப் கடலில் தமது வலிமையைப் பெருக்கியிருக்க வேண்டும். ஆனால் இதைப் பற்றி அவர் சிறிதும் கவலை கொண்டதாகத் தெரிய வில்லை. டச்சுக்காரர்கள் ஸ்பானியரோடு நிலத்தில் சண்டை செய்ய முன்வரவில்லை. அதற்குப் பதிலாக ஸ்பானியர்கள் தங்கள் நாட்டிற்குள் நுழைவது போலிருந்தால் தங்களுடைய ஏரிகளைத் திறந்து விட்டு, நாட்டைத் தண்ணீரில் மூழ்குவித்து

அவர்களே வெளியேறும்படி செய்தார்கள். தவிர, பிலிப் மன்னர் பண வசதியின்றித் தவித்தபோது இவர்களுக்குப் பணமுடையே யில்லை. ஏன்ட்வெர்ப் (Antwerp), கென்ட் (Ghent), பூரூஜெஸ் (Bruges), ஆம்ஸ்டெர்டாம் (Amsterdam) போன்ற நெதர்லாந்து பட்டணங்கள் சிறந்த வாணிகத் தலங்களாக அப்போது விளங்கின. ஐரோப்பாவின் கடல் கடந்த வாணிகமும் பெரும் பாலும் இவர்கள் வைத்திருந்த கப்பல்கள் மூலமாகவே நடந்த தென்றால் இந்நாடு எத்தகைய செல்வ நாடாக இருந்திருக்க வேண்டும்! தவிர, இங்கே ஒற்றுமை யிருந்தது; அதைப் பயன் படுத்த சைலன்ட் வில்லியம் (William the Silent) போன்ற சிறந்த தலைவர்களு மிருந்தார்கள். பெயருக்கேற்பப் பேச்சில் பொழுது போக்காத இவர் தமது பொறுமையாலும், திறமையாலும் தமது தாய்நாட்டிற்குச் சிறந்த பணியாற்றினர். கிரான்ட் கூறுவது போல் ''சைலன்ட் வில்லியம் மன்னருக்கு ஹாலாந்து நாடு கடமைப்பட் டிருப்பது போல் எந்நாடும் எவருக்கும் கடமைப்பட வில்லை.''* இந்த நிலையில் ஸ்பானியப் படையே பிலிப்புக்கு இன்னல் விளைத்தது. 1576ஆம் ஆண்டு படைத் தலைவர் ஆல்வா இறந்தார். இவருடைய திடீர் மறைவால் பிலிப்புக்கு மிகுதியும் வலிமை குன்றியது. இது ஒருபுறமிருக்க, ஸ்பானியப் படை பய மிழந்தது. ஆகவே பிலிப்பின் வீரர்கள் தங்களுக்குச் சம்பளம் சரியாகக் கொடுக்கப்படவில்லை யென்று கலகம் விளைத்தார்கள். தாங்களே தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு நெதர்லாந்து நாட்டைக் கொள்ளை அடிக்கத் தொடங்கினர்கள். உடனே இந்த நாட்டின் தனியரசர் பதினெழுவரும் ஒன்றுகூடி ஒரு முடிவுக்கு வந்தார்கள். தங்களுள் இருந்த சமய வேறுபாடுகளை மறந்து ஸ்பெயின் மன்னரை எதிர்த்து வெற்றி காணவேண்டு மென்பதே இந்த முடிவு. இதுவரை புரோடஸ்டான்ட் வட பாகமும் கத் தோலிக்கத் தென்பாகமும் பூரண ஒற்றுமையில்லாமல் இருந் தவை, இப்பொழுது பூரண ஒற்றுமை பெற்றன (1576). இந்த ஒற்றுமை உடன் படிக்கை கென்ட் (Ghent) பட்டணத்தில் நிறை வேறியதால் இதற்குக் ''கென்ட் சமாதானம்'' (Pacification of Ghent) என்று பெயர். ஆயினும், மத உணர்ச்சி அளக்க முடியாத ஆழமுடைய தல்லவா? ஆகையால் மூன்றரைண்டுகளிலேயே இந்த ஒற்றுமை குலைந்தது. 1579ஆம் ஆண்டு வில்லியம் புரோ டஸ்டான்ட் கொள்கையைப் பின்பற்றிய வட நெதர்லாந்தின் ஏழு பிரதேசங்களை மட்டும் உட்ரெக்ட் (Utrecht) என்ற இடத்தில் வில்லியம் ஒன்று சேர்த்தார். இதற்கு ''உட்ரெக்ட் ஒற்றுமை'' (Union of Utrecht) என்ற பெயர் வழங்குகிறது.

*''No state owes more to any Ruler then Holland to William the Silent.''—Grant; *Europe: The Story of the last five Centuries.*

அப்போது பிலிப் ஒரு பெருந் தவறு செய்தார். புதுப்புது ஒற்றுமைகளுக்கு உயிர் கொடுக்கும் வில்லியத்தை ஒழிக்க வேண்டும் என்று அவர் தீர்மானித்தார். மனித குலத்திற்கே வில்லியம் ஒரு புல்லுறுவி என்று சொல்லி, அவரைக் கொல்ப வருக்குத் தாம் நல்ல பரிசளிப்பதாகவும் பிலிப் அறிவித்தார். இதைப் பின்பற்றிப் பலர் அவரைக் கொல்வதற்காகக் காத்துக் கிடந்தனர். 1582ஆம் ஆண்டு அவர் காயமடைந்தார். ஆஞல் உயிர் தப்பினர். ஆயினும், கொலைகாரர் அவரை வெகுநாள் விட்டு வைக்கவில்லை. 1584ஆம் ஆண்டு அவர் டெப்ட் (Delft) என்ற ஊரில் கொல்லப் பட்டார். அப்போது நெதர்லாந்தில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. பொதுச் சபை கூடி ஏகமனதாக ஒரு முடிவு செய்தது. ''மக்களின் வழிகாட்டியாக இருக்க வேண்டிய மன்னன் அவர்களைக் காப்பதை விட்டுத் துன்புறுத்தி அடிமைகள்போல் நடத்தினுல் மக்கள் சபை அவனை நிராகரித்து விட்டு வேறொருவனை அரசனுக்கலாம்'' என்பதே இந்த முடிவு. இவ்விதமாக நெதர்லாந்தின் வடபாகத்து ஏழு நாடுகளும் பிலிப்பை வெறுத்துத் தனி அரசு அமைத்துக் கொண்டன. இந்தத் தீர்மானமும் இதன்பின் நிகழ்ந்த நிகழ்ச்சியும் ஐரோப்பிய வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலேயே ஒரு புது யுகத்தைப் புகுத்தின. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய நாடுகளில் பிற்காலத்தில் நடந்த புரட்சிகளுக்கெல்லாம் இவை காரணமாக இல்லா விட்டாலும் முன்னோடிகளாக இருந்தன என்பதில் ஐயமில்லை.

1609ஆம் ஆண்டில் பிலிப் மன்னர் நெதர்லாந்து நாடுக ளோடு ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். இதோடு ஒரு நீண்ட போர் முடிந்தது. பல காலம் செய்த சண்டையின் காரணமாக இந்த நாடுகளின் மக்கள் தன்னம் பிக்கை பெற்றார்கள். கடைசியாக அவர்கள் கண்ட வெற்றி அந்த நம்பிக்கையை உறுதிப் படுத்தியது. ஆகவே இப்போரைத் தொடர்ந்து பல துறைகளில் இவர்கள் வெற்றி கண்டார்கள். கப்பல் கட்டும் தொழில் இவர்களுக்கே உரியது. அதில் ஐரோப் பாவுக்கே இவர்கள் வழிகாட்டிகளாக அமைந்தார்கள். இதைப் போலவே நாடுகளுக்கிடையே அநாவசியமான சண்டைகளைத் தடுக்கச் சட்டங்களை எழுதினர்கள். இதில் பெயர் பெற்றவர் குரோஷியஸ் (Grotius). இவர் பெயரை சர்வதேச சட்ட நிபு ணர்கள் (experts in international law) இன்றும் பொன்னேபோல் போற்றுகிறார்கள். லீடன் பல்கலைக் கழகம் பௌதிக சாஸ்தி ரத்தில் இந்தக் காலத்தில் சிறந்த முன்னேற்றம் அடைந்தது. வேளாண்மை போன்ற மிகப் பயனுள்ள கலைகளிலும் நெதர்

லாந்து மக்கள் மிக முன்னேற்ற மடைந்தார்கள். இன்னும் நிற ஓவியக் கலையிலும், ஓவியக் கலையிலும் சிறந்த ஓவியர்கள் இப் போது தோன்றினர்கள். ரெம்பிராண்ட் (Rembrandt), ஹால்ஸ் (Hals), டெனியர்ஸ் (Teniers), ஜெரார்ட் டூ (Gerard Dou) போன்ற ஹாலந்து நாட்டு ஓவியர்கள் இப்போது தோன்றி னர்கள். ஓவியர் உலகம் இவர்களை விஞ்சியவர்களை இன்னும் காணவில்லை.

ஆயினும், வெற்றி பெற்ற நெதர்லாந்து நாடுகள் தங்கள் அரசியல் முறையை எளிதில் அமைக்கக் கூடவில்லை. பொதுவில் நாடு இரண்டாகப் பிளவு பட்டது. சைலண்ட் வில்லியமின் மகனர் ஆரஞ்சு பிரபு மாரிஸ் (Maurice) ஒரு கட்சிக்குத் தலைவ ரானர். ஓல்டன்பார்னேவெல்ட் (Oldenbarneveldt) மற்றொரு கட்சிக்குத் தலைவரானர். இவற்றில் இரண்டாவது கட்சி மிகுந்த முற்போக்கானது. இந்நிலையில் சமய வேறுபாடு வேறு குறுக் கிட்டது. கல்வினீயர்கள் கொமாரஸ் (Gomarus) என்பவரின் தலைமையில் கிளர்ச்சி செய்தார்கள். மாரிஸ் பிரபு இவர்களுக்கு உதவினர். இதனல் இக்கட்சி செல்வாக்குப் பெற்றது. ஓல்டன்பார்னேவெல்ட் கொல்லப்பட்டார் (1619).

மாரிஸின் கை ஓங்கியது. ஆனல் அவர் ஆறுண்டுக் காலத்தில் உயிர் நீத்தார். அவருக்குப் பின் பிரடிரிக் ஹென்றியும் (Frederick Henry) இரண்டாம் வில்லியமும் (William II) அவரது கட்சிக்குத் தலைவர்களாகி அரசாங்கத்தை நடத்தி வந்தார்கள். 1650ஆம் ஆண்டு இரண்டாம் வில்லியம் காலமான பின் பட்டத்திற் குரியவர் சிறு பிள்ளையாக இருந்தபடியால் ஓல்டன்பார்னே வெல்டின் கட்சி மறுபடியும் தலை தூக்கியது. அதன் தலைவர் ஜான் டெ விட் (John de Witt) மறுபடியும் கிளர்ச்சி செய்தார். ஆயினும் அது பயன் தரவில்லை. நாளடைவில் மாரிஸின் மைந்தர் மூன்றும் வில்லியம் நெதர்லாந்தின் மன்னராகப் பட்டம் சூடினர். வில்லியம் எப்போதும் படைவலியில் கவனம் செலுத் தினதால் பிற்காலத்தில் பதினன்காம் லூயியோடும் நெதர்லாந்து நாடு வெற்றியுடன் சண்டை செய்ய முடிந்தது.

II

1618ஆம் ஆண்டு பேரரசருக்கும் ஜெர்மனிக்குமிடையே மற் றொரு பெரும் போர் மூண்டது. முப்பதாண்டுக் காலம் நடந்த இந்தப் போருக்கு "முப்பதாண்டுப் போர்" (Thirty Years' War) என்று பெயர். உண்மையில் கத்தோலிக்கருக்கும் கல்வினீயத் தாருக்குமிடையே நடந்த இப்போர் ஐரோப்பிய வரலாற்றி

லேயே மிகக் கொடியது என்று கூறப்படுகிறது. இரு புறமும் கைக்கூலிப் படைகள் வேலை செய்தன. அவை சண்டை செய்வதை விட நாட்டைக் கொள்ளை அடிப்பதிலே அதிகக் கவனம் செலுத்தின. படைகள் ஒருபுற மென்றால் அவைகளைப் பின் தொடர்ந்தவர்கள் பலர். இதனால் ஒழுங்கான சண்டை எங்கும் நடக்கவில்லை. சண்டையில் ஈடுபட்டவர்களைவிட ஒருவிதத்தில் சாதாரண மக்களே மிகவும் துன்பமும் பொருளிழப்பும் அடைந்தார்கள். சண்டையின் முடிவில் 3,000,000 ஜெர்மானியர் எண்ணிக்கையில் குறைந்தார்கள். இது அக்காலத்திய ஜெர்மானியர் எண்ணிக்கையில் நான்கில் மூன்று பாகமென்றால் எத்தகைய துன்பம் ஜெர்மனியில் விளைந்திருக்க வேண்டுமென்பது ஒருவாறு பெறப்படும்.

உலக மெங்கும் இப்பொழுது நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. அத்தகைய விழா ஒன்று ஜெர்மனியில் 1617ஆம் ஆண்டு கொண்டாடப் பட்டது. அன்று லூத்தர் போப்புக்கு எதிராகச் செய்த கிளர்ச்சியின் நூற்றாண்டு விழா. ஜெர்மனியில் மூன்றில் இரண்டு பகுதி மறுப்போர் கூட்டத்தில் அப்போது சேர்ந்திருந்தது. புரோடஸ்டான்டுகள் இதை ஒரு மாபெரும் வெற்றியாகக் கருதினர்கள். தவிர 1555ஆம் ஆண்டு நடந்த ஆக்ஸ்பர்க் உடன்படிக்கைக்குப் பிறகு ஜெர்மனியில் சமாதானம் நிலவியது. நாடு வளம் பெற்றது. ஆகையால் மக்கள் குதூகலமாக இந்த விழாவில் கலந்து கொண்டார்கள்.

லூத்தரின் மதம் ஜெர்மனியில் உயிரற்று இருந்தது. லூத்தரின் காலத்திற்குப் பிறகு அவருடைய மதத்தினர் எண்ணிக்கை பெருகப் பெருகக் கட்டுப்பாடுகள் வளர்ந்தன. இதனால் ஆக்ஸ்பர்க் உடன்படிக்கை தந்த சமய வுரிமை ஜெர்மனியில் வெறும் பேச்சாகவே முடிந்தது. இந்நிலையில் கல்வினீயம் அங்குத் தோன்றாம லிருந்திருந்தால் மறுப்புக் கொள்கையே அங்கு நசித்திருக்கும் என்று சொல்ல வேண்டும். லூத்தரின் மதம் உயிரற்ற பொருளாக இருந்தது. கல்வினீயம் உயிர் பெற்ற மதமாக விளங்கியது. ஆகையால் கல்வினீயம் தோன்றியவுடனேயே வளரத் தொடங்கியது. ஆனால் இதனாலேயே அங்கு இரண்டு புரோடஸ்டான்ட் கட்சிகள் ஏற்பட்டன. ஒன்று லூத்தரின் கட்சி; மற்றொன்று கல்வினீயக் கட்சி. சாக்சனி, பிரேண்டன்பர்க் போன்ற முக்கிய ஜெர்மானிய நாடுகள் லூத்தரின் கட்சியைப் பின்பற்றின. கல்வினீயக் கட்சியில் ஒரு சிறு பகுதி மட்டும் சேர்ந்திருந்தது. அதற்குத் தலைவரானவர் பேலடினேட் மன்னர் பிரடிரிக் என்பவர்.

இவ்விதமாக மறுப்பாளர் தோன்றிய நாட்டிலேயே அவர்கள் இயக்கத்திற்கு வலி குன்றியது. அப்போது ஐரோப்பா முழுவதும் கத்தோலிக்கர் வலிமை பெற்று வந்தனர். சேசு சபையாரின் தோற்றமும், அவர்களுக்குப் பின் கூடிய டிரன்ட் சபையும் கத்தோலிக்கருக்குச் சிறந்த ஆக்கம் தந்தன. ஜெர்மனியில் கத்தோலிக்கருக்குத் தலைவராக விளங்கியவர் பவேரியா நாட்டு மன்னர் மாக்சி மிலியன் (Maximilion). அவருடைய தலைமையில் பவேரியா நாடு முழுவதிலும் கத்தோலிக்க மதம் ஏற்படுத்தப் பட்டது. அதில் சேர மறுத்தவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப் பட்டனர். இன்னும் ஜெர்மனியில் எம்மதத்தைப் பின் பற்றுவது என்று உறுதியில்லாம லிருந்த நாடுகள் இப்போது கத்தோலிக்க மதத்தை ஏற்றுக் கொண்டன. வெள்ளம்போல் பெருகிய இந்த மத வளர்ச்சியைத் தடுக்க மறுப்பாளர்கள் ஒன்று கூடி ஓர் ஒற்றுமை சங்கத்தை நிறுவினர்கள் (1608). இதற்கு ''எவான்ஜெலிகல் யூனியன்'' (Evangelical Union) என்று பெயர். உடனே இதற்கு எதிர்ப்பாகக் கத்தோலிக்கர் ஒன்று கூடிக் கத்தோலிக்கச் சங்கம் (The Catholic League) என்ற ஒன்றை நிறுவினர்கள்.

இரு திறத்தாரின் போக்கும் இயல்பாகவே போருக்கு வழி கோலியது. இதற்கு இன்னும் உதவுவது போன்று அரசியல் காரணங்கள் வேறு தோன்றின. அப்போது ஐரோப்பிய பேரரசராக விளங்கிய இரண்டாம் ருடோல்ப் (Rudolf II) இடையிடையே அறிவுத் திறமிழந்ததால் அவருக்குப் பதிலாக அவர் சகோதரர் மத்தியாஸ் (Mathias) அரசாங்கத்தை நடத்தி வந்தார். இவர் போஹேமியா நாட்டிற்கு ஏற்கெனவே அரசராகவு மிருந்ததால் மிக வலிமையுள்ளவரா யிருந்தார். ஆனால் இவர் கத்தோலிக்கர்; போஹேமியா பெரும்பாலும் மறுப்புக் கொள்கையைச் சேர்ந்தது. ஆகையால் 1617ஆம் ஆண்டு போஹேமியர் ஒன்று கூடி ஸ்டிரியா நாட்டு பெர்டினண்ட் (Ferdinand of Styria) என்பவரைத் தங்கள் அரசராகத் தேர்ந்தெடுத்தார்கள். மத்தியாஸ் மன்னர் புரோடஸ்டான்ட் கோவில்களைத் தகர்த்தெறிந்தார். இந்நிலையில் பெர்டினண்ட் போஹேமியா நாட்டு முடியை ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். பிரேக் பட்டணத்து மக்கள் கொதித் தெழுந்தார்கள். போஹேமிய முடி பல புரோடஸ் டான்ட் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டது. கடைசியில் பேலடினேட் மன்னர் பிரடிரிக் இதை ஏற்றுக் கொண்டார்.

உடனே சண்டை தொடங்கியது (1618). மத்தியாஸின் படை மிகப் பெரிது. புரோடஸ்டான்டுகளின் படை மிகச் சிறியது. டென்மார்க், ஸ்வீடன், பிரான்ஸ் நாடுகள் இவர்களுக்கு உதவின

வென்றாலும், இவை ஒவ்வொன்றும் சுயநலத்திற்காகவே சண்டையில் கலந்துகொண்டனவென்று கூறவேண்டும். இவை மூன்றும் ஜெர்மெனிக்கு அண்மை நாடுகளானதால் அங்கே பலம் கொண்ட அரசர் அரசாட்சிக்குத் தலைவராவது தங்களுக்குத் தீங்காக முடியுமென்று அவற்றுள் ஒவ்வொன்றும் எண்ணின. பிரான்ஸ் தேசம் பொதுவில் கத்தோலிக்க நாடாயிருந்தும் மறுப்பாளரை ஆதரித்தது இக்காரணம் பற்றியே, ஆகவே கத்தோலிக்கப் படையை எதிர்த்து நின்ற ஒற்றுமையாளர்கள் ஒருமனப்பட்ட மனமுடையவர்களல்லர். இதனால் சண்டை நீண்டகாலம் நடந்தது. கடைசியில் கிடைத்த வெற்றியும், இரு திறத்தாரும் பலம் குன்றி வலி விழந்த காரணத்தால் கிடைத்தது தான். இது மறுப்புக் கொள்கையாளருக்குக் கிடைத்த வெற்றி யாலுலும் ஜெர்மனி சீர்குலைந்தது. வேற்று நாடுகள் இந்தச் சண்டையில் கலவாம லிருந்திருந்தால் போர் விரைவிலேயே முடிந்திருக்கும். ஆனால் ஒவ்வொரு நாடும் பேரரசின் வலியைக் குன்றச் செய்வதே நோக்கமாகக் கொண்டதால், அதன் வலியைக் குன்றச் செய்யும் வரை அந்த நாடுகள் சண்டையைத் தொடர்ந்து நடத்தின. கத்தோலிக்கப் படையிலும் இவ்வித எண்ணம் நாளடைவில் தலைதூக்கியது. 1629ஆம் ஆண்டில் போஹேமியா தோற்று, அதன் வாழ்வு பேரரசின் கையில் இருந்தபோதுங் கூடச் சண்டையை முடிக்கப் பவேரியா மன்னருக்கே விருப்ப மில்லை. ஏனென்றால் அப்போது பேரரசர் மிக்க வலிவுடன் விளங் கினர். இந்த நிலையில் படைகளும் சுயநல நோக்கத்தோடு சண்டையை நீடித்தன. ஏனென்றால் சண்டை கொள்ளையடிப் பதற்கு வாய்ப்பளித்தது.

இனிப் போரின் முக்கியமான போக்கு எப்படி யிருந்தது என்று சற்றுக் கவனிப்போம். 1618-இல் சண்டை போஹேமி யாவில் தொடங்கியது. பேரரசின் படைக்குப் படைத்தலைவர் தில்லி (Tilly) தலைவராகிப் போஹேமியாவினுள் நுழைந்தார். சிறிய நாடாகிய போஹேமியாவிற்கு பேரரசுப் படையை ஒரு சிறிதும் எதிர்க்க முடியவில்லை. அப்போது வேற்று நாடுகளின் உதவியும் அதற்குக் கிடைக்கவில்லை. ஆகையால் அடிபணிவதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை. பிரடிரிக் நாட்டை விட்டு வெளியேறி ஹாலந்து நாட்டை அடைந்தார். வெற்றி கண்ட பேரரசர் ஜெர்மனியுள் நுழைந்தார். பிரடிரிக்குக்குச் சொந்தமான பேலடினேட்டின் வட பாகத்தைப் பவேரியாவுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்.

அப்போது இதர நாடுகள் பேரரசருக்கு எதிராகப் போரில் கலந்தன. டென்மார்க் முதலில் போரில் குதித்தது. ஆனால்

அப்போது போஹேமியாப் பிரபு வாலன்ஸ்டைன் (Wallenstein) பேரரசுப் படைக்குத் தலைவரானார். வாலன்ஸ்டைன் சிறந்த படை வீரர். ஐரோப்பிய வரலாற்றிலேயே முதலிடம் பெறத் தகுந்த படைத் தலைவர்களில் ஒருவர். டேனிஷ் படை தோல்வியுற்றது. ஜெர்மனியின் வடகிழக்கில் ஏறக்குறைய எல்லாப் பட்டணங்களுமே அவர் வசமாயின. 1628-இல் ஸ்ட்ரால்சன்ட் (Stralsund) பட்டணத்தை முற்றுகையிட்டுத் தம் ஆற்றலெல்லாம் கொண்டு தாக்கினார். டேனிஷ் படை அதைக் காப்பாற்றியது. ஆயினும் பேரரசின் வலிமை உச்ச நிலையிலேயே இருந்தது.

கத்தோலிக்கப் படை இந்நிலையைச் சுலபமாகக் காப்பாற்றியிருக்கலாம்; ஆனால் அங்கும் ஒற்றுமை யில்லை. முன் கூறியது போல் பவேரிய அரசருக்கே பேரரசர் கை ஓங்குவது பிடிக்கவில்லை. கத்தோலிக்க மதம் வெல்ல வேண்டுமென்று பேரரசர் கட்சி விரும்பியது. ஆனால் அதோடு பேரரசு வெல்வது அதற்குப் பிடிக்கவில்லை. வாலன்ஸ்டைனின் ஆற்றலே மாக்சிமிலியன் போன்றோர்க்கு ஒப்பவில்லை. ஆகையால் அவரைப் பதவியினின்று நீக்க வேண்டுமென்று பேரரசரைத் தூண்டினார்கள். அவரும் காரணம் காட்டாமலே அவரைப் பதவியிலிருந்து நீக்கினார். அப்போது 'வலியவன் பொறுமையை இழக்கமாட்டான்' என்பது உண்மையாயிற்று. பலர் எதிர்பார்த்தபடி அவர் கிளர்ச்சி செய்யவில்லை. எதிர்ப்பில்லாமலே தமது பதவியை விட்டு விலகினார். உண்மையில் இது அவருக்கு வெற்றியாகவும் பேரரசருக்குத் தோல்வியாகவும் முடிந்தது.

வாலன்ஸ்டைனின் வேலை நீக்கத்திற்கு அண்மைக் காரணமாக இருந்தது கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகத் திருச்சபையின் சொத்துக்களைக் கவர்ந்தவர்கள் அவற்றைத் திரும்பத் தரவேண்டு மென்று பேரரசர் இட்ட கட்டளைதான். ஆக்ஸ்பர்க் உடன்படிக்கைப்படி பேரரசரின் கட்டளை ஒழுங்கானதே. ஆனால் அதற்குக் கீழ்ப்படிவது பலருக்கு முடியவில்லை. வாலன்ஸ்டைனை படைத் தலைமையினின்று நீக்கிவிட்டால் பேரரசரை எளிதில் எதிர்த்து நிற்கக்கூடும் என்று பலர் எண்ணினர். இதற்கு உரமிட்டது பிரஞ்சு அரசாங்கம். அங்கே ரிச்சல்யு அப்பொழுது அமைச்சராயிருந்தார். அவர் சிறந்த அரசியல் நிபுணர் என்று செல்வாக்குப் பெற்றவர். ஆகவே அவருடைய யோசனை பயனுற்றது. ஆனால் மறுபடியும் செயலாற்றுவதற்கு முன்பே சுவீடன் நாடு பேரரசரோடு சண்டையில் இறங்கிற்று. குஸ்டாவஸ் அடால்பஸ் (Gustavus Adolphus) என்ற பெயர் பெற்ற சுவீடன் மன்னர் படைக்குத் தலைவரானார். மறுப்பாளருக்கு உதவவேண்டுமென்பது அவர் முதல் எண்ணம், ஆனால் வேறு அரசியல் நோக்கங்களும் கலந்து அவரைச் செயலில் இறக்கின.

பால்டிக் கடலில் தம் ஆட்சியை நிலவச் செய்ய வேண்டுமென்பது அவருடைய எண்ணம். கத்தோலிக்க வெற்றி ஒரு வேளை தம் அரசையே குலைத்துவிடுமோ என்ற அச்சமும் மற்றொருபுறம் வேலை செய்தது. அப்போது போலண்ட் நாட்டின் அரசராக விளங்கியவர் இவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவரே யாயினும், அவர் ஒரு கத்தோலிக்கர். பேரரசின் வெற்றி ஒரு சமயம் அவரையே சுவீடன் நாட்டு மன்னராக ஆக்கக்கூடும். இப்படிப் பல நிறப் பட்ட எண்ணங்களால் உந்தப்பட்டு குஸ்டாவஸ் இப்போது சண்டையில் இறங்கினார் (1630).

குஸ்டாவஸின் படைகள் மிகச் சிறந்தவை. விரைவில் ஓரிட மிருந்து மற்றோரிடம் செல்வதிலும், துப்பாக்கியைப் பயன்படுத்து வதிலும் மிகச் சிறந்தவர்களாக அவருடைய படைவீரர்கள் விளங்கினர்கள். ஆனால் ஜெர்மனியின் மறுப்பாள மன்னர்கள் திறன் குன்றிய காரணத்தால் குஸ்டாவஸின் உதவிக்கு வரவில்லை. அதன் பயன் மேக்டெபர்க் (Magdeburg) பட்டணம் பேரரசரிடம் சரணடைந்தது. எல்ப் ஆற்றங்கரையில் இரத்த வெள்ளமாய் ஓடியது. மக்கள் கொல்லப்பட்டார்கள்; பொருள்கள் சூறை யாடப் பட்டன. இதன் பின்னரே பிராண்டன்பர்க், சாக்சனி போன்ற மறுப்பாளர் நாடுகள் டேனிஷ் படையோடு சேர்ந்தன.

1631ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் குஸ்டாவஸ் பேரரசுப் படையை லீப்சிக்குக்கு அருகில் பிரீட்டன்பெல்ட் (Breitenfeld) என்ற இடத்தில் எதிர்த்தார்; பெரும் வெற்றி கண்டார். பிறகு டேனியூப், மேய்ன், ரைன் ஆறுகளின் கரையில் இருந்த திருச்சபைக்குரிய இடங்களைத் தாக்கினர். அவரை யாரும் எதிர்க்க வருவதாகக் தெரியவில்லை. பிரீட்டன்பெல்ட் வெற்றி கத்தோலிக்கப் படைக்குப் பெருங் கலக்கத்தை உண்டு பண்ணியிருந்தது. ஓரளவு எதிர்ப்புக் காட்டிய தில்லியும், லெக் ஆற்றங்கரையிலே புண்பட்டு வீழ்ந்தார்; பிறகு அதன் காரணமாக அவர் இறந்தும் போனார். பவேரியா நாடும் மூனிச் பட்டணமும் குஸ்டாவஸின் கையில் வீழ்ந்தன. இவ்விதமாக ஒரே ஆண்டில் நிலைமை வெகுவாக மாறிவிட்டது. பீதி கொண்ட பேரரசர் மறு படியும் வாலன்ஸ்டைனின் உதவியை நாடினார்.

1632ஆம் ஆண்டு பேரரசுப் படை வாலன்ஸ்டைனின் தலைமையின் கீழ் லட்சன் என்றவிடத்தில் குஸ்டாவஸைச் சந்தித்தது. சண்டை நெடுநேரம் நடந்தது. கடைசியில் மறுப் பாளர் கட்சி வெற்றி கண்டது. ஆயினும் சண்டையிலே குஸ்டா வஸ் உயிர் இழந்தார். அவரை இழந்த பின் மறுப்பாளர்கள் வலிவிழந்தனர். அவர்கள் அடைந்த வெற்றி அவர்களுக்குப்

பயன் தராதென்பதை வாலன்ஸ்டைன் உணர்ந்தார். அதுமட்டு மல்ல; இனி அவர்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பில்லை என்ப தையும் உணர்ந்தார். அப்பொழுது ஒரெண்ணம் அவர் மனத்தை ஆட் கொண்டது. ஜெர்மனிக்குத் தம்மையே அரசராக்கிக் கொள்ள வேண்டுமென்பதுதான் அந்த எண்ணம். ஆகையால் பேரரசர் அவரைக் கொல்ல எண்ணினார். 1634ஆம் ஆண்டு அவரது இந்த எண்ணமும் நிறைவேறியது.

இப்போது இரு படைகளும் தலைமையற்று நின்றன. ஆயினும், கத்தோலிக்கப் படையை விட சுவீடிஷ் படை மோச மான நிலையை அடைந்தது. இதைச் சேர்ந்த வீரர் சண்டை செய்து வெற்றி காண்பதைவிட நாட்டைக் கொள்ளையடிப்பதிலே கவனம் செலுத்தினர். இந்த நிலையில் இவர்களைத் தோற் கடிப்பது பேரரசுப் படைக்குச் சுலபமாயிற்று. நார்ட்லிங்கன் (Nordlingen) என்னுமிடத்தில் 1634ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் சுவீடிஷ் படை தோல்வியுற்றது.

இதோடு சண்டை முடிந்திருக்கும். ஆனால் அப்பொழுது பிரான்ஸ் குறுக்கிட்டது. அந்த நாட்டின் அரசர் பதின்மூன்றாம் லூயி. ஆனால் உண்மையில் அரசாங்கம் அவருடைய அமைச்சர் ரிச்சல்யுவின் கையில் இருந்தது. பேரரசின் பெருமையைக் குலைக்க வாலன்ஸ்டைன் மேலெழுவதின்று நீக்க ஏற்பாடு செய்தவர் இவர் என்பதை ஏற்கெனவே கூறினோம். அவர் குஸ்டாவஸ் அரசருக்குப் பண உதவி செய்தார். இப்பொழுது நேரடியாகவே மறுப்பாளர் இயக்கத்திற்கு ஆதரவளித்தார். அவர்கள் படைக்கு வேண்டிய உதவிகள் அளித்து வெய்மார் பட்டணத்து பெர்னார்ட் (Bernard of Weimar) என்பவரை அதற்குப் படைத் தலைவராகவும் அனுப் பினார். புரோடஸ்டான்ட் படை இப்பொழுது வெற்றி மேல் வெற்றி கண்டது. சுவீடிஷ் படை டொர்ஸ்டென்சன் (Torstenson) தலைமையின்கீழ்க் கிழக்கு ஜெர்மனியைக் கைப்பற்றியது; பிரஞ்சுப் படைகள் ரைன் நதிக்கரையையும் பெல்ஜியத்தின் எல்லையையும் கைப்பற்றின. பேரரசருக்கு எப்பொழுதும் உதவி தந்த ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுக் கலகத்தை மூட்டினார் ரிச்சல்யு. 1640ஆம் ஆண்டு காடலோனியா (Catalonia)ப் பிரதேசம் ஸ்பெயின் அரசுக்கு மாறுக எழுந்தது. 1643ஆம் ஆண்டு பிரஞ்சுப்படை ஸ்பெயினுக்குள் நுழைந்து ரோக்ராய் (Rocroi), லென்ஸ் (Lens) என்ற இடங்களில் ஸ்பெயின் படையைத் தோற்கடித்தது. அதற்குள் ரிச்சல்யு காலமானார் (1642). ஆனால் அவருக்குப் பின் அமைச்சர் பதவியேற்ற மசாரின் (Mazarin) அவருக்குச் சளைத்தவ ரல்லர். அவருடைய கருத்தின்படி முப்பதாண்டுப் போர் ஒரு விதத்தில் முடிவடைந்தது (1648).

இந்த முடிவு வெஸ்ட்பேலியா (Westphalia) என்ற இடத்தில் ஏற்பட்டதால் அப்பொழுது ஏற்பட்ட உடன்படிக்கைக்கு வெஸ்ட் பேலியா உடன்படிக்கை (Treaty of Westphalia) என்று பெயர்வந் தது. ஐரோப்பாவில்நடந்தேறியுள்ளஉடன்படிக்கைகளிலெல்லாம் மிக முக்கியமானது இந்த உடன்படிக்கை என்பது பல வரலாற்று சிரியர்களின் கருத்து. இதன் பிறகே லூத்தர் எழுப்பிய மறுப்புக் கொள்கை வெற்றி பெற்றது. ஐரோப்பாவில் ஒரே மதம் விளங்கிய நிலை மாறி பல மதங்கள் நிலவவும், சிறப்பாக மதக் கொள்கைகளில் மக்களுக்கு உரிமை வேண்டும் என்ற எண்ணம் உறுதிப்படவும் இது வழி வகுத்தது. ஐரோப்பியப் பேரரசு இந்த உடன்படிக்கை ஏற்பட்ட தினத்தன்றே குலைந்தது. நீண்ட காலச் சண்டைக்குப் பிறகும் அது கண்ட பலன் இதுதான். ஜெர்மனி நாடு முன்னிலும் அதிகமாகச் சீர்குலைந்தது. ஒன்று பட்ட ஜெர்மனிக்குப் பதில் அது முன்னிலும் அதிகமாகப் பிளவு பட்டது. அந்தச் சிறு நாடு 343 தனி அரசுகளாகப் பிரிந்தது. கத்தோலிக்கச் சமயமும் ஒன்றுபட்ட சமுதாயமும் இடைக்கால ஐரோப்பாவின் குறிக்கோள்கள். அவை இரண்டும் இந்த உடன் படிக்கையின் காரணமாகத் தோற்று மறைந்தன. மறுப்பாளர் இயக்கம் பல புது மதங்களாகத் தோற்றமளித்து இப்போது நிலை பெற்றது. இனி சமயச் சண்டை இல்லை; ஆனால் சமய ஒற்றுமை யுமில்லை.

பிரான்ஸ் நாடு இந்த உடன்படிக்கையின் வழியாய் மெட்ஸ், டூல், வெர்டன் என்ற மேற்றிராணிப் பட்டணங்களுக்கு உரிமை பெற்றது; தவிர ஆல்சேஸ் (Alsace) பகுதி அதற்குச் சொந்த மாயிற்று. சுவீடன் நாடு இன்னும் மிகுந்த பயன் பெற்றது. மேற்கு பொமரேனியாவும் (Pomerania), ஓடர் ஆற்றைச் சுற்றி யுள்ள வட்டாரமும், வெர்டன் (Verden), பிரமன் (Bremen) என்ற பட்டணங்களும் அதற்கு உரிமை ஆயின. மனம் வைத் திருந்தால் வட ஜெர்மனி முழுவதையுமே சுவீடன் கைப்பற்றி யிருக்கலாம். ஆனால் நீண்ட சண்டைக்குப் பிறகு அந்நாட்டினர் சோர்ந்திருந்தார்கள். ஆகையால் அது தனது அரசின் எல்லையைப் பரப்பாமல் மக்களின் நன்மையைத் தேடுவதில் கவனம் செலுத்தியது. இதிலும் சுவீடன் வெகு திறம்பட வெற்றி கண்டது. ஆனால் ஜெர்மனியின் கதிதான் கவலைக்கிட மாயிற்று. யார் சண்டையைத் தொடர்ந்து நடத்தியிருந்த போதிலும் அது பெரும்பாலும் ஜெர்மனியின் எல்லையில் நடந்த தால் ஜெர்மானிய மக்களே போரின் தொல்லையை முழுவதும் அனுபவித்தவர்கள். முப்பதாண்டுக் காலம் அவர்கள் சமாதான மென்பதையே காணவில்லை. பட்டணங்கள் பாழடைந்தன

வென்ரூல் கிராமங்களில் மக்கள் ஊரை விட்டே போய் விட்டார்கள். போஹேமியாவில் மக்கள் எண்ணிக்கை நான்கில் மூன்று பாகம் குறைந்தது; பெர்லின் படடணத்திலும் அதைப் போலவே 24,000 மக்கள் 6,000 ஆகக் குறைந்தார்கள். இத் தகைய நாட்டில் கல்வி யேது, வாணிக மேது, கலைதான் ஏது? இவை இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. உண்மையில் ஐரோப்பாவில் எந்த நாடும் இத்தகைய இன்னல் அடைந்ததில்லை. வெஸ்ட்பேலியா உடன்படிக்கையி லிருந்து ஏறக்குறைய ஐம்ப தாண்டுக் காலம் ஜெர்மனி ஐரோப்பாவி லிருந்து மறைந்த தென்றே சொல்ல வேண்டும்.

6. பிரான்ஸின் வளர்ச்சி

(1610 — 1660)

பிரான்ஸின் நூற்றாண்டுகள் — ரிச்சல்யுவின் அரசியல் — மசாரின் அரசியல் முறை


1

ஐரோப்பிய வரலாற்றில் கி. பி. பதினாறும் நூற்றாண்டு ஸ்பெயின் நாட்டு நூற்றாண்டு என்று கூறப்படும். நாம் முன்னே கூறியது போல் அப்போது அந்நாட்டின் வளர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. மேலும், அதற்குப் பின் வரும் இரு நூற்றாண்டுகளும் பிரான்ஸ் நாட்டின் வளர்ச்சியை உச்ச நிலைக்குக் கொண்டு செல்கின்றன. இதைப் பற்றி நாம் இந்த இயலிலும் அடுத்த இயலிலும் அறிவோம்.

பிரான்ஸ் நாட்டின் வரலாற்றில் நாம் முன் இயலில் நான்காம் ஹென்றி மன்னரது அரசாட்சி வரை பார்த்தோம். அவர் 1610ஆம் ஆண்டு காலமானார். அவருடைய பிள்ளை இன்னும் குழந்தையாயிருந்ததால் அரசாட்சி அவர் மனைவியார் மேரி டெ மெடிச்சியின் கையில் வந்தது. அவர் பிரான்ஸுக்கும் ஸ்பெயினுக்குமிடையே சமாதானம் செய்துகொண்டு இரு நாடுகளுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமையை வளர்க்க எண்ணம் கொண்டார். அதற்கான திட்டமும் வகுத்தார். தம் புதல்வன் லூயிக்கும் ஆஸ்டிரிய இளவரசி ஏன் (Anne) என்பவளுக்கும் திருமண உடன்படிக்கை செய்து கொண்டார் (1612). இளவரசி அப்போது ஸ்பெயின் மன்னராயிருந்த மூன்றாம் பிலிப்பின் மகள். அவருடைய மகன் பிலிப் என்பவருக்குப் பிரான்ஸ் நாட்டின் இளவரசி எலிசபெத் என்பவளோத் திருமணம் முடிக்கவும் ஏற்பாடாயிற்று. இந்த இளவரசர்கள் பிற்காலத்தில் முறையே பதின்மூன்றாம் லூயியாகவும் நான்காம் பிலிப்பாகவும் பிரான்ஸிலும், ஸ்பெயினிலும் அரசு எய்தினார்கள். மேரி அரசியாரின் திட்டம் முற்றிலும் அநுகூலமாக நடந்திருந்தால் ஐரோப்பிய வரலாறே மாற்றம் கண்டிருக்கும். ஆனால் நாட்டில் இதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. ஸ்பெயின் நாடு கத்தோலிக்க நாடாயிருந்த படியால்

பிரஞ்சு புரோடஸ்டான்டுகளால் இதை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. 1614ஆம் ஆண்டு அரசியார் நாட்டின் மக்கள் சபையைக் (States-General) கூட்டுவித்தார். அதனலும் ஒரு பயனும் ஏற்படவில்லை. 1624 ஆம் ஆண்டு கர்தினல் ரிச்சல்யு (Richelieu) என்பவரைத் தமக்கு ஆலோசனையாளராக அரசியார் தேர்ந் தெடுத்தார். ரிச்சல்யுவின் ஆலோசனை அரசியாரின் எண்ணத் திற்கு நேர்மாறு பிருந்தது. கடைசியில் ஆலோசகரே வெற்றி கண்டார்.

கர்தினல் ரிச்சல்யு பதினெட்டாண்டுக்காலம் ஐரோப்பிய வர லாற்றிற்கே வழி வகுத்தார். 1624 முதல் 1642 வரை அவர் அமைச்சராக இருந்தபோதிலும் பிரான்ஸின் அரசராகவே காட்சி அளித்தார். பிற்காலத்தில் ரஸ்புடீன் என்பவர் ருஷிய வரலாற்றில் வகித்த முக்கிய பாகத்திலும் உயர்ந்த பதவியை இக் காலத்தில் பிரான்ஸில் வகித்தவர் ரிச்சல்யு. அவரை விட அதிக வெற்றி கண்டவரும் இவரே. இவரும், இவரைப் பின்பற்றி அமைச்சரான கர்தினல் மசாரின் (Mazarin) என்பவரும் நாம் எளிதில் விளக்கக் கூடியவர்களோ அல்லது அறியக் கூடியவர் களோ அல்லர். அவர்கள் மதத்தில் கத்தோலிக்க குருக்கள் மட்டு மல்லர்; அவர்களுக்குள் உயர்ந்த பதவியான கர்தினல் பதவி வகித்தவர்கள். அப்படியிருந்தும் அவர்கள் இருவருமே மறுப் பாளர் இயக்கத்திற்கு உதவினர்கள். நாம் முன் இயலில் கூறியது போல், புரோடஸ்டான்ட் மதம் ஐரோப்பாவில் நிலைப்பதற்கு இவர்களே காரணராக இருந்தார்கள் என்று நாம் எண்ணும் போது இவர்களுடைய அறியவொண்ணுக் குணமும் அளக்க முடியா ஆளுமையும் (Personality) ஒருவாறு விளங்கும். அதிலும் ரிச்சல்யு தம் நாட்டில் கத்தோலிக்க மதத்தை உறுதிப்படுத்தினர். ஆனல் ஜெர்மனியில் அதை எதிர்த்தார். இதற்கு ஒரே காரணம் கூறக் கூடும். இயல்பாகவே ஆதிக்க குணம் படைத்தவராலுலும், தேசிய உணர்ச்சி இன்னும் அதிகமாக அவரிடமிருந்தது. பிரான் ஸின் பெருமைக்காக அவர் தம் மதத்தைப் பற்றியும் கவலை கொள்ளவில்லை. கத்தோலிக்கருக்கும் புரோடஸ்டான்டுகளுக்கு மிடையே நடந்த போரில் புரோடஸ்டான்டுகள் தோல்வியடைந் தால், அது கத்தோலிக்கரது வெற்றி மட்டுமல்ல; ஸ்பெயின், ஆஸ்டிரியா நாடுகளின் வெற்றியுமாகும். அந்த அளவுக்கு பிரான்ஸின் பெருமை குறையும். இதற்காகவே அவரும், மசா ரினும் புரோடஸ்டான்டுகளுக்கு உதவி அளிக்க முன்வந்தார்கள். பதினுரும் நூற்முண்டில் மதக் கொள்கைகள் முதலிடம் வகித்தன. ஐரோப்பாவில் எங்கு பார்த்தாலும் மதக் கொள்கைகளும் பிரமா ணங்களும் தாக்கப்பட்டன; புதுக் கொள்கைகளும் பிரமாணங்


1648 இல் ஐரோப்பா
ஸ்பெயின் உரிமைகள்
ஆஸ்திரியா உரிமைகள்
பிரசியா உரிமைகள்
ஸ்வீடன் உரிமைகள்
சர்ச் உரிமைகள்
சாம்ராஜ்ய எல்லை
போலந்து
பிரான்ஸ்
ஸ்பெயின்
மத்திய தரைக்கடல்

களும் எழுந்தன. ஆனல் அதற்கு அடுத்த நூற்றாண்டிலேயே காலம் உண்மையாகவே மாறிவிட்டது. அரசியல் நோக்கங்கள் இப்பொழுது முதலிடம் பெற்றன. எச். ஜி. வெல்ஸ் (Wells) என்ற வரலாற்றறிஞர் சொல்வதுபோல், ''இந்த நூற்றாண்டில் பல நாட்டினர் செல்லும் ஒரு புகைவண்டியில் கடவுளைப் பற்றி ஏளனம் செய்தால் யாரும் தட்டிக் கேட்க மாட்டார்கள். ஆனல் எந்த ஒரு நாட்டின் கொள்கைகளைப் பற்றியும் ஏளனம் செய்ய முடியாது.''* அந்த அளவுக்குத் தேசியமும் அரசியலும் இப்போது முக்கியத்துவமடைந்து விட்டன. இந்த அரசியல் கொள்கை காரணமாய் ஐரோப்பாவில் முதல்முதல் வளர்ச்சி பெற்ற நாடு பிரான்ஸ். அதற்கு உதவினவர்கள் அதன் இரு பெயர்பெற்ற அமைச்சர்களான ரிச்சல்யு, மசாரின் என்பவர்களே.

II

கத்தோலிக்கர் ரிச்சல்யுவை மனமார வெறுத்தார்கள். அவரைச் சிலர் ''ஹியுக்நோக்களின் போப்'' என்று அழைத்தார்கள்; வேறு சிலர் ''கடவுள் கொள்கையை மறுப்போரின் தலைவர்'' (Patriarch of Atheists) என்று சொன்னர்கள். ஆயினும், உண்மையில் ரிச்சல்யு ஹியுக்நோக்களைக் கடுமையாக எதிர்த்தார். பிரான்ஸ் நாட்டிலிருந்து அவர்களை வேரோடு களைய வேண்டுமென்பதே அவருடைய குறிக்கோள். இதிலும் ஹியுக்நோக்களின் மதக் கொள்கைகளுக்காக இவர் அவர்களை எதிர்க்கவில்லை. ஒவ்வொருவரும் அவரவர்களுக்குப் பிடித்த மதக் கொள்கையின்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற சமரச மனப்பான்மை கொண்டவர் ரிச்சல்யு. ஆனல் நான்டஸ் ஆணைப்படி அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்த படையும் சில கோட்டைகளும் அவர்களை எளிதில் அரசியல் பகைவர்களாகச் செய்யக் கூடும் என்றஞ்சினர். தவிர, அவர்கள் அடிக்கடிக் கூடிய மதக் கூட்டங்கள் (Synods) அவர்களுடைய மத வளர்ச்சிக்கேற்ப ஒரு சிறிய பாராளும் மன்றம் என்று சொல்லுமளவுக்குத் தோற்றமளித்தது. இது பற்றியே அவர் அவர்களைப் பிரான்ஸிலிருந்து களைந்தெறிய வேண்டுமென்று திட்டமிட்டார்.

இந்தத் திட்டம் நிறைவேறுமுன் ரிச்சல்யு ஹியுக்நோக்களோடு பல போர்கள் புரிய வேண்டியிருந்தது. பிரான்ஸின் பிரபுக்களும் ஆங்கிலேய அரசாங்கமும் அவர்களுக்கு உதவிய காரணத்தால் அவர்களை எளிதில் அடக்கக் கூடவில்லை. 1627ஆம்

* H. G. Wells : Outlines of World History.

ஆண்டு ஹியுக்நோக்களின் முக்கிய இடமாகிய லா ரொஷேல் (La Rochelle) என்ற பட்டணத்தை ரிச்சல்யு தாக்கினர்; தாமே படைக்குத் தலைவராயிருந்தார். லா ரொஷேல் சிறந்த துறை முகப் பட்டினம். அங்கே ஒரு சிறந்த கோட்டையுமிருந்தது. இவை ஹியுக்நோக்களுக்கு உரிமையா யிருந்தபடியால் அவர் களுக்கு நல்ல வசதியும் படைவலியும் கிடைத்தன. ரிச்சல்யு முதலில் அவர்களுக்கு உதவிய ஆங்கிலேயரை வென்றார். அதன் பின் பிரஞ்சுப் பிரபுக்கள் தமக்கு மாறுகச் செய்துவந்த ஏற்பாடு களையெல்லாம் கண்டுபிடித்து அவை நடைபெறுமல் பார்த்துக் கொண்டது மன்றிப் பிரபுக்களையும் வன்மையாக ஒறுத்தார். லா ரொஷேலும் அதன் கோட்டையும் ரிச்சல்யு வசமாயின. அதன் பிறகு ஹியுக்நோக்களின் இதர இடங்கள் அவர் கைக்கு வந்தன. 1629ஆம் ஆண்டு அலேய்ஸ் என்ற இடத்தில் இரு திறத்தாருக்கும் உடன்படிக்கை (Peace of Alais) ஏற்பட்டது. இது மிகச் சுருக்கமானது. ரிச்சல்யு தமது குறிக்கோள் முற்றுப் பெறுவதில் மட்டும் கருத்தைச் செலுத்தினர். ஹியுக்நோக்களின் சமய உரிமைகளையெல்லாம் அவர்களுக்கு முற்றிலும் அளித்தார்; அவர்களுக்குத் தரப்பட்டிருந்த படை வலியையும் கோட்டை களையும் மட்டும் தாமே எடுத்துக்கொண்டு, மத உரிமைகளைக் காப்பாற்ற அரசன் சொல்லே போதுமானது என்று கூறினர். ரிச்சல்யுவின் காலமறிந்து நடக்கும் அரசியல் அறிவைக் காட்டு வதற்கு இதுவே போதிய சான்று.

ஹியுக்நோக்களை வென்ற பிறகு ரிச்சல்யு பிரபுக்களை அடக்க எண்ணினர். இதிலும் ஒரு குழப்பமான நிலை ஏற்பட்டது. அர சரின் கை ஓங்குவதற்காகவே ரிச்சல்யு பிரபுக்களை ஒடுக்க முடிவு செய்தார். ஆனால் அரச குடும்பத்திலேயே சிலர் பிரபுக்களுக்கு உதவி அளித்தார்கள். முதலில் மன்னரின் தாயாரே பிரபுக் களுக்கு உதவினர். ரிச்சல்யு துணிந்து சண்டை செய்து பிரபுக் களைத் தோற்கடித்த பின்னர், மன்னரின் தாயாரை நாட்டை விட்டுத் துரத்தினர். அவரும் பிரான்ஸை விட்டு இங்கிலாந்து போய்ச் சேர்ந்தார். மன்னரின் உடன் பிறந்தோரான ஆர்லி யான்ஸ் பிரபு கேஸ்டன் (Gaston of Orleans) பிரபுவோடு சேர்ந் திருந்தார். அவரை அடக்குவதற்கு அவரோடு பலமுறை சண்டை செய்ய வேண்டிய தாயிற்று. ஒவ்வொரு தடவையும் ரிச்சல்யு அவரை மன்னித்தார். கேஸ்டன் மீண்டும் மீண்டும் சண்டை செய்து கடைசியில் ஓய்ந்த நிலையில்தான் அவர் சமா தானமாயிருக்க உடன்பட்டார். கேஸ்டன் மன்னரோடு உடன் பிறந்தோர் என்று ரிச்சல்யு இப்படி நடந்து கொண்டார். ஆனால் மற்ற பிரபுக்களைக் கொடுமையாகத் தண்டித்தார். 1632-ஆம்

ஆண்டு கேஸ்டனோடு சேர்ந்து சண்டை செய்த மோன்ட் மொரன்சி பிரபுவை (Duke of Montmorency)க் கொல்லும்படி ஆணை பிறப்பித்தார். 1641ஆம் ஆண்டு கோம்ட் டெ சோய் சான்ஸ் (Comte de Soissons) பிரபு ரிச்சல்யுக்கு மாறுக எழுந் தார். அவரையும் தூக்குமேடைக்கு அனுப்பத் திட்டமிடும் போது அவர் சண்டையிலேயே இறந்து போனார். கடைசிவரை ரிச்சல்யு பிரபுக்களோடு சண்டை செய்தார். அவர் இறப்ப தற்குச் சிறிது காலத்திற்கு முன்பு சிங் மார்ஸ் (Cing Mars) என்ற பிரபு அவரை எதிர்த்தார். அவர் அரசருக்குச் சிறந்த நண்பர். ரிச்சல்யுவைத் தொலைக்க வேண்டுமென்று அவர் ஸ்பெயின் மன்ன ரோடு கலந்து ஏற்பாடு செய்தார். இதை அறிந்ததும் ரிச்சல்யு சிறிதும் மனந்தளராமல் அவரோடு சண்டை செய்து தோற்கடித் தார். தோல்விக்குப் பின்னும் அவரை விடாமல் தூக்கிலிட்டுக் கொன்றார்.

ரிச்சல்யு அமைச்சரின் பதவிக் காலம் பிரபுக்களின் பழம் பெருமைகளுக்கு முடிவு கட்டியது. ஐரோப்பிய வரலாறு பிர புக்கள் நிறைந்த இடைக்கால வரலாற்றைக் கடந்து தற்கால வர லாற்றில் அப்போது நுழைந்துவிட்டது. நிலமானிய முறைக்கு (feudalism) இனி அதில் சிறிதும் இடமில்லை. ரிச்சல்யு இதை நன்கு உணர்ந்திருந்தார். பிரபுக்களோடு அவர் தொடர்ந்து சண்டை செய்தார்; வெற்றி கண்டார். ஆனால் அதோடு நிற் காமல் நிரந்தரமாக அவர்கள் வலிமையை ஒடுக்கச் சில சட்டங் களும் இயற்றினார். பிரபுக்களின் வலி பொருந்திய மாளிகைகள் பல இடங்களில் தரைமட்டமாயின. தங்கள் வீரத்தை நிலை நாட்ட அவர்களுள் அடிக்கடி நடந்துவந்த தனிச் சண்டைகள் (duels) சட்டப்படி இப்பொழுது தவிர்க்கப்பட்டன. நாட்டின் பல பாகங்களில் அரசருக்குப் பதிலாக அவர்கள் நடத்திவந்த அரசுகள் இப்பொழுது ஒழிந்து மாகாண அரசாங்கம் அங்கங்கே பொறுப்புள்ள உத்தியோகஸ்தர் கையில் ஒப்புவிக்கப்பட்டது. இவர்கள் கையில் உள்நாட்டுப் பாதுகாப்பும், மாகாண நிதியும் ஒப்புவிக்கப் பட்டிருந்தபடியால் இவர்களுக்கு ''பாதுகாப்பு - நிதித் தலைவர்கள்'' (Superintendents of Police & Finance) என்ற பெயர் அளிக்கப்பட்டது. காலப் போக்கில் இவர்கள் 'இன்டென் டென்ட்ஸ்' (intendents) என்று அழைக்கப்பட்டார்கள். ரிச்சல்யு செய்த சீர்திருத்தங்களில் இது மிகப் பெரியதாகும். பிறப்பை ஒழித்துத் திறமையைக் கொண்டு அரசியல் பதவிகளுக்கு ஆள் அமைப்பது என்ற மரபு முதல் முதல் ஐரோப்பாவில் இப்பொழுது தான் ஏற்பட்டது. இக் காலத்தில் உலகெங்கும் பேசப்படும்

பொது நிர்வாகப் பணியைத் (Civil Service) தோற்றுவித்தவரும் ரிச்சல்யுதான்.

அரசியல் சேவையை ஏற்படுத்தியதில் ரிச்சல்யு சிறந்த முற் போக்கைக் காட்டினார். ஆனால் அவரே பிரதிநிதித்துவ அரசு முறையை (Representative Government) எதிர்த்தார். 1614ஆம் ஆண்டில் பிரஞ்சு பிரதிநிதித்துவ சபையின் அங்கத்தினராக ரிச் சல்யு இருந்தார். அப்பொழுது அவர் கண்ட உண்மை அவரை இப்போது இத்தகைய செயலில் இறங்கச் செய்தது. பிரதி நிதித்துவ சபைகள் உண்மைகளைக் கண்டுபிடிப்பதிலும், அதன்படி செயலாற்றுவதிலும் வீணாக நேரத்தைப் போக்கின. அது மட்டு மல்ல; நேரத்தைப் போக்கிய பின்னும் அவைகள் உண்மைகளைக் கண்டு பிடிப்பதில்லை. இதை அறிந்த பின், அவர் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் பிரஞ்சு பிரதிநிதித்துவ சபை (States-General)யை அழைக்க மறுத்தார். இதே கொள்கையை அவர் மாகாண ஆட்சியிலும் கடைப்பிடித்தார். அவர் காலத்தில் ஒவ் வொரு மாகாணத்திலும் ஒரு பிரதிநிதித்துவ சபை வேலை செய் தது. ஆனால் அதற்கு எதிர்ப்பாகச் சிறு கலகம் விளைந்தாலும் அவர் அந்தப் பிரதிநிதித்துவ சபையைக் கலைக்கத் தவறியதில்லை. கலைக்கப்படாமல் தம்மைக் காத்துக்கொண்ட சபைகளின் வலி மையையும் ரிச்சல்யு குறைத்தார். சுருங்கக் கூறின், மத்திய அரசாங்கத்தில் தாம் ஆதிக்கம் செலுத்தினது போலவே மாகா ணங்களின் அரசை அரசாங்க உத்தியோகஸ்தர்களின் கையில் கொடுத்தார். அவர் தமக்கு யோசனை சொல்ல ஒரே சபையை அனுமதித்தார். அதற்குப் பெரியோர் சபை (Council of the Notables) என்று பெயர் வைத்தார். அரசருக்குப் பிடித்த பெருந்தகைகள் மட்டும் இந்தச் சபைக்கு அழைக்கப்பட்டார்கள். அவர்கள் ஆலோசனையையும் ஏற்றுக்கொள்ளவோ தள்ளி விடவோ அரசருக்கு உரிமை இருந்தது.

இவ்விதமாகப் பிரஞ்சு அரசாட்சி முறையை ரிச்சல்யு முற்றி லும் மாற்றி அமைத்தார். அவர் செய்த மாற்றங்களில் மிக முக்கியமானது அவர் ஏற்படுத்திய அரசரின் ஆலோசனைக் குழு (King's Council). இதை ரிச்சல்யு நியமித்தார். அரசாங்கத்தின் பலதிறப்பட்ட வேலைகளுக்கேற்ப, ஆலோசனைக் குழுவும் பலதிறப் பட்ட துறைகளில் வேலை செய்தது.

ரிச்சல்யு ஐரோப்பிய வரலாற்றில் மிகச் சிறந்த இடத்தை வகிப்பவர். அவருடைய அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றி நம் கருத்துக்களை ஒரு சிறிதாவது இங்குக் கூற வேண்டும். அவர் சிறந்த அரசியல் அறிஞர், துணிவு மிக்கவர் என்பனவெல்லாம்

உண்மைதான். அதிலும், உலகம் துறந்த ஒரு பெரியார் இத் தகைய பணிகளில் ஈடுபட்டது உலகுக்கே வியப்பளித்தது; இன்றும் பெரு வியப்பளிக்கவல்லது. ஆயினும், அவர் ஒரே நோக்கம் கொண்டவர்—பிரான்ஸில் மன்னர் வலிமை ஓங்க வேண்டும்; இதற்கு இடையூறுன எல்லாம் ஒதுங்க வேண்டும் என்பதே அந்த ஒரே நோக்கம். இந்த எண்ணத்தைச் செயலில் கொண்டுவர அவர் செய்த முயற்சிகள் பல. இவை எல்லாவற்றிலும் அவர் காட்டிய விடாமுயற்சி போற்றுதற்குரியது. ஆயினும், அரசியலில் ஈடுபடுபவர்களுக்குப் பொது நோக்கு அவசியம். அவர்கள் செயல் பொதுமக்களே எப்படித் தாக்கும் என்பதைச் சிந்தியாமல் அவர்கள் எந்தச் சீர்திருத்தத்திலும் இறங்குவது தவருகும். ரிச்சல்யு இதைப் பற்றி எண்ணியதாகத் தெரியவில்லை. அவருடைய சீர்திருத்தங்களால் நன்மை அடைந்தவர்களே விட தீமை அடைந்தவர்கள் பலர். இவை நன்மை அளிக்கக் கூடியவைதாமா என்பதைப் பற்றியே நாட்டில் பலருக்கு ஐயமுண்டாயிற்று. இக் காரணத்தால் அரசரது உறவினர்களே இவரை எதிர்த்தார்கள். இதைப் பற்றியே பிஷர் (Fisher) என்ற வரலாற்றுசிரியர் ரிச்சல்யு மனிதத் தன்மை யற்றவர் என்று கூறுகிறார்.* நாம் முன்னர்க் கூறியதுபோல் அரசருடைய தாயையே அவர் நாட்டைவிட்டுத் துரத்தினர். ரிச்சல்யு மிகக் குறுகிய நோக்க முள்ளவர். 'குடிகளின்றி மன்னர் இல்லை' என்ற யாவரும் அறிந்த உண்மையை அவர் உணரவில்லை. பிரதிநிதித்துவ அரசியல் முறையை ஒழித்தால் மன்னர் வலிமை பெருகும் என்ற தவருனநோக்கம் அவரை ஆட்கொண்டது. இது எத்தகைய தவறு என்பதை ஒரு நூருண்டு காலம் விளக்கியது; விளக்கிக்கொண்டே இருந்தது. மக்கள் மனம் குமுறியது: இந்தக் குமுறலே கடைசியில் பெரும் புரட்சியாக மாறியது. காரியம் கைகூடின் காரணங்களைப் பற்றிக் கவலை வேண்டுவதில்லை (End justifies the means) என்பது அவருடைய திண்ணமான கருத்து. இது மிக இழிந்த கொள்கை என்பதை யாவரும் உணர்வர். உலகத்தை இது ஆட்கொள்ளுமானால் உலகம் விரைவில் அழிந்துவிடும். சற்று நிதானத்தால் இதன் உண்மை விளங்கும். ஆயினும் ரிச்சல்யு இதன் அடிப்படையில்தான் செயலாற்றினர். பிரஞ்சு புரோடஸ்டான்டுகளை வெல்வதற்கு அவர் டச்சு புரோடஸ்டான்டுகளின் உதவியைக் கோரினர். டச்சுக்காரர் அவரிடம் பண உதவியை நாடினபோது ஹியுக்நோக்களை அடக்க உதவினால் பணம் தருவதாகக் கூறி டச்சு மறுப்பாளரையே ஹியுக் நோக்கள் மீது ஏவினர். ஆனால் ஜெர்மனியில் தாமே கத்தோ

* H. A. C. Fisher: History of Europe.

லிக்கருக்கு விரோதமாக ஜெர்மன் நாட்டு மறுப்பாளர்களுக்கு உதவி அளித்தார். சுருங்கக் கூறின், ரிச்சல்யுவின் திறமையை அவருடைய தன்னலம் விழுங்கிவிட்டது எனலாம்.

அவருடைய அந்நிய நாட்டுக் கொள்கைகளும் தன்னலம் காரணமாக எழுந்தவையே. பேரரசின் பலம் குன்றச் செய்ய வேண்டுமென்பதே அவருடைய முக்கிய கொள்கை. இதற்காக மற்றக் கொள்கைகளை யெல்லாம் கைவிட்டார். சமய ஒற்றுமை யென்பதே இந்த மதத் தலைவருக்குப் பெரிதாகத் தெரியவில்லை. முன் இயலில் கூறியதுபோல், கத்தோலிக்க மதத்தை எதிர்த்த மறுப்பாளர்கள் ஐரோப்பாவில் நிலைபெறுவதற்கு இந்தக் கத்தோலிக்கப் பெரியாரே காரணரென்றால் தன்னலம் காரணமாக ரிச்சல்யு எதைச் செய்யவும் தயங்க மாட்டார் என்பது தேற்றம். குஸ்டாவஸ் அடால்பஸின் வலிமையில் பெரும் பகுதி ரிச்சல்யுவின் வலிமையாகும். ஆயினும், அவரையும் ரிச்சல்யு முழுவதும் நம்பவில்லை. ''குஸ்டாவஸ் நஞ்சனையர். நாம் நஞ்சைக் கையாளும் அளவிற்கு அதன் நன்மையும் தீமையும் இருக்கின்றன'' என்று ரிச்சல்யு அவரைப் பற்றிக் கூறுவாராம். தவிர, பேரரசின் வலிமை குன்ற ஸ்பெயின் நாட்டையும் ஆஸ்டிரியாவையும் பிரித்து வைத்தார், அதற்காக இவ்விரு நாடுகளுக்கு மிடையே பூகோள முறையில் பிளவை ஏற்படுத்தினர். அப்பொழுது ஆல்ப்ஸ் மலை வழியாகவே ஸ்பெயினிலிருந்து ஆஸ்டிரியாவிற்கோ அல்லது ஆஸ்டிரியாவிலிருந்து ஸ்பெயினுக்கோ செல்ல வேண்டும். இதைத் தடுக்க இவ்வழியே இருந்த வால்டலின் கணவாயை (Valtaline Pass) வென்று தம் கைக்குள் வைத்துக்கொண்டார் ரிச்சல்யு. ஸ்பெயின் நாட்டினுள்ளே உள்நாட்டுக் கலகத்தை விளைவித்தார். ஒருபுறம் போர்த்துக்கல் நாடும் மற்றொரு புறம் காடலோனியா (Catalonia) பகுதியும் ரிச்சல்யுவின் தூண்டுதலின் மேல் ஸ்பெயின் மன்னருக்கு எதிராக எழுந்தன. ஸ்பெயின் தோற்று பிரான்ஸ் நாடு தனிப்பெரும் நாடாகத் தோன்றும் காலம் அண்மையில் இருந்தது. ஆனால் ரிச்சல்யுவின் ஆயுள் முடிவும் அண்மையில் தானிருந்தது. 1642 ஆம் ஆண்டு முடிவடைந்து கொண்டிருந்தது. அவ்வாண்டு டிசம்பர்த் திங்களில் ரிச்சல்யு காலமானார். அடுத்த ஆண்டு மேத் திங்களில் பிரான்ஸ் மன்னர் பதின்மூன்றும் லூயியும் இறந்தார்.

அப்போது பிரான்ஸில் ஒரு புது யுகம் பிறந்தது.

III

ரிச்சல்யு காலமாவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பாகவே மசாரின் (Mazarin) என்னும் மற்றொரு கர்தினல் அவருக்கு உதவியாகப் பணியாற்றி வந்தார். அவரும் சிறந்த திறமை யுடையவர். ரிச்சல்யு அவரையே தமக்குப் பின் அமைச்சராக்க வேண்டுமென்ற கருத்தை முன்கூட்டியே தெரிவித்திருந்த படியால் மன்னர் இப்போது அவரை அமைச்சராக நியமித்தார். ரிச்சல்யுவின் கொள்கைகளைக் கூடிய வரையில் பிறழாமல் கடைப் பிடித்தவர் மசாரின். அப்போது முப்பதாண்டுப் போர் தீவிர மாக நடந்துகொண் டிருந்தது. அதை வெற்றிகரமாக முடிக்கும் வேலையில் திறமையோடு மசாரின் பணியாற்றினார். அதே சமயம் அவருக்கு உதவியாக இரு பெரும் படைத் தலைவர்கள் தோன்றி னார்கள். ஒருவர் அரச குடும்பத்தைச் சேர்ந்த கோன்டே பிரபு (Duke of Conde); மற்றவர் டுரேன் பிரபு (Marquis of Turenne). இவர்கள் பிரஞ்சுப் படைக்கு மிகுந்த ஊக்கம் அளித்தார்கள். டுரேன் பிரபு சிறந்த படைத்தலைவர் மட்டுமல்ல; உயரிய மக்கட் பண்பும் கொண்டவர். போரில் வெறும் துணிவு காட்டுவோர் பலர். ஆனால் சூழ்ச்சியுடன் அதைச் செயலாற்றுவோர் மிகச் சிலரே. டுரேன் இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவர். நாம் முன் இயலில் குறித்த ராக்ராய், லென்ஸ் என்ற இரு பெருஞ் சண்டைகளில் பிரான்ஸின் வெற்றிக்கு இவர் பெரிதும் காரண ரானவர். இவை இரண்டும் வரலாற்றில் கூறப்படும் பெருஞ் சண்டைகளில் சேர்க்கப்பட வேண்டியவை. ஸ்பெயின் நாட்டின ரின் காலாட்படை ஐந்தாம் சார்லஸ் காலந்தொட்டே பெயர் பெற்றது. அது முதன்முதல் தோற்கடிக்கப்பட்டது ராக்ராய் போர்க்களத்தில்தான். நூறுண்டுகளுக்கு மேலாகத் தோல்வி காணுப் படை 1643ஆம் ஆண்டு ராக்ராயில் தோற்றபோது ஐரோப்பிய வரலாறே ஒரு திருப்பம் கண்டது என்று கூற வேண்டும். அன்று ஸ்பெயின் மன்னர் திறமெல்லாம் குன்றினவ ரானார்; பல காலம் வெற்றி கண்ட பேரரசு பெரிய தாக்குதலுக்கு ஆளாயிற்று. முப்பதாண்டுப் போருக்கு ஒரு முடிவு வரும் போல் தோன்றியது. ஸ்பெயின் நாடு சமாதானம் கோரியது. ஆஸ்டிரியா நாடு மட்டும் இன்னும் அதற்கு ஒத்துவரவில்லை. பிரான்ஸின் கோரிக்கைகள் அதற்கு மிகப் பெரியவையாகப் பட்டதால் ஆஸ்டிரியாவிற்கு உடன்படிக்கை செய்து கொள்ளப் பிரியமில்லை. ஆயினும், இரண்டு ஆண்டுகளிலேயே டுரேன், லென்ஸ் சண்டையில் மறுபடியும் வெற்றி கண்டார். உடனே ஆஸ்டிரியாவும் ஸ்பெயினும் சமாதானத்திற்கு வந்தன. பெரும்

போர் ஓய்ந்தது. சமாதானம் வெஸ்ட்பேலியா உடன்படிக்கையினால் ஏற்பட்டது (1648).

போரில் வெற்றி கண்டவர்கள் கோன்டே, டுரேன் பிரபுக்கள். ஆனால் வெஸ்ட்பேலியா உடன்படிக்கையை எழுதித் தந்தவர் கார்தினல் மசாரின். அவருடைய பெருமை அப்போது உயரிய நிலையை அடைந்தது. ரிச்சல்யுவின் கொள்கைகள் உருப்பெறச் செய்தவர் மசாரின். இறந்த அமைச்சரின் ஆவியே மசாரின் உருவில் வந்துவிட்டது போல் வெஸ்ட்பேலியா உடன்படிக்கை அமைந்தது. ஆயினும், இவர்களுடைய ஆட்சி முறைகள் எதேச்சாதிகார முறைகளாகவே இருந்தபடியால் மக்கள் குழப்பம் செய்தார்கள். ஒரு பெரிய ஐரோப்பியப் போரை முடித்தவர்கள் பிரஞ்சுக்காரர்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் நாட்டிலேயே பெருவெற்றி கண்ட அரசாங்கத்தை மக்கள் எதிர்த்தார்கள் என்பது வியப்புக் குரியது. ஆயினும், அரசியல் நிலை பல விதத்திலும் குழப்பத்திற்கு ஏதுவாக விருந்தது.

ரிச்சல்யு ஸ்பெயினைத் தோற்கடிக்க அந்த நாட்டில் பல குழப்பங்களைத் தூண்டினார் என்பதை முன்னர்க் குறித்தோம். போர்த்துக்கலும் காடலோனியாவும் அங்கே உரிமை கோரின. அதுவே பிரஞ்சு உள்நாட்டுக் கலகத்திற்கு வழி வகுத்தது. தவிர, ரிச்சல்யுவைப் போல் மசாரின் அவ்வளவு திறலாளரல்லர்; மக்கள் அவரிடத்தில் நம்பிக்கை இழந்தார்கள். அயல் நாட்டுச் சண்டைகளைப் பிரான்ஸ் நடத்தி வந்ததால் அதிகமான பணம் தேவைப்பட்டது. அதற்காக மசாரின் சில புது வரிகளை விதித்தார். முதலில் அயல் நாட்டுச் சண்டைகளை நாடு வெறுத்தது. பிறகு மசாரின் விதித்த வரிகள் பொதுமக்களைத் தாக்கியதால் அவர்கள் அவற்றை எதிர்த்தார்கள். எடுத்துக்காட்டாக, அவருடைய வரி பட்டணத்தின் வெளிப்புறத்தில் கட்டப்பட்ட வீடுகளின் மேல் விதிக்கப்பட்டது. பட்டணத்தின் நடுவில் பிரபுக்கள் கட்டிய மாளிகைகள் தாக்கப்படவில்லை. மசாரின் பிரபுக்களை மகிழ்வூட்ட எண்ணினார்; ஆனால் மக்கள் அவருடைய பொருளாதார அறிவின்மையைக் கண்டு வியப்பு கொண்டனர். நேப்பிள்ஸ் பட்டணத்தில் மாசானியெல்லோ (Masaniello) என்ற மீன் பிடிக்கும் செம்படவன் கூட அரசருக்கு மாறுக அப்பொழுது கிளர்ச்சி செய்துகொண்டிருந்தான் (1648). அவனைத் தொடர்ந்து பல பொதுமக்களும் கிளர்ச்சியில் சேர்ந்தார்கள். இது பிரான்ஸிலும் மக்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டியதில் வியப்பில்லை. ஆனால் அதே சமயம் பிரபுக்களும் மசாரினை எதிர்த்தார்கள். அவர்கள் பகைத்த ரிச்சல்யுவின் மரபில் வந்த

வரல்லவா மசாரின்? ஆகையால் பாரிஸ் பட்டணத்துப் பாராளு மன்றத்திலும் பெரிய எதிர்ப்புத் தென்பட்டது.

ஆகவே வெஸ்ட்பேலியா வெற்றியைக் கையில் ஏந்திக் கொண்டே மசாரின் பிரான்ஸிலே சண்டை செய்ய வேண்டிய தாயிற்று. பல தடவைகள் அவர் நாட்டிலிருந்தே ஓடி உயிர் தப்பினர். அப்பொழுது பிரான்ஸின் அரசர் சிறு பிள்ளையா யிருந்தபடியால் அரசாட்சி அவர்தம் தாயின் கையிலிருந்தது. முதலில் மசாரின் அவரைத் தம் பக்கம் சேர்த்துக்கொண்டார். ஆகையால் அரசியாரும் ஒரு முறை நாட்டைவிட்டு ஓடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மசாரின் இரு முறை பிரஞ்சு மக்களோடு சண்டை செய்தார். இந்தச் சண்டைகளுக்கு ''புரோண்டே சண்டைகள்'' என்று பெயர். 'புரோண்டே' (Fronde) என்ற சொல்லுக்குப் பிரஞ்சு மொழியில் கவண் என்று பொருள். கவண் கொண்டு கல் எறிவது போல் மக்கள் கொதித் தெழுந்தார்கள் என்ற பொருள் தரும் வண்ணம் இப் பெயர் எழுந்தது போலும். முதல் சண்டையில் உண்மையிலேயே சில அரசியல் சீர்திருத்தங்கள் செய்யப் பாராளு மன்ற உறுப்பினர் முயன்றனர். பாரிஸ் பாராளுமன்றம், ஆங்கிலேயப் பாராளுமன்றம் போன்றே அல்லது பொது மன்றம் என்று சொல்லக்கூடிய பிரஞ்சு ஸ்டேட்ஸ் - ஜெனரல் போன்றே ஏற்பட்டதல்ல. அது நீதித்துறைக் குரியது. மன்னர் பொது மன்றத்தின் அனுமதியின்றி இயற்றும் அவசரச் சட்டங்களை (Edicts) இந்தப் பார்லிமென்ட் சபை ஒப்புக்கொண்டு அவற்றைப் பதிவு செய்யவேண்டும். அதன் பிறகே மன்னர் அவற்றை நடை முறையில் கொண்டுவரக் கூடும். ஆனல் இச் சபைக்கு அவசரச் சட்டங்களை ஒதுக்கவோ, அல்லது பதிவு செய்யாமல் விடவோ அதிகாரம் உண்டு என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. இந்நிலையில் புது வரிகளுக்கென இயற்றப்பட்ட சட்டங்களைப் பார்லிமென்ட் சபை ஏற்றுக்கொள்ளவோ பதிவு செய்யவோ முடியாது என்று கூறிற்று (1648). தனது செய்கைக்கு உறுதி தேடிக்கொள்ள கணக்காய்வுக் குழு (Chamber of Accounts), சுங்க வரிக் குழு (Chamber of Customs) போன்ற வேறு சில அரசாங்க உறுப்புகளையும் தன்னோடு சேர்த்துக்கொண்டது.

தொடக்கத்தில் நிலைமை மோசமாகத் தோன்றியது. ஆங்கிலக் கால்வாய்க்கு அப்பால் ஒரு சில கல் தொலைவில் ஆங்கில மன்னர் முதலாம் சார்லஸைக் கொன்று வெற்றி கண்ட அந் நாட்டு மக்கள்சபை ஒரு எடுத்துக்காட்டாக பாரிஸ் பார்லி

மென்டாருக்குத் துலங்கியது. மசாரினின் அச்சத்தை மேலும் மிகுதிப்படுத்த, ஆங்கில பார்லிமென்ட் கேட்டது போலவே பாரிஸ் பார்லிமென்ட்டும் வரிகளைக் குறைக்க வேண்டுமென்றும், அதன் விருப்பமின்றி வரிச் சட்டங்களை நடைமுறையில் கொண்டு வரக் கூடாதென்றும், குற்றம் விசாரிக்காமல் யாரையும் சிறையில் வைக்கக்கூடாதென்றும், இன்டென்டென்ட்ஸ் என்ற மாகாண அதிகாரிகளை வேலையிலிருந்து நீக்கவேண்டு மென்றும் அறிவித்தது. ஆகவே மசாரின் போர் தொடங்கத் தீர்மானித் தார். முதலில் பார்லிமென்ட் தலைவர்களைச் சிறைப்படுத்தினர். கோன்டேயின் தலைமையில் ஒரு படையைத் திரட்டினர். பாரிஸ் பட்டணமும் உடனே சண்டைக்குத் தயாரானது. நகரில் ஆயிரக் கணக்கான வேலிகள் (Barricades) போடப்பட்டன. படைகள் போக்குவரத்துக்கு இவை தடை செய்தன. ஆகையால் வெற்றி பெறுவது எளிதாகத் தெரியவில்லை. எனவே மசாரின் பணிந்தார். வரிகளை ஆராய்ந்து குறைப்பதாக வாக்களித்தார். கலகமும் மெல்ல ஒடுங்கியது. இன்டென்டென்டுகளைத் தாக்கியதே பார்லி மென்ட் சபைக்குப் பெரு வெற்றியாகத் தோற்றியது.

ஆனால் மசாரின் இதோடு நிற்பவர் அல்லர். பிரபுக்களை ஒடுக்க வேண்டுமென்று அவர் முடிவு செய்தார். அதற்காக அவர் சண்டை ஓய்ந்ததும் கோன்டே பிரபுவையே சிறை செய்தார் (1650). கோன்டே பெரும் பிரபு; சிறந்த படைத்தலைவர்; அரச குடும்பத்திற்கே நெருங்கிய உறவினர். இவரைச் சிறை செய்தால் பிரபுக்களின் வலிமை ஒருதலையாகக் குன்றும் என்று அவர் எண்ணினர். ஆனால் அவர் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. பாரிஸ் மக்கள் மறுபடியும் பிரபுக்களோடு சேர்ந்தார்கள். போர் முன்னிலும் வலுக்கும் போலிருந்ததால் மசாரின் நாட்டை விட்டு வெளியேறி பிரினீஸ் மலைக்கப்பால் சென்று மறைந்தார். பிரான்சின் அரசு இப்போது அரசியின் கையில் இருந்தது. மசாரின் ஸ்பெயினிலிருந்தே அரசிக்கு ஆலோசனை கூறிவந்தார். டுரேன் படைத்தலைவரும் இப்போது கோன்டேயோடு சேர்ந்தார். பாரிஸ் மக்களுக்கு டெ கோன்டி (De Gondi) என்பவர் தலைமை தாங்கினர். இந்நிலையில் மசாரின் ஆலோசனைப்படி டுரேனுக்குக் கைக்கூலி வழங்கப்பட்டது. டெ கோன்டிக்கு கர்தினல் பதவி வழங்குவதாக வாக்களிக்கப்பட்டது. ஆகவே தலைவர்கள் இரு வரும் அரசியின் பக்கம் சாய்ந்தார்கள். மசாரின் திரும்பி வந்தார். பாரிஸ் பட்டணம் அவரோடு சமாதானம் செய்து கொண்டது. இனிமேல் பார்லிமென்டார் அரசியலில் தலையிடக் கூடாதென்று முடிவாயிற்று. இன்டென்டென்டுகள் தங்கள் வேலைக்குத் திரும்பினர்கள். எனவே, ரிச்சல்யுவின் அரசியல் முறை மறுபடியும் பிரான்சில் தலைதூக்கியது.

இன்னும் ஆட்சியில் ஒரு குறை இருந்ததாக மசாரினுக்குப் பட்டது. நீண்டகாலப் பகையான ஸ்பெயின் நாடு இன்னும் அடி பணியவில்லை. அங்கே உள் நாட்டுக் கலகங்களை ரிச்சல்யு தூண்டி விட்டிருந்தார். ஆனால் அவைகளால் ஸ்பெயினின் முடிவு ஏற் படாது போன்று மசாரினுக்குத் தோன்றியது. ஆகையால் அவர் இங்கிலாந்தில் அப்போது அரசு செலுத்திவந்த ஓலிவர் கிராம் வெல்லின் (Oliver Cromwell) உதவியை நாடினர். ஸ்பெயினை அடக்க வேண்டுமென்று கிராம்வெல்லுக்கு ஏற்கெனவே எண்ணம் இருந்தது. ஆகையால் அவர் லாக்ஹார்ட் (Lockhart) என்ப வரின் தலைமையின்கீழ் ஒருபடையை அனுப்பி வைத்தார்(1658). கோன்டே ஸ்பெயினின் படைக்குத் தலைமை வகித்தார். டுரேன் பிரஞ்சுப் படைக்குத் தலைமை தாங்கினர். என்னே அரசியல் விளையாட்டு! டன்கெர்க்குக்கு அருகில் டுன்ஸ் என்ற இடத்தில் இரு திறத்தார்க்கும் பெரும் போர் விளைந்தது. மசாரின் வெற்றி பெற்றார். முடிவில் 1659ஆம் ஆண்டு பிரினீஸ் சமாதானம் (Peace of the Pyrenees) நிறைவேறியது. ஆங்கிலேயர் டன்கெர்க் கைப் பெற்றார்கள்; பிரஞ்சுக்காரர் ஆர்குசூ, ரூசிலோன் என்ற இரண்டிடங்களையும் கைப்பற்றினர்கள். ஸ்பெயின் வீழ்ச்சி யுற்றது.

மசாரின் வாழ்க்கையில் அந்த நாள் சிறந்த வெற்றி கண்ட நாளாகும். பதினேராண்டுகளுக்கு முன் ஜெர்மனியை அடிபணிய வைத்தார். பிரஞ்சு மொழியும் நாகரிகமும் ஜெர்மனியில் பரவி னது போல் இனி ஸ்பெயின் நாட்டிலும் பரவும் என்று மனக் கோட்டைகள் கட்டினர் மசாரின். அதற்கு உதவியாக அப்போது பிரான்ஸின் அரசராகப் போகும் பதினான்காம் லூயி மன்னருக்கு ஸ்பெயின் நாட்டு இளவரசி மரியா தெரேசாவை (Maria Theresa) மணம் செய்விக்க ஏற்பாடு செய்தார். மணம் முடிந்தது: சீதன மாக அரசருக்குப் பெரும் பொருள் தரவேண்டு மென்று முடிவு செய்தார் மசாரின். ஆனால் அவ்வளவு பணம் ஸ்பெயின் அரச ரிடம் இல்லை. ஆகையால் லூயி ஸ்பெயின் நாட்டின் பெரும் பகுதி தமக்குச் சேரவேண்டு மென்று கோரினர். இதன் வரலாற்றை அடுத்த இயலில் கூறுவோம்.

7. பதினன்காம் லூயி மன்னர்

(1637 — 1715)

லூயியின் அரசு—உள் நாட்டு விவகாரங்கள்—அந்நிய நாட்டுத் தொடர்பு—ஸ்பெயின் வாரிசுரிமைப் போர்—கலைப்பணி

I

உலகத்தில் மிக நீண்ட காலம் மன்னராக இருந்தவர்களில் ஒருவர் பிரான்ஸ் நாட்டில் ஆட்சி செய்த பதினன்காம் லூயி மன்னர். இவர் பட்டத்திற்கு வந்தபோது இவருக்கு வயது ஐந்து (1642). ஆகவே அப்போது அரசாட்சிப் பொறுப்பை வகித்தவர் இவருடைய தாயார். இவருக்கு உதவியாக மசாரின் பணியாற்றினர் (1642-1661). இதைப் பற்றி நாம் முன் இயலில் கூறினோம்.

மசாரின் இறந்தபோது லூயி மன்னருக்கு வயது இருபத்து நான்கு. மசாரினுக்குப் பிறகும் அவரால் நியமிக்கப்பட்ட ஒருவர் அவர் பதவிக்கு வருவார் என்று பிரான்னிலும் ஐரோப்பாவிலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், லூயி அரசாட்சிப் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டதுமன்றித் தமக்குத் தலைமை ஆலோசனையாளராக ஒருவரையும் நியமிக்கப் போவதில்லை யென்றும் அறிவித்தார். அவர் ஐரோப்பாவுக்கே ஒரு புத்தரசு முறையை வகுக்கத் திட்டமிட்டார். மசாரின் ஆட்சிக் காலத்தில் நடந்த குழப்பங்களும், சிறப்பாகக் கவண் சண்டைகள் (Wars of the Fronde) இரண்டும், லூயி நேரில் கண்டவை. அவை அவர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்திருந்தன. நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டுமானால் இத்தகைய ஆலோசகர்-அரசை ஒழித்துக் கட்ட வேண்டுமென்று அவர் முடிவு செய்தார்.

இந்த முறையில் அவர் தமது ஆட்சியைத் தொடங்கினர். ஐம்பத்து நான்கு ஆண்டுகள் தாமே ஆட்சியை நடத்தித் தனிப் பேரரசுக்கு வழிகாட்டினர். ஐரோப்பாவின் வரலாற்றில் அவருக்கு ஒரு தனி இடமுண்டு; ஏனென்றால் இவருக்குப்பின் இவரைப் பின்பற்றிப் பல நாடுகளில் தனி அரசு ஏற்பட்டது. ருஷியா, பிரஷ்யா போன்ற நாடுகளில் இது சிறப்பாகச் செயல்பட்டது. லூயி சிறந்த அரசியல் நிபுணர்; பெயர் பெற்ற படைத் தலைவ

ரல்லவென்றாலும் தாமே பல சண்டைகளுக்குத் தலைவரா யிருந் தார்; பல முற்றுகைகளைத் தாமே நடத்தினார். அதுமட்டுமல்ல; ஐரோப்பிய அரசர்களில் சிறந்த கலைப்பணி யாற்றியவர் இவர். அழகிய கட்டடங்களைக் கட்டுவதிலும், கலைஞரைப் போற்றுவதி லும் லூயி சிறந்து விளங்கினார். இவருடைய நீண்ட சண்டை களால் நாடு நலிந்தது; மக்கள் வெறுப்புக் கொண்டார்கள். ஆனால்அவர்ஆட்சியின்முதற்பாகம் மிக வெற்றிகண்ட காலம்.அழ காகக் கட்டப்பட்ட அவருடைய வெர்சேய்ஸ் மாளிகை ஐரோப் பிய மன்னர்களுக் கெல்லாம் வியப்பூட்டியது. பிரான்ஸ் நாடு சிறப்புற்று விளங்கியது. மன்னர்கள் லூயியின் ஆட்சியை மாதிரி ஆட்சியாகக் கொண்டார்கள். மக்கள் சபை ஆட்சி இங்கிலாந்தில் அப்பொழுதுதான் வெற்றி கண்டிருந்தது. ஆயினும், லூயியின் ஆட்சியைக் கண்டவர்கள் இனி மக்கள் சபை ஆட்சிக்கே இட மில்லை என்றும் பேசிக் கொண்டார்கள்.

நல்ல சூழ்நிலையிலே ஐரோப்பாவின் புகழ்பெற்ற லூயியின் அரசு எழுந்தது (1661). ஆனால் அது முடியும்போது சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டது. இது எங்ஙனம் ஏற்பட்டது என்பதைக் கூறுவதே இவ்வியலின் நோக்கம். சிறந்த திறமைசாலி என்றாலும் பேராசை இவரைக் கவிந்து கொண்டது. நான்டெஸ் ஆணைப் படி கொடுக்கப்பட்ட மத உரிமையைத் தர மறுத்ததுமன்றி அப் போது பிரான்ஸ் நாட்டின் தூண்போல் விளங்கிய ஹியுக்நோக் களை இலட்சக் கணக்கில் நாட்டைவிட்டுப் போகும்படியும் செய் தார். தொழில் வளர்ச்சி, வாணிகம், கப்பற்படை அமைத்தல் என்ற பெரு முயற்சிகளில் ஈடுபட்டார். ஆனால் அவற்றைத் தகுந்தபடி கண்காணிக்காமற் போனதால் அவை முடிவில் நாட் டிற்குத் துன்பம் விளைத்தன. இவற்றை அமைக்க மக்கள் வரியா கப் பெருந்தொகை கொடுக்க வேண்டியதாயிற்று. ஆனால் இவற் றிற்கு ஏற்ப அவர்கள் போதிய பயன் பெறவில்லை.

II

முதலில் லூயி மன்னர் காலத்திய உள்நாட்டு நிகழ்ச்சிகளை நோக்குவோம். இக் காலத்திய அமைச்சரவை போன்ற ஒன்றை லூயி நிறுவினார். இதற்கு வேண்டுமென்றே பிரபுக்களை ஒழித்துப் பொதுமக்களையே தேர்ந்தெடுத்தார். பிரபுக்கள் எப்படிப்பட்ட வர்கள், எவ்வளவு தன்னலம் கொண்டவர்கள் என்பதை மன்னர் நன்கறிந்திருந்தார். அது மட்டுமல்ல; அவர்கள் பெருங்குடி மக்க ளானதால் அரசருடைய நிருவாகத்தில் நேரடியாகத் தலையிட முற்படுவர் என்பதும் அவருக்குத் தெரியும். ''நான் என்னுடைய

அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்த முறையிலேயே என்னுடைய ஆட்சி முறையில் பிரபுக்களைச் சேர்த்துக்கொள்ள நான் விழைய வில்லை என்பதை முதன்முதலாக மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்'' என்று அவரே எழுதினர். மற் றொரு சமயம் ''நானே நாடு'' (L'etat cest moi) என்று கூறி உல கத்தையே திகைக்க வைத்தார். ஆகையால் அவர் தேர்ந்தெடுத்த அமைச்சர்கள் எளிய குடியினரே. ஆனல் நல்ல காலமாக அவர் கள் சிறந்த, திறமை வாய்ந்த அமைச்சர்களாக அமைந்தார்கள். இவர்களில் லூவோ (Louvois), போக்குவ (Fouquet), கோல்பெர் (Colbert) என்ற மூவர் மிகச் சிறந்தவர்கள். இவர்கள் முறையே அயல்நாட்டுத் தொடர்பு, போர், நிதி என்ற துறைகளி லமைந்தனர். இவர்கள் வரலாற்றில் பெருமை பெற்றவர்கள்.

இவர்களில் லூவோ மன்னரின் படைகளைத் திரட்டி அவை களுக்கு வேண்டுவன தந்து போருக்குத் தயாராய் வைத்திருப்பதில் சிறந்து விளங்கினர். பிரஞ்சு நாட்டு மன்னர்களில் அதிகமான போர்களில் கலந்து கொண்டவர் லூயி. அவருக்குத் திறன்மிக்க பெரும்படை தேவை. அதை நிறைவேற்றியவர் லூவோ. அவர் காலத்தில் மன்னருடைய காலாட் படைக்குத் தகுதியான படை ஐரோப்பாவிலேயே இல்லையென்றல், இவர்தம் பெருமை எத் தகைய தென்பது நாம் கூறுமலே விளங்கும். இவரோடு சேர்ந்து உழைத்தவர்களில் நாம் சிறப்போடு குறிக்கத் தகுந்த மூவர் கோன்டே(Conde), டுரேன் (Turenne), வோபான்(Vauban), இவர் களில் முதல் இருவரைப்பற்றி நாம் முன்னர்க் கூறினேம். பதினன் காம் லூயி அரசாட்சியை ஏற்றபோது இவர்கள் புகழ் உயர் நிலையை அடைந்திருந்தது. அதற்குத் தக்கவாறு இவர்கள் மன்ன ருக்குச் சிறந்த பக்கத் துணையாக இருந்தார்கள். வோபான் சிறந்த பொறியியல் நிபுணர். இவர் கட்டின பல கோட்டைகள் சிறப்பாகப் பிரான்ஸின் வட எல்லையில் சிறந்த அரண்களாக விளங்கின.

கோல்பெர் நிதிப் பொறுப்பை ஏற்றவர். ஐரோப்பாவில் இவருக்கு முன்னும் பின்னும் இவரைப் போன்று சிறந்துவிளங்கிய பொருளாதார நிபுணர் இலர் என்று நாம் ஆதாரத்தோடு கூற லாம். கோல்பெரின் காலத்தில் இக்காலம் போல் பொருளா தாரம் விரிவடையவில்லை. மக்களில் பலர் அதில் கருத்தூன்றவு மில்லை. ஆகையால் கோல்பெரின் நிதிப் பொறுப்பைப் பொறுத்த முறையில் சிற்சில குறைகள் ஏற்பட்டிருக்கக் கூடும். இவரிடம் இத்தகைய குறைகள் இருந்தனவே என்பதை நாம் இப் பொழுது ஆராய வேண்டியதில்லை. இவர் எவ்வளவு உயர்ந்த

அளவில் நாட்டின் நலனுக்காகத் திட்டமிட்டிருந்தா ரென்பதே நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

இவர் புது வரிகள் விதிக்கவில்லை. வரிகள் சரியான முறையில் வாங்கப்படாத காரணத்தாலேயே அரசாங்கத்திற்கு வருவாய் குறைகிறது என்பதையும், அவற்றை ஒழுங்காக வாங்கினால் போதிய பண வசதி ஏற்படு மென்பதையும் இவர் நன்கு உணர்ந்தார். ஆகையால் வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களைச் சரியான முறையில் கண்காணிக்கவும் அவர்களில் குற்றம் செய்தவர்களை ஒறுக்கவும் ஏற்பாடு செய்தார். இந்த ஏற்பாடு நல்ல பயனளித்தது. இது கோல்பெரின் திறமைக்கு முதல் எடுத்துக் காட்டாய் அமைந்தது.

பிறகு இவர் புது வருவாய்க்கு வழி வகுத்தார். பிரான்ஸ் நாட்டைத் தொழில் வளமிக்க நாடு (Industrial State) ஆக்க வேண்டுமென்றெண்ணினார். தொழில் சிறந்தாற் செல்வம் சிறக்கும்; நாட்டுக்கும் மக்களுக்கும் அது சிறந்த வருவாயளிக்கும்—என்ற உண்மைகளை யெல்லாம் கோல்பெர் நன்குணர்ந்து செயலாற்றினார். இப்படிச் செய்ததில் பிரான்ஸுக்கு மட்டுமல்லாமல் ஐரோப்பிய நாடுகளுக்கே இவர் புது வழி வகுத்தார். அப்பொழுது தொழிற் புரட்சி (Industrial Revolution) இன்னும் ஏற்படவில்லை. விஞ்ஞான முறையில் செய்யப்பட்ட இயந்திரங்கள் பிற்காலத்தில் ஏற்பட்டவை, இந்தச் சூழ்நிலையிலும் நெசவு, கண்ணுடித் தொழில் போன்ற பல தொழில்களில் பிரான்ஸ் நாட்டை ஈடுபடுத்தினார். இதற்காக இங்கிலாந்து, ஹாலந்து போன்ற பிற நாடுகளிலிருந்து கைதேர்ந்த தொழிலாளர்களைத் தமது நாட்டிற் குடியேற்றினார். பிரான்ஸில் செய்யப்பட்ட பொருட்கள் நல்ல விலைக்கு விற்பதற்காக வெளிநாட்டு இறக்குமதிகளுக்கு வரி விதித்தார். இதற்குப் பிற்காலத்தில் 'டேரிப்' (Tariff) என்ற பெயர் வழங்கியது. இதுபுதுத்தொழில்களைப் பாதுகாப்பதோடுஅரசாங்க வருவாய்க்கும் ஆக்கமளிக்கு மென்று கோல்பெர் திட்டமிட்டார். அவருடைய திட்டத்தில் குறையில்லை; ஆனால் தொழில்கள் பிரான்ஸில் ஆக்கம் பெறவில்லை. இயற்கையில் அது பயிர்த் தொழில் நாடு (agricultural country); அந்த இயற்கையை மாற்றியமைக்க ஒரு பெயர்பெற்ற அமைச்சராலும் முடியவில்லை. ஆயினும், விடாமுயற்சியோடு சுங்க வரிகளை ஏற்றினார். காலப் போக்கில் பிற ஐரோப்பிய நாடுகளும் பிரான்ஸும் கூட இவற்றால் மிகவும் தாக்கப்பட்டன. கோல்பெரின் இந்தப் புது முறைக்கு 'கோல்பெரிஸம்' (Colbertism) என்ற பெயரும் ஏற்பட்டது. ஆனால் பிரான்ஸில் தொழில் வளர்ச்சி சிறக்கவில்லை.

அடுத்தபடியாக கோல்பெர் நாட்டின் வாணிக நிலையை உயர்த்த எண்ணினார். அப்போது ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் ஐரோப்பிய வாணிகம் முழுவதையும் தங்கள் கையில் வைத்துக் கொண்டிருந்தனர்; ஏனென்றால் வாணிகப் பொருள்களை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு ஏற்றிச் செல்வதற்கு இவர்களுடைய கப்பல்கள்தாம் வேலை செய்தன. ஆகவே ஐரோப்பியரின் வாணிகம் இவர்கள் கையில் இருந்த தென்பதில் வியப்பில்லை. இதனால் இவர்களுக்கும் இவர்களுடைய அரசாங்கத்திற்கும் சிறந்த வருவாய் கிடைத்தது. இதைக் கண்கூடாகக் கண்ட பின்னும் பிரான்ஸின் நலத்திற்காக ஒரு நல்ல வாணிகத் திட்டத்தை அவரால் வகுக்காமல் இருக்கக் கூடவில்லை. ஆங்கிலேயரிடமும் டச்சுக்காரரிடமும் இருக்கும் கப்பல் எண்ணிக்கையின் அளவுக்குப் பிரான்ஸ் நாட்டிலும் கப்பல்களைச் செய்துகொண்டால் தம் செல்வாக்கின் காரணமாய் ஐரோப்பிய வாணிகம் பிரஞ்சுக்காரர் கைக்கு வரும்படி செய்துவிடலாம் என்ற முடிவுக்கு வந்தார். உடனே கப்பல் கட்டும் தொழிலில் மூழ்ந்தார். பால்டிக் கடல், மத்தியதரைக் கடல், இந்தியக் கடல்கள் ஆகியவற்றின் வழியே செல்லும் வாணிகத்தைக் கைப்பற்றப் பல பிரஞ்சு வாணிகக் கம்பெனிகளைத் தோற்றுவித்தார். பதினேழாம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டின் பெருமைக்குக் காரணம் அந்நாடு அமெரிக்காவோடு வைத்துக் கொண்ட தொடர்பு ஆகும். இதைக் கோல்பெர் நன்கறிந்தவர். ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் அப்போது அமெரிக்க வாணிகம் நடைபெற உதவிவந்தார்கள். இதையும் பிரான்ஸ் நாடு கைப்பற்ற வேண்டுமென்று கோல்பெர் நினைத்தார். பிரஞ்சு வாணிகம் கடல்களிலே திறம்பட நடக்கக் கோல்பெர் ஒரு கப்பல் படையையே நிர்மாணித்தார். இதனால் ஒரு சமயம் ஐரோப்பிய வாணிகம் முழுவதும் பிரஞ்சுக்காரரிடம் போய்ச் சேர்ந்துவிடுமோ என்ற அச்சம் ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றையும் தாக்கியது. ஆயினும் உண்மையில் அவ்வாறு நடக்கவில்லை. அமைச்சருக்கிருந்த ஊக்கம் மக்களிடம் காணப்படவில்லை. அதைவிட ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் காட்டிய ஊக்கம் கோல்பெரின் திட்டங்களை யெல்லாம் தகர்த்தெறிந்தது, ஐரோப்பிய வாணிகம் முழுவதையும் ஏற்று நடத்த இருபதினாயிரம் கப்பல்கள் போதுமென்று கோல்பெர் கணக்கிட்டது நடைமுறையில் தவறாயிற்று. ஏனென்றால் வாணிகம் எப்பொழுதும் ஒரு வரம்புக்குள் நிற்பதன்று; அது காலத்திற்கேற்ப மாறக்கூடிய தென்பதால், கோல்பெரின் திட்டம் பயன் பெறாமல் போயிற்று. தவிர, அப்பொழுது, பிரான்ஸில் வழக்கத்திலிருந்த சுங்க வரிகள் மிக அதிகமானவை. வணிகர்களுக்கு அவை தாண்ட முடியாத காடுகள் போல் காட்சி அளித்தன. கோல்பெரின் பொருளாதாரத் திட்டங்கள் வெற்றிகரமாக

முற்றுப்பெற வழியில்லை. இந்நிலையில் லூயியின் நீண்ட போர் கள் இவற்றிற்குப் பெரும் இடையூறாக வந்தன.

சமயத்தைப் பொறுத்த வரையில் லூயி முதலில் போப்பை எதிர்த்தார். ஆனால் விரைவில் கத்தோலிக்கக் கொள்கைகளை எதிர்த்தவர்களை ஒழிப்பதையே நோக்கமாகக்கொண்டார். 1682 ஆம் ஆண்டு ''கேலிகன் சுதந்திரம்'' (Gallican Liberties) என்ற ஓரறிக்கையை லூயி விடுத்தார். இதன்படி சமயத்தைப் பொறுத்த வரையில் போப்புக்குப் பிரான்ஸில் உரிமையும், அதி காரமும் உண்டென்றும், ஆனால் அரசரைப் பதவியிலிருந்து விலக் கவோ, குடிகளை அரசருக்குக்கீழ்ப்படியக்கூடாதென்றுஆணை பிறப் பிக்கவோ அவருக்கு அதிகாரமில்லை யென்றும், சமயத்தில் போப் பின் அதிகாரமும் அவருடைய ஆலோசனைச் சபையின் முடிவிற் குக் கட்டுப்பட்டது என்றும் இந்த அறிக்கையில் குறித்தார். ஏதோ ஒரு புதுச் செயலில் இறங்குவது போல் அரசர் அப்போது காணப்பட்டார். ஆயினும், உண்மையில் மறுப்பாளரை எதிர்த் துப் போராடுவதிலேயே அவர் காலம் கழிந்தது.

லூயியின் ஆட்சியில் ஜென்செனீயர் என்ற ஒரு புது மறுப்பா ளர் கூட்ட மெழுந்தது. கத்தோலிக்கக் கொள்கைகளில் எதை யும் இவர்கள் எதிர்க்கவில்லை. கத்தோலிக்க வாழ்க்கையில் அதிகக் கட்டுப்பாடும், தூய்மையும் விளங்கவேண்டு மென்பதே இவர்கள் கோட்பாடு. இதற்குத் தலைவர் இப்ரஸ் பட்டணத்து (Ypres) மேற்றிராணியாரா யிருந்த ஜென்சென் (Jansen). ஆகை யால், அவரைப் பின்பற்றியவர்கள் ஜென்செனீயர் (Jansenists) என்றழைக்கப் பட்டார்கள். இவர்களை வளரவிட்டிருந்தால், சமயமும் பிரஞ்சு சமுதாயமும் நன்மை அடைந்திருக்கும். அரசு இன்னும் அதிகமாக வலிமை அடைந்திருக்கும். ஆனால் போப் புக்கு இவர்கள் போக்குப் பிடிக்கவில்லை; இவர்களை ஒடுக்க ஆணை கள் விடுத்தார். அரசரும் அவரோடு சேர்ந்து ஜென்செனீயம் பிரான்ஸில் தலைதூக்காமல் செய்தார்.

பிறகு ஹியுக்நோக்கள் மீது மன்னர் தமது பார்வையைச் செலுத்தினர். உண்மையில் அவர்கள் தங்கள் நடத்தையைப் பெரிதும் மாற்றி அமைத்திருந்தார்கள். நான்காம் ஹென்றி மன்னர் காலத்திலோ, அல்லது ரிச்சல்யு காலத்திலோ இருந்தது போல் இப்போது அவர்கள் அரசியல் விவகாரங்களில் தலையிட வில்லை. அதற்குப் பதிலாகத் தொழில் துறையிலும், வாணிகத் துறையிலும் இவர்கள் சிறந்த ஊக்கம் காட்டினர்கள். பிரான் ஸின் வளர்ச்சிக்கும், கோல்பெரின் திட்டங்கள் கைகூடவும் இவர் களைப் போன்றவர்கள் வெள்ளம்போற் பெருக வேண்டும் என்ற

நிலையில், லூயி அவர்களைத் தாக்கினார். புரோடஸ்டான்டுகள் பொதுவில் எதிர்ப்பாளர்கள்; அரசியற் பகைவர்கள். ஆகையால் அவர்களை அழிக்கவேண்டு மென்ற குறுகிய எண்ணத்தைக் கைக்கொண்டார். அவர்கள் நடத்தையைக் கண்காணித்தார்; அவர்களுடைய உரிமைகளைக் குறைத்தார்; தவறு இருப்பதாகத் தெரிந்தால் அவர்கள் சொத்தைப் பறிமுதல் செய்தார். சில சமயங்களில் அவர்கள் குழந்தைகளையும் அவர்களிடமிருந்து பிரித்தார். அவர்களுடைய கோயில்களை இடித்தார். 1685ஆம் ஆண்டு நான்டஸ் ஆணை புறக்கணிக்கப்பட்டது. ஹியுக்நோக்கள் பிரான்ஸை விட்டு ஹாலந்து, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் குடியேறினர்கள். இவ்விதமாய் பிரான்ஸ் பல்லாயிரம் மக்களை இழந்தது. அவர்களுடைய கலை உணர்ச்சியையும், தொழில் நுட்பத்தையும் வேறு நாட்டினர் பயன்படுத்திக் கொண்டனர். ஜெர்மனியில் எலக்டர் பதவி வகித்த பிரடிரிக் வில்லியம் அவர்களுக்கு நிலமும் வீடுகளும் பொன்னில் பட்டணத்திற்கு அண்மையில் அளித்தார். அப் பட்டணத்தின் பெருமையும் அதிலிருந்து வளரத் தொடங்கியது.

III

லூயி மன்னர் ஸ்பெயின் நாட்டு இளவரசியை மணந்து கொண்டார் என்பதை முன் இயலில் கூறினேம். பிரஞ்சு மன்னர் அப்போது கோரிய பெருந்தொகையை ஸ்பெயின் மன்னரால் கொடுக்கக் கூடவில்லை. அத்தகைய பெரும் பொருள் கிடைத்தால் இளவரசி மனைவி ஆனது பற்றி ஸ்பெயின் நாட்டின் அரசுக்குத் தாம் எத்தகைய வாரிசும் கோருவதில்லை என்பதைத் தெரிவித்திருந்தார். ஆனால் இப்போது லூயி கேட்டபடி ஸ்பெயின் பொருள் தரும் நிலைமையில் இல்லை. இதையே காரணமாகக் காட்டி ஸ்பெயின் மன்னர் இறந்தவுடன், அவருக்குரியதாயிருந்த நெதர்லாந்தின் ஒருபகுதியைத் தம் மனைவியாரின் பாகமாக லூயி கோரினர் (1665). ஸ்பெயின் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. இவ்விதமாய் லூயியின் முதற் சண்டை தொடங்கியது.

ஆற்றல் மிக்க பிரான்ஸ் நாட்டுடன் ஸ்பெயின் எதிர்த்து வெற்றி பெறவியலா தென்பதை அறிந்த இங்கிலாந்து, ஹாலந்து, ஸ்வீடன் நாடுகள் ஸ்பெயினுக்கு உதவ முன் வந்தன. அப்போது லூயி முன்னேக்குடன் சமாதானம் செய்துகொண்டார். பிரான்சின் வட எல்லையில் அதற்குள் அவர் சிலஇடங்களைக் கைப்பற்றியிருந்தார். ஆயினும், அவற்றையும் அவர் திருப்பி ஸ்பெயினுக்கே தர உடன்பட்டார் (1668).

இதற்குப் பின் நான்காண்டுகள் பிரான்ஸில் அமைதி நீடித்தது. ஆனால் மறுபடியும் சண்டை செய்வதற்காகவே லூயி சமாதானம் கோரியதுபோல் இருந்தது. மன்னர் உண்மையாகவே நாட்டின் நலத்தைக்கருதிச் சமாதானத்தை வரவேற்றிருக்கலாம். ஆயினும் கோல்பெர் ஹாலந்தை முறியடிக்க வேண்டுமென்று திட்டமிட்டார். கடந்த போரில் இங்கிலாந்தையும் ஸ்வீடன் நாட்டையும் பிரான்ஸுக்கு எதிராக ஹாலந்து ஒன்று சேர்த்தது என்பதை கோல்பெர் மறக்கவில்லை. அதுமட்டுமல்ல; மதத்தில் டச்சுக்காரரும் பிரஞ்சுக்காரரும் வெவ்வேறு பிரிவினர். அரசியலில் இருநாட்டாரும் வெவ்வேறு கொள்கைகள் கொண்டவர்கள். டச்சுக்காரர் தீவிர கொள்கை கொண்ட மறுப்பாளர்கள்; பிரஞ்சுக்காரரில் பெரும்பாலோர் கத்தோலிக்கர். டச்சுக்காரர் பிரதிநிதித்துவ அரசியல் கருத்துக் கொண்டவர்கள்; பிரஞ்சு அரசாங்கம் இதை வன்மையோடு எதிர்த்தது. பிரான்ஸிலிருந்து புறம்பாக்கப் பட்டவர்கள் ஹாலந்தில் வரவேற்கப் பட்டார்கள். பிரஞ்சு மன்னரையும் அரசாங்கத்தையும் தாக்கி எழுதப்பட்ட நூல்கள் ஹாலந்திலிருந்து வெளியாயின; கடைசியாகப் பிரான்ஸின் வாணிக வளர்ச்சிக்குப் பெரு முட்டுக்கட்டையாக இருந்தோர் டச்சுக்காரர். ஆகையால் அவர்களோடு சண்டை செய்தே ஆகவேண்டும் என்ற நிலைமை விரைவில் ஏற்பட்டதில் வியப்பில்லை.

முன்னைய சண்டையில் திடீரென்று ஏற்பட்ட கூட்டணி இனி ஏற்படாமல் லூயி முதலில் பார்த்துக் கொண்டார். இது அவர் அரசியல் அறிவைச் சுட்டிக் காட்டுகிறது. இதற்காக முதலில் ஆங்கிலேய மன்னர் இரண்டாம் சார்லஸோடு ஓர் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டார். இது டோவர் பட்டணத்தில் நிகழ்ந்தது. ஆகையால் இதை ''டோவர் இரகசிய உடன்படிக்கை'' (Secret Treaty of Dover) என்று கூறுவர். அதன்படி அவசியம் ஏற்படும்போது இங்கிலாந்து, லூயியோடு சேர்ந்து கொள்ள வேண்டியதென்று முடிவாயிற்று. ஸ்வீடன் மன்னருக்கு வேண்டிய பொருள் கொடுத்து அவரையும் லூயி தம்மோடு சேர்த்துக்கொண்டார்.

1672ஆம் ஆண்டு இரு திறத்தாருக்கு மிடையே சண்டை தொடங்கியது. பிரஞ்சுப் படை ரைன் நதியைக் கடந்து, பல பட்டணங்களையும் கோட்டைகளையும் கைப்பற்றியது. இன்னும் சில தினங்களில் ஹாலந்தின் சிறந்த பட்டணமாகிய ஆம்ஸ்டெர்டாம் பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமாகி யிருக்கும். ஆனால் அதற்குள் எதிர்பாராதபடி ஆரஞ்சு வில்லியம் (William of Orange) ஹாலந்தின் தலைவரானார். முற்காலத்திய சைலன்ட் வில்லியத்

தின் பேரன் ஆரஞ்சு வில்லியம். தம் பாட்டனாரைப் போலவே இவரும் நாட்டின் நன்மைக்காக உழைத்தார். ஆனால் இவராலும் லூயியைத் தோற்கடிக்க முடியவில்லை. டச்சுக்காரர்கள் முதலில் ஏரிகளைத் திறந்து எதிரிகளை மூழ்கடிக்கச் செய்தார்கள். இதை விடப் பெரிய சம்பவம் அவர்கள் ஸ்பெயின் நாட்டை ஹாலந்து நாட்டோடு சேர்த்ததுதான். வழக்கமாகப் பிரான்ஸின் நண்பராயிருந்த பிரேண்டன்பர்க் பிரபுவும் இப்போது ஹாலந்தோடு சேர்ந்து கொண்டார்.

இவ்வளவு எதிர்பாராத நிகழ்ச்சிகள் நேர்ந்தும் பிரான்ஸை வெல்ல முடியவில்லை. 1678இல் இரு தரப்பாரும் சமாதானம் செய்துகொண்டனர். இதற்கு நிமகுவன் சமாதானம் (Peace of Nimaguan) என்று பெயர். பிரான்ஸின் வடஎல்லையில் இன்னும் சில இடங்கள் பிரான்ஸிற்குச் சொந்தமாயின. கிழக்கெல்லையில் பிரான்ஷ்-கோம்ட் (Franche-Comte) மாவட்டத்தை ஸ்பெயின் பிரான்ஸிற்குக் கொடுத்துவிட்டது. இந்த வெற்றி பிரான்ஸின் பெருமையை உயர்த்தியது. இதை நன்கு பயன்படுத்திக் கொண்ட லூயி ஆல்சேஸ், ஸ்டாரஸ்பர்க், லக்சம்பர்க், கசால் என்ற இடங்களை யெல்லாம் ஒரு நடுநிலைமைக் குழுவின் மூலமாகப் பெற்றுக் கொண்டார். வெஸ்ட்பேலியா உடன்படிக்கைப்படி ஆல்சேஸ்-லொரேன் பகுதிகள் அவற்றிற்குச் சேர்ந்த உரிமைகளோடு பிரான்ஸிற்குச் சொந்தமாக வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டது. ஆனால் இவ்வுரிமைகள் எவை என்பதைப்பற்றி ஐரோப்பிய அரசுகளிடையே ஒருமைப்பாடு ஏற்படவில்லை. தமக்கு உயர்ந்த செல்வாக்கு கிடைத்த காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு லூயி ஒரு குழுவை நிறுவி அதன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி இப்போது கேட்டுக்கொண்டார்; அதன்படி மேற்குறித்த இடங்கள் பிரான்ஸுக்குச் சொந்தமாயின. இதைக் கண்டு மனம் பொறுத ஜெர்மானியர் ரேடிஸ்போன் என்னுமிடத்தில் கூடி மேற்சொன்ன குழுவின் முடிவை ஆராய முற்பட்டனர். இதைக் கண்ட லூயி தாம் குழுவின் முடிவை நடைமுறையில் கொண்டுவரப் போவதுமன்றிச் சென்ற இருப தாண்டுகளாகத் தாம் ஜெர்மானியரிட மிருந்து கைப்பற்றிய இடங்கள் யாவும் தமக்குத் தரப்பட வேண்டுமென்றும் அறிக்கை அனுப்பினர். ரேடிஸ்போன் கூட்டம் மனம் குன்றியது. ஆனால் லூயியை எதிர்க்கவும் முடியவில்லை. ஆகையால் லூயியின் அறிக்கையை ஒத்துக்கொள்வதைத் தவிர ஜெர்மானியருக்கு வேறு வழியில்லை(1684). லூயியின் பெருமை இப்பொழுது உச்ச நிலையை அடைந்தது.

ஆனால் அப்பொழுதே அவர் வீழ்ச்சியும் தொடங்கியது. இதை முன்கூட்டியே அறிவிப்பதுபோல் 1683ஆம் ஆண்டு பிரான்ஸோடு நெடுங்கால நட்புக் கொண்டிருந்த துருக்கியர் பெருந் தோல்வி அடைந்தனர். இருநூறுண்டுகளாக ஐரோப்பிய நாடுகளுக்குப் பேரச்சத்தை அளித்துவந்த துருக்கியர் தலையெடுக்க முடியாவண்ணம் இப்போது தோற்றனர். இந்தச் சண்டையில் போலண்ட் மன்னர் சோபியெஸ்கி (Sobieski) சிறந்த தொண்டாற்றினர். அவர் அடைந்த வெற்றி ஐரோப்பா முழுவதற்கும் விடுதலை தந்ததென்று கூறவேண்டும். ஆனால் பிரான்ஸுக்கு அது இடையூறாய் முடிந்தது. நீண்ட நாள் நட்புக் கொண்டிருந்த ஆற்றல் மிக்க நாடு வீழ்ச்சியுற்றதால் பிரான்ஸின் வலியும் குன்றியது.

இங்கிலாந்தில் ஆண்ட இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் லூயியின் இரண்டாவது நண்பர். அவர் 1688ஆம் ஆண்டு இங்கிலாந்தை விட்டே வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அங்கு அப்போது அரசராகப் பட்டம் சூட்டப்பட்டவர் லூயியின் விரோதியான ஆரஞ்சு வில்லியம். அவர் மூன்றும் வில்லியம் என்ற பெயர் பூண்டு இங்கிலாந்தின் அரசரானார். அவ்வமயம் கொலோன் பட்டணத்து அதிமேற்றிராணியார் (Archbishop) பதவி காலியானது. அது நெதர்லாந்து செல்லும் வழியில் இருந்தபடியால் தமக்கு உகந்த ஒருவரை அங்கு அதிமேற்றிராணிப் பதவிக்கு உயர்த்தினால் தமக்கு நலமாயிருக்குமென்று லூயி கருதினார். ஆனால் அது சுலபமாக முடியக் கூடியதாகத் தெரியவில்லை. லூயி இதற்காகச் சண்டை செய்யவும் தயாரானார்.

இந்த நிலையில் மூன்றும் வில்லியம் லூயிக்கு எதிராகப் படை திரட்டினர். இங்கிலாந்தும் ஹாலந்தும் ஒன்று சேர்ந்தன. பிறகு ஸ்பெயின் இவர்களோடு இணைந்தது. பிராண்டன்பர்க், டென்மார்க், ஸ்வீடன் என்ற நாடுகளும் ஒவ்வொன்றாக பிரான்ஸுக்கு விரோதமாகக் கிளம்பி மூன்றும் வில்லியம் ஏற்படுத்திய கூட்டணியில் சேர்ந்தன. உண்மையாகவே லூயி மன்னருக்கு அது போதாத காலம். அவருக்கு எதிராக ஏற்பட்ட கூட்டணிக்கு வெகு பொருத்தமாக ''பெருங் கூட்டு'' அல்லது ''கிராண்ட் அலயன்ஸ்'' என்ற பெயர் சூட்டப்பட்டது. லூயி மட்டும் நினைத்திருந்தால் மூன்றும் வில்லியம் இங்கிலாந்தினுள் நுழையாமல் செய்திருக்கலாம். ஆனால் நலமேதுமின்றிக் கொலோன் பட்டணத்து விவகாரத்தில் கலந்து கொண்டு தமது படையை அங்கே அனுப்பி வைத்தார். ஆகையால் எதிர்ப்பில்லாமல்

வில்லியம் இங்கிலாந்தினுள் நுழைய முடிந்தது; அங்கு அரசராகப் பட்டம் சூடவும் முடிந்தது. இன்னும் லூயி இழைத்த தவற்றைத் திருத்திக்கொள்ளக் காலமிருந்தது. அதற்கு ஒரே வழி உறுதியுடன் கூட்டணியாளரோடு சண்டை செய்வதே. ஐந்து நாடுகள் லூயிக்கு எதிராகச் சேர்ந்திருந்தாலும் அவருடைய வலிமைக்கு இது ஒரு பொருட்டல்ல. உண்மையில் அவரை எதிர்த்து நின்றவர்கள் ஆங்கிலேயரும் டச்சுக்காரருமே. இவர்களுடைய மக்கள் தொகையைப் பூரணமாக எடுத்துக் கொண்டாலும் அது அப்பொழுது 80 இலட்சத்திற்கு மேலில்லை. பிரான்ஸின் மக்கள் தொகை மட்டும் அப்பொழுது ஏறக்குறைய 2 கோடி அளவுக்கிருந்தது, பிரஞ்சுப் படைகளும் பல இடங்களில் வெற்றி கண்டன. நெதர்லாந்து நாட்டிலேயே லூயியின் படைத்தலைவர் லக்சம்பர்க் (Luxemburg) வில்லியத்தைப் பல இடங்களில் வென்றார். நைஸ், சேவாய், பேலடினேட் பகுதிகள் எல்லாம் பேரளவுக்குப் பிரான்ஸின் கைகளில் வந்தன. இருந்தாலும் லூயி இவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை.

இந்தச் சண்டையை ரிஸ்விக் உடன்படிக்கை (Treaty of Ryswick) முடிவு செய்தது (1697), இதன்படி, லூயி தம்வெற்றிகளையெல்லாம் விட்டுக் கொடுத்தார். தாம் பிடித்த இடங்களை யாரிடமிருந்து பிடித்தாரோ அவர்களுக்கே திருப்பித் தர ஒப்பினர். ஸ்பானிய நெதர்லாந்துகளின் எல்லைப் பட்டணங்களை டச்சுக்காரர் உறுதிப்படுத்திக் கொள்ளவும், அவற்றின் படை வலியைப் பெருக்கிக் கொள்ளவும் லூயி ஒப்புக்கொண்டார். இங்கிலாந்தில் மூன்றாம் வில்லியத்தை அரசராக ஏற்றுக்கொண்டார். லூயிக்குக் கிடைத்தது சமாதானம். பிஷர் கூறுவது போல் லூயி வெற்றியைக் கொடுத்துத் தோல்வியை விலைக்கு வாங்கினர். இதற்கு முக்கிய காரணம் ஸ்பெயின் நாட்டின் அரசு அப்போது முடியும் நிலையில் இருந்தது. அதைத் தம் மகனுக்காக்க வேண்டும் என்று லூயி எண்ணினர். அதற்குப் பெரு முயற்சி வேண்டும் என்றும், கூடியவரை மற்ற ஐரோப்பிய நாடுகளோடு ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்றும் லூயி நினைத்தார். அதற்காகவே அவர் ரிஸ்விக் உடன்படிக்கைக்கு ஒப்பினர். ஆனால் ஸ்பெயின் அரசைப் பற்றி எழுந்த போரில் அவர் நினைத்தபடி நடக்கவில்லை.

IV

1665ஆம் ஆண்டிலிருந்து ஸ்பெயின் நாட்டில் அரசு செலுத்தியவர் இரண்டாம் சார்லஸ் (Charles II) என்பவர்.

அவருக்குக் குழந்தை இல்லை. வரவர அவர் உடல் நலமும் குன்றியது. முப்பத்திரண்டாண்டுகளுக்குப் பிறகு இவர் படுத்த படுக்கையானர். இவருக்குப் பின் யார் பட்டத்திற்கு வருவ தென்பதைப்பற்றி அப்பொழுது ஐரோப்பா முழுவதிலும் பெருஞ் சிக்கலாக விருந்தது. ஸ்பெயின் அரசருக்குரிய ஆட்சியிடம் மிகப் பெரிது. அவர் ஸ்பெயின் நாடு மட்டுமல்லாமல் மிலான், நேப்பிள்ஸ், சிசிலி, சார்டினியா, பாலியாரிக் தீவுகள், ஸ்பானிய நெதர்லாந்து பகுதி, பிலிப்பைன்ஸ் தீவுகள், கனேரித் தீவுகள், குயூபா, மெக்சிக்கோ, புளாரிடா (Florida), காலி போர்னியா, பனமா, தென் அமெரிக்காவில் பெரும் பகுதி என்ற இவை யாவற்றிற்கும் மன்னராயிருந்தார். இவற்றை யார் ஆளுவ தானாலும் அவர் ஐரோப்பிய அரசியலில் சிறந்த இடம்பெறலாம், ஏற்கெனவே வலிமை கொண்டவர்கள் சார்லஸுக்கு வாரிசானால் ஐரோப்பிய வல்லரசு சமநிலை (Balance of power) கலக்கமுறும். இத்தகைய காரணங்களால் ஸ்பானிய அரசுக்கு வாரிசை ஏற் படுத்துவதை ஐரோப்பிய அரசுகள் எல்லாம் தத்தம் அலுவலாகக் கருதின. ஆகவேதான் லூயியும் சண்டையை முடித்து அமைதியை நாடினர்.

அப்பொழுது ஸ்பானிய அரசுக்குத் தகுதி வாய்ந்தவர்களாக மூன்று அரசு குடும்பத்தினர் தோன்றினர். ஒருவர் ஆஞ்சோ பிரபு பிலிப்; இவர் பதினன்காம் லூயியின் பேரப்பிள்ளை. இரண்டாமவர் சார்லஸ்; ஆஸ்திரிய மன்னர் இரண்டாவது லெயோபால்டின் இரண்டாம் புதல்வர். மூன்றுவதாக இருந்தவர் பவேரியா மன்னர் ஜோசப் பெர்டினண்ட். இம் மூவரில் ஸ்பெயினின் அரசரா வதற்குக் குறைந்த உரிமை பெர்டினண்டுக்குத்தான், மற்ற இருவரும் இரண்டாம் சார்லஸ் மன்னருக்கு மிக நெருங்கிய உறவினர்கள். ஆயினும் ஐரோப்பிய அரசியல் வட்டாரங்களில் இவரையே அதிகமாக ஆதரித்தார்கள். சிறிய அரசராக இருப்ப தால் இவர் பட்டத்திற்கு வருவதால் ஐரோப்பிய சமநிலை பாதிக் கப்படாமலிருக்கும் என்று அரசியல் வட்டாரங்கள் கருதின. ஆகையால் பிரான்ஸ், இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் ஒன்றுசேர்ந்து ஒருபாகப்பிரிவினை செய்தன. அதன்படி ஸ்பெயின் அரசரின் ராஜ்யத்தில் பெரும் பகுதியை பவேரிய மன்னருக்குக் கொடுத்து விடுவதென்றும் எஞ்சி இருக்கும் பகுதிகளைப் பிரான்ஸும், ஆஸ்திரியாவும் பங்கு கொள்வதென்றும் முடிவு ஆயிற்று. ஆனால் பவேரிய மன்னர் திடீரென்று இறந்து போனார். அதற்குப் பிறகு இரண்டாவது பாகப்பிரிவினை நடந்தது. அதன்படி ஸ்பெயின், கிழக்கு இந்தியத் தீவுகள், நெதர்லாந்து ஆகிய இவற்றை ஆஸ்திரியா வைத்துக் கொள்வதென்றும்,

நேப்பிள்ஸ், சிசிலி, மிலான் என்றவை பிரான்ஸின் ஆதிக்கத்தில் வரவேண்டும் என்றும் முடிவாக்கப்பட்டது. ஆனல் ஸ்பெயினும் ஆஸ்திரியாவும் இதை ஒத்துக்கொள்ளவில்லே. நாடு பிரிக்கப் படுவது ஸ்பெயினுக்கு ஒப்பவில்லே. ஆனல் மிலான் பட்டணம் தமக்குச் சேரவில்லேயென்று ஆஸ்திரிய அரசர் இந்தத் திட்டத்தை ஒத்துக் கொள்ளவில்லே. ஸ்பெயின் ஏகாதிபத்தியத்தின் பெரும் பகுதி அவருக்குத் தானுகவே வரும்பொழுது, மிலான் போய் விடுவதால் இவ்வளவு பெரிய அரசை வேண்டியதில்லே யென்று ஆஸ்திரிய மன்னர் தள்ளியது பெருந் தவறு. ஆயினும் லெயோபால்ட் இத்தவறினே இழைத்தார்.

இந்நிலேயில், இரண்டாம் சார்லஸ் இறந்தார் (1700). அவர் இறக்கும் தறுவாயில் அவர் தமது சொத்துக்களேப் பற்றிய மரண சாசனம் ஒன்றை வகுத்திருந்தார். அதன்படி தமக்கு வாரிசு பிலிப் பிரபு என்றும், அவர் வேண்டாமென்று சொல்லிவிட்டால் ஆஸ்திரிய இளவல் சார்லஸ் என்றும் மன்னர் குறித்திருந்தார். ஒழுங்காக என்ன செய்யவேண்டு மென்பதைப்பற்றி யார்சொல்ல வேண்டுமோ அவரே சொல்லியிருந்தார். ஆயினும் அமைதி நிலவ வழியில்லே, லூயி, சார்லஸின் ராஜ்யம் தம்மைச் சேர்ந்தது என்று கூறினுர். அதோடு நின்றிருந்தால் யுத்தம் ஏற்பட்டிருக்க மாட்டாது. அப்படி ஏற்பட்டிருந்தாலும் அது பெரும் யுத்தமாக மாறியிருக்காது. ஆனல் லூயி உடனே தம்முடைய பெருமையைக் காட்டிக்கொண்டார். ஸ்பானிய நெதர்லாந்தினுள் தமது படையை அனுப்பினுர். ஹாலந்தின் எல்லேப்புறத்திலிருந்த பல பட்டணங்களேக் கைப்பற்றினுர். கிழக்கிந்தியத் தீவுகளில் அடிமை வியாபாரம் செய்ய ஸ்பெயின் பெற்ற உரிமையை (Asiento)த் தமக்குத் தரவேண்டு மென்று ஆணேயிட்டார். ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் இதைப் பார்த்து வியப்பும், ஆத்திரமும் கொண்டனர். லூயியை ஒடுக்காவிட்டால் தங்கள் வாழ்வே நசித்துவிடும் என்று கருதினர். வில்லியம், மார்ல் பரோ பிரபுவை டச்சுக்காரிடம் அனுப்பி வைத்தார். அவர் ஹேக் பட்டணம் சென்று அங்கு டச்சுக்காரரோடு ஆலோசித்துத் திட்டம் வகுத்தார். பிரான்ஸ் நாடு ஸ்பெயினேயும் கிழக்கு இந்தியத் தீவுகளேயும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், நெதர்லாந்து, இத்தாலி, மத்தியதரைக் கடல் தீவுகள் என்ற இவை ஆஸ்திரியாவைச் சேரவேண்டு மென்றும் அவர்கள் தீர்மானித்தனர்.

சண்டை தொடங்கும் முன் மூன்றும் வில்லியம் இறந்து போனர். ஆனல் அவர் ஏற்படுத்திய கூட்டணி அவரோடு இறக்க வில்லே. இங்கிலாந்தில் மார்ல்பரோ படைத் தலேவரானர்.

பேரரசர் படைக்கு யூஜீன் இளவரசர் (Prince Eugene) தலைவரானார். இவ்விருவரின்கீழ்க் கூட்டணிப் படைகள் போரைத் தொடர்ந்து நடத்தின. லூயியின் பேரர் ஸ்பெயினில் அரசுக் கட்டில் ஏறியதால் ஸ்பெயினும் பிரான்ஸும் இணைந்து நின்றன. ஆனால் ஸ்பெயின் அரசாங்கம் நெடுங்காலமாய்ப் பயனற்றுக் கிடந்ததால் அந்நாடு லூயிக்குப் பேருதவி செய்யக் கூடவில்லை. உயிருள்ள உடலை உயிரற்ற உடலோடு பிணைத்தது போலிருந்தது பிரான்ஸும் ஸ்பெயினும் இணைந்து நின்ற காட்சி. இந்நிலையில் கூட்டணியினர் திறம்படச் சண்டை செய்தனர்.

பொதுவில் சண்டை நான்கு பாகங்களில் நடந்தது. முதலில் நெதர்லாந்தில் ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் ஸ்பெயினுக்குச் சொந்தமான இடங்களைத் தாக்கினர். ஆஸ்திரிய நாட்டினர் ஸ்பெயினையும் பிரான்ஸையும் மிலான் பட்டணத்தை விட்டுப் போகும்படி இத்தாலியில் போர் நிகழ்த்தினர். பவேரியா நாடு லூயிக்கு உதவியது. ஆகையால் அங்கேயும் போர் நிகழ்ந்தது. கடைசியாக ஸ்பெயினிலே போர் நடந்தது. செவனீஸ் பிரதேசத்தில் மறுப்பாளர்கள் பிரான்ஸுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். பிரான்ஸின் நிலைமை கவலைக்கிடமா யிருந்த போதிலும் பவேரியாவில் அது திறமையுடன் போர் நடத்தியது. பவேரியாவை வென்றுலொழிய ஆஸ்திரியப் படைகள் ஆங்கிலப் படையுடன் சேர்வது கடினம்; ஆகையால் இரு திறத்தாரும் கடும்போர் புரிந்தார்கள். கடைசியில் பிளன்ஹிய்ம் (Blenheim) என்ற இடத்தில் நடந்த சண்டையில் பிரஞ்சுக்காரர்கள் தோற்றார்கள் (1704). பிரஞ்சுக்காரர்கள் இவ்விதத் தோல்வியை அவர்கள் வரலாற்றிலேயே கண்டதில்லை யென்று கூறப்படுகிறது. இத் தோல்வி இந்தப் போருக்கே ஒரு திருப்பம் தந்தது. ஸ்பெயினுக்குரிய நெதர்லாந்து பகுதி விரைவில் கூட்டணிக்கு உரிமையாயிற்று. இத்தாலியில் பிரஞ்சுக்காரர் தோற்று மிலானை மட்டுமல்லாமல் இன்னும் அந்நாட்டில் அவர்களுக்குரிய எல்லா இடங்களையும் விட வேண்டியதாயிற்று. ஜிப்ரால்டர் ஆங்கிலேயர் கைக்கு வந்தது. கடைசியில் ஆஸ்திரிய நாட்டு இளவரசர் மேட்ரிட் பட்டணத்திற்குள் நுழைந்து, தாமே ஸ்பெயின் மன்னர் மூன்றும் சார்லஸ் என்று பட்டம் சூட்டிக்கொண்டார்.

சண்டை முடிந்துவிட்டது போல் தோன்றியது. ஆயினும், இரண்டு காரணங்கள் அதற்கு இன்னுமொரு திருப்பமளித்தன. ஆஸ்திரிய இளவரசர் தம்மையே ஸ்பெயின் நாட்டின் அரசராக்கிக் கொண்டது அந்நாட்டின் மக்களுக்குப் பொறுக்கவில்லை. தவிர, போர்த்துக்கல் ஒருபுறமும் காடலோனியா மறுபுறமும் அவருக்கு உதவியது இன்னும் அவர்களுக்குச் சீற்ற மூட்டியது. போர்த்துக்

கீசியரும் காடலோனியரும் ஸ்பெயின் மக்களோடு எப்பொழுதும் முரண்பட்டுக் கலகம் செய்துவந்தவர்கள். இவர்கள் இப்போது ஆஸ்திரிய இளவரசரை மேட்ரிட் பட்டணத்திற்குள் நுழைய உதவியதை நினைத்து அவர்கள் கொதித் தெழுந்தார்கள். அவர்கள் வெற்றிகண்ட வீரர்களோ நாட்டிலிருந்து விரட்டினர்கள். ஜிப்ரால்டர், பார்சலோனு என்ற இவ்விரு இடங்கள் மட்டும் அவர்களுக்குப் புகலிடமாயின. ஆயினும், லூயி சமாதானத்திற்கு இசைந்தார். ஆனல் கூட்டணியாளர் அதற்கு விலையாக விதித்த கட்டுப்பாடுகள் அவரை மறுபடியும் சண்டையில் ஈடுபடச் செய்தன. ஸ்பெயின் மக்கள் உள்ளூர அவரது பேரப்பிள்ளை பிலிப்பே தங்களுக்கு மன்னராக வேண்டுமென்று விரும்பினர்கள். பல இடங்களில் தோற்றபோதிலும் லூயி விடாமுயற்சியோடு சண்டையை நடத்தினர். இதன் பலனக மிக இடுக்கணான நிலைமையிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டார்.

நல்ல காலமாக ஆங்கில அரசாங்கம் அவ்வமயம் மாறியது. டோரிக் கட்சியினர் அப்போது அங்கு வலிமை பெற்று ஆளும் கட்சியினராக மாறினர் (1711). அவர்கள் எப்பொழுதுமே சமாதான விரும்பிகள். ஆகையால் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சமாதானத்தை நிலைநிறுத்த ஆவல் கொண்டனர். இவ்வாருகச் சண்டை பன்னிரண்டாண்டுக் காலம் நடந்து ஓய்வுற்றது. லூயி உட்ரெக்ட் என்றஇடத்தில் இங்கிலாந்தோடும் ராஸ்டட் என்ற இடத்தில் ஆஸ்திரியாவுடனும் முறையே 1713 ஆம் 1714ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தம் செய்துகொண்டார்.

இவற்றில் முக்கியமான உடன்படிக்கை உட்ரெக்ட் உடன் படிக்கையே யாகும். இதன்படி பிலிப் இளவரசர் ஸ்பெயின் நாட்டின் மன்னராஞர். ஆயினும் பிரான்ஸும் ஸ்பெயினும் தனித்தனியே இருக்கவேண்டும் என்று முடிவாயிற்று; பிலிப் ஏற் கெனவே இருமுறை மேட்ரிட் அரியணையில் ஏறியிருந்தார். ஆனல் இருமுறையும் அவர் அதை விடவேண்டிய தாயிற்று. இப்போது அவர் அங்கு நிலைபெற்ற மன்னரானது ஸ்பெயின் நாட்டு மக்க ளுக்கு மகிழ்ச்சியளித்தது. 1935-ஆம் ஆண்டு வரை ஸ்பெயினில் அரசாண்ட பூர்போன் அரச வமிசத்தைத் தோற்றுவித்தவர் அவரே. அவர் ஐந்தாம் பிலிப் என்ற பட்டம் பெற்றார். ஸ்பெ யினும் பிரான்ஸும் ஒன்று கூடி ஐரோப்பிய சமநிலைக்குத் தீங்கு விளைக்கா வண்ணம் தனித்தனியே இருக்க இசைந்தது கூட்டணி யாளருக்கு மகிழ்ச்சி அளித்தது. ஹாலந்து இந்த உடன்படிக்கை யால் எவ்வித நன்மையும் அடையவில்லை. ஆனல் இங்கிலாந்தின் பெருமைக்கு உட்ரெக்ட் அடிகோலியது. ஜிப்ரால்டர், மைனோர்க்கா, நியூபவுண்ட்லாந்து (Newfoundland), நோவாஸ்

கோஷியா (Novascotia), ஹட்ஸன் பே (Hudson Bay)—இவை யாவும் இங்கிலாந்துக்குச் சொந்தமாயின. இவற்றின் மூலமாக அது கடல் வலிமையைப் பெருக்க முடிந்தது.

நீண்ட காலம் நடந்த இந்தப் போரில் கடற்படை ஹாலந் தின் தலைமையில் இயங்கிற்று. அப்போது ஆங்கிலேயர்கள் தரைச் சண்டையில் மட்டும் வல்லுநரா யிருந்தார்கள். ஆகையால், போரில் கடற்படை எத்தகைய வெற்றி யளிக்கிறது என்பதை இந்தச் சண்டையில்தான் அவர்கள் உணர்ந்தார்கள். டச்சுக்கார ரிடமிருந்து அதன் உயிர்நிலைகளையும் அறிந்தார்கள். ஆகவே பதி னெட்டாம் நூற்றாண்டின் தலைமையான நிகழ்ச்சிகளில் ஒன்று ஆங்கிலேயர் கடற்படையில் சிறந்து விளங்குவது. அது அவர் களுக்கு எத்தகைய வாய்ப்பையும் வலிமையையும் அளித்தது என் பதை இனி நாம் கூறவிருக்கும் ஐரோப்பிய வரலாறு எண்பிக்கும். இனி ஹாலந்தின் கடல் வலிமை ஒடுங்குகிறது; அதோடு அதன் பெருமையும் குன்றுகிறது.

இது உட்ரெக்ட் உடன்படிக்கையின் சிறப்பான விளைவு என்று கூறலாம். ஏனென்றால் கடற்கரைப் பிரதேசங்கள் பலவற்றை இந்த உடன்படிக்கை ஆங்கிலேயருக்கு அளித்தது. இதிலிருந்து புதியதொரு சிக்கல் ஐரோப்பிய வரலாற்றில் எழுந்தது. புது நாடுகளைப் பிடிப்பதற்குச் சண்டை செய்வதே சிறந்த வழிஎன்பது இப்போது பெறப்பட்டது. இது ஒரு புதிய கண்டுபிடிப்பு என்று நாம் கூறுவதற்கில்லை. ஆயினும் புது இடங்களைப் பெறுவதால் ஏற்படும் நன்மைகள் இப்பொழுதுதான் மக்களுக்குத் தென்பட் டது. இக்கொள்கை இக்காலத்து அரசியல் தலைவர்களை எவ் வளவு ஆட்கொண்டிருக்கிறது என்பதை நாம் நோக்கும்போது உட்ரெக்ட் உடன்படிக்கையின் முக்கியத்துவம் நமக்கு விளங்கா மற் போகாது. இதுவரை ஐரோப்பியப் போர்கள் நாட்டுப் பற்றின்காரணமாகவோ சமயப் பற்றின் காரணமாகவோ நிகழ்ந் தன. ஆனால் இனி வரவிருக்கும் போர்கள் இவற்றை முற்றிலும் மறந்து புது நாடுகளைக் கொள்வதிலேயே நோக்கம் செலுத்துகின் றன. இம்முறையிலும் உட்ரெக்ட் உடன்படிக்கை ஐரோப்பிய வரலாற்றிற்குப் புது வழி கோலிற்று.

இதோடு லூயியின் சண்டைகள் ஒருவாறு முடிவடைந்தன. அவருடைய வலிமையும் ஒருவாறு குன்றியது. நாட்டில் மக்கள் மனம் வெதும்பினர். மிகச் சிலர் அவருடைய அரசியல் நிருவாகத் தைக் கண்டிக்கத் தொடங்கினர். அவருடைய சிறந்த நண்பர் வோபான், பெனலன் (Fenelon) போன்றவர்களே அவரைத் தாக் கிப் பேசினர், நாட்டின் பொருளாதாரம் மிக நைந்துவிட்ட

தென்றும், அதைச் சரிப்படுத்த எல்லோருக்கும் சரிசமமாக வரி விதிக்க வேண்டுமென்றும், நாட்டை விட்டுப் போய்விட்ட ஹியுக் நோக்கள் திரும்பி வர வழி செய்யவேண்டு மென்றும் அவர்கள் கூக்குரலிட்டார்கள். மன்னரோ அவதியான நிலையிலிருந்தார். முதலில் அவரது மூத்த மகன் இறந்தார்; அதற்குப் பின் அவர் முதல் பேரப் பிள்ளை, அதன் பின் அவர் பேரப்பிள்ளையின் மகன். இவ்விதமாக ஒவ்வொருவராக இவ்வுலகத்தை விட்டு நீங்கினர் கள். மன்னர் காலமும் குறுகியிருந்தது. இதை உணர்ந்த அவர் அவருக்குப் பின் சண்டையில்லாமல் அரசு நடக்க ஒரு குழுவை ஆர்லியான்ஸ் பிரபுவின் தலைமையின் கீழ் ஏற்படுத்திவிட்டு 1715ஆம் ஆண்டு உயிர் நீத்தார்.

V

ஐரோப்பாவில் அரசு செலுத்திய மன்னர்களில் மிக முக்கிய மானவர் பதினான்காம் லூயி என்று சொல்லவேண்டும். அவர் களில் முதல் இடம் பெறவேண்டியவர்களில் இவரும் ஒருவர் என்றும் சொல்லக்கூடும். இவர் அரசியல் ஊக்கம் காட்டினர். நல்லவண்ணம் அரசு செலுத்துவதற்குத் தாமே அரசைக் கைக் கொள்ள வேண்டும் என்ற எண்ணங்கொண்டு அதை ஐம்பத்து நான்காண்டுகள் தொடர்ந்து எண்பித்தவர் இந்த லூயி மன்னர். இவ்விதமாக ஐரோப்பிய அரசியல் முறைக்கு இவர் புது வழி வகுத்தார். அதை வரலாற்று அறிஞர்கள் யதேச்சாதிகாரம் என்றும் வல்லாட்சியென்றும் கூறுகிறார்கள். இவ்விளக்கம் லூயி யின் நோக்கத்தைச் சரிவர விளக்குவதில்லை. ஏனென்றால் அவர் தம் விருப்பம்போல், மனம் போன வாறெல்லாம் அரசாட்சியை நடத்தவில்லை. நன்காராய்ந்து தமக்குத் தோன்றியபடி ஆட்சியை நடத்தினர் என்பதுதான் அதற்குப் பொருள். பல சமயங்களில் இந்தக் குறிக்கோளின் உண்மையை நமது வாழ்க்கையிலே நாம் காணக்கூடும். ஒரு காரியத்தைச் செய்வதிலே நம்மைவிட நம் ஆலோசகர் அதிகப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதில்லை. இதை லூயி தன் வாழ்க்கையில் நன்கு உணர்ந்த பிறகே இத்தகைய முடி வுக்கு வந்தார். இவரைப் பின்பற்றி ருஷியா, பிரஷ்யா போன்ற நாடுகளில் யதேச்சை நல்லரசு, உணர்வு ஒளிர் வல்லரசு (Beneficient autocracy) தலைதூக்கியது.

ஆயினும், அவருடைய ஆட்சி பொதுவில் பிரான்ஸுக்குத் துன்பத்தை விளைத்தது. இதற்கு முதற் காரணமாய் விளங்கியது அவர் செய்த பல போர்கள். ஆனால் அவர் போரை விரும்பி அழைக்கவில்லை; போர் அவரை விரும்பி அழைத்தது. ரிஸ்விக்

உடன்படிக்கையில் அவருக்கிருந்த சமாதான விருப்பம் நன்கு விளங்கியது. அதேபோல் ஸ்பெயினின் அரசைப்பற்றி ஏற்பட்ட இரண்டு பாகப்பிரிவினைத் திட்டங்களிலும் அதே குறிக்கோளை அவர் எண்பித்தார்; ஆனால் அது பயன் தரவில்லை. அதன் பிறகு எழுந்த பெரும் போரை விரைவில் முடிக்கவேண்டுமென்று தான் ஆசைப்பட்டார். ஆனால் கூட்டணியாரின் கடும் நிபந்தனைகள் அவரை மறுபடியும் சண்டை செய்யும்படி செய்தன.

ஆனால் மக்கள் அவரை நன்கு உணரவில்லை. இறுதியில் அவரை எதிர்த்துக் குறைகூறவும் முற்பட்டனர். பிரஞ்சுக்காரரை ஐரோப்பா முழுவதும் மதிக்க வேண்டும், அவர்களுடைய நாடு ஐரோப்பாவில் முதலிடம் பெற வேண்டும் என்றெல்லாம் பதினான்காம் லூயி கனவு கண்டார். ஆனால் இவை பெரும்பாலும் பகற்கனவாகப் போனாலும், சிறிதளவு கைகூடியது எனலாம். சண்டையிலே பிரான்ஸ் நாடு தோற்றிருக்கலாம்; அதன் தொழில் வளர்ச்சி தடைப்பட்டு, நாளடைவில் அது ஏழை நாடாக நைந்திருக்கலாம். ஆனால் அதன் மன்னர் லூயி அங்கு வளர்த்த கலை மட்டும் ஒருபோதும் கெடவில்லை. அது ஐரோப்பாவையே மாற்றியமைத்தது. பெயர் பெற்ற வரலாற்றுசிரியர் பிஷர் கூறுவதைக் கேளுங்கள்:

''பிரஞ்சு அரசாங்கத்தின் சமூக வாழ்வும், அறிவுத் திறனும் லூயி செய்த போர்களால் குறையவில்லை. அவருடைய எதிரிகளும் அவற்றைப் போற்றினார்கள். சண்டையின் காரணமாக அவர்கள் அவற்றை இன்னும் அதிகமாகப் போற்றினார்களென்றே கூறவேண்டும். பிரஞ்சு நாட்டினரின் விஞ்ஞான அறிவு, கலைத் திறன், நாகரிகம் முதலியவை ருஷிய எல்லையிலிருந்து அட்லாண்டிக் பெருங்கடல் வரை போற்றப்பட்டன. ஒவ்வொரு சமூகக் குழுவும் பிரஞ்சு நாகரிகத்தைப் பின்பற்றியது மட்டுமன்றி, அப்படிப் பின்பற்றுமரியாதை இழுக்கென்றும் கருதியது. அவர்களுடைய அறிஞர்கள் எழுதிய நூல்கள் எங்கும் ஆவலோடு படிக்கப்பட்டன.''*

உண்மையில் பிரஞ்சு நாடு சண்டையில் தோற்றாலும் அதன் கலை ஐரோப்பாவையே தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தது. இதற்குப் பெருங் காரணமாயிருந்தவர் பதினான்காம் லூயி ஆவர். அவருடைய சண்டைகள் ஓய்ந்து விட்டன. அவருடைய வெற்றியையும் தோல்வியையும் மக்கள் மறந்துவிட்டார்கள். ஆனால் அவருடைய கலைப்பணி எப்போதும் நின்று நிலவக்கூடியது.

*Fisher : History of Europe-Vol II.

லூயி மன்னருடைய கலைப் பணியின் திறத்தைப்பற்றிப் பல நூல்கள் எழுதக் கூடும். சிலர் அதைக் குறைத்தும் கூறுவர், அவர் காலத்தில் வளர்ந்த மொழிக் கலை (Literature), அறிவுக் கலை (Learning), கட்டடக் கலை (Architecture), ஓவியக்கலை (Painting) என்ற இவை யாவும் அவருக்கு முன்னிருந்தவைகளே. அவற்றை ஆதரித்து வளரச் செய்த பெருமைதான் லூயிக் குரியதென்று அவர்கள் கூறுகிறார்கள். இது உண்மையே; ஆயினும் இது மன்னரின் பெருமையையோ, பணியையோ ஒரு சிறிதும் குறைப்பதில்லை. எந்நாட்டிலும் கலை காலத்திற்கேற்பத் தானாகவே எழுகிறது. ஆனால் அது வளர்வதுதான் அதற்கு நாம் தரும் பாதுகாப்பில் அடங்கியிருக்கிறது. மழை பெய்தால் பயிர் தானாகவே முளைக்கிறது. ஆனால் அது வளர்ந்து பயன் தருவது உழவன் முயற்சியில் அடங்கிக் கிடக்கின்றது. ஆகையால் நாம் வேளாளனைப் புகழாமலிருப்பதில்லை. தோட்டத்தில் பயிர் செழித்து நிற்கும்போது நாம் உழவனைத்தான் புகழ்கிறோம். லூயி மன்னரது கலைப் பணியின் பெருமையையும் நாம் இந்நிலையில் வைத்துப் பார்க்க வேண்டும்.

முதலில் மன்னர் கலைஞர்களைப் போற்றினார். 'அகாடமி' என்னும் பல சங்கங்களைக் கூட்டி அவற்றில் அவர்களை உறுப்பாளராகச் செய்து நாட்டில் அவர்களுடைய நிலைமையை உயர்த்தினார். இவ்விதமாகப் பிரஞ்சு அகாடமி, விஞ்ஞான அகாடமி (Academy of Sciences) என்று இரண்டு பெரிய சங்கங்களை ஏற்படுத்தி முறையே கலை வளர்ச்சிக்கும், விஞ்ஞான வளர்ச்சிக்கும் அரும் பணி புரிந்தார். கலைச் சங்கத்தின் தலைமைப் பதவியைத் தாமே ஏற்றுக் கொண்டார். லூவர் (Louvre) பட்டணத்திலே அதற்கு நல்ல அலுவலகத்தை நிறுவித் தந்தார். விஞ்ஞான சங்கம் அடிக்கடி கூடி விஞ்ஞான வளர்ச்சிக்கு உழைக்க வேண்டுமென்றும், அவ்வுழைப்பின் பயனை ஒரு வெளியீட்டின் மூலம் உலகுக்கு அறிவிக்க வேண்டுமென்றும் ஆணையிட்டார். இதன் பயனாக "அறிஞர் வெளியீடு" (Journal des Savants) வெளிவந்தது. சித்திரம் வரைபவரையும், சிலை செய்வோரையும் கூட்டி அவர்களுக்கென்று ஒரு தனி அகாடமி ஏற்படுத்தினார். அழகுக் கலை (fine arts)யைப் பரப்புவதற்கு அதற்குத் தனி உரிமை அளித்தார்.

இவ்விதமாகக் கலைஞரைப் போற்றியபின் அவர்களைக் காப்பாற்றினார். அவர்களில் பலருக்கு உபகாரச் சம்பளம் ஈந்தார். சிறந்த நாடகாசிரியர்கள் அவரால் பாதுகாக்கப்பட்டனர். இவர்களில் ரசீன் (Racine), கோர்னீல் (Corneille), மொலியர் (Moliere) என்ற இம் மூவர் பிரஞ்சு மொழிக்கே சிறப்பு செய்தவர்கள். லா போன்டேய்ன் (La Fountaine), டெ செவிக்னி (De Sevigne),

லா ரோஷ்புகால்ட் (La Rochefoucauld) ஆகியோர் அக்காலத்திய சிறந்த எழுத்தாளர்கள்; போசுவெளம் (Bossuet), பெனலனும் (Fenelon) சிறந்த பேச்சாளர்கள்; லெ வோ (Le Vou), பெரால்ட் (Perrault), மன்சார்ட் (Mansard) போன்றவர்கள் சிறந்த கட்டடக் கலைஞர்; லெ புருன் (Le Brun) சிறந்த ஓவியக் கலைஞர்; டெஸ்கார்டிஸ் (Descartes) சிறந்த தத்துவ அறிஞர்.

கடைசியாக, லூயி மன்னர் தாமே கலையைப் பயன்படுத்தி உலகுக்கோ ரொளியானார். அவருடைய காலத்தைப் ''பெரு நூற்றாண்டு'' (Great Century) என்றும் அவருடைய கலைப் பணியைப் ''பெரும் பாணி'' (Great Style) என்றும் பிரஞ்சு வரலாறு விளக்குகின்றது. அவர் பாரிஸ் பட்டணத்தில் சிறந்த நூல் நிலையம் ஒன்றை நிறுவினார். இதற்கு ''அரசர் நூல் நிலையம்'' (Royal Library) என்ற பெயரளித்தார். அங்கே அழகிய பூங்கா ஒன்றை நிறுவி அதற்கும் ''அரசர் தோட்டம்'' (Jardin du Roi) என்றே பெயரிட்டார். இன்னும், வானத்தை விளக்க ஞானம் காண் நிலையம் ஒன்றை நிறுவி அதற்கு ''அரசர் வானம் காண் நிலையம்'' (Royal Observatory) என்று பெயரிட்டார். இவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்த அவர் நாட்டினர் அவருக்குக் ''கதிரவ மன்னர்'' (Sun King) என்று பெயரிட்டனர்.

கதிரவ மன்னர் தம் பெயருக்கேற்ப பாரிஸுக்கு அப்பால் பதினைந்து கல் தூரத்தில் வெர்சேய் (Verseilles) என்ற இடத்தில் தமக்கு ஒரு மாளிகையை நிறுவினார். இதற்கு 4 கோடி பிரான்கு ரூபாய் செலவாயின. பதினாறும் நூற்றாண்டில் இத்தாலியில் பெருங் கலைஞர்கள் கட்டிய கட்டடங்களையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்துப் பிரஞ்சுக் கலைக்குண்டான சிறப்பான பெருமைகளை இவற்றில் புனைந்து, அந்த மாளிகையை எழுப்பினார் லூயி மன்னர். இம் மாளிகை ஒரு பெரும் பூங்காவினுள் எழுந்தது. இந்தப் பூங்காவை அமைக்க லெ நோத்ரு (Le Notre) என்ற சிறந்த கலைஞரை (landscape architect)த் துணைக்கொண்டார். மாளிகையின் உட்பகுதியை அழகுபடுத்த லெ புரூன் (Le Brun) பணியாற்றினார். அவரோடு வேலை செய்த ஓவியர் பலராவர். நான்காம் ஹென்றி மன்னர் பிரான்ஸில் ஏற்படுத்திய நெசவுத் தொழில் இப்பொழுது வெர்சேய் மாளிகைக்காகவே வேலை செய்தது. இன்னும் தச்சர், கொல்லர், பொன் வேலைக்காரர் என்று வேலை செய்தவர்கள் பலர்.

லூயியின் அழகு வேலைகள் ஐரோப்பாவின் மன்னர்களையே வியப்பில் மூழ்க்கடித்தன. பிரஞ்சு நாட்டின் கலைக்கு இவை

நற்பெயர் தந்தன. பெரு வேலையிலிருந்து சிறு செயல்வரை இனி ஐரோப்பா பிரான்ஸைப் பின்பற்ற லாயிற்று. மொழி வளர்ச்சிக் கலையிலிருந்து, உடை அணிவது வரை பிரஞ்சு முறைகள் ஐரோப்பா முழுவதிலும் மாதிரி முறைகளாக அமைந்தன. இன்றும் இந்தப் போக்கு மாறவில்லை; மன்னர் லூயியின் நினைவும் மறையவில்லை.

8. ருஷிய மறுமலர்ச்சி

(மூன்னைய வரலாறு—ருஷிய மறுமலர்ச்சி—சுவீடனின் எதிர்ப்பு—மாபெரும் பீட்டர்—இரண்டாம் கேத்தரின்)

I

பதின்மூன்றும் நூற்றாண்டு உலக வரலாற்றில் மங்கோலியர் காலம் எனப்படும். அவர்களுடைய புகழ் பெற்ற மன்னர் குப்லாய்கான் உலகமெங்கும் புகழ் பெற்றவர். அவருடைய பெருமையைக் காணவே மார்க்கோபோலோ இத்தாலி நாட்டிலிருந்து சைனுவரை பிரயாணம் செய்தார் என்பதை முன்னர்க் கூறினேம். ருஷிய நாடு அவர் அரசாட்சியின் கீழ் வந்தது. அதுவே ருஷியர் கண்ட முதல் அரசு. ஆனால் மங்கோலியர் நிலையான அரசை எங்கும் ஏற்படுத்தவில்லை. ஆகையால் மங்கோலியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர் அவர்கள் இராச்சியமும் பழைய நிலையையே எய்தியது.

மங்கோலியரின் ஆட்சிக் காலத்தில் ருஷியாவில் பல பிரபுக்கள் ஆட்சி செய்தார்கள். அவர்கள் பேரரசருக்குச் சேரவேண்டிய வரியை வசூலித்துக் கொடுத்துவிட்டால் தங்கள் விருப்பம் போல் ஆட்சியை நடத்த வேண்டியதுதான். இவர்களில் மாஸ்கோ நகர்ப் பிரபு மிகப் பெரியவர். அவருக்கு "மிகப் பெரிய பிரபு" (Grand Duke)என்ற பெயரே அளிக்கப்பட்டிருந்தது. 1462முதல் 1505 வரை இந்தப் பதவியிலிருந்தவர் மூன்றாம் ஐவன் என்பவர். இவர் திறமையாளர்; பேரரசருக்கு வேண்டியவர். அவரும் இவருக்குப் பல உரிமைகள் கொடுத்திருந்தார். ஆனால் அப்போது மங்கோலியர் வாழ்வு கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இதை உணர்ந்த ஐவன் 1480ஆம் ஆண்டு தம் சுயாட்சியை நிறுவினர். நவ்கொராடை (Novgorad)ப் பிடித்து இக்கால ருஷிய அரசுக்கு அடிக்கல் நாட்டினவரும் இவரே. ஆயினும் ருஷிய மக்கள் முன்னேறவில்லை. அவர்கள் நிலைமை வரவரக் கேடுற்றது. தொழிலும் வாணிகமும் அரசர் கையிலேயே இருந்தபடியால் மக்கள் வறுமையுற்றனர். அரசாங்கம் கைக்கூலிச் சூழலிலே சிக்கித் தவித்தது. மக்கள் வேலை செய்ய மறுத்தனர். ஆனால் அதற்குப் பதில் கசையடிதான் பெற்றனர். இந்த நிலையிலே

உணவிலோ, உடையிலோ, மொழியிலோ அவர்கள் தேர்ச்சி பெற வாய்ப்பில்லை. எங்கும் மக்கள் நீண்ட அங்கியுடனும் தாடியுடனும் உணவுக்கு அலைந்தார்கள். மங்கோலியர் காலத்தில் ருஷியாவி லிருந்த சிறு செழிப்பும் மங்கியது. ருஷியர்கள் பிற நாட்டாரைக் காணவும் மறுத்தார்களென்று 17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவி லிருந்து ருஷியா சென்ற பிரயாணிகள் கூறினர்களென்றால் அவர்கள் வாழ்வு எத்தகைய நிலையை அடைந்திருக்க வேண்டும் என்று ஒருவாறு அறியலாம். ஐரோப்பாவினுள் நுழைந்திருந்த ருஷியரையும் ஐரோப்பா ஏற்றுக்கொள்ள மறுத்தது; நான்காம் ஹென்றி பிரான்ஸில் ஆட்சி செய்த காலத்தில் ஐரோப்பிய நாகரிகத்தை வளர்ப்பதற்காக என்னென்ன முயற்சிகள் செய்யவேண்டு மென்று சூழப்பட்டது. அப்பொழுது முதல் முயற்சியாகக் குறிக்கப்பட்டது ருஷியரையும் துருக்கியரையும் ஐரோப்பாவி லிருந்து நீக்குவதே என்றால் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ருஷியர்களின் நிலை எவ்வளவு கீழ்த்தரமாக விருந்தது என்பது தெரியவரும்.

II

ஆனால் அவர்களுடைய மறுமலர்ச்சி அப்போது சேய்மையில் இல்லை. 1613ஆம் ஆண்டு ரோமனுப் (Romanaff) குடும்பத்தைச் சேர்ந்த மைக்கல் என்பவர் மாஸ்கோவில் அரசுப் பட்டமெய்தினர். அவருடைய ஆட்சியின் தொடக்கம் ருஷிய மறுமலர்ச்சியின் தொடக்கமென்று கூறவேண்டும். மங்கோலியருக்குப் பிறகு போலந்து நாட்டினர் ருஷியாவைக் கைப்பற்ற வேண்டுமென்று பெருமுயற்சி செய்துவந்தனர். அவர்களைத் துரத்தியடித்த பெருமை மைக்கல் ரோமனுப்பைச் சாரும். அவர் நாட்டின் நலத்திற்காகச் செய்த சேவை அவரை அன்போடு ஏற்றுக்கொள்ளும்படி ருஷிய மக்களைத் தூண்டியது. இப்பொழுது தொடங்கி 1817ஆம் ஆண்டு அங்கு ஏற்பட்ட பெரும் புரட்சி வரை இவரையும் இவருடைய குடும்பத்தினரையும் அவர்கள் கடவுளின் பிரதிநிதியாகவே கொண்டார்கள்.

1682ஆம் ஆண்டு இவருடைய பேரப்பிள்ளை பீட்டர் அரசபதவியை அடைந்தார். ருஷிய வரலாற்றையே மாற்றி அமைக்க உதவினவர்களில் பீட்டர் முதல்வராவர். இவருடைய சேவையை முன்னிட்டு வரலாறு இவரைப் பெருமை தங்கிய பீட்டர் (Peter the Great) என்று அழைக்கிறது. அவர் சில குறிக்கோள்களைக் கைக்கொண்டார். பதினான்காம் லூயி பிரான்ஸ் நாட்டில் அமைத்த உணர்வு ஒளிர் வல்லரசை ருஷியாவிலும் அமைக்க

வேண்டும்; தொழில்துறை, வாணிகத்துறை என்ற இவற்றில் முன்னேற்றம் காணவேண்டும்; அவற்றின் வழியாய் நாட்டின் செல்வ நிலையை உயரச் செய்யவேண்டும்; மக்கள் கல்வி கற்கவும், நாட்டிற்காகச் சண்டை செய்யவும் பழகவேண்டும்; வெறுஞ் செல்வந்தர்களும் பிரபுக்களும் நாட்டிற்கு வேண்டா, அதற்கு உழைக்க முன் வருகிறவர்களே நாட்டிற்கு வேண்டும்; பிரபுக்கள் சேவை செய்யா விட்டாலும் மன்னருக்குக் கீழ்ப்படிய வேண்டும் அல்லது கீழ்ப்படியும்படி செய்யவேண்டும்; கைக் கூலி கொடுப் பதையும் அதைப் பெறுவதையும் அறவே ஒழித்துக் கட்ட வேண்டும்; மக்களை நாகரிக மடையச் செய்யவேண்டும்; ஐரோப்பிய சிந்தனையும், கலையும், அன்றாட வாழ்க்கை முறையும் அவர்களைக் கவர்ந்திழுக்குமாறு செய்யவேண்டும் என்பன அக் குறிக்கோள்கள். இவை கைகூடும் வண்ணம் உழைப்பதற்குச் சிறந்த உறுதியும் மனத்திண்மையும் வேண்டும். பீட்டர் இவற்றை வேண்டுமளவுக்குப் பெற்றிருந்தார். தம் சொந்த மகனையே வதைத்துக் கொல்லுமளவிற்கு மனத்திண்மை பெற்றிருந்தார். பிரபுக்களைக் கடுமையாக ஒறுத்தார். தமக்கு எதிராக நின்ற தம் நம்பிக்கைக்குரிய காவற் படையினரை (Streltsi)க் கொன்று குவித்தார். சுமார் ஆயிரம் வீரர்கள் உயிரிழந்தார்கள். ஆனால் இதுவும் நன்மைக்கே என்று அவர் கருதினார்.

ருஷியாவை ஐரோப்பிய மயமாக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல. முதலில் பிரபுக்கள் நீண்ட அங்கி உடுப்பதும் தாடியை வளர்த்துக்கொள்வதும் கூடாது என்று சட்டமியற் றினார். ஆனால் மக்கள் உறுதியுடன் எதிர்த்தனர். தாடியை நீக்குவது கடவுளுக்கு ஏற்காத துரோகம் என்று கதறினார்கள். ஏனென்றால் அவர்கள் எண்ணத்தில் கடவுளின் சாயலில் உரு வாக்கப்பட்ட மனிதன் அதை மாற்ற முற்படுவது பெருந்தவறு என்று கருதினார்கள். அக்காலத்திய ருஷிய சமயமும் இதைத்தான் போதித்தது. ஆனால் மன்னர் மனந் தளரவில்லை. அவரே சில பிரபுக்களின் தாடிகளை வெட்டினார். இன்னும் சட்டத்திற்கு விரோதமாகத் தாடி வைத்துக்கொண்டு இருப்பவர்கள் அர சருக்கு வரி கட்ட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். பல இடையூறுகளைக் கடந்து முடிவில் மன்னர் வெற்றி கண்டார். பிறகு ருஷிய மக்கள் ஐரோப்பிய உடைகள் அணியவும், பெண்கள் மறைந்து வாழாமல் வெளிவந்து ஆண்களோடு குதூகலமாகப் பழகவும், ஐரோப்பியரைப்போல் ஆண்களோடு சேர்ந்து நாட்டி யமாடவும் செய்தார். அவர்களுடைய தேதி முறையை மாற்றி ஐரோப்பிய முறைக்குச் சரியாகக் கொண்டுவந்தார். மக்கள்

கல்வி கற்கவும், சிறப்பாகக் கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் ஊக்கம் காட்டவும் செய்தார்.

ருஷியத் தொழில் நிலையையும், வாணிகத்தையும் பெருக்குவதற்குக் கடல் வலிமை தேவை என்பதை முதன் முதல் கண்டவர் பீட்டர். ருஷியாவில் அதுவரை கப்பல் போக்குவரத்தே யில்லை; துறைமுகப் பட்டினங்களு மில்லை. இதற்காகவே அவர் அஸாவ் துறைமுகத்தைக் கைப்பற்றினர். ஆஞல் அதை வைத்துக் காப்பதற்கு ஐரோப்பிய உதவி வேண்டியிருந்தது. இதற்காக அவர் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தும் பயனில்லை. ஆகவேதான் அவர் கருங்கடலை மறந்து பால்டிக் கடலைத் தம் ஆதிக்கத்திற்குக் கொண்டுவர எண்ணினர். ஆயினும், பீட்டர் தமது ஐரோப்பியச் சுற்றுப் பிரயாணத்தைப் பயனுள்ளதாகச் செய்தார். ஹாலந்து, இங்கிலாந்து போன்ற கடல் வலிமை பெற்ற நாடுகள் கப்பல் கட்டுவதும், அதைக் கடலில் செலுத்துவதும், கப்பல் படை அமைப்பதும் எவ்வாறென இந்தப் பயணத்திலே நுணுகி ஆராய்ந்தார். இந் நாடுகளிலுள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலைகளுக்குச் சென்று, மன்னரா யிருந்தும் அங்கு எளிய தச்சன்போல் வேலை கற்றுக்கொண்டார். உண்மையில் நாட்டின் நலனுக்காக உழைத்த உழைப்பாளி மன்னர் பீட்டர். இவரைப் போன்ற மற்றொருவரை நாம் உலக வரலாற்றிலேயே காண்பதற்கில்லை.

இது மட்டு மல்ல; பீட்டர் தாம் சிறந்த வீரர் என்பதையும் எண்பித்தார். ருஷியாவின் வளர்ச்சிக்குத் துறைமுகங்கள் அவசியம், இவற்றைப் பெறுவதற்குப் போலந்து நாட்டுடனும், ஸ்வீடன் நாட்டுடனும் சண்டை செய்தாக வேண்டும் என்று மன்னரின் மனத்தில் தோன்றியது. சிறந்த காலாட் படையும் கடற் படையும் கொண்ட இந்த நாடுகளோடு போர் செய்வதும் வெற்றி காண்பதும் அக்காலத்தில் எளிய செயல்களல்ல. ஆயினும், பீட்டர் மனம் தளரவில்லை. தம் குறிக்கோள் காட்டிய வழியில் உடனே செல்லலானர். அவருடைய வெற்றிகளை நாம் குறிக்கும் முன் ஸ்வீடன் நாட்டைப் பற்றியும், போலந்து நாட்டைப் பற்றியும் ஒரு சிறிது கூறவேண்டும்.

III

ஸ்வீடன் நாடு பால்டிக் கடலின் மேற்குக் கரையில் இருப்பதால் அது செல்வம் கொழிக்கும் நாடாயிற்று. மலைகள் கொண்ட நாடாதலால், ஸ்வீடன் மக்கள் வலிமையும் போர்த் திறனும்

கொண்டவர்கள். நமது வரலாறு தொடங்கும் சமயம், அதாவது பதினைரும் நூற்றாண்டின் தொடக்கத்தில், இரண்டாம் கிரிஸ்டியன் என்ற டென்மார்க் மன்னர் டென்மார்க், நார்வே, ஸ்வீடன் என்ற மூன்று நாடுகளையும் அரசாண்டு வந்தார். ஆனல் இந்த ஒற்றுமை அதிக நாள் நீடிக்கவில்லை. 1523ஆம் ஆண்டில் குஸ்டாவஸ் வாஸா (Gustavus Vasa) என்ற ஸ்வீடன் நாட்டுப் பிரபு டென்மார்க்கை எதிர்த்துத் தம் நாட்டிற்கு உரிமையையும், தமக்கு அரசர் பதவியையும் கிடைக்குமாறு செய்தார். 1587ஆம் ஆண்டு வாஸா குடும்பத்தைச் சேர்ந்த சிஜிஸ்மண்ட் (Sigismund Vasa) என்பவர் போலந்து நாட்டிற்கு மன்னரானர். இதனல் இவ்விரு நாடுகளிடையேயும் ஒற்றுமை ஏற்படாவிட்டாலும் ருஷியாவின் நோக்கங்களுக்கு இது எதிர்ப்பாயிற்று. முப்ப தாண்டுச் சண்டைக்குப் பிறகு வெஸ்ட்பேலியா உடன்படிக் கைப்படி ஜெர்மனியிலுள்ள பிரமன், வெர்டன் என்ற பட்ட ணங்கள் ஸ்வீடனுக்குச் சொந்தமாயின. வீசர், எல்ப் என்ற ஜெர்மன் நாட்டின் இரு பேராறுகளும் ஸ்வீடனின் ஆதிக்கத்தின் கீழ் வந்தன. 1617ஆம் ஆண்டு குஸ்டாவஸ் அடால்பஸ் பின்லாந்து வளைகுடா (Gulf of Finland) வைச் சுற்றியுள்ள லிவோனியா (Livonia), எஸ்தோனியா (Esthonia), இங்கிரியா (Ingria), கெக்ஸ்ஹோம் (Kexholm), பின்லாந்து (Finland) ஆகிய பிரதேசங்களைப் பிடித்து ஸ்வீடன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார்.

போலந்து நாட்டில் 16ஆம் நூற்றாண்டில் அரசோச்சிய ஜகலன் பரம்பரை சிறந்த தொண்டாற்றியது. லித்துவேனி யாவை (Lithuania) போலந்தோடு சேர்ந்தவர்கள் இந்தப் பரம் பரையைச் சேர்ந்த மன்னர்களே. ஆயினும் லித்துவேனியா நாடு ஸ்வீடனுக்கு அண்மையி லுள்ளது. போலந்து அங்கு ஆதிக்கம் செலுத்துவது ஸ்வீடன் மன்னருக்குப் பிடிக்கவில்லை. 1654ஆம் ஆண்டு அந்நாட்டின் மன்னராகப் பட்டமெய்திய பத்தாம் சார்லஸ் போலந்தைத் தாக்கி முறியடித்தார் (1660). அதன் பிறகு டென்மார்க்கையும் கைக்கொண்டார். ஸ்வீடன் நாடு பலம் கொண்டிருக்க, டென்மார்க் பால்டிக் பிரதேசங்களை ஆட்சி செய்வது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் இந்நிலைமை நீடிக்கவில்லை. ஆஸ்திரியா போலந்து உரிமை பெற உதவியது; ஹாலந்தும், இங்கிலாந்தும் டென்மார்க் விடுதலையடைய உதவின. கிரிஸ்டியன் உயிர் துறக்கும்போது (1672) ஸ்வீடனின் நிலைமை பழையபடியேதா னிருந்தது; அவர் செய்த போர்கள் பயனற்றவையாயின. போலந்தில் மட்டும் ஜான் சோபியஸ்கி (John Sobieski) தோன்றினர். அந்நாட்டின் சிறப்பு வாய்ந்த

மன்னர்களில் இவர் கடைசியானவர் (1672—1696); பல சிறந்த வெற்றிகள் கண்டவர். வியன்னு பட்டணத்தைத் துருக்கியர் பிடிக்காவண்ணம் காத்து அவர்களைத் தலை எடுக்காமல் முறியடித் தவர். ஆயினும் அந்த வெற்றிக ளெல்லாம் பயனின்றி முடிந்தன.

1697ஆம் ஆண்டு பன்னிரண்டாம் சார்லஸ் ஸ்வீடனின் மன்னரானார். இவரோடுதான் ருஷிய மன்னர் பீட்டர் சண்டை போடவேண்டிய தாயிற்று. மன்னர் சிறந்த வீரர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அமைதியும் சூழ்ச்சியுமற்றவர். தவிர, லிவோனியாவிலே ஜான் ரெய்ன்ஹெல்ட் பட்குல் (John Reinhold Patkul) என்ற பிரபு சொந்தப் பழியைத் தீர்த்துக்கொள்ள ஸ்வீடனுக்கு விரோதமாகக் கிளம்பினார். அவர் போலந்து, டென்மார்க் நாடுகளை ஸ்வீடனுக்கு எதிராக இணைத்தார். பீட்டர் மன்னரும் இந்த இணைப்போடு சேர்ந்துகொண்டார்.

சண்டை தொடங்கியது. சார்லஸ் முதலில் டென்மார்க்கைத் தாக்கினார். வெற்றிமேல் வெற்றி கண்டு கடைசியில் கோபன் ஹேகன் பட்டணம் அவர் கையில் விழும்போல் தோன்றியது. டென்மார்க் உடன்பாட்டிற்கு வந்தது. அதன்படி டென்மார்க் கூட்டணியை விட்டு விலக வேண்டுமென்றும் சண்டையில் ஸ்வீடன் இழந்தவற்றிற்கு ஈடு கட்ட வேண்டுமென்றும் முடிவா யிற்று. அதன் பின் சார்லஸ் ருஷியாவை எதிர்த்தார். நார்வா பட்டணத்தில் நடந்த சண்டையில் 40,000 வீரர்கள் கொண்ட ருஷியப் பெரும் படையை ஸ்வீடன் மன்னர் முறியடித்தார். பிறகு போலந்தை நோக்கிப் புறப்பட்டார். சாக்சனி நாட்டிற்கும் போலந்துக்கும் தலைவரா யிருந்தபடியால் அந்நாட்டு வீரர் களும் போலந்தின் படையோடு இணைந்து ஸ்வீடனை எதிர்த் தார்கள். சார்லஸ் மறுபடியும் வெற்றி கண்டார். ஆனால் அங்கே வீணே காலம் போக்கினார். சாக்சனியை ஒறுக்கவும், அங்கே தமக்குப் பிடித்த ஒருவரைத் தலைவராக்கவும் அவருக்கு ஆறுண்டுக் காலம் பிடித்தது. இதற்குள் ருஷியா தனது படையை ஒழுங்குபடுத்தி ஸ்வீடனுக்கு பால்டிக் பிரதேசத்தில் சொந்தமான பாகங்களையெல்லாம் கைப்பற்றியது.

சார்லஸ் மனம் குன்றவில்லை. ருஷியாவிற்குச் சென்று மாஸ்கோவையே கைப்பற்ற எண்ணினார். ஆனால் இவ்வெண்ணம் கைகூடவில்லை. ருஷியர்களின் எதிர்ப்பு இப்போது வலிமை பெற்றது. இதனால் மாஸ்கோவிற்குப் போவதை நிறுத்தித் தமக்கு உதவுவதாகக் கூறிய ருஷியக் கிளர்ச்சித் தலைவர் மசேப்பா (Mazeppa) என்பவரைக் காணத் தெற்கு ருஷியாவை அடைந் தார். இங்குப் புல்டோவா (Pultowa) என்ற இடத்தில் பீட்டர்

ஸ்வீடன் படைகளை முற்றிலும் தோற்கடித்தார் (1709). ருஷிய வரலாற்றில் இவ்வெற்றி முக்கியமான இடம் பெறுகின்றது. ஏனென்றால் இதற்குப் பின்னரே ருஷிய வளர்ச்சி தொடங்கியது. ஸ்வீடன் மன்னர் துருக்கி சென்று உதவி வேண்டினார். எவ்வளவு முயன்றும் புல்டோவா முடிவு மாற்ற முடியாத முடிவாகவே போயிற்று. சாக்சனி நாடு இப்பொழுது போலந்தைக் கைப் பற்றியது. ஸ்வீடனுக்குச் சேர்ந்திருந்த பொமரேனியப் பகுதி இப்பொழுது பிராண்டன்பர்க் வசமாயிற்று. ருஷியா பால் டிக்கில் பெற்ற மற்ற இடங்களோடு ரிகா (Riga), ரெவால் (Reval) என்ற இரண்டையும் பெற்றது. 1715ஆம் ஆண்டு ஸ்வீடன் ஜெர்மனியில் தனக்குரிய ஸ்ட்ரால்சண்டை (Stralsund)யும் இழந் தது. சார்லஸ் இப்பொழுது நார்வேயைத் தாக்கினார். அங்கே ஒரு சிறிய கோட்டையை முற்றுகை செய்தபோது எதிரியின் குண்டுக்கு இரையானார் (1718). இதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நிஸ்டட் (Nystad) என்ற இடத்தில் ஏற்பட்ட உடன் படிக்கைப்படி எல்லா பால்டிக் நாடுகளும் ருஷியாவிற்கு உரிமை யாயின (1721).

மாமன்னர் பீட்டருடைய பெருவெற்றி இவ்வண்ணம் அமைந்தது. அவர் நீவா நதியின் முகத்துவாரத்தில் ஒரு பெரிய பட்டணத்தையே தமது வெற்றிச் சின்னமாக எழுப்பினார். ஐரோப்பிய கட்டடக் கலையைப் பின்பற்றி எழுந்த இந்தப் பட்டணம் இன்றும் அவருடைய பெயரைத் தாங்கி நிற்கிறது. பெட்ரோகிராட் (Petrograd) அல்லது செயின்ட் பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg) என்ற இப்பட்டணம் அப்பொழுதே நாட்டின் தலைநகருமாயிற்று. பீட்டர் இவ்வாறுகப் பிரான்ஸ் நாட்டின் லூயி மன்னரைப் பின்பற்றினார். அவரைப் போலவே நாட்டில் உணர்வு ஒளிர் வல்லரசை (Beneficient autocracy) நிறுவினார். பிரபுக்களுடைய பெருமையை ஒடுக்கினார். அதற்கு அவர் கண்ட வழி நூதனமானது. தமக்கு வேண்டிய பலரைப் பிரபுக்களாகச் செய்து பிரபுவின் நிலைக்கிருந்த பெருமையை நீக்கினார். புதுப் பிரபுக்களுக்கு நிலங்களையும் உரிமைகளையும் வழங்கி அவர்களைப் படையிலும், அரசாங்க நிருவாகத்திலும் பங்கெடுத்துக்கொள்ளப் பணித்தார். பிரபுக்களின் நிலங்களில் வேலை செய்து வந்தவர்கள் அடிமைகள் போல் நடத்தப்பட் டார்கள். அவர்கள் எக்காரணம் கொண்டும் நாட்டைவிட்டுப் போகக் கூடாதென்று சட்டம் பிறப்பித்தார். பிரபுக்கள் அரச ருக்கு அடங்கி நடப்பதுபோல், வேலையாட்கள் பிரபுக்களுக்கு அடங்கி நடக்கவேண்டு மென்பது அவருடைய கொள்கை. இக் கால நோக்கத்திற்கு இது பழங்காலக் கொள்கையாக இருக்கு

லாம். ஆயினும் ருஷியா அன்றிருந்த நிலையில் இத்தகைய கொள்கை வேண்டியதாயிருந்தது. நாட்டின் வளர்ச்சிக்குப் பயிர்த்தொழில் பெருக வேண்டும். அதற்கு வேலையாட்கள் தங்கள் உரிமைகளைப் பாராமல் வேலையில் ஈடுபட வேண்டும். இதற்காகவே பீட்டர் இந்தச் சட்டத்தை இயற்றினர். அவருடைய செய்கைகளை நாம் சரியாக விளங்கிக் கொள்ள அக்கால நிலையிலிருந்து அவற்றைக் காண வேண்டும். இவர் 1725ஆம் ஆண்டு காலமானர்.

IV

பீட்டர் மன்னரை ருஷியாவின் தந்தை என்று கூறவேண்டும். குற்றுயிராயிருந்த நாட்டிற்குந் தரைப்படை, கடற்படை, சீரிய அரசுமுறை என்ற இவை மூன்றையு மளித்து நல்லுயிர் தந்தார். மற்ற நாடுகளில் மன்னர்கள் படையையும் அரசு முறையையும் கீழ்த்தரமான நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதனால் அந்த நாடுகள் அவர்களைப் போற்றுகின்றன. முன் இயலில் நாம் கூறிய ரிச்சல்யு, மசாரின் போன்றவர்களும் இதைப் போன்றவற்றைத்தான் சாதித்தார்கள். ஆனால் பீட்டர் மன்னரின் சாதனைகள் இவர்களுடைய சாதனைகளி லெல்லாம் பெரியவை. அவர் ஒன்றுமில்லாமலே ஒரு பெரும் படையை நிர்மாணித்தார்; நல்ல அரசியல் முறையை வகுத்தளித்தார். கப்பல் கட்டுவது எப்படி என்று தெரியாத நாட்டில் கப்பற் படையையே நிர்மாணித்தார். அவருடைய மனத் துணிவு வியக்கற்பாலது. அக்காலத்தில் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்த ஸ்வீடன் படையினரோடு சண்டை செய்ய முடிவு செய்தார். 40,000 படைவீரர்கள் முதல் சண்டையிலேயே தோற்றார்கள். ஆயினும் மனந்தளராமல் ஆறுண்டு காலத்தில் முன்னிலும் அதிக வீரர்களைத் திரட்டி அவர்களுக்கு நல்ல பயிற்சி அளித்து வெற்றி கண்டார்.

பீட்டரின் பெருமைக்குச் சான்று பகர்வது அவருடைய உறுதியான உள்ளம். எண்ணிய எண்ணியாங் கெய்தும் திண்ணிய உள்ளத்தினர் பீட்டர். இதை அவருடைய எல்லாச் சீர்திருத்தங்களிலும் காணலாம். மக்கள் உடையிலும் உணவிலும் ஐரோப்பிய மயமாக வேண்டுமென்று முடிவு கட்டினர். இதற்குச் சட்டம், வரி என்ற எல்லா முறைகளையும் கையாண்ட பின், தாமே மக்களின் நீண்ட தாடிகளை வெட்டத் தீர்மானித்தார். கசையடி போன்ற கடுமையான முறைகளைப் பீட்டர் கையாண்டார் என்பது உண்மை. ஆனால் அக்காலத்து மக்களுக்கு

அவ்வகை முறைதான் பயனளித்தது. சிறைக்குச் செல்வதைவிட மக்கள் கசையடிக்கு அதிகமாக அஞ்சினர்கள். சிறைவாசம் மக்களுக்குத் தீமை அளிக்கக்கூடியதா நன்மை அளிக்கக்கூடியதா என்பதைப்பற்றி இன்னும் எண்ண முரண்பா டிருக்கின்றது. ஒன்று மட்டும் உறுதி. சிறை செல்வோரைச் சிறிது காலமாவது நாட்டுக்குப் பயனற்றவர்களாகச் செய்வது சிறை முறை. கசையடி முறையோ உடனுக்குடன் பயனளிப்பதோடு, மக்களின் உழைப்பை நாடு ஒருபோதும் இழக்காமலும் காக்கிறது. சிறை முறையில் இருவகை இழப்புக்கள் நாட்டுக்கு ஏற்படுகின்றன. சிறை செல்வோன் சிறையிலிருக்கும் வரை நாட்டிற்குப் பயன் படான். அதோடு சிறையிலிருக்கும் வரை நாடு அவனுக்கு உண வளிக்க வேண்டியிருக்கிறது. இவற்றை யெல்லாம் சிந்தித்தே பீட்டர் கசையடி முறையைப் பின்பற்றினர்.

மக்கள் நாகரிகமடைய அவர்களை ஐரோப்பிய மயமாக்க வேண்டுமென்று பீட்டர் நினைத்தார். இந்த முடிவு இக்காலத்தில் வியப்பூட்டக் கூடும். ஒவ்வொரு நாட்டினரும் தம் தம் முறைப்படி இயங்க வேண்டும், உடுக்க வேண்டும், உண்ண வேண்டும் என்ற கொள்கை இப்பொழுது எங்கும் உலவுகிறது. ஆனால் பீட்டரின் எண்ணம் வேறு. அவர் ஐரோப்பியரைக் கண்டு வியந்தார். அவர்களைப்போல் தம் நாட்டு மக்களும் ஆகவேண்டும் என்று விழைந்தார். அதற்குதவியாக உடை மாற்றத்தைப் பணித்தார். மக்களுள்ளத்தே நடக்கும் மாற்றத்திற்கு வெளித்தோற்றம் சான்று பகர்வதென்றும், வெளித் தோற்றம் உள் மாற்றத்திற்கு ஊக்கமளிப்பதென்றும் பீட்டர் உறுதியாக நம்பினர். இந்த எண்ணம் நடைமுறையில் இயங்கச் சட்டமும் இயற்றினர். பிற்காலத்தில் கெமால் பாச்சா துருக்கி நாட்டில் கொண்டுவந்த சீர்திருத்தமும் இக்கொள்கையைப் பின்பற்றியதே. உலக வர லாற்றில் உளமறிந்து சட்டமியற்றிய பெரியார்களில் முதல்வர் பீட்டர் மன்னர். இத்தகைய சட்டம் எந்த நாட்டிலும் இதற்கு முன் இயற்றப்படவில்லை.

பீட்டர் சிறந்த சிந்தனையாளர் என்பதைப்பற்றி ஐயம் வேண்டுவதில்லை. நாட்டின் நலனைப்பற்றி அவர் கண்ட முடிபுக ளெல்லாம் சரியானவை. ருஷிய மக்கள் முன்னேற வேண்டு மானால் அவர்களுடைய தொழில்களும் வாணிகமும் வளர வேண்டும். இவை வளர்வதற்கு அவர்கள் கடல் கடந்து வாணிகம் செய்ய வேண்டும், இதற்குக் கப்பல்கள் தேவை, துறைமுகங்கள் தேவை, கப்பல்கள் செய்வதற்கு ஊக்கமும் பயிற்சியும் தேவை, துறைமுகங்களைப் பெறுவதற்கு ஸ்வீடன் நாட்டுடனும், போலந்து நாட்டுடனும் சண்டை செய்ய வேண்டும், இதற்குத்

தரைப் படையும், கப்பல் படையும் தேவை என்று ஒன்றன் பின் ஒன்றுகச் சிறந்த முடிவுகளைக் கண்டார். கண்டபின் செயலாற்றத் தொடங்கினர். தெற்கே கருங்கடலில் துருக்கியருக்குச் சொந்த மான அசாவ் துறைமுகம் முதல் முதல் அவர் கைக்கு வந்தது. ஆயினும் அது நாட்டிற்கு மிகச் சேய்மையிலிருந்தபடியால் அது ஐரோப்பியர் உதவியின்றிப் பயன் தராது என்பதைக் கண்டு, அவர் ஐரோப்பாவிற்கு ஒரு முறை அரசியல் பயணம் (diplomatic journey) போனார். ஹாலந்து, இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி போன்ற பல நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து அவற்றின் உதவியைப் பெற முயற்சித்தார். ஐரோப்பிய நாடுகள் தமக்கு உதவ மாட்டா என்று கண்ட பின்னும் அவர் மனந் தளரவில்லை; தம் பயணத்தைப் பயனுள்ளதாகவே செய்து கொண்டார். ஐரோப்பிய நாகரிகத்தையும், கலை, விஞ்ஞான வளர்ச்சியையும் ஆராய்ந்துணர்ந்தார். சிறந்த பொறியியல் வல்லுநரை ஜெர் மனியிலிருந்து கொண்டு வந்து தமக்குத் தாமாகவே உதவிக் கொள்ள முடிவு செய்தார். அசாவ் துறைமுகத்தைத் துருக்கிய ருக்கே திருப்பிக் கொடுத்தார். அரசியல் பயணங்கள் பல செய்யப்படும் இக்காலத்தில் பீட்டர் செய்த முயற்சி பெரிதாகத் தோன்றுமலிருக்கலாம். ஆயினும் அவர்தாம் முதல் முதல் ஐரோப்பாவில் இம்முறையைக் கையாண்டவர் என்று நினைக்கும் போது அவருடைய தனிச் சிந்தையும் (originality of thought), செயல் முறை அறிவும் (practicality) நம்மை வியக்கச் செய் கின்றன.

நாட்டின் நிரந்தரமான வளர்ச்சிக்குச் சிறந்த அரசியல் முறை அவசிய மென்பதை ருஷியாவில் முதல்முதல் கண்ட அரசர் பீட்டரே. அதுவரை அங்குப் பிரபுக்கள் ஆட்சி நடந்தது. அது தன்னல விரும்பிகள் ஆட்சி. நாட்டின் நலனுக்காக ஆவன செய்யக்கூடிய ஆட்சி அங்கு இல்லை. இதற்குச் சிறந்த முறையில் பீட்டர் மாற்றமளித்தார். நாட்டைப் பல மாவட்டங்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரை ஆளச் செய் தார். இந்த ஆட்சித் தலைவர்கள் படைத்தலைவர்கள். அவர்கள் பேரரசரின் கீழ்ப் பணியாற்றினர்; அவருடைய சீர்திருத்தங்களை நிறைவேற்றினர்; வரி வசூல் செய்தனர். ஆயினும் அது படை யாட்சி (army rule)யாக நிலவவில்லை; அரசரின் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டே படைத் தலைவர்கள் தங்கள் அரசாங்க வேலைகளில் ஈடுபட்டார்கள். அக் கால ருஷியாவில் அரசியல் பணியாற்றப் படைவலிமை உள்ளவர்களால்தான் முடியும். அதனாலேயே படைத் தலைவர்களைப் பீட்டர் அரசாங்கப் பதவியில் அமர்த் தினர், ஆயினும் படைத் தலைவர்களுக் குதவியாகப் பலரைப்

பதவியி லமர்த்தினர். இவர்கள் நாளடைவில் அவர்கள் பயிற்சி பெற்றுச் சிறந்த அலுவலர்களாக விளங்கினர்கள். தங்கள் வேலைகளுக்கு எத்தகைய பண்பாடுகள் வேண்டுமென்பதை வகுத் தார்கள். இவ்விதமாய் ருஷியாவில் முதல் தடவையாக நிலையான அரசாங்க ஊழியர் முறை (civil service) ஏற்பட்டது. பிரபுக்களை ஒடுக்குவதற்கு இவர் அவர்களது எண்ணிக்கையை மிகுதிப் படுத்தினர் என முன்னரே கூறினேம். இது அவருடைய அரசியல் திறமையை விளக்கச் சிறந்த எடுத்துக்காட்டு. பிரபுக்களின் எண்ணிக்கை பெருகினதற்கேற்ப அவர்களுடைய அரசியல் சபையும் மதிப்பிற் குறைந்தது. புதிய பிரபுக்கள் எப்பொழுதும் அரசருக்கு உதவியா யிருந்தார்கள். ஆகையால் நாளடைவில் டூமா (Duma) என்ற அவர்களுடைய அரசியல் ஆராய்ச்சி மன்றம் வெறும் மன்றமாகியது. அதன் முடிவைப் பின்பற்றுவது அரசருடைய விருப்பம் என்ற முறை நடைமுறையில் ஏற்பட்டது. அரசரும் அதற்கேற்பச் சட்டமியற்றினர். மேலும் பிரபுக்களின் கை ஓங்காமல் செய்வதற்கு ஒவ்வொரு பட்டணத்திலும் தன் னாட்சி முறையை (local self-government)ப் பீட்டர் நிறுவினர். இவ்வாறாக நாட்டின் பல பாகங்களிலும் தன்னாட்சி மன்றக் கட்டடங்கள் (Town halls) ஐரோப்பியப் பாணியில் எழுந்தன. இங்கே மக்களின் பிரதிநிதிகள் (aldermen) அந்தந்தப் பட்டணங் களுக்கு வேண்டிய நன்மைகளை அரசரின் ஆணைக்குட்பட்டுத் தேடிக் கொண்டார்கள். நாடு நலம் பெற்றது; பிரபுக்கள் ஒடுங்கினர்கள்; மத்திய அரசாங்கம் வலுப்பெற்றது. பீட்டர் மன்னர் சமயத்தையும் தம் பக்கம் திருப்பினர். பழைய மதத் தலைவரை (Patriarch) நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக ஒரு சமய மன்றத்தை, ''புனிதக் கழகத்தை'' (Holy Synod) ஏற்படுத்தினர். இதில் தமக்கு வேண்டியவர்களை உறுப்பினர்களாக நியமித்துச் சமயம் தரும் வலிமையைத் தமது வலிமையாகச் செய்து கொண்டார்.

பீட்டர் மன்னர் நாட்டிற்குச் செய்த பெரும் பணிகளில் முக்கியமானது தம்மைப் போலவே தம் குடும்பத்தினரையும் நாட்டின் நன்மையில் ஈடுபடச் செய்தது என்று கூறவேண்டும். நாட்டின் அரசியலில் ஈடுபடுவதும் அவர்கள் குடும்பத் தினர் அதில் அதிகக் கவலை எடுத்துக்கொள்ளாம லிருப்பதும் நாம் வழக்கமாகக் காண்பதொன்று. ஆனால் பீட்டர் தாம் ஈடுபட்ட தைப் போலவே தம் குடும்பத்தின ரெல்லோரையும் அரசியலில் ஈடுபடச் செய்தார். தம் அரசியாரையும், பிள்ளைகளையும் அதில் நேரடியாக ஈடுபடச் செய்தார். நாட்டின் நலனுக்குத் தீங் கிழைத்த தம் பிள்ளையையே, கொடுமையாகக் கொல்ல ஆணை

யிட்டார். பீட்டருக்குப் பின் அவர் மனைவியாரே அரசுப் பட்ட மேற்றனர். அதன் பிறகு அவர் பேரப் பிள்ளை; பிறகு அவருடைய உடன் பிறந்தார் மகள்; அதற்குப் பிறகு அவருடைய கடைசி மகன் என்று இவ்வாறு அடுத்தடுத்து ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுக் காலம் பீட்டரின் அரசாட்சியை நேரடி யாகப் பார்த்தவர்கள் அரசுக்கட்டி லேறினர். ஆகையால் அவருடைய கொள்கைகள் உறுதிப்பட வழியேற்பட்டது. இதைத் தவிர, பீட்டருடைய அரசு குடும்பம் 1917 வரை, அவருக்குப் பின் ஏறக்குறைய இருநூறு ஆண்டுக் காலம், அவர் காட்டிய வழியைச் செப்பனிட்டது. இதனால் அவருடைய திட்டங்கள் நாட்டின் திட்டங்களாக மாறி அதன்பண்பாட்டோடு கலந்து இயங்க வாய்ப்பேற்பட்டது. பீட்டர் ருஷியாவுக்குத் தந்தது வெறும் அரசியல் திட்டம் மட்டுமல்ல, விரிந்த நாடு மட்டுமல்ல; ஒரு புது வாழ்க்கை முறையையே அவர் ருஷியர் களுக்கு அமைத்துத் தந்தார். அதனால்தான் அவர்கள் மட்டு மல்லாமல் உலகமே பீட்டரைப் போற்றுகின்றது.

V

மாமன்னர் பீட்டரையும் அவருடைய ஆட்சி முறையையும் நேரடியாகக் கண்டு அரசுக் கட்டில் ஏறியவர்களில் கடைசி யானவர் எலிசெபத் அரசி. அவர் 1761ஆம் ஆண்டு இறுதி எய்தினர். அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர் மூன்றும் பீட்டர். ஆனால் உண்மையில் ஆட்சி நடத்தியது அவருடைய அரசியார் கேத்தரீன் (Catherine). இவரை ருஷிய வரலாற்றில் மாபெருங் கேத்தரீன் (Catherine the Great) என்று கூறுகிறார்கள். இவர் ஆட்சி செய்த காலம் 1762 முதல் 1796 வரையுள்ள முப்பத்தைந்து ஆண்டுகள். இவர் பிறப்பில் ஜெர்மானியர்; ஆனால் சிறு வயது தொட்டே ருஷியாவில் வளர்ந்தவர். இவர் சிறந்த சமர்த்தர் என்பதில் ஐயமில்லை. மூன்றும் பீட்டர் பட்டத்திற்கு வந்த சில மாதங்களில் அரசியின் ஆணையால் சிறை யில் தள்ளப்பட்டார். பிறகு அங்கேயே அவர் இறந்தார். அதன் பின் கேத்தரீன் நேரடியாக ஆட்சியில் இறங்கினர். தாம் அதிக மாகப் படிக்காவிட்டாலும் ருஷியர்களின் அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த தொண்டாற்றினர்; பிரஞ்சு மொழி, பழக்க வழக்கங்கள், கலை ஆகியவை அக்காலத்தில் சிறந்துவிளங்கினமையால் அவற்றை ருஷியர்கள் ஏற்கும்படி செய்தார். பிரஞ்சு மொழி நாட்டின் முதல் மொழியாகவும் ருஷிய மொழி நாட்டின் இரண்டாம் மொழியாகவும் மாறின வென்றால் அரசியின் கட்டுப்பாடு எத் தகையது என்பதை ஒருவாறு அறியக்கூடும்.

ஆயினும், அரசியாரின் திறமை உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் மூலம் தெரிந்ததைவிட அவருடைய வெளிநாட்டு விவகாரங்களில் நன்கு புலப்பட்டது. பீட்டர் மன்னர் ருஷியாவை மூன்று எதிரிகளிட மிருந்து காப்பாற்றத் திட்டமிட் டிருந்தார். அவை ஸ்வீடன், போலந்து, துருக்கி என்ற நாடுகள். இவற்றில் ஸ்வீடன் நாட்டை அவர் அடிபணிய வைத்தார். முப்பத்தைந் தாண்டுகளுக்குப் பிறகு இந்த வேலையைப் பீட்டர் மன்னர் விட்ட இடத்திலிருந்து கேத்தரீன் தொடங்கினர். 1764ஆம் ஆண்டு பிரஷ்ய மன்னர் இரண்டாம் பிரடிரிக்கின் (Frederick the Great) உதவி கொண்டு தமக்கு வேண்டிய ஒருவரைப் போலந்து நாட்டின் மன்னராகத் தேர்ந்தெடுத்தார். அப்பொழுது போலந்து நாட்டின் அரசியல் முறை மிக இழிந்த நிலைமையி லிருந்தது. இதைத் தம்முடைய விருப்பமில்லாமல் மாற்றுவதில்லை என்று போலந்து நாட்டின் அரசரோடும் அவருடைய சில பிரபுக்களோடும் உடன் படிக்கை செய்து கொண்டார் அரசியார் (1768). நான்காண்டு கள் சென்று ஆஸ்திரியா நாட்டையும் தம்மோடு சேர்த்துக் கொண்டு போலந்தைத் தம்முள் பங்கிட்டுக் கொண்டார்கள். பிரஷ்யா மேற்குப் போலந்தையும், ஆஸ்திரியா கலீஷியா (Galicia) பிரதேசத்தையும், ருஷியா டுனை, டினீபர் நதிகளுக்குக் கிழக்கே உள்ள பாகத்தையுமாகப் போலந்தில் கால் பாகத்தைக் கைப்பற்றின (1772).

போலந்து மக்கள் திகைத்தார்கள். உடனே தங்களுள் நிலவிய வேற்றுமை உணர்ச்சியை மாற்றி ஒன்றுபட்டார்கள். கோஷியுஸ்கோ (Kosciusko) என்ற தலைவரின் கீழ் அவர்கள் தங்கள் அரசியல் முறையை முதலில் மாற்றி அமைக்க விழைந் தார்கள். ஆனால் ருஷிய அரசியார் அது முன்னைய உடன்படிக் கைக்கு மாறுனதென்று கூறி மறுபடியும் போலந்தைப் பங்கு போட்டுக்கொள்ள முற்பட்டார். பிரஷ்யா மேற்குப் போலந்தில் மறுபடியும் ஒரு பாகத்தை வார்சா பட்டணம் வரை கைப் பற்றியது; ருஷியா கிழக்குப் போலந்தில் ஒரு பெரும் பாகத்தைக் கைப்பற்றியது. இதற்கு இரண்டாவது பாகப் பிரிவினை (Second Partition of Poland) என்று பெயர். இந்த வியத்தகு நிகழ்ச்சி 1793ஆம் ஆண்டு நிகழ்ந்தது. கோஷியுஸ்கோ சண்டை யில் காயமடைந்து சிறைப்பட்டார். இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஆஸ்திரியாவும், பிரஷ்யாவும் மறுபடியும் ருஷியாவுடன் சேர்ந்து எஞ்சி நிற்கும் போலந்து நாட்டை மறுபடியும் தம்முள் பங்கிட்டுக் கொண்டன (1795).

ஒரு நாட்டின் வலிமையை ஒடுக்கக் கேத்தரீன் கண்ட புது வழி இது. இதில் அவர் வெற்றியும் கண்டார். அதே சமயம்

துருக்கியரை ஒடுக்க அவர்களோடு அரசியார் 1768 முதல் 1774 வரை சண்டை செய்தார். 1774ஆம் ஆண்டு குஜுக் கைநார்ஜி (Kuchuk Kainarji) என்ற இடத்தில் நடந்த உடன் படிக்கைப்படி துருக்கியர் அசாவ் துறைமுகப் பட்டினத்தையும் அதைச் சுற்றி யுள்ள இடத்தையும் ருஷியாவிற்கு நல்கினர்கள். கருங்கடலின் வடபாகத்தில் ருஷியாவிற்குச் சொந்தமான இடங்கள் திரும்பவும் அதற்குத் தரப்பட்டன. கான்ஸ்டான்டிநோபிளில் இருந்த கிறிஸ்தவ மதத்தினரைக் காக்க ருஷியா உரிமை பெற்றது. இவ் விதமாக ருஷியா துருக்கியை எச்சமயமும் அடக்கியாளக் கூடும். பாஸ்பரஸ், டார்டனெல்ஸ் வழியாக ருஷியக் கப்பல்கள் சுதந்திர மாகச் செல்ல இப்போது உரிமை அளிக்கப்பட்டது. விரைவில் கிரீமியன் பகுதி ருஷியருக்குச் சொந்தமாயிற்று.

அரசியார் கேத்தரீன் 1796ஆம் ஆண்டு காலமானார். அவ ருடைய செய்கைகளின் ஒழுங்கை நாம் காணமுடியா விட்டாலும், அவர் துணிவான செயல்கள் புரிந்த வித்தகு அரசியார் என்பதில் ஐயமில்லை. ருஷியாவின் மறுமலர்ச்சிக்குச் சிறந்த தொண்டாற் றினவர்களில் இவர் மிகப் பெரியவர். பீட்டர் மன்னர் எடுத்த வேலையை முடித்துத் தந்த பெருமை இவரைச் சாரும். பிறகு ருஷியா வளர்ந்தது. அதன் வளர்ச்சிக்குப் பலர் சிறந்த பணி புரிந்தார்கள். ஆனால் அவர்கள் பணிக்கு அடிப்படையானவரில் கேத்தரீன் அரசியும் ஒருவர்.

9. பிரஷ்யாவின் எழுச்சி

(முன்னுரை - துருக்கியும் ஆஸ்திரிய நாடும் - பிரஷ்யாவின் தோற்றமும் வளர்ச்சியும் - இரு பெரும் போர்கள் - புது நோக்கம் கொண்ட யதேச்சாதிகாரம்)

I

ருஷியாவின் மறுமலர்ச்சி ஒரு நாட்டையே தோற்றுவித்தது. 1417ஆம் ஆண்டிலிருந்து பிராண்டன்பர்க் பகுதியில் ஒரு சிற்றரசுக் குடும்பம் ஆட்சி செலுத்தியது. ஐரோப்பிய சமய மாற்றத்தின் போதும் சமயச் சண்டைகளின் போதும் இந்த அரசுக் குடும்பம் பெரும் பணியாற்றிய தென்பதை நாம் முன் இயலில் கூறினேம். 1611ஆம் ஆண்டு பிரஷ்யாவில் ஆட்சி செய்துவந்த ஆல்பெர்ட் மன்னரின் குடும்பத்தில் பட்டத்திற்கு வர ஆள் இல்லை. ஆகையால் அவருக்குப் பிறகு பிரஷ்யா நாடு அவருக்கு நெருங்கிய உறவினரான பிராண்டன்பர்க் பிரபுவுக்குக் கொடுக்கப்பட்டது. ஏறக்குறைய அதே சமயம் ஜூலிச் (Julich), கிளீவ்ஸ் (Cleves), பெர்க் (Berg) பிரதேசங்களில் ஆட்சி செய்த பிரபுவும் காலமானார். அவருக்கும் வாரிசு இல்லாமற் போனதால் அவருடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களும் பிராண்டன்பர்க் பிரபுவை வந்தடைந்தன. இவ்விதமாக இக்கால ஜெர்மனியின் மூன்று முக்கிய பாகங்கள் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே பிராண்டன்பர்க் பிரபுவுக்குக் கிடைத்தன. இதுவே பிரஷ்யாவின் தொடக்கமென்று கூறவேண்டும். காலப் போக்கிலே பிராண்டன்பர்க் பிரபுக்கள் சிறந்த திறமையாளர்களாக விளங்கினார்கள். இவர்களில் ஒருவரான பிரடிரிக் வில்லியம் (Frederick William—1713-40) என்பவர் சிறந்த அரசாட்சி முறைகளைக் கைப்பற்றினர். அதே சமயம் ருஷியாவில் நடந்துவந்த மாபெரும் பீட்டருடைய ஆட்சி (1682—1725) பிராண்டன்பர்க் பிரபுவுக்குச் சிறந்த வழிகாட்டியாக இருந்தது. பீட்டர் கையாண்ட ஆட்சி முறையை முதலாம் பிரடிரிக் வில்லியத்தின் புதல்வர் மாபெரும் பிரடிரிக் (Frederick the Great) பின் பற்றினர். பதினான்காம் லூயியின் அரசு முறையைப் பின்பற்றியவர்களில் முக்கியமானவர்கள் மாபெரும் பீட்டரும் மாபெரும் பிரடிரிக்கு மாவர். இந்த மூவர் ஆட்சி முறைகளையும் வரலாறு

யதேச்சை நல்லாட்சி (Beneficent autocracy) என்றும் உணர்வு ஒளிர் வல்லரசு (Benevolent Despotism) என்றும் குறிக்கின்றது.

II

பிரஷ்யாவின் வளர்ச்சியைப் பற்றிக் கூறுமுன் துருக்கியரையும் ஆஸ்திரியரையும் பற்றி ஒரு சிறிது கூறவேண்டும். துருக்கியரின் வீழ்ச்சி ஆஸ்திரிய வளர்ச்சிக்கு அடிகோலியது; ஆஸ்திரிய வளர்ச்சி பிரஷ்ய வளர்ச்சிக்கு அடிகோலியது.

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பாகத்திலிருந்து துருக்கியர் ஐரோப்பிய வரலாற்றில் பேரிடம் பெறுகின்றார்கள். 1453ஆம் ஆண்டு கான்ஸ்டான்டிநோபிள் பட்டணம் அவர்கள் கையில் விழுந்ததைப் பற்றி முன்னர்க் கூறினேம். இதிலிருந்து ஏறக்குறைய இருநூறு ஆண்டுக் காலம் துருக்கியர் ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்தினர்கள். 1683ஆம் ஆண்டில் நாம் முன்னே கூறியபடி போலந்து மன்னர் சோபியஸ்கிதான் முதல் முதல் அவர்கள் ஆதிக்கத்திற்கு முடிவுகட்டினர். அப்பொழுது அவர்களுடையஇராச்சியம் பாக்தாத்பட்டணத்திலிருந்துமொரோக்கோ வரையிலும், பெர்சிய வளைகுடாவிலிருந்து டானியூப் நதி வரையிலும் பரவியிருந்தது.

துருக்கியரை எதிர்ப்பதில் போலந்தை விடப் பெரு முயற்சி எடுத்த ஐரோப்பிய நாடு ஆஸ்திரியாதான். ஆனால் அந்நாடு பல காலம் ஒற்றுமையின்மையால் நலிந்திருந்தது. அதனைச் சேர்ந்த ஹங்கேரி நாட்டிலேயே ஆஸ்திரியாவிற்கு ஆதரவில்லை. அங்கே பிரபுக்கள் எப்பொழுதும் ஆஸ்திரியாவிற்கு விரோதமாகக் கிளர்ச்சிசெய்து வந்தார்கள். 1658 முதல் 1705 வரை ஆஸ்திரிய நாட்டை ஆட்சி செய்துவந்த லெயோபால்ட் (Leopold) அரசர் காலத்திலும் அவருடைய இராச்சியத்தில் ஒற்றுமை யில்லை. ஜெர்மனியிலிருந்தும் சேவாய் நாட்டிலிருந்தும் சிறந்த படைவீரர்களைச் சேர்த்து யூஜீன் இளவரசர் (Prince Eugene) துருக்கியரை 1699 ஆம் ஆண்டு சென்டா (Zenta) என்ற இடத்தில் வென்றார். 1683 இல் போலந்து கண்ட வெற்றிக்குப் பிறகு ஆஸ்திரியா அடைந்த இந்த வெற்றி அவர்களைத் தோல்வியில் துவளச் செய்தது. இதற்குப் பிறகு ஏற்பட்ட கார்லோவிட்ச் உடன்படிக்கையில் (Peace of Carlovitz) ஹங்கேரி, டிரான்சில்வேனியாப் பிரதேசங்கள் ஆஸ்திரியாவிற்குச் சேரவேண்டு மென்றும், படோலியா, உக்ரேன் பிரதேசங்கள் போலந்துக்குச் சேரவேண்டு மென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆயினும் ஆஸ்திரிய ராச்சியம் அளவில்

பெருகப் பெருக அதில் ஒருமைப்பாடில்லாத பலர் குடிமக்களாயினர். சமய வேற்றுமையும், மொழி வேற்றுமையும், குல வேற்றுமையும் அவர்களிடம் மலிந்திருந்தன. அவர்களில் பலர் கத்தோலிக்கர்; பலர் மறுப்பாளர்கள். தனி அரசுக் கொள்கையை ஆதரித்தவர் ஒருசாரார்; பிரபுக்கள் அரசை ஆதரித்தவர் மற்றொரு சாரார். இந்த நிலையில் அங்குக் கூட்டாட்சி முறையே (Federation) ஏற்றதாக இருந்திருக்கும். ஆனல் இம்முறை அப்போது ஐரோப்பாவில் வழக்கத்தில் இல்லை. ஆகவே பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆஸ்திரியா ஒரு நாடாக இருந்தது; ஆனல் அங்கு ஒற்றுமை யென்ற உயிர் நாடி இல்லை. அப்போதுதான் உட்ரெக்ட் உடன் படிக்கை ஏற்பட்டது (1713). அதன்படி ஆஸ்திரிய இராச்சியம் இன்னும் பெருகியது.

III

ஆஸ்திரியாவின் நிலைமை இடுக்கண் நிறைந்ததா யிருந்தது. அது பலம் கொண்ட நாடுகளுக்குச் சுலபமாக இரையாகக் கூடிய நிலைமை. இதை பிராண்டன்பர்க் நன்கு பயன்படுத்திக் கொண்டது. ஆஸ்திரிய மன்னர்தான் அப்போதைய ஐரோப் பியப் பேரரசர். உண்மையில் அவர் அப்படி யில்லாவிட்டாலும் அந்தப் பட்டத்தை அப்போது வகித்தவர் அவரே. அவருக்குப் பிராண்டன்பர்க்கின் உதவி தேவையா யிருந்தது. ஆகையால் 1685இல் பிராண்டன்பர்க்கின் பிரபுவாகப் பட்டமெய்திய முதலாம் பிரடிரிக் பேரரசரின் அனுமதியின் மேல் பிரஷ்ய மன்னர் என்ற பட்டம் எய்தினர் (1701). அப்போதுதான் பிரஷ்ய நாடு முதல் முதல் ஐரோப்பிய அரங்கில் தோன்றியது.

ஜூலிச், கிளீவ்ஸ், பெர்க், பிரஷ்யா, பிராண்டன்பர்க் என்ற பகுதிகள் சேர்ந்தமைந்தது பிரஷ்யா நாடு. பிரஷ்யா என்ற சிறிய பிரதேசம் பிராண்டன்பர்க்கின் கீழ் வந்தும் அது போலந்து நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. இதை 1657ஆம் ஆண்டி லேயே பிராண்டன்பர்க்கின் பெயர்பெற்ற முதல் பிரபு போலந் திடமிருந்து மீட்டார். 1675ஆம் ஆண்டில் பிராண்டன் பர்க்கைத் தாக்கிய சுவீடன் நாட்டினரை அவர் பெர்பெல்லன் (Fehrbelien) என்ற இடத்தில் தோற்கடித்து மாபெரும் பிரபு (Great Elector) என்ற பட்டமும் பெற்றார். வெஸ்ட்பேலியா உடன்படிக்கைப்படி மேக்டெபெர்க், கிழக்கு பொமரேனியா என்ற முக்கியப் பிரதேசங்கள் ஏற்கெனவே பிராண்டன்பர்க் கோடு சேர்ந்தன (1648).. கிழக்கு பொமரேனியா பால்டிக்

கடலுக்கு வழி காட்டியது. தவிர, இந்த உடன்படிக்கை ஏற்பட்ட சமயம் முப்பதாண்டுச் சண்டைக்குப் பிறகு ஜெர்மனி நாடு முழுவதும் மிகவும் சோர்வுற் றிருந்தது; மக்கள் நல்வாழ்வை ஆவலோடு எதிர்பார்த்தனர். ஆதலால் பிரஷ்யாவிற்குச் சொந்தமான பிரதேசங்களை ஒன்றுக இணைப்பது மாபெரும் பிரபுவுக்கு எளிதாயிற்று. அவர் கால்வாய்கள் அமைத்தார். பயிர்த்தொழில் பெருகவும் வாணிகம் பெருகவும் வழி கண்டார். 1685ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளியேறிய ஹியுக் நோக்களைத் தமது நாட்டில் வரவேற்று ஆதரித்தார். இவ்வித மாய்க் கைத்தொழில் அங்கே முன்னேறியது. ஹியுக்நோக்கள் சிறந்த தொழில் மேதைகள்; வாணிகத்தில் மிக முன்னேறிய வர்கள். இவர்கள் பல்லாயிரக் கணக்கில் இப்பொழுது பிரஷ் யாவில் குடியேறினர்கள். நாடு செழித்தது: பிராண்டன்பர்க் பிரபுவின் சொற்படி நடக்க மக்கள் காத்திருந்தார்கள். இந்தச் சமயத்தை அவர் நன்கு பயன்படுத்திக்கொண்டு தமது பலங் கொண்ட ஆட்சியை பிரஷ்யா நாடு முழுவதும் ஏற்படுத்தினர். பிரஷ்யாவோடு இணைந்திருந்த ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான ஆட்சி நிலவியது. பிராண்டன்பர்க், கிளீவ்ஸ், பிரஷ்யா போன்ற ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் சபை ஆட்சி புரிந்தது. நாட்டின் முன்னேற்றத்திற்கு இவை பேரிடையூறுகள் என்று கண்ட வில்லியம் இவைகளையெல்லாம் ஒழித்துத் தமது தனி யாட்சியை நாடு முழுவதிலும் ஏற்படுத்தினர்.

மாபெரும் பிரபு என்று வில்லியம் அடைந்த பட்டம் உண்மையிலே பொருத்தமானது. இவரைப் பிரஷ்யாவின் தந்தை என்று கூற வேண்டும். 1640ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இவர் 1688ஆம் ஆண்டு இறந்தார். அவருடைய நீண்ட கால ஆட்சி பிரஷ்யா நிலைகொள்ள உதவியது. இவர் சிறந்த சமர்த்தர். இவருக்குப் பின் வந்த அவருடைய பிள்ளை முதலாம் பிரடிரிக் இவரைப் போலவே சிறந்து விளங்கினர். 1688 முதல் 1713 வரை இவருடைய ஆட்சி நீடித்தது. முதல் முதல் பிரஷ்யாவின் மன்னர் என்ற பட்டம் சூடியவர் இவரே. இதைப்பற்றி முன்னர்க் கூறினேம். ஜெர்மனியில் அரசு செலுத்திய ஹேனேவர் பிரபு இங்கிலாந்துக்கு அரசரா யிருந்தார்; சாக்சனி பிரபு போலந்துக்கு அரசரா யிருந்தார்; ஹோல்ஸ்டேய்ன் பிரபு டென்மார்க் நாட்டிற்கு அரசரா யிருந்தார். ஆகையால் பிராண்டன்பர்க் பிரபு தம்மைப் பிரஷ்யாவின் மன்னராக்கிக்கொள்ள வேண்டு மென்று எண்ணியதில் வியப்பில்லை. பேரரசரும் இதற்குச் சம் மதித்தார். ஸ்பானிய வாரிசுரிமைப் போரில் இவருடைய உதவி பேரரசருக்குத் தேவையா யிருந்தது. ஆதலால் அவர் இதற்குச்

சம்மதித்ததில் வியப்பில்லை. அடுத்து வந்த இந்தப் போரிலும் பிரஷ்ய மன்னர் பிளன்ஹேய்ம் முதலிய சண்டைகளிலே சிறந்த பணியாற்றினர். அவருடைய படைகள் பெரு வெற்றிகள் கண்ட தால் சிறப்புற்றன. இவை யாவும் அவர் தனி அரசு நிறுவிக் கொள்ள உதவின.

1713ஆம் ஆண்டில் முதலாம் பிரடிரிக் வில்லியம் பிரஷ்ய அரியணை ஏறினர். தந்தையைப் போலவே தனயனும் சிறந்த ஆட்சியாளர். ஒரு விதத்தில் இவர் தந்தையைக் காட்டிலும் திறமை காட்டினர் என்று கூறவேண்டும். தந்தை வெளித் தோற்றங்களில் நம்பிக்கை கொண்டவர். அரசன் அரச ஒழுங்கு முறைப்படி தோற்றமளிக்க வேண்டு மென்பது அவர் கருத்து. ஆடம்பர உடை, உணவு போன்ற வாழ்க்கை முறைகளை முதலாம் பிரடிரிக் கடைப்பிடித்தார். மன்னர் என்ற பட்டத்தைப் பெற்ற முதல் பிரஷ்ய மன்னரல்லவா அவர்? அவர் இத்தகைய முறை களைக் கடைப்பிடித்தது இயற்கையே. ஆனால் அவர் மகனர் முதலாம் பிரடிரிக் வில்லியம் இவற்றை வெறுத்தார். தந்தை ஏற்படுத்திய பல அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்கினர். கடுமையான சிக்கன முறைகளைக் கையாண்டார். பெரு வருவாய் வரும்படி பார்த்துக் கொள்ளவும், அதைச் சிக்கன முறையில் செலவு செய்யவும் அவர் மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டார். குடிகள் தங்கள் நிலங்கள் நல்ல பயன் தரும்படி உழைக்கவும், அதனால் மிகுதியான வரிப் பணத்தை அரசாங்கத்திற்குத் தரவும் அவர் தம் கருத்தைச் செலுத்தினர். அரசாங்க உத்தியோகஸ் தர்கள் வேலையில் சிறந்த ஊக்கம் காட்டும்படி பணித்தார். ஆனால் சிக்கன முறையில் அவர்கள் சம்பளத்தைக் குறைத்தார். ஆயினும் கைக்கூலி வாங்கும் வழக்கத்தை இவரைப்போல் வெறுத்தவர் எவருமில்லை. மக்கள் கல்வியில் ஊக்கம் காட்டினர். ஆனால் அவருடைய கல்வி முறை மிகக் குறுகிய நோக்கம் கொண்டது. பிரஷ்ய வரலாறு ஒன்றைத்தவிர பிற வரலாறுகள் அவர்களுக்கு எத்தகைய பயனும் தரமாட்டா என்பது அவர் கருத்து. பிரஷ்யத் தனி அரசு அவர் காலத்தில் சிறந்த வலிமை பெற்றது.

உள்நாட்டில் தன்னாட்சி முறைகள் உறுதிப்படவும், நாட் டிற்கு வெற்றியும் நன்மதிப்பும் வெளிநாடுகளில் ஏற்படவும் சிறந்த படைவலிமை பிரஷ்யா பெற வேண்டும் என்ற உறுதியான எண்ணம் கொண்டவர் பிரஷ்ய மன்னர் முதலாம் பிரடிரிக் வில்லியம். ஆகையால் அவர் படை வலிமையைப் பெருக்கினர். அவர் பட்ட மெய்தியபோது பிரஷ்யப் படை 38,000 வீரர்கள் கொண்டதாக இருந்தது. அவர் உயிர் துறக்கும் தறுவாயில்

அதில் 83,000 வீரர்க ளிருந்தார்கள். பிரஷ்யப்படை எண்ணிக் கையை விட வலிமையில் மிகப் பெரியதாக விருந்தது. அக் காலத்திய பிரஞ்சுப் படையில் 1,60,000 வீரர்க ளிருந்தார்கள், ஆயினும் பிரஷ்யப் படை அவர்கள் மேல் பலமுறை வெற்றி கண்டது.

முதலாம் பிரடிரிக் வில்லியம் நாட்டை ஒன்றுபடுத்தினது மன்றி, மக்கள் அனைவரும் தமக்குக் கீழ்ப்படியும்படியும் செய்தார். குற்றங்களுக்குக் கடுந்தண்டனை விதித்தார். பல சமயங்களில் முறை கேளாமலே தண்டித்தார். ஆகவே நாடு அஞ்சியது. அதுவும் அதற்கு நன்மை அளித்தது. அத்தகைய அரசு அங்கு ஏற்படாம லிருந்தால் பிரஷ்யா ஒரு வலிமை கொண்ட நாடாக இயங்கியிருக்காது. ஆயினும், மன்னருடைய முறைகள் அவ ருடைய பிள்ளைக்கே பிடிக்கவில்லை. ஆகவே அவர் நாட்டை விட்டே ஓடினார். ஓடினவர் திரும்பிக் கொண்டுவரப் பட்டார். மன்னர் அவருக்கு மரண தண்டனை விதித்தார். பிறகு புனரா லோசனை செய்து அவரை விடுத்து, அவருடைய நண்பனைக் கொலை செய்யும்படி ஆணையிட்டார். இவ்விதமாகத் தப்பிப் பிழைத்த இளவரசன் தம் தகப்பன் ஆணைப்படியே அவர் தேர்ந் தெடுத்த பெண்ணை மணந்து கொண்டார். அரசியலிலும் சமயத் திலும் அவர் கொள்கைகளைப் பின்பற்றினர்.

IV

1740ஆம் ஆண்டு முதலாம் பிரடிரிக் வில்லியம் இறந்தபின் இவர் இரண்டாம் பிரடிரிக் என்ற பெயருடன் பிரஷ்யா மன்ன ரானார் (1740-1786). இவர் வரலாற்றில் மிகப் பெயர் பெற் றவர்; மாபெரும் பிரடிரிக் (Frederick the Great) என்ற பட்டம் சூடியவர். தம் தந்தையைப் பற்றித் தாமே கீழ்க் கண்டவற்றை எழுதி வைத்தார்; ''முதலாம் பிரடிரிக் மன்னர் காலத்தில் பெர் லின் பட்டணம் வட ஐரோப்பிய ஏதென்ஸ் நகரமாகக் காட்சி அளித்தது. அதுவே முதலாம் பிரடிரிக் வில்லியம் மன்னருடைய காலத்தில் ஸ்பார்ட்டா வாயிற்று. போர்க் கடவுள் மார்ஸ் அங்குக் கொலு வீற்றிருந்தார், அரசாட்சி முழுவதும் படையின் அடிப் படையிலே இயங்கியது. எங்கு பார்த்தாலும் பீரங்கிகளும், துப்பாக்கிகளும், வெடிமருந்தும் உற்பத்தியாகும் ஆலைகள் தென் பட்டன. மன்னருக்கு இவற்றைத் தவிர வேறு உற்பத்தி ஆலை களிலே நம்பிக்கையில்லை. தொழில் வளர்ச்சியைவிட, பயனற்ற செலவைக் குறைப்பதே அரசாட்சியை வளப்படுத்தக் கூடியது என்பதே அவர் எண்ணம். மக்கள் கேளிக்கைகளில் செய்யும்

செலவுகளே அவர் கண்டித்தார். அவர்கள் அதிக செலவில்லாமல் வாழ்ந்தார்கள்; அதிக செலவில்லாமல் இறந்தார்கள். சமூக வாழ்க்கை என்பதே மறைந்தது. பெண்கள் ஆண்களைக் கண்டு மறைந்தார்கள்; ஆண்களோ வேடிக்கைகளிலும், புகை பிடிப் பதிலும் காலத்தைக் கழித்தார்கள்.''

இரண்டாம் பிரடிரிக் மன்னர் பட்டத்திற்கு வந்த அதே ஆண் டில் ஆஸ்திரிய மன்னர் ஆறும் சார்லஸ் காலமானார் (1740). ஆஸ்திரிய நாட்டின் ஒற்றுமையில்லா நிலையை நாம் அறிவோம். இந்நிலையிலே தமக்குப் பின் தம்முடைய மகள் மேரியா தெரேசா (Maria Theresa) பட்டத்திற்கு வரவிருந்ததால் அவர் காலத்தில் அமைதிக் குறைவு ஏற்படக் கூடுமென்று, முன்கூட்டியே அவருக்கு லோரேன் பிரபுவைத் திருமணம் செய்வித்து, அவரையும் அவர் தம் கணவரையும் ஆஸ்திரிய நாட்டு அரசராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய நாட்டு மன்னர் களுடைய ஒப்புதலையும் பெற்றிருந்தார் சார்லஸ்.* ஆயினும் அவர் இறந்தவுடனேயே சண்டை ஆரம்பித்தது. இதில் பெரும் பங்கு கொண்டவர் பிரஷ்யாவின் மன்னர் இரண்டாம் பிரடிரிக். அவர் சைலீஷியாவைக் கைப்பற்றினர்.

பிரான்ஸ் நாடும் பவேரியாவும் பிரஷ்யாவோடு சேர்ந்தன. பவேரியாப்பிரபுவை ஆஸ்திரிய மன்னராக்குவதென்று இவற்றின் தலைவர்கள் முடிவு செய்துகொண்டார்கள். ஆங்கிலேயர் மேரியா தெரேசாவிற்கு முதலில் பண உதவி மட்டும் தந்தார்கள். அவர் கள் சண்டை செய்ய மறுத்தாலும் பிரஞ்சுக்காரர்கள் அவர்களை விடுவதாயில்லை. இந்தியாவிலும், கானடாவிலும் அவர்கள் ஆங்கி லேயரைத் தாக்கினர்கள். சென்னை கோட்டையே இப்போது பிரஞ்சுக்காரர் வசமாயிற்று. ஆகவே ஆங்கிலேயரும் சண்டையில் நுழைந்தார்கள். ஆனல் டெட்டின்ஜன் (Dettingen), பாண்ட நாய் (Fontenoy) என்ற இரண்டுஇடங்களிலும் அவர்கள் தோல்வி யுற்றனர். பிரஞ்சுக்காரர்கள் ஹாலந்து நாடு முழுவதையும் பிடித் தார்கள். பிரடிரிக் சைலீஷியாவைக் கைவிடவில்லை. ஆயினும் எட்டாண்டுச் சண்டைக்குப் பிறகு அமைதி தேவையாயிருந்தது. ஆகவே 1748ஆம்ஆண்டு எய்க்ஸ்-லா-செப்பேல் (Aix la Chapplle) என்ற இடத்தில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி மேரியா தெரேசா ஆஸ்திரிய அரசியாக ஏற்றுக் கொள்ளப் பட் டார். சைலீஷியாவைப் பிரடிரிக்கே வைத்துக்கொள்ள வேண் டியதென்று முடிவாயிற்று. பிரஞ்சுக்காரர் தாங்கள் பிடித்த இடங்களை யெல்லாம் திருப்பித் தரவேண்டு மென்றும் முடிவா யிற்று.

*இதற்கு ''பேரரசரின் கட்டளை'' பிராக்மேடிக் சேன்க்ஷன் (Pragmatic Sanction) என்று பெயர்.

இந்த உடன்படிக்கை எவருக்கும் திருப்தி அளிக்கவில்லை. பிரடிரிக் மன்னர் ஆஸ்திரியா முழுவதையுமே தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள ஆவல் கொண்டார். மேரியா தெரேசா சைலீஷியாவிலிருந்தும் அவரை வெளியேற்ற விழைந்தார். இந்தியாவிலும் கானடாவிலும் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்குமிடையே ஏற்பட்ட சண்டை இன்னும் முடியவில்லை. இந்த நாடுகளிலே யாருடைய ஆட்சி நிலைக்க வேண்டும் என்ற கேள்விக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. இந்த நிலையில் 1748இல் ஏற்பட்ட உடன்படிக்கை பெரிய போர் ஒன்றிற்கு வழி வகுத்ததே யொழிய அமைதியை ஏற்படுத்தவில்லை. ஆஸ்திரியா, பிரஷ்யா போன்ற நாடுகளில் படைவலிமை பெருக்கப்பட்டது. ஹங்கேரி நாட்டில் ஆஸ்திரியாவின் அரசிக்குச் சிறந்த ஆதரவு கிடைத்தது. ஐரோப்பிய வரலாற்றில் முதல் தடவையாகப் பிரான்ஸ் நாடு ஆஸ்திரியாவோடு இணைந்தது. ருஷிய நாட்டில் அப்போது ஆட்சி புரிந்த எலிசபெத் அரசியும் ஆஸ்திரியாவோடு சேர்ந்தார். ஆங்கிலேயர் மட்டும் பிரஞ்சுக்காரரைத் தோற்கடிப்பதற்காகவே பிரஷ்யாவோடு சேர்ந்தார்கள். இங்ஙனம் 'வெல்திறப் புரட்சி' ஒன்று (Diplomatic Revolution) ஏற்பட்டது.

1756ஆம் ஆண்டு போர் மறுபடியும் தொடங்கியது. பிரடிரிக்கின் நிலைமை முதலில் கவலைக்கிடமாயிருந்தது. அவரே தற்கொலை செய்துகொள்ள எண்ணினார். ஆயினும் நாட்டின் நன்மையைக் கருதிச் சண்டை செய்ய எண்ணினார். சாக்சனியுள் நுழைந்து அவரே சண்டையைத் தொடங்கி வைத்தார். ஆனால் அவர் முதலில் கண்டது தோல்வியே. பிறகு போஹேமியாவின் மீது படையெடுத்தார்; பிரேக் பட்டணத்தில் வெற்றி கண்டார். ஆனால் கொல்லின் என்ற இடத்தில் தோற்றார். கொல்லின் தோல்வி பெருந் தோல்வி. அதன் பிறகு பெர்லின் பட்டணமே எதிரிகளின் கையில் விழுந்தது. பிரடிரிக் அவசரமாகத் தமது படையைச் சாக்சனியினுள் மறுபடியும் செலுத்தினார். அங்குத் தான் அவர் ரோஸ்பேக் (Rossback) என்றவிடத்தில் முதல்வெற்றி கண்டார் (1757). கொல்லின் தோல்வி பெருந் தோல்வியானது போல் ரோஸ்பேக் வெற்றி பிரடிரிக்கின் மாபெருவெற்றியானது. அதற்குள் ஆஸ்திரியப் படைத்தலைவர் டான் சைலீஷியாவைப் பிடிக்கமுயன்றார். அது பிரடிரிக்குக்கு உயிர் போன்றது. ஆகவே அவர் அங்கு விரைந்து சென்று இன்னுமொரு வெற்றி கண்டார். இதற்கு லூத்தன் வெற்றி (Leuthen) என்று பெயர். இவ்விரண்டு வெற்றிகளும் அடுத்தடுத்து 1757ஆம் ஆண்டின் இறுதியில் பிரடிரிக்குக்குக் கிடைத்தன. இதனால் அவர் புகழ் பரவியது. தம் வலிமையைத் தாமே கண்டதால் அவருக்கு ஊக்கம் உண்டா

யிற்று. பிற்காலத்தில் நெப்போலியனும் இந்த லூத்தன் வெற்றியைப் பெரிதும் பாராட்டினானென்றால் பிரடிரிக்கின் பெருமை ஒருவாறு விளக்கம் பெறும்.

1763ஆம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கை இந்த ஏழாண்டுப் போரை முடித்தது. சைலீஷியா நிரந்தரமாக ஆஸ்திரியாவை விட்டுப் பிரிந்தது. பிரடிரிக்கின் பெருமை பெருகியது. ஐரோப்பிய மன்னரெல்லாம் அவருடைய படைத் திறனையும் அரசியல் மாண்பையும் மெச்சினார்கள். பிரஷ்யா ஒரு சிறிய நாடு. அதைச் சுற்றிலும் பிரான்ஸ், ருஷியா, ஸ்வீடன் போன்ற வலிமை நிறைந்த நாடுகள் எப்பொழுதும் பிரஷ்யாவைக் கைப்பற்ற எண்ணமிட்டன. இந் நிலையில் ஆஸ்திரிய நாடும் அவருக்குப் பெரும் பகையாயிற்று. ஆங்கிலேய நாடு மட்டும் பிரஷ்யாவிற்கு உதவியது. ஆயினும் அது தனது வெற்றிகளிலே கவனம் செலுத்தியது. கானடாவிலும், இந்தியாவிலும் பிரஞ்சுக்காரரோடு இந் நாடு செய்த போருக்கு ஏழாண்டுப் போரை ஒரு காரணமாகச் செய்து கொண்டதே யொழிய, பிரஷ்யா வாழ வேண்டும் என்ற எண்ணம் அதற்கில்லை. ஆகையால் பிரஷ்யா தனி நாடாகவே ஐரோப்பா முழுவதையுமே எதிர்த்தது. இக் காரணங்கொண்டே பிரடிரிக்கின் வெற்றி பெரு வெற்றியாகத் திகழ்கிறது. ஆனால் பிரஷ்யா நாடு இவ்வெற்றியை அடையப் பல இன்னல்களுக்கு ஆளாக வேண்டியதாயிற்று. 4,500,000 மக்கள் கொண்ட பிரஷ்யா நாடு ஏறக்குறைய 500,000 மக்களை இந்தப் போரிலே இழந்தது. போரின் காரணமாகப் பிரபுக்களே கலங்கினார்கள். ஏழைகளின் கதியைப் பற்றி விளக்க வேண்டியதில்லை. சண்டைகளின் விளைவாக அவர்கள் அடிக்கடி பிற நாடுகளுக்குச் சிறைப் படுத்திக் கொண்டுபோகப்படுவதும் பிறகு விடுதலையடைந்து நாடு திரும்புவதுமாக விருந்தது. நாட்டில் பயிர்த் தொழிலும் தொழில்துறையும் நசித்தன. இந்தச் சண்டையில் பிரான்ஸ் நாடு தன் செல்வாக்கை இழந்தது. கானடாவிலும் இந்தியாவிலும் அவர்கள் தோற்றதால் அவர்கள் பெருமை குன்றியது. ஒரு சில பிரஞ்சுக்காரர் தக்காணத்தில் தங்கள் அரசை நிறுவ எண்ணியது பெருந் தவறு என்று அரசியல்வாதிகள் பாரிஸ் பட்டணத்திலேயே சொல்லிக்கொண்டார்கள். இது உண்மை யென்பதை இந்தச் சண்டை எடுத்துக் காட்டியது. அவர்கள் அங்கு எழுப்ப நினைத்த அரசு ஏற்படவில்லை யென்றால், அவர்கள் அங்குப் பிடித்த இடங்களிலும் பல கை நழுவின. கானடாவில் அவர்கள் நிலை இன்னும் அதிக மோசமாக விருந்தது. கானடா, செனிகல், மைனேர்க்கா, செயின்ட் வின்சென்ட், டொபேகோ, டோமினிக்கா, கிரானை, டைன்ஸ் பிரதேசங்கள் எல்லாம் இப்பொழுது ஆங்கிலேயர் வச

மாயின. ஆங்கிலேயருடைய கடல் வலிமை இப்பொழுது முன்னேயை விட அதிகமாக நிலைநாட்டப்பட்டது. ஆகையால் அவர்கள் அதைப் பெருக்குவதில் இனி அதிக ஊக்கம் காட்டினர்கள்.

V

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப் பாகத்தில் ஐரோப்பாவில் அறிவியல் மிகுந்த முன்னேற்றம் கண்டது. நியூட்டன் (Newton) என்ற அறிவியல் அறிஞர் அப்பொழுது இயற்கை ஒழுங்குகளைக் கண்டுபிடித்து வெளியிட்டார். அது மக்களிடம் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியது. இயற்கையின் பெருமையை மக்கள் உணர்ந்தார்கள். இயற்கை ஒழுங்கு விஞ்ஞானத்தில் மட்டுமல்ல, மனிதன் பின்பற்றும் ஒவ்வொரு கலையிலும் அமைந்துள தென்பதை அப்பொழுது அவர்கள் கண்டுபிடித்தார்கள். மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராடாத வரை அவன் வளர்ச்சி தடைப்படுவதில்லை என்பதையும், இயற்கையோடு இயைந்து வாழ்வதே வாழ்க்கையின் நோக்கம் என்பதையும் அக்காலத்து மேதைகள் உலகுக் கறிவித்தார்கள். இவர்களில் டேவிட் ஹியும் (David Hume), ஹோல்பேக் (Holback), வோல்தேர் (Voltaire), திதரோ (Diderot) என்பவர்கள் புகழ் பெற்றவர்கள். இவர்களுடைய நூல்கள் ஒன்றன் பின் ஒன்றுக ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளி லிருந்தும் வெளிவந்தன. 1770இல் 'இயற்கை' (System of Nature) என்ற ஹோல்பேக்கின் நூல் இவ்வாறு வெளிவந்த சிறந்த நூல்களில் ஒன்று.

இயற்கை உலகம் மக்கள் கண் முன்வந்து நின்றது. செல்வந்தரும் ஏழைகளும், பிரபுக்களும் அரசரும் இதைக் கண்டு வியந்தனர்; இதைப் பற்றி அதிகமாக அறியவும், அறிந்து பின்பற்றவும் விழைந்தார்கள். ஆகவே அரசியலும் அரசியல் முறைகளும் மாற்றங் கண்டதில் வியப்பில்லை. ஏறக்குறைய இதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே இதைப் பற்றித் தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes) என்ற அரசியல் அறிஞர் கூறிப் போந்தார் (1651). அப்போது அவர் எழுதிய 'லெவியத்தன்' (Leviathan) என்ற நூலில் மனிதன் இயற்கையாகவே தன்னலம் கொண்டவனுதலால் சமூக வாழ்க்கை நடந்தேற வலிமை கொண்ட மன்னர் தேவை என்று அறிவுறுத்தினர். இவருக்குப் பின் வந்த ஜான் லாக் (John Locke) என்பவர் இதை ஏற்றுக்கொண்டு, அரசாங்கம் மனிதனின் உரிமைகளில் ஒரு சிலவற்றை மட்டுமே பறிக்கக் கூடுமென்றும், வாழ்க்கை உரிமை, அடிப்படையான சுதந்திரம்,

சொத்துரிமை போன்ற இயற்கை உரிமைகளைக் கட்டுப்படுத்தக் கூடாதென்றும் தெரிவித்தார். 1748ஆம் ஆண்டு ''சட்டத்தின் கருப் பொருள்'' (Spirit of the laws) என்ற தமது நூலிலே மொன் டெஸ்கியு (Montesquieu) என்ற பிரஞ்சு ஆசிரியர் ஆங்கில அரசியல் முறையைப் புகழ்ந்து, (கட்டுப்பட்ட அரசியல் முறையே) வரம்பிற்குட்பட்ட முடியாட்சியே (Limited Monarchy) நாட் டிற்கு நல்லதென்றும், அதுவே இயற்கை யோடியைந்த அரசு என்றும் கூறினர். இதற்குப் பிறகு 1761ஆம் ஆண்டு ரூஸோ (Rousseau) என்ற புகழ்வாய்ந்த அறிஞர் இந்தக் கொள்கையை வற்புறுத்தி மக்கள் அரசே இயற்கையான அரசு என்பதைத் தமது 'ஸோஷியல் கான்டிராக்ட்' (Social Contract) அல்லது ''சமுதாய ஒப்பந்தம்'' என்ற நூலில் விளக்கிப் போந்தார். இயற்கை யாகவே அரசு எழுகிற தென்பதுதான் ரூஸோவின் கருத்து. ஆயினும் மக்கள் அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். தங்களுடைய தேவைகளை (general will) முடித்துக் கொடுப்பது அரசின் கடமை யென்பதும், என்று அது அதற்கு மாறுபட்டு நடக்கிறதோ அன்று அதை நீங்கிவிட மக்களுக்கு உரிமை உண்டு என்பதுந்தான் இந்த ஒப்பந்தத்தின் கருப்பொருள்.

இவ்விதமாகப் புதுக் கொள்கைகள் அரசியல் கருத்துக்களை மாற்றி அமைத்தன. நாம் முன்பு குறித்த நன்மை பயக்கும் யதேச் சாதிகாரம் (Beneficent autocracy) இப்பொழுது புது நோக்கம் கொண்ட யதேச்சாதிகாரமாக (Enlightened despotism) மாறுகிறது. இதன் காலம் 1763 முதல் 1789 வரை என்று வர லாற்றாசிரியர்கள் கணக்கிட்டிருக்கின்றார்கள்.* ருஷியாவை யாண்ட இரண்டாம் கேத்தரீன் 1762 முதல் 1796 வரை ஆட்சி நடத்தினர். இவர் ஆட்சியின் காலம் நாம் இங்குக் குறித்த புதுக் கொள்கையின் காலம். ஆயினும் உண்மையில் புதுக் கொள்கை இவர் அரசியல் தன்மையை மாற்றி அமைக்கவில்லை. சூழ்ச்சி நிறைந்த இவர் வோல்தேரோடு (Voltaire) கடிதப் போக்கு வரத்துக் கொண்டார். திதரோவின் பணமுடையைப் போக்கு வதற்காக அவருடைய நூல் நிலையத்தையே விலைக்கு வாங்கினர். இவர்கள் பரப்பி வந்த அறிவுக் கொள்கையைத் தாமும் ஒத்துக் கொள்வதாக கேத்தரீன் காட்டிக்கொண்டார்; ஆனல் உண்மை யில் அவர் ஏற்படுத்திய யதேச்சாதிகாரத்தை மறைக்கும் ஒரு போர்வையாக இது இருந்ததே யொழிய புது நோக்கத்தை அவர் போற்றவில்லை. அப்படிச் செய்திருந்தால் அவருடைய அயல்

*Geofrey Brunm : *The Enlightened Despots, 1763—1789.*

நாட்டுக் கொள்கைகள் வேறு விதமாக நிகழ்ந்திருக்கும்; போலந்து நாட்டின் பாகப் பிரிவினை ஏற்பட்டிருக்காது.

மாபெரும் பிரடிரிக் புது நோக்கக் கொள்கைகளை இன்னும் அதிகமாகப் போற்றினார். அவற்றை அரசியலில் புகுத்திப் புத் தரசியல் முறையைப் பற்றி ஒரு நூலே எழுதினார். ''மன்னர் கட்டுக் கடங்காத எஜமானரல்ல; அவரே நாட்டின் முதல் வேலைக் காரர்'' என்று இதில் குறித்துப் போந்தார். மக்களின் முன்னேற் றத்திற்காக அரும்பாடு பட்டார். அவர்களுடைய பொருளாதார நிலை உயரத் தற்கால முறைகளைப் பயிர்த்தொழிலில் பின்பற்றச் செய்தார். சாகுபடியாகாமல் கிடந்த நிலங்களை உழுது பழந் தரும் மரங்களையும் கிழங்குடைய செடி கொடிகளையும் பயிரிடப் பணித்தார். ஜெர்மனியின் தட்ப வெப்ப நிலைக் கேற்பவும் நிலத்தின் நிலைக் கேற்பவும் இவை அமைந்தன. நீர் தேங்கிக் கிடந்த சதுப்பு நிலங்களையெல்லாம் சாகுபடிக்குத் தகுந்த இடங் களாகச் செய்தார். வெளிநாட்டு மக்களை ஜெர்மனியினுள் வர வேற்றுச் சாலைகளையும், கால்வாய்களையும் கட்டச் செய்தார். நாட்டின் தொழில்களையும் வாணிகத்தையும் சிறக்கச் செய்தார். ஏழைகளின் வரிச் சுமையைக் குறைத்தார். மக்களிடமிருந்து கிடைத்த வரிப் பணத்தைக் கருத்துடன் செலவழித்தார். கடின மான சிக்கன முறையைக் கைப்பற்றிய தகப்பனின் பிள்ளை என்பதை நன்முகக் காண்பித்தார். அதே முறையை அரசாங்க உத்தியோகஸ்தர்களும் பின்பற்றப் பணித்தார்.

கல்வியைப் பரப்புவதில் பிரடிரிக் மன்னர் சிறந்த ஊக்கம் காட் டினார். பல ஆரம்பக் கல்விப் பாடசாலைகளை (elementary schools) நிறுவினார். பெர்லின் நகரிலிருந்த விஞ்ஞானக் கழகத்தை (Academy of Sciences)ப் பெரிதுபடுத்தினார். நாட்டின் சட் டங்களை ஒழுங்குபடுத்தி எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் வெளியிட்டார். குற்றங்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனைகளைக் குறைத்தார். தீர்ப்புக் கூறுவோர் தங்கள் பணியைச் சரிவரச் செய் கிறார்களா வென்பதைக் கண்காணித்தார். ஒரு சமயம் ஏழை ஒருவனுக்கு நியாயம் வழங்கப் படவில்லை என்று அவருக்குத் தெரிந்தது. உடனே அவர் முறையின்றித் தீர்ப்புக் கூறியவர் களை வேலையிலிருந்து நீக்கி ஓராண்டுக் காலம் சிறையில் அடைத்து வைக்கவும் ஆணை பிறப்பித்தார். சமயத்தைப் பொறுத்த வரையில் அக் காலத்தின் அறிவு வளர்ச்சிக்கேற்ப அவர் பொதுக் கொள்கை கொண்டவர், ''எல்லா மதங்களும் அனுமதிக்கப்பட வேண்டும்'' என்ற பொது நோக்குக் கொண்டவர், ''துருக் கியர் இப்பொழுது நம் நாட்டுக்கு வந்தால் அவர்களையும் வர

வேற்று நாமே அவர்களுக்கு மசூதிகள் கட்டித் தருவோம்'' என்று ஒருமுறை பிரடிரிக் கூறினை ரென்ருல் அவருடைய சம நோக்கு எத்தகையது என்பது பெறப்படும்.

ஆயினும், பிரடிரிக் அரசரும் உண்மையில் புது நோக்கம் கொண்ட யதேச்சாதிகாரி யல்லர். அவர் காலத்தில் ஆட்சி நடத்திய கேத்தரீன் அரசியைப் போல் இவரும் பிற நாடுகளைக் கைப் பற்றும் நோக்கம் மிகக் கொண்டவர். போலந்தின் பாகப் பிரிவினையில் இவரும் கேத்தரீனுடன் சேர்ந்து பங்கு கொண்டார். தம் தந்தையைப் போலவே படைபலத்தைப் பெருக்குவதில் சிறந்த ஊக்கம் காட்டியவர் பிரடிரிக். அவர் செய்த சீர்திருத்தங்களெல்லாம் கால வெள்ளத்தில் மறைந்தன. அவர் காலத்திலேயே ஐரோப்பா அவரை இவற்றிற்காகப் போற்றவில்லை. அவருடைய படை வலிக்கும், பெரு வெற்றிகளுக்குமே அவரை ஐரோப்பா போற்றியது; இன்றும் போற்றுகிறது.

புதுநோக்கம் கொண்ட யதேச்சாதிகாரிகள் சிறப்பாகச் சிறிய நாடுகளில் தோன்றினர்கள். சுவீடன் நாட்டு மூன்றும் குஸ்டாவஸ் (Gustavus III), சார்டினியா நாட்டு மூன்றும் எம்மானுவேல் (Emmanuel III), டஸ்கனி நாட்டு முதலாம் லெயோபால்ட் போன்றவர்கள் சிறந்த நோக்கமுடைய அரசர்கள். இவர்கள் முறையே 1771 முதல் 1792 வரையிலும், 1730 முதல் 1773 வரையிலும், 1765 முதல் 1790 வரையிலும் தத்தமது நாட்டில் அரசாண்டார்கள். போர்த்துக்கல் நாட்டில் அப்போது அரசாட்சி செலுத்திவந்த முதலாம் ஜோசப் (Joseph I) என்பவர் தம் அமைச்சர் பொம்பாலின் (Pombal) ஆலோசனைப்படி சிறந்த புது நோக்கம் கொண்ட மன்னராகக் காட்சியளித்தார். அக்காலத்திய மற்ற மன்னர்களைப் போலவே இவரும் பிரபுக்களையும் குருக்களையும் ஒடுக்கித் தமது ஆட்சியை வலிமையுள்ளதாகச் செய்துகொண்டார். ஆனால் நடுத்தர வகுப்பினருக்குச் சிறந்த வசதிகள் செய்து அவர்கள் தரம் உயர வழி வகுத்தார். அவர்களுக்குப் போதிய கல்வி வசதி அளிப்பதில் அவர் சிறப்பாக ஊக்கம் காட்டினர். அவர் 1750 முதல் 1777 வரை ஆட்சி செய்தார். 1738 முதல் 1759 வரை நேப்பிள்ஸ் நகரத்தில் ஆட்சி செலுத்திய மூன்றும் சார்லஸும் (Charles III) இத்தகையவரே. தமது ஆட்சி உரம் பெற வழி வகுத்தார். ஆனால் அதைக் கொண்டு மக்களுக்கு நன்மைகள் செய்தார்; வருவாயைப் பெருக்கினர்; பாதைகளும் கால்வாய்களும் அமைத்தார், தொழிலும், வாணிகமும் முன்னேற ஏற்பாடுகள் செய்தார். 1759ஆம் ஆண்டு இவர் ஸ்பெயின் நாட்டிற்கும் மன்னர் ஆனர். அங்கேயும் மேற்குறித்த முறைகளையே பின்பற்றி

னர். பல நீண்ட போர்களால் நாடு அடைந்திருந்த கடனைத் திருப்பிக் கொடுத்தார். ஸ்பெயினின் தரைப்படையை மாற்றி அமைத்ததோடு, அதன் கப்பல் படையையும் சிறக்கச் செய்தார். நாட்டிற்குச் சொந்தமான வெளி நாடுகளில் ஸ்பெயின் நாட்டின ரைக் குடியேறும்படி செய்தார். இன்குயிசிஷன் என்ற சமய விசா ரணை மன்றத்தை ஸ்பெயின் நாட்டில் ஒழித்தவர் மூன்றாம் சார் லஸ். இவர் சேசு சபையினரை (Jesuits) நாட்டிலிருந்து வெளி யேற்றினர். இத்தகைய செய்கைகளால் மூன்றாம் சார்லஸ் அப் பொழுது பரவிவந்த அறிவுக் கொள்கைகளைப் பின்பற்றியவராகத் தோன்றினர். ஸ்பெயின் நாட்டின் வருவாய் இவர் காலத்தில் மும்மடங்காகப் பெருகியது; அதன் புகழ் ஐரோப்பா வெங்கும் பரவியது.

புது நோக்கம் கொண்ட மன்னர்களில் முதலிடம் பெறவேண் டியவர் ஆஸ்திரிய நாட்டு மன்னர் இரண்டாம் ஜோசப் (Joseph II) என்பவர். இவர் மேரியா தெரேசாவின் புதல்வர். ஆஸ்திரிய மக்களும் மன்னர்களும் எப்போதும் சமயப்பற்றுக் கொண்டவர்கள்; பெரும்பாலும் கத்தோலிக்கர். பல காலம் துருக்கியரோடு போராடியவர்கள். புனித ரோமப் பேரரசுக்கு (Holy Roman Empire) ஆஸ்திரிய மன்னர்கள் நீண்ட காலம் தலைமைப் பதவி வகித்தவர்கள். ஆயினும் ஜோசப் மன்னர் தமது ஆட்சியின் தொடக்கத்திலேயே புது நோக்கம் கொண்டவராகக் காணப்பட்டார். கத்தோலிக்க மதத்திலும் மூட நம்பிக்கைகள் உண்டு என்றும், அவைகள் நீக்கப்பட வேண்டுமென்றும் ஆணித் தரமாக அறிவித்தார். அது மட்டுமல்ல; சமயத்திற்கும் அரசுக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கக்கூடா தென்பதும் அவருடைய கருத்து. பிறகு இதையும் தாண்டிச் சமயம் அரசுக்குக் கட்டுப் பட்டது என்ற கருத்தைப் பின்பற்றினர். போப்பின் ஆணைகள் (Bulls) தம் அனுமதியின்றி நாட்டினுள் நுழையக் கூடாதென்று கூறினர்; தாமே மேற்றிராணிமார்களை (Bishops) நியமித்தார்; மடங்களை அழித்தார்; அவைகளுக்குச் சொந்தமான இடங்களைத் தாமே எடுத்துக் கொண்டார்; அரசினர் பள்ளிகளிலேதான் குருக் கள் பயிற்சி பெற வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்.

அவர் காலத்துக் கொள்கைப்படி மன்னர் மட்டும் எதிர்ப் பாலலாமல் ஆட்சி செலுத்த வேண்டும், அதே சமயம் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற இரு கருத்துக்களும் ஜோசப் மன்னரிடம் வேரூன்றி இருந்தன. தமது இராச்சியத்தில் படை ஆட்சி முறையை (military rule) இம் மன்னர் ஏற்படுத்தினர். இதற்காக நாட்டைப் பதின்மூன்று பாகங்களாகப் பிரித்து அவை

ஒவ்வொன்றிலும் ஆட்சி செலுத்த ஒரு படைத் தலைவரை நியமித் தார். சட்டமன்றங்கள் ஒழிக்கப்பட்டன; ஊர் மன்றங்கள் கலைக்கப்பட்டன; பழைய பழக்க வழக்கங்கள், உரிமைகள் என்ற இவையெல்லாம் மறுக்கப்பட்டன. பன்மொழி பேசும் ஆஸ்திரியப் பேரரசில் ஜெர்மன் மொழியை மட்டும் அரசாங்க மொழியாக்கி னர். படை பெருக எல்லா மக்களும் அதில் சேர வேண்டுமென்று மன்னர் ஆணை பிறப்பித்தார். இதனால் நிலத்தை உழுது வயிறு வளர்த்த ஏழைகள் அல்லல் பட்டனர். அவர்களை மகிழ்விக்க மன்னர் வேறுசில சீர்திருத்தங்கள் கொண்டுவந்தார். பிரபுக்களுக் கடியில் இதுகாறும் அடிமைகள்போல் பணியாற்றி வந்த வேலைக் காரர்களுக்குச் சுதந்திர மளித்தார். அவர்கள் பிரபுக்களுக்குச் செலுத்த வேண்டிய வரிகளுக்குப் பதிலாக வேலை செய்தனர். இனி இது அவசியமில்லை யென்றும் வரிகளைப் பணமாகச் செலுத்தலா மென்றும் கட்டளையிட்டார். ஆயினும் இவற்றால் விளைந்தது பேரெதிர்ப்பு. ஏழைமக்கள் தங்களுக்குத் தரப்பட்ட சுதந்திரத்தை அறிந்துகொள்ளவில்லை. ஆனால் படையில் கட்டாயமாகச் சேர வேண்டு மென்றதே அவர்களுக்குத் துன்பமாகத் தெரிந்தது. பிரபுக்கள் தங்கள் உரிமைகள் பறி போனதைப் பற்றி வருந்தினர் கள். நாடெங்கும் மன்னருடைய யதேச்சாதிகாரம் வலுச் சண் டையை இழுத்தது என்று சொல்ல வேண்டும். ஆஸ்திரியா, நெதர்லாந்து, டைரல், ஹங்கேரி போன்ற நாடுகளில் பெருங் குழப்ப மேற்பட்டது. மன்னர் மனமுறிந்து போனார். அதுவே அவருடைய மரணத்தைத் துரிதப்படுத்தியது. 1790ஆம் ஆண்டு அவர் இறக்கும் தறுவாயில் தம் அருகில் இருந்தவர்களிடம், தம் வாழ்க்கை முற்றுப்பெரு நல்லெண்ணங்களோடு முடிந்தது என்று கூறித் தம் கல்லறையின் மேல் கீழ்க்கண்ட வாக்கியத்தை எழுதப் பணித்தார்; ''இங்கே கிடக்கும் மனிதர் நல்ல எண்ணங்கள் கொண்டவர். ஆனால் இவர் ஒன்றிலும் வெற்றி காணவில்லை.'' இதுவே புது நோக்கம் கொண்ட யதேச்சாதிகாரத்தின் முடிவா கவும் இருந்தது.

10. பிரஞ்சுப் புரட்சி

(புரட்சியின் தன்மை-அரசியலில் புதுக் கொள்கைகள்-
பிரஞ்சு அரசின் சீர்கெட்ட நிலை-பதினான்காம் லூயியின்
ஆட்சி முறை-புரட்சியின் போக்கும் முடிவும்)

I

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பாகத்தி லிருந்து ஐரோப்பிய அரசியலில் புதுக் கொள்கைகள் உலவத் தொடங்கின. இதைப்பற்றி நாம் முன் இயலில் ஒரு சிறிது கூறினோம். புதுக் கொள்கையின் விளைவாய் யதேச்சாதிகாரிகளும் தங்கள் அரசியல் முறையை மாற்றினார்கள். ஆனால் அந்த மாற்றம் பயனளிக்கவில்லை. ஆஸ்திரிய மன்னர் இரண்டாம் ஜோசப் கூறியது போல், அவர்களுடைய நல்லெண்ணங்கள் முற்றுப் பெறவில்லை. நாட்டின் அமைதிக்கு அடிப்படையான மாற்றம் வேண்டப் பட்டது. ரூஸோ கூறியதுபோல் மக்களே தங்கள் அரசியல் முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்து செயல்பட்டாலொழிய அமைதி ஏற்படாதென்பது பலருக்கும் வெட்டவெளிச்சமாயிற்று. ஆயினும் பிரஞ்சுப் புரட்சி போன்ற ஒருபெரும் புரட்சி ஏற்படுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. பிரஞ்சுக்காரரே இதை எதிர்பார்க்கவில்லை என்பதை இதன்போக்கைக் கொண்டே நாம் அறியக் கூடும்.

இது வழக்கமான கருத்திற்கு மாறானது. பொதுவில் பிரான்ஸ் நாட்டில் பாமரர் துன்புறுத்தப் பட்டனரென்றும் அதனால் அங்கு புரட்சி ஏற்பட்டதென்றும் சாதாரணமாக நம்பப் படுகிறது. ஆனால் உண்மையில் மற்ற ஐரோப்பிய நாடுகளைவிடப் பிரான்ஸ் நாட்டில் மக்கள் சாலவும் வளம்பெற வாழ்ந்தார்கள், ஆயினும் பெரும் புரட்சி அங்கு ஏற்பட்ட தென்றால்அதற்குக் காரணங்கள் வேறு. புதுக்கொள்கை எழுத்தாளர்கள் மற்ற நாட்டைவிட அந்நாட்டில்தான் அதிகமாகத் தோன்றினார்கள். மற்ற நாடுகளைவிட அங்கே மக்கள் அதிகமாக இவற்றில் ஈடுபட்டார்கள்.

பதினான்காம் லூயி காட்டிய படாடோபம் மக்களுக்கு வெறுப்பை உண்டுபண்ணியது. அவருடைய வெர்சேய் மாளிகை அவர்கள் மனத்திலே கோபத்தை மூட்டியது. இது காரணம்

பற்றியே அவர்கள் கலகம் செய்யத் தொடங்கியதும், மன்னர் இம்மாளிகையை விட்டுப் பாரிஸ் பட்டணத்தில் தங்கள் மத்தியில் வாழ வேண்டும் என்று கோரினார்கள். பிரஞ்சு மக்களின் எளிய நிலையல்ல இதற்குக் காரணம். பிரஞ்சு மக்களைவிடப் பெரிதுந் துன்புற்றவர்கள் போலந்து, ஸ்பெயின், ஜெர்மனியின் தென் பாகம் போன்ற பிரதேசங்களிலிருந்தார்கள். ஆயினும் பிரஞ்சு மன்னரைப்போல் யதேச்சாதிகாரத்தின் உச்சியில் நின்றவர் ஐரோப்பாவில் எங்குமே அப்போது காணப்படவில்லை. இதைப் பிரஞ்சு மக்கள் வெறுத்தார்கள். இக் காரணங்களாலேயே அரசியல் புரட்சி இங்கு முதலில் ஏற்பட்டது.

II

முதலில் புதுக் கொள்கைகளைப் பற்றிக் கூறுவோம். வோல்தேர், மொன்டெஸ்கியு, ரூஸோ என்ற மூன்று பெரிய அரசியல் சீர்திருத்தவாதிகள் இப்போது பிரான்ஸ் நாட்டில் தோன்றினார்கள். இவர்கள் முறையே 1694 முதல் 1778 வரையிலும், 1689 முதல் 1733 வரையிலும், 1712 முதல் 1778 வரையிலும் வாழ்ந்தவர்கள். இவர்கள் கொண்டாடிய புதுக் கருத்துக்களுக்கும் பிரஞ்சுப் புரட்சிக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. பொதுவில் கூறுமிடத்து இவர்கள் யதேச்சாதிகாரத்தை எதிர்த்தார்கள். மக்களை மக்களாகப் பாவித்துப் பேணும் பண்பை இவர்கள் வரவேற்றார்கள் என்று சொன்னால் போதாது; இது மிகஅவசியம் என்று இவர்கள் பறை சாற்றினார்கள் என்று சொல்வதே பொருந்தும். ஐரோப்பாவின் முன்னைய வரலாற்றை இவர்கள் இகழ்ந்தார்கள்; சிறப்பாக இடைக்காலப் பண்புகளை யெல்லாம் இவர்கள் வெறுத்தார்கள். ஆகவே இவர்கள் கத்தோலிக்க சமயத்தை வெறுத்தார்கள். போப்பின் ஆதிக்கத்தை இகழ்ந்தார்கள். பேரரசு என்ற கருத்தையே எள்ளி நகையாடினர். பழங்கால கிரேக்க ரோமானிய நாகரிகத்தைப் புகழ்ந்தார்கள். புளூடார்க் எழுதிய வாழ்க்கை வரலாறுகள் அவர்களை ஈர்த்தன. டாசிட்டஸ் எழுதிய ரோம வரலாறு அவர்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியது.

வோல்தேர் அக்கால சமயக் கோட்பாடுகளை எதிர்த்தார்; சமரச மனப்பான்மையைப் பெரிதும் போற்றினார். அரசியலில் அவர் மக்களாட்சியை விரும்பவில்லை. தனி மன்னர் ஆட்சியும் அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் விரும்பியது நன்மை பயக்கும் வல்லாட்சியே. பிரஷ்யாவின் இரண்டாம் பிரடிரிக் அவருடைய கருத்திற்கிசைந்த மன்னர். அவரோடு நட்புப் பூண்டு வோல்தேர் பலமுறை பிரஷ்ய நாட்டிற்குச் சென்று வந்தார்; வோல்தேர்

நியாய அநியாயங்களைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. நாட்டுக்கு நன்மை பயக்கும் மன்னரே சிறந்த மன்னர் என்பது அவருடைய கோட்பாடு.

மொன்டெஸ்கியு ஆங்கிலேய அரசு முறையை விரும்பினர். அரசாட்சி மக்கட்கு உரிமை வழங்க வேண்டும்; அதே சமயம் கட்டுப்பாடான அரசாட்சியாகவு மிருக்க வேண்டும் என்பதுஇவர் கருத்து. இதற்காகவே இவர் சட்ட மன்றம் (legislature), அரசியல் மன்றம் (executive), நீதிமன்றம் (judiciary) என்ற இவை மூன்றும் ஒன்றிற்கொன்று தொடர்பின்றி இயங்கவேண்டுமென்று கருதினர். இது சுதந்திர அரசுக்கு அவசியம் என்பதைத் தமது ''சட்டங்களின் கருப்பொருள்'' (Spirit of the laws) என்ற நூலில் விளக்கினர். இவர் பிரஞ்சுக்காரர்; இந்நூலை இவர் பிரஞ்சு மொழியில் எழுதினர். ஆகவே இவருடைய கருத்துக்கள் பிரான்ஸில் ஆக்கம் பெற்றன. 1791ஆம் ஆண்டில் புரட்சிக்காரர் அங்கு ஏற்படுத்திய அரசாங்க முறையில் (Constitution) இவை சிறப்புடன் விளங்கின.

புரட்சியைப் பொறுத்தவரையில் இவ்விருவரின் கருத்துக்களைவிட ரூஸோவின் கருத்துக்கள் மிகவலிமை பொருந்தியவையாயிருந்தன. ரூஸோ உணர்ச்சி மிகுந்தவர். தமக்குச் சரி யென்று பட்டவற்றை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் ஆற்றல் மிக்கவர். மக்கள் இயற்கையான வாழ்வை எய்த வேண்டு மென்று அரசியலில் முதலில் எடுத்துக் கூறியவர் ரூஸோ. இவருடைய கருத்து சுலபமாக விளக்கக் கூடியதன்று. ஆயினும் மக்கள் குதூகலமாக அதை வரவேற்றனர். ''இயற்கையில் மனிதன் சுதந்திரமாகப் பிறந்தான். ஆனால் இப்பொழுது அவன் எங்கும் கட்டுண்டு கிடக்கின்றான்'' என்பது அவர் குறித்த கருத்துக்களில் தலையாயது. அரசும் சட்டமும் மனிதனோடு பிறக்கவில்லை. தனது நல்வாழ்க்கைக்கு உதவுமென்று பிற்காலத்தில் தானே ஒரு அரசு முறையை அவன் வகுத்துக் கொண்டான். இதற்காக நல்லரசு நடத்த சிலரைப் பொறுக்கி எடுத்து அவர்களோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான். தன் உரிமைகளை இவர்களுக்கு ஒப்படைத்தான். அவர்கள் அவற்றிற்குப் பதிலாக அவனுக்கு நல்லரசு வழங்கவேண்டும். ஆகவே எந்த அரசையும் நியமிப்பவர்கள் மக்கள். எப்போது அது தன் கடமையை நிறைவேற்றும விருக்கின்றதோ அப்போது அதை நீக்கவும் வேறோர் அரசை அதற்குப் பதிலாக நியமிக்கவும் மக்களுக்கு முழு அதிகார மிருக்கின்றது என்று ரூஸோ விளக்கிப் போந்தார். புரட்சிக்கு வேண்டிய எல்லா அடிப்படையும் அவர் இக்கருத்தை விளக்கிய நூலில் நாம் காணக்கூடும். ''சமுதாய ஒப்பந்தம்'' (Social Contract) என்ற பெயர்பெற்ற இந்நூலில்

பிரான்ஸில் மட்டுமல்ல, வரலாற்றிலேயே ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. அடுத்த நூற்றாண்டில் மக்கள் ஆட்சிக் கருத்துக்கள் காட்டிய வேகம் பெரும்பாலும் இந்நூலில் நின்று எழுந்ததே என்று நாம் கூறவேண்டும்.

III

பிரஞ்சு மன்னரின் பெருமை பதினான்காம் லூயியின் ஆட்சிக் காலத்திலேயே மங்கத் தொடங்கியது. அதற்குப் பெருங் காரணமாயிருந்தவை போரில் அவர் அடைந்த தோல்விகள் என்று கூற வேண்டும். அவருடைய எண்ணங்கள் எவ்வளவுக்குப் பெரிய எண்ணங்களாக இருந்தனவோ அவ்வளவுக்கு அவருடைய தோல்வி பெரும் ஏமாற்றத்தை அளித்தது. ஆங்கில நாட்டின் உதவிகொண்டு அவர் சாதிக்க எண்ணிய தெல்லாம் பயனற்றுப் போனதுமன்றி அவருடைய நேர் எதிரியாயிருந்த டச்சு மன்னரே அங்கு அரசரானார். அவருக்கு நண்பராயிருந்த இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் நாட்டை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. இரண்டாம் சார்லஸ் மன்னருக்கு லூயி செய்த பெரும் பணஉதவி விழலுக் கிறைத்த நீராயிற்று. இந்த நிலையில், லூயியின் படாடோபம் மக்களுக்கு வெறுப்பளித்ததில் வியப்பில்லை. பிரஞ்சு மக்கள் தங்கள் நாட்டு நிலையையும் அண்மையிலிருந்த ஆங்கில நாட்டு நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தார்கள். ஆங்கில நாட்டில் தங்கள் நாட்டில் இல்லாத சுதந்திரம் மிளிரக் கண்டார்கள். அரசாங்கத்தை ஆங்கில மக்கள் பார்லிமென்ட் சபை மூலம் தாங்களே நடத்துவதையும், அவர்கள் வெற்றிக்குமேல் வெற்றி அடைவதையும் கண்டு வியந்தார்கள். மன்னரின் யதேச்சாதிகாரத்தைத் தடுக்க அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியும், அதில் அவர்கள் கண்ட வெற்றியும் பிரஞ்சு மக்களின் மனத்தை விட்டு எளிதில் அகலக் கூடியதன்று. சிறப்பாக, முதலாம் சார்லஸ் மன்னருக்கு ஆங்கிலேயர் அளித்த தண்டனை அரசியலில் ஒரு புது முறைக்கு வழி வகுத்தது என்பதையும் பிரஞ்சுக்காரர் மறக்கவில்லை.

பதினைந்தாம் லூயி ஆட்சிக்கு வந்தபோது இந்நிலையை மாற்றுவதற்கு முயன்றார். அவர் இரு பெரும் போர்களில் ஈடுபட்டார். இவற்றைப் பற்றி முன் இயலில் கூறினோம். முதல் சண்டையில் பான்டனுய் (Fontenoy), லாபெல்ட் (Lawfeldt) என்ற இரண்டு இடங்களில் அவர் பெருவெற்றி கண்டார். ஆனால் அதை அடுத்து வந்த ஏழாண்டுப் போர் பிரஞ்சு மன்னரின் நம்பிக்கையைத் தகர்த்தெறிந்தது. பல்லாண்டுகளாக ஆஸ்திரிய நாட்டுக்கு எதிராக இருந்துவந்த பிரஞ்சு நாட்டை இப்பொழுது லூயி நட்பாகச் செய்தார். இதற்கு அவருக்கு யோசனை அளித்தவர் அவரு

டைய ஆசைநாயகி பாம்படூர் அம்மையார் (Madame de Pompadour) என்று நம்பப்பட்டது. வரவர மன்னர் தம்அமைச்சர்மீதே நம்பிக்கை இழந்தவராகக் காணப்பட்டார். பாம்படூர் அம்மையார் ஒரு புறமும், டூ பாரி அம்மையார் (Madame du Barri) மறு புறமும் அவருக்கு ஆலோசனை அளித்தார்கள். இவர்களே ஆசை நாயகிகளாக மன்னர் வைத்துக்கொண்டதே மக்களுக்கு வெறுப் பளித்தது. ஆனல் அவர் இவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு அந்நிய நாடுகளுடன் தொடர்பு கொள்வது அவர்களுக்கு விளங் காத புதிராகவே தென்பட்டது. இந்நிலையில் அவர் அடைந்த தோல்விகள் மிகப் பெரிய தோல்விகளாக அவர்களுக்குக் காட்சி யளித்ததில் வியப்பில்லை. ஏழாண்டுப் போர் கானடாவிலும் இந்தி யாவிலும் பிரஞ்சுக்காரருக்குப் பெரிய ஏமாற்றத்தை விளைத்தது. உண்மையில் பிரஞ்சுக்காரருக்குக் கானடாவில் தலைமை வகித்த ஜெனரல் மோன்ட்காம் (Montcolm) சிறந்த போர் வீரர் மட்டு மல்லர், சிறந்த அரசியல் ஞானியாகவு மிருந்தார். நியு ஆர்லி யன்ஸ் (New Orleans) பட்டணமும் மிசிசிப்பி நதி தீரமும் அவர் கள் கையிலிருந்த படியால் ஆங்கிலேயர் அங்கிருந்து துரத்தப் படு வார்களென்றும், வடஅமெரிக்கா முழுவதுமே பிரஞ்சுக்காரர் கையில் விழுந்து விடுமென்றும் பொதுவாக எங்கும் எதிர்பார்க்கப் பட்டது. அதேபோல் இந்தியாவிலும் டூப்ளே சிறந்த படைத் தலைவராகவும் அரசியல் சூழ்ச்சிகளில் மிக வல்லவராகவும் விளங் கினர். நாட்டின் மன்னர்களிடையே ஏற்படும் சண்டைகளில் ஒருவருக் கெதிராக மற்றவரோடு சேர்ந்து சண்டை செய்தே பிரஞ்சு ஆதிக்கத்தை இந்தியாவில் ஏற்படுத்த முடியுமென்பதை நம் நாட்டில் முதலில் கண்ட ஐரோப்பியர் இவரே. இப்படிப் பட்ட நல்ல சூழ்நிலையிலும் பிரஞ்சுக்காரர் முடிவில் கண்டது தோல்வியே. கானடாவில் பிரஞ்சுக் கொடி பறப்பதே நின்றது; இந்தியாவில் ஒரு சில இடங்களில்தான் பிரஞ்சு ஆதிக்கம் நிலை நின்றது.

இதைக் கண்ட பிரஞ்சு மக்கள் மனம் நொந்தார்கள். இதற்கு முதல் காரணம் அவர்களுடைய அரசாங்கத்தின் ஆலோசனை யற்ற நிலை என்பதைக் கண்டு சீற்றம் கொண்டார்கள். டூப்ளே யின் யோசனையைப் பிரஞ்சு அரசாங்கமே புரிந்துகொள்ளவில்லை. ஒரு சில பிரஞ்சுக்காரர்கள் இந்தியாவில் தங்கள் ஆட்சியை நிலை நிறுத்த முடியுமென்ற டூப்ளேயின் எண்ணத்தைக் கண்டு பிரஞ்சு அரசரும் அமைச்சர்களும் நகையாடினர்களே ஒழிய அது முடியக் கூடிய காரிய மென்பதை அவர்கள் ஒரு சிறிதும் எண்ணவில்லை. இந்த நிலையில் அவர்களுடைய உதவி போதிய அளவில் டூப்ளேக் குக் கிடைக்கவில்லை. இதனல் டூப்ளே தோல்வி கண்டார். திரும்பின அவரைப் பிரஞ்சு அரசாங்கம் ஒறுத்தது. இவற்றைக்

கண்டு மக்கள் மனம் பதறினர்கள். சிறந்த வெற்றிகள் பல கண்ட தாலேயே பதினான்காம் லூயி தம் யதேச்சாதிகாரத்தைப் பலப் படுத்தினர். இப்பொழுது பதினேந்தாம் லூயி அடைந்த தோல்வி கள் யதேச்சாதிகாரத்தை ஆட்டம் காண வைத்தன. கானடா, இந்தியா போன்ற தூர நாடுகளில் பிரஞ்சுக்காரர் அடைந்த தோல்விகளைவிட அண்மையில் ஐரோப்பாவில் அவர்கள் அடைந்த தோல்விகள் பிரஞ்சு அரசருக்கு அதிகச் சிறுமையை அளித்தன. ரோஸ்பேக் என்றஇடத்தில் பிரஞ்சுக்காரர் அடைந்த தோல்வியே பிரஞ்சுப் புரட்சிக்குக் காரணமாயிற்று என்று நெப்போலியன் கூறினாராம், பிரஞ்சு மக்கள் முன் பிரஞ்சு மன்னர் தம் பெருமை யில் குறைந்தார். ஐரோப்பாவின் கண்களுக்கும் அவர் சிறியவ ராகவே இப்போது தோன்றினர். 1702ஆம் ஆண்டு பதினேந்தாம் லூயி இறப்பதற்கு இன்னும் இரண்டு ஆண்டுகளிருந்தன. அப் போது தான் போலந்து நாடு ருஷியா, ஆஸ்திரியா, பிரஷ்யா நாடுகளால் பங்கிட்டுக் கொள்ளப் பட்டது. லூயி இந்த அநீதி யைக் கண்டித்தார்; ஆனால் அவர் பேச்சைக் கேட்பார் யாரு மில்லை. உண்மையாகவே அவரோடு பிரான்ஸின் நூறாண்டுக்கு மேற்பட்ட உயர்நிலையும் நீங்கியது.

போரில் வெற்றியும் தோல்வியும் வழக்கமானது என்று கூறி னாலும், பிரான்ஸின் உள்நாட்டு விவகாரங்களும் சிறந்த முறை யில் நடைபெறவில்லை. ஜேன்செனீயர் நசுக்கப்பட்டனர். அவர் கள் நாம் முன் கூறியதுபோல் நன்மைக்காகப் பாடுபட்டவர்கள்; ஆனால் மன்னர் அவர்களை அனுமதிக்கவில்லை. அதற்குப் பதிலாகச் சேசு சபைக் குருக்கள் நாட்டில் அதிகமான ஆதிக்கம் பெற்றார் கள். ஜேன்செனீயர் ஒடுக்கப்படுவதற்கு இவர்களே முக்கிய காரணமா யிருந்தார்கள் என்று மக்கள் நம்பினார்கள். இதைத் தவிர நாட்டில் சமரச மனப்பான்மை நிலவ வொட்டாமல் தடுப் பதும் இவர்களே என்று அவர்கள் கண்டு கொண்டார்கள். மன்னர் ஆதிக்கம் பெறுவதற்கும், தம் மனம்போல் நடப்பதற்கும் இந்தக் குருமார்கள் உதவினர்க ளென்பதால், மக்கள் சீற்றம் உச்ச நிலையை அடைந்தது. அவ்வமயம் பாரிஸ் மக்கள் சபைக்கு (Parliament of Paris) ஒரு வாய்ப்புக் கிடைத்தது. மேற்கிந்தியத் தீவுகளில் இருந்த சேசு சபையாரின் சொத்துக்கள் பறி போயின. அதனால் அவர்கள் தங்கள் கடன்காரர்களுக்குக் கொடுக்க வேண் டிய பாக்கிகளைக் கொடுக்கக் கூடாத நிலையில் இருந்தார்கள். இதைப் பற்றி பாரிஸ் மக்கள் சபையில் புகார் தாக்கலாயிற்று. மேற்கிந்தியத் தீவில் சேசு சபையாருக்குத் தங்கள் கடன் தொகை யைத் திருப்பிக் கொடுக்க வழியில்லாவிட்டால் அந்த சபையைச் சேர்ந்த மற்றவர்கள் அதைத் திருப்பித் தரவேண்டு மென்பது

கடன் கொடுத்தவர்களின் வாதம். இதைத் தீர்ப்பதற்காகவே இவ்விவாதம் பாரிஸ் பார்லிமென்ட் சபைமுன் வந்தது. பிரான்ஸ் நாட்டில் சேசு சபைக் குருமார்களின் நடத்தை மக்களுக்கு மிகுந்த வெறுப்பைத் தந்திருந்த தாதலால் பார்லிமென்ட் அவர்களுக்கு விரோதமாகவே முடிவு கூறும் என்று மன்னருக்குத் தெரிந்தது. ஆகையால் இவ்வழக்கை ஒரு தனிக் குழு ஏற்படுத்தி ஆராய வேண்டு மென்று மன்னர் முயன்றார். குழுவில் தமக்குப் பிடித்த வர்களையே மன்னர் அங்கத்தினர்களாக ஆக்கக் கூடுமென்பதால் சேசு சபை வெற்றி பெறக் கூடுமென்று பார்லிமென்ட் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. முடிவில் பார்லிமென்ட் வெற்றி கண்டது; சேசு சபையாரை நாட்டிலிருந்தே அப்புறப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தது. இது மன்னருக்கு மற்றொரு தோல்வி (1764).

வெற்றி கண்ட பார்லிமென்ட் சபை மன்னரை இன்னும் அதிகமாகத் தாக்கத் தொடங்கியது. அதே சமயம் அவருடைய யதேச்சாதிகாரம் உச்சநிலையை அடைந்திருந்தது. நகர பரிபாலன சபைகள் உள்பட எல்லா விதமான மக்கள் சபைகளும் ஒழிக்கப் பட்டன. மக்கள் தங்கள் உரிமைகளை முழுவதும் இழந்தார்கள். பிரபுக்களும் தங்கள் உரிமைகளில் சிலவற்றை இழந்தார்கள். உரிமைகளுக்குப் பதிலாக மக்களுடைய கடமைகள் மிகுந்தன. அதிலும் பிரபுக்களைவிட எளியோர் அதிக வரிகள் கொடுத்தார் கள். இவற்றில் ஒன்று டெய்ல் (taille) வரி, இது அவர்களுடைய வீடு, நிலம் போன்ற சொத்துக்களின் பேரில் விதிக்கப் பட்டது. இவற்றில் எதற்காவது வளர்ச்சி ஏற்பட்டால் வரியும் வளர்ச்சிக் குத் தகுந்தாற்போல் ஏறும். அதனால் மக்கள் வீடுகள் பல கட்டு வதிலோ, நிலம் மிகுந்த பலன் தரும்படிச் செய்வதிலோ கருத்துக் கொள்ளவில்லை. ஆனால் அரசாங்கம் இவற்றின் வளர்ச்சியைக் கவனிக்காமலேயே இந்த வரியை அடிக்கடி உயர்த்தி வந்தது. இதனால் வரி கொடுப்போர் மிகத் துன்பமடைந்தனர். இந்நிலையில் மற்றொரு வரி விதிக்கப்பட்டது. இது உப்பு வரி (பிரஞ்சு நாட் டில் இதற்கு 'கபேல்' என்று பெயர்). ஏழைகளைத் தாக்குவதற்கு இதைவிட வேறு வழியை அரசாங்கம் கண்டு பிடித்திருக்க முடி யாது. இதன்படி உப்பின் விலையை அரசாங்கமே நிர்ணயித்தது. ஆயினும் ஒழுங்கு முறையின்றி விலை நிர்ணயிக்கப் பட்டதால் ஊருக்கு ஊர் விலைவாசியில் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டது. இதனால் குறைந்த விலைப் பிரதேசத்திலிருந்து அதிக விலைப் பிரதேசத்திற்கு உப்பு சென்று மறைந்தது. இதைத் தடுப்பதற்காகப் பல ஏழை களை அரசாங்கம் சிறைப்படுத்தியது. சீக்கிரமே சிறைச்சாலைகளில் உப்பு வியாபாரிகள் நிறைந்து வழிந்தார்கள். இந்தத் துன்பங்கள்

போதா தென்றுற்போல் ஏழை மக்கள் அரசாங்கத்திற்காக வேலை செய்ய வேண்டுமென்று பணிக்கப்பட்டார்கள். இதுவும் ஒரு வரியாகக் கருதப்பட்டது. இதற்கு கோர்வீ (Corvee) என்று பெயர். பேதை மக்கள் வரியின் சுமையைத் தாங்க முடியாமல் தவித்தார்கள். அவர்களுடைய எளிய வருவாயில் ஏறக்குறையப் பாதிக்கு மேல் அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்துவதிலேயே கழிந்தது. வணிகர்கள் வரியின் கொடுமையால் தங்கள் வாணிகம் தடைப்படுவதைக் கண்டு தவித்தார்கள். இங்கிலாந்து போன்ற அண்மை நாடுகளில் வாணிகம்செழிப்பதையும், அங்கே வணிகர்கள் பெறும் ஆதரவுகளையும் கண்டு இவர்கள் தங்கள் அரசாங்கத்தின் அறிவின்மையையும், கொடுமையையும் எண்ணி வியந்தார்கள். அப்போதுதான் பொருளாதாரம் என்பது ஒரு கலையாக மாறிக் கொண்டிருந்தது. ஆடம் ஸ்மித் (Adam Smith) 1776ஆம் ஆண்டில் தமது ''நாடுகளின் செல்வம்'' (Wealth of Nations) என்ற நூலை வெளியிட்டுப் பொருளாதாரக் கலையின் தந்தை என்ற பெயரைத் தமதாக்கினர். அவரைப் பின்பற்றிப் பல பொருளாதாரக் கலை விற்பன்னர்கள் தோன்றி, நாட்டுக்கு நாடு இடர்ப்பாடின்றி வாணிகம் பெருக வேண்டும் (free trade) என்று போதித்தார்கள்.

இந்த நிலையில் பிரஞ்சு மக்கள் மனம் எத்தகைய துன்பமெய்தியிருக்க வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். பிரபுக்கள் பாமரரைவிடக் குறைந்த வரிகள் கொடுத்தார்கள்; ஆனால் பல உரிமைகளைப் பெற்றார்கள். இந்திய நாட்டைப் போலவே பிரான்ஸ் நாடும் பயிர்த் தொழிலை எதிர்பார்த்து நிற்கும் நாடு (agricultural country). பயிர்த் தொழில் செழிக்க எளியோர் உழைப்புத்தான் அதிகமாகத் தேவை. பிரபுக்கள் தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விட்டுவிட்டு சுகமாக வாழ்ந்தார்கள். ஏழை உழைப்பாளிகள் வேலை செய்து ஒரு பகுதியைப் பிரபுக்களுக்கும் ஒரு பகுதியை அரசியலாருக்கும் கொடுத்த பிறகு எஞ்சியதையே தங்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். சட்டங்கள் இயற்றுவதிலும், வரிகளை விதிப்பதிலும் பிரபுக்களுக்குப் பேச உரிமையுண்டு; அந்த உரிமையும் ஏழைகளுக்கு இல்லை. ஏழைகள் பணியாவது வரி தந்து கிடப்பதே. இந்த வரிகளையும் அரசாங்கம் பிரபுக்கள் மூலமாகவே வசூல் செய்தபடியால், அவர்கள் இதிலும் இலாபமடைந்தார்கள். ஆகையால் புது வரிகள் வந்தபோது பிரபுக்கள் அவற்றை எதிர்ப்பதற்குப் பதிலாக அவற்றின் மூலம் தங்களுக்கு வரக்கூடிய வருவாயை நினைந்து மகிழ்ந்தார்கள். ஏழை உழவர்களுக்குப் பிரபுக்கள் இழைத்த கொடுமைகள் இன்னும் பலவாகும். அவர்களுக்குச் சொந்தமான நிலங்களை விற்றாலும் அதில் ஒருபகுதி அவர்களுக்கு முதலாளியான பிரபுவிற்குக் கொடுக்கப்பட வேண்

டும். அலருடைய அனுமதியின்றிப் புது நிலங்களை வாங்கவும் முடியாது. தம் பிள்ளைகளுக்குத் திருமணம் முடிக்கவும் ஏழை உழவர்க்கு அவர்கள் பிரபுவின் அனுமதி வேண்டும். ஒவ்வொரு பிரபுவும் வழக்கமாக ஒரு சிறு ஆலை வைத்திருந்தார். அவருக்குக் கீழ்ப்பட்ட உழவர்கள் கொஞ்சம் கோதுமை மா அரைக்க வேண்டுமானாலும் அவருடைய ஆலையில்தான் அரைக்க வேண்டும். பிரபு மட்டுமே வேட்டையாட முடியும். அவர் ஏழைகள் நிலத்திலும் தம் இஷ்டம்போல் வேட்டையாடலாம். இதனால் பயிர்களுக்குக் கேடு ஏற்பட்டால் யாரிடமும் முறையிட ஏழைக்கு வழியில்லை. சில சமயம் பிரபுவின் புறுக்கள் நிலத்தில் விளைந்த தானியங்களைச் சேதப்படுத்தினாலும் அதைப் பொறுப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. இவ்வளவுக்கும் அந்த உழைப்பாளிதான் நாட்டின் முதுகெலும்பும் உயிர்நாடியுமாயிருந்தான்.

IV

இந்த நிலையில் பிரஞ்சுப் புரட்சி வந்ததில் வியப்பில்லை. ஆயினும் நாம் இந்த இயலின் தொடக்கத்தில் கூறியதுபோல் அது ஒரு பெரும் புரட்சியாக மாறுமென்று புரட்சியாளரே எண்ணவில்லை. காலப் போக்கிலே, இயற்கையின் விளைவிலே 1789ஆம் ஆண்டு தொடங்கிய இந்தப் புரட்சி பத்தாண்டுக் காலம் பிரான்ஸ் நாட்டையே ஒரு புரட்சி நாடாக மாற்றியது.

பதினான்காம் லூயி இன்னும் சிறிது காலம் நீடித்து ஆட்சி செய்திருந்தால் ஒருவேளை பிரான்ஸின் நிலைமை மாறியிருக்கலாம். ஆனால் 1715ஆம் ஆண்டில் சாவு அவரைக் கைப்பற்றியது. அப்போது நாட்டின் பொருளாதாரம் கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. பெனலன் (Fenelon) கூறியதுபோல் ''அழிவுற்ற மக்களின் மேல் லூயி தம் அரியணையை எழுப்பியிருந்தார்.''* மன்னரோ ஒன்றன் பின் ஒன்றுக ஏற்பட்ட தோல்விகளால் அடிபட்ட சிங்கம்போலிருந்தார். இந்நிலையில் முதலில் அவர் முதல் மகன், பிறகு அவருடைய முதல் பேரப்பிள்ளை, அதற்குப் பின் அவருடைய பேரனது பிள்ளை என்று இவ்வாறுக அவருக்குப் பின் பட்டத்திற் குரியவர் ஒவ்வொருவராக இறந்தார்கள். எஞ்சி நின்றது இரண்டு வயது நிரம்பிய ஒரு சிறு குழந்தை மட்டுமே. ஆகவே தமக்குப் பின் அரசு சூலியாவண்ணம் ஆர்லியான்ஸ் பிரபு

*"His (Loui's) policy had impoverished France and he had built his throne on the ruin of all classes in the State."—Fenelon; quoted in Grant's *History of Europe*.

வின் தலைமையின் கீழ் ஒரு ஆட்சிக் குழு (Council of Regency) அமைத்துத் தம் அரசியல் கொள்கைகளை வழுவாமல் பின்பற்றும் படி கேட்டுக்கொண்டார். ஆனால் கிரான்ட் கூறுவது போல், ''பதினான்காம் லூயி கல்லறையிலிருந்து பிரஞ்சு ஆட்சியை நடத்த எண்ணியது கை கூடவில்லை.''

நாட்டின் கடன் நிலை நாளுக்கு நாள் வளர்ந்தது. அப்போது ஜான் லா (John Law) என்ற ஸ்காட்லந்து நாட்டினர் ஒருவர் ஆட்சிக் குழுவுக்கு ஆலோசனையாளராக நியமிக்கப் பட்டார். ஐரோப்பாவிலேயே முதல் முதலாகக் காகித நோட்டுக் கள் அச்சடிக்க ஏற்பாடு செய்தவர் இவர். காகிதநோட்டுக்களின் மதிப்பளவுக்கு அரசாங்கத்தில் தங்கமோ வெள்ளியோ ஈடாக இருக்க வேண்டியதில்லையென்பதும், நாட்டின் பொதுவான செல்வ நிலையே இதற்குப் போதுமென்பதும் இவருடைய கொள்கை. அமெரிக்காவில், பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான இடங்களின் மூலதனமே பிரஞ்சு நாட்டின் நாணயத்திற்குப் போதுமான தென் பது அவர் கருத்து. ஆனால் அவர் நினைத்தபடி காரியங்கள் நடக்க வில்லை. அமெரிக்க நாட்டுடன் வாணிகம் செய்து வந்த பிரஞ்சு வணிகர்கள் தங்கள் வாணிகத்தின் பெருமையை உணர்ந்தார்கள். உடனே பலர் இந்த வாணிகத்தில் பங்கு பெற முயற்சித்தார்கள். முடிவில் பிரஞ்சு - அமெரிக்க வாணிகமே கெட்டழிந்தது. ஜான் லாவின் முயற்சி பயனின்றி ஒழிந்தது. ஏறக்குறைய அதே சமயம் ஆட்சிக் குழுவிற்குத் தலைமை தாங்கிய ஆர்லியான்ஸ் பிரபுவும் காலமானார் (1723). ஆகையால் பதினைந்தாம் லூயி பட்டத்திற்கு வந்தபோது இன்னும் சிறு பிள்ளையாகவே இருந்தார். அவர் தமக்கு ஆலோசனையாளராக கர்தினல் புளூரி (Fleury) என்ப வரைத் தேர்ந்தெடுத்தார். அவர் சமர்த்தரென்றாலும் அவராலும் நிலைமையைச் சீர்படுத்த முடியவில்லை. அதன் பிறகு அவருக்கு வாய்த்த இரு ஆலோசனையாளர்கள் அவருடைய ஆசைநாயகி கள். இவர்களில் டூ பாரி என்பவர் பார்லிமென்ட் சபையை ஒழித்துக் கட்டும்படி மன்னரைத் தூண்டினார். அவரும் அந்த போதனையை ஏற்றுக் கொண்டு, பார்லிமென்டைக் கலைத்தார்; எதிர்ப்பாளர்களைச் சிறைப்பிடித்தார்; பிரான்ஸ் நாட்டின் உயர்நீதி மன்றம் இனி பார்லிமென்டின் வேலைகளைச் செய்யும் என்றும் ஆணை பிறப்பித்தார்.

1774ஆம் ஆண்டு மேத்திங்கள் மன்னர் காலமானார். அவ ருக்குப் பின் பதினாறும் லூயி பட்டத்திற்கு வந்தார். அவர் இளவயதினர். நல்லெண்ணம் கொண்டவர். பதினைந்தாண்டு களுக்குப் பிறகு ஏற்படப் போகும் பெரும் புரட்சியின் நிழல் அப்போது தென்படவில்லை. அதற்குப் பெருந் தலைவர்

களாக அமைந்த மிரூபோ (Mirabeau), லா பயட் (La Fayette), ரோபஸ்பியர்(Robespierre),டான்டன்(Danton) போன்றவர்களும் இளம் பிராய முள்ளவர்களே. 1775ஆம் ஆண்டு மன்னருக்கு முடி சூட்டும் விழா. அப்பொழுது டான்டன் பதினறு பிராயமே எய்தி யிருந்தார். பாரிஸ் பட்டணத்தி லிருந்து 70 கல் தொலைவி லிருந்த பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சிறுவர் டான்டன் முடி சூடிக்கொள்ளும் மன்னரைக் காணப் பள்ளியை விட்டு ஓடி வந்தவர். 18 ஆண்டுகளுக்குப் பின் அதே மன்னருடைய தலையை வெட்டும்படி ஆணை பிறப்பித்தார் என்பதை நாம் நினைக்கும் பொழுது பிரஞ்சுப் புரட்சியின் வேகம் உண்மையில் எதிர் பாராததுதான் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளுவோம்.

சிறு பிள்ளையான பதினறும் லூயியை மக்களெல்லாம் அன்போடு நோக்கினர்கள். பதினேந்தாம் லூயியின் போக்கை இவர் முற்றிலும் வெறுத்தார் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர் நாட்டிற்கு நன்மை செய்வார் என்றுதான் அவர்கள் எண்ணினர்கள். ஆயினும் விதியின் விளைவு முற்றிலும் வேறுக இருந்தது. முதற்கண் புது மன்னருக்கு அரசு முறையில் போதிய பழக்கம் இருக்கவில்லை. பட்டம் சூடிய அன்று, ''கடவுளே, என் பாரம் உலகப் பாரமல்லவா? இதைச் சரிவரத் தாங்குவதற்கு எனக்கு யாரும் சொல்லித் தரவில்லையே''[1] என்று அவரே கூறினராம். மன்னர் வெள்ளை உள்ளம் படைத்தவர். தம் பகைவர்களையும் நண்பர்களாகக் கருதினவர். இனிய பண்பு கொண்டவர். ''மக்கள் தம் மன்னரை எளியர் என்று கூறினால் அவர் ஆட்சி பயன் பெறுதென்று பொருள்''என்று நெப்போலியன் கூறினர்.[2] மன்னரின் மனைவியே அவருடைய எளிமைக்கு இரங்கினரென்றால் அவர் எத்தகைய எளிய உள்ளம் படைத்தவரா யிருந்திருக்க வேண்டும்! பிரான்ஸ் நாடோ கொந்தளிக்கும் கடல்போன்றிருந்தது. அதன் நடுவில் ஒரு சிறு பாறையின் உதவி கூட மன்னருக்கு இருக்கவில்லை. அங்கு எழும்பிய பெரும் புரட்சியை அடக்கக்கூடிய வலிமை, அச்சமின்மை, திண்மை என்ற இவற்றில் ஒன்றுகூட அவரிடமில்லை. கலைக்கப்பட்ட பார்லிமென்டை மறுபடியும் நிலை நிறுத்தினர்: பிறகு மக்கள் சபை (States General) யைக் கூட்டினர்; வெர்சேய் மாளிகையை விட்டு டுலியர்ஸ் மாளிகைக்குச் சென்றார். ஒவ்வொன்றும் மக்கள் கோரியபடி

1. "It seems to me as if the universe is falling on me. God, what a burden is mine and they have taught me nothing."—Louis XVI—Edited by Kettlebey: *A History of Modern Times.*

2. "When men call a King a kind man his reign has been a failure."—Napoleon: quoted by Kettlebey.

செய்யப்பட்டது. அதனால் புரட்சி வளர்ந்தது. இதற்குக் காரணம் அவரிடம் திண்மையான மனமில்லை. இந்நிலையில் அவர் அமெரிக்கப் புரட்சிக்கு உதவி அனுப்பினர். வெற்றி கண்ட வீரர்கள் பிரான்சிற்குத் திரும்பியவுடன் அங்கேயும் புரட்சியில் ஈடுபட்டதில் வியப்பேது? அமெரிக்க வெற்றி பிரஞ்சுப் புரட்சிக்கு முரசு கொட்டியது. மன்னர் அடிபணிந்தார்.

நாட்டின் பண நெருக்கடியை நீக்க மன்னர் நல்ல அமைச்சர்களை அமர்த்தினர். ஆனால் அவர்கள் பிரபுக்கள் மீதும் செல்வந்தர்கள் மீதும் வரி சுமத்த வேண்டுமென்று தீர்மானித்ததால் மன்னர் அவர்கள் இருவரையுமே வேலையிலிருந்து நீக்கினர். டுர்கோ (Turgot), நிக்கர் (Nicker) என்ற இவ்விருவரும் சிறந்த பொருளாதார அறிஞர்கள். முதல்வர் பிரான்ஸின் ஒரு மாவட்டத்தில் ஏற்கெனவே நிதி அமைச்சர் பதவியை நல்ல முறையில் நடத்தி மக்களுடைய பேரன்பையும் மதிப்பையும் பெற்றவர். ஆயினும் பிரபுக்கள் அரசியலாரைக் கண்டு டுர்கோவின் செய்கைகளுக்கு விளக்கங் கூறினர்கள். மன்னர் அரசியின் சொல்லிற்குச் செவி சாய்த்தார். டுர்கோவின் வீழ்ச்சி (1776) புரட்சிக்கு அடிகோலியது. மன்னரின் எளிய மனத்திற்கு மாற்ற மளிக்கக் கூடிய நிலையில் டுர்கோ பணியாற்றினர். உறுதியான உள்ளம் படைத்த இவர் மக்களின் துன்பத்தைப்போக்கத் துரிதமாக வேலைசெய்தார். ''எங்கள் குடும்பத்தில் ஐம்பது வயதிலேயே இறந்துவிடுகிறார்கள். ஆகையால், நான் என்வேலையைத் துரிதமாகச் செய்யவேண்டும்' என்று இவர் கூறுவாராம். இத்தகைய அமைச்சரை இழந்த பின்னும் இயற்கை மற்றொரு வாய்ப்பையும் மன்னருக் களித்தது. நிக்கர் என்ற நல்ல அமைச்சர் மறுபடியும் அவருக்குக்கிடைத்தார். ஆனால் விரைவில் அவரும் வேலையினின்று நீக்கப்பட்டார். அதன் பின் வந்தவர் கலோன்(Calonne)என்ற அமைச்சர் (1783). இவர் கடன் வாங்குவதிலேயே காலங் கடத்தினர். தம் சொந்த வாழ்க்கையில் பணத்தின் அருமையை அறியாத கலோன் அரசாங்க வேலையிலும் அதே குணத்தைக் காட்டினர். நிக்கர் இவருடைய செயல்களின் ஊழலை எடுத்துக்காட்டியும் மன்னர் மனம் மாறவில்லை.

மன்னர் தம் ஆட்சியின் செலவை ஈடு செய்ய புது வரிகள் விதிக்க நேரிட்டது. பிரஞ்சு மன்னர்களின் வழக்கப்படித் தாமே புது வரிகள் விதிக்க அவசரச் சட்டங்கள் இயற்றினர். ஆனால் பாரிஸ் பார்லிமென்டார் அவற்றைப் பதிவு செய்தாலொழிய அவை சட்டங்களாகக் கருதப்படமாட்டா. இந்நிலையில் பார்லிமென்டார் இவற்றைப் பதிவு செய்ய மறுத்தார்கள். மக்களும் இவர்களின் செய்கையை ஆமோதித்தார்கள். எளிய மனம்

கொண்ட மன்னரும் இதை ஏற்றுக்கொண்டார். அவர்கள் விருப்பப்படியே பொது மன்றத்தை அழைக்கவும், தாம் வேலையி லிருந்து நீக்கிய நிக்கரை மறுபடியும் தம் அமைச்சராக வைத்துக் கொள்ளவும் சம்மதித்தார். நூற்றெழுபத்தைந்து ஆண்டுகளாக அழைக்கப்படாத பொது மன்றம் 1789ஆம் ஆண்டு கூடியது. மக்கள் குதூகலத்துடனும் ஆரவாரத்துடனும் கூடினார்கள். ஆனால் இரண்டு முக்கிய விஷயங்களைப் பற்றி மன்னர் முதலில் முடிவு கூற வேண்டிய தாயிற்று. பிரபுக்கள், குருக்கள், பொதுமக் கள் என்று மூன்று சபைகளாகப் பிரிக்கப்பட்ட இந்தப் பொது மன் றத்தில், முதலில் குறித்த இரண்டு சபைகளில் ஒவ்வொன்றிற்கும் அழைக்கப்பட்ட அங்கத்தினரின் எண்ணிக்கையைப் போல் இரு மடங்கு அங்கத்தினர் மூன்றாவது சபைக்கு அழைக்கப்பட வேண்டு மென்பது பொது மக்களின் முதல் கோரிக்கை. பொது மன்றத் திற்குக் கொண்டுவரப்படும் பொருள்களைப் பற்றிய முடிவு அந்த மன்றத்தின் பெரும்பாலான அங்கத்தினரால் தீர்க்கப்பட வேண் டும் என்பது அவர்களுடைய இரண்டாவது கோரிக்கை. மன்னர் மக்களுடைய முதற் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். ஆனால் அவர்களுடைய இரண்டாவது கோரிக்கையை ஏற்றுக்கொள்ள அவர் தயங்கினர். அதை ஒப்புக்கொண்டால் பிரபுக்கள் சபையும் குருக்கள் சபையும் பயனற்றவை யாகிவிடும். ஏற்கெனவே முதற் கோரிக்கை ஒப்புக்கொள்ளப் பட்டது. அதன்படி மற்ற இரண்டு சபைகளின் அங்கத்தினரளவு மூன்றாவது சபையில் எப்போது மிருக்கும். தவிர, பிரபுக்களிலும், சாதாரணக் குருக்களிலும் பலர் மூன்றாவது சபைக்கு ஆதரவளித்தார்கள். இந்த நிலையில் அவர்களுடைய இரண்டாவது கோரிக்கையை ஏற்றுக்கொள்வது அரசாங்க முழுவதையும் பொதுமக்கள் ஆதிக்கத்தில் விடுவதற்கு ஒப்பாகு மாகையால் சற்று நிதானித்தார். வழக்கம்போல் பிரபுக்களில் பலர் நேரடியாகவும் ஆலோசகர் மூலமாகவும் பொதுமக்கள் கிளர்ச்சியை வலிமையுடன் அடக்க வேண்டுமென்று மன்னருக்குக் கற்பித்தார்கள். அவரோ உடனே செயலில் இறங்கவில்லை. இந்த இடைவெளியைப் பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். 1789ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17ஆம் நாள் மக்கள் சபை தேசிய மன்றம் (National Assembly) என்ற பெயர் பூண்டு அரசாங்க வேலையில் ஈடுபடத் தொடங்கியது. மன்னர் தம் மாளிகையை விட்டுத் தேசிய மன்றம் நோக்கி விரைந்தார். வரலாற்றுப் பெருமை வாய்ந்த பொது மன்றம் நீலைக்க வேண்டுமென்றும், தாம் அவர்கள் கோரும் எல்லாச் சீர்திருத்தங்களையும் செய்து தருவதாகவும் வாக்களித்தார். மக்களோ பொது மன்றம் பழையபடி மூன்று சபைகளோ டில்லாமல், ஒரே மக்கள் சபையாக இயங்க வேண்டு

மென்று ஆர்ப்பரித்தார்கள். என்ன செய்வார் மன்னர்! பிரபுக்களும் குருக்களுமே பலர் பொதுமக்களோடு சேர்வதை அவர் கண்டார். அவருக்கோ பணம் தேவையா யிருந்தது. ஆகையால், எஞ்சிநின்ற பிரபுக்களையும் குருக்களையும் பொதுமக்களோடு சேர்ந்துகொள்ளும்படி தாமே தூண்ட லானார். இவ்விதமாய் அவர்கள் கேட்ட இரண்டாம் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. பொது மன்றம் கலைக்கப்பட்டது; அதற்குப் பதிலாக தேசிய மன்றம் எழுந்தது.

V

இதோடு பிரஞ்சுப் புரட்சி தொடங்கிய தென்று கூற வேண்டும். ஆயினும் இன்னும் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட வில்லை. சில நாள்களில் பெருங் குழப்ப மேற்பட்டது; பொதுமக்களே அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதங்கள் தாங்கும் நிலைமையு மேற் பட்டது. மன்னர் தேசிய மன்றத்தை ஏற்றுக்கொண்ட பின் அவர்களோடு போர் தொடங்கப் படை திரட்டுவதாக வதந்தி உலவியது. சில பிரபுக்களின் ஆலோசனையின்மேல் அவர் மறு படியும் மனம் கலைந்தார் என்பது உண்மையே. இதை அறிந்த வுடன் மக்கள் கொதித் தெழுந்தார்கள். அரசாங்கத்தின் ஆயுத சாலையைத் தாக்கி முதலில் போர் ஆயுதங்களைக் கைப்பற்றினர். பிறகு பாரிஸ் பட்டணத்துப் பாஸ்டீல் சிறைச்சாலையைத் தாக்கி அங்கே யிருந்த கைதிகளை விடுவித்து, அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு படையினரையும் கொடுமையாகக் கொன்றார்கள். அரசரும் அரசியும் வெர்சேய் மாளிகையை விட்டுப் பாரிஸில் வந்து தங்க வேண்டும் என்று கூவினர்கள். என்ன செய்வதென்று அறியாத மன்னர் அவர்கள் கேட்டபடியே தம் மனைவியாரோடு பாரிஸிலுள்ள தமது டுலியர்ஸ் மாளிகைக்கு வந்து சேர்ந்தார். சேர்ந்த பின் மறுபடியும் போர் தொடங்க எண்ணினர். அதற்குள் தேசிய மன்றம் அரசியல் நிருணய சபை **(Constituent Assembly)** ஆக மாறியது. நாட்டின் அரசியல் முறையை நிர்ணயிக்கவும், சிறப்பாகக் கத்தோலிக்க மதத்தையும் போப்பின் ஆதிக்கத்தையும் ஒழித்துச் சமயச் சீர்திருத்தத்தைத் தானே செய்யவும், குருக்களையும், மேற்றிராணிமார்களையும் **(bishops)** தன் இஷ்டம் போல நியமிக்கவும் தொடங்கியது. போப்பாண்டவர் இந்தச் சீர்திருத்த வாதிகளைத் திருச்சபைக்குப் புறம்பாக்கினர். மனம் நொந்த மன்னர் மனமில்லாமலே இந்தச் சீர்திருத்தங்களுக் கெல்லாம் தம் கையொப்பம் வைக்கவும் வேண்டிய தாயிற்று.

அவருக்கு இனி ஒரு சிறிதும் பாரிஸ் பட்டணத்தில் தங்க மன மில்லை. 1791ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தம் மனைவியாரோடு

லூயி வடகிழக்கு நோக்கிப் பெயர்ந்தார். அங்கே இருந்த தம் படையோடு சேர்ந்து சீர்திருத்தவாதிகளைத் தாக்க வேண்டு மென்பதே அவருடைய நோக்கம். ஆனால் அவர் குறித்த இடம் சேருமுன் புரட்சிக்காரர் அரச தம்பதிகளைச் சிறைப் பிடித்து அவர்களைப் பாரிஸ் பட்டணத்திற்கே மறுபடியும் கொண்டு வந்தனர். புது அரசியல் நிருணயச் சட்டம் அரசருடைய ஒப்பம் பெற்றது. அதன்படி பிரான்ஸ் நாடு மன்னர் ஆட்சியின் கீழே இருக்கவேண்டு மென்றும், சட்டமன்றம் ஒரு சபை கொண்டதாக இயங்கவேண்டு மென்றும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தேர் தல் மூலம் அது புதுப்பிக்கப்பட வேண்டுமென்றும், பழைய மாவட்டங்கள் ஒழிந்து நாடு 83 சிறு வட்டங்களாக இயங்க வேண்டு மென்றும் முடிவு செய்யப்பட்டது. மன்னர் இதை ஒத்துக் கொண்டார். புரட்சியும் ஒருவாறு ஒழிந்ததுபோல் காணப்பட்டது. ஆயினும் இதைவிடப் பெரும் புரட்சி யொன்று விரைவில் ஏற்பட்டது.

இதைப் பிரஞ்சுப் புரட்சியின் இரண்டாம் பாகம் என்று கூற லாம். புரட்சி அன்னிய நாடுகளோடு இப்போது தொடர்பு கொண்டது. ஆஸ்திரிய, ருஷிய, பிரஷ்ய நாடுகள் 1772ஆம் ஆண்டு போலந்து நாட்டின் ஒரு பகுதியைத் தம்முள் பகிர்ந்து கொண்டன வல்லவா? இப்பொழுது 1791ஆம் ஆண்டு இரண் டாந்தரம் போலந்து பகுக்கப்பட்டது. சுதந்திரம் கோரிய பிரஞ்சுக்காரர்கள் இதைப் பார்த்துக்கொண்டு வாளா இருக்க முடியவில்லை. பிரஞ்சு மன்னர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஐரோப்பிய வல்லரசுகள் அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆகவே பிரஞ்சு மக்கள் வெகுண்டனர். ஐரோப்பிய அரசர்களோ இவர் களை முழுவதும் வெறுத்தனர். இவர்களுடைய அரசியல் கொள்கைகள் ஐரோப்பா முழுவதுமே பரவக்கூடும் என்று ஐரோப்பிய மக்களும் மன்னரும் பயந்தார்கள். இந்நிலையில் லூயி மன்னருடைய சகோதரர்களும், பல பிரஞ்சுப் பிரபுக்களும் பிரான்ஸ் நாட்டை விட்டு ஆஸ்திரிய நாட்டில் வதிந்தார்கள். அங்கு டிரவெஸ் (Treves), மேய்ன்ஸ் (Mainz) போன்ற எல்லைப் பிரதேசங்களில் தங்கி அவர்கள் படைகள் சேர்ப்பதாகப் பிரான்ஸ் நாட்டில் பேசப்பட்டது. இதனால் பிரஞ்சு மக்கள் முதலில் ஆஸ்திரிய நாட்டுடன் போர் தொடுத்தார்கள். மன்னரும் இதை ஆமோதித்தார்.

போர் முதலில் பெல்ஜிய நாட்டில் தொடங்கியது. ஆஸ்தி ரியப் படையும், பிரஞ்சுப் படையும் இங்குச் சந்தித்தன. ஆனால் எதிர்பாராதபடி பிரஞ்சுப் படை தோல்வியுற்றது. மன்னரே

எதிரிக்கு உதவியாக இருப்பதாகப் பிரஞ்சு மக்கள் நினைத்தார்கள். டான்டன் அப்போது பாரிஸ் பட்டணத்தில் சிறந்த வழக்கறிஞராக விருந்தார். மன்னரை நேரடியாகத் தாக்கவேண்டு மென்று அவர் மக்களைத் தூண்டினார். 1792ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 10ஆம் நாள் பிரஞ்சுப் படை மக்களோடு சேர்ந்தது. உடனே அவர்கள் அரசருடைய மாளிகையைத் தாக்கினார்கள். தப்பி ஓட முயன்ற அரச தம்பதிகள் பிடிபட்டனர்; மன்னர் தம் பதவியி லிருந்து நீக்கப்பட்டார். புது அரசியல் முறையை நிர்மாணிக்க ஒரு புது மக்கள் சபையைக் கூட்டவேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது.

ஹாயி மன்னர் ஆஸ்திரியப் படைகளுக்கு எவ்வாறு உதவினா ரென்பதை யாராலும் எடுத்துக்காட்ட முடியவில்லை. வெறும் வதந்தி காலப் போக்கில் உண்மையாயிற்று. ஆகையால் சிலரே இதை நம்பினார்கள்; பலர் நம்பவில்லை. ஆகவேதான் பயங்கரக் குழப்ப மேற்பட்டது. டான்டன் புரட்சிக்குத் தலைமை தாங்கினர். பாரிஸ் முனிசிபல் சபையைத் (Commune of Paris) தம் கைக்குள் வைத்துக்கொண்டு எதிர்ப்பாளர்களைத் தாக்கினர். பிரஞ்சுப் படையும் அவருக் குதவியது. சந்தேகப்பட்டவர்களை யெல்லாம் அவர்கள் சிறைப் பிடித்தார்கள். பாரிஸ் சிறைச்சாலைகள் நிறைந்து வழிந்தன. சிறைகளில் இடம் ஏற்படுத்துவதற்காக மக்கள் வீதிகளில் இழுக்கப்பட்டுக் கொடுமையாய்க் கொல்லப் பட்டார்கள். ஆண்களும் பெண்களுமாகச் சுமார் 1500 பேர் இப்படிக் கொல்லப்பட்டன ரென்று சொல்லப்படுகிறது. 1792ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் இந்தக் கொலைகள் நடந்ததால் இவற்றிற்குச் 'செப்டம்பர்க் கொலைகள்' (September Massacres) என்று பெயர். இவற்றிற்குத் தலைமைதாங்கியவர்கள் டான்டன் (Danton), மாரட் (Marat) என்பவர்கள்.

இதற்குள் ஐரோப்பியச் சண்டை வலுத்தது. ஆஸ்திரியாவுடன் பிரஷ்யாவும் சேர்ந்து பிரன்ஸ்விக் பிரபுவின் தலைமையின் கீழ்ப் பிரஞ்சு எல்லையைக் கடந்து கூட்டணிப் படை பாரிஸை நோக்கிச் சென்றது. பிரஞ்சுப் படைகளுக்குத் தலைமை தாங்கியவர் டு மூரியே (Duo Mouriez). அவர் சிறந்த படையை பிரான்ஸின் எல்லைக்கருகில் அணிவகுத்து நிறுத்தி யிருந்தார். அதைத் தாண்டியே பாரிஸை அடைய முடியும். ஆர்கோன்ஸ் மலைகளின் அடிவாரத்தில் வாமி (Volmy) என்ற இடத்தில் நடந்த சண்டையில் கூட்டணிப் படை தோல்வியுற்றது. பிரன்ஸ்விக் பிரபு டு மூரியேவோடு சமாதானம் செய்துகொண்டு ஜெர்மனி நோக்கித் திரும்பினர்.

வாமிச் சண்டை சிறிய சண்டையே யானாலும் அது பிரஞ்சுப் படையின் முன்னேற்றத்தை அறிவித்தது. பிரஞ்சுக்காரர் ஊக்கம் பெற்றனர். உடனே ஏற்பட்ட பயங்கர அரசுக்கும் (Reign of Terror) பிற்காலத்திய நெப்போலியனுடைய வெற்றிகளுக்கும் இந்த வாமி வெற்றி ஊக்கமளித்த தென்பது மிகைபடக் கூறல் ஆகாது. 1792ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 10ஆம் நாள் லூயியை அரச பட்டத்திலிருந்து விலக்கிய பிறகு புத்தரசியல் முறையை நிர்மாணிக்க ஒரு புது மக்கள் சபையைக் கூட்ட முடிவு செய்யப்பட்ட தல்லவா? அதன்படி வயது வந்த ஆண்களும் பெண்களும் அளித்த வாக்கின்படி அந்தப் புதுச்சபை செப் டம்பர் மாதத்திலேயே இயங்கியது. ஒரு மாத காலத்தில் இவ் வளவு பெரிய சபை கூட்டப்பட்ட தென்று நாம் எண்ணும்போது புரட்சி எத்துணை விரைவில் பணியாற்றியது என்பது விளங்கும். இச்சபை மன்னரைக் கொல்லவும், குடியரசை நிறுவவும் முடிவு செய்தது.

1793ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இருபத்தோராம் நாள் மன்னர் தலை வெட்டப்பட்டது. இந்த முடிவு ஏகமனதாகப் புதுச் சபையில் நிறைவேற்றப்படவில்லை. 387 பேர் இதற்குச் சாதக மாகவும் 334 பேர் பாதகமாகவும் வாக்களித் திருந்தார்கள். ஆயினும் புரட்சிக்காரரின் வாமி வெற்றி அவர்களுக்கு ஊக்க மளித்தது. வரவர அது ஒரு வெறியாகவே மாறியது. பிரன்ஸ் விக் பிரபுவின் படையெழுச்சி லூயிமன்னரின் முடியை இறக்கியது; அவருடைய தோல்வி மன்னரின் சாவையே உறுதிப்படுத்தியது. டான்டன் கூறினார்: 'ஐரோப்பிய அரசர்கள் நம்மை எதிர்க்கிறார் கள்; அவர்களுக்குப் பரிசாக நாம் ஓர் அரசரின் தலையையே தரு கிறோம்.' இனி பிரஞ்சுக் குடியரசு தனியே இயங்க முடியவில்லை. இங்கிலாந்து, ஹாலந்து, ஸ்பெயின்போன்ற நாடுகளும் பிரான்ஸ் நாட்டிற்கு எதிராக இணைந்தன. பிரான்ஸ் நாட்டிலேயே குழப்பம் மிகுந்தது. லா வெண்டி (La Vendee), லயன்ஸ் (Lyons), டூலான் (Toulon) என்ற பிரதேசங்களில் கிளர்ச்சி பலப்பட்டது. பிரான்ஸ் நாடு ஒரு பயங்கர நாடாகக் காட்சியளித்தது.

அப்பொழுது ரோபஸ்பியர் (Robespierre) தோன்றினார். அவர் பன்னிருவர் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தினர். இதற் குப் 'பொதுநலக் குழு' (Committee of Public Safety) என்ற பெயர் சூட்டினார்கள். எது பொதுநலம், அதற்கு எதிரானவர் எவர் என்பதைப் பற்றி முடிவு செய்ய ஒரு நியாய மன்றத்தை (Revolutionary Tribunal) அவர்கள் அமைத்தார்கள். ஆனால், அதற்கு அவர்கள் அதிக வேலை கொடுக்கவில்லை. நியாயத்தை

விசாரிக்கவும், வழங்கவும் நேரமில்லை யென்று அவர்கள் கருதினர் கள். இதற்குள் புரட்சியாளருக்குள்ளேயே கருத்து முரண்பாடு ஏற்பட்டது. டான்டன் ஒரு சிறிதாவது நியாயம் வழங்க வேண்டு மென்று கருதினர்; ரோபஸ்பியர் அதை மறுத்தார். ஹெபர் (Hebert) என்ற மற்றொருவர் கடவுளையே நாட்டைவிட்டு அப்புறப் படுத்த வேண்டுமென்று கருதிப் பாரிஸ் நகரில் நியாய வழிபாடு (Worship of Reason) என்ற புது மதக் கொள்கையை ஏற்படுத் தினர். இந்நிலையிலும் ரோபஸ்பியர் கலங்கவில்லை. முதலில் டான் டனைக் குழுவிலிருந்து நீக்கினர்; பிறகு 9 மாதங்களில் அவரையே கொலைக் களத்திற்கு அனுப்பி வைத்தார். பிறகு ஹெபர், மால் ஷெர்ப் (Malsherbes), மன்னர் லூயியின் மரண தண்டனையை ஆமோதித்தவர்கள், புரட்சியின் தொடக்கத்தில் அதற்கு ஆதர வளித்தவர்கள், மன்னரின் மனைவி, அவருடைய ஆசைநாயகிகள், கள்ளக் கடைக்காரர்கள், குற்றமில்லாப் பயிர்த் தொழிலாளர் என்று இவர்களைப் போன்ற பலதிறத்தார் கொல்லப்பட்டார்கள். முதலில் இரண்டு நாளில் ஒருவர், பிறகு ஒரு நாளில் இருவர், பிறகு திங்களில் 65 பேர், 116 பேர், 155 பேர் என்று இவ்வித மாக அன்றுடம் கொலைக்களம் செல்லும் மக்கள் எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டே சென்றனர். இதைத் தவிரக் குடியரசின் படை வீரர்கள் அங்கங்கே ஆயிரக்கணக்கில் மக்களைக் கொன்று குவித்தனர். கிழக்கே நான்டஸ் பட்டணத்திலிருந்து மேற்கே லயன்ஸ் பட்டணம் வரை ஒரே போர்க்களமாகத் தென்பட்டது. கடைசியில் ரோபஸ்பியரின் கொடுமை அவருடைய சகாக்களுக்கே பிடிக்கவில்லை. இதனால் அவர்கள் கை கலந்தார்கள். ரோபஸ்பியர் சுடப்பட்டார். (அவரே சுட்டுக்கொண்டா ரென்று சிலர் கூறு கிறார்கள்.) ஆனால் இறக்கவில்லை. உடனே இரத்தம் பீரிட்டு ஓடும் நிலையிலே அவரைக் கொலைக்களம் கொண்டு சென்று அவரது தலையைத் துண்டித்தார்கள். அன்று 1794 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள். கொடிய பயங்கர ஆட்சி (Reign of Terror) முடிந்தது. பதினாறு மாதங்கள் நடந்த இந்தஆட்சியின் கொடுமையை மக்கள் பல்லாண்டுக் காலம் மறக்கக் கூடவில்லை. அரசாங்கக் கொலைக் களத்தில் பணியாற்றிய சேம்சனையுங்(Samson) கூட மக்கள் மறக்க வில்லை. 'என்னுடைய எழுச்சிக்குச் சேம்சன் பணி புரிந்தார்' என்று மாவீரன் நெப்போலியனே கூறினர்.

அவர் கூறியதன் உண்மை விரைவிலேயே புலப்பட்டது. மாவீரன் எழுவதற்கு நாடு ஒற்றுமைப்பட வேண்டும்; அங்கு அமைதி நிலவ வேண்டும். இவ்வித நிலைமையைப் பயங்கர ஆட்சி பிரான்ஸ் நாட்டிற்கு அளித்தது; மாவீரன் நெப்போலியனுடைய எழுச்சிக்கு வழிகோலியது.

11. மாவீரன் நெப்போலியன்

[படைத் தலைவர்—ஆலோசகர்—பேரரசர்—வீழ்ச்சி]

I

1794ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ரோபஸ்பியரின் தலை துண்டிக்கப்பட்டது. பயங்கர ஆட்சியின் தலைவர் மறைந்தார்; அவரோடு பயங்கர ஆட்சியும் மறைந்தது. பதினொரும் லூயியின் பிள்ளையும் சிறைச்சாலையில் மாண்டார். அவருக்குப் பின் பட்டத் திற்குரியவர்கள் பிரான்ஸ் நாட்டின் எல்லைக்கு வெளியே அதன் விரோதிகளின் கூட்டத்தோடு சேர்ந்திருந்தார்கள். பிரஞ்சுப் புரட்சி கட்டுக்கடங்காமல் ஆட்சி செலுத்தி வந்த மன்னரை ஒழிக்க எழுந்தது; அக்காரணம் இப்போது மறைந்தது. ஆகவே, புரட்சி இனி நீடிக்க வேண்டுவதில்லையென்ற நிலைமை ஏற்பட்டது.

ஆயினும் புரட்சியில் வெற்றி கண்ட பிரஞ்சு நாடு மற்ற ஐரோப்பிய நாடுகளோடு பொருதுவதில் முனைந்தது. வாமி வெற்றியின் பயனாக அதன் போர் வெறி இன்னும் அதிகரித்தது; பிரஞ்சு எல்லை அதன் இயற்கை எல்லையை அடைய வேண்டு மென்று பிரஞ்சு மக்கள் எண்ணினார்கள். ஒரு புறம் ரைன் நதி வரையும், மற்றொரு புறம் ஆல்ப்ஸ் மலை வரையும், இன்னொரு புறம் பிரினீஸ் மலை வரையும் பிரஞ்சு எல்லை பரவவேண்டும் என்று அவர்கள் ஆவல் கொண்டார்கள். இவ்வெண்ணமும் கைகூடியது. ஆயினும் அவர்கள் தங்கள் ஆவலை இதோடு நிறுத்திக் கொள்ள வில்லை. ஆசைக்கு அளவில்லை என்பது உண்மையாயிற்று. இந்த நிலையில் சிறந்த போர் வீரராக விளங்கிய நெப்போலியன் நாட் டின் தலைமைப் பதவியை அடைந்ததில் வியப்பில்லை.

பயங்கர ஆட்சிக்குப் பிறகு வேறோர் ஆட்சி முறை தேவைப் பட்டது. இதற்கு 'மூன்றுவதாண்டு அரசியலமைப்புத் திட்டம்' (Constitution of the year III) என்று பெயர். முதல் அரசிய லமைப்புத் திட்டம் 1792-ல் அமலுக்கு வந்ததால் 1795ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்தத்திட்டத்திற்கு மூன்றுவதாண்டுத் திட்டம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இதன்படி,

(அ) இரண்டு சட்ட சபைகள் ஏற்படுத்தப்பட்டன. இவற் றில் ஒன்று 500 அங்கத்தினர் கொண்ட கீழ்ச் சபை;

மற்றொன்று 40 வயதிற்கு மேற்பட்ட அங்கத்தினர் கொண்ட மேற்சபை.

(ஆ) ஆட்சியை நடத்த ஐந்து அங்கத்தினர் கொண்ட ஒரு செயற்குழு (Directory) ஏற்பட்டது.

(இ) சட்ட சபைகளின் அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஒவ்வோராண்டும் தங்கள் பதவியினின்று நீங்கிப் புதிய அங்கத்தினருக்கு இடம் தர வேண்டும்.

(ஈ) முதலில் ஏற்படும் சட்டசபைகளில் பழைய அவசரச் சபையின் (Convention) அங்கத்தினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அங்கத்தினர்களாக இருக்க வேண்டும்.

புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் இப்பகுதிகளில் முதல் மூன்று ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், நான்காவது பகுதியை மக்கள் எதிர்த்தார்கள். அவசரச் சபையின் அங்கத்தினர்கள் புரட்சி மனப்பான்மையை நிலைநிறுத்தக் கூடுமென்று அவர்கள் அஞ்சி அந்தச் சபையையே தாக்கினார்கள். இத் தாக்குதலை அடக்குவதற்கு பிரஞ்சுப் படையே பணியாற்ற வேண்டியதாயிற்று. அப்பொழுதுதான் நெப்போலியன் தமது திறமையை முதன் முதல் வெளிப்படுத்தினார்.

1795ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபத்தாரும் நாள் அவசர ஆட்சி முடிந்து செயற்குழுவி னுட்சி தொடங்கியது. நெப்போலியன் இந்தஆட்சியின்கீழ்ப் படைத்தலைவர் பதவி வகித்தார். நெப்போலியன் உண்மையில் பிரஞ்சுக்காரரே அல்லர். பிரான்ஸுக்குச் சொந்தமான கார்சிக்காத் தீவில் பிறந்த இத்தாலியர் நெப்போலியன். சாகும் வரை அவர் ஜூலியஸ் சீசர் பெருமையை மறக்கவில்லை. அவரைப் போல் தாமும் பெரு வெற்றிகள் அடைய வேண்டுமென்று விரும்பினர். அதேபோல் மாக்கியவல்லியும் தம் நாட்டினர் என்பதை அவர் மறக்கவில்லை. மாக்கியவல்லியின் அரசியல் சூழ்ச்சிகள் அவரை என்றும் ஆட்கொண்டன. ஆயினும் அவர் செல்வக் குடும்பத்தில் பிறக்கவில்லை. கார்சிக்காத் தீவின் ஆட்சியாளராக (Governor) இருந்தவரின் உதவியால் அவர் படையாளர் பயிற்சிப்பள்ளியில் (Military Acadamy) முதலில் பிரையன் (Prrienne) பட்டணத்திலும் பிறகு பாரிஸ் நகரத்திலும் படித்த பின்னர் 1785ஆம் ஆண்டு பிரஞ்சுப் படையில் எளிய போர் வீரராகச் சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது பத்தொன்பது.

பின்னர் தமது இருபத்தொன்பதாவது வயதிலேயே நெப்போலியன் பிரஞ்சு நாட்டின் படைத் தலைவரானார். இயற்கை

யிலேயே அவர் சிறந்த ஆற்றல் மிக்கவர். அதனோடு, அவரைப் பெரும்பணிக ளாற்றவென்றே விதி நியமித்திருந்தது. 1762ஆம் ஆண்டிலேயே கார்ச்சிக்காவைப் பற்றி யெழுதவந்த ரூஸோ, 'இந்தச் சிறு தீவு ஒரு காலத்தில் ஐரோப்பாவை அதிசயத்தில் ஆழ்த்திவிடும்' என்று எழுதிப் போந்தார். அதன் உண்மை நெப்போலியன் வாழ்வில் முழுவதும் புலப்பட்டது.

பிரான்ஸில் செயற்குழு ஏற்பட்டபோது ஐரோப்பாவில் பிரஷ்யா தோல்வியுற்று அமைதி கோரியது. 1795ஆம்ஆண்டில் இரு நாடுகளுக்கு மிடையே பாசல் (Basel) என்னுமிடத்தில் ஏற் பட்ட உடன்படிக்கையின்படி ரைன் நதியின் இடக் கரைப் பிர தேசங்கள் பிரான்ஸுக்குக் கொடுக்கப்பட்டன. அதே சமயம் ஸ்பெயின் நாடும் பிரான்ஸோடு சண்டை செய்வதை நிறுத்தியது. அப்போது இங்கிலாந்தும், ஆஸ்திரியாவுமே பிரான்ஸுக்கு எதிராக விருந்தன. இவற்றில் முதல் நாட்டைத் தனியே விட்டு ஆஸ்திரியாவை அடக்க நெப்போலியன் நினைத்தார். வியன்னைப் பட்டணத்தைக் கைப்பற்ற வேண்டும். அதற்கு உதவியாக இருபடைகளை அனுப்ப அவர் முடிவுசெய்தார். ஒன்று வியன்னைவை நேரடியாகத் தாக்குவ தென்றும் மற்றொன்று இத் தாலியின் வடகிழக்கி லிருந்து வியன்னைவைத் தாக்குவ தென்றும் முடிவு செய்யப்பட்டது. இதற்கு இத்தாலியை முதலில் கைப்பற்ற வேண்டு மாதலால் தாமே இத்தாலி நோக்கிப் புறப்பட்டார்.

இத்தாலி நெப்போலியனுக்குச் சொந்தநாடு. அதைப் பிரான் ஸின் அடியில் கொண்டுவர வேண்டுமென்று அவர் அவாக் கொண் டார். முற்காலத்தில் ஜூலியஸ் சீசர் இத்தாலியிலிருந்து பிரான் ஸைக் கைப்பற்றினது அவர் மனத்தில் அலை பாய்ந்தது. அவர் வெற்றியுடன் நாடுதிரும்பியபோது ரோம்நகரம் அவருக்குத் தந்த வரவேற்பு அவர் எண்ணத்திலிருந்து அகலவில்லை. இத்தாலிய வெற்றி தம் பெருமைக்கு அடிகோலுமென்பதை அவர்உறுதியாய் நம்பினர். தன் பிற்கால வாழ்க்கைக்கு வழிவகுக்கும் கல்லூரிப் படிப்பில் மாணவன் கருத்தூன்ற முற்படுவதுபோல் நெப்போலிய னும் இதற்கு வழிவகுத்தார். முதலில் ஜோசப்பின் போஹர்நே (Josaphine Bohernais) என்ற அழகிய நங்கையை மணந்து கொண் டார். 1791ஆம் ஆண்டு இயங்கிய தேசியமன்றத்தின் தலைவராக அவரது முதற்கணவர் பணியாற்றியவர். பயங்கரஆட்சியின்போது அவர் கொல்லப்பட்டதால் ஜோசப்பின் அப்போது விதவையாக இருந்தார். 1794ஆம்ஆண்டு நெப்போலியன் அவரைச் சிறையில் சந்தித்தார். அவருடைய அழகையும் திறமையையும் கண்டு வியந்த நெப்போலியன் தமது பிற்கால வாழ்க்கைக்கு அவர் சிறந்த துணையாவா ரென்பதை உணர்ந்தே அவரை மணந்து

கொண்டார். செயற்குழுவில் செல்வாக்கு நிறைந்த பாராஸ் (Barras) என்பவரை ஜோசப்பின் நன்கு அறிவார். அவரைத் துணைக்கொண்டே ஜோசப்பின் தம் கணவர் இத்தாலிக்குப் படையெடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

இவ்விதமாய் மாவீரனின் இத்தாலியப் படையெடுப்புத் தொடங்கியது. சண்டையில் துப்பாக்கி பிடிக்கும் கலை அப்பொழுதுதான் வழக்கில் வந்துகொண்டிருந்தது. நெப்போலியன் தமது கலைத் திறனை இந்தப் படையெழுச்சியில் கண்டோர் வியக்கும் வண்ணம் காட்டினார். பட்டணத்திற்குப் பிறகு பட்டணம் அவர் படைமுன் விழுந்தது. 1795ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27ஆம் நாள் நைஸ் (Nice) நகரம் அவர் கைக்கு வந்தது. பிறகு அவர் ஆல்ப்ஸ் மலைக் கப்பாலுள்ள பியட்மண்ட் பிரதேசத்தில் நுழைந்தார். ஆஸ்திரியப் படையும் சார்டினியப் படையும் போ நதியின் இரு கரைகளையும் காத்திருந்தன. நெப்போலியன் அவற்றைச் சிதறடித்து, போ நதியையும் தாண்டி இத்தாலியினுள் நுழைந்தார். மேத் திங்கள் 15ஆம்நாள் நெப்போலியன் மிலான் பட்டணத்துள் நுழைந்தார். மிலான் அப்பொழுது ஆஸ்திரியரின் கையில் இருந்தது. இத்தாலிய மக்கள் அவரைத் தங்கள் இரட்சகராக வரவேற்றார்கள். பிறகு மேன்டுஆவைத் தாக்கினார். ஆஸ்திரியர் ஐந்து பெரும் படைகளை அனுப்பி வைத்தார்கள். ஒவ்வொரு படையையும் தனித்தனியே தாக்கி வெற்றி கண்டார் நெப்போலியன். கடைசியில் 1797 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் ஆஸ்திரியர் ரிவோலி என்ற இடத்தில் முறியடிக்கப் பட்டனர். மேன்டுஆ அடுத்த திங்களிலேயே அவருடைய தாயிற்று. நெப்போலியனுடைய இத்தாலியச் சண்டை அதே ஆண்டு அக்டோபர்த் திங்களில் முடிவடைந்தது. அப்போது கேம்போ போர்மியோ (Campo-Formio) என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. நெதர்லாந்து நாடு அப்போது பிரஞ்சுக்காரர் வசம் இருந்தபோதிலும் ஆஸ்திரிய மன்னரே அதை ஆண்டுவந்தார். இந்த உடன்படிக்கைப்படி அது இப்பொழுது பிரஞ்சுக்காரருக்கே சொந்தமாயிற்று. வட இத்தாலியில் ஆஸ்திரியருக்குச் சொந்தமான பிரதேசம் சிஸ் ஆல்பைன் குடியரசு (Cisalpine Republic) என்ற பெயருடன் சுதந்திர நாடாயிற்று. வெனிஸ் பட்டணமும் அதைச் சுற்றியுள்ள பிரதேசமும் ஆஸ்திரியரின் ஆதிக்கத்தில் விடப்பட்டன.

வெற்றியோடு திரும்பிய நெப்போலியனுடைய புகழ் மிகவும் உயர்ந்தது. அது செயற்குழுவிற்கே வியப்பளித்தது. ஆகவே, அவர்கள் நெப்போலியனை எகிப்துக்கு அனுப்பினார்கள். எகிப்து நாட்டைத் துருக்கியரிடமிருந்து பிடுங்குவதோ அல்லது அவ்வித

மாகப் பிரஞ்சு நாட்டிற்குப் புகழ் தேடிக்கொள்ள வேண்டுமென் பதோ செயற்குழுவின் ஏற்பாட்டில் (programme) இருக்கவில்லை. இத்தாலி நாட்டைக் கைப்பற்றிய பின்னர் அது இங்கிலாந்தை ஒடுக்க முயற்சி எடுத்திருக்க வேண்டும். ஆனால், அவ்வித முயற் சிகள் இப்போது எடுக்கப்படவில்லை. இங்கிலாந்தின் கடல் வலிமைக்கேற்ப பிரஞ்சு வலிமை இன்னும் ஏற்படாத காரணத் தால் இது தடைப்பட்டிருக்கலாம். ஆயினும், செயற்குழு நெப் போலியனே இப்போது ஒருவித அச்சத்தோடு நோக்கியது என் பதில் ஐயமில்லை. மாவீரனுடைய எழுச்சி அதன் அங்கத் தினர்களை இருக்குமிடம் தெரியாமல் செய்துவிடக்கூடும் என்ற பயம் அதைப் பிடித்தது. இதனாலேயே அவர்கள் அவரை எகிப்தில் சண்டை செய்யும்படி அனுப்பினர்கள். நெப்போலி யனும் இந்தச் சூழ்நிலையை நன்முகக் கண்டுணர்ந்தார். ஆயினும் சண்டைகளின் மூலமாகவே உயரவேண்டும் என்று அவர் நம் பினர். 'நான் ஏதாவது செய்துகொண்டே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் நாடு என்னை மறந்துவிடும்' என்று அவரே சொல்வாராம். செயற்குழுவின் எண்ணத்தைக் கண்டதும் தம்மை எகிப்திற்கு அனுப்பும்படி அவர்களைத் தாமே கேட்டுக் கொண்டார்.

இந்த நிலையில் அவருடைய எகிப்துப் படையெழுச்சி தொடங் கியது (1798). எகிப்தில் வெற்றி கண்டு இங்கிலாந்து இந்தியா வோடு தொடர்பு கொள்ளாமல் செய்ய வேண்டுமென்று அவர் எண்ணினர். அதற்காக அவர் திப்பு சுல்தானோடு கடிதப்போக்கு வரத்தும் தொடங்கினர். பிரமிட் சண்டையில் (Battle of the Pyramids) அவர் துருக்கியரைத் தோற்கடித்தார். ஆனால் நைல் நதியின் முகத்துவாரத்தில் ஆங்கிலேயக் கப்பற்படை நெல்சன் தலைமையின்கீழ் அவரைத் தோற்கடித்தது. இவ்விதமாய் நெப் போலியனுக்கும் பிரான்ஸுக்கு மிருந்த தொடர்பு தடைப் பட்டது. இனித் தமக்கு வெற்றி ஏற்படாதென்று கண்டவுடன் தாமே தனியே புறப்பட்டுப் பலவித இன்னல்களுக்குப் பிறகு பிரான்ஸ் நாட்டை அடைந்தார். அவருடைய படைகள் எகிப்திலேயே விடப்பட்டு ஆங்கிலேயர் கையில் பலத்த சேத மடைந்தன. ஆயினும், பாரிஸ் பட்டணத்தில் நெப்போலியனை அன்போடு வரவேற்றனர். அவர் பிரான்ஸைவிட்டுச் சென்ற ஈராண்டுக் காலத்தில் செயற்குழு அவசரப்பட்டுக் காரியங்களை நடத்தியது. ஹாலந்து, சுவிட்சர்லாந்து, இத்தாலி நாடுகளில் பிரஞ்சு அரசாங்கம் குடியரசை ஏற்படுத்தியது. இதனால் சீற்றம் கொண்ட ருஷிய, ஆஸ்திரிய நாடுகள் இங்கிலாந்தோடு சேர்ந்து பிரான்ஸுக்கு விரோதமாக எழுந்தன.

II

1799ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் நெப்போலியன் எகிப்திலிருந்து திரும்பினார். உடனே அவர் செயற்குழுவில் ஒரு வரான சியே (Sieyes) என்பவரோடு சேர்ந்து செயற்குழுவைக் கலைக்கவும் ஒரு புதிய அரசியல் திட்டத்தை ஏற்படுத்தவும் முயற்சி செய்தார். 1799ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 9 ஆம் நாள் இம் முயற்சி பலித்தது. அன்று செயற்குழுவை நெப்போலியன் தம் படைவலிமை கொண்டு தகர்த்தார். மூன்று பேர் கொண்ட இரு சிறு குழு இனி அரசியல் வேலைகளில் பணியாற்றுவ தென்றும், இவர்களுக்குக் 'கான்சல்' அல்லது ஆலோசகர் என்ற பெயர் அளிப்ப தென்றும், இவர்களில் முதலிடத்தை நெப்போலியன் ஏற்பதென்றும் முடிவாயிற்று.

நெப்போலியன் அப்போது காட்டிய சூழ்ச்சித் திறனும் அறி வாற்றலும் அசாதாரணமானவை. மக்களாட்சியில் மாவீரனுக்கு நம்பிக்கையில்லை. ஆயினும், மக்களாட்சி வேண்டுமென்று அவர்கள் பெரும் புரட்சியைத் தொடங்கிப் பத்து ஆண்டுகளே முடிவடைந்திருந்தன. இந்தக் குறுகிய காலத்தில் அவர்கள் மனத்தை மறுபடியும் தனியாட்சிக்கு ஈர்த்துச் செல்ல அவர் விழையவில்லை. ஆயினும், அவர்களை அந்த நிலைக்குப் பக்குவப் படுத்தவேண்டும் என்ற நோக்கங் கொண்டார். அதற்காகவே அவர் ஐந்து அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழுவைக் கலைத்து அதை மூன்று அங்கத்தினர்கள் கொண்டதாகச் செய்தார். அந்தப் புதுக் குழுவில் தம்மையே தலைவராகச் செய்து கொண் டார். 'பழம் இன்னும் போதிய அளவு பழுக்கவில்லை' என்று அவரே கூறியதிலிருந்து அவருடைய நோக்கமும், அறிவும் புலப்படும்.

தாங்கள் ஏற்படுத்திய அரசின் பலம் குன்றியது என்பதை மக்களும் அறிந்தார்கள். இந்த எண்ணத்தில் அவர்கள் வளர நெப்போலியன் அவர்கள் நன்மைக்காகப் பல காரியங்களைச் செய்து முடித்தார். முதலில் அவர்களுக்கு அரசாங்கத்தில் ஓரிட மளித்தார். மக்கள் சபையென்று மூன்று சட்டசபைகளை ஏற் படுத்தினர். சட்டசபைகள் மிகுமளவுக்கு அதிகமான பேர்கள் அரசாங்கத்தில் பங்கு பெறக்கூடும். ஆனால், அதே சமயம் சபை களின் அங்கத்தினர்கள் பெருகுமளவுக்கு ஆட்சிக் குழு பல மடையும். அதிகமான அங்கத்தினர்களிடையே ஒற்றுமை குறையும். அரசியலில் கவனிப்பும் குறைவுபடும். அதேபோல் நாட்டின் தல ஆட்சி மன்றங்களைச் சீர்திருத்தினர். ஸ்தல ஸ்தாபன சபைகள் வேலை செய்தன. ஆனால் நிர்வாகப்

பொறுப்பை ஏற்கும் உத்தியோகஸ்தர்களும் இதுவரை தேர்தல் மூலம் வேலையில் அமர்த்தப்பட்டார்கள். இதை நீக்கி, அவர்களை முதல் ஆலோசகரே (First Consul) நியமிக்க வேண்டும் என்று சீர்திருத்தம் செய்தார். புரட்சிக்காரரையும் மன்னர் கட்சியினரையும் ஒருங்கே ஒடுக்கினர். இரகசியப் போலீஸ் படையை நிறுவினர். பத்திரிகையாளர்கள் புரட்சிக்கு ஆதரவளிக்காமல் பார்த்துக் கொண்டதோடு ஒரு சமயம் 60 பத்திரிகைகளை ஒழித்தார். இம் முறைகளால் நாட்டில் உறுதியான அரசு ஏற்படச் செய்தார்; அமைதி நிலவச் செய்தார். மக்கள் இப் போது புரட்சிக்குப் பயந்தார்கள். அவர்கள் கோரியது நல்வாழ்வு. அதற்கு அடிப்படையான அமைதியை நெப்போலியனுடைய சீர்திருத்தங்கள் நாட்டிற் களித்தன.

நாட்டில் அமைதி ஏற்பட்டது. இனி அங்கு ஒற்றுமை ஏற்பட வேண்டும். ஒற்றுமையைக் குலைத்தது இப்போது அரசியல் அன்று; மதமே யாகும். இதை உணர்ந்த நெப்போலியன் கத்தோலிக்கரையும், மறுப்பாளரையும், இன்னும் யூதர்களையுங்கூட நாட்டின் அரசோடு கலந்து இயங்கவும் தம்முள் வேற்றுமையின்றி வாழவும் ஏற்பாடு செய்தார். அப்போது சமயத்தைப் பொறுத்தவரையில் அங்கு இரு பெருங் கட்சிகள் இருந்தன. ஒன்று புரட்சிக் கெதிரான கத்தோலிக்கர் கட்சி. இவர்கள் சமயத்தில் அரசு கலக்கக் கூடாதென்ற கொள்கை கொண்டவர்கள். மற்றொன்று அதற்கு நேர் எதிரான கொள்கை கொண்டது. சமயம் அரசுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டுமென்பது இந்தக் கட்சியினரின் கொள்கை. மாவீரன் நெப்போலியன் இவ்விரு மாறுபட்ட கருத்துகளையும் ஒன்றுசேர்த்தது அவருடைய பெருமைக்கு என்றும் சான்று பகர்கின்றது. அவர் போப்பாண்டவரோடேயே ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார் (1801). இதற்குக் கொன்கோர்டாட் (Concordat) என்று பெயர். இதன்படி திருச்சபையின் நிலங்களையும், மடாதிபதிகளின் நிலங்களையும் பிரஞ்சு அரசு எடுத்துக்கொள்வதென்றும், இதற்குப் பதிலாகத் திருச்சபையின் குருக்களுக்கு அரசாங்கமே சம்பளம் கொடுப்பதென்றும், முதல் ஆலோசகர் பிரான்ஸ் நாட்டின் மேற்றிராணிமார்களைத் தேர்ந்தெடுக்க அவர்களைத் திருப்பணியில் அமர்த்துவது போப்பைப் பொறுத்ததென்றும், குருமார்களை மேற்றிராணிமார்கள் நியமித்துக் கொள்ளலாமென்றும் முடிவாயிற்று.

பிறகு அரசின் பொருளாதார நிலையில் நெப்போலியன் கவனம் செலுத்தினர். வரிகளை மிகக் கண்காணிப்புடன் வாங்க ஏற்பாடு செய்தார். போர்கள் மூலமாகப் பிரான்ஸின் ஆதிக்

கத்தின் கீழ் வந்த நாடுகள் கொடுக்கவேண்டிய தொகைகளும் விடாமல் வசூலிக்கப்பட்டன. மிகுந்த வருவாயிருந்தும் நெப் போலியன் மிகச் சிக்கனமாக அதைச் செலவழித்தார். இத்தகைய முயற்சிகளால் பிரான்ஸின் ஆண்டு வரவு செலவுத் திட்டம் (Annual budget) ஒழுங்குபடுத்தப்பட்டது. வந்த வருவாயைக் கொண்டு பல பெருவழிகளை அமைத்தார். அவை விரைவிலே அரசு பெருவழிகளாக (High roads) மாறின. பாலங்கள், கால் வாய்கள், துறைமுகங்கள் என்ற பலவும் கட்டப்பட்டன. ஏற் கெனவே இருந்த துறைமுகங்கள் செப்பனிடப்பட்டன. பாரி ஸிலும் இன்னும் அதையொத்த இதர நகரங்களிலும் சிறந்த அரசாங்கக் கட்டடங்களும் மாவீரர்களின் வெற்றிச் சின்னங்கள் பலவும் எழுந்தன.

கடைசியாகச் சட்டங்களை ஒழுங்குபடுத்தினார் நெப் போலியன். அவர் ஆற்றிய பணிகளில் வியத்தகு பணி இதுவாகும். சட்ட நுணுக்கங்களை அறியும் ஆற்றல் இங்குப் பணியாற்றியது. முதலில் பொதுச் சட்டங்கள் (Civil Codes) வெளி வந்தன. பிறகு இவற்றைப் பின்பற்றிக் கிரிமினல் சட்டங்கள், கிரிமினல் சிவில் முறைகள் (Codes of Criminal & Civil Procedure) என்றவை வெளிவந்தன. நெப்போலியனுடைய சட்டங்கள் 1804 ஆம் ஆண்டு அமலுக்கு வந்தன. அவை இன்றும் பிரஞ்சுச் சட்டங்களாகத் திகழ்கின்றன. காரணம், அவை மனிதனுடைய பொது அறிவினின்று புறப்படுகின்றன. அரசியல் காரணங்களோ, மதக் கோட்பாடுகளோ அவற்றைத் தாக்குவதில்லை. சமயத்துக்குத் தக்கபடி இயற்றப்பட்ட சட் டங்கள் சமயநிலை மாறியதும் தாமாகவே மாறுகின்றன. சகல ருக்கும், எல்லா விதச் சமய நிலைக்கும் தக்கபடி இயற்றப்படும் சட்டங்கள் அத்தகையன வல்ல. இத்தகைய சட்டங்கள் பொது அறிவின்படி இயற்றப்படுபவை. அவை நிலையானவை. நெப் போலியன் இயற்றிய சட்டங்களும் சட்ட முறைகளும் அத்தகையன வானதால் அவை இன்றும் நின்று நிலவுகின்றன. இதில் அவர் முற்காலத்தில் ரோம சாம்ராச்சியத்திற்குச் சட்ட மமைத்த மாபெருஞ் சட்டமன்னர் ஜஸ்டினியனை ஒத்தவராகக் காணப்பட்டார்.

இத்தனை சீர்திருத்தங்களின் இடையேயும் நெப்போலியன் போர்க்களத்தை மறக்கவில்லை. பிரான்ஸின் பெருமையைத் தம் வெற்றிகள்தாம் காக்கவேண்டு மென்பதில் அவர் மாறு நம்பிக்கை கொண்டவர். எகிப்திலிருந்து அவர் திரும்பி வருவதற்குள் இங்கி லாந்து ருஷியாவையும் ஆஸ்திரியாவையும் தன்னோடு சேர்த்துக்

கொண்டு பிரான்ஸைத் தோற்கடிக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்தது. அப்பொழுது ருஷியாவை ஆண்டு வந்த மன்னர் பால் என்பவரை முதலில் நெப்போலியன் தம்மோடு சேர்த்துக் கொண்டார். இதற்குச் சண்டை தேவையில்லை; தம்முடைய வார்த்தையே போதுமென்பதை உணர்ந்த அவர், பால் மன்னரைப் புகழ்ந்தே தம்மோடு சேரச் செய்தார். அது மட்டுமன்று; பிரஷ்யா, ஸ்வீடன், டென்மார்க்கு தேசங்களை இங்கிலாந்துக்கு மாறுக இணைத்தார். பிறகு இத்தாலியைத் தாக்கினர்.

நெப்போலியனுடைய இந்த இரண்டாம் இத்தாலியப் படையெடுப்பு முன்னையதைவிடப் பெரியதும் வீரம் செறிந்ததுமாக விருந்தது. முதல் தடவை அவர் இத்தாலியினுள் நுழைந்த போது ஆல்ப்ஸ் மலையைத் தாண்டவில்லை. அதைச் சுற்றியே அவர் பியட்மண்ட் பிரதேசத்தினுள் நுழைந்தார். ஆனால், இப்பொழுது அவர் ஆல்ப்ஸ் மலையைத் தாண்டி இத்தாலியினுள் நுழைந்தது உலகுக்கே வியப்பளித்தது. ஏழு நாள்கள் பிரஞ்சுப் படை ஆல்ப்ஸ் மலையைத் தாண்டிச் சென்றது ஹனிபல்லை (Hannibal) மக்களின் நினைவிலே கொண்டு வந்தது. அம் மலைப் பிரதேசத்தில் பயணம் செய்வோருக்குதவியாக அங்கு வதிந்த தூய பெர்னர்டின் துறவிகள் இத்தகைய காட்சியைக் கண்டு வியப்புற்றனர். நெப்போலியன் மாரென்கோ என்ற விடத்தில் ஆஸ்திரியப் படையைத் தோற்கடித்தார் (1800). அதே சமயம் மற்றொரு பிரஞ்சுப் படை ஆஸ்திரியரை ஜெர்மனி நாட்டில் ஹோயென்லிண்டென் (Hohenlinden)என்ற விடத்தில் தோற்கடித்தது. அடுத்த ஆண்டு லூன்வில் (Luneville) என்ற விடத்தில் ஆஸ்திரியாவிற்கும் பிரான்ஸுக்கு மிடையே உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி பிரஞ்சுக்காரரின் இத்தாலிய ஆதிக்கம் உறுதிப்படுத்தப் பட்டது. இனி பிரான்ஸ் நாடு இங்கிலாந்தைத் தாக்கக் கூடும் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் ஆங்கிலேயர் அமியன்ஸ் என்ற இடத்தில் பிரஞ்சுக்காரரோடு சமாதானம் செய்துகொண்டனர் (1802).

அமியன்ஸ் உடன்படிக்கையும் பிரான்ஸுக்குப் பெரு வெற்றியே. இது அந் நாடு அப்போது கொண்டிருந்த உயர் நிலையை எடுத்துக்காட்டியது. இதோடு போரை நிறுத்திப் பிரான்ஸின் நிலையை உறுதிப்படுத்தி யிருந்தால் அதன் வரலாறே வேறு விதமாக இருந்திருக்கும். ஆனால், முன்னரே கூறியதுபோல் நெப்போலியன் போரில் விருப்பமுற்றவர். அரசப் பதவிக்குத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்ளத் தம் வெற்றிகளையே அவர் நம்பி யிருந்தார். வெற்றி காணு நிலை ஒரு சிறிது நேர்ந்தாலும் மக்களின் மதிப்பை இழக்க நேரிடுமென்று அவர் எண்ணினர்.

முதலில் பிரான்ஸ் நாட்டிற்குச் சொந்தமான வெளிநாட்டுப் பிரதேசங்களை அவர் உறுதிப்படுத்த முயன்றார். ஹேய்டி (Haiti) தீவில் அப்பொழுது கலகமேற்பட்டது. அங்கே அடிமை வேலை செய்து வந்த அந் நாட்டினர் பிரஞ்சு முதலாளிகளை எதிர்த்துக் கொன்றார்கள். நெப்போலியன் அவர்களை அடக்குவதற்குத் தம் மைத்துனர் ஜெனரல் லெ கிளார்க் (Le Clarc) என்பவரைப் படையுடன் அனுப்பி வைத்தார். ஆனால் அவர் வெற்றி பெற வில்லை. 1763ஆம் ஆண்டில் பிரஞ்சுக்காரர் ஸ்பெயின் நாட்டிற்கு லூயிஸியானை (Louisiana) பிரதேசத்தைக் கொடுத்திருந்தார்கள். அதை அவர்களுக்குத் திருப்பித் தரும்படி நெப்போலியன் ஸ்பெயின் நாட்டைப் பணித்தார். ஆனால் அதைப் பெற்ற பின் அதை அமெரிக்க நாட்டிற்கு விற்றார் (1803). இவையெல்லாம் நெப்போலியனுடைய புகழுக்கு இழுக்காயின. இது மாற வேண்டுமானால் பெரும் போரில் ஈடுபட்டுப் பெருவெற்றிகள் பெற வேண்டுமென்று அவர் முடிவு செய்தார்.

III

நெப்போலியனுடைய வளர்ச்சியில் 1804ஆம் ஆண்டு மூன்றாம் கட்டம் தொடங்கியது. 1799ஆம் ஆண்டில் முதல் ஆலோசகராக நியமனம் பெற்ற அவரை மக்கள் 1802ஆம் ஆண்டில் நிலையான ஆலோசகராக நியமித்தார்கள். அமியன்ஸ் உடன்படிக்கைக்குப் பிறகு நாடு வளம் பெற்றது. அவருக்கு அப்போது தரப்பட்ட நிரந்தர ஆலோசகர் பதவி அவருக்குச் சிறந்த வாய்ப்பளித்தது. ஆனால் அவருக்கு இதுவும் மன நிறை வளிக்கவில்லை. பிரான்ஸ் நாட்டின் மன்னராகத் தாம் திகழ வேண்டும் என்று அவர் அவாவினார். பிரஞ்சுக்காரர் நாட்டின் பெருமைக்கு அடிமையானவர்கள் என்பதை அறிந்த அவர் தம்மைப் பிரஞ்சுப் பேரரசர் என்று கூறிக்கொள்ள விரும்பினார். பத்தாண்டுக் காலத்தில் நான்காம் முறையாகப் பிரஞ்சு அரசியல் திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. இதனின் றெழுந்த 'பத்தாமாண்டு அரசியல் திட்டப்'(Constitution of the year X)படியே நெப்போலியன் நிரந்தர ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்தார். 1804ஆம் ஆண்டு இன்னுமோர் அரசியல் திட்டத்தைக் கொண்டு வந்து தம்மையே பிரஞ்சுப் பேரரசராகச் செய்துகொண்டார். 1804ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 2ஆம் நாள் அன்று பாரிஸ் பட்டணத்து 'எங்கள் அன்னை' (Notre Dame) கோயிலில் ஏழாம் பியுஸ் (Pius VII) என்னும் போப்பாண்டவரின் முன்னிலையில் தாமே அரச முடியைத் தரித்துக்கொண்டார் நெப்போலியன். அதோடு பிரஞ்சுப் புரட்சி முடிந்தது. வெளிநாட்டில் குடியேறிய

மக்களும் பிரபுக்களும் திரும்பவும் தங்கள் நாட்டில் இடம் பெற் றார்கள். புரட்சிப் போர்களில் பெரும் பங்கு கொண்டவர் களுக்குத் தனி மதிப்பு வழங்கப்பட்டது. 'மதிப்பிற்குரிய குழு' (Legion of Honour) என்ற பிரத்தியேகமான சபையை ஏற்படுத்தி அதில் அவர்களே மாமன்னர் அங்கத்தினர்களாகச் செய்தார். வெளிநாடுகளில் பெரும் போர்களில் பணியாற்றிய படைத் தலைவர்கள் 'பேரரசின் படைத் தலைவர்' (Marshal of the Empire) என்ற பட்டம் வழங்கப்பட்டனர். புது நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன; அவற்றில் 'பிரஞ்சுக் குடியரசு' என்ற பெயரும், 'பேரரசர் நெப்போலியன்' என்ற பெயரும் ஒருங்கே காணப்பட்டன. ஆயினும் 1792 ஆம் ஆண்டு ஏற்பட்ட குடியரசு நாட்காட்டி (Republican Calendar) இப்போது வழக் கினின் றொழிந்தது. மக்களே மோன்சியூர் (Monsieur) என் றழைப்பது இப்போதுதான் வழக்கில் வந்தது.

மாவீரன் வரலாற்றில் இது பெருமைக்கும் துயருக்குமிடமான கட்டம். பேரரசரானதோடு அவர் உள்ளம் நிறைந்தது. ஆனல் விதி வேறு வழி வகுத்தது. நுனி மரத்தின் உயரத்தில் வீற்றிருந்த நெப்போலியன் இனி கீழே விழாமல் பார்த்துக்கொள்ள வேண்டு மென்ற நிலை இப்போது ஏற்பட்டது. ஆனல், போர் வெற்றிக் காக அவர் ஐரோப்பா வெங்கும் அலைந்தார். தாம் அடைந்த வெற்றிகளைக் காக்க வேண்டுமென்ற எண்ணமே அவருக்குண்டாக வில்லை. அவர் பேரரசர் பதவி வகித்த பதினேராண்டுகளில் ஆறுண்டுகள் மட்டுமே இன்னலின்றி அப் பதவியை வகித்தார். 1810 ஆம் ஆண்டிலிருந்து அவருடைய வாழ்க்கைநலம் கீழ் நோக்கியது.

அமியன்ஸ் உடன்படிக்கை ஓராண்டுக் காலமே நீடித்தது. நெப்போலியன் தமது ஆட்சியை ஐரோப்பாவின் பல பாகங்களில் பெருக்கியது ஆங்கிலேயருக்கு அச்சம் விளைத்தது. நெதர்லாந் திலும், மத்தியதரைக் கடல் பிரதேசத்திலும் பிரஞ்சுப் பேரரசின் வளரும் ஆதிக்கத்தை அவர்கள் மிகுதியாக வெறுத்தார்கள். ஆங்கிலேயரின் கடல் வலிமையை அது குறைக்கக் கூடுமென்று அவர்கள் அஞ்சினர்கள். 1803 ஆம் ஆண்டு மேத் திங்களில் இரு நாட்டினருக்கு மிடையே போர் மூண்டது. ஆங்கிலேயர் கடல் வலிமை கொண்டவர்களாதலால் முதற் போர் கடலிலேயே நடந்தது. நெப்போலியன் ஸ்பெயின் நாட்டினரைத் துணைக் கொண்டார். ஆயினும் ஆங்கிலேயரே வெற்றி கண்டனர் (1805). இந்தச் சண்டை ஜிப்ரால்டருக் கருகே டிரபால்கர் (Trafalgar) என்ற இடத்தில் நடந்தது. வெற்றி கண்ட ஆங்கிலேயப் படைத் தலைவர் நெல்சன் இந்தப் போரில் உயிர்

துறந்தார். ஆயினும், ஆங்கிலேயர் கொண்ட வெற்றி அவர் களுக்கு நிலை பெற்ற கடல் வலிமை அளித்தது.

இனி நெப்போலியன் நேரடியாக இங்கிலாந்தைத் தாக்குவது முடியாத காரியம் என்பது இப்போது வெளிப்படை யாயிற்று. ஆகவே அவர் ஆங்கிலேயரை ஒடுக்க வேறொரு வழி கண்டுபிடித் தார். ஆங்கிலேயர் பொதுவில் வணிகர்கள். நெப்போலியன் அவர்களை வணிக மக்கள் (Nation of shop-keepers) என்றே அழைத்தார். பிற நாடுகளுக்குத் தங்கள் பொருட்களை அனுப்பு வதிலும், பிற நாடுகளின் பொருட்களை மற்ற நாடுகளுக்கு எடுத்துச் செல்வதிலுமே அவர்களுடைய செல்வாக்கு வளர்ந்த தென்பதால் தம் ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் ஆங்கில நாட்டுப் பொருள்கள் வரக் கூடாதென்று நெப்போலியன், ஆணை பிறப்பித்தார். இதற்கு ஐரோப்பிய வணிக முறை அல்லது கண்டத் திட்டம் (Continental system) என்று பெயர் சூட்டப்பட்டது. இதற்கு எதிராக ஆங்கிலேயர் சில ஆணைகள் பிறப்பித்தார்கள். அவற்றின் படி எப்பக்கமும் சேராத நடுநிலை நாடுகள் பிரஞ்சுத் துறைமுகங் களுக்குத் தங்கள் கப்பல்களைச் செலுத்தக் கூடாதென்று அவர்கள் கட்டளை பிறப்பித்தார்கள். தங்கள் கடல் வலிமையின் உதவி யால் இதை நடைமுறையில் அவர்கள் கொண்டுவரமுயன்றார்கள். இந்நிலையில் ஐரோப்பிய வாணிகமே தடைப்பட்டது. நடுநிலை நாடுகள் பிரஞ்சுத் துறைமுகங்களுக்கும் போகக் கூடவில்லை. ஆங்கிலேயத் துறைமுகங்களுக்கும் போகக் கூடவில்லை. இதனால் பெருந் தவிப்பேற்பட்டது. பிரஞ்சுக்காரர்களின் நிலைமையும் சீர்கேடடைந்தது. ஆங்கிலேயர் விற்பனை செய்த பொருட்கள் தரத்தில் உயர்ந்தவை யாகவும் விலையில் குறைவாகவு மிருந்ததால் அவற்றைப் பெற ஐரோப்பிய நாடுகள் பலவும் விழைந்தன. டார்டனெல்ஸ் வழியாகவும் மத்தியதரைக் கடல் வழியாகவும் சவப்பெட்டிகள் போல் பெட்டிகள் செய்து அவற்றின்மூலம் ஆங்கிலப் பொருட்கள் மற்ற நாடுகளை அடைந்தன. கள்ளக் கடத்தல் அதிகரித்துக் கடைசியில் நெப்போலியனே சில துறைமுகங்களில் ஆங்கிலப் பொருட்களுக்கு இறக்குமதிச் சீட்டை வழங்கினர். ஆகவே அவருடைய வாணிக முறை ஆணைகள் பலனளிக்க மறுத்தன. உலகமெங்கும் ஆங்கிலேய வாணிகம் நடந்து வந்ததால் ஐரோப்பாவில் அதை முறியடிக்க முடிந்தாலும் அது அவருடைய எண்ணத்திற்குத் துணை புரிய முடியாதென்பதை மாவீரர் துயரத்தோடு கண்டு பிடித்தார்.

இதுவே அவருடைய வீழ்ச்சிக்கு முதலறிகுறியாக விருந்தது. ஆயினும் அவர் மனந் தளரவில்லை. பல பெரும் போர்கள்

செய்து வியத்தகு வெற்றிகள் பெற அவர் தவறவு மில்லை. ஆங்கிலேயர் ஆஸ்திரியா, ருஷியா, சுவீடன் நாடுகளை மறுபடியும் அவருக்கு விரோதமாக இணைத்தார்கள். வெற்றி வீரர் உடனே ஜெர்மனிக்குள் நுழைந்து உல்ம் (Ulm) என்ற இடத்தில் ஆஸ்திரியரை வென்றார் (1805). அங்கிருந்து புறப்பட்டு வியன்னாவைத் தாக்கினார். வியன்னாவின் வீழ்ச்சிக்குப் பிறகு ருஷியாவும் ஆஸ்திரியாவோடு இணைந்தது. இங்கிலாந்திலே தலைமை அமைச்சராக இருந்த வில்லியம் பிட் நெப்போலியனின் தோல்வியை எதிர்பார்த்த வண்ண மிருந்தார். ஆனால் ஆஸ்ட்ரலிட்ஸ் (Austrelitz) என்ற இடத்தில் கூட்டணிப் படையும் தோல்வியுற்றது. இதைக் கேட்ட வில்லியம் பிட் சீக்கிரமே நோய்வாய்ப்பட்டிறந்தார். ''ஆஸ்ட்ரலிட்ஸ் சண்டை பிட்டைக் கொன்றது'' என்ற சொல்லும் அன்று வழக்கில் வந்தது; இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. அன்று 1805 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் நாள். நெப்போலியன் பேரரசர் பதவியை அன்றுதான் ஓராண்டுக்குமுன் ஏற்றிருந்தார். 'அது எனக்கு என்றும் நல்ல நாள்' என்று அவர் சொல்லிக் கொண்டார். அப்போது பிரஷ்யாவும் கூட்டணியோடு கூடியது. 1806 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் நாள் நெப்போலியன் பிரஷ்யப் படையைத் தனியாக எதிர்த்தார். அப் போரில் பிரஷ்யப் படை சிதறடிக்கப்பட்டது. இந்தப் போர் ஜீனா என்ற இடத்தில் நடந்தது. அன்றே மாபெரும் பிரடிரிக் பிரஷ்யப் படைக்கு வாங்கித் தந்த பெருமை யாவும் சிதறடிக்கப்பட்டன. அந்நாட்டின் எல்லையிலிருந்த போலந்து நாடு தனி நாடாக இயங்கியது; பிரஷ்யர்கள் தங்கள் படையின் எண்ணிக்கை யைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று நெப்போலியன் முடிவு செய்தார்.

இப்போது பிரான்ஸுக்கு எதிராக நின்றவை ருஷியாவும் சுவீடனும் மட்டுமே. அதிலும் ருஷிய எதிர்ப்பை நீக்கிவிட்டால் சுவீடன் தானாகவே அடிபணியும். முதலில் எய்லோ (Eylau) என்ற இடத்திலும் பிறகு பிரீட்லேண்ட் (Friedland)டிலும் நெப்போலியன் ருஷியாவை வென்றார். அப்பொழுது ருஷிய மன்னராக விருந்தவர் முதலாம் அலெக்சாண்டர் (1801-25). அவர் வயதில் சிறியவர். நெப்போலியனுடைய ஆண்மை அவரை ஈர்த்ததில் வியப்பில்லை. மாவீரர் சூழ்ச்சி நிறைந்தவர். முன்னரே கூறியதுபோல் சீசரும், மாக்கியவல்லியும் அவருடைய மதிப்பிற்குரிய பெரியோர்கள்; அவருடைய சொந்த நாட்டினர். ஆகையால் அவர் ருஷிய மன்னரைப் புகழ்ந்தார்; தோல்விக்குப் பின்னும் ருஷியாவின் நிலப்பரப்பில் ஓரடியும் தமக்கு வேண்டிய


1810- இல் நெப்போலியன் பேரரசு
ஐஸ்லாந்து
ஸ்காட்லாந்து
கிரேட்பிரிட்டன்
அயர்லாந்து நாடு
அயர்லாந்து
பிரிட்டிஷ் தீவுகள்
பிரிட்டிஷ் மைனர்
ஹாலந்து
வாச்சா
ஆஸ்ட்ரியப் பேரரசு
ரைன் கூட்டு நாடுகள்
துருக்கிப் பேரரசு
சார்டினியா
சிசிலி
1799- இல் பிரான்ஸ்
நெப்போலியன் சம்பாதனைகள்
நெப்போலியனுக்கு உட்பட்ட நாடுகள்

தில்லையென்று கூறினர். ருஷிய அரச குடும்பத்தைச் சேர்ந்த அம்மையார் ஒருவரைத் தாம் மணம் புரிந்து கொள்வதாகவும் தெரிவித்தார். இவ்வளவுக்கும் ருஷிய மன்னரிட மிருந்து நெப்போலியன் கோரியது ஒன்றே ஒன்று. தம்மோடு சேர்ந்து தமது வாணிக முறை வெற்றிகரமாக நடந்தேற உதவ வேண்டு மென்பதே அது. இதைக் கேட்ட இளம் ருஷிய வேந்தர் தாராளமாக மனமிசைந்தார். ''நாமும் நீங்களுமில்லாமல் ஐரோப்பா ஏது?'' என்று மனம் விட்டுக் கூறினராம் மகிழ் வெய்திய ருஷிய வேந்தர். பிறகு ருஷியாவைக் கொண்டே சுவீடனைத் தோற்கடித்தார் நெப்போலியன். ருஷியா பின்லாந்தை (Finland)க் கைப்பற்றியது. உடனே சுவீடன் அடிபணிந்தது; பிரான்ஸோடு சேர்வதாகவும் ஒப்புக்கொண்டது (1809).

ஐரோப்பிய வரலாற்றில் 1809 ஆம் ஆண்டு பிரான்ஸின் மிக உயர்ந்த நிலையைக் குறிப்பிடுகிறது. வட இத்தாலியைத் தனி நாடாகச் செய்து அங்குத் தமது புதல்வன் யுஜின் போஹர்நே (Eugene Beauhornais) என்பவரையே அரசப் பிரதிநிதியாக நெப்போலியன் அனுப்பி வைத்தார். நேப்பிள்ஸ் நாட்டை அவர் உடன்பிறந்தோர் ஜோசப்பும் ஹாலந்து நாட்டை அவருடைய மற்றோர் உடன்பிறந்தோர் லூயியும் ஆண்டு வந்தார்கள். ரோமில் ஆண்ட போப்பும், ஸ்பெயின் நாட்டு மன்னரும், டென்மார்க் நாட்டு மன்னரும் அவருடைய நண்பர்கள். ருஷிய மன்னர் நெப்போலியனை உடன் பிறந்தோ ரென்றே அழைத்தார். சுவீடனும் ருஷியாவோடு சேர்ந்து பிரஞ்சுப் பேரரசரைப் பாராட்டியது. வார்சாவில் ஆண்ட பிரபு நெப்போலியனால் நியமிக்கப்பட்டவர். ஜெர்மன் நாடு அவருடைய செல்வாக்கின் கீழ் வளர்ந்தது. பிரஷ்யாவும் ஆஸ்திரியாவும் அவரால் தோல்வியுற்றவை. பிரான்ஸ் நாடு ஜெர்மன் நாட்டின் பல இடங்களைத் தன்னுள் கொண்டு மிகப் பெரிய நாடாகக் காட்சியளித்தது. ரைன் ஆற்றின் இடது கரை முழுவதும் இப்பொழுது பிரான்ஸ் நாடாகத் திகழ்ந்தது.

நெப்போலியனுடைய ஆணைப்படி ஜெர்மனி ஒரு பெரு மாற் றத்தை அடைந்தது. அதன் ஒரு பாகத்தைப் பிரான்ஸ் கைப் பற்றியதாலும் எஞ்சியுள்ள பாகத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்த தாலும் முந்நூறு சிறு நாடுகளாகப் பிரிந்திருந்த ஜெர்மனியின் சிறுநாடுகளின் எண்ணிக்கை இப்போது நூறுகக் குறைந்தது. நெப்போலியன் பக்கத்தில் சேர்ந்து அவருக்கு உதவியளித்த

பவேரியா, வுர்ட்டெம்பர்க் (Wurttemberg), பேடன் (Baden) நாடுகள் இப்பொழுது முன்னிலும் பரப்பில் அதிகரித்தன. அவற்றில் ஆட்சி நடத்திய பிரபுக்கள் இப்பொழுது மன்னர் என்ற பட்டத்தையும் பெற்றார்கள்.

ஜெர்மனியின் தென் பாகத்திலிருந்த சிறு நாடுகள் ஒன்று கூடி ''ரைன் பிரதேச ஐக்கிய நாடுகள்'' (Confederation of the Rhine) என்ற பெயர் சூடிக் கொண்டன. நெப்போலியன் இதற்கு ஆதரவளித்தார். அவைகள் புனித ரோமப் பேரரசினின்றும் (Holy Roman Empire) நீங்கித் தனியரசு நிறுவிக் கொள்ள அவர் உதவினதுமன்றி அந்தப் பேரரசையே ஒழித்துக் கட்டினார். சார்லமேன் காலத்திலிருந்து ஓராயிரம் ஆண்டு ஐரோப்பிய வரலாற்றில் பேரிடம் வகித்துவந்த ரோமப்பேரரசை நெப்போலியன் ஒழித்தார். பிரான்ஸ் நாட்டின் வரலாற்றில் பெரும் பாகம் இந்தப் பேரரசோடு அந்நாடு செய்த போராகும். ஆயினும் பேரரசு ஒழிந்த பாடில்லை. பதினைந்தாம் லூயி போன்ற மா மன்னரும் சாதிக்க முடியாத காரியத்தை மாவீரன் நெப்போலியன் இப்போது சாதித்தார். ஆஸ்திரிய நாட்டு மன்னர்கள் பன்னெடுங் காலம் இப் பேரரசு முடியைத் தாங்கினவர்கள். இப்போது கடைசியாய் அதைத் தாங்கிய இரண்டாம் பிரான்சீஸ் அதை விடுத்து ஆஸ்திரிய நாட்டு மன்னராக மட்டும் இனிப் பணியாற்ற வேண்டியதாயிற்று. அதன்படி அவர் முதலாம் பிரான்சீஸ் ஆஸ்திரிய நாட்டு மன்னர் என்ற பட்டத்தை ஏற்றுக்கொண்டார்.

பிரான்சீஸின் உள்ளம் எத்தகைய அதிர்ச்சியுற் றிருக்க வேண்டுமென்பது நாம் விளக்கக் கூடாத தொன்று. வானமிடிந்து விழுந்ததுபோல் அவர் மனம் தாக்குண்டது. இது மீண்டும் போருக்கு வித்திட்டது. தம் பிரபுக்களில் முதல்வரான (Archduke of Austria) சார்லஸ் என்பவரையும் தமது நம்பிக்கைக் குரியவரான கவுன்ட் ஸ்டேடியோன் (Count Stadion) என்பவரையும் தம்மோடு கூட்டிக்கொண்டார். அதன் பிறகு தம் அரசாங்க வருவாயைப் பெருக்கவும், புதுப்படையை ஏற்படுத்தவும், மக்களின் தேசிய உணர்ச்சியைத் தட்டி எழுப்பவும் அவர் முனைந்தார். இந்நிலையில் நெப்போலியனுக்கு ஸ்பெயின் நாட்டில் இடுக்கண் விளைந்தது (1809). இதுவே தக்க சமயமெனக் கருதி பிரான்சீஸ் அவரோடு சண்டை தொடுத்தார். சார்லஸ் பிரபு பவேரியாவினுள் தம் படையைச் செலுத்தினார். இதைக் கேட்ட நெப்போலியன் ஸ்பெயின் நாட்டிலிருந்து பவேரியாவின் உதவிக்கு விரைந்தார். ஸ்பெயினில் நெப்போலியனின் எண்ணங்கள் பலியாயின. ஜெர்மனியில் நெப்போலியன்

முதலில் வெற்றி கண்ட போதிலும், ஆஸ்பெர்ன் (Aspern) என்ற இடத்தில் தோற்றார். மறுபடியும் நெப்போலியன் அவர்களைத் தாக்கி வாக்ராமில் (Wagram) வெற்றி கண்டார். கடைசியில் ஆஸ்திரியர் பணிந்தார்கள். அவர்களுடைய மனநிலையை மாற்ற நெப்போலியன் பிரான்சீஸின் மகள் மரிய லூயிசாவை மணந்துகொண்டார். ஜோசப்பீனைத் தள்ளி வைக்கவும் மண விலக்கம் செய்வதற்கும் அவருக்குக் குழந்தை பிறக்கவில்லை என்ற காரணம் காட்டிக் கொண்டார்.

ஒரு விதத்தில் ஆஸ்திரியாவில் அமைதி ஏற்பட்டது; ஆனால் நெப்போலியன் வாழ்க்கையில் அமைதி குறைந்தது. இதற்குக் காரணம் ஸ்பெயின் நாட்டில் அவருக்கேற்பட்ட தோல்வியாகும். ஸ்பெயினில் அவர் இதுவரை அடைந்த வெற்றிகள் பல; ஆயினும் அவர் ஆவல் முற்றுப்பெறவில்லை. தம் பெரும் படைகளை ஸ்பெயினுக்குள்ளும், போர்த்துக்கல் நாட்டினுள்ளும் தொடர்ந்து அனுப்பினர். முதலில் போர்த்துக்கல்லைக் கைப் பற்றினர். நீண்ட காலமாக இந்தச் சிறிய நாடு அளவில் சிறிய தானாலும் ஆங்கிலேய வாணிகத்திற்குச் சிறந்த உதவி அளித்து வந்தது. இனி அது நெப்போலியனுடைய வாணிக முறையைப் பின்பற்ற வேண்டியதாயிற்று. ஆகவே ஆங்கிலேயர் அதற்குதவக் காலம் பார்த்துக் கொண்டிருந்தனர். அதே சமயம் அவர் ஸ்பெயின் நாட்டிற்கும் எதிர்பாராத விதத்தில் இன்னல் இழைத்தார். அப்போது அந்நாட்டு மன்னராக விருந்தவர் நான்காம் சார்லஸ். வயது முதிர்ந்தவர். பெர்டினண்ட் என்ற இளவரசரை நம்பித் தமக்குப் பின் பட்டத்திற் குரியவர் அவரே என்று அவரைப் பேணி வந்தார். இவர் களையும் முதல் அமைச்சர் கோடாய் (Godoy) என்பவரையும் பாரிஸ் நகருக்கு நெப்போலியன் விருந்துக்கழைத்து அங்கே தங்கள் அரசுரிமையை விட்டுக்கொடுக்கச் செய்தார். அதன் பின் தம் உடன்பிறந்தோர் ஜோசப்பை ஸ்பெயினுக்கு அனுப்பி அங்கே நாட்டின் மன்னராக முடி சூடும்படி செய்தார். 1808ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் முடிசூட்டு விழா மேட்ரிட் நகரில் சிறப்பாக நடந்தேறியது. ஆனால் மக்கள் மனம் குமுறினர்கள்.

ஸ்பானியர்கள் மிகுந்த நாட்டுப் பற்றுள்ளவர்கள். ஆனால் அவர்கள் பிரஞ்சுக்காரர்களைப்போல் விரைவில் உணர்ச்சி வசப் படக் கூடியவர்களல்லர்; உணர்ச்சி எழுந்துவிட்டால் அவர்களை யாரும் நிறுத்தவும் முடியாது. இதை அவர்கள் ஸ்பெயின் வாரிசுரிமைப் போரில் ஏற்கெனவே எண்பித்தனர். இப் பொழுது இரண்டாம் முறையாக அவர்கள் அதை எண்பிக்கும் காலம் வந்தது. அவர்கள் வெகுண்டெழுந்தார்கள். பிரபுக்

களும் மக்களும் குருக்களும் தங்கள் வேற்றுமைகளை மறந்தார்கள். பிரஞ்சுப் படை போன்ற பெரும் படை அவர்களிடம் இல்லை யென்றாலும், தங்கள் சிறு படையைக்கொண்டே பிரஞ்சுக்காரரை மறைந்து நின்று தாக்கினார்கள். அவர்கள் போக்குவரத்தைத் தடை செய்தார்கள். பிரஞ்சுப்படைத் தலைவர்களே வியக்கும்படி இந்தப் போர் நடந்துகொண்டிருந்தது. அவ்வமயம் போர்த்துக் கீசியரின் உதவிக்காக அனுப்பப்பட்ட ஆங்கிலேயப் படை ஸ்பானியர்களுக்கும் உதவியது (1808). இந்தியப் புகழ் சர் ஆர்தர் வெல்லெஸ்லி ஆங்கிலேயப் படைக்குத் தலைமை தாங்கி யிருந்தார். தென்னாட்டு மைசூர்ப் போர்களில் உலகம் வியக்கும் வண்ணம் படைத் தலைமை தாங்கிய அவர் இப்போது ஸ்பானிய ருக்கு உதவியது அவர்களுடைய நற்காலமே யாகும். நெப்போலியன் திப்பு சுல்தானோடு செய்த சூழ்ச்சிகளை அவர் நன்கறிவர். இப்போது அந்தப் பிரஞ்சு வீரனை எதிர்க்கும் பேறு கிடைத்தது தம்முடைய நற்காலமாக அவர் கருதினார். இந்நிலையில் தொடங்கிய போர் ஐந்தாண்டுகள் நடந்தன (1808-1813). முடிவில் பிரஞ்சுக்காரர் ஸ்பெயின் நாட்டி னின்றும் வெளியேற வேண்டியதாயிற்று.

IV

மாவீரரின் வீழ்ச்சி நெருங்கியது. அவருடைய வீரம்பெரியது தான்; ஆனால் அவருடைய ஆவலும் அளவு கடந்ததாயிற்று. இதுவே அவருடைய வீழ்ச்சிக்கு அடிகோலியது. பேராசை யென்பது கருமேகம் போன்றது. அது நன்மை திமைகளை நம் கண்களினின்று மறைக்கின்றது. நெப்போலியனுடைய வாழ்விலே நாம் இதைக் கண்கூடாகக் காண்கின்றோம். பிரஞ்சு நாடு தன் வரலாற்றிலேயே கண்டிராத அளவு பெருகியும் நெப்போலிய னுடைய ஆவல் முற்றுப் பெறவில்லை. ஐரோப்பா முழுவதுமே பிரஞ்சு அரசுக்குக் கீழ்ப்பட வேண்டுமென்று மட்டும் அவர் ஆசை கொள்ளவில்லை: ஐரோப்பா முழுவதிலுமே தம் குடும்பத் தினர் அரசாள வேண்டுமென்று அவர் அவாவினார். இதற்காக அவர் எதைச் செய்யவும் துணிவுற்றார். ஸ்பெயின் நாட்டில் தம் உடன்பிறந்தோர் ஜோசப்பை அரசுக்கட்டி லேற்றிய விதத்தை நாம் அறிவோம். அங்குத்தான் அவருடைய வீழ்ச்சி தொடங்கியது.

இது மட்டுமன்று. நெப்போலியன் தம் சூழ்நிலையையே மறந்தார்; பத்தாண்டுகளுக்கு முன் தாம் படைத் தலைவராகப் பதவி யேற்றபோது இருந்த பிரான்ஸ் நாடு வேறு, இப்போது

இருந்த பிரான்ஸ் நாடு வேறு என்பதை அவர் உணரவில்லை. பத்தாண்டுகளுக்கு முன் அந்நாடு முழு ஒற்றுமையுடன் திகழ்ந்தது. படை வீரர்கள் நாட்டிற்காக எத்தகைய தீரச் செயலையும் செய்யக் காத்திருந்தார்கள். இப்போது நிலை மாறிவிட்டது. புரட்சி மனப்பான்மை ஓய்ந்தது; பிரான்ஸின் வெற்றிகள் பிரஞ்சு வீரர்களை ஓய்வில் ஆழ்த்தின. நாடு பெருகப் பெருக மக்கள் தன்னலப் பிரியர்களானார்கள். நவிர முன்னையபோர்களில் இருந்த சிறந்த வீரர்களில் பலர் இறந்து மறைந்தார்கள். நெப்போலியனுடைய இத்தாலியப் படையெழுச்சியின் போது மாரென்கோவில் முதலில் தோல்வியுற்றார். அத் தோல்வி 1800ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஒருநாள் விடியற்காலை 3 மணிக்கு நேர்ந்தது. அதைக் கேள்வியுற்ற அவருடைய படைத் தலைவர்களில் ஒருவரான டெசே (Desaix) என்பவர் கூறினாராம்; ''ஒரு சண்டையில் தோல்வியுற்றோம்; இன்னொரு சண்டையில் வெற்றி பெறுவோம்; இன்னும் காலம் கடக்கவில்லை.''* கூறி முடித்ததும் செயலில் ஈடுபட்டார். காலை 7 மணி அளவிலேயே மாரென்கோ வெற்றி கிடைத்தது. இத்தகைய வீரமும் உற்சாகமும் இப்பொழுது மறைந்தன. டெசே மாரென் கோவிலேயே மாண்டார். இவரைப்போன்று நெப்போலியனின் பல போர்களில் மறைந்தவர் எத்தனையோ பேர்!

பிரஞ்சு நாடு இப்பொழுது பெரிய சாம்ராச்சியமாகத் திகழ்ந்தது. அதன் மக்களில் போலந்து நாட்டினர், ஜெர்மானியர், இத்தாலியர், டச்சுக்காரர், டேனியர்கள் என்ற பல இன மக்கள் கலந்திருந்தார்கள். அந்த அளவுக்குப் பிரஞ்சு நாட்டின் குறிக்கோள் முனை குன்றியது; பல திறப்பட்டவர்கள் கூடியதால் தேசியம் குறைந்தது; ஒற்றுமை பலமிழந்தது. அதற்குப் பதிலாய் மாவீரர் எதைக் கொண்டு வலி பெற எண்ணினாரோ அதைக்கொண்டே வலிமை இழந்தார். துப்பாக்கி முனையில் அவர் கைப்பற்றிய நாடுகள் அவருக்கு அரணமைப் பதற்குப் பதிலாய் முள் வேலிகளாக மாறின. சுதந்திரமும் சம உரிமையும் என்று பேசிய பிரஞ்சுக்காரர்கள் தங்களிடம் கொடிய வரி வசூலிப்பதும், மக்களைக் கட்டாயப் படைகளில் சேர்ப்பதும், சொத்துக்களைப் பறிமுதல் செய்வதும் அவைகளுக்குப் பிடிக்க வில்லை. சிறப்பாக, நெப்போலியனுடைய வாணிக முறை அவைகளுக்கு இன்னல் விளைத்தது. வாணிக மந்தம், விலைவாசி உயர்வு, வேண்டிய பொருட்களின் குறைவு என்ற இவற்றால் அவை தாக்கப்பட்டன. இதை எதிர்த்துக் கூற யாரும் முன்

*"The battle is lost but there is time to gain another." quoted by Kettlebey : *A History of Modern Times*, P 108.

வரவில்லை. கடைசியில் போப்பாண்டவர் மட்டும் துணிவு கொண்டார். அவருக்குக் கிடைத்த பதில் சிறைவாசம் (1809). அடுத்த ஆண்டில் தம்முடைய உடன்பிறந்தோரான லூயி மன்னரை இதே காரணத்திற்காக அரசுக் கட்டிலில் நின்று நெப்போலியன் இறக்கினர் (1810). இந்த நிலையில்தான் அவருக்கு ஸ்பெயினில் தோல்வி கிட்டியது.

1812 ஆம் ஆண்டு மேட்ரிட் பிடிபட்டது; பிரஞ்சுப் படை தோல்வியுற்றது அதை யடுத்து சலமன்கா பட்டணத்தில் மறு முறையும் அது தோல்வியுற்றது. ஆனால் நெப்போலியன் அதே சமயம் ருஷியாவோடு சண்டை தொடுத்தார். மாவீரரின் தீரத்தை என்னவென்று கூறுவது! 6,00,000 மக்கள் கொண்ட ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு நீமன் ஆற்று வழியே மாஸ்கோவை அடைந்தார். ருஷிய வீரர்கள் பிரஞ்சுப் படையை எதிர் நின்று தாக்காமல் அவர்கள் மாஸ்கோவை அடையும் வரை பின் செல்வதாகவே பாவனை செய்தனர். பிறகு மாஸ்கோ நகரத்திற்கே தீ வைத்துக் கொளுத்தினர்கள். போரில் இது ஒரு புது முறை. ஆனால் அவர்கள் நினைத்தபடி அது வெற்றிகண்டது. நெப்போலியன் வேறு வழியின்றி அங்கிருந்து வெளியேறினர். ஆனால் அது அக்டோபர்த் திங்கள். ருஷியாவின் குளிர்காலம் அப்பொழுதே தொடங்கி யிருந்தது. சென்ற இடமெல்லாம் பனியும் மழையும் கடுமையாகப் பெய்தன; ஆறுகள் உறைந்தன; எங்கும் பனி மூட்டம். பிரஞ்சுப் படை தடுமாறியது. ருஷியரோ அதைப் பின் தொடர்ந்து தாக்கினர். வழி மாறிப் போனவர்கள், பகைவரால் கொல்லப்பட்டவர்கள், பசியின் கொடுமையால் இறந்தவர்கள் என்று சுமார் 5,00,000 பிரஞ்சுப் படையினர் மறைந்தனர். நெப்போலியன் மட்டும் பிரான்ஸை நோக்கி நடந்தார். 2,000 கல் தூரம் பேரின்னல்களிடையே நடந்த பின் அவர் பாரிஸை அடைந்தார். அவருடைய படையில் ஆறில் ஒரு பங்கே பிரான்ஸை அடைந்தது.

இந்த வெற்றிக்குப் பிறகு ருஷியா அமைதியா யிருக்கக் கூட வில்லை. பிரஷ்ய அமைச்சர் வாம் ஸ்டேயினின் (Baron Vom Stein) தூண்டுதலின் மேல் ருஷிய மன்னர் நீமன் நதியைக் கடந்து வந்து எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் சுதந்திரம் வழங்கினர். நெப்போலியனால் இதைப் பொறுக்க முடியவில்லை. மறுபடியும் பிரான்ஸ், தென் ஜெர்மனி, இத்தாலி நாடுகளிலிருந்து 2,00,000 பேர் கொண்ட மற்றொரு பெரும் படை திரட்டினர். 1813 ஆம் ஆண்டு மே, 2 ஆம் நாள் லட்சன் (Lutzen) என்ற இடத்தில் ருஷியரும் பிரஷ்யரும் கூடிய பெரும் படை தோல்வியுற்றது. தொடர்ந்து சண்டையை நடத்த நெப்போலியனிடம் போதிய

குதிரைப் படை இல்லாமற் போயிற்று. இல்லாவிட்டால் கூட்டணிப் படையைச் சிதறவடித்திருப்பார். உடனே அவர் மூன்றும் முறையாக மூன்றாவது பெரும் படை திரட்டுவதில் முனைந்தார். மிக விரைவிலேயே 4,00,000 போர்வீரர்கள் சேர்ந்தார்கள். ஆஸ்திரியா சமாதானத்திற்கு விழைந்தது. பிரான்ஸ் அப்போது கைப்பற்றி யிருந்த வெற்றிகளை யெல்லாம் வைத்துக் கொள்ளட்டு மென்றும் ஆஸ்திரியப் பிரதமர் மெட்டர்நிக் கூறினர். ஆனால் நெப்போலியன் விட்டுக் கொடுப்பதாயில்லை. அப்போது ருஷிய பிரஷ்யக் கூட்டணியோடு இங்கிலாந்து, சுவீடன், ஆஸ்திரிய நாடுகளும் இணைந்தன. டிரஸ்டன் சண்டையில் நெப்போலியன் ஆஸ்திரியரை வென்றார். ஆனால் அதைப் பின்தொடர்ந்த லீப்சிக் சண்டையில் அவரால் கூட்டணிப் படையை வெல்ல முடியவில்லை. சண்டையிலே அவர் பல வீரர்களை இழந்து நொறுங்கிய படையோடு பாரிஸைச் சென்றடைந்தார். ஆஸ்திரியா மறு முறையும் சமாதானம் வழங்கியது. அகண்ட பிரான்ஸ் நாடு தன்னுடைய ரைன், பிரனீஸ் எல்லைகளோடு வாழ வழி செய்தது. ஆனால் இதையும் நெப்போலியன் மறுத்தார்.

1814 ஆம் ஆண்டின் தொடக்கத்திலே மாவீரன் மறுபடியும் போருக் கெழுந்தார். எல்லையற்ற ஆவலை எல்லைக்குள் நிறுத்த அவராலும் முடியவில்லை; மற்றவர்களாலும் முடியவில்லை. அதே ஆண்டு மார்ச்சுத் திங்களில் இப்பொழுது வெலிங்டன் பிரபு என்று பட்டம் சூடிய சர் ஆர்தர் வெல்லெஸ்லி மறுமுறையும் நெப்போலியனைத் தாக்கிப் பாரிஸைக் கைப்பற்றினர். அவருடைய இருபதாண்டுப் போர் வாழ்க்கையில் இப்பொழுதுதான் பாரிஸ் பகைவர்முன் விழுந்தது. தம் விருப்பம் வீழ்ந்தது என்பதை நெப்போலியன் அப்போது கண்டுணர்ந்தார். போன்டினுபுளு (Fontainebleau) என்னுமிடத்தில் அவர் தனிமையாக எதிரிகளோடு ஒரு முடிவு செய்தார். அதன்படி பிரஞ்சு அரசுக்கட்டிலை விட்டுத் தாம் இறங்குவதாகவும், தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் இனி பிரான்ஸில் எவ்விதத் தொடர்புமில்லை யென்றும் அவர் வெளிப்படுத்தினர். இதை அறிந்த நேச நாடுகள் மரியாதையுடன் அவரை எல்பாத் தீவுக்கு மன்னராக அனுப்பி வைத்தன. ஆண்டுதோறும் அவருக்குக் கால் கோடி பிராங்குகள் ஓய்வுச் சம்பளமாகத் தருவதாகவும், மன்னர் மனையாள் மேரியா தெரேசாவுக்கு இத்தாலியிலுள்ள பார்மாப் பிரதேசத்தை நன் கொடையாக வழங்குவதாகவும் அவை உறுதி அளித்தன.

1814 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 நாள் நெப்போலியன் தமது மெய்க்காப்பாளரிடம் பிரியாவிடை பெற்றார்; தம் பேரர

சின் வெற்றிச் சின்னமாகிய கழுகு உருவங்களை முத்தமிட்டார். படை வீரர் கண்ணீர் சிந்த மாவீரர் எல்பாவை நோக்கிப் பயண மானார். இத்தாலியின் வடமேற்குக் கடலில் அமைந்த இந்தச் சிறு தீவு அவரை வரவேற்றது. பாராண்ட வேந்தர் ஒரு சிறு பலகையிலே வீற்றிருந்தார். ஐரோப்பாவில் என்ன நடக் கின்றதோ என்பதைப்பற்றி அவர் எண்ணம் அலை பாய்ந்தது. தம் உள்ளத்தைக் களவாடிய பிரான்ஸிலே டேலிராண்ட் (Talleyrand), புஷ் (Fouche) போன்ற தம் முன்னாள் அமைச்சர்கள் நேச நாட்டினரோடு கலந்து பழம் பெருமை வாய்ந்த போர்போன் மன்னர்களின் வழி வந்த ஒருவரைப் பிரஞ்சு மன்ன ராக நியமித்ததை அறிந்தார். புது மன்னர் பதினெட்டாம் லூயி என்று பெயர் பூண்டார். முன்னாள் ஆட்சிமுறை வழி வந்தவ ராகவும் கட்டுக்கடங்கிய மன்னராக (Constitutional King) இருக்க அவர் வாக்களித்தார். ஆயினும் பழம் முறையில் நெடுநாள் வாழ்ந்த அவர் உண்மையில் மாற வழி இல்லை. இதோடு ஸ்பெயின் நாட்டில் ஏழாம் பெர்டினண்ட் மன்னராகினார்; போப்பாண்டவர் விடுதலை யடைந்தார்; சார்டினியாவில் முதலாம் விக்டர் எம்மானுவேல் அரசுக்கட்டில் ஏறினார். நெப்போலியனுடைய நினைவுகள் கனவுபோல் காட்சியளித்தன. இந்நிலையில் அவரால் நூறு நாட்களுக்கு மேல் அங்கு இருக்கக் கூடவில்லை. 1100 பேரைச் சேர்த்துக்கொண்டு கடல் வழியே புறப்பட்டு 1815 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள் கேன்ஸ் (Cannes) என்ற கடற்கரைப் பட்டின மடைந்தார்.


1813 ஆம் ஆண்டிலேயே ஆஸ்திரிய பிரதமர் மெட்டர்நிக் கூறியதுபோல் ஐரோப்பாவும் நெப்போலியனும் அமைதியாக வாழ முடியாதென்பது உண்மையாயிற்று. மறுபடியும் போர் தொடங்கியது. புது மன்னர் லூயி வயதில் பழம் மன்னர். அவர் உடனே பிரான்ஸை விட்டு வெளியேறினார். நெப்போலியன் தம் படைகளை பெல்ஜிய நாட்டினுள் செலுத்தினார். கூட்டணிப் படைகள் அவரை வாட்டர்லூ என்றவிடத்தில் எதிர்த்தன. அன்று ஜூன் திங்கள் 18 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை. நெப்போலியனுடைய படையில் 1,20,000 போர் வீரர்கள் இருந் தார்கள். எதிரிகள் படையிலும் அதே எண்ணிக்கையில்தான் வீரர்கள் போர் புரிந்தார்கள். பிரஷ்யப் படை வரத் தாமத மாயிற்று. ஆனால் நெப்போலியன் இதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நீண்ட நேரம் வீண் சண்டையில் கழிந்தது; கடைசியில் பிரஞ்சுப் படை ஓய்ந்துபோன சமயம் பிரஷ்யப் படை புளூஷர் (Blucher) தலைமையின் கீழ்த் தோன்றியது. நெப்போ லியன் தோற்றார்; தோற்ற பின் ஆங்கிலேயரிடமே சரணடைந்

தார். அவர்கள் அவரை பிளிமத் (Plymouth) துறைமுகத்திலிருந்து ஹெலினாத் தீவுக்கு அனுப்பினர்கள்.

தூய ஹெலினா (St. Helena) என்று பெயர் பெற்ற தென் அட்லான்டிக் கடலில் பதினாறும் நூற்றாண்டில் ஸ்பானியர் கண்ட தீவு இப்போது மாவீரன் நெப்போலியனின் கடைசி காலத்தில் ஆதரவளித்தது. ஆறாண்டு அங்குத் தங்கிய பின்னர் 1821 ஆம் ஆண்டு மேத் திங்கள் 5 ம் நாள் மாவீரன் காலமானார். உலக வரலாற்றிலேயே பெயர்பெற்ற போர் வீரர்களில் மிக உயர்ந்த இடத்தை வகிப்பவர் நெப்போலியன். ஹானிபல், அலெக் சாண்டர், சீசர் போன்றவர்களையும் பின் நிற்கச் செய்தவர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் புகழ் பெற்ற வர்கள். நெப்போலியன் பல வகைகளில் புகழ் பெற்றவர். அவர்கள் ஒருமுறை செய்ததை இவர் பலமுறை செய்து காட் டினார். இங்கிலாந்து ஒரு சிறு தீவாகக் காணப்பட்டாலும் கடல் வலியின் காரணத்தாலும், அது கொண்ட குடியேற்ற நாடுகளின் வலியாலும் நெப்போலியன் அதை ஒரு பெருஞ் சாம் ராச்சியமாகவே கருதினார். இது அவருடைய சிந்தனைத் திற னுக்கு ஒரு எடுத்துக்காட்டு. ஆகையால்தான் அவர் இங்கி லாந்தைப் பிடிப்பதற்கு இந்தியாவைப் பிடிக்க வேண்டுமென்று கருதினார். சிந்தனையில் மட்டுமல்ல, போர் வலிமையில் மட்டு மல்ல, உயரிய நோக்கத்திலும், அயரா உழைப்பிலும், மாறுத நம்பிக்கையிலும், நாட்டிற்கேற்ற சீர்திருத்தங்கள் செய்வதிலும் அவரை வென்றவர்கள் மிகச் சிலரே. ஆயினும் பேராசை அவரை ஆட்டிப் படைத்தது. குறிக்கோளை அடைவதற்கு எச்செயலும் சரியானதே என்ற நோக்கம் கொண்டவர் அவர். வெற்றிகளின் பீடத்திலே கணக்கற்ற மக்கள் கொல்லப்படுவதை அவர் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அவர் செய்த போர்கள் 60 என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. இவற்றிலெல்லாம் பிரான்சின் வீரக் காளைகள் இறந்தனர். எஞ்சி நின்றவர்கள் நடுத்தரப் போர் வீரர்களே. ஆகையால் நெப்போலியன் பிரஞ்சுக்காரரின் உயரத்தைக் குறைத்தார் என்றும் கூறப்படுகிறது.

ஆயினும், மாவீரர் பிரான்ஸ் நாட்டிற்குப் பெரும் புகழ் தேடித் தந்தார். பழங்கால அரசு முறைக்குச் சாவுமணி அடித் தவர் அவரே. அம் மணியோசை ஐரோப்பா வெங்கணுமே கேட்டது. 1815 ஆம் ஆண்டிற்குப் பிறகு பழைய அரசர்கள் அங்கங்கே அரசுக்கட்டில் ஏறினர்கள். ஆயினும் அவர்கள் மக் களின் ஆணைப்படிதான் இனி நடக்க வேண்டுமென்பது எங்கும் ஆணித்தரமாகப் பெறப்பட்டது. இது நெப்போலியன் ஐரோப்

பாவிற்கு விட்டுச் சென்ற ஒரு பெரும் செல்வம். இத்தகைய பெருமை வாய்ந்த மற்றொன்றையும் அவர் விட்டுச் சென்றார். அதுதான் ஓங்கி வளர்ந்த தேசியம். நெப்போலியப் போர் வீரர்கள் நேப்பிள்ஸி லிருந்து மாஸ்கோ வரை லிஸ்பனிலிருந்து பெர்லின் வரை பிரான்ஸ் நாட்டின் மூவர்ணக் கொடியின் கீழ் அணிவகுத்துச் சென்ற பெருமை, நாட்டிற்காகப் புன்முறுவ லோடு உயிர் நீத்த மாண்பு இவை யாவும் தேசிய உணர்ச்சியின் தன்மையை எங்கும் பறைசாற்றின.


1815இல் ஐரோப்பா
ஜெர்மன் இணைப்பு
நாடுகளின் எல்லை
ஸ்வீடன்
நார்வே
மாஸ்கோ
ரஷ்யா
கியவ்
பிரஷ்ய பேரரசு
துருக்கிய பேரரசு
ஸ்பெயின்
மொராக்கோ
அல்ஜீரியா
சார்டினியா
கார்சிகா
ரோம்
மத்திய தரைக் கடல்
வட கடல்
பால்டிக் கடல்
அட்லாண்டிக் கடல்

12. நெப்போலியனுக்குப் பின்

(வியன்னை மாநாடு-மாநாட்டின் விளைவுகள்- பிரான்சில் புரட்சி-லூயி பிலிப்பேயின் ஆட்சி- லூயி நெப்போலியன் (மூன்றும் நெப்போலியன்)-கிரிமியப் போர்)

I

நெப்போலியனை ஹெலினுத் தீவுக்கு அனுப்பிய பின் ஐரோப்பிய அரசியல் தலைவர்கள் வியன்னை நகரில் ஒரு மாநாடு கூட்டினார்கள். இதற்கு வியன்னைக் காங்கிரஸ் என்று பெயர். அம் மாநாட்டில் கூடிய அரசியல்வாதிகளின் முக்கிய நோக்கம் என்ன வாயிருந்திருக்குமென்பதை நாம் எளிதில் உணரக்கூடும். இனிமேல் புரட்சி என்பதே ஐரோப்பாவின் எல்லைக்குள் நுழையாமல் தடுக்க வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம். இதற்கு வழியாக ஐரோப்பாவின் பல நாடுகளின் எல்லையைத் திருத்தி அமைக்க வேண்டியதவசியமாயிற்று. பிரெஞ்சுப் புரட்சியாலும் இன்னும் அதைவிட மாவீரன் நெப்போலியனுடைய வெற்றிகளாலும் இவற்றின் எல்லைகள் மிகுந்த மாற்றமடைந்திருந்தன. இதனால் ஐரோப்பிய நாடுகளினிடையே மனத்தாங்கலும் மனக்குறையும் ஏற்பட்டிருந்தன. இவை பல புரட்சிகளுக்கும் போருக்கும் அடிகோலக்கூடும். இதை நீக்க வேண்டுமென்பதே வியன்னை மாநாட்டின் முக்கிய நோக்கமாகும். ஒரே சொல்லில் சொல்ல வேண்டுமானால் ஐரோப்பாவின் நாட்டுப்படம் மாநாட்டின் முன்னே தகுந்த மாறுதல்களடையக் காத்திருந்தது. இதைச் செய்வதோ மிகக் கடினமான செயலாக இருந்தது. 1648ஆம் ஆண்டில் கூடிய வெஸ்ட்பேலிய உடன்படிக்கைக் கூட்டத்திற்குப் பின் ஐரோப்பிய வரலாற்றிலேயே மிக முக்கியக் கூட்டமாகக் கருதப்பட வேண்டியது இந்த வியன்னை மாநாடு.

எந்த அளவிற்கு இது தனது வேலையை வெற்றிகரமாக முடித்தது என்பதைக் கூறுவதே இவ்வியலின் நோக்கம். முதலில் இந்த மாநாடு பிரான்ஸ் நாட்டின் எல்லைகளைச் சீர்படுத்தத் துவங்கியது. நெப்போலியன் ஒரு பேரரசையே ஏற்படுத்திச் சென்றிருந்தான். அதை மாற்றி அமைப்பதில் முக்கியமாகப் பிரஞ்சுப் பேரரசின் ஜெர்மன் பகுதிகளைப் பிரித்துப் பிரான்ஸையும் ஜெர்மனியையும் இரு தனி நாடுகளாக இயங்கச்

செய்ய வேண்டுமென்பதையே குறிக்கோளாக வியன்னாவில் கூடிய அரசியல்வாதிகள் கொண்டார்கள். பிரான்சினிடமிருந்து சில ஜெர்மன் பகுதிகளைத் தனியாகப் பிரித்து அவற்றை ஜெர்மனியுடன் சேர்த்து ஜெர்மனி நாட்டை உறுதிப்படுத்த முதலில் திட்டமிடப்பட்டது.

ஆனால் ஜெர்மன் நாட்டை உறுதிப் படுத்துவதென்பது அவ்வளவு எளிய வேலையாக இருக்கவில்லை. நீண்ட காலமாக ஜெர்மன் நாடு பல சிறிய நாடுகளாகச் சிதறுண்டு கிடந்தது. வெஸ்ட்பேலிய உடன்படிக்கையின்போது இந்நாடு 350 சிறு நாடுகளாக இருந்ததென்பதை நாம் முன்னரே அறிவோம். ஜெர்மனியின் ஒன்றிப்புக்கு இது ஒரு பேரிடையூறென்றறிந்த வியன்னா மாநாட்டார் இந்த 350 சிறு நாடுகளை 35 சிறு நாடுகளாகச் செய்தார்கள். ஆயினும் ஒற்றுமை விளையவில்லை, அதற்குப் பதிலாக ஜெர்மனியின் வடபகுதியில் பிரஷ்யாவும் தென்பகுதியில் பவேரியாவும் நாட்டின் தலைமைப் பதவியைக் கைப்பற்ற எண்ணின. வியன்னா மாநாட்டினரோ ஆஸ்திரியாவை ஜெர்மனியின் தலைமைப் பதவிக்கு நியமித்திருந்தார்கள். ஆஸ்திரியா பலங் கொண்ட நாடு. அங்கு மெட்டர்னிக் என்னும் அரசியலறிஞர் தலைவராயிருந்தார். இருந்தும் ஆஸ்திரியாவாலும் இந்நிலைமையை ஏற்று நடத்தக்கூடவில்லை. வியன்னா ஏற்பாட்டின்படி பல நாட்டு மக்கள் அதன் ஆதிக்கத்தின்கீழ் அப்போது முடங்கிக் கிடந்தார்கள். பொஹிமியர், ஹங்கேரியர், இத்தாலியர், போலந்து நாட்டினர், செர்வியர், ருமேனியர் என்ற பல இனத்தினர் ஆஸ்திரிய ஆதிக்கத்தின்கீழ் இருந்து வந்தனர். அவர்கள் எல்லோரையும் கட்டுப்படுத்தி ஆட்சியை நடத்துவதென்பது ஆஸ்திரிய நாட்டிற்குப் பெருந் தொல்லையாயிருந்தது.

இனி இத்தாலியின் நிலைமையைக் கவனிப்போம். பல சிறு நாடுகளாகப் பிரிந்திருந்த இத்தாலி நாடும் ஆஸ்திரிய நாட்டின் ஆதிக்கத்தின்கீழ் ஒன்றுபட்டிருக்க வியன்னா மாநாட்டினர் தீர்மானித்தார்கள். வெனீஷியா, லாம்பர்டி பிரதேசங்களைப் பல காலம் ஆஸ்திரிய மன்னர் ஆண்டுவந்தார். மொடேனா, பார்மா, டஸ்கனி முதலிய சிறு நாடுகள் ஆஸ்திரியாவோடு நட்புறவு பூண்டிருந்தன. ஆயினும் நேப்பிள்ஸ், சிசிலி, பியட்மன்ட், சேவாய் நாடுகளைக் கட்டுப்படுத்தி ஆட்சி செலுத்துவதென்பது ஆஸ்திரியாவிற்கு எளிதாயிருக்கவில்லை. நேப்பிள்ஸிலும், சிசிலியிலும், பூர்பன் மன்னர்கள் ஆட்சி செலுத்தினர்கள். பியட்மன்ட், சேவாய் நாடுகள் சார்டினியா மன்னர் கையிலிருந்தன. பலம் கொண்ட சார்டினியா மன்னர் இத்தாலி

முழுவதையுமே தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டு வருவதற்குத் திட்டமிட்டிருந்தார்; இந்நிலையில் ஆஸ்திரிய நாடு இத்தாலியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதோ, தனது ஆட்சியை அங்கு நிலை நிறுத்துவதோ எளிதில் இயல்வதாக இல்லை. இன்னும் வியன்னா மாநாட்டார் பெல்ஜியம் நாட்டையும் ஹாலந்து நாட்டையும் ஒன்றுபடுத்தி இணைந்த பகுதிக்கு ஹாலந்து மன்னரை அரசராக நியமனம் செய்தார்கள். இவ்விரு நாடுகளுக்குமிடையே எவ்வளவோ வேறுபாடுகள் இருந்தன. இந்த இரு நாட்டு மக்களுக்கு மிடையே எவ்வகைத் தொடர்பும் இருக்கவில்லை. அவர்கள் இருவரும் இரு வகுப்பினர் என்றே கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல, இவர்களிடையே பகை மனப்பான்மை பன்னெடுங்காலமாய் நிலவி வந்தது. அவர்களிடையில் மொழியில் வேற்றுமை, மதத்தில் வேற்றுமை, பழக்க வழக்கங்களில் வேற்றுமை என பல வேற்றுமைகள் நிலவின. இத்தகைய காரணங்களால் இவர்களிடையே வியன்னா ஏற்படுத்திய ஒற்றுமை நிலைக்கவில்லை. சுவீடன் நாட்டையும் நார்வே நாட்டையும் இணைத்துச் சுவீடன் நாட்டு மன்னர் பதினான்காம் சார்லஸின் அடியில் அவற்றை இப்போது கொண்டு வந்தனர். இந்த ஒற்றுமை மட்டும் 1905 ஆம் ஆண்டு நார்வே தனி நாடாகப்பிரியும் வரை நிலைத்து நின்றது. ருஷியர்கள் பின்லாந்து நாட்டைக் கைப்பற்றித் தங்கள் ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்டியிருந்தார்கள். இதை வியன்னா உடன்படிக்கை ஒத்துக்கொண்டது. பின்லாந்தும் ருஷியாவின்கீழ் 1914 ஆம் ஆண்டு வரை இயங்கியது.

II

இவையே வியன்னா கண்ட முடிவுகள். இவற்றை நடைமுறையில் நடத்துவதென்பது எத்துணைக் கடினச்செயல் என்பதை நாம் அறிவது எளிது. ஆயினும் இதை நடத்திக் காட்டுவதற்கு ஆஸ்திரியா, ருஷியா, பிரஷ்யா, இங்கிலாந்து என்ற இந்நான்கு நாடுகளும் ஒன்றுக இணைந்தன. நான்கு ஆண்டுகளுக்கொரு முறை இவை ஒன்று கூடி, ஏற்படக்கூடிய சிக்கல்களை நீக்குவது என்று ஏற்பாடாயிற்று. இதற்குப் புனித இணைப்பு (Holy Alliance) என்ற பெயர் சூட்டப்பட்டது. 1818 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாடும் இந்தப் புனித இணைப்பில் கூடியது. ஆனால் ஐந்து நாடுகள் ஒன்று சேர்ந்தும் ஐரோப்பாவில் ஒற்றுமை நிலவவில்லை

1820 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் முதல் முதல் புரட்சி ஏற்பட்டது. அங்கு ஆண்டுவந்த மன்னர்கள் நெப்போலியன்

வழித் தோன்றல்கள்; போனபார்ட் குடும்பத்தைச் சேர்ந்த வர்கள். அவர்கள் மக்களுடைய உரிமைகளை மதிப்பவர்களாக இருக்கவில்லை. ஆகையால் புரட்சி முதலில் அங்கு ஏற்பட்டது. படைவீரர்களே புரட்சியில் இறங்கினர்கள். 1812 ஆம் ஆண்டு அங்கு ஏற்பட்ட அரசியல் திட்டம் நடைமுறையில் கொண்டு வரப்பட வேண்டும் என்று அவர்கள் ஆர்ப்பரித்தார்கள். மன்னன் அடிபணிந்தான். கோயில்கள், சொத்துக்கள் பறிக்கப் பட்டன. மடங்கள் மூடப்பட்டன. மத்திய அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் ஸ்பெயினுக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளிலும் புரட்சி பரவியது. ஸ்பெயினில் புரட்சி அடக்கப் பட்டாலும் குடியேற்ற நாடுகளில் அதை அடக்க முடியவில்லை. இங்கிலாந்து அரசும் கானிங்கின் (Canning) தலைமையின்கீழ் அதற்கு ஒத்துழைப்பு அளித்தது. அதைப் பின்பற்றி அப்போது அமெரிக்க நாட்டின் தலைவராயிருந்த ஜேம்ஸ் மன்ரோ (James Monroe) ஐரோப்பிய விவகாரங்களில் தம் நாடு தலையிடா தென்றும், அப்படியே தம் நாட்டுச் சிக்கல்களில் ஐரோப்பிய நாடுகள் தலையிடக் கூடாதென்றும் அறிக்கை விடுத்தார் (1823). இது அன்று முதல் இன்று வரை ''மன்ரோக் கொள்கை'' (Monroe Doctrine) என்று வழங்கப்படுகிறது. 1820 ஆம் ஆண்டிற்குள் அங்கு மெக்சிக்கோ, பெரு, சில்லி, பூனெஸ்ஏரஸ் போன்ற பெரியதும் சிறியதுமான எட்டுக் குடியரசு நாடுகள் எழுந்தன.

ஸ்பெயின் நாட்டின் கொந்தளிப்பு அடங்குவதற்குள் கிரீஸ் நாட்டில் துருக்கியரின் ஆட்சிக்கு மாறுகக் கொந்தளிப்பு ஏற் பட்டது (1821). ஐரோப்பா முழுவதிலுமே இதற்கு ஆதரவு இருந்தது. குறிப்பாக இங்கிலாந்து நாடு இதற்கு உதவி நல்கியது. புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர் பைரன் (Byron) தம் உயிரையே இதற்கு வழங்கினர். 1827ஆம் ஆண்டு நவரீனே (Navarino) என்னுமிடத்தில் துருக்கியர் படை தோல்வியுற்றது. கிரீஸ் நாடும் விடுதலை அடைந்தது. ஸ்பெயின் நாட்டுப் புரட்சிக்கும் கிரீஸ் நாட்டில் ஏற்பட்ட கொந் தளிப்புக்கும் ஒரு பெரிய வேறுபாடிருந்தது. ஸ்பெயின் நாட்டுப் புரட்சியில் மக்கள் மன்னன் ஆட்சியிலிருந்தும் விடுபட்டுத் தங்க ளுக்குரிய ஆட்சியை ஏற்படுத்த விழைந்தார்கள். கிரீஸ் நாட்டில் மக்கள் தங்களுக்குப் புறம்பான வேற்றினத்தார் ஆட்சியினின்று விடுபட முயன்றார்கள். ஆகவே கிரீஸ் புரட்சி ஒரு தேசியப் புரட்சி யாக மாறியது. 16ஆம் நூற்றாண்டிலிருந்தே தேசியம் தளிர் விட்டு மலர்க்கத் துவங்கியதென்பதை நாம் அறிவோம். ஆனால் அது இப்போது நன்றாக வளர்ந்த மரமாகிவிட்டது. ஒரே

மொழி, ஒரே மதம், ஒன்று பட்ட நோக்கங்கள் என்ற இவையே தேசிய வளர்ச்சிக்கு அடிகோலுபவை என்ற பழைய கருத்து இப் பொழுது மாறுபட்டுப் பல விதங்களில் தேசியம் உருவாகக் கூடு மென்றும் முக்கியமாகப் பன்னுள் தொடர்பே பலதிறப்பட்ட மக்களிடையே தேசிய உணர்ச்சியை ஏற்படுத்தக்கூடும் என்ற கருத்தும் இப்போது வலுப்பெற்றது. அதனால் வியன்னு மாநாட்டின் முடிவுகள் நடைமுறையில் நீண்டகாலம் பலனளிக்க வில்லை. அந்த மாநாட்டின் தலைவர்கள் நாடுகளை அமைத்து அவற்றில் அரசாங்கத்தை நிறுவினார்கள். ஒன்றுபட்ட கருத்தி னரை ஒன்றுகூட்டி நாடாகச் செய்யவில்லை. குறிப்பாகச் சிறு நாடுகளின் உரிமைகளைப் பாதுகாக்க மாநாட்டினர் எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. துருக்கியினடியில் கிரீஸ் நாட்டை விட்டு வைத்தது நடைபெறக்கூடிய செயலல்ல. இந் நிலையில் கிரீஸ் நாட்டில் கிளர்ச்சி தோன்றியது.

இதைப் பின்பற்றி பெல்ஜியம் நாட்டிலும் பிரான்ஸ் நாட் டிலும் 1830 ஆம் ஆண்டு இரு புரட்சிகள் ஏற்பட்டன. ஹாலந்து நாட்டின் ஆதிக்கத்தில் பெல்ஜியம் வாழ முடியவில்லை. ஹாலந்து நாட்டினர் புரோட்டஸ்டான்டு மதத்தினர், பெல்ஜிய நாட்டினர் கத்தோலிக்கர் என்ற முறையில் பெல்ஜியத்தில் குழப்பமேற் பட்டதில் வியப்பில்லை. தவிர எண்ணிக்கையில் ஹாலந்து நாட் டினரைவிட பெல்ஜிய மக்கள் மிகுதியானவர்கள். அவர்கள் மொழி அன்றும் இன்றும் பிரஞ்சு மொழியைத் தழுவியது. ஆகை யால் பெல்ஜிய நாட்டிற்கு விடுதலை அளிப்பதைத் தவிர வேறு வழியில்லை. லெயோபால்ட் (Leopold of Saxe-Coburg) என்ற பெல்ஜிய நாட்டுக் கோமகனுர் அந்நாட்டின் மன்னராக நிய மிக்கப்பட்டார் (1839).

III

பிரான்ஸ் நாட்டில் புரட்சி மேலும் வீறு கொண்டெழுந்தது. அங்கு நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு பதினரும் லூயியின் சகோதரர் பதினெட்டாம் லூயி மன்னராக நியமிக்கப் பட்டார். 1824 ஆம் ஆண்டு வரை அவர் ஆட்சி செலுத்திய பிறகு அவர் சகோதரர் பத்தாவது சார்லஸ் என்ற பெயருடன் பட்டத்திற்கு வந்தார். பிரான்ஸ் நாட்டில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது; அதற்குப் பின்னரே அவர்கள் மன்னர்கள் ஆனர்கள் என்ற எண்ணத்தையே அவர்கள் மறந்தார்கள். பதினெட்டாம் லூயி இறந்து பட்ட மக்களின் பிணத்தின்மேல் குதிரைச் சவாரி செய்வதாக அக் காலத்தில் ஓவியங்கள் வரையப்பட்டன

வென்ருல் எத்துணையளவு மக்களின் உரிமைகள் அவர் ஆட்சியில் மதிப்பிழருந்திந்தனவென்பது ஒருவாறு பெறப்படும். இந் நிலையில் 1830 ஆம் ஆண்டு கிளாடு சட்டங்கள் (Ordinances of St. Claud) என்ற பெயருடன் மக்கள் உரிமைகள் ஒடுங்கவும் மன்னன் ஆதிக்கம் ஒங்கவும் சில சட்டங்கள் பிரான்ஸ் நாட்டில் செய்யப்பட்டன. அப்பொழுது ஆட்சி செய்துவந்த பத்தாவது சார்லஸ் இந்தச் சட்டங்களே ஏற்படுத்திய பின்பும் முறைப்படி ஆட்சி செலுத்துவதாகக் கூறிவந்தார். ஆனல் மக்களுக்கு மன்னரிடம் நம்பிக்கை குறைந்தது. தியர்ஸ் (Thiers) என்ற பத்திரிகை ஆசிரியர் ஒருவர் புரட்சிக்குத் தலைமை தாங்கினர். மன்னரும் எதிர்ப்புக் காட்டாமல் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்று மறைந்தார். பிரான்ஸ் நாட்டில் ஆர்லியன்ஸ் கோமகன் லூயி பிலிப்பே (Louis Philippe) என்பவர் மன்னராக நியமனம் செய்யப்பட்டார் (1830).

IV

லூயி பிலிப்பேயின் ஆட்சி (1830-48) ஒரு சிறிது காலம் பிரான்ஸ் நாட்டிற்கு நன்மை புரிந்தது. அவர் சட்டப்படி இயங்கும் அரசை (Constitutional kingship) நியமித்தார். இங்கி லாந்து நாட்டுடன் உறவுபூண்டு பிரான்ஸ் நாட்டின் தொழில் வணிக வளர்ச்சிகளுக்கு அடிகோலினர். பல ரெயில் நிலையங் களையும், தந்தி நிலையங்களையும், வணிகக் கம்பெனிகளையும் நாட்டில் ஏற்படுத்தினர். ஆப்பிரிக்காவில் அல்ஜியர்ஸ் பிரதே சத்தில் மக்களைப் பெருவாரியாகக் குடியேறச் செய்து பிரெஞ்சு வணிகப் பெருக்கை ஆதரித்தார்.

ஆயினும் 18 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் புரட்சி ஏற்பட்டது. இதற்குக் காரணங்கள் பலவாகும். மன்னரின் குறைபாடுகளே இதற்கு முதற்காரணமாயின. இவர் மிகவும் திறலினர். தாம் சட்ட வரம்பிற்குட்பட்ட மன்னர் என்பதை இவர் மறக்கவில்லை. மதத்தில் வெளிப்படையான மனப் பான்மை காட்டினர். தெய்வீக உரிமை கொண்ட பழங்கால மன்னரைப் போல் அல்லாமல் சாதாரண மனிதனைப் போல் குடை பிடித்துக் கொண்டு தெருவில் நடந்து செல்வதும், சாதாரண மக்களோடு நின்று பேசுவதுமாகத் தம்மை மக்கள் மன்னராகச் செய்து கொண்டார். ஆயினும் புரட்சியின் வருகை ஒலித்தது. இதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு என்று கூற வேண்டும். (1) பிரான்ஸ் நாட்டின் இயற்கையான பெருமை. 50 ஆண்டுக் காலம் ஐரோப்பாவில் பெரும் பதவியிலிருந்த

பிரான்ஸ் நாடு பிலிப்பேயின் சாதாரண ஆட்சியை வெறுத்தது. ஐரோப்பிய நாடுகளின் வரலாறு நெப்போலியப் பேரரசர் காலத்தில் அவர் கையில் இருந்தது. இப்போது பிலிப்பே இங்கிலாந்து நாட்டைப் பின்பற்றிச் செல்வது பிரஞ்சுக்காரர் களுக்குப் பிடிக்கவில்லை. 1840ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் நெப்போலிய மாவீரனுடைய திருவுடல் ஹெலினாவிலிருந்து பாரிஸ் பட்டணத்திற்குக் கொண்டு வரப்பட்டது, அங்கு அதைப் புதைப்பதற்கு முன் பிரெஞ்சு மக்கள் இறந்த மாவீரனுக்குச் சிறந்த இறுதி வணக்கஞ் செய்தார்கள். அப்போதெல்லாம் பிலிப்பேயின் பெயரற்ற ஆட்சி அவர்கள் கண்முன் நின்று அவருடைய பெருமையை இன்னும் அதிகமாகக் குறைத்தது. (2) இரண்டாவதாகப் புத்துணர்ச்சி ஒன்று, 50 ஆண்டுகளுக்கு முன் இங்கு ஏற்பட்டதுபோல் மறுபடியும் இப்போது ஏற்பட்டது. இந்தப் புத்துணர்ச்சியைப் பிறப்பித்தவர்களில் சிறந்தவர்கள் இருவர்; ஃபூரியே (Fourier), செயின்ட் சைமன் (Saint Simon) என்பவர்கள். புத்துணர்ச்சியின் மிக முக்கியமான பாகம் சம உணர்ச்சி என்பது. இதை நாம் சமத்துவ உணர்ச்சி யென்றும் (Socialism), பொதுவுடைமைக் கொள்கையென்றும் (Communism) இப்பொழுது கூறுகிறோம். இவ்வுணர்ச்சி முதல் முதல் பிரான்ஸ் நாட்டில் எழுந்தது. சோஷலிசம் (Socialism) என்ற சொல் அங்குத்தான் 1830ஆம் ஆண்டு முதலில் பயிலப் பட்டது. அதற்குக் காரணராயிருந்தவர் லூயி பிளாங்க் (Louis Blanc) என்பவர். மக்கள் வேலையில்லாமல் அல்ல லுறுவதை அவர் கண்டு மனம்பதைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது அரசியலாரின் வேலையாகும் என்று ஆணித்தரமாக எடுத்துக் காட்டினார். "நாங்கள் வேலை செய்து வாழ்வோம்; அல்லது சண்டை செய்து வீழ்வோம்" (We will work and live or fight and die) என்பது பாரிஸ் மக்களின் கூக்குரலாயிற்று. எல்லோரும் சம உரிமைகளுடன் வாழவேண்டு மென்பது பிளாங்கின் கோரிக்கை. அரசியலாரே தொழிற்சாலைகள் அமைத்து வேலையில்லாதவர்களுக்கு வேலை தரவேண்டு மென்று அவர் கூறினர். இவ்விதமாகச் சமத்துவக் கொள்கைகள் நடைமுறையில் பேசப்பட்டன. அரசியல் கொள்கைகளில் நாட்டம் கொண்டவர்கள் அரசியல் முறையையே மாற்றி அமைக்க வேண்டு மென்று கோரினர்கள். பிலிப்பேயின் ஆட்சியை நிறுவின போது பிரெஞ்சு பாராளு மன்றத்திற்கு, 500 பிராங்குகள் வரியாகக்கட்டுபவர்களுக்கு அதில் அங்கத்தினராக நிற்க உரிமை உண்டென்றும் 200 பிராங்குகள் கட்டுபவர்களுக்கு வாக்குரிமை உண்டென்றும் முடிவு செய்திருந் தார்கள். இதன்படி நடுத்தர வகுப்பினருக்கே அரசாட்சியில்

உரிமை இருந்தது. பொது மக்கள் அரசனுடைய மெய்க்காப்புப் படையில் ஊழியம் செய்யவே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். இந்நிலைமை மாறவேண்டுமென்று இப்பொழுது கிளர்ச்சி ஏற்பட்டது. மெய்க்காப்புப் படை தனது வேலையைச் செய்ய மறுத்ததுமன்றி நாட்டில் குழப்பத்தை மிகுதிப் படுத்தவும் உதவி புரிந்தது. அப்போது அரசனுக்கு ஆலோசகராகவிருந்த கிசோ (Guizot) கிளர்ச்சியை மிகுதிப்படுத்தும் விதத்தில் சொற்பொழி வாற்றினார். மக்களின் குறைபாடுகளைக் கண்மூடித்தனமானவை யென்றும், அவர்கள் கோரும் அரசியல் மாறுதல்களை மாறுபட்ட மனப்பான்மை கொண்டு எழுந்தவை யென்றும் தமக்கே உரிய ஆணித்தரமான நடையில் எடுத்துப் பேசினார். 1848ஆம் ஆண்டு தொடக்கத்தில் இது நிகழ்ந்தது. அவ்வாண்டுப் புரட்சிக்கு இதுவே அண்மைக் காரணமாயிற்று. பிரான்ஸ் நாட்டின் பல கட்சிகளும் இதனால் ஒன்று கூடின; கிசோவை எதிர்க்க வேண்டு மென்பது அவற்றின் நோக்கமாயிற்று. கத்தோலிக்கரும், குடியரசுக் கட்சியினரும் ஒன்று கூடிக் கிசோவின் பேச்சுக்கு எதிர்ப்புக் காட்டுவதற்காகப் பாரிஸ் பட்டணத்தில் பெரியதொரு விருந்துக்கு ஏற்பாடு செய்தனர். அது 1848ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் தேதி நடக்க விருந்தது. அரசியலார் இதற்குத் தடைவிதிக்க எண்ணினர். ஆயினும் நொடி நேரத்தில் பாரிஸ் மக்கள் அரசையே எதிர்க்கத் துணிந்தனர். வேறு வழியில்லையென்று உணர்ந்த மன்னர் தம் குடும்பத்தோடு நாட்டை விட்டுப் புறப்பட்டு இங்கிலாந்து நாட்டில் ஒதுங்கினர்.

பிலிப்பேயின் வீழ்ச்சி கட்டுப்பட்ட அரசியல் என்ற கொள் கைக்கே பிரான்ஸ் நாட்டில் இடமில்லையென்று காட்டியது. அன்றும் இன்றும் இந்நாடு பாராளுமன்ற ஆட்சிக்கு உரிய தன்று. பிரஞ்சுக்காரர் 1793ஆம் ஆண்டு ஒரு குடியரசை அமைத்தார்கள். ஆனால் அது விரைவில் வீழ்ச்சியுற்று நெப்போ லியனுடைய ஆதிக்கத்திற்கு வழி கோலியது. அதேபோல் இப்பொழுதும் குடியரசை நியமித்தது. பிறகு தனி நபரின் ஆட்சியைத் தேடி அலைந்தது.

V

1848ஆம் ஆண்டில் ஏற்பட்ட குடியரசு முதலில் வேலை யில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முயன்றது. மக்கள் கோரிக் கைப்படி தேசிய வேலை தரும் இடங்கள் (National Workshops) ஏற்படுத்தப்பட்டன எனினும் முதலில் இந்தத் திட்டம் நடை முறையில் நடக்கக்கூடியதல்ல. அப்படி நடத்துவதாயிருந்தால் அதற்கு மிகச் சிறந்த முயற்சியும் அயரா உழைப்பும் வேண்டும்.

இவை இரண்டும் கட்டுப்பாடில்லா மக்கள் ஆட்சியில் நடக்கக் கூடியவையல்ல. மிகுதியான பணம் செலவழிந்தது. ஆனால் அது பயனளிக்கக் கூடியதாக இருக்கவில்லை. பிப்ரவரிக் கடைசியில் தொடங்கிய திட்டம் ஜூனிலேயே ஆட்டம் கண்டு விட்டது. மக்கள் கொதித்தெழுந்தார்கள். நல்ல காலமாக நிலைமை கெடாமல் தடுக்கக் கவேய்க்நாக் தோன்றினார். நான்கு தினங்கள் சண்டை நடந்தபின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது, 2000க்கும் மேற்பட்டோர் ஆல்ஜியர்ஸ் பிரதேசத்திற்குத் துரத்தப்பட்டார்கள். மறுபடியும் சட்டசபை கூட்டப்பட்டது. நாட்டின் தலைவரை அச்சபை தேர்ந்தெடுக்க வேண்டுமென முடிவாகியது. லூயி நெப்போலியன் மாவீரர் நெப்போலியனுடைய சகோதரர் மகனார். தந்தையார் ஹாலந்து நாட்டில் மன்னராக இருந்ததுபோல் தாமும் பிரான்ஸ் நாட்டின் தலைவராகக் கூடும் என்று அப்போது கருதினார். அவருடைய சிறிய தந்தையார் அங்குச் சிறந்த பெருமைகளை விட்டுச் சென்றிருந்தார். அவருடைய பெயரே லூயிக்கு இப்போது பெருந் துணையாகவிருந்தது. தேர்தலில் மிகப் பெரு வெற்றியும் கிட்டியது.

இவ்விதமாக லூயி பிரான்ஸ் நாட்டின் தலைவராக 1848ஆம் ஆண்டின் இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலில் அவர் நாட்டின் அரசியல் திட்டத்தையே மாற்றி அமைக்கத் துணிந்தார். எல்லா மக்களுக்கும் வாக்குரிமை வழங்கவேண்டுமென்பதும், நாட்டின் தலைவர் இரு முறையாவது அப்பதவியை ஏற்க ஒப்ப வேண்டுமென்பதும் அவருடைய முதன்மையான கருத்துக்கள். இதற்குச் சட்டசபையில் எதிர்ப்புக் காட்டியவர்களை அவர் சிறைப்படுத்தினார். ஆயிரக்கணக்கில் மக்களை நாட்டை விட்டு வெளியேற்றவும் அவர் தயங்கவில்லை. இவற்றிற்கு அரசியல் திட்டம் உருவாகியது. எல்லா மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. நாட்டின் தலைவருடைய பதவிக் காலம் பத்தாண்டுகளாக நீடிக்கப்பட்டது. இதற்குச் சாதகமாக 7½ மில்லியன் வாக்குக்கள் கொடுக்கப்பட்டன. இதற்கெதிராக வாக்களித்தவர்கள் ½ மில்லியன் பேர்கள்தாமிருப்பர். தமக்கிருந்த செல்வாக்கைக் கண்ட நெப்போலியன் தம்மையே மன்னராக்கிக் கொள்ளத் திட்டமிட்டார். தம்மையே மன்னராக்கிக் கொண்டால் அப் பதவியைத் தம் வாரிசுகளுமடையலாமென்று அவர் எண்ணங் கொண்டார். அதனால் நாட்டின் தலைவராகப் பதவியேற்ற நான்காண்டுகளிலேயே அவர் இந்த எண்ணத்தை நிலைநாட்ட மக்களின் கருத்தை நாடினார்; வாக்கெடுத்தார். நெப்போலியனுடைய எண்ணத்திற்கு ஆதரவாக 7,80,000

வாக்குக்களும், எதிராக 2,33,000 வாக்குக்களும் கிடைத்தன. இதன்படி 1852ஆம் ஆண்டு தலைவர் நெப்போலியன் பிரான்ஸ் நாட்டின் பேரரசரானார். அவருக்கு மூன்றும் நெப்போலியன் என்ற பெயரும் வந்தது.

ஐரோப்பிய வரலாற்றில் இந்த 1848ஆம் ஆண்டு மிக முக்கியமானதாகும். ஏனென்றால் பிரஞ்சுப் புரட்சியும், இத்தாலியப் புரட்சியும், ஜெர்மானியப் புரட்சியும் இந்த ஆண்டிலேயே தொடங்கின. இவற்றில், பின் இரண்டைப் பற்றிப் பின்னர் வரும் இயல்களில் குறிப்போம். இங்குப் பிரஞ்சுப் புரட்சியைப் பற்றி மட்டும் சிறிது கூறவேண்டும். வியன்னா மாநாடு முடிந்த உடனேயே ஐரோப்பாவில் தேசியப் புயல் வீசியது என்று கூறினோம். அது சிறிது அடங்கி மீண்டும் இப்போது புத்துயிர் பெற்றதென்று கொள்ளவேண்டும். இதற்குப் பிரான்ஸ் நாட்டில் 1848ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சி பெருங் காரணமாகும். இப்படி வீறுகொண்டெழுந்த தேசியப் புயலிலே பிரான்ஸ் நாடும், சிறப்பாக மூன்றும் நெப்போலியனும் இங்கும் அங்கும் ஓடித் தவிப்பதைக் காண்கின்றோம்.

பேரரசுப் பட்டம் பூண்ட நெப்போலியன் இந்தப் புரட்சிகளிலே 18 ஆண்டுக்காலம் ஈடுபட்டார். அவருடைய ஆட்சியின் காலம் ஒருவிதத்தில் இதற்கு ஈடு கொடுப்பதிலேயே கழிந்தது. மாவீரன் நெப்போலியனின் சகோதரர் மகனார் என்ற போர்வை அவருக்கு ஒரு பொன்னுடையாகத் திகழ்ந்ததென்றாலும் அடிப்படையில் அவர் அரச குலத்தைச் சேர்ந்தவரல்லர். இருதரம் முயன்றும் பிரான்ஸ் நாட்டின் தலைமைப் பதவி அவரை அடையவில்லை. இதன் பலனாக அவர் சிறையில் நாள் கழித்ததுமுண்டு. பேரரசை நியமித்தால் சமாதானம் நிலவும் என்று வாக்களித்து விட்டுப் பதவி வந்ததும் பெரிய ஐரோப்பியச் சண்டைகளிலே அவரால் கலந்துகொள்ளாமல் இருக்கக்கூடவில்லை. பெரு வெற்றிகளில் கவர்ச்சி பெறும் பிரான்ஸ் நாட்டுப் பெருமக்கள் இதற்குங்கூட அவரை நோகவில்லை. ஆனால் அவர்கள் எதிர் நோக்கிய வெற்றி அவருக்குக் கிடைக்கவில்லை.

ஏதாவதொரு ஐரோப்பிய அரச குடும்பத்தோடு கலந்து கொண்டு தமக்குப் பெருமை தேடிக்கொள்ள வேண்டுமென்றாலும், அவருக்குப் பெண் கொடுக்க எந்த அரச குடும்பமும் முன்வரவில்லை. கடைசியாக 1853 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டுப் பெருங்குடி மகள் ஒருத்தியை அவர் திருமணம் செய்து கொண்டார். அவள் பெயர் யூஜெனி மொன்டிஜோ (Eugeni de Montijo) என்பது. ஆயினும் அதனால் நெப்போலியனுக்கு

எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை. அரச குடும்பங்கள் அவரை மதிக்கவில்லை. போதாக்குறையாகக் கத்தோலிக்கக் குடும் பத்தைச் சேர்ந்த யூஜெனியை அம் மதத்தைச் சேராத பல பிரெஞ்சுக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை இத்தாலியில் நடந்த ஒற்றுமைப் போரில் போப்பாண்டவரின் செல்வாக்கைப் போதிய அளவு ஒடுக்கவில்லை என்று அவர்கள் மன்னர்மீது சீற்றம் கொண் டார்கள். அதற்கு மாறுகப் பிரெஞ்சுக் கத்தோலிக்கரும், குரு மார்களும் போப்பாண்டவரின் செல்வாக்கைக் குறைப்பதற்கு நெப்போலிய மன்னரே முக்கிய காரணமானவர் என்று சீற்றம் கொண்டார்கள். போப்பாண்டவரின் படைகள் தோல்வியுற்ற கேஸ்டெல்பிடார்டோச் (Castelfidardo) சண்டை நெப்போலிய னுடைய பெருமைக்கு முதற் பங்கம் விளைத்தது. ஆயினும் நெப்போலியன் இத்தாலியச் சண்டையில் கலந்ததால் இத்தாலிய மக்களுக்காவது பயனளித்ததோவென்றால் அவர்களைப் பொறுத்த அளவில் இல்லை யென்றுதான் அவர்கள் நினைத்தார்கள். 1862 ஆம் ஆண்டு போப்பாண்டவரின் இடங்களைக் கைப்பற்ற இத்தாலிய ஒற்றுமை வீரர் கரிபால்டி (Garibaldi) முயன்றார். அதில் அவர் தோல்வியுற்றதற்கு நெப்போலியனே காரணம் என்று பல இத்தாலிய மக்கள் இகழ்ந்தார்கள்.

இது ஒருபுறம் இருக்க, பிரெஞ்சு மன்னர் வணிகரையும், பொருள் உண்டாக்குவோரையும் (Manufacturers) பகைத்துக் கொண்டார். அப்பொழுது தடை இல்லா வணிகக் கொள்கை (Free trade) இங்கிலாந்தில் தொடங்கி ஐரோப்பாவில் பரவி வந்தது. இதில் முதன்மையாக நின்றவர் காப்டன் (Cobden) என்பவர். மன்னரோடு பேச்சு வார்த்தை நடத்தவந்த இவரைப் பாரிஸ் பட்டணத்தில் வரவேற்று இங்கிலாந்தின் வணிகப் பொருள்களை மிகு வரியில்லாமல் பிரான்ஸ் நாட்டினுள் ஏற்றுக் கொள்ள ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளவும் இவர் ஒப்புக்கொண்டார் (1860). இதனால் பிரெஞ்சு வணிகர்கள் துன்புற்றனர். அவர்கள் பொருள்களுக்கு விலை குறைந்தது. வாணிக மந்தமும் ஏற்பட்டது. இதனால் மன்னர் எதிர்பார்த்த இங்கிலாந்தின் நட்பும் பயனளிக்கவில்லை. பிரெஞ்சு நாட்டிலோ ஏழை மக்கள் விலைவாசிகளின் ஏற்றத்தால் மிகக் கவலையடைந் தார்கள். வாக்குரிமையுள்ள எந்த நாட்டிலும் பொது மக்களின் உதவி மன்னருக்கு வேண்டும். இந்த வணிகத் திட்டத்தினால் லூயி அதை இழந்தார். நாட்டில் அமைதி நிலவ வேண்டு மென்று பெரும் பணி புரிந்தவர்கள் வணிகர்களே. அவர் களுடைய ஒத்துழைப்பையும் லூயி இப்பொழுது இழந்தார்.

லூயி நெப்போலியனுடைய பெருமையை மேலும் மிகுதியாகக் குலைத்தது அவருடைய தென் அமெரிக்கப் போராகும். தென் அமெரிக்க நாடுகளில் ஸ்பெயின் நாட்டுப் புரட்சியை ஒட்டி உரிமைக் கிளர்ச்சி ஏற்பட்டதென்பதை நாம் அறிவோம். ஆயினும் அங்கு அப்போது ஏற்பட்ட உரிமை அரசு பல நாடுகளில் வேர் கொள்ளவில்லை. அதில் மெக்சிக்கோவும் ஒன்று. அங்கு 1823 இல் ஏற்பட்ட உரிமைக் கிளர்ச்சியின் காரணமாக அமைதி ஏற்படவில்லை. அமைதியின்மைதான் நிலவியது. 1861 ஆம் ஆண்டு சுஆரஸ்(Juarez)என்பவர் அங்குத்தலைமைப் பதவியேற்றார். அப்பொழுது மெக்சிக்கோ பல நாடுகளுக்குக் கடன் பட்டிருந்தது. சிறப்பாக பிரான்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து நாடுகளுக்கு மிகுதியாகக் கடன் பட்டிருந்தபடியால் அவை மெக்சிக்கோவைக் கடனைத் திருப்பித் தரும்படி வற்புறுத்தின. சுஆரஸ் தலைவரானவுடன் மேற்படி கடனுக்குரிய வட்டியைக் கூடத் தர மறுத்தார். இந்த நிலையில் மெக்சிக்கோவுடன் சண்டை செய்வதைத்தவிர வேறு வழியில்லைபோல் தோன்றியது. ஆனால் லூயி நெப்போலியன் இதில் ஒரு பெரிய வாய்ப்புத் தமக்குக் கிடைத்ததாக எண்ணினார். மற்ற நாடுகளையும் இந்தச் சண்டையில் தூண்டிவிட்டு இதன் மூலமாகத் தமது ஆட்சியையே தென் அமெரிக்க நாடுகளில் ஏற்படுத்தக் கூடும் என்று அவர் கனவு கண்டார்.

ஐரோப்பிய வரலாற்றிலேயே பல பெருங்கனவுகளைக் கண்டு ஏமாந்து போனவர்களில் நெப்போலியன் முதற் பிரிவில் வைக்கக் கூடியவர். முதலில் ஸ்பெயின் நாட்டினரும், ஆங்கில நாட்டினரும் பிரெஞ்சுப் படையோடு சேர்ந்து வெராகுரூஸ் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். ஆனால் இந்தக் கூட்டுப் படையினரின் கருத்துக்கள் ஒரே மாதிரியானவை யல்ல. ஸ்பெயின் நாட்டினரும் ஆங்கிலேயரும் மெக்சிக்கோ நாடு தங்களுக்குத் தரவேண்டிய கடனுக்காக வட்டியையாவது தரும்படி கேட்கவேண்டுமென்ற கருத்தோடேயே மெக்சிக்கோ சென்றனர். பிரஞ்சு மன்னர் கொண்ட கருத்தோ மிகப் பெரிது. மெக்சிக்கோவையே கைப்பற்ற வேண்டும், அது தமக்குக் கிடைக்காவிட்டாலும் ஏதாவதொரு ஐரோப்பிய நாட்டிற்கு அது சொந்தமானால் அந்த நாட்டின் உதவி கொண்டு பிரான்ஸின் பெருமையை அங்கு வளர்த்துக் கொள்ளலாமென்றும் எண்ணினார். பொதுவாக இந்தக் கருத்துவேற்றுமை யினாலேயே கூட்டணி விரைவில் உடைந்தது. கடைசியில் பிரெஞ்சுப் படை மட்டுமே மெக்சிக்கோ நாட்டினுள் நுழைந்தது (1863).

கூட்டணியில் ஏற்பட்ட பிளவோ, மெக்சிக்கோவினுள் நுழைய அவர் பட்ட இன்னல்களோ, புபெல்லாவோடு ஏற்பட்ட கடுஞ் சண்டையோ நெப்போலியனுடைய கனவைத் தகர்க்க வில்லை. அவர் மெக்சிக்கோ பிடிபடுவதற்கு முன்னரே அதற்கு மெக்சிக்கோப் பேரரசு என்ற பெயர் சூட்டி ஆஸ்திரிய நாட்டு மன்னரின் சகோதரர் மாக்சிமில்லியனுக்கு அதைத் தந்துவிடவும் நினைத்தார். இதனால் பிரான்ஸின் தொல்லைகள் குறையு மென்றும், மாக்சிமில்லியனுடைய நட்புத் தமக்குக் கிடைக்கு மென்றும் லூயி திட்டமிட்டார். ஆனால் மாக்சிமில்லியன் ஆட்சி செய்யப் பிறந்தவரல்லர். அவர் கருத்தெல்லாம் விஞ்ஞானத் திலும், நாடகங்களைச் சுற்றிப் பார்ப்பதிலுமே பதிந்திருந்தது. அவர் லூயியின் கருத்திற்கு இசைந்தார். தளகர்த்தர் வொரே (Forey)யின் கீழ் அணிவகுத்து நின்ற 23,000 பேர்கள் கொண்ட பெரும் பிரஞ்சுப் படையுடன் மாக்சிமில்லியன் மெக்சிக் கோவினுள் நுழைந்தார்.

ஆனால் நெப்போலியனுடைய எண்ணம் கைகூடுவதாக இல்லை. அப்பொழுது அமெரிக்காவில் நடந்துவந்த உள்நாட்டுச் சண்டை முடிவடைந்தது. அங்கு வடக்குப் பகுதிக்கும் தெற்குப் பகுதிக்குமிடையே நடந்த விடுதலைப் போரில் வடக்குப் பகுதி வெற்றிபெற்று நாட்டில் அமைதியை நிலைநாட்டியது. அது மெக்சிக்கோவை ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு விட்டுக்கொடுப்ப தாக இல்லை. நெப்போலிய மன்னரோ அமெரிக்காவின் அமைதி யற்ற நிலையை எண்ணியே தமது திட்டத்தை வகுத்திருந்தார். ஆனால் எதிர்பாராத விதமாய் அங்குச் சண்டை ஓயவும் அமைதி நிலவவும் அவருடைய எண்ணங்கள் வெற்றியடைவது பகற் கனவாயிற்று. ஏற்கனவே தலைவர் மன்ரோ வெளியிட்டிருந்த மன்ரோக் கொள்கையை வட அமெரிக்கா கைப்பிடித்தது. இந்த நிலையில் பிரஞ்சுப் பேரரசர் வெற்றிகரமாகத் திரும்ப முடிவு கட்டினர். மாக்சிமில்லியன் இதற்கு ஒத்துக் கொள்வதாக இல்லை. ஆனால் நெப்போலியன் அவரை எதிர்பாராமலேயே தமது படையை மெக்சிக்கோவிலிருந்து வெளியேற்றினர் (1867). மாக்சிமில்லியன் அதற்குப் பிறகும் நான்கு திங்கள் காலம் அங்குத் தங்கி வெற்றிக்காக முயன்றார். ஆனால் வெற்றிக்குப் பதிலாகத் தோல்வியே கிடைத்தது. 1867ஆம் ஆண்டு ஜூன் திங்களில் கூரெடாரோ (Queretaro) என்றவிடத்தில் மெக்சிக்கோ படை களின் முன்னே அவர் சரணடைந்தார். அதன்பின் மெக்சிக் கோவின் தலைநகரிலே அவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

உள்நாட்டு அரசியல் நிகழ்ச்சிகளில் மட்டும் 1860ஆம் ஆண்டிலிருந்தே நெப்போலியன் சிறிது தொலை நோக்குடன் வேலை செய்திருந்தார். அவர் தமது செல்வாக்கினால் தம்மை ஒரு சர்வாதிகாரியாகச் செய்து கொண்டாரெனினும், மக்கள் முகம் கோணுமல் தாம் ஆள வேண்டுமென்று அவர் எண்ணங் கொண்டார். ஆகையால் ஆண்டுக்கொரு தரம் பிரான்ஸ் நாட்டின் மேற்சபை (Senate)யும், கீழ்ச்சபையும் (Legislative Assembly) அரசாங்க முறைகளை அலசிப் பார்க்க அனுமதித்தார். சிறிப்பான பொறுப்பில்லாத அமைச்சர்களுக்கு (Ministers without portfolio) கீழ்ச்சபையில் இடமளித்து அங்கு மக்கட் பிரதிநிதிகள் கேட்கும் கேள்விகளுக்கு அவர்கள் விடையளிக்க வேண்டுமென்று நியமித்தார். மக்கட் சபையில் நடக்கும் விவாதங்களைப் பிறர் அறியும் வண்ணம் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யவும், பொதுவாகப் பத்திரிகைகளைக் கண்காணிப்பதில் அரசாங்கம் குறைந்த கவனம் செலுத்தவும் பணித்தார். இத்தகைய மாறுதல்களைச் செய்தும் மக்கள் மனநிறைவு அடையவில்லை. அவர்கள் ஆங்கில நாட்டு அரசு முறையையே விரும்பினர்கள். அமைச்சர்கள் அரசனுக்கல்லாமல், பாராளு மன்றத்திற்கே பொறுப்புள்ளவர்களாக நடக்கவேண்டும்என்றும் விரும்பினர்கள்.

இந்நிலையில் 1863ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தல் மன்னருக்கு மாறுக முடிவளித்தது. நெப்போலியனுக்கு ஆதரவாயிருந்தவர்கள் அடியோடு அரசியலினின்றும் துரத்தப் படவில்லை. தேர்தலுக்குப் பின்னும் சட்டசபையின் பெரும் பாலான உறுப்பினர்கள் மன்னருக்கு ஆதரவாளர்கள்தாம். ஆயினும் எதிர்ப்பாளர்கள் எண்ணிக்கையில் மிக்கனர். ஏறக்குறைய 20 இலட்சம் வாக்குக்கள் நடைமுறை அரசாங்கத்திற்கு எதிராகத் தரப்பட்டனவென்றால் மன்னருக்குப் பொது மக்களிடம் ஆதரவு குன்றியதென்று கூறுவதில் ஐயமேதுமில்லை.

நாட்டின் நிலையை மாற்ற வேண்டுமானால் அதன் அரசியல் அமைப்பையே மாற்ற வேண்டுமென்று மன்னர் கருதினார். ஆங்கிலேய முறைப்படி பாராளுமன்றத்திற்கடங்கிய அரசியலைப் பிரெஞ்சு மக்கள் விரும்புகின்றார்களென்பதைப் பிரெஞ்சு மன்னர் கண்டிருந்தார். ஆதலால் அந்த முறைப்படி அரசியல் அமைப்பை மாற்றி அமைக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பாராளுமன்றத்தின் பெரும்பாலான மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அரசியல் குழு (Cabinet) அமைக்கப்படவும், பிரஞ்சு நாட்டின் மேல் சபை (Senate) இங்கிலாந்தின் லார்ட்ஸ் சபை போல் இயங்கவும் முடிவாயிற்று. 1870 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் எமில் ஒலிவியரை (Emile Ollivier) இம்மாதிரியான

அரசியல் குழுவை அமைக்கும்படி அரசர் ஆணை பிறப்பித்தார். புதிய அரசியல் திட்டம் மக்களுடைய ஆமோதிப்பைப் பெற அதற்காக அவர்களுடைய வாக்குக்களைக் கோர வேண்டுமென்று ஒலிவியர் எண்ணினார். வாக்குக்கள் கோரப்பட்டன. ஆனால் புதிய திட்டத்திற்காக ஆதரவு சிற்றூர்களிலிருந்துதான் கிடைத்தது. லயான்ஸ், மார்செய்ல், துலூஸ் போன்ற பட்டணங்கள் அதை எதிர்த்தன. பாரிஸ் நகரத்தில் 184,000 வாக்குக்கள் ஆதரவாகவும், 138,000 வாக்குக்கள் எதிராகவும் கிடைத்தன. ஆனால் வாக்களித்தவர்களைக் காட்டிலும் வாக்களிக்காதவர்களின் எண்ணிக்கையே அதிகம். ஆயினும் மன்னர் சூழ்நிலையை எதிர்த்துப்புதிய திட்டத்தை நடைமுறையில் கொண்டு வர முற்பட்டார். பொதுவாகப் பெரிய பட்டணங்களில் தவிர மற்ற இடங்களில் இதற்கு ஆதரவு மிகுந்தது. ஆனால் இந்தப் புதுத் திட்டம் என்னவென்று பிரஞ்சு மக்கள் கண்டுபிடிப்பதற்குள் பெருஞ்சண்டை மூண்டது.

VI

மூன்றும் நெப்போலியனுடைய வரலாறு இன்னும் முடியவில்லை. அவரைப்பற்றிப் பின்வரும் இயல்களிலும் கூறவேண்டும். சிறப்பாக அவருடைய பிரஷ்யச் சண்டையும் இத்தாலியச் சண்டையும் நம் கருத்தைத் தனியாக ஈர்ப்பனவாகும். ஆயினும் இந்த இயலை முடிப்பதற்கு முன் அவர் தம் ஆட்சியின் தொடக்கத்தில் செய்த கிரிமியப் போரைப் பற்றி இங்குக் குறிப்பது பொருத்தம். தொடக்கத்தில் நடந்த போரைப் பற்றிக் கடைசியில் கூறுவதின்நோக்கம் இப்போர் நெப்போலியன் செய்த மற்றப் போர்களைப் போல் ஐரோப்பிய நாடுகளின் தேசிய உணர்ச்சிக்கு மாறுக எழுந்ததன்று. இது பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்த வல்லரசு சமநிலைக் கொள்கையைப் பின் பற்றிய போர்கள் போன்றது. ஆகையால் இதைப் பற்றிச் சிறிது இங்குக் கூறுவோம்.

ஐரோப்பாவில் துருக்கியர் எழுச்சி நீண்ட காலந்தொட்டு வந்த சிக்கலாகும். ஆனால் கி. பி. 17ஆம் நூற்றாண்டிலிருந்து அவர்கள் வலிமை அங்குக் குன்றியது. அவர்களுக்கு ஆள் கட்டுக் கிடையாது. அவர்கள் வலிமையெல்லாம் வாளின் பின்னே சென்றது. அவர்கள் வெற்றி கொண்ட மக்களையும் தம்மோடு இணைத்துக்கொள்ள முடியவில்லை. கி.பி. 1571ஆம் ஆண்டு துருக்கியர் லெபான்டோ (Lepanto) என்னுமிடத்தில் அடைந்த தோல்வியினின்றும் அவர்கள் மறுபடியும் மீளவில்லை. இந்நிலையில் பதினெட்டாம் நூற்றாண்டில் ருஷியர்கள் துருக்கியின்

வடபாகத்தில் வீறு கொண்டெழுந்தனர். இவ்வித காரணங் களால் 19ஆம் நூற்றாண்டில் துருக்கியின் நிலைமை மிகக் கடின மாயிற்று. துருக்கியைத் தோற்கடித்துக் கருங்கடல் வழியைத் தன் ஆதிக்கத்தில் கொண்டுவர வேண்டுமென்பது ருஷியாவின் பெரிய நோக்கமாக விருந்தது. விரைவில் சண்டைக்கு ஒரு காரணமும் ஏற்பட்டது. துருக்கியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைத் துருக்கியரிடமிருந்து துன்புறுமல் காப்பதற்காக ருஷியா போர் தொடுக்க முன்வந்தது.

இந்தச் சண்டையில் துருக்கியருக்குத் துணையாகப் பிரான்சும், இங்கிலாந்தும் இணைந்தன. இதற்குப் பல காரணங்கள் கூறப் பட்டாலும் சிறப்பான காரணம் முற்கூறியபடி ஐரோப்பிய வல்லரசு சமநிலையைக் காப்பதே. 1853ஆம் ஆண்டு ருஷியர்கள் பால்கன் பிரதேசத்தில் இறங்கினார்கள். துருக்கியர் எதிர்ப்பு உறுதியாக ஒருபுறமிருக்க, பிரெஞ்சு—ஆங்கிலேயக் கூட்டணிப் படை மற்றொருபுறம் பால்கன்லில் இறங்கிற்று. முதலில் ருஷியா பின்வாங்கியது. அப்போது எளிதாக ஒற்றுமை ஏற்பட்டிருக்கும். ஆனால் நெப்போலியன் தம் வழக்கப்படி அவ்வளவு விரைவில் போரை விட்டுக் கொடுப்பதாக இல்லை. ருஷியக் கப்பல் வலிமையை அடக்குவதற்கு இது நல்லதொரு வாய்ப்பென்று ஆங்கிலேயர் எண்ணினார்கள். ருஷியர்கள் அல்மார் (Almar) என்ற இடத்தில் முதலில் தோற்றார்கள். ஆனால் அதைப் பின் பற்றி செபஸ்டபோல் (Sebastapol) துறைமுகத்தைக் கைப் பற்றுமல் நேச நாட்டினர் தாமதம் செய்தார்கள். இதற்குள் ருஷியா தன் படையைச் சீர்படுத்திக் கொண்டது. இத்தாலிய நாடு நேச நாட்டினரோடு சேர்ந்தது. பொதுவில் கிரிமியப் போர் எண்ணினதற்கு மேல் வலுத்தது. சண்டை ஈராண்டுக் காலம் நீடித்த பின்னரே முடிவடைந்தது (1855). செபஸ்ட போல் பிடிபட்டது. அதன்பின் நிகழ்ந்த பாரிஸ் உடன்படிக்கைப் படி ருஷியர்களின் கிறிஸ்துவப் பாதுகாப்பு ஒதுக்கப்பட்டது. கருங் கடலில் ருஷியச் சண்டைக் கப்பல்கள் நுழையக் கூடாதென்று முடிவாயிற்று. துருக்கி தன்னுட்சி நாடாகவே இயங்கவேண்டுமென்றும் முடிவாயிற்று.

ஆயினும் பாரிஸ் உடன்படிக்கையால் எத்தகைய நன்மையும் ஏற்படவில்லை. அந்த உடன்படிக்கை நடைமுறைக்கே கொண்டு வரப்படவில்லை. துருக்கியரின் வீழ்ச்சி நிற்கவுமில்லை. ருஷியர்கள் எழுச்சி குறையவுமில்லை. ஆயினும் இந்தச் சண்டையால் நேசப் படையினர் உணவின்றி மிகத்துன்புற்றனர். பலர் மடிந்தார்கள். மற்றும் பலர் காயப்பட்டார்கள். பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) அம்மையாரின் தொண்டு இப்போது தான் வரலாற்றுப் புகழ் பெற்றது.

13. ஜெர்மானியப் பேரரசு

(புரட்சிப்புயல்—பிரஷ்யாவின் தோற்றம்—பிஸ்மார்க்
ஆஸ்திரிய-பிரஷ்யப் போர்—பிரான்ன்-பிரஷ்யப்போர்)

I

வியன்னு மாநாட்டிற்குப் பிறகு ஐரோப்பா முழுவதிலுமே புரட்சி எழுந்தது என்பதை முன்னர்க் கூறினேம். இந்தப் புரட்சியில் முதன்மை பெற்றவை பிரான்சும், ஜெர்மனியும், ஆஸ்திரியாவும் இத்தாலியுமாகும். பிரஞ்சுப் புரட்சியைப் பற்றி முன் இயலில் படித்தோம். ஜெர்மனி, ஆஸ்திரியப் புரட்சி களைப்பற்றி அடுத்த இயலிலும் கூறுவோம்.

1848 ஆம் ஆண்டு வியன்னாவில் ஏற்பட்ட புரட்சி மெட்டர் னிக்கைப் பதவியிலிருந்து விலகும்படி செய்தது. இதைப் பின் பற்றி பொஹிமியா, ஹங்கேரி நாடுகளிலும் புரட்சிப் புயல் வீசியது. ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த மக்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரு புதிய அரசை ஏற்படுத்த வேண்டுமென்று பிரேக் (Prague) பட்டணத்தில் கூடிய மாநாடு ஒன்று கோரியது. அதே சமயம் ஹங்கேரி நாடு ஆஸ்திரிய ஆதிக்கத்தினின்றும் விடுபட வேண்டுமென்று ஒரு சட்டம் இயற்றியது. இதில் தலைமைப்பதவி வகித்தவர் கோசுத் (Kossuth). இவர் அதுவரை பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியவர். இப்பொழுது ஹங்கேரி நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டார். ஆஸ்திரி யாவின் வலிமை அப்பொழுது எங்கும் எதிர்க்கப்பட்டு வந்தது. ஹங்கேரியின் தொல்லை ஒருபுறமிருக்க, இத்தாலியர்கள் ஆஸ்திரிய நாட்டின் கட்டுக்களை உதறித்தள்ளினார்கள். மிலான், வெனிஸ் முதலிய பட்டணங்கள், பியட்மண்ட், சார்டினியா. பிரதேசங்கள்—இவை யாவும் ஆஸ்திரியாவிற்கு மாறுகக் கிளம்பின. மிலான் பட்டணத்திலிருந்து ஆஸ்திரியப் படைகள் வெளியேற்றப்பட்டன. வெனிஸ் தன் சுயாட்சியை நிறுவியது.

நல்ல காலமாக ருஷியா ஆஸ்திரியாவிற்கு உதவியது; ஆஸ்திரியாவின் பழைய பேரரசர் வெர்டினண்ட் (Ferdinand) தம் ஆட்சிப் பதவியை விட்டுவிடவே, பிரான்சிஸ் ஜோசப் (Francis Joseph) என்ற புதுப் பேரரசர் நியமிக்கப்பட்டார்; இவருக்கு

உதவியாக விருந்தவர்களில் ஹுவார்சன்பெர்க் (Schwarzenberg) என்பவர் மிகத் திறமை வாய்ந்தவர். இந்நிலையில் ஆஸ்திரியா வெற்றிபெற்றது. நொவாரா (Novara) என்னுமிடத்தில் சார்டினிய மன்னர் தோல்வியுற்றுத் தம் பதவியையும் விட்டு விட்டார். அவருக்குப் பதிலாக அவருடைய புதல்வர் விக்டர் இம்மானுவேல் (Victor Emmanuel) சார்டினிய மன்னராகப் பதவியேற்றார். ஆயினும் இத்தாலியர்கள் நினைத்தபடி நடக்க வில்லை. ஹங்கேரி நாட்டுக் கலகமும் ருஷிய உதவியால் அடக்கப் பட்டது. 1849ஆம் ஆண்டு கோசுத் ஆஸ்திரிய நாட்டினின்றும் தம் நாடு பிரிந்து தன்னாட்சியை எழுப்புவதாக அறிக்கை விட்டார். இவ்வளவு முற்போக்காக அவர் செய்தது ஹங்கேரிய ருக்கு அண்மையிலிருந்த செர்பியர் (Cerbiours), குரோஷியர் (Croatians), ருமேனியர் (Rumanians) போன்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அவர்களுடைய உதவி ஹங்கேரிய ருக்குக் கிடைக்கவில்லை. அதே ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் வில்லகோஸ் (Villagos) என்னுமிடத்தில் ஹங்கேரிப் படை தோற்றது. கோசுத் நாட்டை விட்டு வெளியேறினர்.

ஜெர்மனி நாட்டில் மட்டும் தன்னாட்சி உணர்ச்சியை எளிதாக அடக்கக்கூடவில்லை. 1815ஆம் ஆண்டு ஆஸ்திரியாவின் தலைமையின்கீழ் ஜெர்மனியும் பிரஷ்யாவும் ஒன்று சேர்ந்த ஒரு பெரும் பகுதியைத் தனி அரசாங்கமாக ஜெர்மன் கூட்டுறவு நாடு (German Confederation) என்ற பெயரில் வியன்னா மாநாட்டார் ஏற்படுத்தினர்கள். ஆனால் அது துவக்கத்திலி ருந்தே பெயரளவுக்கு மட்டும் ஒரு தனி அரசாக இருந்தது. தலைமை பெற்ற ஆஸ்திரியா ஜெர்மன் நாடுகளுக்கு ஒன்றும் செய்யவில்லை என்ற மனக்குறை ஜெர்மன் பிரதேசங்களில் ஆழ்ந்து பதிந்திருந்தது. பிரான்ஸ் நாட்டில் 1848ஆம் ஆண்டி லேயே புரட்சி வென்றது. மனத்தாங்கல் கொண்டிருந்த ஜெர் மானியருக்கு இந்த வெற்றி ஒரு தூண்டுதலாய் அமைந்தது. ஆகவே, ஜெர்மானியர் விரைவில் ஒன்று கூடினர். பிராங்பர்ட் (Frankfurt) என்னுமிடத்தில் ஒரு சபையைக் கூட்டி ஜெர்மனி நாட்டிற்குத் தனியாக ஓர் அரசியல் அமைப்புத் திட்டத்தை ஏற்படுத்த ஜெர்மானியர் முயன்றனர். ஆனால் எவ்வளவு விரைவில் கூடினார்களோ, அவ்வளவு விரைவில் திட்டத்தை ஏற்படுத்த முடியவில்லை. புதிதாக ஏற்படுத்த வேண்டிய ஜெர்மன் அரசியலில் ஆஸ்திரியரை எப்படிச் சேர்த்துக்கொள்வது என்பது பெருஞ் சிக்கலாக இருந்தது. ஆஸ்திரியாவை ஜெர்மனி யோடு சேர்த்துக் கொள்வதா அல்லது விட்டு விடுவதா என்ற வினாவிற்கு விடை காண்பது எளிதாக இல்லை. அப்போதைய

கணக்குப்படி 28 மில்லியன் மக்கள் வாழ்ந்தார்கள். இவர்களில் 4 மில்லியன் மட்டுமே ஜெர்மனி மக்கள். 28 மில்லியன் மக்களையும் ஜெர்மன் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களை அனுப்ப அனுமதித்தால் ஆஸ்திரியாவில் வாழ்ந்த ஜெர்மன் மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆஸ்திரியாவிலிருந்த ஜெர்மானியரை மட்டும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்படி சொல்வதோ ஒழுங்கில்லை. ஆஸ்திரிய நாட்டைத் தனியாக ஒதுக்கி விட்டால் ஆஸ்திரியா ஜெர்மனிக்கு மாறுகிவிடக் கூடும். இந்த அவல நிலையில் ஆஸ்திரியாவை ஒதுக்கி விடுவதென்றே ஜெர்மானியர் முடிவு செய்தார்கள். புதிதாக ஏற்பட்ட ஜெர்மனி நாட்டின் தலைமைப் பதவி ஏற்பவருக்கு ஜெர்மன் பேரரசர் என்று பெயர் சூட்டிப் பேரரசு முடியைப் பிரஷ்ய மன்னர் நான்காம் பிரடிரிக்(Frederick William IV)என்பவருக்குப் பிராங்பர்ட் சபை அளித்தது.

ஆனால் பிரடிரிக் மன்னர் அம் முடியை ஏற்றுக் கொள்ப வராக இல்லை. புரட்சியின் வழிவந்த முடி அவருக்குப் பிடிக்க வில்லை. ''இரத்தத்திலும் சகதியிலும் தோய்ந்த முடி எனக்குத் தேவையில்லை'' என்று அவர் கூறிவிட்டார். ஜெர்மானிய முயற்சிக்கு இது ஒரு வகையில் முடிவுகட்டியது. ஏற்கனவே பிரஷ்யாவில் மன்னர் ஆட்சியிலிருந்து விடுதலை தேடிய மக்கள் புரட்சி செய்து தோற்றிருந்தார்கள். சட்டம் செய்வதற்கு மட்டும் பிரஷ்ய மன்னர் ஒரு சபையைக் கூட்டினார். ஆனால் ஆட்சி மன்னர்கையில்தா னிருக்க வேண்டுமென்பது கடவுள் கொள்கையாகும் என்று அவர் கூறினார்; (According to the Law of God and the Country the crown must reign according to its free decision and not according to the will of majorities.") இந்தச் சூழ்நிலையில் அவர் ஒன்றுபட்ட ஜெர்மன் பேரரசு முடியை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொள்ளவில்லை. ஆயினும் அவர் ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டார். ஆனால் உருவாகப் போகும் ஜெர்மன் பேரரசில் ஆஸ்திரியாவும், பவேரியாவும் கலந்துகொள்ள மறுத்தன. ஹேனோவரும், சேக்சனியும் கொஞ்சக் காலம் பேச்சில் கலந்து கொண்டு பிறகு விலகின. முடிவில் பிரஷ்யாவின் தலைமையின் கீழ் வட ஜெர்மனியும் அதோடு சேர்ந்த 28 சிறு நாடுகள் மட்டுமே புதிதாக உருவாக்கப்பட்ட ஜெர்மன் கூட்டுப் பேரரசில் இயங்கின. ஆஸ்திரியா இதற்கு எதிராக மற்றொரு பேரரசைப் பிராங்பர்டில் நிறுவியது. இரு பேரரசிற்குமிடையே சண்டை மூண்டது. ஆஸ்திரியாவின் தலைமைப் பதவி அப்போது ஷுவார்சன்பெர்க் (Schwarzenberg) கின் கையில் இருந்தது.

ருஷிய உதவியும் ஆஸ்திரியாவிற்கு இருந்தது. ஆகையால் பிரஷ்யா ஆஸ்திரியாவிற்குப் பணிந்து அரசியல் திட்டத்தை ஆல்மட்ஸ் (Olmutz) என்றவிடத்தில் அடியோடு கைவிட்டது.

II

ஆயினும் பிரஷ்யாவின் பிற்கால வாழ்க்கைக்கோ ஜெர்மனியின் எதிர்காலத்திற்கோ ஆல்மட்ஸ் (Olmutz) உடன் படிக்கை முடிவு கட்டிவிடவில்லை. பிரஷ்யா தனது பெருமையை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமானால் புதுமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்பது இப்பொழுது வெட்ட வெளிச்சமாயிற்று.

1857ம்ஆம் ஆண்டு நான்காம் பிரடிரிக் மன்னர் மூளைக் கோளாறினால் தம் பதவியைக் கைவிட வேண்டியதாயிற்று. அவருடைய மகனார் வில்லியம் (Prince William) அவருக்குப் பதிலாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பிறகு 1861 ஆம் ஆண்டில் அவரே முதலாம் வில்லியம் மன்னர் (William I) என்று பட்டம் கட்டிக்கொண்டார். பொறுப்பாட்சி, மக்களாட்சி என்றவையெல்லாம் அவருக்குப் புறம்பானவை. மன்னர் தமக்குத் தோன்றியபடி ஆட்சி நடத்துவதே நல்லாட்சி என்ற கருத்துக் கொண்டவர் அவர். ''ஆண்டவனிடமிருந்தே அரசு முடி எனக்கு வந்தது'' என்று அவரே கூறினர். இதற்கு அவர் ஆட்சிக்காலம் முழுவதுமே எதிர்ப்பிருந்த போதிலும் இவர் தம் கொள்கையைக் கடைப்பிடிப்பதில் ஒருபொழுதும் தவறியதில்லை. கடைசியில் அவர் கொள்கையே வெற்றியும் கண்டது.

1815 ஆம் ஆண்டிலிருந்தே பிரஷ்யா ஜெர்மனி நாட்டின் அரசியலில் முதலிடம் பெறத் தொடங்கியது. அந்த ஆண்டில் ஜெர்மனியின் பல பகுதிகளில் வரியில்லாமல் வியாபாரப் பொருட்களைக் கொண்டுசெல்ல பிரஷ்யாவிற்கு வசதி ஏற்பட்டது. வெளிப்பகுதிகளிலிருந்து பிரஷ்யாவினுள் நுழையும் பொருள் களுக்கு வரி விதிக்கப்பட்டது. இதனால் பிரஷ்யாவின் வாணிகம் பெருகவும் மற்றப் பிரதேசங்களின் வாணிகம் குறையவும் தொடங்கியது. பிறகு இதைப் பின்பற்றித் தென் ஜெர்மன் இணைப்பு, நடு ஜெர்மன் இணைப்பு என்ற இரண்டு வேறு இணைப்புக்கள் ஏற்பட்டன, இவையும் இவ்வித வாணிக முறையையே சிறிதுகாலம் பின்பற்றிய பின்னர் மூன்றும் ஒன்றுக இணைந்தன (1854). இந்த இணைப்புக்கு நடுநாயகமாக விளங் கியது பிரஷ்ய நாடு. இவ்விதமாகவே பிரஷ்யா முதல் முதல் ஜெர்மனியின் அரசியலில் நுழையத் தொடங்கியது.

இப்போது முதலாம் வில்லியம் பிரஷ்யாவின் மன்னரான போது அதன் படைவலியைப் பெருக்க முயன்றார். மன்னரின் படைத்தலைவராக இருந்தவர் ரூன் (Roon) என்பவர். நாட்டில் மக்கள் எல்லோரும் மூன்று ஆண்டுக்காலம் படைப் பயிற்சி பெற வேண்டுமென்றும் அதற்குப் பின் நான்காண்டுக்காலம் நாட்டுப் படையோடு சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்றும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அதோடு புதுமாதிரி படைக்கலங்கள், பயிற்சிகள் யாவும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன.

முதலில் அரசருக்கும் மக்கள் சபைக்குமிடையே மனத் தாங்கல் ஏற்பட்டது. 1861ஆம் ஆண்டில் ''முற்போக்குக் கட்சி'' (Progressive Party) என்று பெயர் சூடிய கட்சி ஒன்று மக்களின் மிகுதியான வோட்டுக்கள் பெற்றது. அதன் கொள்கைகள் மூன்று: (1) மந்திரிகள் மக்கள் சபைக்குப் பொறுப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். (2) பாராளு மன்றத்தின் மேற்சபை மாற்றி அமைக்கப்பட்டு அதில் இன்னும் பொது மக்கள் உறுப்பினர்களாக வேண்டும். (3) கட்டாயப் படைச் சேவை நான்கு ஆண்டிலிருந்து இரண்டாண்டுகளாகக் குறைக்கப் படவேண்டும்; அரசர் இவைகளை ஏற்றுக் கொள்ளாத தால் படைச் செலவுக்காக அவர் கேட்ட பணத்தைக் கொடுக்கப் பாராளுமன்றம் மறுத்தது. மன்னர் மக்கள் சபைக்குக் கீழ்ப் படிய வேண்டும், அல்லது தம் பதவியைவிட்டு விலக வேண்டு மென்ற நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது நல்ல காலமாகத் திறமையும், துணிவும் வாய்ந்த ஒருவர் அரசருக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அவர்தாம் பிஸ்மார்க் (Bismarck). அவரை மன்னர் தலைமை மந்திரியாக அப்போது நியமித்தார் (1862). பாராளுமன்றம் அடக்கப்பட்டது. ஜெர்மன் வரலாற்றிலேயே ஒரு புது யுகம் தொடங்கியது.

III

வடஜெர்மனியின் நிலச்சுவான்தார் குலத்தில் தோன்றியவர் பிஸ்மார்க். அவருடைய முழுப்பெயர் பிரின்ஸ் வான் எடுவார்ட் லெயோபால்ட் பிஸ்மார்க். (Prince Von Edward Leopold Bismarck) என்பது. 1848 ஆம் ஆண்டில் ஐரோப்பாவெங்கும் புரட்சிப்புயல் வீசிக் கொண்டிருந்த சமயம் ஜெர்மனியில் ஏற்பட்ட புரட்சிக் கொள்கையை எதிர்த்துப் பிஸ்மார்க் முன்னுக்கு வந்தவர். அவருடைய முக்கியக் கொள்கைகள் மூன்று. (1) ஜெர்மானிய நாடுகள் அனைத்தும் பிற நாட்டாட்சி யினின்று விடுதலை பெற வேண்டும். (2) எல்லா நாடுகளிலும்

மக்கள் ஆட்சியை எதிர்த்துத் தனி மன்னர் ஆட்சியையே நிறுவ வேண்டும், (3) ஜெர்மனியின் சிறு நாடுகளெல்லாம் பிரஷ்யாவின் கீழ் ஒன்றுபடவேண்டும். ஜெர்மனியின் கீழ் பிரஷ்யா இயங்குவ தென்பது பிஸ்மார்க்கின் உள்ளத்திற்கு ஒவ்வாத காரியம். ''நாங்கள் பிரஷ்யர்கள். பிரஷ்யர்களாகவே நாங்கள் எப் பொழுதும் இருப்போம்'' என்பது அவர் கூற்று. பிரஷ்யாவின் பெருமையை ஜெர்மனியின் பெருமைக்குமேல் கொண்டு செல்ல வேண்டுமென்பது அவருடைய கொள்கை. இதற்காக அவர் மக்கள் சபையின் ஒத்துழைப்பைத் தேடவில்லை. போரின் மூலமாகவே அரசியல் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பது அவருடைய கொள்கை. ''யுத்தங்களை நடத்தும் கடவுளே நாம் எப்பொழுது சண்டை செய்யவேண்டு மென்பதைக் காட்டுவார்'' (Sooner or later the God who directs the battle will cast His iron dice) என்று பிஸ்மார்க் கூறினார்.

முதலில் போலந்து நாட்டினர் ருஷியாவிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். பிரஷ்ய மக்கள் சபை போலந்திற்கு உதவவேண்டுமென்று எண்ணியது. ஆனால் பிஸ்மார்க் தமது கொள்கைப்படி ருஷியாவோடு சேர்ந்து போலந்துக் குழப்பத்தை அடக்க உதவினார். ஆஸ்திரியா கொண்டுவந்த புது ஜெர்மானிய அரசியல் திட்டத்தை அவர் உதறித் தள்ளினார். மூன்றுவதாக ஜெர்மனியைச் சேர்ந்த ஸ்லஷ்விக் (Schleswig), ஹோல்ஸ்டெய்ன் (Holstein) பிரதேசங்கள் பிரஷ்யாவோடு சேர்க்கப்படவேண்டு மென்னும் பிஸ்மார்க்கின் திட்டம் ஐரோப்பாவையே வியப்படையச் செய்தது. இவற்றையெல்லாம் பிஸ்மார்க் பிரஷ்ய மக்கள் சபையை எதிர்த்தே செய்தார். இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் பாராளுமன்றத்தை எதிர்த்த முதலாம் சார்லஸ், பதினாறும் லூயி இவர்களின் ஞாபகம் பிஸ்மார்க்கின் மனத்தில் எழுந்தபோதிலும் அவர் ஊக்கத்துடன் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் இங்கிலாந்திலும் பிரான்சிலும் நடந்ததுபோல் நடவாமல் ஜெர்மனியில் பிஸ்மார்க்குக்கு வெற்றி கிட்டியது. ஜெர்மனியின் நிலைமை மற்ற இரு நாடுகளின் நிலைமையைவிட வேறாக விருந்ததால் தனி மன்னர் ஆட்சிக்கு அங்கு வெற்றி கிடைத்தது என்று சிலர் கூறக்கூடும். அது ஒரு விதத்தில் உண்மையே யெனினும் பிஸ்மார்க்கின் போர்முரசு எங்கும் வெற்றிமுரசாக விருந்ததே இதற்குக் காரணம் என்று நாம் கூற வேண்டும். சார்லஸின் தோல்விகளும், லூயியின் தோல்வி களுமே அவர்களுக்குச் சமாதி கட்டின என்ற உண்மையை நாம் ஒப்புக் கொண்டால் பி மார்க்கின் அரசியல் வெற்றி அவருடைய போர் வெற்றிகளிலிருந்தே பிறந்ததென்பது தெளிவாகும்.

IV

பிஸ்மார்க்கின் இந்தப் புகழ்பெற்ற வெற்றிகளைப் பற்றி இனிச் சிறிது கூறுவோம். முதலில் ஸ்லஷ்விக் - ஹோல்ஸ் டெய்னில் பெற்ற வெற்றியைக் கவனிப்போம். டென்மார்க் மன்னர் சிறிது காலமாக இந்த இரு ஜெர்மன் பிரதேசங்களின் மேல் ஆதிக்கம் செலுத்தி வந்தார். இப்போது அந்நாட்டை ஆண்டு வந்த மூன்றும் பிரடிரிக் (Frederick III) குழந்தை யில்லாமலிருந்தார். அதோடு அவர் முதியவராகவும் இருந்த படியால் அவருக்குப் பின் இந்த ஜெர்மன் பிரதேசங்கள் யாரைச் சேரும் என்ற வினா எழலாயிற்று. அதற்குக் காரணம் தாய் வழி மக்கள் இந்தப் பிரதேசங்களில் ஆட்சி செலுத்த முடியாது. தவிர டென்மார்க்கோடு இவை இணைந்திருக்கக் காரணமுமில்லை. இந்நிலையில் இவற்றை ஜெர்மனியோடு இணைப்பதா, அல்லது ஸ்லஷ்விக் பிரதேசத்தை டென்மார்க்கோடு சேர்த்துவிட்டு, ஹோல்ஸ்டெய்னை ஜெர்மனியோடு இணைப்பதா என்ற சிக்கல் எழுந்தது. பிஸ்மார்க் தமக்கே உரித்தான தன்னம்பிக்கையோடு இவை இரண்டையும் பிரஷ்யாவோடு இணைக்க வேண்டுமென்று கூறினார்.

1863 ஆம் ஆண்டு டென்மார்க் மன்னர் பிரடிரிக் உயிர் நீத்தார். உயிர் நீப்பதற்கு முன் ஸ்லஷ்விக் பிரதேசத்தை டென் மார்க்கோடு சேர்க்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். முன்பு பிராங்பர்ட்டில் கூடியிருந்த சபை ஜெர்மனியின் சார்பாக இதை ஏற்றுக்கொள்ள மறுத்தது. உடனே ஜெர்மானியப் படைகள் ஸ்லஷ்விக்-ஹோல்ஸ்டெய்ன் பிரதேசங்களைக் கைப்பற்ற வேண்டுமென்று ஆணை பிறந்தது. ஜெர்மன் படையும் ஹோல்ஸ் டெய்ன் பிரதேசத்தைக் கைப்பற்றியது. ஆஸ்திரியாவும் பிரஷ் யாவும் தங்கள் படைகளை ஜெர்மனிக்கெதிராக அங்கு அனுப்பின. டென்மார்க் அரசர் ஐரோப்பிய அரசாங்கங்களைத் தமக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வேண்டு கோள் பயனின்றிப் போகவே தாமே சண்டை செய்வதாக முடிவு செய்தார். ஆனால் அவருக்கு வெற்றி கிட்டாதென்பது முதலிலேயே தெரிந்தது. அவர் இந்த இரு பிரதேசங்களினின்றும் வெளியேற வேண்டியதாயிற்று. ஆயினும் அவை யாருக்குச் சொந்தமானவை யென்பது முடிவாகவில்லை. ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் அவற்றை அகுஸ்டன்பெர்க் பிரபுவுக்கு (Duke of Augustenberg)ச் சொந்தமாக்கிவிடுவ தென்று முடிவு செய்தன. ஆனால் பிரஷ்யா இதற்கும் ஒத்து வருவதாயில்லை. மன்னர் வில்லியம் அமைதியை நாடினார். ஆனால் பிஸ்மார்க் போரையே

நாடினர். அதன் வழிதான் பிரஷ்யாவின் பெருமை உயரும்; உயர வேண்டுமென்று அவர் திண்ணமாக நம்பினர். யுத்த வழியை ஒரு நாட்டின் பெருமைக்கு முதல் முதல் திண்ணமாக வகுத்தவர் பிஸ்மார்க். இவ்விதமாய் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய இவர் 20 ஆம் நூற்றாண்டு வரலாற்றிற்கு வழி வகுத்தார். ஆகவேதான் பிஸ்மார்க் இக்கால ஐரோப்பிய வரலாற்றில் ஒரு சிறப்பிடம் பெறுகிறார்.

ஸ்லஷ்விக்-ஹோல்ஸ்டெய்ன் என்ற இரு சிறு பிரதேசங்களைப் பற்றிய சண்டை ஒரு பெரும்போராக ஆஸ்திரியாவிற்கும் பிரஷ்யாவிற்குமிடையே நிகழ்ந்தது. இதற்கு ஆஸ்திரிய—பிரஷ்யப் போர் என்று பெயர். முதலில் பிஸ்மார்க் இத்தாலியர்களுடைய நட்பை உறுதிப்படுத்தினர். இதனால் ஆஸ்திரியப் படையின் ஒரு பகுதி ஆல்ப்ஸ் மலைக்குத் தெற்கேயே நின்றுவிட்டது. இது பிஸ்மார்க்கின் முதல் வெற்றி. இரண்டாவதாகப் புதுப் போர் முறைகளை இந்தச் சண்டையில் பிஸ்மார்க் கைக்கொண்டார். தந்தி, தபால், ரயில், சிறந்த துப்பாக்கிப் பிரயோகம் என்ற இவை ஐரோப்பியப் போர்க்களத்தில் முதல் முதல் பயன்படுத்தப்பட்டன. பிஸ்மார்க்கின் படைத் தலைவர் மோல்ட்கே (Moltke) பெர்லினிலிருந்துகொண்டே தந்தி மூலம் சண்டையை நடத்தினர்.

1866 ஆம் ஆண்டுப் போர் தன் கடைசிக் கட்டத்தை எய்தியது. லங்கென்சால்சா (Langensalza) என்னுமிடத்தில் ஜெர்மானியப் படை கூட்டணிப் படையோடு செய்த முயற்சியில் தோல்வி அடைந்தது. அதே ஆண்டின் இடையில் பொஹிமியாவிலுள்ள கோனிக்கிராட்ஸ் (Koniggratz) என்னுமிடத்தில் கூட்டணிப் படை தோல்வியுற்றது. விரைவில் பிரஷ்ய மன்னரின் புதல்வன் பிரடிரிக்கே போர்க்களத்தை வந்தடைந்தார். அதோடு சண்டை பிரஷ்யாவின் பெரு வெற்றியாக முடிந்தது.

உலக வரலாற்றிலேயே சிறு சண்டை பெரு விளைவுகளை விளைத்தது என்று நாம் இந்தப் போரைப் பற்றிச் சொல்லக் கூடும். பிஸ்மார்க்கை ஐரோப்பிய அரசியல் மேடையில் இந்தச் சண்டைதான் முன்னணிக்குக் கொண்டுவந்தது. பலகாலம் ஜெர்மானிய விவகாரங்களில் கலந்து தலைமையுற்று வந்த ஆஸ்திரியாவின் ஊழ் வேறுவழியாக இப்போது திரும்பியது. ஜெர்மனியின் பெருமை முதல் முதல் காலெடுத்து நடக்க இப்போது தொடங்கியது. இந்நிகழ்ச்சி பிரஷ்யாவின் வாயிலாக நிகழ்ந்ததெனினும் அதை ஜெர்மனியின் முதல் தோற்றமென்றே நாம் கொள்ள வேண்டும். பிற்கால ஐரோப்பிய வரலாற்றில் இந்நாடு செய்து

காட்டிய அரும்பெருஞ் சாதனைகளை நாம் எண்ணிப் பார்த்தால் இந்தச் சிறு ஆஸ்திரிய—பிரஷ்யச் சண்டையின் பெருமை தெற்றென விளங்கும்.

முதலில் பிரஷ்யா பெரிய நாடாயிற்று. இதுகாறும் அதனோடு போட்டியிட்டு வந்த ஸ்லஷ்விக், ஹோல்ஸ்டெய்ன், ஹேனோவர், ஹெஸ்கேசல் பிரதேசங்கள் இப்போது அதனோடு இணைக்கப்பட்டு ஏறக்குறைய ஜெர்மனியின் வடபாகம் முழுவதுமே அதன் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. தென் ஜெர்மன் பகுதி முதலில் பிஸ்மார்க்குக்கு முரணுகவே இருந்தது. எந்தச் சமயமும் தென் ஜெர்மன் நாடுகள் அவருக்கு எதிராகப் பிரஞ்சுக்காரரோடு கூடக் கூடுமென்ற நிலை நிலவியது. இந்த இக்கட்டான நிலைமையை வென்று ஜெர்மனியின் தென்பகுதி நாடுகளாகிய பவேரியா (Bavaria), வூர்டெம்பர்க் (Wurtemberg), பேடன் (Baden) என்றவை தம்மோடு நேச நாடுகளாக இயங்கச் செய்தது பிஸ்மார்க்கின் பெரிய அரசியல் தந்திர வெற்றிகளில் ஒன்று. அவற்றைப் பிரஷ்யாவோடு சேரும்படி வற்புறுத்தியிருக்கலாம். ஆனல் அவைகளின் வழியே விட்டுத் தம்மோடு நேசமாய் இருக்கச் செய்ததில் அவர் இன்னும் மிகுதியான வெற்றி கண்டாரென்றே சொல்ல வேண்டும். வெளிப்படையாக அவைகளோடு நட்புப் பூணுமல் இரகசிய ஒப்பந்தங்களின் மூலம் அவற்றின் நட்பைக் கொண்டது பிஸ்மார்க்கின் அரசியல் தந்திரத்திற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு.

இந்த அரசியல் தந்திரியின் ஆட்சியிலே பிரஷ்யாவின் மூலம் ஜெர்மன் நாடு புத்துயிர் பெற்றதில் வியப்பில்லை. அந்நாட்டின் பல சிறு நாடுகளை அவற்றின் முகம் கோணுதவாறு ஒன்றுகூடச் செய்து ஒன்றுபட்ட ஒரு ஜெர்மன் நாட்டைச் செயல் முறையில் இயக்கினர் பிஸ்மார்க். முதலில் பிரஷ்யாவுடன் சேர்ந்திருந்த சிறு நாடுகளை அவற்றின் உரிமைகள் குன்றுவண்ணம் வட ஜெர்மனிக் கூட்டிணைப்பு (North German Confederation) என்ற பெயரில் அவற்றை ஒன்று கூட்டினர். பிறகு தென் ஜெர்மனி நாடுகளையும் இதில் பங்குகொள்ளச் செய்தார். இவ்விதமாகச் சண்டையேதுமில்லாமலே ஒரு பெரிய ஜெர்மன் கூட்டிணைப்பு உருவாயிற்று. பிறகு அதற்கு ஓர் அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கினர். இதுவரை பெரிய அரசியல் அமைப்புத் திட்டத்திற்கு எடுத்துக்காட்டாக விருந்த பிரஷ்யத் திட்டத்தை ஒதுக்கி ஜெர்மனியின் பண்புக்கும் தமது குறிக்கோளுக்கும் ஏற்ற வண்ணம் ஒரு புதிய அரசியல் திட்டத்தைத் தாமே வகுத்துக் கொண்டார். அதைப் பின்பற்றி ஜெர்மனி புத்துயிர் பெற்ற ஒரு பெரு நாடாக விளங்கிற்று.

இனி பிஸ்மார்க்கின் அரசியல் அமைப்புத் திட்டத்தைப் பற்றிச் சிறிது கூறவேண்டும். கூட்டிணைப்பில் சேர்ந்த எல்லா நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் அனுப்பப்பட்டார்கள். இவர்கள் கூட்டிணைப்புச் சபை (Federal Council) யில் உறுப்பினராஞர்கள். இக்காலத்தில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாடு செல்லும் தூதுவர் (Ambassador) போன்றவர்கள் இந்தப் பிரதிநிதிகள். சட்டங்களை முன்மொழிவோர் இவர்கள். அவைகளை ஏற்றுக் கொள்ளவோ அல்லது தள்ளிவிடவோ ரெய்ஷ்டேக் (Reichstag) என்ற மக்கள் சபைக்கு அதிகாரம் இருந்தது. ஆனால் அன்றுடம் எழும் அரசியல் சிக்கல்களுக்கு முடிவு காண்பது கூட்டிணைப்புச் சபையின் வேலையாகும். அரசாங்கத்திற்குத் தேவையான பண உதவி தரும் அதிகாரம் ரெய்ஷ்டேக்கிடம் விடப்பட்டது. ஆனால் ஆங்கிலேயப் பாராளுமன்றம்போல் அரசியல் அதிகாரம் அதனிடம் விடப்படவில்லை. அரசரோ மந்திரிகளோ அதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருக்கவில்லை. இவ்விதமாக இரண்டு சபைகளும் ஒன்றுக்கொன்று மீறுமலும், கீழ்ப்படாமலும் பணியாற்றச் செய்தார் பிஸ்மார்க். குறுகிய தேர்தல் முறைகளைக் கைவிட்டு வயது வந்த எல்லா மக்களும் ரெய்ஷ்டேக் சபைக்கு வாக்களிக்கப் பிஸ்மார்க் உரிமை அளித்தார். உயர்குல மக்கள் நடுத்தர மக்கள் என்ற இவர்களைவிடப் பொதுமக்களே ஆட்சிக்கு எப்போதும் எந்நாட்டிலும் உறுதுணை செய்வார்கள். இதைப் பிஸ்மார்க் நன்கு கண்டிருந்தபடியாலேயே பரந்த தேர்தல் முறைகளைக் கைப்பற்றினர். இதனால் மற்றொரு நன்மையுமேற்பட்டது. பொதுவில் பிஸ்மார்க் தனி அரசுக் கொள்கையை மேற்கொண்டவர். அதற்குதவியாக எவ்வளவு மிகுதியாக மக்கள் வாக்களிக்கின்றார்களோ அவ்வளவுக்கு அரசு உறுதி கொள்ளும். பாமர மக்கள் வழக்கமாக நன்மை செய்யும் அரசை விரும்புபவர்கள். அதன் உருவம் எத்தகையதென்பதை அவர்கள் அலசிப் பார்ப்பதில்லை. தவிர இதனால் பிஸ்மார்க் தேடிய யதேச்சாதிகாரம் வெளித் தோற்றத்திற்கு மக்கள் அரசாகவே காட்சியளித்தது.

அரசின் தலைவர் சான்சலர் (Chancellor) என்ற பெயர் கொண்டார். இவருக்குத் துணையாக மந்திரிகள் இருந்தார்கள். மந்திரிகள் சான்சலரின் கீழே பணி புரிந்தார்கள். அவர்களின் கவனக் குறைவையும் குற்றத்தையும் கண்டிக்கச் சான்சலருக்கு உரிமை யுண்டு. சான்சலரைக் கண்டிக்க அரசருக்கு உரிமை யுண்டு. மந்திரிகளின் செயலுக்கு அரசரிடம் சான்சலரே பொறுப்பாளி.

பிரஷ்யா முன்னேறி வந்ததுபோல் ஆஸ்திரியா பின்னேக்கிச் சென்றது. அதனடியிலிருந்த சிறு நாடுகள், சுயாட்சி வேண்டு மென்று கிளர்ச்சி செய்தன. ஆனல் ஆஸ்திரியா, ஹங்கேரியின் கிளர்ச்சியை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்ற நாடுகளின் கிளர்ச்சியை அடக்கியது. அதற்குப் பிறகு ஆஸ்திரிய நாடு, ஆஸ்திரியா—ஹங்கேரி என்ற பெயர் பெற்று விளங்கியது.

V

பிரெஞ்சு மன்னர் மூன்றும் நெப்போலியனுடைய அரசாட்சியைப் பற்றி முன் இயலில் கூறினேம். அந்த ஆட்சியின் முடிவு கடைசியில் பிஸ்மார்க்கின் வழியாகவே நிகழ்ந்தது. மெக்சிக்கோத் தோல்விக்குப் பின்னும் பிரெஞ்சு மக்கள் நெப்போலியனுடைய ஆட்சிக்கு ஆதரவு தந்தார்கள் என்பதை முன்னர்க் கூறினேம். சில வரலாற்ருசிரியர்கள் கூறுவதுபோல் அதற்குப் பிறகாவது அவர் அமைதியைப் பின்பற்றி யிருந்தால் பிரஞ்சுப் பேரரசு இன்னும் கொஞ்ச காலம் நீடித்திருக்கக்கூடும். ஆனல் அவர் சண்டையை எதிர் நோக்கினர். அது முதலாம் நெப்போலியன் காட்டிய வழி. போர்க்கள வெற்றிகளைக் கொண்டே யதேச்சாதிகாரத்தை நிறுவக்கூடும் என்பது அவர் காட்டிய வழி. அதற்குப் பின் பல மாறுதல்களை அடைந்திருந்தும் மூன்றும் நெப்போலியன் அதையே பின்பற்றினர். அப்படியே அந்த வழியைப் பின்பற்றியபோதிலும் அவர் முழுமனதோடு அதைப் பின்பற்றியதாகத் தெரியவில்லை. பேராசிரியர் கிராண்ட் கூறுவதுபோல், "Probably he did not wish for a war, but he did not energetically wish to avoid one." பிஸ்மார்க்கின் பிரஷ்யாவோ சண்டையை எதிர்நோக்கியிருந்தது. ஐரோப்பாவில் வளரும் ஜெர்மனிக்கு எதிர்ப்பாக ஒரு நாடு இருக்கக்கூடு மென்றல் அது தான் பிரான்ஸ் நாடு. இந்த நிலையில் அதையும் தோற்கடிக்கக் கூடுமானல் அதுவே ஜெர்மனியின் பெருமைக்கு உரமளிப்பதாகும் என்று பிஸ்மார்க் திண்ணமாக நம்பினர். அதற்காக அவருடைய படைகளைத் திருத்தி அமைத்துப் போருக்குத் தகுதியாக வைத்திருந்தார். பிரான்ஸிலோ தளர்ச்சியுற்ற படைகள் சண்டை வருமென்ற உறுதியில்லாமல் வாளாவிருந்தன.

ஆனல் பிரான்ஸுக்கும் பிரஷ்யாவுக்குமிடையே சண்டை மூண்டது (1870). சண்டையின் காரணமோ மிக வேடிக்கையானது. ஸ்பெயினில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக அந்நாட்டின் அரசியார் இசபெல்லா (Isabella) நாட்டை விட்டு வெளியேறிப் பிரான்ஸ் நாட்டை அடைந்தார். அப்பொழுது

ஸ்பெயின் நாட்டை ஆட்சி செய்வதற்கு ஒரு புதிய அரசர் தேவையானார். ஹோஅன்சலெர்ன் குடும்பத்தைச் சேர்ந்த லெயோபால்ட் (Leopold Hohenzollern) அதற்குத் தகுதியாக இருந்தார். அவர் பிரஷ்ய மன்னருக்குச் சொந்தக்காரர். இதை நெப்போலியன் அறிந்து வெறுத்தார். பிரஷ்ய மன்னரும் அவரை ஸ்பெயின் அரசுக்கு உரிமை பாராட்டாமலிருக்கும்படி செய்வதாக வாக்களித்தார். ஆனால் நெப்போலியன் அதோடு விடவில்லை. இனி எப்பொழுது லெயோபால்ட் உரிமை பாராட்டினாலும், அவரை எதிர்ப்பதாக வில்லியம் வாக்களிக்க வேண்டுமென்று தம் தூதர் மூலம் நெப்போலியன் அவரைக் கேட்டுக்கொண்டார். பிரஞ்சுத் தூதர் பிரஷ்ய மன்னரை எம்ஸ் என்ற இடத்தில் சந்தித்துப் பேசினார். இம்மாதிரியான ஒரு வாக்குறுதியைத் தாம் தர முடியாதென்று பிரஷ்ய மன்னர் தெரிவித்து விட்டார். இதைப் பற்றிய விவரங்களையெல்லாம் தந்தி மூலம் வில்லியம் பிஸ்மார்க்குக்குத் தெரிவித்தார்.

சண்டை மூள்வதற்கு அண்மைக் காரணமாக இருந்தது இந்த எம்ஸ் தந்தி. இந்தத் தந்தி கிடைத்தவுடன் பிஸ்மார்க்கின் மனம் ஒரு சில விநாடிகள் அமைதி இழந்தது. ஏனென்றால் தந்தியின் விவரப்படி சண்டை ஏற்படுவதற்கு இடமில்லாமல் போகுமோ என்று அவர் துணுக்குற்றார். ஆயினும் விரைவில் மனத்தைச் சரிப்படுத்திக்கொண்டு அந்தத் தந்தியைப் பத்திரிகைகளில் பிரசுரித்தால், பிரான்ஸின் மனம் புண்பட்டுத் தானே சண்டை துவங்குமென்று பிஸ்மார்க் எண்ணினார். நினைத்த படியே தந்தி பிரசுரிக்கப்பட்டதும் பிரான்ஸ் போர் தொடுத்தது. பிற்காலத்தில் அவரே ''காலிக் குலத்தைச் சேர்ந்த பிரஞ்சுக் காரருக்கு எம்ஸ் தந்தி மிரண்ட காளைக்குச் செந்துணியைக் காட்டுவது போலாயிற்று (Red rag to the gallic bull)'' என்று கூறினார். ஜெர்மன் நாட்டினரோ தங்கள் மன்னரைப் பிரஞ்சுத் தூதர் இகழ்ந்துவிட்டார் என்று கருதி அவர்களும் போருக்குத் தயாராயினர்.

இவ்விதமாக 1870ஆம் ஆண்டு புகழ் பெற்ற பிரஞ்சு-பிரஷ்யப் போர் (Franco-Prussian War) ஆரம்பித்தது. முன் கூறியதுபோல் பிரஞ்சுக்காரர்கள் போருக்குத் தயாராகவில்லை. ஆயினும் எம்ஸ் தந்தி அவர்களைக் கொதித்தெழச் செய்தது. வெற்றியைப் பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை. வெற்றி தங்களுடையதுதான் என்று பலர் எண்ணினார்கள். ஆனால் உண்மையில் ஜெர்மானியப் படைகள் எண்ணிக்கையிலும் ஆற்றலிலும் பிரஞ்சுப் படைகளுக்கு மிக உயர்வாக இருந்தன. மோல்ட்கே, ரூன் போன்ற சிறந்த படைத் தலைவர்கள் ஜெர்மன்

படைகளுக்குத் தலைமை வகித்தார்கள். எல்லாவற்றிற்கும் முடி வைத்ததுபோல் பிஸ்மார்க் திகழ்ந்தார். பிரான்சிலோ ஒற்றுமையில்லை; சண்டையைப் பற்றிய எவ்விதத் திட்டமும் கிடையாது. மேக்மோஹன் என்ற ஒரே படைத் தலைவர் மட்டும் என்ன செய்யக்கூடும்? கடைசியில் நெப்போலிய மன்னரே தம் மனைவியாரைப் பாரிஸில் அரசாட்சியைக் கவனித்துக் கொள்ளும் படி விட்டுவிட்டுச் சண்டையில் இறங்கினர்.

5 இலட்சம் ஜெர்மன் போர் வீரர்கள், சண்டை தொடங்கி யதுமே பிரான்ஸின் எல்லைக்குள் மூன்று பகுதியாக வந்து இறங்கினர்கள். சண்டையில் அவர்கள் காட்டிய ஆர்வத்திலும் துரிதமாகச் செயலாற்றிய முறையிலும் உலகம் அதுவரை கண்டிராத போராக அது ஆரம்பித்தது. விரைவில் மேக்மோஹன், மெட்ஸ் என்ற இடத்தில் பெருந்தோல்வியுற்றார். அப்பொழுதுதான் மன்னரும், மேக்மோஹனும், ஜெர்மானியப் படையின் உயர்வையும், பிரஞ்சுப் படையின் தாழ்வையும் கண்டுணர்ந்தார்கள். படையைத் திரும்பவும் பிரான்ஸிற்கே நடத்திச் சென்று புத்துயிர் தந்து மறுபடியும் போர்க்களத்திற்குச் செல்லவேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். அந்தத் தகவலைப் பாரிஸிலிருந்த அரசியாருக்குத் தெரிவிக்க, அந்த அம்மையார் வேறு விதமாக எண்ணினர்கள். படையைத் திருப்பிக் கொண்டுவந்தால் பிரான்ஸிலுள்ள எஞ்சிய படையும் பயனற்றதாகி விடுமென்று அவர்கள் கருதி எஞ்சிய படையையும் போர்க்களத்திற்கே அனுப்பிவைத்தார்கள். செடான் (Sedan) என்ற இடத்தில் பிரான்ஸின் புதுப்படை ஜெர்மானியரைச் சந்தித்தது. 17,000 பிரஞ்சு வீரர்கள் மடிந்தார்கள். மீதியுள்ள 82,000 போர் வீரரோடு நெப்போலியன் அடிபணிந்தார்.

அப்போது 1870 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள், நெப்போலியனுடைய ஆட்சி வீழ்ந்தது. உடனே பிரஞ்சுக் குடியரசு ஆட்சி நிறுவப்பட்டது. ஜூல்ஸ் பாவ்ரு (Jules Favre), கம்பெட்டா (Gambetta) என்ற இருவரும் முறையே வெளிநாட்டு விவகாரங்களையும் உள்நாட்டு விவகாரங்களையும் கவனிக்கப் பொறுப்பேற்றுக்கொண்டு பிரான்ஸில் ஆட்சியைத் தொடங்கி நடத்தத் தீர்மானித்தனர். அவர்கள் சண்டையையும் தொடங்கி நடத்தினர். பிரஷ்யர்கள் கோரியபடி மெட்ஸ் (Metz), ஸ்ட்ராஸ்பர்க் (Strasburg) பட்டணங்களைப் பிரஞ்சுக்காரர் ஜெர்மானியருக்கு விட்டுக் கொடுத்திருந்தால் சண்டை முடி வடைந்திருக்கும். ஆனால் அவர்கள் அப்படி விட்டுக் கொடுப்ப தாயில்லை. ஆகையால் சண்டை முன்னிலும் தீவிரமாக நடை பெற்றது. பாரிஸ் பட்டணம் ஜெர்மானியரால் நீண்ட காலம்

முற்றுகையிடப்பட்டது. பாரிஸ் பட்டணம் எண்ணற்ற இன்னல்களுக்கிடையே வீரம் குன்றுமல் இருந்தும், ஐரோப்பாவிலிருந்து எவ்விதத் துணையும் வராததால் நிலை குலைய வேண்டியதாயிற்று. 1871 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 28ஆம் நாள் பாரிஸ் சரணடைந்தது.

பிராங்பர்ட் என்னும் இடத்தில் நடந்த உடன்படிக்கைப்படி ஸ்டராஸ்பர்க், மெட்ஸ், ஆல்சேஸ் (Alsace), லொரேன் (Lorraine) பகுதிகள் ஜெர்மானியருக்குச் சொந்தமாயின. நஷ்ட ஈடாகப் பிரான்ஸ் மிகுந்த பணம் ஜெர்மனிக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று. ஜெர்மன் மன்னர் ஜெர்மன் பேரரசரானார். பதினான்காம் லூயி கட்டிய வேர்செய் மாளிகையில் பிஸ்மார்க்கும், மோல்டகியும் இரு பக்கமும் நிற்க ஜெர்மன் பேரரசர் அரியணை யேறினார். பிரான்ஸின் முடிவு என்னவாகும் என்பது தெரியவில்லை. மாபெரும் மக்கள் சபையொன்று வேர்செய் பட்டணத்தில் கூட்டப்பட்டது. முடியாட்சியை நிறுவுவதா அல்லது மறுபடியும் குடியரசு ஆட்சிக்கே செல்வதா என்பதைப் பற்றி முதலில் தயக்கமேற்பட்டது. அதற்குள் பாரிஸ் பட்டணம் தனியாகப் பிரிந்து தனக்குத் தானே ஒரு ஆட்சியை ஏற்படுத்திக் கொள்வதாக ஆர்ப்பரித்தது. இம் முயற்சி கொடுமையாக நசுக்கப் பட்டது. இங்கிலாந்து சென்றொழிந்த மூன்றாம் நெப்போலியன் 1873ஆம் ஆண்டு உயிர் நீத்தார். அவருடைய தலைமகனாரும் 1879 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்காகத் தென் ஆப்பிரிக்காவில் போயரோடு செய்த போரில் இறந்து விட்டார்.

14. இத்தாலியில் தேசியம்

(கவூர் (Cavour)—இத்தாலிய ஆஸ்திரியப் போர்—கரிபால்டி (Garibaldi) --பிஸ்மார்க்கோடு ஒப்பந்தம்)

I

முதலாம் நெப்போலியன் இறந்தபோதிலும் அவருடைய வரலாற்றின் ஒரு பகுதியைப்பற்றி இன்னும் நாம் கூறவில்லை. இத்தாலியில் எழுந்த தேசிய உணர்ச்சிக்கு அவர் உதவியாக இருந்ததைப் பற்றி இங்கு ஒரு சிறிது கூறவேண்டும்.


ஐரோப்பாவெங்கும் 1848 ஆம் ஆண்டு ஒரு தேசியப் புயல் வீசியது என்பதை நாம் முன்னர்க் குறிப்பிட்டோம். ஆனால் அந்தப் புரட்சிப் புயல் இத்தாலியில் பயனளிக்கவில்லை. அதன் பயனாக ஆஸ்திரியாவின் ஆதிக்கம் அங்கு இன்னும் அதிகமாக வேரூன்றியது. பியட்மன்ட் (Piedmont) பிரதேசம் ஒன்றைத் தவிர மற்றெல்லாப் பிரதேசங்களிலும் அந்நிய ஆதிக்கம் தலைவிரித்தாடியது. பியட்மன்ட் பிரதேசம் மட்டும் சார்டீனிய மன்னன் விக்டர் எம்மானுவேலின் (Victor Emmanuel) தலைமையின்கீழ் ஒரு விதத்தில் தன்னுட்சி பெற்று விளங்கியது. எம்மானுவேல் மன்னரும் தைரியமுள்ளவர். சண்டையில் வெற்றியோடு திரும்பக் கூடியவர். பொதுவில் கண்ணிய மிக்கவர். அவருடைய நல்ல காலத்திற்கு அவருக்குத் திறமை யுள்ள மந்திரியாகக் கவூர் (Cavour) என்பவர் வாய்த்தார். வீரமும் ஆட்சித் திறனும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற இவரை ஐரோப்பிய உலகம் அக்காலத்தில் ஒருங்கே போற்றியது. பிஸ்மார்க் வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளிய ஆங்கிலேய ஆட்சி முறையைக் கூர்ந்து படித்தவர் கவூர். ஆயினும் சிறந்த அரசியல் மேதையானதால் அதை அப்படியே இத்தாலியின் அரசியல் திட்டத்தில் புகுத்தாமல் இத்தாலியின் நிலைமைக்கும் தேவைக்குமேற்ப தம்முடைய ஆங்கிலேய ஆட்சி முறை அறிவைப் பயன்படுத்திக் கொண்டார். அவருடைய பெருமை உண்மையிலேயே அவருடைய நாட்டுப் பற்றிலேதான் திகழ்ந்தது. இத்தாலி நாட்டை உள்ளன்போடு விரும்பியவர்களில் இவரனைய பெரியார் இவருக்குமுன் இருந்ததில்லை.

சார்டீனிய மன்னரின் மந்திரி பதவியை வைத்துக்கொண்டு இத்தாலியை ஒன்றுபட்ட தேசிய நாடாக உருவாக்க வேண்டுமென்பதே கவூரின் தலையாய நோக்கம். இத்தாலியரின் நாட்டுப் பற்றை அவர் அறிவார். அதோடு பியட்மன்ட் நாட்டின் படை வலிமையையும் அவர் அறிவார். ஆயினும் பிரான்ஸின் உதவி தமக்குக் கிடைக்குமானால் தம் எண்ணம் கைகூடுமென்பதை அவர் கண்டார். இத்தாலிய தேசிய ஒற்றுமையில் நெப்போலியனுக்கு ஒரு விதத்தில் கருத்து வேற்றுமையில்லை. ஆனால் அதைவிடத் தமது பெருமையைப் பிரஞ்சு மக்களுக்கும் ஐரோப்பா முழுவதிற்குமே காட்டிக் கொள்வதில் அவருக்கு மட்டற்ற காதல். ஆகையால் கவூரின் திட்டத்திற்கு அவர் இசைந்ததில் வியப்பில்லை.

சுருக்கமாகக் கவூரின் திட்டப்படி ஆஸ்திரிய மன்னரின் ஆதிக்கத்தை இத்தாலியினின்று ஒழிக்க நெப்போலியன் உதவ வேண்டும். இதற்காக ஆஸ்திரியாவோடு சண்டையைக் கிளப்புவது கவூரின் பொறுப்பு. சண்டை துவங்கியவுடன் பிரஞ்சு மன்னர் 200,000 போர் வீரருடன் இத்தாலியப் படையோடு கலந்து கொள்ளவேண்டும். இவ்விதமாக லம்பர்டி (Lombardy), வெனிஷியா (Venetia), பார்மா (Parma), மோடேனு (Modena), டஸ்கனி (Tuscany), ரோமாக்னு (Romagna) போன்ற வடக்கு, மத்திய இத்தாலியப் பிரதேசங்களை ஒன்றுக இணைக்க நெப்போலியன் உதவவேண்டும். இதற்குப் பரிசாக ஆல்ப்ஸ் மலைப் பகுதியிலுள்ள சேவாய்ப் (Savoy) பிரதேசமும், மத்திய தரைக் கடற்கரையிலுள்ள நைஸ் (Nice) பிரதேசமும் நெப்போலியனுக்குக் கொடுக்கப்பட வேண்டும், இதுவே கவூரின் திட்டம். 1858ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் புளோம்பியர்ஸ் (Plombieres) என்ற நகரில் கவூர் நெப்போலியனைக் கண்டு இந்தத் திட்டத்தை உருவாக்கினர்.

II

''நான் வெடி மருந்திற்கு நெருப்பு வைப்பேன். இத்தாலியில் இரத்தம் ஓடும்போது நீங்கள் உங்கள் படையோடு அங்கு நுழைய வேண்டும்'' (I will fire the powder and when Italy runs with blood you will have to march) என்பது புளோம்பியர்ஸ் மறைவான உடன்படிக்கை. ஆகையால் உடன்படிக்கை முடிந்தவுடன் கவூர் சண்டையைக் கிளப்புவதில் ஈடுபட்டார். முதலில் ஆஸ்திரிய மன்னரை மதிக்காமல் நடந்து கொண்டார். அதே சமயம் பியட்மன்டில் சண்டைக்கு


வெனிஷியா
ஆஸ்திரியா
ரோமாக்தி
டஸ்கனி
ரோம்
நேப்பிள்ஸ்
டிரேனியன் கடல்
1861 – 1870-இல்
இத்தாலி

வேண்டிய ஏற்பாடுகள் திறமையாக நடந்துவந்தன. பிறகு இத்தாலி எங்கும் ஏற்பாடுகள் நடக்கத் தொடங்கின. ஆஸ்திரிய மன்னர் இதை வெறுத்தார். பிறகு இதைத் தடுத்தார். சண்டை மூண்டது. இத்தாலியில் பிரங்கி வெடித்தது. அப்பொழுது பியட்மன்டில் மக்களவை கூடியிருந்தது. கவூர் களிப்படைந்தார். ''இதுதான் பியட்மன்டின் இறுதி மக்களவை. இனிக் கூடுவது பெருமைமிக்க இத்தாலியப் பாராளு மன்றம்'' என்று அவர் கூறினராம்.

அப்பொழுது 1859 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் உடன் பாட்டின்படி நெப்போலிய மன்னர் தமது மாக்மோகன் படைத் தலைவருடன் பியட்மன்ட் படையோடு கலந்தார். மாஜென்டா (Magenta), சல்பெரினே (Solferina) என்றஇடங்களில் கூட்டணிப் படை அரும்பாடு பட்டு ஆஸ்திரியப் படையைத் தோற்கடித்தது. 12,000 பிரஞ்சுப் போர்வீரர்கள் உயிர் நீத்தார்கள். திடீரென்று நெப்போலியன் மனம் மாறியது. பொதுவில் பிரெஞ்சு வீரர்கள் பெருவாரியாக இறப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. பிரஷ்யாவில் படைபலம் பெருகி வந்தது. ஒரு வேளை அதனோடு போர் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படக்கூடும். கடைசியாக இத்தாலியரும் தமது பேச்சுக்கு முற்றும் கட்டுப் படுவதாகவுமில்லை. ஆகையால் கவூர் திகைப்படைய ஆஸ்திரிய மன்னரோடு நெப்போலியன் சமாதானம் செய்து கொண்டார். அதன்படி லம்பர்டி, பார்மாப் பிரதேசங்கள் மட்டும் பியட்மன்டோடு சேர வேண்டுமென்றும், வெனிஷியா, ஆஸ்திரிய ஆதிக்கத்தின் கீழேயே இயங்க வேண்டு மென்றும், கூடுமானால் இத்தாலியக் கூட்டிணைப்பு ஒன்றை நிறுவி அதைப் போப்பின் தலைமையின்கீழ் இயங்கச் செய்யவேண்டு மென்றும் முடிவு கட்டப்பட்டது.

ஒன்றுகூடிய பிரஞ்சு ஆஸ்திரிய மன்னர்களின் முடிவுக்கு சார்டீனிய மன்னர் இணங்காமலிருக்க முடியவில்லை. கவூர் மனம் நொந்து பதவியினின்றும் விலகினார். ஆனால் இத்தாலிய ஒற்றுமை இயக்கம் இதனால் குலைந்து விடவில்லை. இத்தாலியின் மத்தியப் பிரதேசங்கள் ஒன்றுகூடித் தாமாகவே தங்கள் மன்னர்களை நாட்டை விட்டு ஓடச் செய்தன. அவை தம் சொந்த முயற்சியால் 25,000 போர்வீரர்களுக்குக் குறையாத ஒரு பெரும் படையை நிறுவிச் சார்டீனிய மன்னருக்கு உதவியாக நிற்பதாக வாக்களித்தன. எம்மானுவேல் மன்னர் உடனே கவூரைப் பதவி யேற்கும்படி அழைத்து அவரோடு ஆலோசித்தார். பிரெஞ்சு மன்னர் மறுபடியும் உதவிக்கு வருவதாயிருந்தால், இந்த மத்திய இத்தாலிய இயக்கம், தம் எண்ணத்தைக் கைகூடச் செய்யுமென்று உணர்ந்த கவூர், நெப்போலியனோடு பேச்சுத்

தொடங்கினர். புளோம்பியர்ஸ் பேச்சுப்படி, நெப்போலியன் நடந்துகொள்ளாவிட்டாலும், சவூர், சேவாய், நைஸ் பிரதேசங்களை அவருக்கு அளிப்பதாகவும், மத்திய இத்தாலியப் பிரதேசங்களை பியட்மன்டோடு இணைப்பதற்குமுன் அங்கு வதிந்த மக்களின் உள்ளக் கிடக்கையை வாக்கெடுப்பின் மூலம் தெரிந்த பின்னரே அவற்றை அப்படி இணைப்பதென்றும், அவர் வாக்களித்தார். பின் நிகழ்ந்த வாக்கெடுப்பில் இணைப்பதற்கு ஆதரவாக 3,85,000 வாக்குக்களும், மாறுக 15,000 வாக்குக்களும் கிடைத்தன. இவ்விதமாகச் சண்டையில்லாமலே இத்தாலியின் பெரும்பகுதி ஒன்றுக இணைந்தது. 1860 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இணைந்த இத்தாலியின் பாராளுமன்றம் எம்மானுவேல் மன்னரின் தலைமையின்கீழ் டூரினில் (Turin) கூடியது.

III

சவூரின் எண்ணத்தின் ஒரு பகுதி கைகூடியது. இன்னும் இத்தாலிய இணைப்பு முற்றுப்பெற வேண்டுமானால் இரண்டு காரியங்கள் நிகழவேண்டும். (1) இத்தாலியின் தென்பகுதி இணைப்பில் சேர வேண்டும்; (2) இணைந்த இத்தாலியின் தலை நகரம் டூரினில் இயங்காமல் ரோமி(Rome)ல் இயங்க வேண்டும். இவை இரண்டையும் செய்து முடித்தவர் நைஸ் பிரதேசத்தைச் சேர்ந்த வீரர் கரிபால்டி (Garibaldi) யாவர். இத்தாலியின் தேசிய ஒற்றுமையில் சிறப்பாகவும் திறம்படவும் பணியாற்றியவர்கள் மசினி, சவூர், கரிபால்டி என்னும் மூவராவர். முதல்வர், ஒற்றுமை இயக்கத்திற்கு 1848ஆம்ஆண்டிலேயே வேரூன்றியவர்; சவூர், அதை வளர்த்த அரசியல் அறிஞர்; கரிபால்டி, அதன் போர்வீரர் என்று பொதுப்பட வரலாற்று அறிஞர்கள் கூறுவதுண்டு. இவர்களில் கரிபால்டி புரிந்த பணி சிறந்த வீரப் பணியாகும். 1860 ஆம் ஆண்டு மேத் திங்கள், 1072 வீரர்கள் மட்டும் கொண்ட படையோடு தென் இத்தாலியைக் கைக்கொள்ளப் புறப்பட்டார் கரிபால்டி. கிரேக்க வரலாற்றிலே சேனபன் (Zenophon) என்ற படைத் தலைவர் பத்தாயிரவரைக்கொண்டு வென்ற கதை கூறப்படுகிறது. அதிலும் உயரியது கரிபால்டி இப்பொழுது தொடங்கிய வீரப் படையெழுச்சி என்று நாம் கூறவேண்டும்.

கரிபால்டியின் படை வீரர் சிறந்த தேசிய உணர்ச்சியுடையவர்கள். அதற்காகத் தங்கள் உயிரையும் வழங்குமளவிற்கு உறுதி பூண்டவர்களென்பது நாம் கூறுமலேயே பெறப்படும். இத் திண்மையின் அறிகுறியாக அவர்கள் செஞ்சட்டை அணிந்தார்கள். ஆகவே, அவர்களுக்கு வரலாறு, செஞ்சட்டையர்

(Red Shirts) என்ற பெயரளித்தது. கரிபால்டியின் படை முதலில் மார்சலா (Marsala)வில் இறங்கியது. பிறகு வீரத்துடன் பாலர்மோ (Palermo)வை அடைந்தது. பாலர்மோ பிடிபட்டது. அதனால் படையின் வீரமும் மிகுந்தது. அதன்பிறகு செஞ் சட்டையினர் டிரேனியன் கடலைத் (Tryrrhenian Sea) தாண்டி நேப்பிள்ஸ் (Naples) நகரை அடைந்தனர். அந்நகர வாசிகள் ஏற்கனவே இத்தாலிய இணைப்பில் கலக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். ஆகவே, ஆஸ்திரிய மன்னர் எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை.

1860 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களுக்குள் தென்இத்தாலியும் வட இத்தாலியோடு சேர்ந்தது. இனி எஞ்சி நின்ற சிக்கல், போப்பின் பிரதேசத்தைக் கைப்பற்றுவதேயாகும். இதில் கரிபால்டிக்குத் துணை புரியவும், போப்பின் பிரதேசத்தைக் அவர் கைப்பற்றுவதை ஐரோப்பிய வல்லரசுகள் தடுத்தால் அவற்றிற்கு எதிராகக் கரிபால்டியோடு ஒத்துழைக்கவும், கவூர், முன்னரே ஐக்கிய இத்தாலியப் படையொன்றை ரோமிற்கு அனுப்பி யிருந்தார். இரு படைகளும் அங்கு எதிர்த்தன. நெப்போலிய மன்னன் போப்பின் உதவிக்கு வராவண்ணம் அவரோடு கவூர் ஓர் உடன்படிக்கையும் செய்து முடித்தார்.

ஆனால் போப்போடு சண்டையைத் துவங்குவதெப்படி என்ற சிக்கல் எழுந்தது. இதைத் தவிர்க்க எம்மானுவேல் மன்னர் வழி கண்டுபிடித்தார். போப்பின் படை பெரும்படையென்றும் அதனால் அவர் அதைக் கலைத்துவிட வேண்டுமென்றும் எம்மானு வேல் அரசர் போப்புக்கு ஓராணை பிறப்பித்தார். எதிர்பார்த்த படி அவர் அதை எதிர்க்கச் சண்டை தொடங்கியது. கேஸ்டல் பிடார்டோ (Castelfidardo) என்றவிடத்தில் போப்பின் படை தோல்வியுற்றது. ஆனால் வெற்றியைப் பயன்படுத்திக் கொள்ளு முன் கரிபால்டி தம் பதவியைவிட்டு விலகினார். கவூர் தம்மோடு சரிசமமாக இருப்பதை அவர் விரும்பவில்லை. ஆனால் வெளிக்கு அதைக் காட்டிக்கொள்ளாமல் தம் செஞ்சட்டைப் படைக்குச் சரியான வெகுமதி கொடுக்கப்படவில்லையென்பதையே அவர் காரணமாகக் காட்டினார் (1860).

அடுத்த ஆண்டிலேயே கவூர் இறந்தார். அவருடைய எண்ணம் பெருவாரியாக நிறைவேறியிருந்தது. பூரண இத்தாலிய ஒற்றுமைக்குப் புறம்பாக இருந்தவை ரோமும் அதைச் சுற்றி யுள்ள போப்பின் பிரதேசமும், வெனீஸ் பகுதியுமேயாகும். இந்த இருபுறமும் இத்தாலி வெற்றிக்கொடி நாட்ட பிரஷ்யா துணைபுரிந்தது முன்னைய இயலில் நாம் விளக்கியபடி பிரஷ்யப் பேரரசரும் அவருடைய மந்திரி பிஸ்மார்க்கும் ஆஸ்திரியாவைத்

தோல்வியுறச் செய்ய இத்தாலியின் உதவியை நாடினர். ''ஆஸ்திரியாவின் உதவிக்கு மட்டும் இத்தாலி வராமலிருந்தால் அதன் மன்னனே வென்றபின் வெனிஸ் நகரம் இத்தாலியைச் சேரும்படி நான் செய்வேன்'' என்று பிஸ்மார்க் இத்தாலிக்கு வாக்களித்தார்.

இதன் காரணமாய் இத்தாலி நாடு ஆஸ்திரியாவோடு சண்டை செய்ய வேண்டியதாயிற்று. இதுகாறும் எளிதில் வெற்றி மாலை சூடிய இத்தாலியப் படை இப்போது துன்புற்றது. அதற்குப் பெரிய ஆஸ்திரியப் படையோடு சண்டை செய்யப் போதிய பயிற்சியுமில்லை, சிறந்த படைத் தலைவருமில்லை. இந் நிலையில் குஸ்டோசா (Custozza) என்னுமிடத்தில் இத்தாலியின் தரைப்படை தோற்றது. அதை அடுத்துக் கடலிலும் இத்தாலி யர்கள் தோற்றார்கள். ஆயினும் பிரஷ்ய உதவி இத்தாலிக்கு இருந்தது. அதோடு செய்த சண்டையில் ஆஸ்திரியப் படையின் ஒரு பெரும்பகுதி இத்தாலியிலேயே தங்கிவிட்டது. அதனால் ஆஸ்திரியாவோடுசண்டைசெய்த பிரஷ்யாவின் வேலைகுறைந்தது. இந்த இத்தாலிய ஒற்றுமையை பிஸ்மார்க் ''இத்தாலியின் மாறுத நட்பு'' (the immutable loyalty of Italy) என்று சொல்லிப் பெருமை பேசினர். வெனீஸ் நகரைத் தாம் முன்னர்க் கூறிய படியே இத்தாலியோடு இணைத்தார்.

போப்பின் பிரதேசமே இறுதிச் சிக்கலாக இருந்தது. நெப் போலிய மன்னர் போப்பின் உதவிக்காக ஒரு படையை ரோமில் விட்டு வைத்திருந்தார். 1867 ஆம் ஆண்டு கரிபால்டி ரோமில் நுழைந்தபோது அந்த பிரஞ்சுப் படையைத் தோற்கடிக்க அவராலும் முடியவில்லை. நல்லகாலமாக பிரஷ்யா இங்கேயும் இத்தாலிக்கு உதவியது. அப்போது பிரான்ஸுக்கும் பிரஷ் யாவுக்கு மிடையே ஏற்பட்ட போரின் காரணமாகப் பிரஞ்சு மன்னர் தமது படையை ரோமிலிருந்தும் அழைத்துக் கொண் டார். ஏனென்றால் அவருக்குப் பெரும்படை தேவையா யிருந்தது. 1870ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் ஒரு பெரிய இத்தாலியப் படை ரோமில் இறங்கியது. ரோம் நகரம் பிடிபட்டது. அதை அடுத்து நிகழ்ந்த வாக்கெடுப்பில் பெரு வாரியான மக்கள் இத்தாலிய இணைப்பில் கலந்துகொள்ள விரும்புவதாக வாக்களித்தார்கள். இவ்விதமாக இத்தாலிய ஒற்றுமை எனும் கனவு நனவாகியது. ஒன்றுபட்ட ஐக்கிய இத்தாலி எழுந்தது.

15. ஐரோப்பா

(1871—1901)

(ஜெர்மானியப் பேரரசு—பிஸ்மார்க்—இரண்டாம் வில்லியம்—பிரான்ஸின் மூன்றும் குடியரசு—இதர ஐரோப்பிய நாடுகள்—புதுக் கொள்கைகளும், விஞ்ஞான வளர்ச்சியும்)

பிரஷ்யாவுக்கும் பிரான்ஸுக்குமிடையே நடந்த போர் ஐரோப்பிய வரலாற்றில் ஒரு புதிய காலகட்டத்தைத் தொடங்கி வைத்தது. ஏறக்குறைய 300 ஆண்டுக் காலமாக ஐரோப்பாவின் அரசியல் மேடையில் பெரும்பங்கு கொண்டு இருந்த பிரான்ஸ் நாடு இந்தச் சண்டையை முடித்து வைத்த பிராங்பர்ட் உடன் படிக்கைக்கு (மே, மீ. 1871)ப் பிறகு பின்னேக்கிச் செல்வதை யும், அதன் இடத்தைப் பிடிப்பதற்கு ஜெர்மனி முன்னேக்கி வரு வதையும் காண்கின்றோம். இனிப் பிரஷ்யாவின் தலைமையின் கீழ் ஜெர்மன் நாடு ஒரு பேரரசாக மாறுகிறது. பிரான்ஸில் அதே சமயத்தில் மூன்றும் குடியரசு (Third French Republic) நிறுவப் படுகிறது.

பிரஷ்ய அரசு ஜெர்மன் பேரரசாக மாறுவதற்குப் பொது வான முதற்காரணம் தேசீயம். ஆனல் இந்த பிரஷ்ய-பிரான்சுப் போர் அதை உருப்பெறச் செய்தது. பிரான்ஸ் நாட்டுடன் சண்டை என்று சொன்னவுடனேயே ஜெர்மனியின் தென்பிரிவு வடபிரிவுடன் இயற்கையாக இணைந்தது. சண்டையில் ஏற்பட்ட வெற்றி இவ்விணைப்பை நிலையாக்கியது. ஜெர்மானியப் பேரரசு பிறந்தது. புதிதாய் ஏற்பட்ட இப்பேரரசில் ஆல்சேஸ்-லொரேன் பகுதி ஒழிய 25 நாடுகள் இணைந்திருந்தன. இவற்றையெல்லாம் ஒன்று கூட்டி ஒரு கூட்டிணைப்பு உருவாக்கப்பட்டது. கூட் டிணைப்பு விதிப்படி இந்த ஒவ்வொரு நாட்டின் தலைவரும் அரசர், பிரபு, பெரும் பிரபு (Grand Duke) என்று எப்படிப் பட்டம் வைத்துக் கொண்டிருந்தனரோ அதே பட்டத்துடன் விளங்கவும், பிற நாடுகளைத் தாக்குதல் நீங்கலல்லாமல் எல்லா வகைகளிலும் முழு உரிமையுடன் விளங்கவும் அனுமதிக்கப் பட்டார்கள். பவேரியா போன்ற சில வலிய நாடுகளுக்கு மட்டும் சில சிறப்பான உரிமைகளும் கிடைத்தன. உதாரணமாக ரெயில், அஞ்சல், படை வைத்துக்கொள்ளுதல் என்ற சிலவற்றிலும் பவேரியாவிற்

குரிமை கிடைத்தது. பேரரசின் உயர்நீதி மன்றம், (Supreme Court) சேக்சனி நாட்டில் வைக்கப்பட்டதால் அந்நாட்டின் பெருமையும் ஓரளவு ஒப்புக்கொள்ளப்பட்டது.

இவ்விதமாக அமைதியாக ஜெர்மனியின் ஐக்கியம் நிறை வேறியது. பேரரசின் மத்திய பீடமே இக்கூட்டிணைப்பின் மத்திய பீடமாகவும் விளங்கியது. இங்கு இரண்டு சட்டமன்றங்கள் இயங்கின. ஒன்றின் பெயர் பண்டஸ்ரேட்டு (Bundasrat); மற்றதின் பெயர் ரெய்ஷ்டேக் (Reichstag). முதலாவது, கூட்டிணைப்பில் சேர்ந்த நாடுகளின் தூதர்கள் அடங்கியது; மற்றது மேற்சொன்ன நாடுகளின் மக்களவையாகும். இந்த அவையின் உறுப்பினர்கள் எல்லா நாடுகளிலிருந்தும் வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 25 வயது வந்த எல்லா ஆண்களும் இந்த வாக்கெடுப்பில் பங்கு கொள்ளலாம். ஆயினும் ஜனநாயக முறையை ஜெர்மானியர் ஓரளவுக்குத்தான் கடைப் பிடித்தனர். கூட்டிணைப்பின் தலைவர் ஜெர்மன் பேரரசர். அவருக்குத் தலைமை ஆலோசகராயிருந்தவர் சான்சலர் (Chancellor); ஆயினும் இவர் ஜனநாயக அரசின் பிரதமர் போன்றவரல்லர். அவருடைய செயல்களுக்கு அவர் மன்னர் ஒருவருக்கே பொறுப்பாளி என்ற நியதி ஜெர்மன் பேரரசில் ஏற்பட்டது. தவிர, பிரஷ்யாவின் முதலிடம் கவனத்துடன் காப்பாற்றப்பட்டது. பண்டஸ்ரேட்டுச் சபையில் பிரஷ்யாவின் எண்ணத்திற்கு மாறுகக் கொண்டுவரப்படும் எல்லாப் பிரேரணைகளையும் தவிர்க்கப் போதிய வாக்கு வசதிகள், பிரஷ்யாவின் தூதர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன.

II

இந்நிலையில் பிஸ்மார்க், முதலாம் வில்லியம் பேரரசருக்குச் சான்சலராக நியமனம் பெற்றார். 1871 முதல் அவர் பதவியி லிருந்து விலகிய 1890 ஆம் ஆண்டு வரை ஜெர்மன் பேரரசு வெற்றியோடியங்கக் கடும்பணி புரிந்தார். முதலில் கூட்டிணைப்பு நாடுகளில் ஒரே மாதிரியான சட்டங்களும் சட்ட முறைகளும் இயங்க ஏற்பாடு செய்தார். பேரரசின் நாணயங்களே இவற்றில் வழங்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தார். தந்தி, தபால், ரெயில் நிலையங்கள் ஒவ்வோரிணைப்பு நாட்டிலும் இயங்கிஞலும் அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து ஒழுங்குடன் அலுவல்கள் நடக்க ஒரு பேரலுவலகத்தை (Imperial Railway Bureau) நிறுவினர்.

அந்நியநாட்டு விவகாரங்களில் பிரான்ஸ் மற்ற நாடுகளுடன் ட்புக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வதையே பிஸ்மார்க் தம்

முதல் வேலையாகக் கொண்டார். ஆல்சேஸ் - லொரேன் பகுதிகளைப் பெற்றதால் ஜெர்மனியின் இயற்கை எல்லை ரைன் ஆற்றங்கரை வழியே அமைந்தது. அதனால் ஜெர்மனியைப் பிரஞ்சுக்காரரிடமிருந்து காப்பது எளிதாயிற்று. படைவலியில் மட்டும் கருத்துச் செலுத்தினால் ஜெர்மனியை வெல்வது கடினமென்பதை உணர்ந்த பிஸ்மார்க் கட்டாய இராணுவப் பயிற்சித் திட்டத்தைப் பிரஷ்யாவிலிருந்த ஜெர்மன் பேரரசு நாடுகள் எல்லாவற்றிலும் புகுத்தினர். ஆகையால் பேரரசின் படைவலி பெருகியது. அமைதிக் காலத்திலும் அதன் படை, குறைந்தது 400,000 போர் வீரர்கள் கொண்டதாக இருக்க வேண்டுமென்பது அவரது குறிக்கோள். படைக்கு வேண்டிய செலவுத் தொகைக்கு ரெய்ஷ்டேக் சபை முதலில் ஏழு ஆண்டுகளுக்கொரு முறையும், பிறகு ஐந்தாண்டுகளுக்கொரு முறையுமே அனுமதி அளித்து வந்தது. அதனால் தேவையான பணம் கிடைப்பது சில சமயம் கடினமாயிற்று. ஆனால் பிஸ்மார்க் எப்பொழுதும் போர் அச்சத்தைக் காட்டி அந்தத் தேவையை நிறைவேற்றிக் கொண்டார்.

அரசியல் தலைவர்களுக்குள் கட்சி வலிமை வேண்டுவதென்பதைப் பிஸ்மார்க் நன்குணர்ந்தவர். அப்பொழுது ஜெர்மன் அரசியலில் தேசிய லிபரல் கட்சி ((National Liberal Party), கன்சர்வேடிவ் கட்சி (Free Conservative Party), முற்போக்குக் கட்சி (Progressives) என்ற பல கட்சிகளிருந்தன. இவற்றில் ஒன்றேனும் பிஸ்மார்க்கை முற்றும் ஆதரிக்கவில்லை. தேசிய லிபரல் கட்சியாருக்கு பிஸ்மார்க்கின் அகில ஜெர்மன் போக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் பிரஷ்யாவின் பெருமை குன்றுமல் காப்பவர்கள். முற்போக்குக் கட்சியார் அமைதி வேண்டுமென்றார்கள். அவர்களுக்குப் போர் பிடிக்கவில்லை. இந்நிலையில் அரசியல் முற்போக்கு காண்பது மிகக் கடினமாக விருந்தது. தென் ஜெர்மன் பிரதிநிதிகளும் தூதுவர்களும், கத்தோலிக்க மதத்தை ஆதரித்து வந்தது அவருக்கு அறவே பிடிக்கவில்லை. பிஸ்மார்க்கி ஞட்சியில் கத்தோலிக்கர் துன்புற்றார்கள். இத்தாலியச் சண்டைக்குப்பிறகு, போப் தாம் இழந்த பதவியைப் பெறுவதற்காக இதர ஐரோப்பிய நாடுகளின் விவகாரங்களில் அவசியமில்லாமல் கலந்து கொள்வதாக அவர் எண்ணினர். 1872ஆம் ஆண்டு பிஸ்மார்க் சேசு சபைக் குருமார்களை ஜெர்மனியிலிருந்து வெளியேற்றினர். பிறகு கத்தோலிக்கக் குருமார்கள் ஜெர்மானியராகவே இருக்கவேண்டும், அவர்கள் ஜெர்மனியிலேயே படித்துப் பட்டம் பெற்றிருக்க வேண்டுமென்று சட்டங்கள் இயற்றினர். இவற்றிற்கு ''மேச் சட்டங்கள்''

(May Laws) என்று பெயர். முதலில் இவற்றைப் பிஸ்மார்க் பிரஷ்யாவில் நடைமுறையில் கொண்டு வந்தார். ஆனால் எதிர்பாராத அளவிற்கு எதிர்ப்பு எழுந்தது. ஜெர்மனி எங்குமுள்ள கத்தோலிக்கர்கள் இவற்றை எதிர்த்து ஒன்று திரண்டார்கள். புரோட்டஸ்டன்ட் மதத்தினருங் கூட மத உரிமையைத் தாக்கும் இந்தச் சட்டங்களை எதிர்த்தார்கள். பிஸ்மார்க் தமது தவற்றை உணர்ந்தார். அதே சமயம் கூடி வாழ்வுடமைக் கொள்கையாளர்களும் (Socialists) ஜனநாயக வாதிகளும் (Democrats) அவரைத் தாக்கினர்கள். முத்திறப் பட்ட இவ்வெதிரிகளில் பிஸ்மார்க் பின் சொல்லப்பட்ட இருவரைப் பற்றி மிகுதியாக அஞ்சினர். ஆகையால் 1880ஆம் ஆண்டு மேச் சட்டங்களை நடைமுறையில் கொண்டு வருவதைத் தம் பொறுப்பில் விட்டு விடும்படி பிஸ்மார்க் பிரஷ்யப் பாராளு மன்றத்தின் அனுமதி கோரினர். அதன் பிறகு அவற்றை நடைமுறையில் கொண்டு வருவதை அடியோடு கைவிட்டார். ஆனால் கத்தோலிக்கர் இயக்கம் அத்தோடு நிற்கவில்லை. மேச் சட்டங்களின் பயனாகக் கத்தோலிக்கக் கட்சி (Catholic Party) ஒன்று ஜெர்மனியில் ஏற்பட்டு சமத்துவக் கட்சியோடும் ஜனநாயகக் கட்சியோடும் சேர்ந்து இயங்கத் தொடங்கியது.

1870 ஆம் ஆண்டிற்கு முன்னரே ஆலைகளின் வளர்ச்சி ஜெர்மனியில் சிறப்பாக இருந்தது. அதற்குப் பிறகும் நாட்டின் அரசியல் சிறப்பு உயர உயர ஆலைகளின் வளர்ச்சி மேலும் திறம் பட வளர்ந்தது. அரசாங்க உதவி ஒருபுறமும், விஞ்ஞான வளர்ச்சி மற்றொரு புறமுமாக ஜெர்மனியின் தொழிற்சாலைகள் பெருகின. இதை மெய்ப்பிப்பதற்குச் சில குறிப்புக்களை மட்டும் இங்குக் காட்டுவோம்:

(1) கலப்பிரும்பு 1870 இல் ஆண்டில் 1,400,000 டன்கள் தோண்டியெடுத்த ஜெர்மனியில் 1905இல் 11,000,000 டன்கள் தோண்டி எடுக்கப்பட்டன.

(2) இங்கிலாந்தில் உண்டாக்கப்பட்ட எஃகை விட ஜெர்மனியில் மிகுதியான எஃகு 1895 ஆம் ஆண்டில் உண்டாக்கப்பட்டது.

(3) 1860க்கும் 1900க்குமிடையே நிலக்கரி 9 மடங்கு அதிகரித்தது.

தொழிற்சாலைகளின் வளர்ச்சிக் கேற்பத் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் பெருகியது. 1895ஆம் ஆண்டில் ஏறக்குறைய 7,000,000 தொழிலாளர்கள் ஜெர்மன் ஆலைகளில் வேலை செய்து

வந்தார்கள். தொழிற்சாலைகளோடு வணிகமும் பெருகியது. துணி, கத்தி, முள் முதலிய எஃகுப் பொருள்கள், மின்சாரக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள் என்ற பல பொருள்கள் விற்பனையில் 1900ஆம் ஆண்டு ஐரோப்பாவிலேயே ஜெர்மனி முதலிடம் பெற்றதென்று கூறலாம். வாணிகப் பெருக்குடன் நகரங்கள் பெருகின. 1870க்கும் 1900க்கும் இடையே ஜெர்மானிய மக்கள் தொகை 41,000,000லிருந்து 56,000,000 ஆகப் பெருகியது. இத்தகைய பல பெருக்கங்களிடையே தொழிலாளரின் துன்பங்களும் பெருகின. அவர்களுக்கு நல்ல வீடுகள் கிடைக்கவில்லை. செலவுக்குப் போதிய பண வருவாயுமில்லை. ஆயினும்நாட்டின் வளர்ச்சிக்குத்தாங்கள் மிக முக்கியமானவர்கள் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

ஆகவே 1877 இல் சமுதாய ஜனநாயகக் கட்சி (Social Democratic Party) என்று ஒருகட்சி தொழிலாளரின் நன்மையைக் கோரி எழுந்ததில் வியப்பில்லை. இக்கட்சியாளரின் கொள்கைகள் பலவகையிலும் பிஸ்மார்க்கின் கொள்கைகளுக்கு எதிரானவை. ஆகவேதான் அவர்களுக்கு அஞ்சிய அவர், அவர்களை அடக்க இரு முறைகளைக் கையாண்டார்:

(1) முதலில் சமத்துவக் கொள்கைப் பிரசாரத்தை எதிர்த்துச் சட்டமியற்றினர்.

(2) இரண்டாவதாக ஒரு முறையைப் பிஸ்மார்க் கையாண்டார். அதன்படி தொழிலாளரின் நன்மையைக் குறித்துப் பல சட்டங்கள் இயற்றினர். 1883ஆம் ஆண்டு, நோய்வாய்ப்படும் தொழிலாளரின் நன்மைக்காக ஓர் இன்ஷியூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வந்தார். 1889 ஆம் ஆண்டு வயதானவர்களுக்கும் வேலை செய்ய முடியாதவர்களுக்கும் உதவியாக மற்றொரு இன்ஷியூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்தினர். இவற்றையெல்லாம் செய்தும் சமத்துவக் கொள்கையைப் பிஸ்மார்க்கால் அழிக்க முடியவில்லை. அதற்குமாறாக அது வளர்ந்தது, வளர்ந்து கொண்டே இருந்தது. அரசியலார் அதை அடக்க முயன்றதால் அதில் சேராத பலரும் அதில் சேர்ந்தார்கள். விரைவில் ரெய்ஷ்டேக்கிலிருந்த கட்சிகளில் முதலிடம் பெற்றது சமத்துவக் கட்சி.

III

1888ஆம் ஆண்டில் ஜெர்மன் பேரரசர் முதலாம் வில்லியம் இறந்தார். அவருக்குப் பின் மூன்றும் பிரடிரிக் (Frederick III) பட்டமெய்தினர். ஆனால் அவர் மூன்று திங்களே உயிருடனிருந்

தார். 1880ஆம் ஆண்டு ஜூனில் அவர் இறந்தார். அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர் இரண்டாம் வில்லியம் (William II). அவருடைய கொள்கைகள் பிஸ்மார்க்கின் கொள்கைகளுக்கு முரண்பட்டவை. பேரரசர் பதவியின் பெருமையை அவர் அளவிற்குமேல் உணர்ந்தவர்; வீரமுடையவர்; எல்லா அதிகாரத்தையும் தம் கையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்துக் கொண்டவர். இதனால் பிஸ்மார்க்கும் அவரும் நீண்ட நாள் ஒத்துழைக்கக் கூடவில்லை. குறிப்பாக ஜெர்மன் நாடு தன் ஆதிக்கத்தைப் பிற நாடுகளிலும் பரப்ப வேண்டுமென்றும் அதற்கு உதவியாகத் தன் கடல் வலிமையைப் பெருக்க வேண்டும் என்றும் எண்ணம் கொண்டவர் வில்லியம். ''ஜெர்மனியின் எதிர்காலம் அதன் கடல்வலிமையில் இருக்கின்றது'' (The future of Germany lay on the waters) என்பது அவர் கருத்து. பிஸ்மார்க் இவற்றிக்கு மாறான கருத்துக் கொண்டவர். ஜெர்மனியின் பெருமை மெல்ல மெல்ல வளர்வதே சாலவும் பொருத்தமானது. அதுவே, தீங்கற்ற முறையுமாகும். முதலில் அது இப்பொழுது கொண்டிருக்கும் பெருமையைக் காக்கவேண்டும். அதற்காக மற்ற ஐரோப்பிய நாடுகளுடன் ஒற்றுமையாயிருக்க வேண்டும் என்பது பிஸ்மார்க்கின் கொள்கை. ஆதலால் அவர் வில்லியத்தின் அந்நிய நாட்டுக் கொள்கையை எதிர்த்தார். வில்லியம் விட்டுக் கொடுப்பதாயில்லை. அது மட்டுமல்ல. அவர் பிஸ்மார்க்கைப் பதவியினின்றும் விலக்கினர் (1890). இவ்விதமாகப் பிஸ்மார்க் ஜெர்மன் நாட்டிற்குச் செய்த பெரும் பணி முடிந்தது. ஆயினும் பதவியிலிருந்து விலகுமுன்னர் ஐக்கிய ஜெர்மனியை உருவாக்கி அது வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்க வகை செய்தவர் பிஸ்மார்க் ஆவார்.

இரண்டாம் வில்லியத்தின் கட்சிக் குறிக்கோள்கள் மூன்று:

(1) ஜெர்மனியின் கடற்படையை வலுப்படுத்தல்.

(2) வெளிநாடுகளைக் கைப்பற்றி அவற்றை ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளாகச் செய்தல்.

(3) சமத்துவக் கொள்கையை ஆதரித்தல்.

1890ஆம் ஆண்டு வில்லியம் இங்கிலாந்தோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ஹெலிகோலேண்ட் (Heligoland) ஜெர்மானியரிடம் அகப்பட்டது. இதன் வழியாய் ஜெர்மன் கப்பல்கள் கடலில் செல்ல முதல் வசதியேற்பட்டது. 1895ஆம் ஆண்டில் கீல் கால்வாய் வெட்டப்பட்டது. அதன் மூலம் பால்டிக் கடல், வடகடல் வழியாக ஜெர்மன் கப்பல்கள்

செல்ல வசதியேற்பட்டது. ஜெர்மன் கடற்படைச் சங்கம் (German Navy League) ஒன்று இப்பொழுது நிறுவப்பட்டது. அதன் உதவியால் அரசாங்கத்தின் கப்பல் கட்டும் முயற்சி உறுதிப் பட்டது. 1897ஆம் ஆண்டு இதற்கு ஒரு திட்டம் தீட்டப் பட்டது. அதன் படியே ஜெர்மன் முயற்சிகளும் உருப்பெற்றன.

ஜெர்மனிக்கு முன் ஏறக்குறைய முந்நூருண்டுக்காலமாக ஐரோப்பிய நாடுகள் பிற நாடுகளைக் கைப்பற்றுவதில் முனைந்து நின்றன என்பதை நாம் அறிவோம். ஜெர்மனி மட்டும் இந்த ஆதிக்க வெறிக்குப் புறம்பாகவே இருந்து வந்தது. ஆகையால் இப்பொழுது வில்லியம் பேரரசர் இதைப்பற்றி நினைவு கொண் டதில் வியப்பில்லை. ஆதிக்க ஆவலை அவர் உள்ளத்தில் அதிகமாக எழுப்பக் காரணமாயிருந்தது 1890 இல் நிகழ்ந்த ஆப்பிரிக்கப் பாகப்பிரிவினையாகும். இங்கிலாந்து, போர்ச்சுகல், பெல்ஜியம் போன்ற நாடுகள் ஆப்பிரிக்காவைப் பங்கிட்டுக் கொள்வதைப் பார்த்து ஜெர்மன் பேரரசர் வாளா இருக்கக் கூடவில்லை. ஆகை யால் அவரும் இந்த விவகாரத்தில் கலந்துகொண்டு ஆப்பிரிக் காவின் சில பகுதிகளை ஜெர்மனிக்குச் சொந்தமாக்கினர். இதுவே ஜெர்மனியின் குடியேற்ற நாட்டுச் சிக்கலின் முதற்படியாயிற்று. அதன் பின் 1897ஆம் ஆண்டில் சீனாவிலேற்பட்ட சண்டையில் கலந்துகொண்டு கியோ-சௌ (Kiao-Chou) பிரதேசத்தை வில்லியம் ஜெர்மனிக்குச் சொந்தமாக்கினர். சீனாவின் ஒரு பகுதி ஜெர்மனியின் குடியேற்ற நாடாகியது அதன் வணிகப் பெருக்கத் திற்குதவியது. இனி மூன்றாவது படியாக வில்லியம் துருக்கியரை அணுகினர். துருக்கி சுல்தான் பன்னெடுங்காலமாய் ஐரோப் பாவிற்கு இன்னலிழைத்தவர். அப்பொழுதுதான் ஆர்மீனியா வோடு சண்டை செய்து பல ஆர்மீனிய மக்களைக் கொடுமையாய் அவர் கொன்று குவித்திருந்தார். ஆயினும் ஜெர்மானியப் பேரரசருக்கு இவையெல்லாம் தடைகளாகத் தென்படவில்லை. அவர் சுல்தானோடு உறவு பூண்டு ஆசிய மைனர், மெசோபொட் டேமியா பிரதேசங்களில் தம் ஆதிக்கத்தைப் பரப்பிக் கொண் டார். அங்கு ரெயில் வழிகள் அமைக்கவும் அவை மூலம் ஐரோப்பாவையும் ஜெர்மனியையும் அண்மைக் கிழக்குப் பிர தேசத்தோடு இணைக்கவும் வில்லியம் திட்டமிட்டிருந்தார்.

IV

இந்த இயலின் முதலில் நாம் குறிப்பிட்ட முப்பதாண்டுக் காலத்தில் ஜெர்மனியின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டோம். இனி, பிரான்சின் வளர்ச்சியைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

1871ஆம் ஆண்டில் அதற்குப் பெருந்தோல்வி யேற்பட்டது. ஆயினும் அதன் சுடர் இன்னும் மங்கவில்லை. கலையும், விஞ்ஞானமும், மொழியும் முன்னைவிட இப்பொழுது பிரான்சில் பெரிதும் வளரத் தொடங்கின. அரசியலில் ஏற்பட்ட பல சிக்கல்களுக்கு இந்நாடு வழி கண்டதுபோல் எந்த ஐரோப்பிய நாடும் வழி காணவில்லை. அந்த அரசியல் வலிமையில் நம்பிக்கை வைத்து பிரான்ஸ் புது வாழ்வை அமைக்க இப்போது முன் வந்தது.

முதலில் தனி மனிதஞட்சி பிரான்ஸிற்குச் சரிப்பட்டதல்ல என்று முடிவு கட்டப்பட்டது. நெப்போலிய மாவீரர் இதற்கு எதிரான கொள்கைக்கு உரமிட்டார். அதைப் பின்பற்றி அவருடைய வீழ்ச்சிக்குப் பின்னும் மூன்றும் நெப்போலியனே இது காரணம் பற்றியே பிரஞ்சு மக்கள் ஆதரித்தார்கள். ஆனல் இப்போது அதுவும் பயனின்றி முடிவடைந்தது. ஆகவே பிரான்ஸ் நாடு குடியரசு முயற்சியில் ஈடுபட்டது. இதற்காக ஒரு புது அரசியல் அமைப்புத் திட்டம் உருவாகியது. ஆனல் குடியரசுத் திட்டம் பிரான்ஸிற்குப் புதிதன்று. ஏற்கனவே இரு முயற்சிகள் அச்சச் சூழ்நிலையில் அங்குத் தோன்றி மறைந்தன. ஆயினும் வேறு வழியின்றி மூன்றும்முறையும் மக்கள் அதை இப்போது ஆதரித்தார்கள். ஆகவே இத்திட்டம் மூன்றும் குடியரசுத் திட்டம் (Third French Republic) என்ற பெயர் பெற்றது. இதற்கும் முன் சொன்ன இரண்டு திட்டங்களுக்கும் சில வேறு பாடுகளே இருந்தன.

(1) நாட்டின் தலைவர் (President) மக்களுடைய நேரடியான வாக்குக்கள் மூலம் தெரிந்தெடுக்கப்படவில்லை. அவர்கள் வாக்குக்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு சட்ட மன்றங்களும் ஒன்று கூடியே தலைவரைத் தேர்ந்தெடுத்தன.

(2) பிரான்ஸில் மற்ற ஐரோப்பிய நாடுகளைப்போல் கட்சிகளுக்கு முதன்மை கொடுக்கவில்லை.

இந்நிலையில் 1871ஆம் ஆண்டு ஏற்பட்ட குடியரசு பெருஞ் சாதனைகளைச் சாதித்துவிடவில்லை. அவைகளைச் செய்யவும் முற்படவில்லை. நாட்டின் தலைவருக்கு மற்ற நாடுகளில் தரப்படும் பெருமை இங்குத் தரப்படவில்லை. ஆதலால் அவர்களால் அரும் பெருங் காரியங்கள் சாதிக்கப்படவில்லை என்பதில் வியப்பேது? பிரான்ஸின் நீண்டகால வரலாற்றில் 1871இல் தேர்ந்தெடுக்கப் பட்ட தியர் (Thiers) என்ற ஒருவர்தாம் உயர்வாகச் சொல்லக் கூடியவர். நாட்டின் தலைவருக்குத் துணையாகத் தெரிந்தெடுக்கப் பட்ட பிரதமர்களும் இதே நிலையில்தா னிருந்தார்கள். கட்சிக்கு நிலையான முக்கியத்துவ மில்லாதபடியால் அதன் உதவி கொண்டு

பிரதமர் பதவிக்கு வருபவர்களும் நிலையாயிருக்க முடியவில்லை யென்றாலும் நிலையாகச் சில ஆண்டுகளுங்கூட நீடிக்கக்கூட வில்லை. பிரஞ்சு அரசியல் வரலாற்றில் அன்றிலிருந்து இன்று வரையும் இதே நிலை நீடிப்பதை நாம் அறிவோம். இந்த நீண்ட காலத்தில் கம்பெட்டா (Gambetta), வால்டெக்-ரூஸோ (Waldech Rosseau), கிளமான்சோ (Clemenceou) போன்ற சிறந்த அரசியல் மேதைகள் பிரதமர்களாகப் பதவிக்கு வந்தும் நாட்டிற்குப் பெரிய நன்மை விளையவில்லை.

பிரஞ்சுக்குடியரசு தொடங்கியதிலிருந்து அதற்குக் கோஞ்சி ஆதரவாளர்களாலும் (Monarchists), நியாயவாதிகளாலும் (Legitimists), திருச்சபை(Church)யாலும் தீராத எதிர்ப்பும் குடியரசின் எவ்வித செயலாற்றலுக்கும் இடையூறுயிருந்தன. இரு காரியங்களில் இந்த எதிர்ப்பு உறுதிப்பட்டது.

(1) பொலாங்ஷே எதிர்ப்பு (Boulanger Movement)

1887ஆம் ஆண்டு இவ்வெதிர்ப்பு எழுந்தது. சிறந்த ஆற்றலும் தூய மனப்பான்மையும் கொண்ட படைத்தலைவர் பொலாங்ஷே என்பவர். அவர் அரசியல் வாதியுமல்லர்; சிறந்த பேச்சாளராகவோ அல்லது கட்சித் தலைவராகவோ இருக்கவு மில்லை. குடியரசுக்கு எதிர்ப்பாளர்கள் ஒரு தலைவரைத் தேடி அலைந்தார்கள். அப்போது பிரான்ஸ் நாட்டிலேயே அவர் மட்டுமே மக்களுடைய மதிப்பைச் சிறக்கப் பெற்றிருந்த படைத் தலைவர். ஆகையால் அவர்கள் அவரைத் தலைவராகச் செய் தார்கள்.

கலகக்காரர்களின் குறிக்கோள் அரசியல் அமைப்புத் திட்டத்தை மாற்றி அமைப்பது. மக்களிடம் நேரடியான அதி காரம் இருக்க வேண்டுமென்று அவர்கள் குறிப்பாகக் கோரி னர்கள். ஆனல் பல மனக்குறை உள்ளவர்களும் இக்கிளர்ச்சியின் மூலமாகத் தம் குறைகளைத் தீர்த்துக்கொள்ள நினைத்தார்கள். கத்தோலிக்கர் தங்கள் மதத்திற்கு ஆக்கம் தேடினர்கள். தனி அரசு ஆட்சி வாதிகள் தங்கள் கொள்கைகள் நிறைவேற வழி தேடினர்கள். பொதுவில் எல்லோரும் அரசியல் திட்டத்தில் மாற்றம்புரிய விழைந்தார்கள். அப்பொழுது நிகழ்ந்த வாக் கெடுப்பில் பல இடங்களிலிருந்து பொலாங்ஷே தேர்ந்தெடுக்கப் பட்டார். பாரிஸ் நகரமும் அவரையே தேர்ந்தெடுத்தது. இதைக் கண்ட அரசியலார் அவரை அரசியல் பகைவராக எண்ணி அவரைச் சிறை செய்யவும் ஆணை பிறப்பித்தார்கள். பொலாங்ஷே அதை எதிர்த்து நின்றிருந்தால் ஒருவேளை வெற்றி

கிடைத்திருக்கலாம். ஆனால் அரசியல் பழக்கம் இல்லாத காரணத்தால் அவர் நாட்டைவிட் டோடினார் (1889). ஓடியவர் பிரசல்ஸ் (Brussels) நகரில் தற்கொலை செய்துகொண்டார்.

(2) டிரைப்பஸ் (Dreyfus) குழப்பம்

1894ஆம்ஆண்டு பிரான்ஸ் நாட்டின் மர்மங்களை ஜெர்மனிக்குக் கரவாகத் தெரிவித்ததாகக் கேப்டன் டிரைப்பஸின் பேரில் ஒரு குற்றச்சாட்டு எழுந்தது. அப்பொழுதுதான் பிரான்ஸ் ஜெர்மனியிடம் பெருந்தோல்வி அடைந்திருந்தது. அதற்காக என்றேனுமொருநாள் ஜெர்மனியின்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் பிரஞ்சு மக்கள் எல்லோருடைய உள்ளத்திலும் அனலாய் எரிந்து கொண்டிருந்தது. ஆகையால் டிரைப்பஸின் குற்றம் மாபெருங் குற்றமாக எல்லோருக்கும் தெரிந்தது. தவிர டிரைப்பஸ் யூதருமாவார். ஆகையால் உடனே அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு மேற்கு இந்தியத் தீவுகளுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கே இன்னல்கள் நிறைந்த பேய்த்தீவு (Devil's Isle) அவரை வரவேற்றது. ஆனால் இவ்வளவுக்கும் அறமுறையில் விசாரித்து முறை வழங்கவில்லை. 1891ஆம் ஆண்டு பிரஞ்சுப் படை அலுவலகத்தில் பணியாற்றி வந்த கர்னல் பிக்கர்ட்ட (Colonel Picquart) என்பவர் டிரைப்பஸ் வழக்குத் தொடர்பில் சில புதுத்தகவல்களைக் கண்டுபிடித்ததாகவும் அதன்படி டிரைப்பஸ் குற்றமற்றவரென்றும் வெளியிட்டார். உடனே பிரஞ்சு மக்கள் கொதித்தெழுந்தார்கள். அவர்கள் எப்போதும் உணர்ச்சி வசப்பட்டவர்கள். தவிர குடியரசு எதிர்ப்பாளர்களுக்கு இது மற்றொரு வாய்ப்பாயிற்று. அவர்கள் அரசாங்கத்தைத் தாக்கினார்கள். டிரைப்பஸ் மறுபடியும் பாரிஸ் நகருக்குக் கொண்டுவரப்பட்டார். ரென்ஸ் (Renes) நகரில் அவருடைய வழக்கு விசாரிக்கப் பட்டது. ஆனால் நீதிபதிகள் மறுபடியும் அவரைக் குற்றவாளியென்றே முடிவு கட்டினர். நல்ல வேளையாக நாட்டின் தலைவர் தமது தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரை மன்னித்துவிட்டார்.

இதன் மூலம் குடியரசு காப்பாற்றப்பட்டது. ஆனால் டிரைப்பஸ் விவகாரம் இன்னும் பல சிக்கல்களுக்கு வழி வகுத்தது. குறிப்பாகக் கத்தோலிக்கத் திருச்சபை இந்த விவகாரத்தில் கலந்து குடியரசிற்குக் குழிதோண்டியது என்று அரசியல் வட்டாரங்களில் பேச்செழுந்தது. ஆகையால் அவசரச் சட்டங்கள் பல திருச்சபைக்கு மாறுகப் பிறப்பிக்கப்பட்டன. குருமார் சபைகள் அரசியலார்கள் கண்காணிப்பில் ஆராயப் பெற்றன. பல சபைகள் ஒழிக்கப்பட்டன. அதன் காரணமாய்ப் பல குருமார்கள்

வெளிநாடு சென்றனர். முதலாம் நெப்போலியன் காலத்தில் ஏற்பட்ட திருச்சபை ஒப்பந்தம் (Concordat) இப்போது நீக்கப் பட்டது. இதுவரை குருமார்களின் சபைகளுக்கு அரசியலார் கொடுத்து வந்த பண உதவி நிறுத்தப் பட்டது. கடவுளின் ஆராதனைக்கு இவையோ அல்லது திருச்சபையோ அவசியமில்லை யென்று அரசியலார் கருதினார்கள். இதற்காக ஆராதனை அவைகள் (Associations for worship) பலவற்றை ஏற்படுத்தி அவற்றின் மூலம் திருச்சபையின் வேலையைத் தொடர்ந்து நடத்த அரசாங்கம் முடிவு செய்தது.

இரண்டாவதாகத் தொழிலாளர் தொல்லை பிரான்ஸில் அதிகமாயிற்று. குறிப்பாக இரு வழிகளில் தொழிலாளர்கள் செயலாற்றினார்கள். முதலில் அவர்கள் சங்கங்களை நிறுவி னார்கள். இவற்றின் மூலமே தங்களுக்குச் சலுகைகள் தேட முடியுமென்று நம்பினார்கள். காலப்போக்கில் தொழிற் சங் கங்களே (Trade Unions) அரசாங்கத்திற்குப் பதிலாகச் செய லாற்றத் தொடங்கின. இரண்டாவதாகப் பிரான்ஸ் நாடு இது வரை செய்துவந்த போர்களை நிறுத்த வேண்டும்; அமைதியின் வழியேதான் தொழிலாளர்களின் சிக்கல்கள் தீர வழிகாண வேண்டுமென்று பிரஞ்சுத் தொழிலாளர்கள் நம்பினார்கள்.

V

இதோடு நாம் பிரான்ஸ் நாட்டின் வரலாற்றை இந்த இயலில் நிறுத்திக்கொண்டு ஆஸ்திரிய—ஹங்கேரி, ருஷியா என்ற இந்நாடுகளின் வரலாற்றுப் போக்கைச் சிறிது விவரிப்போம்.

இந்த இயலில் குறிப்பிட்ட காலத்தில் ஆஸ்திரிய—ஹங்கேரி யின் வலிமை குன்றியது. பல இன மக்கள் வாழ்ந்த நாடு ஆஸ் திரிய—ஹங்கேரி. தலைமை அதிகாரம் குன்றிய காரணத்தால் இவர்களுள் அமைதி குன்றியது. ஒவ்வோரினமும் தம்தம் பெரு மையைப் பெரிதாகப் பாவித்தது. பொதுவில் நாட்டு மக்கள் ஆட்சிப் பொறுப்பில் தங்களுக்கு அதிக இடம் வேண்டினார்கள். இவை இரண்டும் நாட்டின் தலையாய குறிக்கோள்களாய் இப்போது விளங்கின. கடைசியில் 1907 ஆம் ஆண்டில் இயற்றப் பட்ட சட்டப்படி 24 வயது நிரம்பிய எல்லா ஆண்களுக்கும் வாக் குரிமை தரப்பட்டது. பொஹிமியாவில் வாழ்ந்த செக்கர் களுக்கும் (Czechs), கலீஷியாவில் வாழ்ந்த போலந்து நாட்டி னருக்கும் சில தனி உரிமைகள் வழங்கப்பட்டன. ஆயினும் நாட்டில் உலவிய இனவேற்றுமை குறையவில்லை.

1867 ஆம் ஆண்டு ஹங்கேரி நாட்டிற்கு ஏறக்குறையத் தனி யரசு கொடுக்கப்பட்டது. அங்குள்ள வயதுவந்த ஆண்பிள்ளை களுக்கெல்லாம் வாக்குரிமையும் வழங்கப்பட்டது. ஆயினும் அங்கும் இனக்குழப்பங்கள் அமைதியைக் குலைத்தன. அங்குப் பெரும்பாலான மாகியார்கள் (Magyars) மற்றவர்களினும் உயர்ந்தவர்களாகக் கருதப்பட விழைந்தார்கள். ஒன்றுபட்ட ஆஸ்திரிய—ஹங்கேரி மன்னர் பிரான்சிஸ் ஜோசப்பின் நிலைமை மிகக் கடினமாயிருந்தது. இந்நிலையில் இரு நாடுகளிலும் பல வகை அரசியல் திட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. உண்மையாக இவற்றின் அமைதிக் குறைவை வேறு ஐரோப்பிய நாட்டினர் உணரவில்லை. ஆயினும் அவற்றின் முடிவு விரைவில் நெருங்கிக் கொண்டிருந்தது.

ருஷியாவின் பிரச்சினைகள் ஏறக்குறைய 50 ஆண்டுக்காலமாக வளர்ந்து வந்தவை. இப்பொழுது ஐரோப்பிய வரலாற்றில் அவை ஆழமாகப் பதியலாயின. தற்போது நாம் காணும் ருஷிய ஆதிக்கம் முளைவிட்டு வளரத் தொடங்கியது. இக்காலத்தில்தான் மதம், அரசியல், சமுதாயம் என்ற பல்வேறுபட்ட துறைகளிலும் ருஷிய எண்ணங்கள், கருத்துக்கள் என்ற யாவும் மற்ற ஐரோப்பியர் கண்களைத் திறப்பதுபோல் காட்சியளித்தன.

ஏழைகள், நிலத்தில் உழைத்துப் பாடுபடுபவர்கள், அடிமைகள் (slaves), நிலத்தோடு கட்டுப்பட்டவர்கள் (serfs) என்ற பாகுபாடுகள் உலகம் தோன்றிய நாள் முதற்கொண்டு சமுதாயத்தில் இருந்து வந்தவை யென்றாலும் அவற்றின் தளைகளை அறுத்தெறிய வேண்டும் என்ற புரட்சி மனப்பான்மை ருஷியாவில் இப்போது ஏற்பட்டதுபோல் வேறெங்கும் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் மற்ற நாடுகளைவிட இங்குத்தான் பெருவாரியான மக்கள் ஏழைகளாய்த் தவித்தார்கள். 19ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் 50,000,000-க்குக் குறையாமல் நிலச்சுவான்தார்களுக்குக் கட்டுப்பட்டவர்களாய் இருந்தார்கள். அவர்களுக்கு அறமன்றங்களை நாடிச் செல்ல உரிமையில்லை. அவர்கள் எல்லா வழக்குக்களையும் தங்கள் முதலாளிகள் வழியாகவே தீர்த்துக் கொள்ளவேண்டும். 1858 ஆம் ஆண்டிலே அப்போது ருஷிய மன்னராயிருந்த இரண்டாம் அலெக்சாண்டர் (Alexander II) இவர்களின் குறையைத் தீர்க்க முயன்றார். முதலில் தாமே தம் நிலங்களின் ஒருபகுதியை இவர்களுக்கு விற்று இவர்களுக்கு உரிமை தேடித் தந்தார். மற்ற முதலாளிகளையும் இப்படிச் செய்யும்படி செய்தார். ஆயினும் இதனாலும் பெரு நன்மை விளைந்துவிடவில்லை. முதலாளிகள் தம் நிலங்களுக்கு அதிக விலை வேண்டுமென்றனர். ஆகையால் தொழிலாளர்களில் பெரும் பகுதியினரால் அவற்றை வாங்கக் கூட வில்லை. இதனால்

இரு திறத்தாரிடையேயும் அமைதி குறைந்தது. நாட்டின் இளம் வீரர்கள் நம்பிக்கை இழந்தார்கள். அவர்களுக்கு உலகமே சூனிய மாகப்பட்டது. சூனியவாதம் (Nihilism) என்ற புரட்சி மனப் பான்மை நெருப்புப்போல் பரவியது. மன்னர் அலெக்சாண்ட ருக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. இந்நிலையில் அவர் ருஷிய மக்கள் சபையைக் கூட்டி ஆலோசிக்க எண்ணினார். அந்தச் சபைக்கு டூமா (Duma) என்று பெயர். அதற்கு முயன்று கொண்டிருக்கும் பொழுதே மன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார் (1881). விவாதம் வளர்ந்தது. அதைப் பற்றி அடுத்த இயலில் தொடர்ந்து கூறுவோம்.

VI

ஐரோப்பிய வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டின் இடையி லிருந்தே புதுக் கொள்கைகள் உலவத் தொடங்கின.

(1) முன் கூறியது போல் தனி வல்லாட்சி ஒழிந்து சட்டங் களுக்குக் கட்டுப்பட்ட அரசு இப்பொழுது எழுந்தது. ருஷியா, ஜெர்மனி தவிர மற்ற ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாகத் தெற்கு மேற்கு ஐரோப்பாவில் மக்கள் அரசு (Democracy) தழைத்தது. ருஷிய ஜெர்மனி நாடுகளிலுங்கூட மக்கள் சபைக்கு ஓரளவு மதிப்பு ஏற்பட்டது.

(2) மற்றொரு வகையிலும் அரசியல் மாறுதல் ஏற்பட்டது. இதுவரை நாட்டைப் பகைவரிடமிருந்து காப்பதே அரசியலாரின் வேலை என்றிருந்த நிலை மாறி மக்களுக்கு உணவளிப்பதும், அவர்களுக்கு உடை வசதி செய்வதும், இருக்க இல்லங்கள் தேடித் தருவதும், இத்தகைய பணிகளில் ஈடுபடுவதும், உதவுவதும் அர சியலாரின் வேலை என்ற நிலைமையேற்பட்டது. ஆயினும் இது உண்மையில் புதுக் கொள்கையன்று. பழங்காலத்தில் கிரேக்க அரசியலிலேயே இக்கொள்கை பிறந்தது. மக்களுக்கு வாழ்க்கை வசதி மட்டுமல்ல, அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய வசதியும் அரசு செய்துதர வேண்டும் என்பது அரிஸ்டாட்டல் கொள்கை. அது இப்பொழுது புத்துயிர் பெற்றது.

1871 ஆம் ஆண்டிலிருந்து இக்கொள்கை ஐரோப்பாவில் செயல்படத் தொடங்கியது. மக்களின் கல்வி, சுகவாழ்வு, தொழிலாளர் நலம், அவர்களுக்கு முதலாளிகள் கொடுக்க வேண்டிய ஊதியம் ஆகிய பலவற்றிலும் அரசியலார் கலந்து செயலாற்றினார்கள். குடிமக்கள் எதைப் படிக்க வேண்டும், ஆசிரியர்கள் எப்படி எழுத வேண்டும், இதழ்கள் எதை எழுத வேண்டுமென்ற அளவுக்கு அரசியலார் இக்காலத்தில் கவனம் காட்டினார்கள். இதற்காக வேண்டிய சட்டங்களும் இயற்றப் பட்டன.

(3) 19ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய வரலாறு தேசியத்தின் வரலாறு என்று கூறவேண்டும். இந்த நூற்றாண்டின் முடிவில் தேசியக் கொள்கை ஒருவாறு வரையறுக்கப்பட்டது. ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தேசியத்தை வளர்க்க முடியுமென்ற கொள்கை இப்போது கைவிடப்பட்டது. தேசிய மென்பது மன உணர்ச்சி, இன உணர்ச்சி அதற்கு அவசியமல்ல என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகையால் பல இன மக்கள் வாழும் நாடும் தேசிய நாடாக இருக்க முடியும் என்பது இப்போது புலனாயிற்று.

(4) இவ்விதமாகத் தேசிய உணர்வு பெருநோக்குப்பெற்றது. இதிலிருந்து பன்னாட்டு உறவு உணர்ச்சி (Internationalism) தோன்றியது. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாய் நாட்டுக்கு நாடு நெருக்கமுண்டாயிற்று. தவிர கலை, மொழி, பல்கலைக் கழகங்கள் இவையாவும் நாடுகளிடையே தொடர்பு ஏற்படுத்தின. வாணிகம், தொழிலாளர் இயக்கங்கள், முதலாளிகளின் தொடர்பு இவையும் அதே பணியைப் புரிந்தன. இவ்வழியாய் இந்த நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து நாட்டுத் தொடர்புகள் வளர்ந்தன.

இவ்வரசியல் மாறுதல்கள் தவிர, சமுதாயம், மதம் என்ற இவ்விரு துறைகளிலும் பெரு மாறுதல்கள் ஏற்பட்டன. ஐரோப்பா முழுவதிற்கும் ஒரே மதம் என்று 13, 14 நூற்றாண்டுகளில் இருந்த நிலை முற்றிலும் மாறியது. 16ஆம் நூற்றாண்டின் சமயச் சண்டைகள் இப்பொழுது மறந்த கனவுகள் போல் காட்சியளித்தன. இந்த 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பல மதங்கள் இயங்கின. எல்லா மதங்களும் பூசலின்றி ஒன்றாக வாழ முடியும் என்ற முறை இப்போது ஏற்பட்டது.

சமுதாய அமைப்பிலும் பெரிய மாற்றம் ஏற்பட்டது. கூடிவாழ்வுடமைக் கொள்கை (Socialism) பரவியது. பிரஞ்சுப் புரட்சியின் போது தலையெடுத்த கொள்கை பெரிதாக இப்பொழுது வளர்ந்துவிட்டது. இது குறிப்பாக, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வளர்ச்சியுற்றது. பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் பல தீவிரவாதிகள் தோன்றினார்கள். இவர்களுக்கு எதிரான கட்சிகளும் அங்குத் தோன்றின. ஆயினும் சமத்துவம் எதிர்ப்பு காரணமாக இன்னும் மிக்கு வளர்ந்தது. 1889ஆம் ஆண்டு பல ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் சமத்துவ வாதிகள் பாரிஸ் நகரில் ஒரு பெரு மாநாடு கூட்டினார்கள் (Second International).

கடைசியாக விஞ்ஞான வளர்ச்சியைக் குறிப்பிட வேண்டும். பன்னாட்டு உணர்ச்சி வளர்வதற்கு விஞ்ஞான வளர்ச்சி துணை

புரிந்ததென்பதைக் கூறினேம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிகப் பெரிய விஞ்ஞான சாதனைகள் ஏற்பட்டன. மின்சாரம், தந்தி, மின்சார வண்டி, மோட்டார் வண்டி, துவிச் சக்கர வண்டி (Bicycle), ரேடியோ, தொலைபேசும் கருவி (Telephone) முதலிய பல வாழ்க்கை வசதிகளை விஞ்ஞானம் இப்போது கண்டு பிடித்துத் தந்தது. இவற்றால் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததுமன்றி வாழ்க்கைக் குறிக்கோள்களும், அரசியல் கருத்துக்களுங்கூட மாறின. இவ்வித அரசியல் மாற்றங்களுக்கு ஆதரவளித்த விஞ்ஞான வளர்ச்சியில் முதலாவது 1809ஆம் ஆண்டிலிருந்து 1882 வரை வாழ்ந்த சார்லஸ் டார்வின் (Charles Darwin) என்பவர் கண்டுபிடித்த வாழ்க்கையின் வளர்ச்சி முறை யாகும். இதற்கு டார்வினின் ''படி முறை வளர்ச்சிக் கருத்து'' (Theory of Evolution) என்று பெயர் பிறந்தது. இதை அவர் 1859 ஆம் ஆண்டில் வெளியிட்ட ''இனத்தின் தோற்றம்'' (Origin of the Species) என்ற நூலிலே விளக்கினார். உடனே ஐரோப்பாவில் மட்டுமல்ல, உலகம்முழுவதிலுமே விஞ்ஞானிகள், அரசியல் தலைவர்கள், அறிஞர்கள் என்ற பலரிடமும் ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்பட்டது. இனங்களின் தோற்றம் திடீரென்று ஏற்படுவதில்லை. அவை ஒரினத்தினின்று மற்றோரினமாகத் தங்கள் திறமையால் படிப்படியாகத் தோன்றுகின்றன. இதற்கு ''இயற்கைத் தேர்தல்'' (Natural Selection) என்று டார்வின் பெயர் சூட்டினார். இதனால் அரசியலில் கீழ்ப்பட் டோரை மேம்பாடடைந்தவர்கள் நசுக்குவதும், தாழ்ந்தவர் மேற்பட்டோராகச் சண்டையிடுவதும் முறையானதென்பது பெறப்பட்டது. இதைக் கிரகர் மெண்டெல் (Gregor Mendel) போன்ற சிறந்த உயிரியல் அறிஞர்கள் (Biologists) எதிர்த் தார்கள். ஆயினும் டார்வினுடைய கொள்கைகள் இன்றும் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுவதை நாம் அறிவோம்.

நிற்க, லிஸ்டர் (Lister), பாஸ்டர் (Pasteur) போன்ற மருத்துவ அறிஞர்கள் கிருமிகளால் நோய் ஏற்படுவதைத் தடுக்க வழி கண்டு பிடித்தார்கள். அறுவை (Surgery) சிகிச்சை முறை அதிக மாக முன்னேறியது. இதனால் சுகவாழ்வு அதிகரித்தது. போர்க் காலங்களில் போர் வீரர்களின் நலனைப் பாதுகாக்க இவை பெரிதும் பயன்பட்டன. 1895 ஆம் ஆண்டு ரோன்ட்ஜென் (Rontgen) எக்ஸ்-ரேயைக் கண்டுபிடித்தார். அதே ஆண்டில் கம்பியில்லாத் தந்தியை (Cable) மார்க்கோனி (Marconie) கண்டு பிடித்தார். மூன்றாண்டுகளுக்குப் பிறகு மேடம் மரியக் கூரி (Marie Curie) ரேடியம் என்ற உலோகத்தைக் கண்டுபிடித்தார். பிறகு அணு(Atom)வின் ஆற்றல் கண்டுபிடிக்கப்பட்டது.

16. போரின் வழி

(1901—1914)

(எதிர்பாராத போர்—ருஷியப் புரட்சி—பால்கன் பிரதேசம் முத்திறத்தார் ஒன்றிப்பு—உலகத்தில் பெருகும் ஐரோப்பிய ஆதிக்கம்—பால்கன் புரட்சி—சொற்பிய எழுச்சி)

உலகத்தில் பல நிகழ்ச்சிகள் எதிர்பாராமல் நடைபெறுகின்றன. எதிர்பார்த்து நடப்பவற்றைவிட எதிர்பாராமல் நடப்பவையே மிகுதியென்று கூறவேண்டும். 1914 ஆம் ஆண்டு நடந்த முதல் உலகப் போரும் எதிர்பாராமல் நடந்தது. பல சண்டைகளுக்குப் பிறகு ஐரோப்பா அமைதியை நாடிற்று. நாட்டுக்கு நாடு மிகுந்த தொடர்பு ஏற்பட்ட காரணத்தால் இனி, சமரசத்தாலேயே சிக்கல்களை நீக்கிக் கொள்ளலாமென்று ஐரோப்பா நம்பியது. 1871 லிருந்து 1914 வரையுள்ள காலத்தை ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் பொன்னை இடைவெளி (golden interval) என்று கூறுகிறார்கள். ஆயினும் எவரும் அறியாமலே ஒரு மாபெரும் போர் இக்காலத்தில் உருவாகியது.

II

1881 ஆம் ஆண்டு ருஷிய மன்னர் இரண்டாம் அலெக்சாண்டர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று முன்னியலில் கூறினேம். அவருக்குப்பின் பட்டமெய்திய மூன்றும் அலெக்சாண்டர் இனித் தாம் ஏழைகளின் நன்மையைக் கோரி ஒன்றும் செய்யப் போவதில்லை என்று சொல்லிவிட்டார். அது மட்டுமல்ல; பல மதத்தினரும் துன்புறுத்தப்பட்டார்கள். இதனால் புரட்சி மனப்பான்மை ஓங்கியதே யொழியக் குறையவில்லை. இந்த நிலையில் 1894 ஆம் ஆண்டு அவர் உயிர் நீத்தார்.

அவருக்குப் பின் போந்த இரண்டாம் நிக்கோலஸ் (Nicholas II) மன்னர் காலத்தில் புரட்சி பெருகியது. ருஷிய நகரங்கள் யாவற்றிலும், சிறப்பாகப் பெட்ரோகிராட் தலைநகரிலும், படைவீரர்கள் இடையிலும், கப்பற்படையினரிடையேயும் புரட்சி ஏற்பட்டது. 1905 ஆம் ஆண்டு மன்னர், டூமா (மக்கள் சபை)வை அழைத்து ஆலோசிப்பதாக வாக்களித்தார். அதன்

படி அடுத்த ஆண்டு சபை கூடியது. இனி, கட்டுக்கடங்கிய நல்லாட்சி ஏற்படுமென்று எல்லோரும் நம்பினார்கள். ஆனால் அதற்கு வழிவகைகள் வகுப்பதைப்பற்றி எண்ணற்ற கருத்து வேறுபாடுகள் எழுந்தன. அதனால் மன்னர் கொடுமையான அடக்குமுறைகளைக் கைக்கொண்டு டுமாவைக் கலைக்க வேண்டிய தாயிற்று. மற்றொரு சபையைக் கூட்டியும் அதைக் கட்டுப் படுத்தமுடியவில்லை. மறுபடியும் கொடுமையான அடக்கு முறைகள் பயன்படுத்தப்பட்டன. ஆயினும் புரட்சி அடங்குவ தற்குப் பல ஆண்டுகள் பிடித்தன. இவ்விதமாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாம் ஐரோப்பிய வரலாற்றில் காண்பவை புரட்சியும் கொடுமையும். இவை ஒரு விதத்தில் வரப்போகும் வரலாற்றையே அறிவித்தன வென்று நாம் கூற வேண்டும்.

III

இந்நிலையில் ஐரோப்பாவில் அப்போது தலைமை பெற் றிருந்தது ஜெர்மனி. 1871 ஆம் ஆண்டிற்குப் பிறகு அதன் பெருமை உயர்ந்தது. ருஷிய, ஆஸ்திரியப் பேரரசர்களும் அதனோடு சேர்ந்தார்கள். இதற்கு மூவேந்தர் கூட்டிணைப்பு (League of Three Emperors) என்ற பெயர் சூட்டப்பட்டது. ஆனால் உண்மையில் இவர்களுக்குள் எவ்வித ஒப்பந்தமும் ஏற்படவில்லை. பால்கன் தீபகற்பத்தில் மட்டும் அடிக்கடி சச்சர வுகள் ஏற்பட்டன. ஆயினும் ஐரோப்பிய அமைதியை அவை குறைப்பதாக யாரும் எண்ணவில்லை. ஆயினும் ஆஸ்திரியா, ருஷியா, இங்கிலாந்து போன்ற நாடுகள் பால்கனில் தம் ஆதிக்கத்தை ஏற்படுத்த ஆவல் கொண்டன. மத்தியதரைக் கடலுக்கு இதன் மூலமாக வழிகாணக் கூடுமென்ற ஆசையால் பால்கனின் மதிப்பு அவற்றின் கண்முன் நாள் செல்லச் செல்ல உயர்ந்தது. 1877 ஆம் ஆண்டில் அங்கு ஆட்சி செலுத்தி வந்த துருக்கியரோடு போரிட ருஷியா தயாரானது. அதன் பிறகு ஏற்பட்ட ருஷிய துருக்கிப் போர் (Russo-Turkish War) மிகப் பெரியதாகும். முதலில் ருஷியா தோற்றுவிடும் போல் தோன் றியது. ஆனால் அதன் பெரும்படை, செல்வ வசதி, படை யாட்சித் திறன் இவையெல்லாம் ஒன்றுகூடித் துருக்கியை வென்றன. ருமேனியரின் துணை கொண்டு ருஷியா கான்ஸ்டாண்டி நோபிள் வரை சென்றது. அதன் பிறகு துருக்கி பணிந்தது. சென் ஸ்டெவானோ (San Stefano) உடன்படிக்கை ருஷியாவுக்கும் துருக்கிக்குமிடையே ஏற்பட்டது. ருஷியாவின் வெற்றியைக் கண்ட இதர ஐரோப்பிய நாடுகளும், சிறப்பாக இங்கிலாந்தும்,

அந்த வெற்றியில் கலந்து கொள்ள ஆவல் கொண்டன. பிஸ்மார்க்கின் திறமையாலும் இங்கிலாந்தின் பிரதமராயிருந்த டிஸ்ரேலி (Disraeli) யின் திறமையாலும் பெர்லின் நகரில் கூட்டப்பட்ட ஐரோப்பிய மாநாடு ஒன்றில் ருஷியாவோடும் துருக்கியோடும் மற்றோர் உடன்படிக்கையும் உருவானது (1878). இதன்படி நாம் முன்னர்க் கூறியதுபோல் சைபிரஸ் தீவு இங்கிலாந்தின் வயமாயிற்று. பல்கேரியா (Bulgaria) நாட்டின் எல்லை பால்கன் மலையோடு நிறுத்தப்பட்டது. ருமேனியா (Rumania), மோன்டே நீக்ரோ (Monte Negro), செர்பியா (Serbia) நாடுகளுக்கு உரிமை வழங்கப்பட்டது. போஸ்னியா (Bosnia), ஹெர்செகோவினு (Herzegovina) நாடுகள் துருக்கியின் ஆதிக்கத்தில் ஆஸ்திரியாவின் தலைமையின்கீழ் இயங்க வேண்டி வந்தது. பால்கன் மலைக்குத் தென்பகுதியில் ரூமேலியா (Roumelia) என்ற புது நாடு ஒன்று துருக்கியின் ஆதிக்கத்தின்கீழ் இயங்கிற்று.

IV

பெர்லின் உடன்படிக்கைக்குப் பிறகு ருஷியாவிற்கும் ஜெர்மனிக்குமிடையே இருந்த நட்புளப் பான்மை குறைந்தது. பிஸ்மார்க் இங்கிலாந்தோடு சேர்ந்ததால்தான் பெர்லின் உடன்படிக்கை ஏற்பட்டது, துருக்கியின் வன்மை முழுவதும் நைந்து போகாமலிருப்பதற்கும் வழியேற்பட்டது என்று ருஷியா வருத்தமுற்றது. ஆஸ்திரியா ஜெர்மனியோடு உறவு பூண்டது. ருஷியாவிற்கும் ஆஸ்திரியாவிற்கு மிடையே பால்கன் ஆதிக்கத்தைப் பற்றி எப்போதும் மனத்தாங்கல் இருந்து கொண்டே வந்தது. இப்போது ஜெர்மனிக்கும் ருஷியாவிற்குமிடையே மனக் கசப்பு ஏற்பட்டது. ஆஸ்திரியாவிற்கும் ஜெர்மனிக்கும் நட்பு ஏற்பட்டதில் வியப்பில்லை. இந்நிலையில் இத்தாலியும் இவ்விரண்டு நாடுகளின் நட்புக்கு விழைந்தது. அங்கு உள்நாட்டு அமைதி என்பதே கிடையாது. வெளி நாட்டிலாவது உறவு வேண்டுமென்று இத்தாலி மன்னர் எண்ணங்கொண்டார். தவிர பிரெஞ்சுக்காரர்கள் டுனிஸ் (Tunis) நகரைக் கைப்பற்றி இத்தாலியின் தென் எல்லைக்கு அண்மையில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்கள் இதனால் இத்தாலிக்கு அந்நிய நாட்டுத் தொடர்பு முன்னிலும் அதிக அவசியமாயிற்று. 1883 ஆம் ஆண்டு ஆஸ்திரியா, ஜெர்மனி, இத்தாலி என்ற இந்த மூன்று நாடுகளுக்குமிடையே ஒரு நேச உடன்படிக்கை நிகழ்ந்தது. அதற்கு முத்திறத்தார் ஒன்றிப்பு அல்லது முக்கூட்டு ஒப்பந்தம் (Triple Alliance) என்று பெயர் வந்தது.

அரசியல் நுட்பங்களும் சில சமயம் சிறு பிள்ளைகள் விளையாட்டுப்போல் தோன்றுவதுண்டு. சிறு பிள்ளைகள் விளையாட்டில் கட்சி சேர்வதுபோல் பிரான்ஸ் இப்போது ருஷியாவுடன் சேர்ந்தது. அதைப் பின்பற்றி இங்கிலாந்து பிரான்ஸோடு தனியாக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. இதற்கு நேச ஒன்றிப்பு அல்லது நேச நாடுகளின் ஒப்பந்தம் (Entente cordiale) என்று பெயர். ஜெர்மனியின் முற்போக்கு, சிறப்பாக அதன் வளரும் கடற்படை, இங்கிலாந்திற்கு அதன் மேல் பகையை மூட்டியது. இது எவ்வாறுயினும் மற்றொரு முத்திறத்தார் ஒன்றிப்பு இப்போது ஏற்பட்டது. இரண்டும் எதிர் எதிராக, மேலும் சொல்லப்போனால் பகை மனப்பான்மையோடு இயங்கின.

V

இந்நிலையில் ஐரோப்பிய நாடுகள் உலகெங்கும் தம் தம் ஆதிக்கத்தை நிறுவ விழைந்தன. இதற்குப் பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல், சிறப்பாக இங்கிலாந்து போன்ற நாடுகள் முன்கூட்டியே வழி காட்டியிருந்தன. இப்போது ஜெர்மனி தனது வலிமைக்கும் செல்வத்திற்குமேற்றவாறு வெளி ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தது. இது வெறும் ஆசைக்காக மட்டுமல்ல; வணிக வளர்ச்சி, மக்கள் குடியேற்றம், ஐரோப்பிய அரசியல் மேடையில் கண்ணியம் என்ற இவற்றிற்காகவும் வேண்டியதாயிற்று. தவிர அண்மையில் போயர் கலகத்திற்குப் பிறகு ஆப்பிரிக்காவின் பல பாகங்களில் ஜெர்மன் ஆதிக்கம் பரவிற்று. இது ஜெர்மனியின் வெளிநாட்டுப் பெருக்கத்திற்குச் சிறந்த தூண்டுகோலாக அமைந்தது. சீனவில் சிங்டோ (Tsing Tao) என்ற இடம் ஜெர்மனியின் வயமாயிற்று. பிறகு அது மொராக்கோவை (Morocco) நாடியது. ஆனால் பிரான்ஸ் இங்கிலாந்தோடு சேர்ந்து மொராக்கோவைக் கைப்பற்றியது. இது இரண்டு நேச ஒப்பந்த நாடுகளிடையேயும் மனக்கசப்பை அதிகரித்தது. 1912 ஆம் ஆண்டு இத்தாலி டிரிப்பொலியை (Tripoli)க் கைப்பற்றியது


1885 ஆம் ஆண்டு ருமேனியாவும் பல்கேரியாவும் ஒன்றாய் இணைந்தன. அதற்கு மூன்றாண்டுகளுக்குமுன் ஆங்கிலேயர் எகிப்தைக் கைப்பற்றினர். 1895 ஆம் ஆண்டு கிரீட் தீவு (Crete) கிரேக்கர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டது. ருஷியா துருக்கி சுல்தானோடு ஒப்பந்தம் செய்துகொண்டு அண்மைக் கிழக்கு நாடுகளில் ஆதிக்கம் தேடியது. ஜெர்மனிக்கும் பாக்தாத் நாடுகளுக்கு மிடையே போக்குவரத்து வைத்துக்கொள்ள பாக்தாத் ரயில்வழி

அமைக்கத் திட்டமிட்டது. அதில் வேறு சில நாடுகளையும் சேர்த்துக்கொண்டு தனக்கு முக்கியப் பங்கு வைத்துக்கொண்டது.

VI

1908-ஆம் ஆண்டில் துருக்கி சுல்தானின் வலிமை யிழந்த நிலைமையைக் காரணமாகக் கொண்டு அவரை அரியணையிலிருந்து விலக்க ஒரு பெரும் புரட்சி கான்ஸ்டாண்டிநோபிளில் எழுந்தது. ஆஸ்திரியா, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி போஸ்னியா, ஹெர்சகோவினுப் பிரதேசங்களைத் தனக்குச் சொந்தமாகச் செய்துகொண்டது. இதைப் பற்றிப் பால்கன் நாடுகளில் மனத் தாங்கல் ஏற்பட்டது. அவைகள் ஒன்றுகூடி மறைவில் ஓர் இணைப்பை (Balkan League) ஏற்படுத்தின. தங்கள் உரிமையைக் காப்பதற்கு முதலாவதாகத் துருக்கியரை நாட்டை விட்டுத் துரத்த வேண்டுமென்று தீர்மானித்த பால்கன் நாடுகள் எதிர் பாராத விதமாய் அவர்களைத் தாக்கின (1912). கிரேக்கர், செர்பியர், மொண்ட நீக்ரோவர்கள், பல்கேரியர் என்ற இவர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் துருக்கியரைத் தோற் கடித்தார்கள். சிறப்பாகப் பல்கேரியர் துருக்கியரை இரண்டு பெருஞ்சண்டைகளில் தோல்வியுறச் செய்தனர். அட்ரியா நோப்பிள் நகரம் (Adrianople) பல்கேரியர் வசமாயிற்று.

பல்கேரியர் இந்தச் சண்டையில் சிறந்த வீரச் செயல்களைப் புரிந்தார்கள். வெற்றியும் பெரிதும் அவர்களுடையதாகவே இருந்தது. ஆதலால் வெற்றியின் பெரும் பலன் தங்களுக்கே வர வேண்டுமென்று அவர்கள் விழைந்தார்கள். பால்கன் தீவின் முதலிடம் அவர்களுடையது என்று எண்ணினார்கள். ஆனால் அது அவ்வளவு எளிதில் அவர்களுக்குக் கிடைப்பதாயில்லை. முதலில் கிரீஸ் நாடு அதை எதிர்த்தது. சலோனிக்கா (Salonica)ப் பிர தேசம் பூகோளப்படி கிரீசைச் சேர்ந்தது. ஆனால் பல்கேரியா அதை எதிர்த்தது. இதனால் இருநாடுகளுக்குமிடையே மிகுந்த மனக்கசப்பு நேர்ந்தது. இதனிடையே செர்பியா நாடும் பல்கேரி யாவின் எண்ணத்திற்கு ஒத்து வரவில்லை. துருக்கியரோடு செய்த சண்டைக்குப் பிறகு பால்கன் நாடுகளில் செர்பியா மிகப் பெரிதாயிற்று. ஆயினும் அதற்குக் கடல் வசதி ஏற்படவில்லை. பல்கேரியா வெற்றியின் விளைவாக எஜீயன் கடலுக்குச் செல்ல வழி ஏற்படுத்திக் கொண்டது. இதனால் செர்பியா இன்னும் பல் கேரியாவிற்கு விட்டுக் கொடுப்பதாயில்லை. பால்கன் பிரதேசத்தைச் சேராத கிரீஸ் நாடும் இப்போது கிரீட், சலோனி


இங்கிலாந்து
நீகா
ருஷியா
வார்சா
பெல்ஜியம்
கெர்மனி
பிரான்ஸ்
ஹாலண்டு
ஆஸ்திரியா
ஹங்கேரி
பல்கேரியா
கான்ஸ்டாண்டிநோபிள்
ஒட்டமான்
1914-ல் ஒட்டமான் பேரரசும்
பால்கன் நாடுகளும்

காப் பிரதேசங்களோத் தன்னோடு சேர்த்துக்கொண்டு பெரு நாடாகத் திகழ்ந்தது. இந்நிலையில் போஸ்னியா, ஹெர்ச கோவினு நாடுகள் இன்னும் ஆஸ்திரிய ஆதிக்கத்தின்கீழ் இருந்தது செர்பியாவிற்குப் பிடிக்கவில்லை. இவற்றையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு இவற்றிற்கு முதலில் சுதந்திரம் தேடவேண்டும், பிறகு பால்கனில் தன்னையே உயர்ந்த பீடத்தில் அமைத்துக் கொள்ள வேண்டுமென்று செர்பியா எண்ணியது. பால்கன் பிரதேச நாடுகளையெல்லாம் ஒரு கூட்டிணைப்பாக அமைத்து அதன் தலைமை இடத்தைத் தன்னிடம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று செர்பியா எண்ணியது.

VII

பல நாடுகளாகப் பிரிக்கப்பட்ட பால்கன் பிரதேசம் இணைக்கப்பட்ட ஒரு நாடாக (Confederation)த் திகழ்ந்திருந்தால் அந்நாட்டுக்கு மட்டுமல்ல, ஐரோப்பாவிற்கே நன்மை கூடியி ருக்கும். ஆயினும் செர்பியாவின் இந்தக் கொள்கையிலிருந்து ஒரு பெரும் போர் விளைந்து அதுவே முதல் உலகப் போராக மாறுமென்று யாரும் எண்ணவில்லை. ஆயினும் ஓராண்டிலேயே இந்தப்போர் தொடங்கியது. செர்பியாவின் எழுச்சி ஆஸ்திரியா விற்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் வெகு காலமாக அந்நாடு பால்கன் பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. தவிர செர்பியர்கள் பலர் இன்னும் ஆஸ்திரியப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் எல்லோரையும் ஒன்றுகக் கூட்டித் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர எண்ணமிட்டுக் கொண்டிருந்தது செர்பியா. செர்பியாவோடு போர் தொடுத்து அதன்மேல் வெற்றி காண வேண்டுமென்று சிறிது காலமாக ஆஸ்திரியா எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. இத்தாலிதான் அதைத் தடுத்து வந்தது.

இந்த நிலையில் 1914ஆம் ஆண்டு ஜூன் மீ 28 ஆம் நாள் செர்பியாவிலுள்ள செராஜீவோ (Serazevo) என்ற இடத்தில் ஆஸ்திரிய மன்னரின் தலைமகன் சுட்டுக் கொல்லப்பட்டான். இளவரசர் பர்டிணண்டின் படுகொலை முதல் உலகப் போருக்கு உடனடிக் காரணமாகியது. செர்பியா நாட்டு அரசிற்கும் இதற்கும் சம்பந்தம் கற்பித்தது ஆஸ்திரியா. அதற்குத் தக்க ஈடு செய்ய வேண்டுமென்று ஆஸ்திரியா செர்பியாவைக் கேட்டது. இதற்குப் பதில் சண்டையைத் தவிர வேறில்லையென்று செர்பியா முடிவு செய்தது. ருஷியா பால்கன் பிரதேசத்தில் கொஞ்ச

காலமாகவே ஒரு கண் வைத்துக் கொண்டிருந்தபடியால் இந்த வாய்ப்பை விடாமல் ஆஸ்திரியாவிற்கு எதிராக, செர்பியாவோடு சேர்ந்தது. ஜெர்மனி பழைய உடன்படிக்கைப்படி ஆஸ்திரியாவோடு சேர, பிரான்ஸ் ருஷியாவோடு சேர்ந்தது. இங்கிலாந்தும் ஆன்டான்ட் கோர்டியால் என்ற உடன்படிக்கைப் படி பிரான்ஸோடு சேர்ந்து கொண்டது. இவ்விதமாகச் சிறு செயலிலிருந்து பெரும் போர் மூண்டது (1914). இந்தப் போர் உலகம் முழுவதிலும் பரவியதால் இது உலகப் போர் என்று பெயர் பெற்றது.



1914_இல் ஐரோப்பா

17. முதலாம் உலகப்போர்

(1914-1919)

[போரின் சிறப்பியல்புகள்--போரின் தொடக்கம் (ஜெர்மானியத் துரிதப் போர் முறை)--ஆங்கிலேயக் கடல் வலிமை--மேற்கெல்லைப் போர்--கிழக்கெல்லைச் சண்டை--ருஷியப் புரட்சி (1917)--போரின் கடைசிக் கட்டம்]

I

சிறிய போராகத் தொடங்கி உலக முழுவதும் பரவிய முதற் போர் இதுவாதலால் இதற்கு முதல் உலகப்போர் என்ற பெயர் சாலவும் பொருத்தமானது. உலகத்தின் முக்கால் பகுதி இந்தச் சண்டையில் நேரடியாக ஈடுபட்டது. சண்டையின் தொடக்கத்தில் ஜெர்மனியும் ஆஸ்திரியாவும், ருஷியா, பிரான்ஸ், இங்கிலாந்து, செர்பியா, மாண்டிநிக்ரோ, பெல்ஜியம், ஜப்பான் என்ற நாடுகளுக்கெதிராகப் போரிட வேண்டியதாயிற்று. சண்டை தொடங்கியவுடனே துருக்கி ஜெர்மனியோடு சேர்ந்தது. அதன் பிறகு பல்கேரியாவும். ஜெர்மனிக்கு உதவ முன் வந்தது. ஆனல் ஜெர்மனிக்கு எதிராகப் பல நாடுகள் ருஷியா பிரான்ஸ் முதலிய நாடுகளோடு சேர்ந்தன. ஜெர்மனியை எதிர்த்து நின்ற நாடுகளை வரலாறு 'நேசநாடுகள்' (Allies) என்றே குறிக்கின்றது. மற்றதை நாம் 'ஐக்கிய நாடுகள்' என்று இந்நூலில் குறிப்போம்.

நேச நாடுகளோடு முதலில் சேர்ந்த நாடு இத்தாலி. முத்திறத்தார் ஒன்றிப்பின்படி ஜெர்மனி, ஆஸ்திரிய நாடுகளோடு இத்தாலி சேர்ந்திருக்க வேண்டும். ஆனல் அது இத்தாலிக்குப் பிடிக்கவில்லை. நேச நாடுகளோடு சேர்வதற்கு அது ஒரு வழி கண்டுபிடித்தது. முத்திறத்தார் ஒன்றிப்பு மூன்று நாடுகளும் தம்மைப் பிற நாடுகளின் ஆதிக்கத்தினின்றும் காத்துக் கொள்வதற்காக ஏற்பட்டதேயொழிய, பிறநாடுகளோடு சண்டை செய்வதற்கன்று என்று கூறித் தான் ஒரு பக்கமும் சேராமல் நடுநிலைமையாயிருக்கப் போவதாக அறிவித்தது. ஆனல் போர் வெம்மை மிக மிக இத்தாலியின் நடுநிலை தளர்ந்து போய்விட்டது.

தவிர இத்தாலி நாடு ஆஸ்திரியாவை உள்ளூர வெறுத்தது 1915ஆம் ஆண்டு மேத் திங்களில் இத்தாலி நேச நாடுகளோடு சேர்ந்தது. ருமேனியா பால்கன் பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருந்தபோதிலும், அதன் மக்கள் பிரெஞ்சுக்காரரோடு பிறப்பி லேயே தொடர்பு கொண்டவர்கள். தவிர ஆஸ்திரியாவை ருமேனியா வெறுத்தது. ஆகையால் சண்டை தொடங்கி ஈராண்டு கழிவதற்குள் ருமேனியா ஆஸ்திரியாவோடு சண்டை தொடுத்து நேச நாடுகளுடன் சேர்ந்தது (ஆகஸ்டு 1916).

இது ஒருபுறமிருக்க, இருதிறத்தாரும் அவரவர்களுக்குச் சேர்ந்த வெளிநாடுகளையும் சண்டையில் கலக்கும்படி செய்தார்கள். ஆப்பிரிக்காவில் ஜெர்மானியருக்குச் சொந்த மான பகுதிகளை நேசநாடுகள் தாக்கின; ஜப்பானியர் ஜெர் மனிக்குச் சொந்தமான சீனப் பகுதிகளைத் தாக்கினர்; அதே சமயம் ஆங்கிலேயர் இந்தியப் படைகளைத் தங்களுக்குத் துணை யாகச் சேர்த்துக் கொண்டார்கள். அமெரிக்காவில் கானடா ஆங்கிலேயருக்குத் துணையாகச் சண்டை செய்தது. அமெரிக்க ஐக்கிய மாகாணங்களும் நேச நாடுகளின் பக்கமாய்ச் சண்டையில் கலந்தன. அவற்றைப் பின்பற்றித் தென் அமெரிக்காவும் போரில் கலந்தது.

இவ்விதமாய் உலகத்தின் பல பாகங்களிலும் பலநாடுகளிலும் இந்தச் சண்டை பரவியது. சண்டையில் ஈடுபட்ட போர் வீரர் களின் எண்ணிக்கை 50,000,000 க்கும் மேற்படுமென்று கணக் கிடப்பட்டுள்ளது. 8,000,000 க்கும் மிகுதியானவர்கள் இறந்தார்களென்றும், ஏறக்குறைய 32,000 000 க்கும் மிகுதி யாகக் காயப்பட்டார்களென்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இதைத் தவிர வானக் கப்பல்களாலும் (aeroplanes), நீர்மூழ்கிக் கப்பல்களாலும் (submarines) குண்டு வீசப்பட்டு இறந்த பொது மக்கள் பல்லாயிரராவர். சுருங்கக் கூறின் இந்தச் சண்டையால் விளைந்த பேரிழப்பிற்கு முக்கியக் காரணங்கள் இரண்டு என்று கூறவேண்டும்.

(1) அண்மைச் சண்டைகள் (fight at close quarters): ரோமர்கள் காலத்தில் இத்தகைய சண்டைகள் வாள் மூலம் நடந்தன. இதனல் இறந்தவர்கள் பலர். ரோமர்களுடைய குறு வாளுக்கு (Short sword of the Romans) அக்காலத்தில் போர் வீரர்களும் மிக அஞ்சினர்கள். ஆனல் நாள் செல்லச் செல்ல நெருங்கிய சண்டைகள் வெறுக்கப்பட்டன. அண்மையிலிருந்து ஒருவனை வெட்டி வீழ்த்துவது நாகரிக முறைக்குப் புறம்பானது

என்று எல்லோரும் எண்ணினர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் இந்தப் பெரும்போரில் அண்மைச் சண்டை மறுபடியும் நடை முறையில் வந்தது. காரணம் தேசிய வளர்ச்சி என்றுதான் பொது வில் கூறவேண்டும். 16ஆம் நூற்றாண்டிலிருந்து ஏறக்குறைய 400ஆண்டுக் காலம் வளர்ந்து வந்த தேசிய வளர்ச்சி நாடு களுக்குள் பகைமையைத் தீ போல் வளர்த்தது. அந்தப் பகை மையின் கொடுமை தனிச் சண்டைகள், வாள் கொண்டு வீழ்த்துதல் போன்றவையாகும். இந்தச் சண்டைக்கு வாய்ப் பளித்தது இப்போது பழக்கத்தில் வந்த குழிச்சண்டை முறை (Trench warfare). விமானச் சண்டையின் காரணமாகக் குழி வெட்டி அதில் படைவீரர்கள் மறைந்து கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது. அதனால் தரைப்படையார்களும் எதிரியை நெருங் கினாலொழிய அவர்களுக்கு எவ்விதத் துன்பமும் விளைவிக்க முடியாது. இவ்விதமாகத் தோண்டப்பட்ட பதுக்குக் குழிகள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஏறக்குறைய ஐரோப்பா முழுவதுமே இருந்தன. ஓஸ்டென்டிலிருந்து சுவிட்சர்லாந்துவரை எங்கும் பதுக்குக்குழி மயமாயிற்று. ஆகவேதான் அண்மைச் சண்டை நடைமுறைக்கு மறுபடியும் வந்தது. அதனால் உயிர் நீத்த படை வீரர்கள் பலர். இந்த அண்மைச் சண்டை முறையிலே இந்தியா ஒரு புகழ் தேடிக் கொண்டது. அதுதான் திபெத்திலிருந்து போருக்குக் கொண்டு செல்லப்பட்ட கூர்க்க வீரர்களின் (Gurkhas) சிறுகத்தியின் புகழ். அண்மையில் நெருங்கிய வீரரை வெட்டி வீழ்த்துவதில் இவர்களை விஞ்சினவர் இல்லை என்று இவர் களின் சிறுகத்தி புகழ் பாடிற்று.

(2) விஞ்ஞானம் கண்ட புதுமுறைகள், நவீனங்கள்: இந்தச் சண்டைக்கு முன்புதான் விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், டாங்குகள், நச்சுப்புகை போன்ற பல நவீனங்களை விஞ்ஞானம் கண்டுபிடித்தது. டாங்கு என்பது பீரங்கி தாங்கிய பெரிய மோட்டார் வண்டி. இவ்வண்டிகள் ஏற்றிச்சென்ற துப்பாக்கிகள் உண்மையில் பீரங்கிகள் அல்ல, பெருந் துப்பாக்கிகள். முன் சண்டைகளில் பீரங்கிகளை மக்கள் அறிவார்கள். ஆனால் இத்திறப் பட்ட பெருந் துப்பாக்கிகளை அவர்கள் கண்டதில்லை. இவை இயந்திரத்தால் இயங்குபவை. சுடவேண்டிய இடத்தில் இவை களில் குண்டுகள் ஏற்றி இயக்கி விட்டால் தாமாகவே திரும்பித் திரும்பிச் சுடக்கூடியவை. டாங்குகள் சுலபமாகப் பகைவர் முள் வேலிகளைத் தாண்டிச் செல்லக்கூடியவை. ஆகையால் இவை மிக அச்சத்தையும் அழிவையும் விளைத்தன. இவைகளை முதலில் கண்டு பிடித்தவர்கள் ஆங்கிலேயர். நச்சுப் புகையை முதலில் கண்டு பிடித்தவர்கள் ஜெர்மானியர். ஒரு விஞ்ஞான நவீனம்

மற்றொரு விஞ்ஞான நவீனத்தைக் கண்டு பிடித்தது. இதனால் பொதுவில் மக்கள் பெருவாரியாகக் கொல்லப் பட்டார்கள்.

II

1914ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தொடங்கிய போர் 1918ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 11ஆம் நாள் முடிந்தது. ஜெர்மானியர் போரை விரைவில் முடிப்பதில் வெற்றி கண்டவர்கள். 1866ஆம் ஆண்டு முடிந்த ஆஸ்திரிய-பிரஷ்யப் போரிலும் 1871 ல் முடிந்த பிரஞ்சு-பிரஷியப் போரிலும் போரை விரைவுபடுத்தியே அவர்கள் வெற்றி கண்டார்கள். ஆனால் இந்தப் போரில் அவர்களால் எளிதாகவோ, விரைவாகவோ வெற்றி காணக்கூடவில்லை. அதற்குக் காரணம் (1) எதிர்பாராத படி இது உலகப் போராக மாறியது. (2) ஆஸ்திரியரும் ஜெர்மானியரும் ஐரோப்பாவில் மத்திய இடத்தில் இருந்தபடியால் பூகோள முறையாகவே அவர்களுக்கு வெற்றி கிடைப்பது கடினமாயிற்று. (3) மேற்கு எல்லையில் பிரான்சும் இங்கிலாந்தும் பெரும்படையை வைத்து ஜெர்மானியப்படை அதைக்கடப்பதைத்தடுத்தன. கிழக்கெல்லையில் ருமேனியாவும் செர்பியாவும், ருஷியாவும் காத்துக்கிடந்தன. தெற்கே இத்தாலியப்படை முன்னேறுவண்ணம் எல்லையைக் காத்தது. ஐக்கியப்படை கிழக்கேயும் மேற்கேயும் பல வெற்றிகள் கண்டன. எகிப்து வரை ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு அச்சம் விளைந்தது. ருஷ்யப்படை தோற்று விழச் செய்தது; ஆயினும் போரில் வெற்றிகாண முடியவில்லை. (4) ஜெர்மன் ஆஸ்திரியத் தோல்விக்கு மிக முக்கிய காரணமாயிருந்தது ஆங்கிலேயரின் கடல் வலிமையாகும். 19ஆம் நூற்றாண்டின் பல போர்களில் கடல் வலிமையின் பெருமை அரசியல் அறிஞர்களுக்குத் தெரியாமல் போகவில்லை. 18ஆம் நூற்றாண்டின் நெப்போலியச் சண்டைகளிலேயே இது தெற்றெனத் தெரிந்ததன்றே? ஆயினும் இந்த உலகப் போரில் அதன் பெருமை வெள்ளிடை மலையாயிற்று. (5) 1917ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் நேசப்படையினரோடு கூடிப் போரிட்டன.

போர் தொடங்கியவுடனே ஜெர்மானியர் பெல்ஜியத்தின் வழியாகப் பிரான்ஸினுள் நுழைய எத்தனித்தனர். பெல்ஜியம் சண்டையில் ஒரு பக்கமும் சேராத நாடு. அதற்கு எவ்வித துன்பமும் இழைப்பதில்லையென்றும் பிரான்ஸும் இங்கிலாந்தும் ஜெர்மனியும்கூட ஒத்துக்கொண்டிருந்தன. இருந்தபோதிலும் ஜெர்மனி இப்போது பெல்ஜியத்தின் பொது நிலையை அலக்

கழித்தது. நாம் முன் கூறியதுபோல் பிரான்ஸின் கிழக்கெல்லை வழியாக அதனுள் நுழைவது ஜெர்மனிக்கு முடியாத காரியம். ஆகவேதான் அது பெல்ஜிய வழியைக் கண்டுபிடித்தது. இது ஜெர்மானியருடைய வாதம்; ஆனால் பிரான்ஸும் இங்கிலாந்தும், பெல்ஜியத்திற்குத் துணைபுரிய விரைந்தன. முதலில் ஜெர்மானியப் படை பெல்ஜியத்திற்கு எவ்வகைத் துன்பமும் விளைக்காமல் அதனுள் புகுந்து செல்வதாகப் பெல்ஜியத்தைக் கேட்டுக் கொண்டது. ஆனால் சிறிய நாடாயினும் அது நடுநிலைமை மாறுமல் நடந்துகொண்டது. பெல்ஜியம், ஜெர்மானியருக்கு வழி தர மறுக்கவே ஜெர்மனி அதைத் தாக்கிற்று. லீஜ் (Liege) நகர் முதலில் வீழ்ந்தது. பிறகு ஒன்றன்பின் ஒன்றுகப் பெல்ஜியத்தின் எல்லா நகரங்களிலிருந்தும் மக்கள் துரத்தப்பட்டார்கள். இவ்விதமாக நான்கு ஆண்டுக் காலமாய்ப் பெல்ஜியத்திற்கும் ஐக்கியப் படைக்கும் கடும்போர் நிகழ்ந்தது. நேசப்படையினரின் உதவி கிடைத்தும் ஜெர்மானியப் படையை எதிர்ப்பது மிகக் கடினமானதாயிற்று. பெயர் பெற்ற நாமூர் (Namur) படைவீடு வீழ்ச்சியுற்றது. ஷாலராய் (Chaleroi) என்ற இடத்தில் பிரெஞ்சுப்படை தோல்வியுற்றது. மோன்ஸ் (Mons) நகரிலிருந்த ஆங்கிலேயப்படை தோல்வியுறுமல் நகரிலிருந்து விலகியது. முன்னேறிய ஜெர்மன் படை பாரிஸ் நகருக்கு 12 கல் தொலைவில் இருந்தபோது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அதற்கு மார்ன் நதி வெற்றி (செப்டம்பர் 1914) என்று பெயர். வெற்றி மேல் வெற்றி கண்ட ஜெர்மானியர் தங்கள் படையை மேற்குத் திசையிலிருந்து கிழக்குத் திசை நோக்கித் திருப்பிப் பிரெஞ்சுப் படையைச் சூழ்ந்து கொள்ள முயன்றனர். இந்த முயற்சிக்குக் காரணமானவர் ஜெர்மன் படைத்தலைவர் வான் குளுக் (Von Kluck) என்பவர். இது சிறந்த சூழ்ச்சியென்பதில் ஐயமில்லை. ஆனால் பிரெஞ்சுப் படையினர் பின்புறமிருந்து தாக்கக்கூடுமென்பதை அவர் எண்ணவில்லை. பாரிஸ் நகரமே தங்கள் கைவிட்டுப் போய் விடுமோவென்று பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் அரசியல் அலுவலகங்களைப் போர்டோ (Bordeaux)விற்கு மாற்றியிருந்தார்கள். ஆகையால் பிரெஞ்சுப் படை மிகவும் மனமொடிந்த நிலையிலிருக்குமென்று வான் குளுக் திட்டமிட்டிருந்தார். ஆனால் உண்மையில் அவருடைய திட்டப்படி நடக்கவில்லை. அதனால் ஜெர்மனிக்கு முதல்முதல் பெருந்தோல்வி யேற்பட்டது. பிரெஞ்சுக்காரரிடமிருந்து அவர்கள் வென்ற அந்நாட்டின் பெரும்பகுதி மறுபடியும் பிரெஞ்சுக்காரரையே சென்றடைந்தது. இருதரப்பிலும் படைகள் விறுவிறுப்படைந்தன. குழிகள் (trenches) தோண்டி அவற்றிலிருந்து பகைவரைத் தாக்கும் பழக்கம் இப்பொழுது தானாகவே நடைமுறையில்

வந்தது. ஆங்கிலேயர் டாங்குகளைக்கொண்டு சென்று இயந்திரத் துப்பாக்கிகளைப் (machine guns) பயன்படுத்தினர்கள். ஜெர்மானியர் நச்சுப் புகையை வீசினர். கணக் கற்றவர்கள் இரு தரப்பிலும் மாண்டார்கள். பிரான்ஸின் வட எல்லை வட கடலிலிருந்து சுவிட்சர்லாந்து வரை ஒரே படைக்குழி (trench) மயமாகக் காணப்பட்டது. மார்ன் நதி வெற்றி செப்டம்பர் 6ஆம் நாள் தொடங்கி 12ஆம் நாள் வரை ஏழுநாள் நடந்த பெரும் போருக்குப் பின்னரே உறுதியாயிற்று. ஆனால் அது போரின் திருப்பத்தையும் உறுதிப்படுத்தியது.

போர் தொடங்கிய சில நாட்களில் ஜெர்மன் தலைமைப் படைத் தலைவர் வான் மோல்ட்கே (Von Moltke) என்பவர் ஜெர்மன் பேரரசர் இரண்டாம் வில்லியத்திற்கு அனுப்பிய தந்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்: 'இன்னும் ஆறு வாரங்களில் கதை முற்றிலும் முடிந்துவிடும்' (In six weeks the whole story will be concluded). ஜெர்மானியர் கடுஞ் சண்டை செய்தால்தான் வெற்றி கிடைக்குமென்று எண்ணினர்கள். ஆனால் அத்தகைய கடுஞ்சண்டைக்கு வழியில்லாமல் போய் விட்டது. இது அவர்களுடைய கெட்ட காலம். ஏனென்றால் நாட்கள் செல்லச் செல்ல நேச நாட்டினர் எண்ணிக்கையில் உயர்ந்தார்கள். அவர்கள் எண்ணிக்கையில் உயர்ந்ததால் அவர்களால் சண்டையை நீடிக்க முடிந்தது. தவிர ஐக்கியப் படை வீரரின் கிழக்கெல்லையில் ருஷியர்கள் பலம் கொண்டு தாக்கினர்கள். பிரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் அவர்கள் பல வெற்றிகள் கண்டார்கள். ஆகையால் ஜெர்மானியர் தங்கள் படையின் ஒரு பகுதியைக் கிழக்கே செலுத்த வேண்டியதாயிற்று. டெனன்பெர்க் (Tanenberg) என்னுமிடத்தில் வான் ஹின்டன்பர்க் (Von Hindenburg) கின் தலைமையின்கீழ் ருஷியர்கள் படு தோல்வியடைந்தனர். ஆயினும் நேசப் படையினரின் வலிமை குன்றவில்லை.

III

ஒரு விதத்தில் சண்டை வலுத்தது. இருதிறத்தாரும் வெற்றி காண விரும்பிப் பெரும் படைகளைப் போருக்கு அனுப்பினர்கள். இது போரின் இரண்டாம் கட்டம். ஏறக்குறைய 1914ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களிலிருந்து 1918-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை சண்டையின் முக்கியமான கட்டமாக ஜெர்மனியின் மேற்கெல்லையிலும், பெல்ஜியத்திலும் எண்ணற்ற கொடுமையுடன் போர் நடந்தது. மற்றொரு திக்கிலும் இப்போது போரின்

வலிமை பெருகியது. அது கடற்போர். நேச நாடுகளின் ஆற்றல் அவற்றின் கடல் வலிமையில்தான் பெரிதும் அடங்கிக் கிடந்தது. அந்த வலிமையைத் தோற்கடித்துவிட்டால் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய மூன்று நாடுகளுக்கும் உண்பதற்கு வேண்டிய உணவுங் கிடைக்காமற் போயிருக்கும். பின், சண்டையில் அவை வெற்றி பெறுவதைப் பற்றிக் கேட்பானேன்?

இங்கிலாந்தின் கடல் வலிமையை அழிப்பதற்கு ஜெர்மானியர் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டுபிடித்தார்கள் என்று முன்னரே கூறினேம். இப்போது அவற்றை அவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்தினர். ஆங்காங்கே ஆங்கிலேயக் கப்பல்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டன. 1914 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் ஆங்கிலேயக் கப்பற்படை ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை ஒழித்துக் கட்ட வேண்டுமெனத் தீர்மானித்தது. பாக்லாந்துத் தீவுகளுக்கு (Falkland Islands) அண்மையில் ஆங்கிலேயக் கப்பற் படைத் தலைவர் அட்மிரல் ஸ்டர்டி (Admiral Sturdee) என்பவர் ஜெர்மானியக் கப்பற்படையைத் தோற்கடித்தார். இதுவே ஜெர்மானியர் கடலில் கண்ட முதல் தோல்வி. ஆனால் இதைப் பின் தொடர்ந்து ஜட்லாந்து (Jutland) என்னுமிடத்தில் ஜெர் மானியக் கப்பற்படை படுதோல்வி அடைந்தது. இங்கு வெற்றி கண்ட ஆங்கிலேயப் படைத் தலைவர் அட்மிரல் பெயாட்டி (Admiral Beatty) என்பவரை இன்றும் உலகம் பாராட்டுகின்றது. இதற்குப் பிறகு ஜெர்மானியருடைய கடல் வலிமை குறைந்தது; நேச நாட்டினர் வலிமை பெருகியது. ஜெர்மனியில் கடல் வழியால் பொருள்கள் வந்திறங்கக் கூடவில்லை. அங்கு உணவுப் பஞ்சம் வந்துவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது.

இனி, தென்மேற்கெல்லையிலும், பெல்ஜியத்திலும் நடந்த சண்டையைப் பற்றிக் கூறுவோம் : புகழ் பெற்ற வாட்டர்லூச் சண்டையைவிட மிகப்பெரிய சண்டைகள் பல இரு படைகளுக்கும் இடையே இந்த வட்டாரத்தில் இப்பொழுது நிகழ்ந்தன. நான் காண்டுக் காலம் இந்தப் போர் நிகழ்ந்ததென்றால் படைகளும், மக்களும் எத்துணைத் துன்பமடைந்திருக்க வேண்டும்? நச்சுப் புகை மட்டுமல்ல; மற்றும் பலவித புதிய படைக் கருவிகள், கைக் குண்டுகள், சிறு கத்திகள், பெருங்கத்திகள், பல மைல் தொலைவு குண்டைச் செலுத்தக்கூடிய துப்பாக்கிகள் இன்ன பிறவும் மக்கள் நிலையைக் குலைத்தன. சர் ஜான் பிரஞ்சு (Sir John French), சர் டக்ளஸ் ஹேய்க் (Sir Douglas Haig) போன்ற பெரிய ஆங்கிலேயப் படைத் தலைவர்கள் நேசப்படைக்குத் தலைமை தாங்கினர்கள். வெற்றி கிடைத்தது. ஆயினும் அதைப் பெறப் பட்ட துன்பமும், ஏற்பட்ட செலவும் அளவில்லாதன. போர் பிரான்ஸினும்

பெல்ஜிய நாட்டையே மிகவுங் குலைத்தது. இப்ரஸ் (Ypres) என்ற இடத்திலேயே மூன்றுண்டுகளில் மூன்று பெருஞ் சண்டைகள் நடந்தன. இரு சண்டைகளில் நேசப்படையினர் தோற்றனர். மூன்றுவது சண்டையில் வெற்றி கிடைத்தது. ஆனால் அதற்குள் அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர். பல்லாயிரக் கணக்கானவர் போர்க்களத்தில் மாண்டார்கள். அவ்வூரின் அழகிய கோயில் தூள்தூளாகப் போய்விட்டது.

அதே சமயம் சோம் (Somme) ஆற்றங்கரையிலும், ரெய்ம்ஸ் (Rheims), வெர்டன் (Verdun) பட்டணங்களிலும் சண்டை நடந்தது. சோம் ஆற்றுச் சண்டை 1916 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடந்தது. நீண்ட போராட்டத்திற்குப் பிறகே நேசப் படையினருக்கு வெற்றி யேற்பட்டது. ஆயினும் அதனால் அவர் களுக்குப் பெரு நன்மை விளைந்தது. இதுவரை ஜெர்மானியப் படை பிரான்ஸ் நாட்டில் அடைந்த பெரு வெற்றிகளுக்கு இந்தத் தோல்வி ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. தவிர அதன் வசமா யிருந்த பிரான்ஸ் நாட்டின் பெரும்பாகம் மறுபடியும் பிரெஞ்சுக் காரர் வசமாயிற்று. இதனால் நேசப் படையினருக்கு ஏற்பட்ட ஊக்கம் கொஞ்ச நஞ்சமல்ல. ரெய்ம்ஸ் நகரை விடாமல் அவர்கள் காப்பாற்றியதற்கு இவ்வூக்கம் ஒரு சிறந்த காரணமென்று சொல்ல வேண்டும். அதே சமயம் வெர்டன் நகரில் நடந்து கொண்டிருந்த சண்டையில் சோம் ஆறு வெற்றி ஜெர்மானியரின் பலம் குன்றச் செய்தது. வெர்டன் நகர் வெற்றி சோம் வெற்றியைவிட மிகப் பெரியதென்று கூறவேண்டும். ஏனெனில் அதன் வழியே பாரிஸுக்குச் செல்வது மிக எளிது. வெர்டன் ஜெர்மானியருக்குச் சொந்தமாயிருந்தால் பிரான்ஸ் நாடே அவர்கள் காலடியில் கிடந்திருக்கும். ஆனால் இங்கு பிரெஞ்சுக் காரருக்குத் தோல்வி ஏற்படாத வண்ணம் சோம் ஆறு காப் பாற்றியது. அங்கு கிடைத்த வெற்றிக்குப்பின் நேசப் படையினர் வெர்டன் நகரில் ஐக்கியப் படையை மறுபடியும் வென்றார்கள். இங்கிருந்த ஜெர்மன் படையின் பெரும்பகுதி சோம் ஆற்றங் கரைக்கு அனுப்பப்பட்டதால் வெர்டனில் நேசப்படையினர் வேலை சற்று எளிதாயிற்று (செப்டம்பர் 1917).

IV

இனி, கிழக்கெல்லைக்குச் செல்லுவோம். அங்கே ஐக்கியப் படை இதுவரை சில தோல்விகளோடு பெரு வெற்றிகளையும் கண் டிருந்தது. இவற்றில் டேனன்பெர்க் மிகப் பெரியது. மார்ன் ஆற்றங்கரையில் அதற்கு ஏற்பட்ட தோல்விக்கு இது ஆறுதல்

அளிப்பதாயிருந்தது. ஆயினும் அதற்குப் பிறகு ருஷியப் படைகள் பல வெற்றிகள் கண்டன. 1914 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் அதாவது டேனன்பெர்க் தோல்விக்கு ஒரு திங்களுக் குள்ளாகவே லெம்பெர்க் (Lemberg) நகரம் அவர்கள் வச மாயிற்று. ருஷியர்கள் உடனே கிராக்கோ (Cracow) நகரைப் பிடிக்க முயற்சி செய்தார்கள். ஆனால் பிரமிசல் (Przemysl) கோட்டை அவர்களுக்குப் பெருந் தடையாயிருந்தது. 1915 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் இக்கோட்டையும் பிடிபட்டது. 100,000 ஆஸ்திரிய வீரர்கள் அப்போது சிறைப்பட்டார்கள். ஆயினும் ஜெர்மானியர் விட்டுக் கொடுப்பதாயில்லை. படைத் தலைவர் மேக்கென்சென் (Mackensen) தலைமையில் அவர்கள் பெரும்படையை அனுப்பினர்கள். பிரமிசல் கோட்டையைக் கைப்பற்றிய பெருமிதத்துடனிருந்த ருஷியப்படையின் நடுவில் ஜெர்மன் படை புகுந்து தாக்கியது. அதனால் பிரமிசல் கோட்டை மட்டுமல்ல, லெம்பர்க் நகர் மட்டுமல்ல, வார்சா (Warsaw) நகரமும் ஜெர்மானியர் வசமாயிற்று. 1915-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களுக்குள் போலந்து (Poland), லித்துவேனியா (Lithuania), குர்லேந்து (Courland) பகுதிகள் ஜெர்மானியர் வசம் வந்தன.

இருப்பினும் நேசப்படையினர் மறுபடியும் ஊக்கம் கொண் டெழுந்தார்கள். படைக்கலங்களும், வெடிமருந்து, குண்டு முதலி யவைகளும் ருஷியர்களுக்கு அனுப்பப்பட்டன. ஆர்க்கேஞ்சல் (Archangel) துறைமுகம் இவற்றை ஏற்று ருஷியப் படைகளுக்கு அனுப்புவதில் முனைந்தது. தவிர, புரூசில்லாவ் (Brussilof) என்ற தலைசிறந்த படைத் தலைவர் ருஷியப்படைக்கு இப்போது தலைவரானார். வோலினீயா (Volhynia), புக்கோவினு (Bukho-vina), என்ற ஆஸ்திரியப் பிரதேசங்களின்மேல் புருசில்லாவ் முதலில் தம் படையைச் செலுத்தினர். நகருக்கு மேல் நகர் பிடிபட்டன. கடைசியில் புக்கோவினு பிரதேசமே பிடிபட்டது. ஆஸ்திரிய வீரர்கள் பலர் சிறைப்பட்டார்கள். ஏறக்குறைய 500,000 பேர்கள் பிடிபட்டார்களென்றும் சொல்லப்படுகிறது. இத்தகைய பெரு வெற்றியைக் கண்ட ருமேனியா நேச நாட்டின ரோடு சேர்ந்து விட்டதாக அறிவித்தது. கிழக்கெல்லையில் நேச நாட்டினருடைய வெற்றி இப்போது உச்ச நிலையை எட்டியது. இனி ஜெர்மானியரோ, ஆஸ்திரியரோ வெற்றி அடைய முடியா தென்று எண்ணப்பட்டது. ஆயினும் மெக்கன்சன் என்ற படைத் தலைவர் ருமேனியரை ருமேனியாவினின்றும் துரத்தினர் என்றால் போரின் வியத்தகு நிலை எப்படிப்பட்டதென்று இதிலிருந்து ஒருவாறு தெரியக்கூடும். இதன் பிறகு நேச நாட்டினர் கடு

வெற்றியில் நம்பிக்கை இழந்தனர். ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருந்த எந்தச் சிறு நாடும் அதைவிட்டு எதிர்க்கட்சியில் சேரும் எண்ணத்தை அறவே மறந்தது. அதே போரில் ஆங்கிலேயப் படையின் பிரதமத் தலைவரான லார்ட் கிட்சனர் (Lord Kitchener) ருஷியாவிற்குச் செல்லும் வழியில் கடலில்மூழ்கி இறந்துவிட்டார்.

V

இந்நிலையில் ருஷியாவில் பெரும் புரட்சி ஒன்று எழுந்தது. 1917 ஆம் ஆண்டின் சமுதாயப் பெரும் புரட்சியென்று இப் பொழுதும் அது பேசப்பட்டு வருகிறது. உண்மையில் அதை உலக சமுதாயப் புரட்சியின் தொடக்கம் என்றே கூறவேண்டும். ஐரோப்பிய வரலாற்றில் அது ஒரு புது யுகத்தைத் தொடக்கியது. உலகப் பெரும்போரில் ருஷியர்கள் பெரு வெற்றிகள் கண்டிருந்தும் அவர்கள் முற்போக்கையோ அல்லது வெற்றியின் முடிவையோ எட்டிப்பிடிக்க முடியவில்லை. பிரமிசல் கோட்டை பிடிபட்டது. அதன் பிறகு ருஷியர்கள் கிராக்கோ நகரை அடைய வேண்டும். ஆனால் உண்மையில் விளைந்தது தோல்வி. பிரமிசலை மட்டுமல்ல, லெம்பெர்க், வார்சா நகரங்களிலிருந்தும் அவர்கள் வெளியேற வேண்டியதாயிற்று. ருஷிய மக்கள் இதற்கு விளக்கம் தேடினர்கள். ருஷிய மன்னர் கட்டுக்கடங்காமல் ஆட்சியை நடத்துவதுதான் இதற்குக் காரணமென்று அவர்கள் சுட்டிக் காட்டினர்கள். இதுவன்றிப் போரில் ஈடுகொடுத்தவர்கள் செல்வர்களைவிடப் பொது மக்களும் ஏழைகளுமே. இவர்கள் ருஷிய அரசியலிலேயே ஒரு மாற்றம் தேடினர்கள்.

1917 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ருஷிய மன்னர் முடி துறந்தார். மக்கள் அவரைச் சிறை செய்து சைபீரியாவிற்கு அனுப்பினர்கள். புரட்சி வீறு கொண்டெழுந்தது. கார்ல்மார்க்ஸின் கொள்கைகள் எங்கும் பரப்பப்பட்டன. இவற்றைச் செயலாற்றத் தோன்றியவர்கள் லெனினும் (Lenin) டிரோட்ஸ்கியும் (Trotsky). இனி ருஷியாவில் கட்டில்லா ஆட்சிக்கு இடமில்லை. இங்கிலாந்தைப் போல் கட்டுக்கடங்கிய ஆட்சிக்குமிடமில்லை. அங்கு வேண்டியது பொது மக்கள் ஆட்சி(rule of the proletariate). பொது மக்களென்றால் அவர்கள் மிக எளிய மக்களையும் தழுவியவர்களாயிருக்க வேண்டும் என்று ருஷியா இப்போது நம்பியது.

1917 ஆம் ஆண்டு மார்ச்சு 14 ஆம் நாள் புதிய திட்டப்படி ஓர் அரசாட்சி ஏற்பட்டது. அதற்கு ஜியார்ஜ் லவாவ் (Prince George Lvov) என்ற ஒரு நிலக்கிழாரைத் தலைவராக்கினர்.

லவாவ் பணக்காரராலுலும் நல்ல மனம் படைத்தவர் என்றே ருஷிய மக்கள் அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். அரசியல் காரணமாகச் சிறை சென்றவர்கள், நாடு கடத்தப்பட்ட வர்கள் எல்லாரும் இப்போது விடுதலையடைந்தார்கள். சுவிட் சர்லாந்தில் அடைக்கலம் புகுந்த லெனின் இப்போது தம் நாட் டிற்குத் திரும்பினர். ஜெர்மானியப் படையினரே அவரை மெய்க்காப்புடன் ருஷியாவில் கொண்டு வந்து சேர்த்தார்கள். அவ்வாறே டிரோட்ஸ்கி அமெரிக்காவிலிருந்து ருஷியா வந்து சேர்ந்தார். பின்லாந்து நாட்டிற்கு உரிமை வழங்கப்பட்டது. போலந்து நாட்டிற்கு உரிமை வாக்களிக்கப்பட்டது. அரசியல் அமைப்பவை (National Constituent Assembly) ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் துவங்கின.

ஆனால் லவாவ் புதிய அரசியல் தலைமைக்குத் தகுதியுள்ள வராகக் காணப்படவில்லை. போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்பதில் ஒத்த எண்ணம் நாட்டில் ஏற்படுத்த அவரால் முடியவில்லை. நாடெங்கும் போர் வீரர்களும், தொழிலாளர் களும், இன்னும் வயலில்உழைப்போரும் தனித்தனியே சங்கங்கள் நிறுவி லவாவை எதிர்த்தார்கள். மனம் நலிந்த தலைவர் ஒரு திங்களில் நம்பிக்கை இழந்து தம் பதவியையும் துறந்தார். இந்தப் பதவிக்கு இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டவர் சமுதாயப் புரட்சிக் கட்சி (Social Revolutionary Party) யின் உறுப்பினரான கெரென்ஸ்கி (Kerensky) என்பவர். அப்பொழுது புரட்சிக் காரர்கள் பொதுவில் இருபகுதிகளாகப் பிரிந்திருந்தார்கள். இடைத்தரச் சமுதாயப் புரட்சியாளர் (Mensheviks), முற்போக் குச் சமுதாயப் புரட்சியாளர் (Bolsheviks) என்ற இந்த இரு பகுதி யினரில் கெரென்ஸ்கி முதல் வகுப்பைச் சேர்ந்தவர். இந்தக் கட்சியில் சேர்ந்த பலரைப் புது அரசியலில் அமைச்சர்களாக அவர் தேர்ந்தெடுத்தார். இவர்களைக் கொண்டு அரசாங்கத்தை நடத்திச் செல்லவும் அவர் தீர்மானித்தார்.

ஆயினும் புரட்சி நெருப்புப் போன்றது. அது எரியத் தொடங்கிவிட்டால் அதை ஓரிடத்தில் கட்டுப்படுத்துவது கடினம். இந்த நிலையில்தான் இப்போது ருஷியாவும் புரட்சியும் பொருதன. லெனினைச் சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து ஜெர்மா னியர் கூட்டி வந்தது வீண்போகவில்லை. அவர் முற்போக்குப் புரட்சியை ஆதரித்தார். அதற்காகப் போரை நிறுத்திவிட வேண்டுமென்றும் வாதித்தார். இது உலகப் போரின் மிக முக்கியமான கட்டமாகும். நேச நாட்டினருக்கு மிகக்கடினமான கட்டம். 'அமைதி, நிலம், உணவு என்ற இவை மூன்றுமே என் குறிக்கோள்கள்' என்று லெனின் பறைசாற்றினர்.

பசியால் வாடி வதங்கிய மக்களும் இவற்றையே தேடினர்கள். கெரன்ஸ்கி நேச நாட்டினரை ஜெர்மனியோடும், ஆஸ்திரியா வோடும் உடன்பாடு செய்து கொள்ளும்படி தூண்டினர். ஆயினும் அதை அவர்கள் கேட்பதாயில்லை. ஆகவே, 1917 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ருஷியாவை மறுபடியும் சண்டையைத் தொடங்கி நடத்தும்படி ஆணை பிறப்பித்தார். ஆனால் படை வீரர் கலகம் செய்யத் தொடங்கினர்கள். போர் நேச நாட்டின ருக்குத் துன்பம் விளைப்பதாயிற்று. ஆஸ்திரியா கலீஷியா முழுவ தையுமே கைப்பற்றியது. ஜெர்மனி ரீகா(Riga)வைக் கைப்பற்றி எஸ்டோனியா (Estonia)வினுள் நுழைந்தது.

இப்போது ருஷியாவில் புரட்சி பெருகியது. 1917 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் கெரன்ஸ்கி அரசாங்கம் வீழ்ச்சி யுற்றது. அவருடைய இடத்தை லெனினும் முற்போக்குப் புரட்சி யாளரும் கைப்பற்றினர்கள். நான்கு திங்களில் ஜெர்மனி யோடும், ஆஸ்திரியாவோடும் ருஷியா பிரஸ்ட்-லிட்டோஸ்க் (Brest-Litovsk) என்றவிடத்தில் ஒற்றுமை உடன்படிக்கை செய்து கொண்டது. நாட்டில் சமுதாய அமைதிக்காக லெனின் இந்த உடன்படிக்கைக்கு ஒப்புக் கொண்டார். ஆனால் ஐக்கிய நாட் டினர் அமைதியை விரும்பினதாகத் தெரியவில்லை. இந்த உடன் படிக்கைப்படி ருஷியா துண்டிக்கப்பட்டது. போலந்து, லித்து வேனியா, லேட்வியா (கூர்லாந்து)ப் பிரதேசங்கள் ஜெர்மனி யையும், ஆஸ்திரியாவையும் சேர்ந்தவை யென்றும், பெஸ் அரேபியா நாடு ருமேனியாவைச் சேர்ந்ததென்றும், காகசஸ் மலைக்குத் தென்பகுதியிலுள்ள அர்மீனியப்பிரதேசம் துருக்கியைச் சேர்ந்ததென்றும், பின்லாந்து, எஸ்டோனியா, லிதுவேனியாப் பிரதேசங்கள், உக்ரேய்ன் என்ற இவை ருஷியாவினின்றும் பிரித் தெடுக்கப்பட்டு ஜெர்மானியரின் ஆதிக்கத்தில் உரிமை பெற்ற நாடுகளாகத் திகழ வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. பிறகு ருமேனியாவோடு புக்காரஸ்ட் (Bucharest) என்ற இடத்தில் மற்றொரு உடன்படிக்கையையும் ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் முடித்துக்கொண்டன. இதன்படி ருமேனியா டோப்ருஜா (Dobruja)ப் பகுதியை பல்கேரியாவிற்குக் கொடுத்து விடுவ தென்றும், ருமேனியாவின் சில மலை வழிகள் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தின் கீழ் இயங்க வேண்டுமென்றும் முடிவு கட்டப் பட்டது.

ருஷியா சண்டையிலிருந்து விலகியது ஐக்கிய நாடுகளுக்குப் புத்துயிர் அளித்தது. இனி, கிழக்கெல்லையென்பது அவர்களுக் கில்லை. தெற்கே இத்தாலியைக் கவனித்துக்கொண்டால் மேற் கெல்லையில் தங்கள் பலமெல்லாம் கூட்டிச் சண்டையைத்

தொடர்ந்து நடத்துவது அவர்களுக்குக் கடினமானதன்று. இத்தாலியரைத் தோற்கடிப்பதில் ஆஸ்திரியர் முனைந்தார்கள். ஜெர்மானியர் பிரஞ்சு எல்லையைத் தாக்கினர்கள். போரின் இந்தக் கடைசிக் கட்டத்தில் இத்தாலி முதலில் கண்டது கப்போ ரெட்டோ (Caporetto) பெருந்தோல்வி. இது 1917 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் நிகழ்ந்தது. ஆயினும் நேசப்படையினர் மனந்தளரவில்லை. அதற்குத் தலைசிறந்த காரணம் அமெரிக்கத் துணையாகும். பணமும், படையும் அந்நாட்டிலிருந்து இப்போது நேச நாட்டினருக்குக் கிடைத்தன. 1917 ஆம் ஆண்டின் கடைசியில் துருக்கியைத் தோற்கடித்து அவர்கள் ஜெருசெலம், பாக்தாத், பாபிலோன், நினவே என்ற இடங்களையும் எகிப்து நாட்டையும் கைப்பற்றினர்கள்.

VI

1918 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21 ஆம் நாள் ஐக்கியப் படை செயின்ட் குயின்டின் (St. Quentin) என்னுமிடத்தில் ஒன்று சேர்ந்த பிரஞ்சு-ஆங்கிலேயப் படையைத் தன் முழு வலிமையுங் கொண்டு தாக்கியது. 'போர் தொடங்கிய நாளிலிருந்து இத்தகைய பெரிய சண்டையை இவ்வுலகப் போர் கண்டதில்லை' என்று ஆசிரியர் கிராண்ட் கூறுகின்றார். முதல் சண்டைக்குப் பிறகே ஜெர்மானியர் பிரான்ஸில் ஏமியன்ஸ் (Amiens) நகருக்குப் பக்கமாய் முன்னேறினர்கள். பிறகு இப்ரஸ், ரெஸ்மஸ் நகரங்கள் அவர்கள் படையின் முன்னர் வீழ்ச்சியுற்றன. இவ்வாறு அவர்கள் ஒருபுறம் பாரிஸைக் கைப்பற்றவும், மறுபுறம் ஆங்கிலேயக் கால்வாயை (English Channel) அடையவும் முயன்றனர். 1918 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஜெர்மானியப் படை மார்ன் ஆற்றெல்லையை அடைந்தது. போரின் தொடக்கத்தில் நடந்த மார்ன் ஆற்றுச் சண்டை மறுபடியும் நடந்தது போலாயிற்று. அமெரிக்கப் படை இப்போது நேச நாட்டினருக்குப் பேருதவி புரிந்தது. சண்டையின் முதற்கட்டத்தில் அமெரிக்கப் போர் வீரர்களே பிரெஞ்சுப் படையுடன் கலந்து சண்டை செய்தார்கள். அதுவரை ஒய்வெடுத்த ஆங்கிலேயத் துருப்புக்கள் சண்டையின் பிற்பகுதியில் ஜெர்மானியரைத் தாக்கினர்கள். பிரான்ஸில் ஜெர்மானியர் கைப்பற்றிய இடங்களெல்லாம் மறுபடியும் பிரான்ஸின் கைப்பட்டன.

இதன் பின் ஜெர்மானியரும் கூப்புற்றனர். ஜெர்மன் மன்னர் கெய்சர் தமது பதவியை விட்டு விலகினர். ஜெர்மானியர் அமைதி வேண்டினர் (1918 ஆம் ஆண்டு நவம்பர் 11). உலக

வரலாற்றிலேயே இத்தகைய போர் நிகழவில்லை. ஆனால் அதை விட வியப்பிற்குரியது ஜெர்மானியரின் தோல்வி. அமைதி உடன் படிக்கைக்கு நான்கு திங்களுக்குமுன் நேசப்படையினர் தோற்றார் களென்ற எண்ணமே எங்கும் நிலவியது. ஆயினும் சண்டையின் முடிவு அவர்களுடைய வெற்றியாகத் திகழ்ந்தது. இதற்குக் காரணம் கூறுவது இயலாது என்றே கூறவேண்டும். ஆயினும் குறிப்பாக இரண்டு மூன்று காரணங்களை நாம் இங்குக் குறிக்கலாம்:

(1) ஆங்கிலேயரின் கடல் வலிமை. அதைத் தவிர்க்கவோ, வெல்லவோ ஜக்கியப் படையினரால் கடைசிவரை முடியவில்லை. அதற்கு மாற்றாகவே ஜெர்மானியர் நீர் மூழ்கிக் கப்பல்களைக் கை யாண்டனர். ஆனால் அது வெற்றி பெறவில்லை. அவற்றை அழிப்பதற்கும் ஆங்கிலேயருடைய விஞ்ஞான அறிவு வழி வகுத்தது.

(2) நீண்ட காலப் போரினால் ஜெர்மனி தானாகவே வலிமை யிழந்தது. அதை வெளியுலகம் காணவில்லை. ஆனால் நேசப் படையினர் கண்டார்கள்.

(3) பொறுமையே வெற்றி தருமென்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள். அவர்கள் படையின் நடுநாயகமாக விளங்கிய மார்ஷல் போஷ் (Foch) இதை நன்கு உணர்ந்து பணியாற்றினார். நேசப் படையினர் எல்லோருக்கும் தனித் தலைவராக அவர் வந்தது அவர்களுடைய நட்பையும் நன் முயற்சியையும் வளர்த்தது. அவருடைய பெருமையை விவரிக்க இங்கு இடமில்லை. எனினும் வரலாறு போற்றக் கூடிய பெருமை அவருடையதென்று மட்டும் இங்குக் கூறவேண்டும். 'His (Foch's) will be the one great military reputation that the war bequeaths to history.' (Grant)

18. போரின் முடிவு

[வெர்சாய் உடன்படிக்கை—சர்வதேச சங்கத்தின் தோற்றம்—
ஐரோப்பாவின் பொது மன நிலை]

I

1918ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் நாள் போர் முடிந்தது. உலகப் போரின் முடிவு உலகத்திற்கே மகிழ்ச்சி அளித்தது. ஆண்டு தோறும் இந்த நாளைப் பெரு நாளாக உலகம் கொண்டாடுகிறது.

பாரிஸ் நகரிற் பெயர் பெற்ற வெர்சாய் (Versailles) மாளிகையில் சமாதான உடன்படிக்கைக் கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பாகப் பங்கெடுத்துக் கொண்ட நாடுகள் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, ஜப்பான் என்பவை. ஆனல் பொதுவில் முதல் நான்கு நாடுகளே சிறப்புறப் பங்கெடுத்துக் கொண்டன. அவைகளுக்கு 'பெரு நான்கு வல்லரசுகள்' (Big Four) என்றபெயர் அமைந்தது. இவற்றின் எண்ணங்களை இவற்றின் தலைவர்களான லாயிட் ஜார்ஜ் (Lloyd George), கிளமான்ஸோ (Clemenceau), ஓர்லாண்டோ (Orlando), வுட்ரோ வில்சன் (Woodrow Wilson) என்பவர்கள் பிரதிபலித்தார்கள். இவர்களில் முதன்மையானவராகக் கருதப்பட வேண்டியவர் வில்சன். அவர் சமாதான உடன்படிக்கையில் மட்டுமல்ல, சமாதானம் நிலைத்து நிற்பதற்கு வழி கண்டுபிடிப்பதிலும் முனைந்து நின்றார். உலகிலேயே இவ்வித முயற்சியில் முதன் முதல் ஈடுபட்டவர் அவரே. இதைப் பின்னர் விளக்குவோம்.

வெர்சாய் உடன்படிக்கைப்படி ஜெர்மனி தான் கைப்பற்றிய நாடுகளையெல்லாம் கைவிட வேண்டியதாயிற்று. போலந்து சுயாட்சி பெற்றது. கடலில் செல்லும் உரிமை எல்லோருக்கும் கிடைத்தது. பொருளாதாரத் தடைகள் (Economic barriers) நீக்கப்பட்டன. ஆல்சேஸ், லொரென் பிரதேசங்கள் திரும்பவும் பிரான்ஸுக்குக் கொடுக்கப்பட்டன. ஆஸ்திரியா ஹங்கேரியில் உரிமை இழந்த பல இனமக்கள் மறுபடியும் உரிமை பெற்றார்கள்.

ஜெர்மனியில் கெய்சர் தம் பதவியை விடுத்து ஹாலந்து நாட்டிற்கு ஓடினர். அங்கிருந்த பல சிற்றரசர்களும் தங்கள்

பதவியை விடுத்தார்கள். இப்போது பெயரளவில் மட்டும் ஜெர்மனி ஒரு பேரரசாக இருந்ததேயொழிய உண்மையில் அது ஒரு குடியரசாக மாறியது. ஆயினும் அதன் ஆற்றல் குன்றியதாகத் தெரியவில்லை. ஜெர்மன் மக்களும் வலிமை இழக்கவில்லை. ஆஸ்திரியப் பேரரசு மட்டும் அதிக இன்னல் அடைந்தது. அது உருக்குலைந்து ஆறு தனித்தனி நாடுகளாகப் பிரிந்தது. அவை (1) ஆஸ்திரியா, (2) ஹங்கேரி, (3) யூகோஸ்லாவியா, (4) மோன்டே-நீக்ரோ, (5) போலந்து, (6) செக்கோ-ஸ்லோவாக்கியா என்பனவாகும். பல்கேரியா முன்போலவே சுயாட்சியற்ற நாடாகத் திகழ்ந்தது. ஆயினும் பால்கன் பிரதேசத்திற்குத் தலைமைப் பதவி வகிக்கும் எண்ணத்தைப் பல்கேரியா கைவிட வேண்டியதாயிற்று. இனி செர்பியா, ருமேனியா, கிரீஸ் நாடுகளோடு-சேர்ந்த பல்கேரியா பால்கன் பிரதேசத்தில் தன் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

துருக்கி நாடு இந்த மாபெரும் போருக்குப்பின் கொஞ்சம் கொஞ்சமாய் நசிக்கத் தொடங்கியது. 'ஐரோப்பாவின் நோயாளி' என்று ருஷ்ய மன்னர் முதலாம் அலெக்சாண்டர் கூறிய துருக்கி இப்பொழுது ஒரு விதத்தில் மரணப்படுக்கையில் கிடந்தது. கான்ஸ்டாண்டிநோபிள் என்ற அதன் அழகிய தலை நகரமும், டார்டெனெல்ஸ் கணவாயும் அதனிடமே விடப்பட்டிருந்தன. ஆயினும் அதன் செல்வாக்கு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் மிகக் குன்றிவிட்டது. இதுவரை துருக்கியரிடமிருந்த சிரியா நாடும் பாலஸ்தீனமும் முறையே பிரஞ்சுக்காரரிடமும் ஆங்கிலேயரிடமும் ஒப்படைக்கப்பட்டன.

II

இனி வுட்ரோ வில்சன் நிரந்தரமான அமைதி நிலவச் செய்த முயற்சிகளைப் பற்றிச் சிறிது கூறுவோம். 1918ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8ஆம் நாள் அமெரிக்கத் தலைவர் வில்சன் அமெரிக்கக் காங்கிரஸ் அவைக்குத் தாம் மேற்கொள்ளப் போகும் உடன்படிக்கை முயற்சியில் தாம் கொண்டுள்ள முதற் கருத்துக்களைப் பற்றி ஒரு தகவல் அனுப்பினர். அதில் தாம் அமைக்க எண்ணிய நிரந்தர சமாதானத்தைப் பற்றிப் பதினான்கு கருத்துக்களை வெளியிட்டார். ஜெர்மானியர் கைப்பற்றிய வட்டாரங்களைத் திருப்பித் தருவது, போலந்து நாடு உரிமை பெற்ற நாடாக நிறுவப்படல், ஆல்சேஸ், லொரென் பிரதேசங்கள் பிரான்ஸ் நாட்டிற்குத் திருப்பித் தரப்படல், ஆஸ்திரிய-ஹங்கேரியில் உரிமை நாடுகள் நிறுவப்படல் போன்ற பல கருத்துக்கள் இவற்றில் அடங்கியவை. இவை பொதுவாக

முற்றிலும் நிறைவேறின. ஆயினும் வில்சன் இதற்காக வரலாற்றில் இடம் பெறவில்லை. இந்தப் பதினான்கு கருத்துக்களில் கடைசியாகக் கூறப்பட்ட உலக நாடுகளின் சங்க அமைப்பு (Establishment of the League of Nations)ப் பற்றியே வில்சன் வரலாற்றில் நிலையான இடம் பெற்றுள்ளார். அவருடைய பதினான்கு கருத்துக்களும் (Fourteen Points of Wilson) இதே காரணம் பற்றித் தனி இடம் பெற்றுள்ளன.

முற்கூறிய உடன்படிக்கைக்குமுன் நாடுகளுக்கிடையே சமாதானமும் ஒற்றுமையும், கூட்டுறவும் நிலவச்செய்யவும், சர்வதேசங்களுக்கும் உடன்பாடான சட்டப்படி ஒவ்வொரு நாடும் தனது நடத்தையைச் சீர்ப்படுத்தவும், நாடுகளுடன் ஏற்படும் உடன்படிக்கைகளை நடைமுறையில் நடத்திக் காட்டவும், வெர்சாயில் கூடிய நாடுகள் உறுதி பூணுவதாக ஓர் உடன்படிக்கையில் அவை கையெழுத்திடும்படி வில்சன் செய்தார். இந்த உடன்படிக்கைக்கு நாடுகளின் சங்கமும் ஒப்பந்தப் பத்திரமும் (Solemn League and Covenant) என்று பெயர். இதில் கையெழுத்திட்ட நாடுகளின் எண்ணிக்கை இருபத்தேழு. இவற்றைத் தவிரப் பதின்மூன்று நாடுகள் இதற்கு ஒப்புதல் தந்தன.

இந்த உடன்படிக்கையின் ஷரத்துக்கள் இருபத்தாறு. இவற்றின்படி சர்வதேச நீதி மன்றம் (Court of Arbitration) ஒன்று நிறுவப்பட்டது; உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடிச் சர்வதேசச் சிக்கல்களை விவாதிக்கச் சங்கம் (Consultative Assembly) ஒன்று நிறுவப்பட்டது. இதைத் தவிரக் காரியங்களை விரைவில் முடிக்க இவற்றின் பிரதிநிதிகள் கூடிய ஒரு சிறு சங்கம் (Council of the League) ஒன்றும் நிறுவப்பட்டது. இந்தச் சிறு சங்கத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் என்ற நாடுகளுடையவும், பெருஞ்சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு நாடுகளுடையவும் பிரதிநிதிகள் உறுப்பினர்கள். உலக அமைதியை நிறுவ இவை மூன்றும் ஒன்றுகூடி இயங்க வேண்டியது என்று இப்போது தீர்மானமாயிற்று. போர் நேரா வண்ணம் சங்கத்தில் சேர்ந்த எல்லா நாடுகளும் கவலை எடுத்துக்கொள்ள வேண்டும். அவற்றுள் ஏற்படும் சிறு தகராறுகளைப் பேரவையும், சிற்றவையும், நீதி மன்றமும் தீர்க்க முயலவேண்டும்; தவிர்க்க முடியாத போர் நிகழுமானால் போர் செய்யவேண்டிய நாடுகளுக்குப் பண வசதியும், சங்கத்தில் சேர்ந்த மற்ற நாடுகள் தர முன்வர வேண்டும் என்று இப்போது முடிவு கட்டப்பட்டது.

III

பொதுவில் தலைவர் வில்சனுடைய பதினான்கு கருத்துக்களும் அமைதிக்கு வழிகோலின. அவையாவன :

(1) மறைமுக உடன்படிக்கைகளின் தவிர்ப்பு

(2) அமைதிக் காலத்திலும் போர்க் காலத்திலும் கடல்கள் எல்லோருக்கும் சொந்தமானவை.

(3) நாடுகளுள் வாணிகம் (International trade) நடக்க மாறுபட்ட எவ்வித பொருளாதாரத் தடையும், நீக்கப்பட வேண்டும்.

(4) எல்லா நாடுகளிலும் படைக்குறைப்பு (Disarmament) ஏற்பட வேண்டும்.

(5) குடியேற்ற நாடுகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

(6) ருஷியாவை விட்டுத் துருப்புக்கள் உடனே வெளியேறி அந்நாடு தனது எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள உரிமையளித்தல்.

(7) பெல்ஜிய நாட்டிலிருந்து துருப்புக்கள் வெளியேற வேண்டும்.

(8) பிரெஞ்சு வட்டாரத்திலிருந்து துருப்புக்கள் வெளியேறவும், ஆல்சேஸ்-லொரேன் பகுதியை அதற்குத் தரவும் வேண்டும்.

(9) இத்தாலியின் எல்லைகள் அதன் தேசிய எல்லைகளின் படி அமைக்கப்பட வேண்டும்.

(10) ஆஸ்திரிய-ஹங்கேரி மக்கள் உரிமையுடன் தங்கள் முன்னேற்றத்தை நாடச் செய்தல்.

(11) செர்பியா, மோன்டே நீக்ரோ, ருமேனியா நாடுகளிலிருந்து துருப்புக்கள் வெளியேறுதல். செர்பியா கடல் வசதி பெறும்படி வழி செய்தல். பால்கன் நாடுகள் அவற்றின் வரலாறு, நாட்டுப்பற்று என்ற இவற்றை ஒட்டித் தம்முடன் உறவு கொள்ள வழி ஏற்படுத்தல்.

(12) ஓட்டமான் துருக்கியர் பேரரசின் துருக்கிப் பாகத்திற்கு ஆட்சி முதன்மை (Sovereignty) வழங்குதல். துருக்கியர் பேரரசின் மற்றப் பாகங்களுக்கு உரிமை

வழங்குதல். அதற்குச் சேர்ந்த ஜலசந்தி (Straits) வழியாகக் கப்பல்கள் செல்ல எல்லோருக்கும் அனுமதியளித்தல்.

(13) போலந்து நாட்டின் உரிமையைக் காத்து அங்கு உரிமையாட்சி ஏற்படச் செய்தல். போலந்து மக்கள் வாழும் எல்லா இடமும் இந்த உரிமையாட்சியின்கீழ் இயங்கச் செய்ய வேண்டும். போலந்து நாடு கடல் மார்க்கமாகச் செல்ல இதற்கு வழி ஏற்படச் செய்ய வேண்டும்.

(14) பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கும் ஒருங்கே உரிமையாட்சியும் நிலஉரிமையும் (Territorial Sovereignty) ஏற்படச் சர்வதேசச் சங்கமொன்றை நிறுவுதல்.

போர் முடிவதற்கு முன்னதாகவே 1918 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலேயே வில்சன் மேற்குறித்த பதினான்கு கருத்துக்களையும் வெளியிட்டிருந்தார். இந்த உயரிய நோக்கங்கள் நேசக் கட்சியை உறுதிப் படுத்தின. அதன் படைகள் இவற்றை முன்னிறுத்தியே போரின் பணியில் மிகுந்த ஊக்கத்தோடு ஈடுபட்டன. ஆகையால் வெற்றி கிடைத்த பிறகு இந்த நோக்கங்களைச் செயலாற்ற வேண்டுமென்று நேசக் கட்சி நாடுகளெல்லாம் ஒத்துழைத்தன.

இந்த ஏற்பாடுகளுக்குப் பின் ஐரோப்பாவில் சிலர் இனிச் சண்டையே ஒழிந்ததென்று உவகை கொண்டாடினர்கள். சிலர், குறிப்பாக இந்த மாபெரும் போரால் மிகவும் தாக்கப்பட்டவர்கள், தங்களுக்கேற்பட்ட இன்னல்களை எண்ணி மனம் வருந்தினர்கள். இனிச் சண்டையும் அமைதியும் அவர்களுக்கொன்றேயல்லவா? இன்னும் சிலர் இவ்வளவு பெரிய போரைக் கண்டபின் இனி அமைதி ஏற்படுமென்று எண்ணுவது வீண் விருப்பமேயன்றி வேறல்ல வென்று கூறினர்கள். இப்பொழுதும் பலர், 'உலக அமைதிக்கு வெர்சாயில் செய்யப்பட்ட ஏற்பாடுகளால் என்ன பயன்விளைந்தது?' என்று வினவக்கூடும். ஆயினும் அவற்றுல் ஒரு பயனும் விளையவில்லை யென்றும் நாம் கூறிவிட முடியாது. உலக அமைதி என்பது பெரிய நிகழ்ச்சி. அதற்கு முதற் பணி புரிந்தது வெர்சாயில் நடந்த இந்த ஏற்பாடு. இனிமேல் அமைதி வழியை நாடுவோருக்கு இந்த ஏற்பாடு அடித்தளத்தையும் குறிக்கோளையும் ஒரே சமயத்தில் காட்டுகின்றது.

சர்வ தேச சங்கம் சண்டை முடிந்தவுடன் அமைதியை நிலை நாட்டிவிடவில்லை. அப்படி நிலை நாட்டவும் முடியாது. போருக்

கிடம் ஏற்படாமற் போனுலொழிய அமைதிக்கு எப்படி இடம் ஏற்படும்? போரைத் தவிர்ப்பதற்காகவே ஒரு சர்வதேச மனப் பான்மையை இச்சங்கம் முதலில் ஏற்படுத்தியது. சண்டை முடிந்தவுடனேயே ஐரோப்பாவில் தேசியம் இறந்துவிடவில்லை. ஆயினும் பெரிய நாடுகளில் மட்டுமல்ல, இத்தாலி, துருக்கி, போலந்து போன்ற நாடுகளிலும் இந்தச் சர்வதேச மனப் பான்மை இப்போது ஏற்பட்டது. தேசியமொன்றே காரிய சித்திக்கு உதவாதென்பதை ஐரோப்பா கண்டுகொண்டது. ஜெர்மனி ஏழை நாடாக மாறினுல் அதன் துன்பத்தில் மற்ற ஐரோப்பிய நாடுகளும் பங்கு கொள்ள வேண்டுமென்ற உண்மை இப்பொழுது தானுகவே தென்பட்டது. இன்னும் ஒரு நாட்டில் விளையும் பொருள்களோ அல்லது செய்யப்படும் பொருள்களோ இன்னெரு நாட்டில் விளைவதுமில்லை, செய்யப்படுவதுமில்லை. ஆகையால் வாழ்வதற்கே சர்வதேச ஒற்றுமை தேவை என்பது பெறப்பட்டது. தவிர 1918 ஆம் ஆண்டிலிருந்து வானவழிச் செலவு நடைமுறையில் ஆண்டுதோறும் மிகுதியுறத் தொடங் கியது. ஆகையால் உலகத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றெரு கோடிக்குச் செல்வதும் எளிதாயிற்று. இந்நிலையில் தேசியம் பேசுவதில் பொருள் இல்லாமல் போயிற்று.

இக் காரணங்களைப் பற்றியே முதல் உலகப்போரைச் 'சண்டை முடிவதற்கே செய்யப்பட்ட சண்டை' (War to end war) என்றும், 'மக்கள் அரசிற்கு உறுதி அளித்த சண்டை' (War that made the world safe for democracy) என்றும் கூறு கிறார்கள். தேசியம் குறைந்த அளவில் மக்களாட்சியின் மதிப்பு உயர்ந்தது. வயது வந்த ஆண்களுக்கு வழங்கப்பட்ட வாக் குரிமை இனிப் பெண்களுக்கும் வழங்கப் படுகிறது. பொதுவில் மக்கள் முன்னைவிட ஆட்சியில் அக்கறை கொள்ளத் தொடங்கி னர்கள். மாபெரும்போர் நடந்தபோது அதனல் அதிகமாகப் பாதிக்கப் பட்டவர்கள் ஏழைகளேயன்றிப் பணக்காரரல்லர்; பொதுமக்களேயன்றிப் பெருந்தலைவர்க ளல்லர். ஆகவே ஐரோப் பாவின் பல நாடுகளில் ஆட்சி இனி அவர்களுக்கே கட்டுப்பட்டு நின்றது.

19. இடைவெளி (1)

(1918—1933)

[பிரான்ஸ்-- இத்தாலி (பாஸிஸம்)--ஜெர்மனி--ருஷியா—போலந்து—துருக்கி—ஆஸ்திரியா--ஹங்கேரி (செக்கோஸ்லோவாக்கியா, ரூமேனியா, யூகோஸ்லாவியா)--சர்வதேச சங்கம்.]

I

முதல் உலகப் போருக்குப் பின் ஏறக்குறைய இருபது ஆண்டுக் காலத்தில் மற்றொரு பெரும்போர் ஏற்பட்டது. இதற்கு இரண்டாம் உலகப் போர் என்று பெயர். முதற்போரைக் காட்டிலும் இப்போர் மிகப் பெரியது. முதற்போர் 1914 லிருந்து 1918 வரை நான்காண்டுகள் நீடித்தது. இந்த இரண்டாம் உலகப் போர் 1939 முதல் 1945 வரை ஆறுண்டுக்காலம் நீடித்தது. இன்னும் இப்போர் தனது பரந்த நிலையிலும், விஞ்ஞான முறையிலும் கண்டுபிடிக்கப்பட்ட புதிய போர்க் கருவிகள் பயன்படுத்தப்பட்ட முறையிலும் முதற் போரைக் காட்டிலும் மிகவும் அஞ்சத்தக்க போராக இருந்தது. இதைப் பற்றிப் பின்னர்க் கூறுவோம். இவ்வியலில் முதற்போருக்கும், இரண்டாம் போருக்கும் இடையில் நிகழ்ந்த இருபத்தோராண்டுக் கால ஐரோப்பிய வரலாற்றைக் கூறவேண்டும்.

முதலில் பிரான்ஸ் நாட்டைக் கவனிப்போம். ருஷியாவிற்கு அடுத்தபடியாக முதற்போரால் மிகவும் தாக்கப்பட்ட நாடு பிரான்ஸ் நாடாகும். அதன் பெரும்பாகம் நான்காண்டுக் காலம் பகைவர்களின் கையில் சிக்கி அல்லலுற்றது. இங்கே பட்டணங்கள் பாழாயின. தொழில்கள் நசித்தன. பல்லாயிரக் கணக்கான மக்கள் மடிந்தனர். பிரான்ஸின் முன்னைய வரலாற்றை அறிந்தவர்கள் போருக்குப் பின் மற்றொரு புரட்சி அங்கு ஏற்படுமென்று கூறினார்கள். ஆனால் நல்லகாலமாகப் புரட்சியின் பயனை அனுபவித்த பிரெஞ்சு மக்கள் இனிப் புரட்சிக்குத் தயாராக இல்லையென்று காட்டினார்கள். புயலுக்குப்பின் அமைதியென்பது போல் அவர்கள் இப்பொழுது மக்களாட்சியில் வேரூன்றிய நம்பிக்கை காட்டினார்கள். பெரும் புரட்சியின் வழியாய் அவர்கள் நிலை நாட்டிய மக்களாட்சியை அவர்கள் நிலை கலங்கச் செய்ய

வில்லை. தவிரவும் போருக்குப் பின் அவர்களுக்குச் சிறந்த தலைவர்கள் கிடைத்தனர். கிளமான்ஸோ (Clemenceau) போய்ன்கரே (Poincare), பிரியான் (Briand) போன்ற அரசியல் நிபுணர்களும் மார்ஷல் போஷ் (Marshal Foch) போன்ற படைத் தலைவர்களும் அவர்களுக்குப் புது நம்பிக்கையை ஊட்டினர்கள். ரிச்செல்யு, மசாரின், நெப்போலியன் போன்ற தலைவர்கள் புரட்சிக்கு வழிகோலினர்கள். கிளமான்ஸோ, பிரியான், போஷ் போன்ற தலைவர்கள் அங்கே அமைதிக்கு வழிகோலினர்கள்.

இதுவே இரு போர்களுக்கும் இடையில் ஏற்பட்ட இடை வெளியில் பிரான்ஸின் உள்நாட்டு நிலைமையின் சுருக்கம். மிகச் சிக்கலான நிலையிலும் அது நம்பிக்கை இழக்கவில்லை யென்பதே இதன் ஆணிவேர். 1924ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆங்கி லேயருடைய பவுண்டு நாணயத்திற்கு எழுபது பிராங்குகள் கிடைத்தன. இதுவே 1926ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இருநூற்று முப்பத்தைந்தாக மாறியது. பிரான்ஸின் பொருளா தாரம் மிகச் சீர்கேடான நிலைமையை எய்தியது. ஆயினும் கட்டுப்பாடான முயற்சியால் பிராங்கு நாணயம் மறுபடியும் முன்னைய நிலையை எய்தியது. இன்னும் சொல்லவேண்டுமானால் மற்ற ஐரோப்பிய நாடுகளைவிடச் சில விதத்தில் பிரான்ஸின் பொருளாதாரம் நல்ல நிலைக்குத் திரும்பியது. ஆலைகள் மறு படியும் இயங்கத் தொடங்கின. தொழில்கள் சீரடைந்தன. செல் வந்தரும், ஏழைகளும் ஒருங்கே பயனடைந்தார்கள். வேலை யில்லாத் திண்டாட்டம் என்பதே பிரான்ஸில் இப்போது இல்லா மல் மறைந்ததென்றால் அதன் பொருளாதாரம் உயர்ந்த தென்பதுதான் பொருள்.

வெளி நாட்டு விவகாரங்களில் மட்டும் பிரான்ஸின் நிலை முன்னையைவிடச் சிக்கலாகியது. ருஷியா அப்பொழுது புத்துயிர் பெற்றுக்கொண்டிருந்தது. தனக்கு எதிராக பிரான்ஸ் எப்போதும் போலந்திற்கு உதவி வந்ததென்பது பற்றி ருஷியா அதை வெறுத்தது. இங்கிலாந்து என்றுமே பிரான்ஸின் அந்நிய நாட்டுக் கொள்கையை ஆமோதித்ததில்லை. ஜெர்மனி பெரும் போருக்குப் பின் சீர்குலைந்திருந்தது. பிரான்ஸின் நல்வாழ்வு அதற்குப் பிடிக்கவில்லை. ஆப்பிரிக்காவில் பிரான்ஸ் நாடு கொண்டிருந்த ஏகாதிபத்தியம் ஜெர்மனிக்கு மிகவும் வெறுப்பை அளித்தது. ஜெர்மனி செல்வாக்கில் அப்பொழுது குறைந்திருந்த போதிலும் செல்வாக்கின் ஊற்று அங்கு வற்றவில்லை. பிரான்ஸைவிட ஜெர்மனி நிலப்பரப்பில் பெரியது. அதைப் பயன்படுத்தும் முறையையும் அது அறிந்திருந்தது. இத்தாலியும் ஜெர்மனியைப் போன்ற நிலையில்தா னிருந்தது. அங்கும் ஒற்றுமையும் தேசியமும்

ஒருங்கே வேலை செய்தன. பிரான்ஸின் பழங்கால வரலாற்றை அறிந்தவர்களுக்கு இது சாலவும் வியப்பளிக்கும் மாற்றம். பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஜெர்மனி, இத்தாலி நாடுகளின் அரசியல் நிலையைப் பயன்படுத்தியே பிரான்ஸ் முன்னேறியது. ஆனால் இருபதாம் நூற்றாண்டு அதற்கு நேர் மாறான பாடத்தைப் பிரான்ஸிற்குப் படிப்பித்தது.

II

வெர்சாய் உடன்படிக்கையே இத்தாலி நாட்டிற்குப் பிடிக்கவில்லை. முதல் உலகப் போரினால் தனக்கு எவ்விதப் பயனும் ஏற்படவில்லையென்று இத்தாலி மறுகியது. அதைவிடத் தனக்கு அண்மையிலிருந்த செர்பியா, கிரீஸ் போன்ற நாடுகளின் உரிமைகளை மேற்சொன்ன உடன்படிக்கை ஆமோதித்தது அந்நாட்டவர்களுக்கு ஆத்திரமூட்டியது. இதைப்பற்றி இத்தாலியர்கள் அமெரிக்கத் தலைவர் வில்ஸனையே நொந்தார்கள். ரோம் நகரில் அவருடைய பெயர் இழிவாகப் பேசப்பட்டது. பொதுமக்களும் பகை மனப்பான்மை கொண்டார்கள். இதற்கு உரமளித்தவர்கள் நாட்டின் தலைவர்களும், கவிகளும், பல பேச்சாளர்களும் ஆவர். டெ அனுன்சியோ (D' Annunzio) என்ற கவி சிலரைத் தம்மோடு கூட்டிக்கொண்டு அட்ரியாடிக் கடலின் கிழக்கிலிருந்த பியூமே (Fiume) நகரைக் கைப்பற்றினர். இத்தாவியரின் கையிலிருந்து அந்நகரம் விரைவில் நழுவியது. ஆனால் மறுபடியும் அவர்கள் அதைப் பிடித்தார்கள். விடாமுயற்சியோடு இந்தச் சிறு நகருக்காக அவர்கள் செய்த சண்டை ஐரோப்பிய வரலாற்றிலே ஒரு புத்தாற்றலையே பிறப்பித்ததென்று கூற வேண்டும். இதில் தென்பட்டது தேசியம் மட்டுமல்ல; அது அதற்கும் மேற்பட்ட ஒரு சக்தியாக அமைந்தது.

இதை வரலாற்றறிஞரும் அரசியல் அறிஞரும் பாஸிஸம் (Fascism) என்று வழங்குகிறார்கள். பழங்காலத்தின் ரோமானிய அமைச்சர்கள் (Consuls) தங்கள் அலுவலகத்திற்குச் செல்லும்போது அவர்கள் முன்னே இரும்புக் கோல்களைக் கட்டாகக் கட்டி ஒருவன் தூக்கிச் செல்வது வழக்கம். ஒற்றுமையின் அறிகுறியாகவும் அமைச்சருடைய வல்லமைக்குச் சான்றாகவும் இப்படிச் செய்யப்பட்டது. இந்த இரும்புக்கோல் கட்டுக்குப் பாஸஸ் (fasces) என்ற சொல் இத்தாலிய மொழியில் பயிலப் படுவதால் இப்போது இத்தாலியில் ஏற்பட்ட ஒற்றுமை இயக்கத்திற்கும் இப்பெயரே சூட்டப்பட்டது.

பாஸிஸம் இத்தாலியில் 1920 ஆம் ஆண்டில் தோன்றியது. இதற்கு அண்மைக் காரணம் நாட்டில் அப்போது தோன்றியிருந்த

புரட்சி மனப்பான்மையே எனலாம். ஆனால் புரட்சிக்குத் துணையாக வல்லாமல் அதற்கெதிர்ப்பாகவே இவ்வியக்கம் எழுந்தது. முதல் உலகப் போர் முடிந்தபோது இத்தாலியின் பொருளாதாரம் கவலைக் கிடமாயிருந்தது. போதிய பணப் புழக்கமில்லாததால் விலைவாசிகள் உயரவும் தேவையான பொருள்களை வாங்கச் சங்கடமும் ஏற்பட்டன. இதோடு வேலை நிறுத்தம், ஆலைகள் மூடப்படல், வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பொருளாதார நெருக்கடிகள் நாட்டைப் புரட்சியின் வழியே இழுத்துச் சென்றன. பிரஞ்சு, ருஷியப் புரட்சிகளின் விளைவைப் பார்த்திருந்த இத்தாலியர் இம்மாதிரித் துன்பம் தங்களுக்கும் நேராவண்ணம் பாஸிஸ இயக்கத்தைத் தொடங்கினர்கள். பெனிட்டோ முசோலினி (Benito Mussolini) இதற்கு ஏற்ற தலைவரானார்.

கூடிவாழ்வுடைமைக் கொள்கை (Socialism) யில் முன்னுள் நம்பிக்கைக் கொண்டவர், கார்ல் மார்க்ஸின் (Karl Marx) சிறந்த மாணவர் என்று பெயர் பெற்ற முசோலினி இப்போது அதற்கு நேர்மாறான கொள்கைக்குத் தலைமை தாங்கினர். அப்பொழுது தான் முடிந்திருந்த முதல் உலகப்போரில் சிறந்த பணியாற்றியதன் விளைவாக இத்தாலியின் பெருமையை அவர் நன்கு கண்டார். வரவிருக்கும் நாட்களில் ஐரோப்பியப் பேரரங்கில் அது உயரிய நிலையை எய்த வேண்டுமென்று அவர் திண்ணமாக நம்பினார். தாமே இந்தப் பணியைத் தலைமை தாங்கி நடத்த வேண்டு மென்றும் அவர் தீர்மானித்தார். அவருக்கிருந்த சிறந்த மனத் திட்பம், தன்னம்பிக்கை, பேச்சாற்றல், மக்களை ஒன்று சேர்க்கும் திறன் என்ற இவை யாவும் அவருக்கு இப்பதவிக்காக ஏற்கனவே அமைந்தன போல் காணப்பட்டன. 1921ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் பாஸிஸத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் எல்லோரையும் ஒரு மாபெருங் கூட்டத்திற்கு அழைத்தார். இம் மாநாடு இத்தாலியின் பழம்பெருமை வாய்ந்த நேப்பிள்ஸ் நகரத்தில் கூடியது. மாநாட்டின் பெருமை புதுக் கொள்கைக்குச் சிறந்த ஆதரவளித்தது. உடனே பாஸிஸ்டுகள் (Fascists) நாட்டின் அரசைக் கைப்பற்ற முடிவு செய்தனர். மக்கட் பெருந் திரள் ரோம் நகரை நோக்கிச்சென்றது. நாட்டின் படையும் அவர்களோடு சேர்ந்தது. மன்னரும் அவர்களை எதிர்க்கவில்லை. ரோம் நகரம் அவர்களுக்குப் பணிந்தது. அரசு அவர்கள் கையில் வந்தது. பாஸிஸத்தை ஒப்புக்கொண்டு அதில் உறுப்பினர் களுக்கு மட்டும் இனி இத்தாலிய அரசியலில் இடமுண்டு என்ற நிலைமை ஏற்பட்டது.

பாஸிஸத்தின் இத்தகைய செல்வாக்குக்கு முதற்காரணம் அது தேசியத்தை ஆதரித்ததே. சுருங்கக் கூறின் பாஸிஸம் தேசியத்தின் மறுபிறப்பு. அது மட்டுமல்ல, அதுவே கடுந்தேசிய மெனலாம். கரிபால்டி, கவூர், விக்டர் எமானுவேல் போன்ற தலைவர்களுடைய நாட்டுப்பற்றை இத்தாலியர் ஒருபோதும் மறக்கவில்லை. இது முதலாம் உலகப் போருக்குப் பிறகு இன்னும் மிகுதியாகக் கொழுந்து விட்டெரியத்தொடங்கியது. முசோலினி பழங்கால உரோமானியப் பெருமைகளையும் அவர்களுக்கு ஞாபக மூட்டினார். இது பாஸிஸத்தின் அடிப்படையான நோக்கங்களி லொன்று. அதன் கொள்கைகளும், பட்டங்களும், சடங்குகளும் பழங்கால உரோமானிய வரலாற்றையும் நடத்தையையும் பின் பற்றியவை. உரோமானியப் பேரரசையே மறுபடியும் நிறுவ ஆசைப்பட்டார் முசோலினி. ஆகவே, அவர் உரோமானிய சீசர்களுடைய அரசியல் முறையைப் பின்பற்றத் தீர்மானித்தார். இதற்குத் தனி மனிதன் ஆட்சி என்பதே பொருள். ஆகையால் பாஸிஸமென்றால் தனி மனிதன் ஆட்சி (Dictatorship) என்று பொருள் ஏற்பட்டது. அரசியல் வாதிகள், அரசியல் நிபுணர், ஆசிரியர்கள், தொழில் தலைவர்கள் என்ற நாட்டின் பல்வேறு துறைகளில் ஈடுபடுபவர்களும் பாஸிஸத்தின் உறுப்பினராயிருக்க வேண்டும் என்பது ஒழுங்காயிற்று.

வெளித் தோற்றத்திற்கு இந்த அரசியல் முறை யதேச்சாதி காரமாகத் தோன்றிய போதிலும் உண்மையில் இதினின்று நன் மையே பிறந்தது. முதலில் ஆட்சிமுறை உருப்பெற்றது; ஊக்கம் காட்டியது; செயல் முறையில் பயன் பெற்றது. தொழில் முறைகள் புதிய துறைகளில் நுழைந்து இத்தாலிய மக்கள் வாழ்க் கைக்கு ஆக்கம் தேடின. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தது. இத்தாலிய நாணயம் மதிப்பில் உயர்ந்தது. ஐரோப் பிய மக்களும், மன்னர்களும் இத்தாலியின் பெருமையைக் கண்டு வியப்புற்றார்கள். அதன் ஆலோசனையை நாடினார்கள் பாஸிஸக் கொள்கைகள் ஐரோப்பிய முன்னேற்றத்திற்கு வேண்டத்தக்கவை யென்பதையும் கண்டுணர்ந்தார்கள்.

இத்தாலி நாட்டின் அரசிற்கும் போப்பின் அரசிற்கும் இடையே இருந்த சிக்கலைத் தீர்க்க வேண்டுவது அவசியமென்பதை முசோலினி கண்டார். கவூர், கரிபால்டி காலத்தில் போப்பின் வாழ்வு மிகவும் தாக்கப்பட்டது. கரிபால்டி வாடிகன்மேற் படையெடுத்தார் என்பதை நாம் அறிவோம். 1870ஆம் ஆண்டில் ஒன்றுபட்ட இத்தாலி நாட்டிற்கு உரோம் தலைநகராயிற்று. ஆயினும், போப் இதனை ஏற்றுக்கொண்டு வாடிகனின் உரிமையை விட்டுக் கொடுப்பதாயில்லை. இத்தாலிய அதிகாரிகளின் கீழ்

வாடிகனை வைப்பதற்கு அவர் ஒருப்படவில்லை. போப் விட்டுக் கொடுப்பதாயிருந்தால் அவருக்கு நிறையப் பணம் தருவதாகச் சொல்லியும் அவர் இணங்குவதாயில்லை. ஆனால் காலம் செல்லச் செல்லச் சமய வேற்றுமைகள் குறைந்தன. இத்தாலியரும், போப் தமது வாடிகன் அரண்மனையில் ஒரு குற்றவாளிபோல் அடைபட்டிருப்பதை யெண்ணி உள்ளம் வெதும்பினர்.

இந்நிலையில் முசோலினி போப்புடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள முன் வந்தார். இதன்படி வாடிகனும் அதற்குச் சுற்றுப் புறத்திலுள்ள மாவட்டமும் உரிமைபெற்ற நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. அங்கு மிகச் சில மக்களே வாழ்ந்தாலும் அதற்கு நாணயம், அஞ்சல்துறை போன்ற ஒரு நாட்டிற்கு வேண்டிய தகுதிகளெல்லாம் தரப்பட்டன. தவிரவும் சமய முறையில் இத்தாலிய அரசு தலையிடுவதில்லையென்றும் ஒப்புக் கொண்டது. புதிதாக ஏற்படும் வாடிகன் நாட்டுக்கு அதன் அரசியல் தகுதிக்காக ஒரு பெருந்தொகை வழங்கப்படுமென்பதும் இந்த ஒப்பந்தத்தின் அம்சங்களில் ஒன்று. இவற்றிற்குப் பதிலாக உரோம் நகரை இத்தாலியின் தலைநகராகப் போப் ஒப்பவேண்டும். கத்தோலிக்கக் குருக்களும் மேற்றிராணிமார்களும் நாட்டின்மேல் அவர்களுக்கிருக்க வேண்டிய பற்றுதலில் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பது அரசாங்கத்தின் வேலை. சமயத் தொடர்பான துறைகளை மட்டும் திருச்சபை கவனித்துக்கொள்ள வேண்டும் என்று முடிவாயிற்று. இந்த இறுதி ஒப்பந்தத்தைச் செயலாற்றுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டனவென்றாலும் முசோலினி செய்த ஒப்பந்தம் பல ஆண்டுகளாக இத்தாலியில் பெருஞ் சிக்கலாகவிருந்த வாடிகன், இத்தாலி அரசு என்ற இவற்றின் நெருக்கடியைத் தீர்க்க ஒரு நல்ல வழியைக் காட்டிற்று.

III

போருக்குப்பின் ஜெர்மனி மறுபடியும் உயிர் பெற்றதென்றே சொல்ல வேண்டும். கிழக்கிலும், மேற்கிலும் அதற்குரிமையான மாவட்டங்களும் அதன் குடியேற்ற நாடுகள் முழுவதுமே அதனிடமிருந்து பறிக்கப்பட்டன. உலகம் முழுவதும் அதற்கு எதிராகக் காட்சி அளித்தது. ஆயினும் நாட்டினுள் ஒற்றுமை குலையவில்லை. அங்கு ஒற்றுமையைப் பயன்படுத்தி ஆட்சி முறையை வகுக்கும் அவைகளும் சங்கங்களும் முன்னிலும் விரைவாக வேலை செய்யத் தொடங்கின. இவ்வாறு மிக விரைவில் ஜெர்மனி மீண்டும் உயிர் பெற்று ஐரோப்பிய நாடுகளின் நடுவில் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கியது.

இந்தச் சாதனை எளிதில் நம்ப முடியாதது. இதைச் செய்து முடிப்பதற்கு ஒரு பெரும் புரட்சி தேவைப்பட்டது, போரின் முடிவிலே ஜெர்மன் மன்னர் கெய்சர் நாட்டைவிட்டு வெளியேறினர். ஆகையால் முதலில் அங்கு யார் ஆட்சி செலுத்துவது என்பதைப்பற்றி முடிவுகட்ட வேண்டியதாயிற்று. எல்லோரும் ஒரு மனதாகக் குடியரசு ஆட்சியை ஒப்புக்கொண்டார்கள். 1919ஆம் ஆண்டு வைமாரில் கூடிய அவை புதிய குடியரசு அரசியலமைப்பைத் தந்தது. இதன்படி ஒரு குடியரசுத் தலைவர், ஓர் அமைச்சர் அவை, இரு சபைகள் கொண்ட பாராளுமன்றம் ஆகியவை கொண்ட அமைப்பு ஏற்பட்டது. ஏற்கெனவே பிஸ்மார்க் திட்டப்படி ரெய்க்ஸ்டேக், செய்ஷ்டிராத் என்ற இரு மன்றங்களிருந்தன. இவற்றில் ஒன்று மக்களவை; மற்றது கூட்டு நாடுகளின் (Federating States) உறுப்பினர் கொண்ட அவை. இவை இரண்டும் முன்போல் இயங்க முடிவாயிற்று. ஒற்றுமையை உறுதிப்படுத்த நாட்டிலிருந்து வந்த வரிப்பணம் முன்போல் கூட்டு நாடுகள் மூலம் வருவதை யொழித்து நேரே மத்திய அரசாங்கத்திடமே செலுத்தப்பட வேண்டும். குடியரசின் ஆட்சி பீடத்தில் எல்லா மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரையே தலைவராக (President) ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஜெர்மன் தலைவர் எபெர்ட் (Ebert) இவர் எளிமையாக வேலை செய்பவர். அரசியல் மனப்பான்மையில் கூடி வாழ்வுடைமைக் கொள்கையுடையவர். 1925ஆம் ஆண்டு இவர் இறந்த பிறகு இரண்டாம் தலைவர் தேர்தல் நடந்தது. அதில் சிறு வேறுபாட்டில் மார்ஷல் ஹிண்டன்பர்க் (Marshal Hindenburg) தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 1934 வரை ஜெர்மன் குடியரசின் தலைவராக இருந்தார்.

ஆயினும் குடியரசு நிலைபெறுவதற்குப் பல இடையூறுகளைக் கடக்க வேண்டியதாயிற்று. நாட்டில் உண்பதற்கு உணவில்லை. பணவசதியும் கிடையாது. பொதுவில் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முதலில் வழிகாண வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்நிலையில் குடியரசாட்சிக்கு எதிரிடையாகப் பலர் எழுந்தார்கள். பல்லாண்டுக் காலமாக நடந்த பேரரசு ஆட்சியை விட்டுக் கொடுக்கப் பலர் மனமில்லாதிருந்தார்கள். கடந்த போரில் ஜெர்மன் படைத் தலைவராகப் பணியாற்றிய லூடென்டார்வ் (Ludendorff) இவர்களுக்குத் தலைமை தாங்கினர். அவரோடு பல போர் வீரர்கள் சேர்ந்தார்கள். இதனால் கலகம் எழுந்து நல்ல காலமாக அது அடக்கப்பட்டது. ஆனால் அதனோடேயே பொதுவுடைமைக் கிளர்ச்சியும் எழுந்தது. இந்தக் கிளர்ச்சியை அடக்குவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. பலர் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகே அது அடங்கியது.

ஜெர்மனியின் தொல்லைகளில் தலையாயது ரூர் ஆற்றங் கரையில் படையோடு தங்கியிருந்த பிரெஞ்சுக்காரர்கள் தொல்லை யேயாகும். இவர்களுக்கு வெர்சாய் உடன்படிக்கைப்படி ஜெர் மானியர் பரிகாரப் பணம் (Reparation) தர வேண்டியிருந்தது. பணமில்லா நிலையில் இவர்களை எப்படி அமைதி கொள்ளச் செய்வ தென்பது ஜெர்மனியின் பெருஞ் சிக்கலாகியது. பரிகாரப் பணம் வராததைக் கண்டு 1922 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் பிரெஞ்சுக்காரர்கள் ரூர் மாவட்டத்தைக் கைப்பற்றினர்கள். ஜெர்மன் நாணயம் மதிப்பில் குறைந்தது. இது வரலாறு அறியாத நாணயக் குறைச்சலாகும். 1923ல் ஆங்கிலேயப் பென்னி நாணயம் (நம் நாட்டின் ஒரு அணு மதிப்புடையது) இரண்டு மில்லியன் அல்லது 20 இலட்சம் ஜெர்மன் மார்க்குகளை வாங்கக்கூடிய நிலையென்றால் இந்த நாணய இழப்பு ஒருவாறு புலப்படும்.

இந்த நிலையில் ஜெர்மனி ஒருபோதும் தலைதூக்க முடியா தென்றுதான் உலகம் நினைத்தது. ஆயினும் நினையாத பலவும் இவ்வுலகில் நடைபெறுகின்றன என்ற முறையில், ஜெர்மனி மறு பிறப்படைந்தது. இதைச் செய்து முடிப்பதில் பெரும் பங்கு கொண்டவர்கள் ஸ்டிரஸ்மேன் (Stressman), ஷாட் (Schacht) என்பவர்கள். ஜெர்மனியின் கடன் சிக்கலை ஒழிக்க டாஸ் (Dawes) என்ற அமெரிக்க அறிஞர் ஒருவழி வகுத்தார். ரெட்டன் மார்க் என்ற ஒரு புது நாணயத்தை ஜெர்மனி வழங் கியது. அது மதிப்பில் குன்றுவண்ணம் அதைத் தங்க அடிப் படை (Gold Standard) யில் வைத்தது (1924). அதே சமயத்தில் கணக்கறிஞர் அயின்ஸ்டைன் (Einstein), உளநூல் வல்லுநர் பிராயிடு (Freud), வாழ்க்கை வரலாற்றுப் புலவர் லுட்விக் (Ludwig) போன்றவர்கள் ஜெர்மனியின் நிலையை உயர்த் தினர்கள்.

IV

ஜெர்மானிய நிலைமை சிறிது திருந்தி வந்த சமயத்தில் ருஷியாவில் பெரும் புரட்சி ஏற்பட்டது. போர் புரட்சிக்குத் தாய். ஏனென்றால் அதனால் விளைவது பெருந்துன்பம். போரினால் இன்புறுபவர்கள் சிலரே. இதனால் எல்லா ஐரோப்பிய நாடுகளி லுமே உலகப் போருக்குப் பின் புரட்சி தலைதூக்கியது. உலகப் போர் தொடங்கும்போது ருஷியாவில் வல்லாட்சி நடை பெற்றது. அதனடியில் மக்களுடைய உரிமை வாழ்க்கைக்கு இடமில்லை. உரிமைச் சங்கங்களும் உரிமையாட்சி மன்றங்களும் கொஞ்சங் கொஞ்சமாக மடிந்தன. தலத்தாபன ஆட்சி

உயிரற்றுப் போயிற்று. இந்நிலையிலும் போர் தொடங்கியபோது ருஷிய மன்னர் சண்டையில் இறங்கினர், ஆனல் அது நீடித்து நடக்கவே ருஷிய மக்கள் சொல்லொணாத் துயரிலாழ்ந்தார்கள். இதனலேயே சண்டை முடியுமுன்னரே ருஷிய மக்கள் அமைதி தேடினர்கள். ருஷிய மன்னர் கொல்லப்பட்டார். ருஷியா ஜெர்மனியோடு சமாதானம் செய்து கொண்டது. லெனினும் டிரோட்ஸ்கியும் புரட்சிக்காரர்களென்று நாட்டினின்றும் துரத்தப்பட்டவர்கள் இப்போது அங்கே தலைவர்கள் ஆனர்கள்.

பல விதத்திலும் ருஷியப் புரட்சி உலகில் தோன்றிய எல்லாப் புரட்சிகளிலும் மிகப் பெரிது. 18 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸில் நடந்த புரட்சி வரலாற்றுப் புகழ் பெற்றதுதான். ஆனல் இப்பொழுது நடந்தேறிய ருஷியப் புரட்சி அதை மங்கச் செய்து விட்டது. பிரஞ்சுப் புரட்சி ஏறக்குறைய பத்தாண்டுக் காலமே நீடித்தது. ஆனல் அதன்பின் போந்தது மக்களாட்சியன்று; தனி மனிதன் ஆட்சியே. அதனல் மக்கள் எதற்காகப் புரட்சி செய்தார்களோ அதன் பயனை நுகரக் கொடுத்துவைக்கவில்லை. ருஷிய அனுபவம் அதற்கு மாருனது. 1917ல் தொடங்கிய புரட்சி இங்கு ஏழாண்டுக்காலமே நீடித்தது. 1924ல் புது அரசியல் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனல் அதோடு புரட்சி ஓய்ந்துவிடவில்லை. இன்றும் ருஷியா தன் குறிக்கோளை நோக்கி ஓடிக்கொண்டேயிருக்கிறது. அங்கு மக்கள் நிலைமை மாறிக்கொண்டேயிருக்கிறது. இதனல் ருஷியர்கள் கூறுவது போல் அங்கே ஓர் இன்ப உலகமே நிருமாணிக்கப்பட்டுள்ளதென்று நாம் கூறமுடியாதென்ருலும் மக்கள் உழைப்பதற்குத் தயாராயிருந்ததால் அங்கு அவர்கள் உணவுக்குப் பஞ்சமில்லை.

1924 ஆம் ஆண்டு ருஷியாவில் ஏற்பட்ட அரசியல் திட்டம் புதியது. அங்கே ஏற்பட்ட புரட்சி எவ்வாறு அதுவரை மனித இனம் காணுத புரட்சியாக இருந்ததோ அவ்வாறே அதன் விளைவும் புதுமையாகவிருந்தது. தொழிலாளிகளும் படைவீரர்களுமே புரட்சிக்குத் தலைமை தாங்கினர்கள். அவர்களே இப்பொழுது அரசியல் அமைப்பையும் நிறுவினர்கள். அரசாட்சியின் தலைமை 371 உறுப்பினர்கள் கூடிய ஓர் அவையின் கையில் வைக்கப்பட்டது. அதன் தலைமைச் செயற்குழுவிற்கு மத்தியச் செயற்குழு (Central Executive Committee) என்ற பெயர் சூட்டப்பட்டது. அதன் தலைமையாகப் பிரிசிடியம் (Presidium) என்ற உட்குழு ஒன்று வேலை செய்தது. மக்களவைக் குழு (Soviet of People's Commisars) இவற்றையெல்லாம் மேற்பார்வை செய்வதென்று இந்தப் புது அரசியல் திட்டம் முடிவு

செய்தது. இவ்விதமாக ஏற்பட்ட புத்தாட்சிக்கு ருஷிய கூடி வாழ்வுடமைக் கூட்டுக் குடியரசு (Russian Socialist Federal Soviet Republic) என்ற பெயர் தரப்பட்டது.

ருஷியப் புது அரசியல் முறையின் தலையாய கருத்து பொதுவுடைமைக் கொள்கை. இந்த ஒரு கருத்துக்கே அங்கு இடமுண்டு. நாட்டின் நலத்திற்கு ஒரு தலையாய கருத்தே உலவ வேண்டும் என்பதை ருஷியா நம்பியது. இன்னும் நம்பி வருகிறது. மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் அரசியலார் கருத்துக்கள், அவற்றிற்கு எதிர்ப்பு என்ற இருவகைக் கொள்கைளுக்கும் இடமுண்டு. ஆகையால் இந்த நாடுகளில் எப்பொழுதும் குறைந்தது இருகட்சிகள் — ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி — இயங்குகின்றன. ருஷியாவில் இதற்கெல்லாம் இடமில்லை. அரசின் கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படவேண்டும்; அல்லது சிறையில் தள்ளப்பட வேண்டும் என்ற ஒரே கருத்துக் கொண்ட ருஷிய நாடு இதைச் செயல் முறையிலும் நடத்திக் காட்டுகிறது. ருஷியப் பள்ளிக் கூடங்கள், பத்திரிகைகள், படக்காட்சி சாலைகள் முதலிய எல்லா இடங்களிலும் பொதுவுடைமைக் கொள்கையே கற்பிக்கப் படுகிறது. அதற்கு மாறான எவ்வகை வெளியீடும் அங்கு வெளி வரவும் அனுமதிக்கப்படுவதில்லை. வெளிநாடுகளிலிருந்து அங்கு வரவும் அனுமதிக்கப்படுவதில்லை.

ருஷிய அரசியல் முறையின் இரண்டாவது குறிக்கோள் புரட்சியை உலகமெங்கும் பரப்ப வேண்டுமென்பது. புரட்சி எப்பொழுதுமே மற்றவர்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடுகிறது. உலக வரலாற்றில் இதைப் பரக்கக் காணலாம். பிரஞ்சுப் புரட்சிக்காரர்கள் ஐரோப்பா முழுவதும் தங்களோடு சேருமென்று நம்பினர்கள். மற்ற நாடுகளைப் புரட்சியில் சேரும் படி அவர்கள் பிரசாரமும் செய்தார்கள். ருஷியாவும் இவ்வகைப் பிரசாரத்தைச் செய்து கொண்டே யிருக்கிறது. தன்னைச் சுற்றியுள்ள பின்லாந்து, லேட்வியா, எஸ்தோனியா, லித்துவேனியா, போலந்து நாடுகளைப் போரில் வென்றுவது தன்னோடு சேர்க்க வேண்டுமென்று ருஷியா விழைந்தது. ஆனால் 1920ல் போலந்து நாட்டோடு செய்த சண்டையில் ருஷியா முழுத் தோல்வியடைந்தது. இது வார்சாச் சண்டை என்று பெயர் பெற்றது. அதற்குப் பின் ருஷியர்களுடைய தீவிர எண்ணம் தடைப் பட்டது. இந்த முயற்சியின் பின்னைய வரலாற்றை அடுத்துக் கூறுவோம்.

V

இங்கு ருஷியாவைத் தோல்வியுறச் செய்த போலந்தைப் பற்றிச் சிறிது கூறவேண்டும். 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் மிகப் பெரிய நாடாக விளங்கிய போலந்து இப்பொழுது ஒரு சிறு நாடாக இருப்பது போலந்து மக்களுக்கு ஒரு பேரிழுக்காகத் தெரிந்தது. நாள் செல்லச் செல்ல இந்த உண்மை அவர்களுக்குத் தெற்றென விளங்கிற்று. பிரஷ்யாவின் வளர்ச்சி ஒரு புறமும், சைலீஷியாவின் வளர்ச்சி மறுபுறமுமாகப் போலந்தை நசுக்கியது. ஏறக்குறைய 150 ஆண்டுக் காலமாக அதன் கப்பல்கள் கடலைக் கண்டதில்லை. கடலை அடைய வழியில்லாவிட்டால் நாடு செல்வாக்கடைவதெப்படி என்ற சிக்கல் போலந்தில் கொழுந்து விட்டெரிந்தது. உலகப் போரின் முடிவில் ஏற்பட்ட வொசாய் உடன்படிக்கையில் போலந்து கடலுக்குச் செல்ல வழி செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பிரஷ்யா வளர்ச்சியடையுமுன் போலந்து நாட்டு மாலுமிகளும் வணிகர்களும் பால்டிக் கடல் வழியாக அயல் நாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். இப்பொழுது இதற்கு வழி ஏற்படுத்துவதற்காகக் கிழக்குப் பிரஷ்யாவிற்கும், மத்தியப் பிரஷ்யாவிற்குமிடையில் போலந்து நாடு கடலை அடைவதற்கு ஒரு வழி செய்தார்கள். இது உண்மையிலேயே ஒரு வழி (Corridor) யாகத்தானிருந்தது. இந்த வழியிலிருந்த டான்சிக் (Danzig) நகரத்தைக்கூடப் போலந்துக்குக் கொடுக்கவில்லை. அது எந்நாட்டிலும் சேராத தனி நகரமாக (free city) இருக்கும்படி முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் போலந்து மக்கள் மனம் நொந்தார்கள். அவர்களுக்கு அப்போது ஜோசப் பில்சுட்ஸ்கி (Josef Pilsudski) என்ற நல்லதொரு தலைவரும் கிடைத்தார். 1917ஆம் ஆண்டு ருஷியப் புரட்சியின்போது அதற்கு மாறுகப் பிரசாரம் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு அதனால் சைபீரியாவிற்கு அனுப்பப் பட்டவர் இவர். இப்பொழுது சண்டை ஓய்ந்த பின்னர் இவர் போலந்து நாட்டிற்குத் திரும்பி அங்கே மறுபடியும் புரட்சியில் ஈடுபட்டார். முசோலினியைப் போலவே இவரும் கூடிவாழ்வுடைமைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர்: ருஷியாவின் தீவிரக் கொள்கையை எதிர்ப்பவர். இந்நிலையில் இரு நாடுகளுக்கும் சண்டை மூள்வதைத் தவிர வேறு வழியில்லை. 1920ஆம் ஆண்டு ருஷியத் தலைவர் டிரோட்ஸ்கி 150,000 படைவீரர் கொண்ட ஒரு பெரும் படையைப் போலந்தினுள் இறக்கினார். போலந்தினால் இத்தகைய படையை எதிர்ப்பதென்பது முடியாத காரியம்போல் தோன்றியது. ஆகவே, அது ருஷியாவினிடம் சமாதானம் கோரியது. ஆனால் ருஷியாவின் ஆணைகள்

போலந்தையே அழிப்பது போன்று தோன்றின. அதற்குள் ருஷியப் படை போலந்தின் தலைநகரான வார்சாவிற்கு 15 மைல்களுக்குள் நெருங்கிவிட்டது. நல்லகாலமாகப் பிரஞ்சுப் படையொன்று ஜெனரல் வேய்காண் (Weygand) தலைமையில் போலந்திற் குதவியது. அப்பொழுது நினையாத புதுமை நிகழ்ந்தது. வார்சாவில் நடந்த சண்டையில் ருஷியர்கள் தோற்றார்கள். அவர்கள் எதிர்பாராத விதமாய்ப் பிரஞ்சுப் படையால் தாக்கப் பட்டது அவர்களுக்குப் பெருங்கலக்கத்தை விளைவித்தது. பேரிழப் போடு ருஷியர் போலந்தைவிட்டு வெளியேறினர்கள். அவர்கள் கைதிகளாகப் போலந்தில் விட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கையே 70,000. இதற்குப் பின் போலந்து கவலையற்றுத் தனியாட்சி நடத்துவது எளிதாயிற்று.

VI

இனி, துருக்கியின் நிலைமை என்னவென்பதைக் கவனிப் போம். உலகப் போரில் மிகச் சீரழிந்த நிலை எய்திய நாடு துருக்கி. அதற்குரிமையாயிருந்த எகிப்து, சிரியா, அரேபியா, மெசொபொட்டேமியா என்ற நாடுகளையெல்லாம் அது இழந்தது. இப்பொழுது அதற்குரிமையாயிருந்தது ஆசியாமைனர் ஒன்றே. அங்கேயும் பல கிரேக்கர்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்காதரவாகக் கிரீஸ் ஒரு படையை அங்கு அனுப்பி வைத்தது. அது ஸ்மிர்ணு (Smyrna) நகரையும் அதன் சுற்றுப் புறங்களையும் கிரீஸ் நாட்டிற்கே உரிமையாக்கியது.

துருக்கி வாழ்வதா அன்றி மறைவதா என்ற நிலையில் அங்கு முஸ்தபா கெமால் (Mustapha Kemal) தோன்றினர். துருக்கியர் கிரேக்கர்களைப் பகைத்ததுபோல் யாரையும் பகைத்ததில்லை. அவர்கள் இப்பொழுது துருக்கியில் கால் வைத்தது துருக்கியின் தேசிய உணர்ச்சியைத் தட்டி எழுப்பியது. இதன் தலைவராகவே கெமால் விளங்கினர். துருக்கியர் அவருடைய தலைமையில் கூடினர்கள். உலக வரலாற்றில் நாம் கண்ட புரட்சியாளர்கள் எல்லோரையும்விட மிகப் பெரிய புரட்சி மனப்பான்மை கொண்டவர் கெமால். பல நூற்றாண்டுகளாக முஸ்லீம் பெண்கள் உலகமெங்கும் மறைசீலையின்கீழ் வாழ்ந்தவர்கள். துருக்கியும் அப்படியே. அதை எடுக்கவேண்டுமென்று இப்பொழுது கெமால் ஆணை பிறப்பித்தார். அதன்படி பெண்கள் அணியும் முகத்திரை மறைந்தது. ஆண்கள் 'வெஸ்' என்ற தொப்பியை அணிவதும் சட்ட விரோதமானது. துருக்கி மொழி இதுவரை அரேபிய முறையில் எழுதப்பட்டு வந்தது. அதை ஒழித்து ஐரோப்பிய முறையில் எழுதப்படவேண்டுமென்று கெமால்

ஆணைபிறப்பித்தார். துருக்கி சுல்தான் இஸ்லாம் சமயத்திற்கே கி. பி. 16ஆம் நூற்றாண்டிலிருந்து தலைமைப் பதவி (Caliph) ஏற்று வந்தவர். அதை உதறித் தள்ளினர் கெமால். அவருடைய ஒரே நோக்கம் துருக்கியர் தேசிய உணர்ச்சி பெறவேண்டிய முற் போக்கடைய வேண்டும் என்பதே. இந்த நோக்கத்திலும் அவர் ஓரளவு வெற்றிபெற்றார்.

இவ்விதமாய் ஐரோப்பிய முறைகளைக் கொண்டே ஐரோப் பியரை வெல்லவேண்டுமென்று அவர் முடிவு கட்டினர். அதற்காக அவர் ஒரு பெரும்படையையும் உருவாக்கினர். அதைத் தற்கால முறையில் தேர்ச்சி பெறச் செய்து புதிய படைக் கருவிகளைப் பயன்படுத்துவதில் பயிற்சியளித்தார். இந்தப் பணியில் பிரஞ்சுக் காரர்கள் அவருக்கு உதவினர்கள். இவற்றின் பயனாய் முதல் உலகப் போருக்குப்பின் துருக்கியின் படைவலிமை பெருகியது.

தங்களைத் தோற்கடித்த கிரேக்கர்களை முறியடிக்க வேண்டு மென்பதே வலிமை பெற்ற கெமாலுடைய முதல் நோக்கம். இதைக் கிரேக்கர்களும் அறிந்திருந்தார்கள். ஆயினும் அங்கே ஆட்சி மாற்றத்தினால் பழைய வலிமை குறைவுபட்டிருந்தது. 1920ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் கிரேக்க மன்னர் அலெக்சாந்தர் குரங்கின் கடியால் நோயுற்று இறந்தார். துருக்கி யரை வெற்றி கண்டவர் இவரே. இவருடைய மறைவு கிரேக்கர் களுக்குப் பெரிய இழப்பாகும். இவருக்குப் பின் அரசு கட்டி லேறிய காண்ஸ்டன்டைன் என்பவரும் பயனற்ற மன்னராயிருந் தார். உலகப்போரின் சமயம் இவர் அரச பதவிக்குத் தகுதியற் றவரென்று முன்னமேயே அதினின்றும் நீக்கப்பட்டவர். துருக் கியர் போர் தொடங்குவதற்கு முன்னரே கிரேக்கர்கள் அவர் களைத் தாக்கி வெற்றிகாண எண்ணினர். ஆனால் அது பயனற்ற தாயிற்று. ஸ்மிர்னாப் பட்டணம் மறுபடியும் துருக்கியர் கையில் வீழ்ந்தது. அங்குள்ள கிரேக்கர்கள் மிகுந்த தொல்லைக்காளா யினர். விரைவில் ஆசியா மைனரில் வசித்த கிரேக்கர்களில் பெரும்பகுதியினர் கிரீஸுக்கு வெளியேற்றப்பட்டனர். லௌ சேன் (Lausanne) என்னுமிடத்தில் இரு நாட்டினருக்கும் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி துருக்கியர் ஐரோப்பாவில் சில பகுதிகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டனர். ஐரோப்பாவின் வருங்காலத்தில் துருக்கியின் எழுச்சி பெருஞ் சிக்கலாய் விளைந்தது.

VII

ஆயினும் இன்னும் கடுமையான சிக்கல் ஐரோப்பாவின் உள்ளேயே முளைத்தது. அதுவும் உலகப் போரை முடித்த வெர்சாய் உடன்படிக்கையினின்று ஏற்பட்டது. அதுதான் ஆஸ்திரியப் பேரரசை ஒழித்து அதைச் சிறு சிறு உரிமை நாடுகளாக இயங்கச் செய்தது. இவ்விதமாகப் போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, ருமேனியா, யூகோஸ்லாவியா, ஹங்கேரி என்ற தனிநாடுகள் ஏற்பட்டன. இவை ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் சிக்கலை வளர்த்தன. அதே சமயம் பேரரசாய் வாழ்ந்த ஆஸ்திரிய நாட்டிற்கு இன்னல் விளைத்தன. புதுவாழ்வுக்குத் தன்னைத் தயார் செய்து கொள்ள அதற்குப் போதிய காலமோ வசதியோ கிடைக்கவில்லை. அதன் பொருளாதாரம் குறிப்பாகப் பாழ்பட்டது. ஜெர்மனியோடு சேர்ந்து வாழ்வதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை. 1920ஆம் ஆண்டு இந்த ஒற்றுமையை வளர்க்க ஆஸ்திரியா முயன்றது. ஜெர்மனியும் அதற்கு இசைவு தந்தது. ஆனால் புதிதாக ஏற்பட்ட சர்வ தேச சங்கம் இதற்கு இடந்தரவில்லை.

தனியாய் இயங்கத் தொடங்கிய ஹங்கேரியின் நிலைமையும் கவலைக்கிடமாகவே இருந்தது. முதலில் அதனுடைய எல்லைகள் குறைக்கப்பட்டன. பிறகு ஹங்கேரி மக்களில் பெரும்பகுதியினர் தனியாக ஏற்பட்ட செக்கோஸ்லோவாக்கியா, ருமேனியா, யூகோஸ்லாவியா நாடுகளுக்குக் குடியேற்றப்பட்டனர். இவ்விதமாக ஹங்கேரியின் முன்னைய மக்கள் கணக்கில் 12½ மில்லியன் குறைந்தது. விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், உலகப் போருக்கு முன் அங்கு இரண்டு கோடி மக்கள் வாழ்ந்தார்கள், இப்பொழுது மக்கள்தொகை முக்கால் கோடியாகக் குறைந்தது. மக்களின் எண்ணிக்கை மிகக் குறைந்தபோது பெரும் பொருளாதார நெருக்கடிகள் அங்கு ஏற்பட்டன. முதலில் பொதுவுடைமைக் கொள்கையை அது தாவிப் பற்றியது. ஆனால் அங்கு வாழ்ந்த மாகியார் பெருமக்கள் இதற்கு வழிவிடவில்லை. ஆகவே ஹங்கேரியின் நிலைமையும் ஆஸ்திரியாவின் நிலைமையைப் போலவே மிகக் கவலைக்கிடமாகியது.

ஆயினும் இவற்றினின்றும் பிரிந்த சிறு நாடுகளின் நிலைமை நாளுக்கு நாள் முன்னேறிற்று. முதலில் யூகோஸ்லாவியாவின் எல்லையும் மக்கள் எண்ணிகையும் பெருகியது. மூன்று மில்லியன் அல்லது 30 இலட்ச மக்கள் வாழ்ந்த நாட்டில் இப்பொழுது 12 மில்லியன் அல்லது 120 இலட்சம் மக்கள் வாழ்ந்தார்கள். ஆயினும் அவர்கள் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாயிராததால் அங்கு வேண்டிய அளவு ஒற்றுமையேற்பட

வில்லை. இதனால் மக்களாட்சிக்குப் பதிலாக அங்குத் தனி மனிதன் ஆட்சியே வெற்றிபெற்றது. ருமேனியா நாட்டிலும், செக் கோஸ்லோவாக்கியா நாட்டிலும் மக்கள் எண்ணிக்கை பெருகியது. செக்கோஸ்லோவாக்கியாவில் இப்பொழுது 14 மில்லியன் மக்கள் வாழ்ந்தார்கள். அங்குத் தொழில் முறைகள் முன்னேற்ற மடைந்து ஐரோப்பாவிலேயே அதன் தொழில் துறை முதலிடம் பெற்றது. பல்கேரியாவில் மக்களாட்சி தலைசிறந்து விளங்கியது. துருக்கியிடம் தோல்வியுற்ற கிரீஸ் நாடும் நாளடைவில் வலிமை பெற்றது.

பெல்ஜிய நாட்டில் பிளமிங் (Fleming), வலூன் (Walloon) என்ற இருதிறத்தாருக்குமிடையில் வளர்ந்து வந்த பகை மனப் பான்மை இப்பொழுது குறைந்தது. அங்கு மன்னன் தனி ஆட்சி நடத்தினான். அவன் ஆட்சியின்கீழ் அவர்கள் மகிழ்ச்சி யுடனே வாழ்ந்தார்கள். ஸ்பெயின் நாட்டில் மட்டும் மன்னன் விரட்டி அடிக்கப்பட்டான் (1931), ஆனால் ஐரோப்பாவெங்கும் இருந்த அமைதியற்ற நிலைமையில் ஸ்பெயின் நாட்டு மன்னன் அல்போன்ஸோ நாட்டை விட்டு வெளியேறியதை யாரும் கவனிக்கவில்லையென்றே சொல்ல வேண்டும்.

இதுவரை முதல் உலகப்போர் முடிந்த பிறகு ஐரோப்பிய நாடுகளின் நிலைமையைப் பற்றிக் கூறினேம். இனி இவைகளின் இடையே அமைதி நிலவ வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட சர்வ தேச சங்கம் என்னவாயிற்றென்பதைப் பற்றிக் கூறுவோம்.

சர்வதேச சங்கம் ஏற்பட்டபின் இரண்டு போர்கள் எழுந்தன என்பதை முன்னர்க் கூறினேம். ஒன்று துருக்கியருக்கும் கிரேக்க ருக்குமிடையே நடந்தது. மற்றொன்று அதற்கு முன் போலந்து நாட்டிற்கும் ருஷியாவிற்குமிடையே நிகழ்ந்தது. இவற்றைச் சர்வதேச சங்கத்தால் நிறுத்த முடியவில்லை யென்பது உண்மை தான். ஆயினும் 1923 ஆம் ஆண்டிலும் இத்தாலிக்கும், கிரீஸுக்குமிடையே நடந்த சண்டையிலும், கிரீஸுக்கும் பல்கேரியாவிற்குமிடையே நடந்த சண்டையிலும் இந்தச் சங்கம் பயனளித்த தென்பதை மறுக்க முடியாது. ஆயினும் அதன் உண்மையான சிக்கல்கள் வேறுயிருந்தன.

(1) ஜெர்மனி, அமெரிக்கா, ருஷியா, துருக்கி ஆகிய நான்கு முக்கியமான நாடுகள் சர்வதேச சங்கத்தில் சேரவில்லை. அதன் முயற்சியால் ஜெர்மனி ஒன்றையே சேர்க்க முடிந்தது. வில்ஸன் தோன்றிய ஐக்கிய அமெரிக்காவிலேயே இதில் சேர்வதற்குச் செனெட் சபையில் போதிய வாக்குகள் கிடைக்கவில்லை.

(2) உலகப் போர் முடிந்தவுடன் அதற்குக் காரணம் ஜெர் மனியென்றும் அதனால் அதில் ஏற்பட்ட நஷ்டங்களுக்கு அதுதான்

ஈடுசெய்ய வேண்டுமென்றும் வெர்சாய் உடன்படிக்கையில் திட்டம் செய்யப்பட்டது. இதை நடைமுறையில் கொண்டு வரும் பொறுப்பு சர்வதேச சங்கத்திற்கு விடப்பட்டது. இதைச் செய்து முடிப்பது எளிதல்ல. வெர்சாய் உடன்படிக்கையின் முடிவுகளே கைவிடப்பட வேண்டியவை. ஏனென்றால் சண்டையில் ஏற்பட்ட நஷ்டங்களுக்கெல்லாம் ஜெர்மனியே பொறுப்பாளியென்பது சரியல்ல. தவிர ஜெர்மனியின் பொருளாதார நிலை மிகவும் சீர்கெட்டிருந்தது. போரினால் தாக்கப்பட்ட நாடுகளில் கொடுமையாய்த் தாக்கப்பட்டது ஜெர்மனியென்றே சொல்லவேண்டும். இந்நிலையில் சர்வதேச சங்கத்தால் இந்த நஷ்டஈட்டைப் பெற்றுத்தரக்கூடவில்லை. 1930ஆம் ஆண்டில் பொருளாதார நிபுணர்கள் ஒன்றுகூடி ஜெர்மனியின் நஷ்ட ஈட்டு முயற்சியை ஓராண்டு தள்ளிப்போட வேண்டுமென்று தீர்ப்பளித்தார்கள். இந்தக் கூட்டத்திற்குத் தலைமை ஏற்றவர் டாஸ் (Dawes) என்ற அமெரிக்கர். ஆகையால் இதற்கு டாஸ் திட்டம் (Dawes Plan) என்ற பெயரும் ஏற்பட்டது. ஆனால் நடைமுறையில் இதுவும் முடியவில்லை. அதற்குள் ஜெர்மனியே உயிர் பெற்றெழுந்தது. உயிர்பெற்றெழுந்து நஷ்ட ஈட்டுக் கொள்கையையே புறக்கணித்தது.

(3) இதைவிடச் சிக்கலான பிரச்சினை படைக்குறைப்பு (Disarmament)த் திட்டம். சர்வதேச சங்கம் சண்டையை நிறுத்துவதை மட்டுமல்ல, அமைதியை நிலவச் செய்வதே தனது குறிக்கோளாகக் கொண்டது. ஆனால் அமைதி ஏற்படுமென்ற நிலைமை ஏற்பட்டாலொழிய நாடுகள் எப்படிப் படைகளை ஒழிப்பது? இந்நிலையின் ஏற்பாடே வேடிக்கையாயிருந்தது. இரு நாடுகளுக்குள் சண்டை ஏற்படுவதாயிருந்தால் அவற்றில் ஒன்று சண்டையைத் தவிர்க்கும்படி சர்வதேச சங்கத்திற்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். அதன் இரண்டு சபைகளும் எவ்வகை வேறுபாடுமின்றி ஒரே மனமாகச் சண்டையை நிறுத்த வேண்டுமென்றால்தான் சண்டை நிறுத்தப்படுமென்று திட்டம் வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ்ச் சண்டையை நிறுத்துவதென்பதே முடியாத செயலாகப்பட்டது. இந்நிலையில் படையொழிப்புத் திட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவதென்பது மிகக் கடினமான செயலாகும்.

ஆயினும் சில நிகழ்ச்சிகளில் இச் சங்கம் வெற்றி பெற்றது. (1) ஜெர்மனியின் மேற்கெல்லை எப்பொழுதும் தொல்லை நிறைந்ததாயிருந்தது. அங்குப் பிரான்ஸ் தனக்குச் சேர்ந்த பிரதேசங்கள் இருப்பதாகக் கூறி வந்ததால் எப்பொழுது சண்டை ஏற்படுமோ என்ற நிலைமை இருந்து வந்தது. இதற்குச் சர்வதேச சங்கம் ஒரு

வழி கண்டுபிடித்தது. இதில் ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, பெல்ஜியம், இத்தாலி ஆகிய ஐந்து நாடுகளையும் ஒத்துழைக்கச் செய்தது. இந் நாட்டின் தலைவர்கள் லோகார்னே (Locarno) என்னுமிடத்தில் 1925ல் கூடினர்கள். குறிப்பாக, ஜெர்மன் நாட்டு ஸ்டிரஸ்மேன் (Stressmann), பிரான்ஸ் நாட்டு பிரியான் (Briand), ஆங்கில நாட்டு ஆஸ்டின் சேம்பர்லேன் (Austen Chamberlain) என்ற இவர்கள் மாநாட்டில் பெரும் பங்கு கொண்டார்கள். இதன்படி இந்த ஐந்து நாடுகளும் தம்முள் சண்டை செய்வதில்லையென்றும், அப்படிச் சண்டைக்கு அவசியம் நேர்ந்தால் சர்வதேச சங்கத்தினிடம் செல்வதென்றும் தீர்மானித்தார்கள். இந்த லொகார்னே ஒப்பந்தம் பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் இடையில் மட்டுமல்ல, மற்ற நாடுகளிடையேயும் சண்டையைத் தவிர்ப்பதற்கு ஒரு நல்ல வழியாய் அமைந்தது.

(2) அமெரிக்க ஐக்கிய நாடுகள் சர்வதேச சங்கத்தில் இடம் பெற மறுத்த போதிலும் காலம் செல்லச் செல்ல அவைகளும் அதன் வெற்றிக்கு உதவின. அமெரிக்காவின் அந்நிய நாட்டு அமைச்சர் பதவியிலிருந்த கெல்லாக் (Kellogg) ஏறக்குறைய உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் போருக் கெதிராக கையெழுத்திடச் செய்தார். பொதுவாக எந்த நாடும் சண்டையைக் கைக்கொள்ளக் கூடாதென்று இதனால் தீர்மானிக்கப் பட்டது. சர்வதேச சங்கம் இல்லாமலிருந்தால் இந்தத் தீர்மானம் பயனற்றதாகப் போயிருக்கும். ஆனால் இப்போது அது சர்வதேச சங்கத்திற்கு ஆக்கம் அளித்தது.

20. இடைவெளி (2)

(1933-1939)

[ஜெர்மனி (ஹிடலர்)-இத்தாலி (முசோலினி)-ஸ்பெயின் (பிரான்கோ) சர்வதேச சங்கம்-இரண்டாம் உலகப் போரின் தொடக்கம்]

I

முதலாம், இரண்டாம் உலகப் போர்களுக்கு இடையிலுள்ள காலத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற் பகுதியில் இரண்டாம் போருக்கு வழிகோலக்கூடிய காரணங்கள் பொதுவில் தலைதூக்கின. ஆனால் காலம் செல்லச் செல்ல இரண்டாவது உலகப் போர் தவறாமல் ஏற்படுமென்று காட்டின காரணங்கள் பல எழுந்தன. இவற்றைப்பற்றி இங்குக் கூறுவோம். ஐரோப்பாவின் இந்த இடைவெளி வரலாற்றில் 1933ஆம் ஆண்டு அதன் இரண்டாம் பகுதியைத் தொடங்கி வைக்கிறது. அந்த ஆண்டில் ஹிட்லர் ஜெர்மனியின் தலைவராகத் (Chancellor) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஹிட்லருடைய நோக்கங்களை ஆராய்ந்தாலே புதுக் காலத்தின் அறிகுறிகள் அவற்றில் நன்றாகத் தென்படும். அவர் ஜெர்மனியின் தலைவராக ஆவதற்கு முன்னரே தம் அரசியல் நோக்கங்களை ஒரு நூல் வடிவிலே வெளியிட்டார். இதற்கு 'மெயின் காம்ப்' அல்லது 'என்னுடைய போர்' (My Struggle) என்ற பெயர் வைத்தார். இது ஜெர்மன் நாட்டிலே ஊன்றிப் படிக்கப் பட்டது. இலட்சக் கணக்கான பிரதிகள் விற்கப்பட்டன. ஜெர்மானியர்கள் இதைத் தங்கள் சொந்த நூலாகவே செய்துகொண்டார்கள்.

மெயின் காம்பின் நோக்கங்கள் யாவை? (1) மக்களாட்சி யென்பது பயனற்றது. நாட்டை ஆட்சி செய்வது தனி மனிதன் கடமை. ஒருவன் அரியணையில் ஏறிவிட்டால் அவனுக்குச் சரி யென்று எது தோன்றுகிறதோ அதைச் செய்ய அவனுக்கு உரிமை இருக்க வேண்டும். மக்களைக் கேட்டு ஒவ்வொன்றையும் செய்ய வேண்டுமென்பது அறிவுக்கொவ்வாதது; ஏனெனில் பொது மக்களுக்கு அரசியல் நுட்பங்கள் ஒன்றும் தெரியமாட்டாது.

(2) ஒரு நாட்டின் பெருமை அதன் மக்களுடைய குலப் பெருமையைப் பற்றியது. அப்படிப் பார்த்தால் ஜெர்மானியர் மட்டுமே கலப்பில்லாதவர்கள் என்றூர் ஹிட்லர். உண்மையில் ஸ்கேண்டிநேவியன், கெல்டிக், ஸ்லாவோனிக் என்ற பல இனமக் கள் கலந்தே ஜெர்மன் இனம் ஏற்பட்டது. ஆயினும் தம் கூற்றை ஜெர்மானியர் நம்பும்படி ஹிட்லர் செய்தார்.

(3) இதனல் ஜெர்மனியில் வேற்றினத்தவருக்கு இட மில்லை. ஹிட்லருடைய ஆட்சிக்காலத்தில் அங்கு வாழ்ந்த யூதகுல மக்கள் இக்காரணம் பற்றியே நாட்டைவிட்டு வெளி யேற்றப்பட்டார்கள்.

(4) நடைபெறும் ஆட்சியில் மக்களுக்கு நம்பிக்கை ஏற் படும்படி எல்லாவித முயற்சிகளும் செய்தல் வேண்டும். இதற் காக நூல்கள் எழுதப்படல் வேண்டும்; செய்தித்தாள்கள் இதைப் பற்றியே பேச வேண்டும்; இன்னும் கலை, நாடகம், கம்பியில்லாத் தந்தி, வானெலி எனப்பட்டவெல்லாம் புத்தரசியலின் பெருமை யையே எடுத்தோத வேண்டும்.

இத்தகைய நோக்கங்களோடு ஹிட்லர் ஜெர்மன் நாட்டின் தலைவரானர். ஐரோப்பிய வரலாற்றிலே தோன்றிய வலிமை பொருந்திய தலைவர்கள் எல்லோரையும்விடச் சிறந்த வலிமை பெற்றவர் இவரென்பது எல்லா வரலாற்று அறிஞர்களுடைய ஒன்றுபட்ட முடிவு. ஹிட்லர் நாம் இப்பொழுது கூறுவதுபோல படித்தவரல்லர். அவருக்குச் சிறிது வரலாறு தெரியும்; சிறிது கலை, மொழிப்பயிற்சியுமுண்டு. அவருடைய குரல் கட்டையான குரல். அவரால் இனிமையாகப் பேச முடியாது. ஆனல் உணர்ச்சியோடு பேசக்கூடியவர். ஆயினும், அவரை மக்கள் பக்கத்தில் ஈர்த்தது அவருடைய பொது நலத் தன்மையே. தமக் கென்று அவர் ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை; செய்து கொள்ளவில்லை. தம்மையே அவர் மறந்து வாழ்க்கை நடத்தினர். இதைவிட அவருடைய விடாமுயற்சி மக்கள் அவரைப் பெரிதும் விரும்பும்படி செய்தது.

இத்தகைய மனிதர் ஜெர்மனியின் தலைமைப் பதவியேற்றது ஜெர்மனிக்கு மட்டுமல்ல, ஐரோப்பா முழுவதற்குமே ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்தது. ஜெர்மன் நாடு பரந்த நாடு. அதனேடு சண்டை செய்ய ஐரோப்பா தயாராயில்லை. தவிர ஹிட்லரும் தொடக்கத்தில் ஐரோப்பியத் தலைவர்களுடைய வெர்சாய் முடிவுகளை ஒப்புக்கொண்டார். ஆல்சேஸ் லொரேன் பகுதிகளை பிரான்ஸுக்கு விட்டுவிடுவதைப் பற்றி அவருக்கு வேறுபாடில்லை. ஆனல் கிழக்குப் பகுதியில் ஜெர்மனி தன்

எல்லையைப் பெருக்கிக் கொள்ள எவ்விதத் தடங்கலு மிருக்கக் கூடாதென்பதுதான் அவருடைய நோக்கம்.

முதலில் அவர் தம் நிலைமையை ஜெர்மனியில் உறுதிப் படுத்திக் கொண்டார். முதலில் அவர் படைத் தலைவர்களுடைய எதிர்ப்பைத் தீர்த்துக்கட்டினர். இதற்காக அவர் நூற்றுக்கும் மேற்பட்டவரைச் சிறைப்பிடித்து விசாரணையில்லாமலேயே அவர்களைக் கொல்லும்படி ஆணைபிறப்பித்தார். சட்டம் அரசுக் குக் கீழ்பட்டது என்று அறிக்கை வெளியிட்டார். பொதுவுட மைக் கொள்கைக்காரர்களைத் தாக்கி அவர்களிற் பலரை நாடு கடத்தினர். யூதர்கள் முதலில் அரசியலில் மட்டுமல்ல, பல்கலைக் கழகங்கள், வாணிகத்துறை, அலுவல்துறை என்ற பல இடங்களி லிருந்தும் துரத்தப்பட்டனர். போலந்து நாட்டின் இளைஞன் ஒருவன் பாரிஸிலிருந்த ஜெர்மானியப் பிரதிநிதியைக் கொன்று விட்டான் என்ற காரணத்தால் போலந்து மக்களுடைய சொத் துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அப்போது அவர்களுக்கு நாட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழி தெரிய வில்லை. இவ்விதமாகப் பல்லாயிரக்கணக்கான போலந்து மக்கள் பல நாடுகளுக்கும் சென்று ஐரோப்பாவிலேயே கலகத்தை உண்டு பண்ணினர்கள். இந்நிலையில் ஜெர்மனியில் வசித்த யூதகுல மக்களை அரசாங்கமே நாட்டை விட்டு வெளியேற்றியது. மதங் களையும், மதத் தலைவர்களையும் ஹிட்லர் ஒருங்கே வெறுத்தார்; அவைகள் தமது ஏக சக்கராதிபத்தியத்திற்கு இடையூறுயிருந்தன வென்று நம்பினர். மற்ற நாடுகளோடு ஜெர்மானியர் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது அவருடைய குறிக்கோள். ஆகையால் மற்ற நாடுகளோடு அரசியல் தொடர்பை மட்டுமல்ல, பொதுவான சமூகத் தொடர்பையும் அவர் நீக்கினர். இவ்விதக் கொள்கைகள் கொண்ட ஆட்சி நாஸிஸம் என்ற பெயர் பெற்றது. நாஸிஸ மென்பது நேஷனல் சோஷலிஸம் (National Socialism) அல்லது தேசியக் கூடி வாழ்வுடைமைக் கொள்கை கொண்டது. நேஷனல் சோஷலிஸம் என்ற இந்த இருமொழி கள் சுருக்கப்பட்டு நாஸிஸம் (Nazism) என்று வழக்கில் வந்தன.

எந்நாட்டோடும் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை யென்பது நாஸிஸக் கொள்கையென்று கூறினோம், அதனால் ஜெர்மனி ஒன்றும் செய்யாமல் தன் அலுவலையே செய்து வந்த தென்பது இதன் பொருளல்ல. தன் எல்லையைப் பெருக்கவோ அல்லது தன் வலிமையை வளர்த்துக் கொள்ளவோ அது மற்ற நாடுகளோடு போர் புரிவதற்குத் தயங்கவில்லை. இதுவே ஹிட்ல ருடைய முதற் குறிக்கோளென்றும் கூறலாம். அவர் வெர்சாய் உடன்படிக்கையிலிருந்து தொடங்கினர். ஜெர்மனி தான் முதல்


ஹோ அன்சலொன்
ஜெர்மானியப் பேரரசு
டென்மார்க்
வட கடல்
போமரேனியா
பிரஷ்யா
போலந்து
ஜெர்மனி
ரஷ்யா
பெல்ஜியம்
பிரான்ஸ்
ஆஸ்திரியா

உலகப்போருக்குக் காரணமானதென்பதை முதலில் கண்டித்தார். அதைப்போன்ற தவறான கருத்து வேறென்றிருக்க முடியாதென்று எடுத்துக் கூறினார். இதைக் கொண்டு ஐரோப்பாவில் ஜெர்மனிக்கு மாறாக நிகழ்ந்த எல்லா முயற்சிகளுக்கும் இப்போது ஹிட்லர் கழுவாய் தேடினார். இதுவே அவருடைய வெளிநாட்டுக் கொள்கையின் உயிர்நாடியாக விளங்கியது. ஐரோப்பா இதைக் கண்டு மயங்கியது. ஹிட்லருடைய படைவலிமை எத்தகையதென்று அது காணக்கூடவில்லை. ஆயினும் சென்ற இடமெல்லாம் அவர் வெற்றியடைவதைக் கண்டு அது திகைத்துப் போயிற்று,

ஹிட்லர் கொண்ட முதல் வெற்றி சார் (Saar) ஆற்று வெளி வெற்றியாகும். இது சண்டையில்லா வெற்றியாக அமைந்தது. சிறந்த தொழிற்சாலைகளமைந்த சார் வட்டம் ஜெர்மனியின் ஒரு பாகமாகவிருந்தும், வெர்சாய் உடன்படிக்கைப்படி சர்வதேச சங்கத்தின்கீழ் அது வைக்கப்பட்டது. இது ஒழுங்கற்ற முடிவு என்பதை ஹிட்லர் வற்புறுத்தினார். சார் மக்களையே கேட்டு இந்த முடிவைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது. அதையொட்டி ஏற்பட்ட வாக்கெடுப்பில் அதிகப்படியான வாக்குக்கள் ஜெர்மனியோடு சேர்வதற்கே கொடுக்கப்பட்டன. இதுதான் ஹிட்லருடைய முதல் வெற்றி.

இரண்டாவதாக அவருடைய கண்கள் ஆஸ்திரியாவை நோக்கின. முன்னர்க் கூறியது போல் பிஸ்மார்க் காலந்தொட்டு ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு சேர்க்க முயற்சிகள் செய்யப் பட்டு வந்தன. ஆனால் அவையாவும் பயனின்றி ஒழிந்தன. இப்போது பிஸ்மார்க்காலும் செய்ய முடியாமற் போன காரியத்தை ஹிட்லரால் செய்ய முடிந்தது. ஆனால் அதற்கு ஒரு காரணமிருந்தது. முற்காலத்திலிருந்தது போல் ஆஸ்திரியா இப்பொழுது வலிமை கொண்டு விளங்கவில்லை. முதல் உலகப் போரினால் மிகச் சேதமடைந்த நாடுகளில் ஆஸ்திரியாவுமொன்று. முன் இயலில் கூறியதுபோல் அதனின்று பல நாடுகள் பிரிக்கப்பட்டன. கடைசியில் எஞ்சிநின்ற ஆஸ்திரியா பழங்காலத்து ஆஸ்திரியப் பேரரசின் ஆவிபோன்று காணப் பட்டது. நாடு அளவில் குறுகியதால் அங்குப் பொருளாதார நெருக்கடியும் அரசியல் நெருக்கடியு மேற்பட்டன. முதலில் மன்னர் நாட்டைவிட்டு வெளியேறினர். பின்னர் அங்குக் குடியரசு ஏற்பட்டது, குடியரசு எத்தகையதாயிருக்க வேண்டுமென்பதைப் பற்றிப் பிறகு சச்சரவுகள் எழுந்தன. அது பொதுவுடைமைக் கொள்கை (Communist)க் குடியரசாயிருக்க வேண்டுமா அல்லது தேசியக் குடிவாழ்வுடைமை (Nazi)க் குடியரசா

யிருக்க வேண்டுமா? இருதிறத்திலும் மக்கள் சேர்ந்தனர். அப் போது ஆஸ்திரியத் தலைவராக விளங்கிய டால்பஸ் (Dollfuss) பொதுவுடைமைக் கொள்கையை மிகக் கொடுமையுடன் அடக்கி னர். ஆனல் நாசிகளே அடக்குவது அவ்வளவு எளிதாக இருக்க வில்லை. அவர்களே ஒடுக்க எடுத்த முயற்சியில் அவரே கொலை யுண்டார். சுஷ்நிக் (Schuschnigg) அவருக்குப் பின் தலைவ ரானர். ஹிட்லர் அவரை அழைத்து நாசிக் கொள்கையின் பிரதி நிதியாகத் தாம் குறிக்கும் ஒருவரை ஆஸ்திரிய ஆட்சி உட்குழு (Cabinet) வில் அங்கத்தினராக எடுத்துக் கொள்ளும்படி வற் புறுத்தினர். அதற்கு சுஷ்நிக் ஒப்புக் கொள்ளவில்லை.

இந்நிலையில் ஹிட்லர் முதல் முதல் சண்டை தொடுத் தார். ஆஸ்திரியாவின் நிலைமை மிகச் சீரழிந்திருந்தது. ஆகவே, ஹிட்லருக்கு வெற்றி கிடைப்பது எளிதாயிற்று. ஜெர்மன் படைகள் உள்ளே நுழைந்ததும் ஆஸ்திரியா பிடிபட்டது. சுஷ்நிக் சிறைப்பட்டார் (1938). ஆஸ்திரிய நாடு இப்போது ஜெர்மனியின் ஒரு பகுதியாயிற்று. வெற்றிவீரனுக்கு எல்லாம் காலத்தில் கூடிவருமென்பது உண்மையாயிற்று. ஹிட்லருடைய வளர்ச்சிக்கு இந்த ஆஸ்திரிய வெற்றி வழிகோலியது.

வெர்சாய் உடன்படிக்கையிலிருந்தே இரண்டாவது உலகப் போர் பிறந்ததென்பது பெரிய அளவில் உண்மையென்பதை ஹிட்லர் காட்டினர். செக்கோஸ்லோவாக்கியா நாட்டை உரு வாக்கிய இந்த உடன்படிக்கைப்படி 2 மில்லியன் ஜெர்மானியர் புது நாட்டின் மக்களாயினர். இது நடைமுறையில் நீண்ட காலத்திற்குச் செல்லாதென்பதை வெர்சாயில் கூடிய தலைவர்கள் உணரவில்லை. செக்கோஸ்லோவாக்கியாவின் ஜெர்மன் மக்கள் ஜெர்மனியோடு சேரவிழைந்தார்கள். ஹிட்லர் அவர்களுக்கு உதவினர். போலந்து நாட்டிலும் இதேமாதிரி போர் தலை தூக்கியது. அங்கே ஜெர்மனியின் ஒரு பகுதியைத் தனியாகப் பிரித்துப் போலந்தினர் கடலை அடைய வெர்சாய் உடன்படிக்கை வழிசெய்து கொடுத்திருந்தது. வெர்சாயில் கூடிய தலைவர்கள், இதற்கு ''வழிப் பிரதேசம்'' (Corridor) என்று பெயர் சூட்டினர்களென்று நாம் முன் இயலில் கூறினேம். இது ஜெர்மனியின் மிகுந்த தொழில் வளம் நிறைந்த மாவட்டம். ஆகையால் இப்பொழுது ஹிட்லர் அதை மீண்டும் ஜெர்மனிக்கே தர வேண்டுமென்று வற்புறுத்தினர். இந்த நிலையில் பெரும் போர் மூள்வதைத் தவிர வேறு வழியில்லை.

ஐரோப்பாவிலும் இங்கிலாந்திலும் மக்கள் இதை உணர்ந் தார்கள். ஆகையால் அப்போது இங்கிலாந்தின் பிரதம அமைச்சராயிருந்த நெவில் சேம்பர்லேன் (Neville Chamberlain)

தம் கட்சியின் எதிர்ப்பையும் பாராமல் ஹிட்லரைக் கண்டு பேச முனிச்சிற்கு வான் வழியே சென்றார். வானூர்தி வழியாய் அரசியல் சார்பாக ஒருவர் சென்ற முதல் பயணம் இதுதான் என்பது குறிப்பிடத் தகுந்தது. நிலைமை அவ்வளவு இழிந்ததென் பதைச் சேம்பர்லேன் நன்றாக உணர்ந்திருந்தார். அப்போது முனிச்சில் முசோலினியுமிருந்தார். இரு தலைவர்களையும் ஆங்கிலப் பிரதமர் கண்டு பேசினர். ஹிட்லரும் முறைப்படியே வாதித்தார். அப்போது அவர் ஜெர்மனியின் சிக்கல் செக்கோஸ்லோவாக்கி யாவின் மேற்குப் பகுதியைப் பற்றியே என்றும் அங்குள்ள ஜெர் மன் மக்களை மட்டுமே ஜெர்மனியோடு சேர்த்துக் கொண்டால் தமக்குப் பிறிதொன்றும் தேவையில்லையென்றும் கூறினர். சேம்பர் லென் இதை ஒப்புக் கொண்டு இனி வேறெந்தச் சண்டைக்கும் ஹிட்லர் செல்லக்கூடாதென்று அவருடைய கையெழுத்துப் பெற்ற ஒரு அத்தாட்சியுடன் இங்கிலாந்து திரும்பினர்.

இதைத் தாமடைந்த ஒரு பெரு வெற்றியாகக் கருதினர் சேம்பர்லேன். ஆனால் பலர் இதை வெறும் ஏமாற்றமாகவே கருதினர்கள். உண்மையில் அது ஏமாற்றமாகவே முடிந்தது. ஏனென்றால் செக்கோஸ்லோவாக்கியாப் பகுதியைப் பிடித்த பிறகு ஹிட்லர் போலந்தின் ''வழிப் பிரதேசத்தின்'' மேல் கண் வைத்தார். அப்போது ஐரோப்பாவில் பெரும் பரபரப்பு ஏற் பட்டது. போலந்து மக்கள் உதவிக்காக ருஷியாவை நோக்கினர்; இங்கிலாந்தையும் பிரான்சையும் நோக்கினர். ருஷியாவிற்கு என்ன செய்வதென்ற உறுதி ஏற்படவில்லை. ஆனால் இங்கிலாந்தும் பிரான்ஸும் போலந்துக்கு உதவுவதாக வாக்களித்தன. அதே சமயம் ஜெர்மனியும் இத்தாலியும் ஒன்றுபடிணைந்தன.

II

இத்தாலியின் அப்போதைய நிலைமையைப் பற்றிச் சிறிது இங்குக் கூறவேண்டும். முசோலினியின் கருத்துக்களுக்கும் வழிவகைகளுக்கும் ஹிட்லருடையவற்றிற்கும் ஒரு நெருங்கிய ஒற்றுமையிருந்தது. ஹிட்லருடைய தொடக்க வெற்றிகள் நாம் முன்னரே கூறியதுபோல் வெர்சாய் உடன்படிக்கையின் குறைப் பாட்டிலிருந்தே எழுந்தன. ஆனால் அதே சமயத்தில் அபிஸீனி யாவில் முசோலினி செய்த சண்டையும், கொண்ட வெற்றியும் இவற்றைப் போன்றவையல்ல, அவர் வேணுமென்றே அபிஸீனி யாவில் கால் வைத்து அந்நாட்டு மன்னரோடு போர் தொடுத் தார். அந்நாடு அளவில் பிரான்ஸைவிடப் பெரியதாயிருந்த போதிலும் வலிமை குன்றியது. பழைய பழக்க வழக்கங்களி லேயே ஊன்றி இக்கால அமைப்பிற்கு எதிரிடையாக விளங்கியது.

வலிமையற்ற இந்த நாட்டைச் சர்வதேச சங்கந்தான் காப்பாற்ற வேண்டுமென்று இத்தாலியே அதை வேண்டி அந்தச் சங்கத்தினுள் அபிசீனியாவைச் சேர்த்து வைத்தது. இந்த நிலையில் அதனுடன் 1935ஆம் ஆண்டு முசோலினி சண்டை தொடங்கினரென்றால் இது அவருடைய அரசியல் சூழ்ச்சியா அல்லது இத்தாலியின் நன்மையில் அவருக்குத் திடீரென்று ஏற்பட்ட நல்லெண்ணமா? ஹிட்லருடைய வெற்றிகளே முசோலினியினுடைய நடத்தைக்குத் தூண்டுகோலாயிருந்திருக்க வேண்டும். அபிஸீனியாவின் பூகோள அமைப்பும் அவருடைய போருக்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும். நைல் ஆற்றங்கரையின் பக்கத்தில் அமைந்த அபிஸீனியா வளம் பெற்றது. அங்கிருந்து மற்ற நாடுகளைக் கைப்பற்ற அது நல்ல வாய்ப்பளிக்கக் கூடியது.

எது எப்படியிருந்தபோதிலும் முசோலினி அபிஸீனியாவில் வெற்றி கண்டார். சர்வதேச சங்கத்தின் முறைப்பாடு பயனற்ற தாயிற்று. ஹெய்ல் செலசி (Haile Selassie) என்ற அபிஸீனிய மன்னர் நாட்டைவிட்டு வெளியேறி இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்தார். இத்தாலியத் தலைவரோ அபிஸீனியாவை இத்தாலிய மன்னருக்குச் சொந்தமாக்கினர். ஆயினும் வெறும் வெளித் தோற்றத்திற்கு மட்டுமே இப்படி நடந்தேறியது. உண்மையில் முசோலினிதான் நாட்டின் மன்னராக வீற்றிருந்தார். அதுவும் அடக்குமுறை வல்லரசராகவும் அவர் விளங்கினர். மக்களுடைய உரிமைகளென்று சொல்லக்கூடிய யாவற்றையும் அவர் அழித்தார். யாரும் தமக்குத் தோன்றியபடி அங்குப் பேசவும் முடியாது. பத்திரிகைகள் தங்கள் விருப்பம்போல் எழுதவும் முடியாது. ஒரே மொழியிற் கூறினால் இத்தாலியின் பேச்சுரிமையை முசோலினி முதலில் நசுக்கினர்.

இதன்பின் முசோலினியின் வல்லரசு இத்தாலியில் தொடங்கியது. அபிஸீனியாவை வென்றபின் ஜெர்மனியில் ஹிட்லர் செக்கோஸ்லோவாக்கியா, போலந்து நாடுகளை ஒடுக்கியதுபோல் முசோலினியும் பிரான்ஸை நோக்கிப் பாய்ந்தார். இதைத்தான் தமிழ்நாட்டில் ஓநாய் நியாயமென்று சொல்வார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் இத்தாலியைச் சேர்ந்த கார்சிகா (Corsica) பிரான்ஸிற்குரிமையாயிற்று. 1866ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவோடு இத்தாலி செய்த போரில் பிரான்ஸ் உதவியதற்காக இத்தாலி சுயமாகவே நைஸ் (Nice), சேவாய் (Savoy) பட்டணங்களைப் பிரான்ஸிற்கு வழங்கியது. 1881ஆம் ஆண்டில் டூனிஸ் (Tunis) பட்டணம் பிரான்ஸிற்குரிமையாயிற்று. இவற்றையெல்லாம் பிரான்ஸ் இத்தாலிக்குத் திரும்பக் கொடுக்கவேண்டுமென்று முசோலினி கோரினர் (1939). வரவிருக்கும் பெரும் போருக்கு இது ஓர் அறிகுறியாகவிருந்தது.

III

ஆயினும் ஸ்பெயின் நாட்டில்தான் உண்மையான போர் தொடங்குமோ என்ற அச்சம் தரும் அரசியல் நிலை அங்கு விளங்கியது. முதல் உலகச் சண்டையிலுங்கூட ஸ்பெயின் கலந்து கொள்ளவில்லை; காரணம் அங்குச் சமுதாய, பொருளாதார, அரசியல் நிலைமை ஆகிய எதுவுமே மக்களுக்கு மனநிறைவு தருவதாயிருக்கவில்லை. இப்பொழுது சண்டை முடிந்த பிறகு ஸ்பானிய மக்கள் ஒருபுறம் நாசித் தலைவரையும் மறுபுறம் பாஸிசத் தலைவரையும் கண்டார்கள். அத்தகையோரின் முன்னேற்றம் அவர்களுக்கு நம்பிக்கையும் ஆறுதலுமளித்தது. ஆகையால் அவர்களில் பலர் அரசியலில் பாஸிசத்தை ஆதரித்தார்கள்; சிலர் நாசிசத்தை ஆதரித்தார்கள்; சிலர் அரசாங்கத்திற்கே அவசியமில்லை (Anarchists) யென்று சொன்னார்கள்; சிலர் குடியரசுதான் வேண்டுமென்றார்கள். மிகச்சிலரே மன்னராட்சிக்கு மதிப்புத் தந்தார்கள். இந்த நிலையில் ஒவ்வொரு மாவட்டமும் தன் தன் பெருமையையும், வலிமையையும் பெரிதாகப் பேசிக்கொண்டது. குறிப்பாகப் பார்சலோனு (Barcelona), காட்டலோனியா (Catalonia) மாவட்டங்கள் நாட்டின் ஆட்சி தங்கள் கையிலிருக்க வேண்டுமென்று வெளிப் படுத்தின. இத்தகைய சூழ்நிலையில் ஸ்பெயின் நாட்டு மன்னராயிருந்தவர் அல்பான்ஸோ என்பவர். இவர் போர்போன் மன்னர்களில் ஒருவர். ஆனால் அவரே அக்குலத்தின் மன்னர்களில் கடைசியுமானார். 1931ஆம் ஆண்டிலேற்பட்ட ஸ்பானிய அரசியல் புரட்சியில் மன்னர் நாட்டை விட்டு வெளியேறினார்.

அப்போது ஹிட்லர், முசோலினி போன்ற தலைவரொருவர் ஸ்பெயினில் தோன்றினர். அவர்தான் ஜெனரல் பிராங்கோ (Franco). செல்வந்தர்களும், பாஸிசக் கொள்கையினரும் அவரைச் சேர்ந்தார்கள். அவருடைய படை மாட்ரிட் (Madrid) நகரத்தைப் பிடிக்கும் அளவுக்கு வந்துவிட்டது. இத்தாலியும் ஜெர்மனியும் அவருக்குதவின. ருஷியா மட்டும் அவருக்கெதிராகக் குடியரசுக் கட்சியை ஆதரித்தது. இந்நிலையில் இரண்டாம் உலகப் போர் வந்திருக்க வேண்டும்; ஆனால் வரவில்லை, அதற்குக் காரணம் முதற்போர் காட்டிய அச்சம் இன்னும் மக்களை விட்டு அகலவில்லை. இத்தகைய அச்சம் ஒருபுறமென்றால் மறுபுறம் உலக அமைதியை நாடிய மக்கள் இன்னும் அமைதி நிலவ வேண்டுமென்றே ஆசைப்பட்டார்கள். வேறு மொழியில் சொல்ல வேண்டுமானால் சர்வதேச சங்கம் இன்னும் சாகவில்லை.

IV

அதன் நிலைமையைச் சிறிது கவனிப்போம். ஜெர்மனி, துருக்கி, ருஷியா போன்ற நாடுகள் இப்போது அதில் அங்கம் வகித்திருந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் இதில் உறுப்பினவாகாவிட்டாலும் அதன் கொள்கைகளை ஆதரித்ததல்லாமல் நடைமுறையிலும் அதற்குதவி வந்தன. பொதுவில் உலகத்திற் சமாதியளிக்கக் கூடிய வாய்ப்பிருந்ததென்பதை யாரும் மறுக்கவில்லை. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளப் போதிய மனத்திட்பமே இன்னும் ஏற்படவில்லை.

இந்நிலையில் ஜப்பானும் இத்தாலியும் சர்வதேச சங்கத்தின் குறிக்கோளினுக்கே தீங்கு விளைவித்தன. ஜப்பானுக்கும் சீனாவுக்கும் அப்பொழுது சண்டை ஏற்பட்டது. அதன் காரணங்கள் மிக நுட்பமானவை. ஒருவேளை ஜப்பான் சீனாவின் மேல் சீற்றம் கொள்வதற்குக் காரணங்கள் இருந்திருக்கவும் கூடும். ஆனால் சர்வதேச சங்கம் இவற்றை ஆராய்ந்து ஜப்பான் சண்டை செய்வது முறையன்றென முடிவு செய்தது. ஆனால் ஜப்பான் அதனைப் பொருட்படுத்துவதாயில்லை. இத்தாலியில் முசோலினியும் அபிஸீனியா வெற்றிக்குப் பிறகு போர் செய்வதிலேயே ஆர்வம் காட்டினர். அவரும் சர்வதேச சங்கத்திற்கு மதிப்புத் தருவதாயில்லை. அவர் அபிஸீனியாவோடு சண்டைக்குச் சென்றபொழுதே ஐரோப்பிய நாடுகள் இத்தாலிக்கு வேண்டிய பொருட்களைத் தரமறுக்க வேண்டுமென்று சர்வதேச சங்கம் பணித்தது. ஆனால் இவை இதற்கு அரைமனத்துடனேயே இசைந்தன. இவற்றில் சில நாடுகள் பெட்ரோலைத் தவிர மற்ற பொருட்களை மட்டும் நிறுத்தின. இதனால் முசோலினி போரைத் தொடர்ந்து நடத்த முடிந்தது. போரில் விருப்பமுற்ற மற்ற நாடுகளுக்குத் தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற இது ஒரு நல்ல வாய்ப்பை அளித்தது. அமைதிக்காகப் போராட ஐரோப்பாவில் போதிய மனவுறுதியில்லையென்பது வெள்ளிடை மலையாயிற்று. ஆகையால் ஜெர்மனியும், இத்தாலியும் சர்வதேச சங்கத்தினின்றும் விலகின. அது மட்டுமல்ல அதன் குறிக்கோள்களையே ஏற்றுக்கொள்ள அவை மறுத்தன. அதன் வழி முறைகளை அவை வெறுத்தன. இவற்றை இந்தச் சங்கம் மாற்றினாலும் அவை இனி இதில் சேருவதாயில்லையென்றும் வெளிப்படையாகவே கூறிவிட்டன.

V

சர்வ தேச சங்கம் இருந்தும் இல்லாதது போலாயிற்று. சண்டையின் மூச்சு அடி பாதாளத்திலிருந்து கேட்டது.

ஐரோப்பாவிலிருந்த நாடுகள் எல்லாவற்றிலும்—வடக்கேயிருந்த சிறு நாடுகள் தவிர—போரின் அச்சம் பற்றியது. பிரான்ஸும், இங்கிலாந்தும் அமைதியைக் காக்கத் தங்களாலான மட்டும் முயன்றன. போர் தொடங்குமானால் அது முதலில் பிரான்ஸில் தொடங்குமென்று அந்நாட்டு மக்களுக்குத் தெளிவாயிற்று. முன்னர்க் கூறியதுபோல் முசோலினி, டூனிஸ் (Tunis), ஷிபுட்டி (Dgibuti), கார்சிக்கா (Corsica), நைஸ் (Nice) நகரங்களைப் பிரான்ஸ் இத்தாலிக்குத் திருப்பித் தரவேண்டு மென்று ஏற்கெனவே கேட்டுவந்தார். ஆனால் பிரான்ஸின் மூஸ்தீப்பு வரவிருக்கும் சண்டைக்கு ஏற்றதாயிருக்க வில்லை. இப்பொழுது போர் நிகழ்ந்தால் அது பழங்கால முறை யாயிராது என்பது பலருக்கும் தெரிந்தது. வரும் போரில் வானவூர்திகளும், நச்சுப் புகையும் பயன்படுத்தப் படுமென்பது நன்கு தெரியும். இதை எதிர்த்துப் போராடப் பிரான்ஸுக்கு வலிமையில்லை. ஆகையால் அது அமைதியைக் காக்க முயன்றது. ஆனால் அம்முயற்சி பயன்தரவில்லை. ருஷியாவிடம் புதிய படைக் கலங்களிருந்தன. ஆனால் அது எந்தப்பக்கம் சேரும், எப்படி நடந்து கொள்ளுமென்பதைப் பற்றியெல்லாம் யாரும் உறுதி கூற முடியாத நிலையிலிருந்தது. இங்கிலாந்தின் உறவே இப்போது பிரான்ஸிற்கு உயிரளித்தது. அங்கு, சேம்பர்லேன் அமைச்ச ராயிருந்தார். அவர் சண்டை வராதென்று எண்ணினாலும் போருக்கான ஆயத்தங்களுக்குத் தடையாக நிற்காமல் அச்செயல் களுக்குத் தம்மாலான உதவியளித்து வந்தார். வயது வந்த ஆண் பிள்ளைகளையெல்லாம் படையில் சேர்த்துப் பயிற்சி அளிக்கவும், நச்சுப்புகை, விமான வெடி குண்டு போன்ற புதுமுறைகளினின்று தங்களைக் காத்துக் கொள்ள ஆழமான குழிகள் வெட்டவும், சுவர்கள் எழுப்பவும் ஆங்கிலேயர் தீவிர முயற்சியில் ஈடுபட்டார் கள். இதற்கு வேண்டிய பண வசதிகள் வேண்டியதற்குமேல் தரப்பட்டன. இத்தகைய நாட்டின் உதவி பிரான்ஸிற் கிருந்ததே வருந்தத்தக்க நிலையில் இருந்த பிரான்ஸிற்கு நம்பிக்கை ஊட்டிற்று.

1939ஆம் ஆண்டு ஐரோப்பா எதிர்பார்த்தபடியே சண்டை தொடங்கியது. செக்கோஸ்லோவாக்கியாவைக் கைப்பற்றியே ஹிட்லர் அப்போது போலந்தைத் தாக்கினார். டான்சிக் நகரம் ஜெர்மானியரைச் சேர்ந்தது. அதைப் போலந்து அவர்களுக்குத் திருப்பித் தரவேண்டுமென்பது ஹிட்லருடைய பழைய வாதம். அதோடு ஒரு புது வழக்கையும் அவர் சேர்த்துக் கொண்டார். ஜெர்மனி தனக்குச் சொந்தமான கிழக்குப் பிரஷ்யாவிற்குச் செல்லப் போலந்தின் ஒரு பகுதி அதற்குக் கொடுக்கப்பட வேண்டு

மென்பதுதான் இந்தப் புது வழக்கு. இந்த வாதங்களே போலந்து எவ்வாறு ஒப்புக்கொள்ளக்கூடும்? சேம்பர்லேனுடன் ஹிட்லர் செய்த உடன்படிக்கைப்படி அவர் இனி போலந்தின் மேல் சண்டை தொடுத்தால் ஆங்கிலேயர் அவர்மேல் சண்டை தொடுக்க வேண்டும் என்பது விளக்கமாக எழுதப்பட்டிருந்தது. ஆயினும் ஹிட்லர் சண்டைக்கென்றே பிறந்தவர். அதையே ஜெர்மனியின் மறுமலர்ச்சியென்று அவர் எண்ணினர்.

பிரெஞ்சுக்காரரும், ஆங்கிலேயரும், போலந்தாரும் ருஷியா தங்களுடைய உதவிக்கு வருமென்று உறுதியாய் நம்பினர். ஆயினும் ருஷியா கொஞ்சகாலம் வாளாவிருந்தது. கடைசியில் எதிர்பாராதது நடந்தது. 1939ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 20ஆம் நாளன்று ருஷியா ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்து கொண்டது. ஆங்கிலேயர் போரில் ஆழ்ந்த நம்பிக்கை காட்ட வில்லையென்று அது கூறிக்கொண்டது. ஆஞல் உண்மையான காரணம் என்னவென்பதை இன்னும் யாராலும் கூறமுடியவில்லை. ஆங்கில-பிரான்ஸ் கூட்டணியைப் போதிய வலிமையற்ற தென்று ருஷியா எண்ணியதா, அல்லது ஜெர்மனிக்கு முன் இந்தக் கூட்டிணைப்பு மாண்டுவிடுமென்று கருதியதா? அல்லது பிரான்ஸோடும் இங்கிலாந்தோடும் சேர்ந்தால் தனக்கு வேண்டிய எல்லை நாடுகளே அது எடுத்துக் கொள்ள முடியாதென்று கருதியதா? யார் சொல்லக்கூடும்?

எது எவ்வாறுஞலும் சண்டை தொடங்கிவிட்டது என்பது மட்டும் உறுதியாயிற்று. போலந்திற்கு உதவுவதாக இங்கிலாந்து மறுபடியும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. இதற்கும் ஜெர்மானியப் படை போலந்தைத் தாக்கிக் கைப்பற்றியதற்கு மிடையில் நீண்ட கால இடைவெளியில்லை. 1939 செப்டம்பர்த் திங்கள் முதல் தேதி ஜெர்மானியப் படை போலந்தினுள் நுழைந்தது. அதை அடுத்த 3ஆம் நாள் இங்கிலாந்து ஜெர்மனியரோடு போரிட முன் வந்தது. ருஷியர்கள் ஜெர்மனியோடு சேர்ந்து போலந்தைத் தாக்கினர். போலந்தின் கதை விரைவில் முடிந்தது. ஆஞல் போரின் வரலாறு அப்பொழுது தான் தொடங்கியது.

2. இரண்டாம் உலகப்போர்

(1939—1945)

[பொது நோக்கு-உலகச் சண்டை-போரின் இரண்டாம் முனை-முடிவின் குறிகள்-புத்துலகமைப்பு (ஐக்கிய நாடுகளின் சங்கம்)]

I

1918ஆம் ஆண்டு முதல் உலகப் போர் முடிந்த சமயம் ஐரோப்பா மிக வலிமையிழந்து காணப்பட்டது. அப்பொழுது பலர் பேசிக்கொண்டார்கள்: 'இன்னொருதரம் இத்தகைய போர் மூளுமானால் உலகமே முடிந்துவிட்டதென்றுதான் அதற்குப் பொருள்.' ஆயினும் ஆண்டவன் கருத்தின்படிதான் உலகம் நடக்கும் என்பது உண்மையாயிற்று. இரண்டாம் உலகப்போரும் வந்தது; இன்னும் உலகம் நடந்துகொண்டு தானிருக்கிறது.

இந்த இரண்டாம் உலகப்போர் எப்படிப்பட்டது? முதற் போரைவிட மிகப் பெரியதென்று மட்டும் கூறினால் போதாது. உண்மையில் உலகம் முழுவதுமே இதனால் பாதிக்கப்பட்டது. ஐரோப்பாவில் மட்டுமல்ல; ஆப்பிரிக்காவிலும், அமெரிக்காவிலும், ஜப்பானிலும் சண்டை நடந்தது. அது மட்டுமல்ல; முதற் சண்டை மிகச் சில இடங்களில் மட்டும் வெவ்வேறு சமயங்களில் நடந்தது. இந்தச் சண்டையோ உலகின் பல இடங்களிலும் ஒரே சமயத்தில் நடந்தது. வான வெளியிலும் சண்டை நடந்தது. கடலின் அடியிலும் சண்டை நடந்தது. புதிய போர்க் கருவிகளும், வானவூர்திகளும், டாங்குகளும், வெடி குண்டுகளும் துப்பாக்கியின் பயனையே குறைத்தன. குதிரைப் படைகள் வேலையற்றுக்கிடந்தன. போர் வீரர்கள் அப்படி அப்படியே பல்லாயிரக் கணக்கில் விமானங்களிலிருந்து குதித்தார்கள் என்றால் குதிரைகளுக்குத் தேவை யேது? ஐரோப்பாவின் பல நாடுகளிலும் ஆண்களைப்போல் பெண்களும், நாட்டிற்குதவியாகப் போருக்குச் சென்றார்கள். பெண்கள் போர்க்களத்தில் தாதிகளாகவும், கமாஸ்தாக்களாவும் சண்டைக்குதவியதன்றி, ருஷியா போன்ற நாடுகளில் போரிலேயே கலந்தும் பணியாற்றினார்கள். வானவூர்தி

கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், டாங்குகள் என்பன முன்னிலும் பெரியனவாகவும், விரைவனவாகவும் செய்யப்பட்டன. ஆயினும் மனிதன் அறிவுக்கே எட்டாத சில படைக்கலன்களும் இந்தச் சண்டையில் பயன்பட்டன. ருஷியாவும் ஜெர்மனியும் இவற்றைப் பற்றிப் பெருமை பேசின. ஆனால் அவை என்னவென்பதன் புதிரை மட்டும் யாருக்கும் சொல்லவில்லை. இந்தப் புதிர் இன்னும் வெளிவரவில்லை. இப்பொழுது ருஷியாவும் அமெரிக்காவும் தங்களிடம் கரவுப்படைகளிருக்கின்றனவென்று சொல்லிக் கொள்கின்றன. இவையன்றி வலிமை பொருந்திய வெடிகுண்டுகள், அணுக்குண்டுகள் இந்த இரண்டாம் உலகப் போரில் கண்டு பிடிக்கப்பட்டன. அமெரிக்கா இவற்றில் இரண்டு குண்டுகளை மட்டும் ஜப்பான் மீது வீசியது, ஹிரோஷிமா, நாகசாக்கி என்ற இரு நகரங்களும் அழிந்தன வென்பதை நாம் அறிவோம். ஜெர்மானியர் பறக்கும் குண்டுகளைக் (Flying Bombs) கண்டு பிடித்தார்கள். இவற்றில் சில உயர எழும்பிக் கீழே விழுவன. சில நூறு மைல் தொலைவு சென்றும் தாக்குவன. இரண்டாம் வகைக் குண்டுகளுக்கு ராக்கெட் குண்டுகள் (Rocket bombs) என்ற பெயர் தரப்பட்டது.

இத்தகைய படைக்கலன்களைக்கொண்டு மனிதனோடு மனிதன் 1939 முதல் 1945 வரை, ஆறுண்டுக்காலம் போராடினான். இதன் விளைவு போரில் வெற்றி பெற்றவரும் மனஅமைதி கொள்ள முடியவில்லை. பால்டிக் கடலிலிருந்து கருங்கடல் வரை, ஜெர்மனி முழுவதும். இங்கிலாந்தும், பிரான்ஸும் முற்றிலும் உருக்குலைந்தன.

1940ஆம் ஆண்டு ஹிட்லர் வடமேற்கு ஐரோப்பாவில் சண்டையைத் தொடங்கினர். இதற்கு ஒரு காரணமும் காட்டவில்லை. டென்மார்க், நார்வே ஆகிய நாடுகள் பிடிபட்டன. பெல்ஜியமும், ஹாலந்தும் அவரோடு உடன்பாடு செய்து கொண்டன. அதே ஆண்டு ஜூன் 22ஆம் நாள் பிரான்ஸ் அவரிடம் சரணடைந்தது. டன்கிர்க் (Dunkirk) பட்டணத்திலிருந்த ஆங்கிலேயத் துருப்புக்கள் உயிர் தப்பி இங்கிலாந்திற்கு ஓடின. ஹிட்லர் இங்கிலாந்தின் மேல் படையெடுக்க முயன்றார். ஆனால் பெரியதொரு வானவெளிப் போருக்குப் பின் அவர் அந்த எண்ணத்தை விடுத்தார். வான வழியே படைகள் முன்னேறுவதும் பின் அவை தடையுறுவதும் உலக வரலாற்றிலேயே முதல் முதல் இந்த 1940ஆம் ஆண்டிலேதான் நடந்தன.

அதற்கடுத்த 1941ஆம் ஆண்டில் ஜெர்மனி, ருஷியாவைத் தாக்கியது. கோடை காலத்தில் இடையிலே தாக்குதல் தொடங்

கியது. ஒடெஸ்ஸா (Odessa), கார்கோவ் (Kharkov) பட்டணங்களை ஜெர்மானியர் பிடித்தார்கள். மாஸ்கோ, லெனின்கிராட் போன்ற தலைசிறந்த ருஷிய நகரங்களே சரணடையும் தறுவாயில் இருந்தன. அப்போது ஜப்பான் அமெரிக்கக் கடற்படையை பெர்ல் ஹார்பரில் தாக்கியது. அமெரிக்கா சண்டையில் நுழைந்து முன்கூறியபடி வெடி குண்டுகளை வீசியது. ஆயினும் ஜெர்மனி ஆப்பிரிக்காவில் முன்னேறிக் கெய்ரோவிற்கு அண்மையில் வந்துகொண்டிருந்தது. 1942ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஸ்டாலின்கிராட் ஜெர்மானியர்முன் விழும் நிலையிலிருந்தது.

இந்த நிலையில் 1943ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஒன்றுக இணைந்தன. பிப்ரவரித் திங்களில் ஜெர்மானியர் ஸ்டாலின்கிராடிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள். அதே ஆண்டு மேத் திங்களில் ஜெர்மானியரும் இத்தாலியரும் ஆப்பிரிக்காவில் தோற்றனர். இத்தாலி சரணடைந்தது. 1944ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் நாள் பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து நாடுகளிலிருந்து ஜெர்மானியர் வெளியேற்றப்பட்டனர். நேசப்படைகள் என்ற பெயர் பெற்ற அமெரிக்க, ஆங்கிலேயப் படைகள் ரைன் ஆற்றைத் தாண்டி பெர்லின் தலைநகரின் மேல் குண்டுமாரி பொழிந்தன. 1945இல் மே 7ஆம் நாள் ஜெர்மனி சரணடைந்தது.

II

1941ஆம் ஆண்டு 22ஆம் நாள் ஜெர்மனி ருஷியாவைத் தாக்கியது. இது ஏன் நிகழ்ந்ததென்பதை இன்னும் யாரும் கண்டுகொள்ளக்கூடவில்லை. பொதுவில் ஹிட்லருடைய வரம்பு கடந்த ஆசையே இதற்குக் காரணமாயிற்றென்று நாம் கூற வேண்டும். ஆனால் வரலாறு திரும்பத் திரும்ப நிகழ்கிறது (History repeats itself) என்பதற்கு விளக்கம் கிடைத்தது. ஏறக்குறைய நூற்று முப்பதாண்டுகளுக்கு முன் மாவீரன் நெப்போலியன் மாஸ்கோவை அணுகினார்; அதன் விளைவு அவருடைய வீழ்ச்சி என்பதை நாம் முன்னர்க் கூறினோம். அத்தகைய நிலையை இப்பொழுது ஹிட்லர் தமக்கு ஏற்படுத்திக் கொண்டார். ருஷியா பரந்த நாடு; அதன் தட்பவெப்ப நிலை ஐரோப்பியருக்கும் தாங்கக்கூடாதது; அதன் மக்களோ உரம் பெற்ற மக்கள். இதை நெப்போலியன் கண்ட ருஷியா. ஆனால் இப்போது 1917ஆம் ஆண்டுப் பெரும் புரட்சிக்குப் பிறகு அது முன்னிலும் வீறுபெற்ற ஒரு புது நாடாகத் காட்சியளித்தது. அதன் பொருளாதாரம் மிக உயர்ந்த நிலையிலிருந்தது; அதன் படைக்கலன்கள் மிக வலிமை வாய்ந்தவையாயிருந்தன.

பதினெட்டுத் திங்கள்கள் ஹிட்லருக்கு வெற்றியளித்தன. பிறகு ருஷியா நெப்போலியனுக்குப் படித்த பாடத்தைப் படிக்கத் தொடங்கியது. நாட்டைச் சுட்டெரி (Burn earth) என்பதே இதன் குறிக்கோள். அதனால் எதிரிகள் முன்னேறுவதற்கு எவை எவை உதவியாகுமோ அவையெல்லாம் தீ வைத்துக் கொளுத்தப் பட்டன. கட்டடங்கள், பாலங்கள். உணவுப் பொருள்கள், தீக்கிரையாயின. சாலைகள் மனிதப் போக்கு வரத்திற்குப் பயனற்றவையாகச் செய்யப்பட்டன. ருஷியர்கள் தங்கள் ஸ்டாலின் அரணை நாடிச் சென்றனர். ஆனால் அரண் வீழ்ந்தது; ஸ்மோலெல்ன்ஸ்க் (Smolensk) வீழ்ச்சியுற்றது. கார்க்கோவ் (Kharkov) நகரம் பல தொழிற் சாலைகள் நிறைந்த இடம். அதுவும் பிடிபட்டது. கடைசியில் ஜெர்மானியர் மாஸ்கோவையே அணுகிவிட்டனர். ஜெர்மனி, இத்தாலி தவிர மற்ற ஐரோப்பிய நாடுகள் ருஷ்யாவிற்கு உதவ எண்ணின. அதே சமயம் ஜப்பானி யருடைய அமெரிக்கப் போர் மாபெரு ஐக்கிய நாடுகளை நேசப் படையோடு சேர்த்தது. இது வரை சண்டையில் முழுபலத் தோடு இறங்காத ருஷியா இப்போது முழுமூச்சோடு இறங் கியது. நேசப் படையினரின் ஒற்றுமை ஜெர்மனியையும் இத்தாலியையும் முன்னிலும் அதிகமாக ஒன்றுபடச் செய்தது. இவை ஜப்பானியருக்கு முழுமூச்சோடு உதவின. ஆகவே உலக முழுவதுமே சண்டை பரவியது.

செல்வம் நிறைந்த அமெரிக்கா நேச நாடுகளோடு இணைந்த பொழுது ருஷியாவின் 150 மில்லியன் மக்களும், சீனவின் 500 மில்லியன் மக்களும் நேசநாடுகளோடு சேர்ந்தார்கள். ஆகையால் நேசப்படையினருடைய வலிமை பெருகியது. இங்கிலாந்து அரசாங்கத்தின்மீது ருஷியருக்கிருந்த அவ நம்பிக்கை தீர்வதற்காக அப்போது இங்கிலாந்தில் பிரதமரா யிருத்த சர்ச்சில் இரு நாடுகளும் இருபதாண்டுக் காலம் தங்கள் பரஸ்பர ஒற்றுமை குறையாமல் காக்க வேண்டுமென்று ருஷியா வோடு உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டார். ஆயினும் ஜெர்மனியும் எளிதில் விட்டுக் கொடுப்பதாய் இல்லை. இதனால் போர் பெருகியது மட்டுமின்றி நீடிக்கவும் செய்தது.

வான்வெளிப் போர் ஜெர்மனியில் மிகக் கொடுமையாக நடந்தது. ஆயிரம் விமானங்கள் ஒரே காலத்தில் தாக்கினவென் றால் ஜெர்மனியின் இழப்பு எத்தகையதாயிருந்திருக்க வேண்டு மென்பதை நாம் ஒருவாறு உணரக்கூடும். கடல் வெளியில் ஆங்கிலேயர் எப்பொழுதும் போலவே வலிமை கொண்டு விளங் கினர். இதனால் ஜெர்மனியருக்கேற்பட்ட இழப்பு சொல்லுந் தரமல்ல. ஜெர்மனி இத்தாலியின் ஒற்றுமையால் சாலவும் பல

னடையவுமில்லை. ஆயினும் அந்நாடு முன்னேறிய வகை வியப்புக்குரியதாயிருந்தது. அது நேரே ருஷியாவை நோக்கி முன்னேறியது. 1942ம் ஆண்டு ஜூலை முதல் நாள் ஜெர்மானியர் கிரிமியாவை அடைந்து செபஸ்டாப்பூல் நகரைக் கைப்பற்றினர். பிறகு ருஷியாவின் பெட்ரோல் களஞ்சியமெனப்பட்ட காகஸஸ் மலைப் பகுதியை நோக்கிப் படையெடுத்தனர். அதே ஆண்டு செப்டம்பரில் வோல்கா ஆற்றங் கரையிலுள்ள ஸ்டாலின் கிராட் நகர் வரை வந்துவிட்டனர்.

ருஷ்யாவில் நேசப் படையினர் நிலைமை மோசமாயிருந்த போது ஆப்பிரிக்காவிலும் அவர்கள் நிலைமை கவலைக்கிடமாகவே யிருந்தது. ஜெர்மானியர் பக்கத்தில் அங்கு ரொம்மல் (Rommel) படைத் தலைவரா யிருந்தார். அவர் பெரும் படைகளை அங்கு இறக்கிப் பல வெற்றிகள் கண்டார். டொப்ரூக் வீழ்ச்சியுற்றது. ஜெர்மானியர் கெய்ரோவை நோக்கிப் புறப்பட்டனர். அப் பொழுது படைத்தலைவர் மோன்ட்கோமரி (Montgomery) நேசப்படையினர் சார்பாக ஆப்பிரிக்காவில் தலைமைப் பதவியில் அமர்த்தப்பட்டார். அதன் பிறகு அங்கு அவர்கள் நிலைமை சிறிது முன்னேறியது. இவை நடந்த 1942 ஆம் ஆண்டு நேசப் படையினருக்குப் பெருஞ் சோதனைக் காலமாயிருந்தது. அவர்கள் ஆப்பிரிக்காவில் தோல்வியுற்றபோது ருஷ்யாவிலும் ஜப்பானிலும் தோற்றனர். இங்கிலாந்தில் பெரிய விமானத் தாக்குதலால் மக்கள் தொல்லையுற்றனர்; அதே சமயம் இந்தியாவில் தன்னுட்சிக் கிளர்ச்சி யேற்பட்டது. இந்தியர்கள் ஆங்கிலேயப் படையில் சேர்ந்து போர் செய்வதை கிளர்ச்சியாளர் முற்றிலும் எதிர்த்தனர். சிங்கப்பூர் ஜப்பானியரிடம் வீழ்ந்தது; ஜப்பானியர் அதன்பின் பர்மாவின்மேல் படையெடுத்தனர். ரங்கூன் நகரம் பிடிபட்டது. ஆங்கிலேயர் வெளியேற்றப்பட்டனர்.

பெர்ல் ஹார்பரில் ஜப்பானியர் அமெரிக்கக் கடற் படையின் மேல் பெருவெற்றி கண்டதும் இந்த ஆண்டில்தான். அங்கு அமெரிக்கருடைய ஐந்து பெரிய சண்டைக் கப்பல்கள் வெடிகுண்டுகளால் உடைத்துத் தள்ளப்பட்டன. அமெரிக்கர்களுடைய கப்பல் வலிமையில் பாதி அப்போது அழிந்தது. அதோடு பிலிப்பைன்ஸ் தீவுகளையும் அவர்கள் ஜப்பானியருக்கு விட்டுவிட வேண்டியதாயிற்று.

ஆனால் 1942 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நேசப் படையினருக்கு நல்ல காலம் வரத் தொடங்கியது. தோல்வியுற்ற அமெரிக்கர்கள் உணர்ச்சி யிழந்து போவதற்குப் பதிலாகப் புத்துணர்ச்சி பெற்றார்கள். கப்பல்களும், வானவூர்திகளும் விரை

விலே செய்யப்பட்டன. தோல்வி தந்த ஆண்டு முடிவதற்குள் ளாகவே அவர்கள் ஜப்பானியர்களைப் பல இடங்களில் வெற்றி கொண்டார்கள். குறிப்பாக வானவெளியிலும், கடலிலுமே அமெரிக்கர்கள் வெற்றி கண்டார்கள். இவற்றில் சிறப்பாகக் குறிக்கத் தகுந்தது குடால்கெனல் (Guadalcanal) கடல் வெற்றியாகும்.

III

நிற்க, போரில் ஆப்பிரிக்க நிலைமையைப் பற்றிக் கூறுவோம். 1942 அக்டோபர்த் திங்களில் எல் ஆல் மேய்ன் என்ற விடத்தில் மொன்ட்கோமரி ஒன்றுபட்ட ஜெர்மானியரையும் இத்தாலி யரையும் முற்றிலும் தோற்கடித்தார். அதன்பின் அவர்களால் வட ஆப்பிரிக்காவின் கிழக்கு பாகத்திலிருக்கக்கூடவில்லை. அவர் கள் அங்கிருந்து மேற்குப் பகுதிக்குப் போக வேண்டியதாயிற்று. நேசக் கட்சித் தலைவர்கள் வட ஆப்பிரிக்காவைத் தங்களுடைய சிறந்த போர்க்களமாக்கிக் கொண்டார்கள். ஜெர்மானியர் களுடைய தாக்குதல் ருஷியாவின் மீது நிகழ்ந்தபோது அவர்களுக் குதவும் வரையில் ஜெர்மானியர்களுடைய கவனத்தை வேறொரு பக்கமாகத் திருப்ப வேண்டுவதாயிற்று. இதற்கு நேச நாடுகள் வட ஆப்பிரிக்காவைத் தேர்ந்தெடுத்தன. இதற்கு இரண்டாம் போர் முனை என்ற பொருள் கொண்ட சக்கண்ட் பிரன்ட் (Second front) என்ற பெயர் தரப்பட்டது. 850 கப்பல்கள் கொண்ட ஒரு பெரும்படை ஜிப்ரால்டரில் இறங்கி அங்கிருந்து ஆப்பிரிக்காவின் வடக்குக் கரை முழுவதிலும் பல இடங்களில் தங்கியது. இப் பெரும்படைக்குத் தலைமை தாங்கியவர் ஐசனேவர் (Eisenhower). இவருடைய வெற்றிகள் இவரே அமெரிக்க நாட்டின் தலைவர் என்ற அளவுக்கு இவருடைய பெருமையை உயர்த்தின. பிசர்ட்டா (Biserta), டுனிஸ் (Tunis) பட்டணங்கள் பிடிபட்டன. அச்சு நாட்டினரான (Axis powers) ஜெர்மானியரும் இத்தாலியரும் பெருந்தோல்வியுற்றனர். இறந்தவர் போக 2,50,000 பேர்கள் சரணடைந்தனர்.

ருஷியாவிலும், ஜெர்மானியர் தோல்வி மேல் தோல்வி கண்டார்கள். 1943ஆம் ஆண்டு பிப்ரவரியில் அவர்களுடைய பெரும்படையொன்று அங்குத் தோல்வியுற்றது. 8,50,000 பேர் கள் கொல்லப்பட்டார்களென்றும், 3,43,000 பேர்கள் சிறை செய்யப்பட்டார்களென்றும் ருஷிய வானொலி அறிவித்தது. ஜெர்மனி நாடு மூன்று நாள் துக்கம் கொண்டாடியதென்றால் இத் தோல்வி எத்தகையதென்பது ஒருவாறு பெறப்படும். ஜெர்மனி இன்னும் சண்டையை நடத்தியதென்றால் அது வெறும் மனை

வலிமையினால் நடந்ததேயன்றி வேறல்ல. ஆங்கிலேய விமானங்கள் ஜெர்மனியின் மேல் குண்டுமாரி பொழிந்தன. பதினெட்டுத் திங்களில் ஜெர்மனி இங்கிலாந்தின்மேல் வீசிய குண்டுகளை விட அதிகமானவை ஒரு மணி நேரத்தில் டார்ட்மண்ட் (Dorttmund) என்றவிடத்தில் இப்பொழுது இங்கிலாந்து வீசியதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் ஆப்பிரிக்காவில் வெற்றி கண்ட நேசப் படைகள் சிசிலித் தீவி லிறங்கின. சிசிலி இத்தாலியின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த போதிலும் அங்கே முசோலினியினுடைய ஆட்சிக்கு ஆதரவில்லை. சிரக்கியூஸ் (Syrecuse), பாலார்மோ (Palermo) பட்டணங்கள் சரணடைந்தன. அங்கிருந்து நேசப் படையினர் இத்தாலியினுள் நுழைந்தார்கள். முசோலினி சிறைப்பட்டார். விரைவில் உடன்பாடு ஏற்பட்டது. இத்தாலி மன்னருடைய ஆட்சி திரும்பவும் கொண்டு வரப்பட்டது. ஆயினும் இத்தாலியின் பெரும்பகுதி ஜெர்மனியின் கையிலிருந்தது. ஆகையால் அங்கேயும் ஜெர்மனியோடு சண்டை செய்ய வேண்டியதாயிற்று. காசினே (Cassino) என்ற இடத்தில் 1944 ஜூனில் கடும்போர் நடந்தது. அதன் பின்னர் ரோம் நகர் பிடிபட்டது.

ருஷியர்கள் வெற்றிமேல் வெற்றி கண்டு ஜெர்மனியின் எல்லைக்கே வந்துவிட்டனர். 1943இல் கார்கோவை (Kharkov)ப் பிடித்தார்கள். பிறகு னீப்பர் (Dnieper) ஆற்றைக் கடந்து கீவ் (Kiev) நகரத்தைப் பிடித்தார்கள். கிரிமியாவிலிருந்து ஜெர்மானியர் வெளியேறுவதே முடியாத செயலாயிற்று. ருஷியர்களுடைய வெற்றிகள் நேசப் படையினர் எல்லோருக்குமே களிப்பூட்டின. குறிப்பாக ஆங்கிலேயர்கள் மகிழ்ந்தார்கள். அவர்கள் ருஷிய மக்களுக்குத் தங்கள் மகிழ்ச்சியின் அறிகுறியாகக் கௌரவ வாளொன்று வழங்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். இதை அவர்கள் பிரதமர் சர்ச்சில் 1943ல் நவம்பரில் டெஹரானி (Teheran)ல் கூடிய சர்ச்சில்-ரூஸ்வெல்ட்-ஸ்டாலின் மாநாட்டில் ஸ்டாலினுக்குப் பரிசாக வழங்கினர். ருஷியர்கள் முன்னிலும் அதிகமாக முன்னேறினர்கள். கெர்சன் (Kherson), ஒடெஸ்ஸா (Odessa), செபஸ்டாபோல் (Sebastopol) நகரங்களை அவர்கள் இப்போது கைப்பற்றினர்.

1944 ஜூனில் போரின் கடைசிக்கட்டம் ஆரம்பமாகியது. அப்போது நேசப் படையினரெல்லாம் ஒன்று கூடி ஜெர்மானியரைப் பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகளிலிருந்து வெளியேற்ற முயன்றனர். பிரெஞ்சுப் படைத்தலைவர் டெகாலின் (Degaulle) தலைமையின்கீழ்த் திறமையோடு போராடியது. 1944ஆம் ஆண்டு ஆகஸ்டு 25ஆம் நாள் பாரிஸ் நகரம் ஜெர்மானியரிடமிருந்து

மீட்கப்பட்டது. பிறகு லெஹேவ்ர் (Le Havre), பிரஸ்ட் (Brest), பொலோன் (Boulogne), கலே (Calais) முதலிய நகரங்களை ஒல்வொன்றாய்ப் பிரெஞ்சுக்காரர்கள் மீட்டனர். ஜெர்மனியில் புரட்சி தொடங்கியது. படைத்தலைவர்களில் பலர் ஹிட்லரைக் கொல்ல வழி தேடினர்கள். ஹிட்லர் அதைக்கண்டுபிடித்து அவர்களை வெட்டிக் கொன்றார். இதற்கிடையில் ருஷியர்கள் பிரான்டன்பர்க் (Brandenburg) நகருக்குள்ளேயே நுழைந்து விட்டார்கள். அமெரிக்கர்கள் கொலோன் (Cologne) நகரத்தைப் பிடித்தார்கள்; பெர்லின் நகர் வானிலிருந்து பொழிந்த குண்டு களால் தூள் தூளாகப் போயிற்றென்றே சொல்லவேண்டும். ஜெர்மானியர் சரணடைய விரும்பினர். ஆனால் ருஷியரிடம் சரணடைவது அவர்களுக்கு இழிவாகத் தெரிந்தது. 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் நாள் இத்தாலியரும் ஜெர்மானியரும் கலந்த படையொன்று இத்தாலியில் சரணடைந்தது. மே 5ஆம் நாள் ஹாலந்து, டென்மார்க், வடமேற்கு ஜெர்மனியிலிருத்து ஜெர்மானியப் படைகள் சரணடைந்தன. இதற்கு மூன்று நாள் முன்னரே பெர்லின் ருஷியர்கள் கையில் வீழ்ந்தது. இத்தாலி யில் முசோலினி கொல்லப்பட்டார். அவருடைய பிணம் மிலான் நகரின் தெருக்களில் பலர் காண வைக்கப்பட்டது. ஹிட்லர் மறைந்தார். எப்படி மறைந்தாரென்பது தெரியாவிட்டாலும் பொதுவில் தாமே தம் உயிரை மாய்த்துக்கொண்டாரென்று நம்பப்படுகின்றது.

IV

இனி ஜப்பானின் முடிவைப்பற்றிக் கூறவேண்டும். 1943ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்தே ஜப்பானின் வலிமை குன்றத் தொடங்கியது. அவ்வாண்டு நவம்பரில் கெய்ரோவில் ரூஸ்வெல்ட்டும், சர்ச்சிலும், சியாங்-கேய் ஷேக்கும் கூடி அதன் முடிவு எப்படியிருக்க வேண்டுமென்பதைப் பற்றி ஆராய்ந்தார் கள். பஸிப்பிக் கடலிலிருந்தும், சீனா, கொரியாவிலிருந்தும் அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று தீர்மானமாயிற்று. 1944 ஜூன் 19ஆம் நாள் பிலிப்பைன்ஸுக்கு அருகில் அமெரிக்கருக் கும் ஜப்பானியருக்கும் பெரியதொரு சண்டை நடந்தது. இதில் ஜப்பானியர் 400 விமானங்களை இழந்தார்கள். அவர்களுடைய கப்பற்படையும் மிகப் பழுதடைந்தது. இதுவே ஜப்பானி யரைத் தலைகுனியச் செய்த முதற் சண்டை. வெற்றியைப் பற்றிய எவ்வித நம்பிக்கையையும் அவர்கள் இப்போது இழந்தார் கள். 1945ஆம் ஆண்டில் இடைப்பாகத்தில் ஒக்கினவா (Okkinawa) பிடிபட்டது. அங்கிருந்து ஜப்பானையே இப்பொழுது தாக் கக்கூடும். இவ்வாண்டு ஜூலையிலிருந்து கடல் வழியாகவும் வான்

வழியாகவும் அமெரிக்கர்கள் பலமுறை ஜப்பானியரைத் தாக்கினார்கள். இதனால் சுமார் ஓராயிரம் கடற்கப்பல்களையும், வான் வெளிக்கப்பல்களையும் அவர்கள் இழந்தனர். ஆயினும் அவர்களுடைய வீரமும் விடாமுயற்சியும் அவர்களை விடுவதாயில்லை. ஆகஸ்டு 5ஆம் நாள் இந்த உலகப் போரிலும் எங்கும் எய்யாத அணுகுண்டு ஜப்பானியருடைய ஹிரோஷிமா (Hiroshima) நகரின்மேல் விழுந்தது. இதைச் செய்தவர்கள் அமெரிக்கர்கள். சரணடையாவிட்டால் மறுபடியும் அணுகுண்டு வீசப்படுமென்று எச்சரித்தார்கள். அது பயனன்றிப் போகவே மறுபடியும் நான்கு நாட்கள் கழித்து நாகசாக்கி (Nagasaki)யின்மேல் குண்டு வீசப்பட்டது. இவற்றின் அழிவு எழுத்தால் விளக்கக் கூடியதன்று. ஐந்தே நாட்களில் (14-8-1945) ஜப்பானியர் சரணடைந்தனரென்றால் இது எப்படிப்பட்டதாயிருந்திருக்கு மென்பதை நாம் உணரக் கூடும்.

V

இவ்வாறு 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் இரண்டாவது உலகப்போர் முடிவுற்றது. இருதரப்பாரும் உடன்பட்டுப் போரை நிறுத்திக் கொள்ளவில்லை. ஒரு பகுதியினர் யாவற்றையும் இழந்த பின்னர்ப் போர் தானாகவே நின்றதென்றுதான் கூற வேண்டும். எவ்வாறெனினும் ஏழாண்டுக் காலத்திற்கு நானிலத்தை நடுங்க வைத்த நாசப்போர் முடிவுற்றதை எண்ணி உலகமாந்தர் இறும்பூதெய்தினர். இப்போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோதே ஐந்து வல்லரசுகளான அமெரிக்கா, ருஷியா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா ஆகியவற்றின் பெருந் தலைவர்கள் கெய்ரோ, யால்டா, போட்ஸ்டாம் போன்ற இடங்களிற் கூடி போருக்குப்பின் ஆன அமைதி பற்றியும் உடன்படிக்கைகள் குறித்தும் விவாதித்து வந்தனர். இருப்பினும் சண்டையிலிருந்து சமாதானத்தை நிறுவுவது அத்துணை எளிதாக இல்லை. போர் ஓய்ந்ததும் வெற்றி பெற்ற வல்லரசுகளும் பொது மாநாடு கூட்டி உடன்படிக்கை ஒன்றினை உருவாக்கிக் கொள்ளமுடியவில்லை. பல மாநாடுகளும் பேச்சு வார்த்தைகளும் நடந்த பின்னர், தனித் தனியாக நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. இந்த ஒப்பந்தங்களின் பயனாக அச்சுநாடுகளான இத்தாலி, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து ஆகியவற்றுடன் 1947ஆம் ஆண்டில் உடன்படிக்கைகள் கையெழுத்தாயின. இத்தாலி, பெரும் இழப்பீட்டுத் தொகை தரவேண்டுமென்பதோடு தனக்குச் சொந்தமான பகுதிகள் சிலவற்றை பிரான்ஸ், கிரீஸ் போன்ற நாடுகளுக்கு அளிக்க வேண்டியதாயிற்று. அது

கைப்பற்றியிருந்த அபிசீனியா உரிமை பெற்ற பேரரசாகியது. அதன் குடியேற்றங்களான லிபியா, எரிட்ரியா, சோமாலிலாந்து ஆகியவை ஐ. நா. வின் பாதுகாப்பில் வந்தன. பின்லாந்து, தனது வடமேற்கு மாநிலமான பெட்சமோவை ருஷியாவிற்குத் தர வேண்டியதாயிற்று. ஹங்கேரியும் சில பகுதிகளை இழந்தது. ஜப்பானியர் வீழ்ச்சிக்குப் பின்னர் ருஷியா மத்திய ஆசியாவில் கவனம் செலுத்திய நேரத்தில் ஜப்பான் நாட்டை மக்ஆர்தரின் தலைமையிலான அமெரிக்கப் படையினர் கைப்பற்றி அங்கு படைக் குறைப்பு செய்வதிலும் ஜனநாயக முறையிலான அரசியல் அமைப் பினை உருவாக்கவும் பாடுபட்டனர். தீவிரமான பேச்சுவார்த்தை களுக்குப் பிறகு 1951 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில்தான் அமெரிக்காவுடனும் இங்கிலாந்துடனும் ஜப்பான் உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி, தான் கைப்பற்றிய பகுதிகளை விட்டுக் கொடுக்க ஜப்பான் இணங்கியது. மற்றுமொரு உடன் படிக்கையின் மூலம் ஜப்பானிய தளங்களில் அமெரிக்கப் படைகள் தங்க இடம் ஏற்பட்டது. ஆனால் இது வரையில் ஜெர்மனியோடு நேச நாடுகள் உடன்படிக்கை யேதும் செய்து கொள்ளவில்லை. இதற்குக் காரணம் ருஷியாவுடன் நேச நாடுகள் கொண்ட கருத்து வேற்றுமை தான். இருப்பினும் ஆரம்பத்தில் நான்கு நேச நாடு களும் ஜெர்மனியைத் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொண்டு ஆதிக்கம் செலுத்தி வந்தன. தற்கொலை செய்து கொண்டு உயிர் நீத்த ஹிட்லர் நீங்கலாக நாசிசத் தலைவர்கள் பலர் நூரம்பர்க் நகரில் விசாரிக்கப்பட்டுத் தண்டனை அடைந்தனர். ரோசன்பர்க், ரிப்பன்ட்ராப், கீடல் (Keitel) போன்றவர்கள் மரண தண்டனை பெற்றனர். காலப்போக்கில் ருஷியாவின் ஆதிக்கத்தில் இருந்த ஜெர்மன் பகுதி கிழக்குஜெர்மனியாகவும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் ஆதிக்கத்தில் இருந்த பகுதிகள் இணைந்து மேற்கு ஜெர்மனியாகவும் உருவெடுத்தன.

இரண்டாவது உலகப்போர் பல விளைவுகளைத் தோற்றுவித் தது. இப்போர் இதுவரை உலகம் கண்டிராத மாபெரும் அளவில் நடந்ததாலும்; பாலைவனங்கள். காடுகள், கழனிகள், நகரங்கள், கடல்கள் என்று எங்கு பார்த்தாலும் சண்டை நடைபெற்ற தாலும் டாங்கிகள், ஆகாய விமானங்கள், விஷ வாயுக்கள் கொண்டு போரிட்டதாலும்; போர்க்கால விதிமுறைகள் மீறப் பட்டதாலும்; படைவீரர்களேயன்றிச் சாதாரண மக்களும் போரில் ஈடுபடுத்தப்பட்டதாலும் உயிர்ச்சேதமும் பொருட்சேத மும் கணக்கிலடங்காமற் பெருகின. போரில் கொல்லப்பட்டவர் கள் பலகோடி. காயமுற்றோர் பலப்பல கோடி. கண்மூடித் தனமான தாக்குதல்களால் நகரங்கள், தொழிற்சாலைகள்,

பள்ளிகள், மருத்துவமனைகள். கப்பல்கள், விமானங்கள், வீடுகள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து பட்டுள்ளன. ஜப்பானில் வீசப்பட்ட அணுகுண்டுகள் இழைத்த சேதத்தை எழுதமுடியாது. அழிவும் அவலமும், பஞ்சமும் பட்டினியும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு மக்களை வாட்டி வதைத்தன. பல நாடுகளில் விவசாயம் சீர் கெட்டது. தொழிற்சாலைகள் தீக் கிரையாயின. பொருளாதார முறையே சீர் குலைந்துபோனது. வெற்றி பெற்ற நாடுகளும் தோல்வியுற்ற நாடுகளும் நேரடியான பங்கு கொள்ளாத நாடுகளும் பேரிழப்பிற் குள்ளாயின. நிலைமை சீர்பெற நீண்ட காலம் பிடித்தது.

இரண்டாவது உலகப்போர் ஜனநாயகத்தைக் காப்பதற் கான போர் என்று நேசநாட்டினர் பறை சாற்றியது முற்றிலும் உண்மையன்று. என்றாலும், அச்சு நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவற்றில் சர்வாதிகார ஆட்சி ஒழிந்தது. போர் வெறியை, குறுகிய தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட நாஸிசமும் பாசிசமும் அடியோடு அழிக்கப் பெற்றன. ஹிட்லரும் முசோலினியும் மாண்டனர்.

உலகையே கலக்கும் சக்தி படைத்திருந்த ஜெர்மனி இரு கூறுகளாகப் பிளவுண்டு நிற்கின்றது. அதன் தலைநகரமாக விளங்கிய பெர்லினும் இரண்டாகப் பிளந்துள்ளது. ருஷியாவின் அரவணைப்பில் இருக்கும் கிழக்கு ஜெர்மனியும் அமெரிக்காவின் ஆதரவில் இருக்கும் மேற்கு ஜெர்மனியும் இணைய முடியாமல் தீராத அரசியல் சிக்கலுக்குக் காரணமாக இருந்து வருகின்றன.

இப்போரின் விளைவாக ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த ஐரோப்பிய வல்லரசுகள் வலிமையிழந்து இரண்டாந்தர, மூன்றும் தர அரசுகளாக மாறியிருக்கின்றன. சூரியன் அஸ்த மனத்தைக் காணாத பேரரசாக இருந்த பிரிட்டன் பழம்பெருமை குன்றி, பொருளாதார நெருக்கடிக்குள்ளாகிப் பொலிவிழந்து நிறபதைப் பார்க்கின்றோம். அதற்குமாறாக, அமெரிக்காவும், ருஷியாவும் உலக வல்லரசுகளாகத் திகழ்கின்றன. போரின் அழிவுகளில் இருந்து மீள்வதற்கு ஐரோப்பிய நேச நாடுகள் அமெரிக்காவை எதிர்நோக்கி நிற்கவும் அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் உறுதி அளிக்க அமெரிக்கா முன் வந்ததும், ஒரே கம்யூனிஸ்ட் நாடாக இருந்த ருஷியா போரின் விளைவாகத் தோன்றிய போலந்து, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா, கிழக்கு ஜெர்மனி போன்ற கம்யூ னிஸ்ட் நாடுகளின் தலைமைப் பொறுப்பேற்றதும் உலகை இரு முகாம்களாக்கி, ஒருவித கெடுபிடிப் போருக்கு வழி வகுத்

திருப்பதும் ஒரு வகையில் இரண்டாம் உலகப்போரின் விளைவுகளே எனலாம்.

மேலும் அடிமைப்பட்டுக்கிடந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் பல ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவும் இப்போர் உதவியது. சுதந்திரம், ஜனநாயகம் போன்ற கோட்பாடுகளை நிலைநாட்ட வேண்டி பாசிச, நாஸிச சக்திகளை அழிக்கப் போர் நடத்தி அதிலே வெற்றியும் பெற்ற பிறகு குடியேற்ற நாடுகளின் விடுதலை வேட்கையை நேச நாடுகளால் புறக்கணிக்க முடியவில்லை. 1947ல் இந்தியா விடுதலை பெற்றதிலிருந்து இருபது ஆண்டுகளுக்குள் விடுதலை இயக்கம் வேகமாகப் பரவி, அநேகமாக எல்லா ஆசிய ஆப்பிரிக்க நாடுகளும் சுதந்திரம் பெற்று வாழ வழியேற்பட்டது. இப்போரின் இன்னொரு விளைவாக ஐக்கிய நாடுகள் சபை நிறுவப் பட்டுள்ளது. இங்ஙனம் உலகையே ஆட்டிப்படைத்த இப்போர் பல தீவிர விளைவுகளைத் தோற்றுவித்ததில் வியப்பொன்றுமில்லை.

VI

ஐக்கிய நாடுகள் சபை (U.N.O.)

இரண்டாவது உலகப் பெரும்போர் அளவற்ற அழிவினை விளைவித்த அதே நேரத்தில் போரின் கொடுமைகளிலிருந்து வருங்கால சமுதாயத்தைக் காக்கவும், அடிப்படை மனித உரிமைகளையும் நாடுகளின் சம உரிமைகளையும் காக்கவும் வேண்டி உலகப் பெருந் தலைவர்களும் சிந்தனையாளர்களும் சீரிய முயற்சியில் இறங்கினர். அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்டும் பிரிடிஷ் பிரதமர் வின்சென்ட் சர்ச்சிலும் 1941ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அட்லாண்டிக் பெருங்கடலில் கப்பல் தளமொன்றில் சந்தித்துப்பேசி, சர்வதேச அமைப்பு ஒன்றினை உருவாக்கி உலக சமாதானத்தைக் காக்க முடிவு செய்து, அட்லாண்டிக் சாசனம் (Atlantic Charter) எனும் அறிக்கையை வெளியிட்டனர். மக்களின் நான்கு அடிப்படை உரிமைகளைக் காப்பதே உலக அமைதிக்கு வழியென்று அவர்கள் கண்டனர். இவற்றைக் கருத்துரிமை (Freedom of Thought), வழிபாட்டுரிமை (Freedom of Worship), தேவையினின்று விடுதலை (Freedom from Want), அச்சத்தினின்று விடுதலை (Freedom from Fear), என்ற நான்கு பகுதிகளாகப் பிரித்தனர். பின்னர் 1942ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அமெரிக்கா, பிரிட்டன், ருஷியா, சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகளின் அறிவிப்பை வெளியிட்டனர். இந்த அறிவிப்பை ஏற்றுக்கொண்ட

41 நாடுகள் பாசிச, நாஸிச சதிகளுடன் இறுதி வரையில் போராடுவது என்றும், போருக்குப்பின் புதிய உலக நிறுவனத்தை அமைப்பது என்றும் உறுதி பூண்டன. மாஸ்கோவிலும், வாஷிங்டனில் டம்பார்டன் ஓக்ஸிலும் (Dumbarton Oaks), யால்டாவிலும், போட்ஸ்டாமிலும் வல்லரசுகளின் மகா ஆட்கள் கூடிப் பேசி ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் அமைப்பிற்கான திட்டம் வகுத்தனர். 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் சான்பிரான்ஸிஸ்கோவில் கூடி ஐக்கிய நாட்டுச் சபைக்கான சாசனத்தை உருவாக்கி, ஜூன் மாதத்தில் அதில் கையெழுத்திட்டனர். பல நாடுகளின் அரசாங்கங்கள் ஐ. நா. சாசனத்தை அங்கீகரித்ததால் அக்டோபர் மாதம் 24ம் நாள் ஐக்கிய நாடுகளின் நிறுவனம் தோன்றியது. அந்நாளில் தான் ஐ. நா. தினம் கொண்டாடப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான சாசனத்தில் அதன் நோக்கங்களும், குறிக்கோள்களும் இடம் பெற்றுள்ளன. இனி உலகில் போர் ஏற்படா வண்ணம் தடுப்பது, மனித உரிமைகளை உலக நாடுகள் அனைத்தும் மதிக்கும்படிச் செய்வது, உலக மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவது போன்ற உயர்ந்த குறிக்கோள்கள் அதில் வலியுறுத்தப் பட்டுள்ளன. அதன் நோக்கங்களும் திட்டவட்டமாக வரை யறுக்கப்பட்டுள்ளன. சக்திவாய்ந்த கூட்டு நடவடிக்கைகள் மூலமாக வலுத் தாக்குதலை முறியடித்தும், பன்னாட்டுச் சட்டங்களின்படி நாடுகளுக்கிடையேயான தகராறுகளைத் தீர்த்து வைத்தும் உலக அமைதியைக் காத்தல்; மக்களின் சமஉரிமைகள், சுய நிர்ணய உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் உலக நாடுகளுக்கிடையில் நல்லுறவை வளர்த்தல்; பொருளாதார, சமுதாய, பண்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை உருவாக்குதல்; இந்த நோக்கங்களை யெல்லாம் நிறைவேற்றுவதற்கு மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட நாடுகள் சமரசமாகப் பேசி வேற்றுமைகளைக் களையவும், நாடுகள் எல்லாம் மன ஒற்றுமையோடு செயல்படவும் வழிவகுத்தல் ஆகியவை அதன் நோக்கங்களாகும். சர்வதேச சங்கத்தைப் போல உலக அரசு ஒன்றை (World government) உருவாக்குதல் அதன் நோக்கமல்ல. உண்மையில் உறுப்பு நாடுகளின் உரிமைகளை மதித்து அவற்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடலாகாது என்பது ஐ. நா. வின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகும். உறுப்பு நாடுகள் ஒன்றோடொன்று சமாதானமாக, ஒற்றுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் வாழ்வதாகவும், உலக அமைதிக்காகவும் பத்திரத்திற்காகவும் ஒன்றுபடுவதாகவும்; பொது நலனுக்காக மட்டுமே குறைந்த அளவு படைப்பலத்தைப் பயன்படுத்துவ

தாகவும்; மனித சமுதாயத்தின் பொருளாதாரச் சமூக மேம் பாட்டிற்காக உழைப்பதாகவும் உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய குறிக்கோள்களை எட்டுவதற்கும், நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் ஐ. நா. வில் ஆறு முக்கிய உறுப்புக்களும் பல கிளை நிறுவனங்களும் செயலாற்றி வருகின்றன. அவற்றில் முதல் இடம் பெறுவது பொது அவை (General Assembly). ஐ. நா. வில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றும் ஐந்து பிரதிநிதிகளை இவ்வவைக்கு அனுப்புகின்றன. ஒவ்வொரு நாட் டிற்கும் ஒரு வாக்கு அளிக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் பெரும் வல்லரசுகளும் சின்னஞ்சிறு நாடுகளும் சம உரிமை பெறுதல் எனும் கொள்கை இச்சபையில் நிலைநாட்டப்படுகின்றது. நியூ யார்க் நகரில் உள்ள ஐ. நா. தலைமையகத்தில் ஆண்டுக்கொரு முறை இந்த அவை கூடுகின்றது. பாதுகாப்பு அவையின் பெரும் பான்மை உறுப்பினர் விரும்பினால் அவசர நிலையைச் சமாளிக்க அவசரக் கூட்டம் கூடுவதும் உண்டு. சாசனத்தில் உள்ள செய்தி கள் அனைத்தையும் பரிசீலனை செய்யும் உரிமை இதற்கு உண்டு. பெரும்பாலான பிரச்சினைகளில் முடிவெடுக்க சாதாரணப் பெரும் பான்மை இருந்தால் போதும். ஆனால் முக்கியமான பிரச்சினை களில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவைப்படுகின்றது. பாதுகாப்புச் சபையில் நிரந்தரமல்லாத உறுப்பினர்கள் (தற்போது 10), சமூகப் பொருளாதாரச் சபையின் உறுப் பினர்கள், ஐ. நா. பொதுச் செயலாளர் ஆகியோரைத் தேர்ந் தெடுக்கவும் பல்வேறு குழுக்களின் அங்கத்தினர்களைத் தேர்ந் தெடுக்கவும் ஆன அதிகாரம் இதனிடம் இருக்கிறது. நிறுவனத் தின் வரவு செலவுகளை இது கண்காணிக்கின்றது. கிளை நிறுவ னங்களின் பணிகளைக் கண்காணிக்கும் அதிகாரமும் இதனிடம் உண்டு. இங்ஙனம் பொதுப் பிரச்சினைகளை விவாதிக்கும் பெரு மன்றமாக, பொதுக் கொள்கைகளை வகுக்கும் உலகப் பாராளு மன்றமாக, பல்வேறு நிறுவனங்களின் உறுப்பினர்களைத் தேர்ந் தெடுக்கும் தேர்தல் களமாக, ஐ. நா. வின் நடு நாயக அமைப் பாக பொது அவை விளங்கி வருகின்றது. போரை நிறுத்தவும் அமைதியைக் காக்கவும் ஆன அதிகாரம் ஆரம்ப காலத்தில் இந்த அவைக்குத் தரப்படவில்லை யென்றாலும் பாதுகாப்புச் சபை, வல் லரசுகளின் போட்டியினால் பயனற்றுப் போகும் நேரங்களில் பொது அவை அமைதி காக்கும் பொறுப்பை ஏற்க வசதி இப்போது ஏற்பட்டுள்ளது. 1950ஆம் ஆண்டு நிறைவேறிய தீர் மானம் ஒன்றின் விளைவாகப் பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப் பினர்கள் ஒன்றுபட்டுப் பணியாற்ற இயலாது போனால் அச்சபை

யின் ஏழு உறுப்பினர்கள் அல்லது பொது அவையின் பெரும் பான்மையான உறுப்பினர்கள் வேண்டினால், படை பலத்தைப் பயன்படுத்தியும் அமைதியைக் காக்கப் பொது அவை தீர்மானிக்க முடியும். இவ்வாறு பொது அவையில் அதிகாரம் இன்று பெருகியுள்ளது.

பாதுகாப்பு அவை (Security Council), ஐ. நா. வின் மற்று மொரு முக்கிய அங்கமாகும். இதில் ஆரம்பத்தில் பதினொரு நாடுகளும், தற்போது பதினைந்து நாடுகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றில் அமெரிக்கா, சோவியத் ருஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து நாடுகளும் நிரந்தர உறுப்பினர்கள். மற்றவை இரண்டு ஆண்டுகளுக் கொருமுறை பொது அவையால் தேர்ந் தெடுக்கப் படுகின்றன. ஐ. நா. வின் பணியினை நெறிப் படுத்த வும், தலைமைப் பொறுப்பு ஏற்கவும் ஏற்றவகையில் இந்த அவை அமைக்கப்பட்டுள்ளது. பொது அமைதிக்குப் பங்கம் வரும்போது விரைந்து பணியாற்றிப் போரைத் தவிர்த்து அமைதியைக் காப்பதே இதன் தலையாய பணி யாகும். வலுத்தாக்குதல் செய்யும் நாடுகள் மீது நடவடிக்கைகள் எடுக்கவும் தேவைப்பட்டால் படை பலத்தைப் பயன்படுத்தி அமைதி கெடுக்கும் நாடுகளைப் பணிய வைக்கவும் இது அதிகாரம் பெற்றுள்ளது. நடைமுறை ஒழுங்கு சார்ந்த செய்திகளில் முடிவெடுக்க சாதாரணப் பெரும் பான்மை போதும் என்றாலும் முக்கிய பிரச்சினைகளில் பெரும் பான்மை உறுப்பினர்களில் ஐந்து நிரந்தர உறுப்பினர்களும் அடங்கியிருக்க வேண்டும். அதாவது இந்த ஐந்து நிரந்தர நாடு களின் ஒப்புதல் இல்லாமல் எந்த ஒரு முக்கிய முடிவையும் எடுக்க இயலாது. இத்தகைய வல்லரசுகளின் சிறப்பதிகாரம் வெட்டதி காரம் (Veto Power) என வழங்கப் படுகின்றது. பெரும் பொறுப்பு ஏற்கும் வல்லரசுகளின் நலன்களைக் காக்கும் விதத்தில் அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் பல நேரங்களில் வல் லரசுகள் அதனைத் தவறுகப் பயன்படுத்தி வந்துள்ளன. வல்லரசு களுக்கிடையேயான கெடுபிடிப் போரில் இந்த வெட்டதிகாரம் தவறுகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார சமூக அவை (Economic and Social Council) இன்னொரு முக்கிய அங்கமாகும், பொது அவையால் தேர்ந் தெடுக்கப்பட்ட பதினெட்டு உறுப்பு நாடுகள் மொத்தம் ஒன்ப தாண்டுக் காலத்திற்கு இதில் இடம் பெற்றுள்ளன. மூன்றாண்டு களுக் கொருமுறை மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் வெளியேறு கின்றனர். பொருளாதார சமூக வாழ்வில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளையும் அநீதிகளையும் நீக்கி மக்களது வாழ்வில் மறு

மலர்ச்சியும் மகிழ்ச்சியும் பொங்கச் செய்வது இதன் முக்கிய நோக்கமாகும். சமுதாய, நல்வாழ்வு, மற்றும் கல்வி முதலான பல செய்திகளில் ஆராய்ச்சி செய்து நாடுகளுக்கிடையே யான தகராறுகளைக் களைந்து, ஒத்துழைப்பை வளர்க்கப் பாடுபட்டு வருகின்றது. பல்வேறு பிரச்சினைகளையும் பல்வேறு பிராந்தியங் களையும் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தத் தகுதி வாய்ந்த குழுக்களை அமைத்துத் தரமான பணிகளைச் செய்து வருகின்றது. பழைய நிறுவனங்களான பன்னாட்டு நாணய நிதி (International Monetary Fund), உலக வங்கி (World Bank) ஆகியவற்றுடன் தொடர்பு கொள்வதுடன். புதிய சிறப்புப் பணிக் குழுக்களான உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation), ஐ. நா. பொரு ளாதார விஞ்ஞான கலாச்சார நிறுவனம் (UNESCO) போன்ற வற்றின் அமைப்பையும் பணிகளையும் கண்காணித்து வருகின்றது.

அடுத்தபடியாகக் குறிப்பிடக்கூடியது தர்மகர்த்தா அவை யாகும் (Trusteeship Council). பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்பினர்கள், ஐ. நா. பொறுப்பில் உள்ள பகுதிகளை நிர்வகிக் கும் பொறுப்புள்ள நாடுகள், பொது அவையால் தேர்ந்தெடுக்கப் பெற்ற நாடுகள் என்று பன்னிரண்டு உறுப்பினர்கள் அடங்கிய அவை இது. பழைய பாதுகாப்பு நாடுகள், முன்னாள் பகை நாடுகளின் குடியேற்றங்கள் முதலான சுயாட்சி பெறுத முன்னேற் றம் அடையாத பிரதேசங்களை நிர்வகித்தல் இதன் முக்கிய பொறுப்பாகும். அரசியல் அந்தஸ்தும் அபிவிருத்தியும் அடை யாத அப்பகுதிகளின் அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி ஆகியவற்றை வளர்த்து அவற்றின் முன்னேற்றத்திற்குப் பாடு பட்டு வருகின்றது.

உலக நீதிமன்றம் (International Court of Justice) ஐந்தாவது அங்கமாகும். ஹாலந்தில் தி ஹேக் (The Hague) எனுமிடத் தில் அமைந்துள்ள இந்நீதிமன்றத்தில் 15 நீதிபதிகள் பொது அவையாலும், பாதுகாப்பு அவையாலும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவி வகிக்கின்றனர். உறுப்பு நாடுகளிடையே தோன்றும் தகராறுகளைத் தீர்த்து வைத்து நீதி வழங்கப் படுகின்றது.

செயலகம் (Secretariat) ஐ. நா. வின் சிறப்பு வாய்ந்த அங்கமாகத் திகழ்கின்றது. பாதுகாப்பு அவையின் பரிந்துரையின் மேல் பொது அவையால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்து ஆண்டு களுக்குப் பதவி வகிக்கும் பொதுச் செயலாளர் (Secretary General) தலைமையில் ஐ. நா. வின் அன்றாடப்பணிகள் செவ்வனே நடைபெற இது உதவி புரிகின்றது. அங்கத்தின நாடுகளிலிருந்து நியமனமாகி வரும் 2000க்கும் மேற்பட்ட அலுவலர்கள் உலக நிறுவனத்திடம் பற்றுறுதி கொண்டு பணியாற்றி வருகின்றனர்.

வேண்டிய தகவல்களைச் சேகரித்தல், ஐ. நா. வின் அங்கங்கள் எடுக்கும் முடிவுகளை உறுப்பு நாடுகளுக்கு அறிவித்தல், கணக்கு வழக்குகளைச் சரிபார்த்தல் போன்ற அவசியப் பணிகளைச் செயலகம் கவனிக்கின்றது. ஆரம்ப காலத்தில் நிர்வாகப் பணிகளைச் செய்து வந்த பொதுச் செயலாளரின் நிலை மேன்மேலும் உயர்ந்து வருகின்றது. மேற்காசியா, காங்கோ போன்ற பகுதிகளில் அமைதி காக்கும் படைகளை ஐ. நா. அனுப்பிய பிறகு அவரது பணிகள் வகையிலும் தொகையிலும் பெருகியுள்ளன. அவர் உலகின் பல பகுதிகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து தூதுவராக விளங்கி வருகின்றார், அநேகமாக, பொது அவை இவரைத் தனது பேச்சாளராக, தன் தலைவராகக் கருதும் நிலை உருவாகியுள்ளது.

இத்தகைய அமைப்புக்களோடு வேறு பல கிளை நிறுவனங்களும் ஐ. நா. வுடன் தொடர்பு கொண்டு, ஒத்துழைப்பு தந்து பணியாற்றி வருகின்றன. அவற்றுள் உலகத் தொழிலாளர் நிறுவனம் (ILO), உணவு விவசாய நிறுவனம் (FAO), ஐ. நா. உலகக் குழந்தைகள் நிதி (UNICEF), உலக வியாபார நிறுவனம் (ITO), உலக சுகாதார நிறுவனம் (WHO), யுனெஸ்கோ, உலக நாணய நிதி, உலக அணுசக்தி நிறுவனம் (IAEA) முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவை அந்தந்தத் துறைகளில் அரும் பணியாற்றி வருகின்றன.

சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டில் ஐம்பது நாடுகள் பங்கு கொண்டன. ஐ. நா. சாசனத்தில் கையெழுத்திட்ட இந்த ஐம்பது நாடுகளும் இந்த உலக நிறுவனத்தின் உறுப்பு நாடுகளாயின. ஆனால் தோல்வியுற்ற அச்சு நாடுகள் முதலில் இடம் பெறவில்லை. அவற்றுடன் ஸ்பெயின், போர்த்துகல், ஏரா (Eire), ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து போன்ற நடுநிலை நாடுகளும் அதில் இடம் பெறவில்லை. நேச நாடுகளில் ஒன்றான போலந்தும், வல்லரசுகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசாங்கத்தைப் பெற்றில்லாத காரணத்தால் சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டியதாயிற்று. ஆயினும் ஆண்டுகள் செல்லச் செல்ல, ஐ. நா. வின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை பெருகிய வண்ணம் இருந்தது. லத்தீன் அமெரிக்க நாடுகளின் வற்புறுத்தலின் பேரில் தனி வல்லாட்சி பெற்றிருந்த அர்ஜன்டினாவை உறுப்பு நாடாகச் சேர்த்துக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U.S.A.) விழைந்தது. அதற்காக சோவியத் ருஷியாவின் இரு மாநிலங்களான யூக்ரேன், பைலோருஷியா ஆகிய வற்றை முழு உறுப்பினராக ஏற்றுக் கொள்ளவும் அது முன் வந்தது. அதன் பிறகு 'சமாதானத்தை விரும்பிய நாடுகள்'

எதுவும் பாதுகாப்புச் சபையின் பரிந்துரையுடன் பொதுச்சபையின் ஒப்புதல் பெற்று ஐ. நா. வின் உறுப்பு நாடாக வர வழியேற்பட்டது. இதன் விளைவாக அங்கத்தினர்களின் எண்ணிக்கை பெருகியது. உரிமைபெற்ற பல ஆசிய ஆப்பிரிக்க நாடுகளும் ஐ. நா. வில் சேர்ந்தன. இங்ஙனம் 1970 ஆம் ஆண்டில், அறுபது ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் உள்பட 126 நாடுகள் இந்த நிறுவனத்தில் இடம் பெற்றன. இன்று அநேகமாக எல்லா நாடுகளும் (சீனக் குடியரசு, மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி உள்ளிட்டு) இதில் அங்கம் வகிக்கின்றன.

1945 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24ம் நாள் தோன்றிய ஐ. நா. சபை 1970 ஆம் ஆண்டில் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடியது. இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் அதன் சாதனைகள் என்ன? தோல்விகள் என்ன? அதனிடம் காணப் பெறும் குறைபாடுகள் என்ன? ஐ. நா. வின் சாதனைப் பட்டியல் நீண்டதல்லவாயினும் அது சில குறிப்பிடத் தகுந்த வெற்றிகளை ஈட்டியுள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது. பல சமயங்களில் வலுத்தாக்குதல்களை முறியடித்துப் பல போர்களைத் தடுத்து அமைதியை நிலைநாட்டியுள்ளது. ஐ. நா. 1949 ஆம் ஆண்டில் டச்சு ஏகாதிபத்தியத்திற் கெதிராகப் போராடி வந்த இந்தோனேஷியாவிற்கு விடுதலை வாங்கித் தருவதில் வெற்றி பெற்று அமைதியைக் காத்தது. பாலஸ்தீன நாட்டில் யூதர்களுக்கும் (Jews) அரேபியர்களுக்கும் இடையே நடந்துவந்த சண்டையை விலக்கி பெரும் போர் ஒன்று மூளாமல் பார்த்துக் கொண்டது. 1950 ஆம் ஆண்டில் தென் கொரியாவை வட கொரியா தாக்கி அதன் மூலமாக உலகப்போர் எழும் அபாயம் ஏற்பட்டது. தென் கொரியாவிற் கெதிரான ஆக்ரமிப்பினைத் தடுத்து நிறுத்துவதற்காக ஐ. நா. படைகளை அனுப்பி வெற்றி கண்டது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானத்திற்கும் இடையேயான காஷ்மீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க முடியவில்லை யென்றாலும் போர்த் தீ பரவாமல் பார்த்துக் கொண்டது. நாடுகளுக்கிடையே எழும் வேற்றுமைகளைக் களைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உலக மக்களின் கருத்தினை உருவாக்குவதில் ஐ. நா. பல முறை வெற்றி கண்டுள்ளது. இந்த வகையில் 1956 ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் தகராறில் பிரிட்டனும் பிரான்ஸும் எகிப்தைத் தாக்க முற்பட்டபோது ஐ. நா. பயனுள்ள வகையில் தலையிட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தது. 1964 ஆம் ஆண்டு சைப்ரஸ் விவகாரத்தில் தலையிட்டு தீர்வு கண்டது. 1965 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானத்திற்கும் இடையே எழுந்த பூசலைத் தடுத்து நிறுத்தியது. இதற்கிடையில் கிரீஸுக்கும் அதன் அண்டை

நாடுகளான அல்பேனியா, பல்கேரியா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளுக்கிடையேயான பிணக்கை நீக்கிப் பால்கன் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டிடவும், சிரியா, லெபனான் ஆகிய நாடுகள் அந்நிய நாட்டுப் படையினரிடமிருந்து விடுதலை பெறவும், காங்கோ போன்ற பகுதிகளில் அமைதி காக்கும் படைகளின் (Peace Keeping Force) துணைகொண்டு குருதி ஆறு பெருகாமல் தடுக்கவும் ஐ. நா. அரும்பணியாற்றியிருக்கின்றது. ஆனால் அதனை உருவாக்கியவர் எதிர்பார்த்த அளவிற்கு அது அரசியல் துறையில் வெற்றி பெறவில்லை. தனது உறுப்பு நாடுகளின் தேசிய ஆசைகளை முற்றிலும் கட்டுப்படுத்த அதனால் முடியவில்லை. குறிப்பாக வல்லரசுகள் நேரடியாகத் தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உறுதியாகச் செயல்பட முடியவில்லை. ஐ. நா. வின் விதிகளை மீறிப் படையெடுப்புகளை நடத்திய போது பயனுள்ள வகையில் தடை செய்யக்கூடவில்லை. உதாரணமாக செக்கோஸ்லவாக்கியாவில் சோவியத் ருஷியாவின் ஆக்ரமிப்பு, வியட்நாமில் அமெரிக்காவின் ராணுவத் தலையீடு, மலேயா மீது இந்தோனேஷியா நடத்திய வலுத்தாக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சில உறுப்பு நாடுகள் ஒத்துழைப்பு தராததால் காங்கோ, வியட்நாம் போன்ற இடங்களில் அமைதிகாக்கும் பணியும் அதிக வெற்றி பெறவில்லை. 1967—1970 ஆண்டுகளுக்கிடையேயான அரேபிய-இஸ்ரேல் சண்டையில் ஐ. நா. பயனுள்ள வகையில் தலையிடக் கூடவில்லை. இத்தகைய தோல்விகளுக்கு முக்கிய காரணம் பெரும் வல்லரசுகளுக் கிடையேயான போட்டியும் பொறுமையுமே. வல்லரசுகளின் ஒத்துழையாமையும் அவைகளிடமுள்ள வெட்டுதி காரமும் பல பிரச்சினைகளில் ஐ. நா. வைச் செயலிழக்கச் செய்துள்ளன.

ஆயினும் பொருளாதாரத் துறையில் ஐ. நா. வின் பணிகள் அளவிடற்கரியன. ஐ. நா. வில் பணிபுரியும் அலுவலர்களில் அநேகமாக இருபதில் பதினேழு பேர்களும், ஒவ்வொரு ஐ. நா. டாலரிலும் 93 சென்டுகளும் பொருளாதார, சமூக தொழில் நுட்பப் பணிகளுக்காகப் பயன்படுகின்றன என அமெரிக்க வெளி நாட்டு அமைச்சரான டீன் ரஸ்க் (Dean Rusk) குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது. ஐரோப்பா, தென் அமெரிக்கா, ஆசியா ஆகிய பகுதிகளுக்கென பொருளாதாரக் குழுக்களை நியமித்து அங்குள்ள நாடுகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்த்து வைக்கப் பாடுபட்டு வந்துள்ளது. எடுத்துக் காட்டாக, ஆசியா மற்றும் தூரக் கிழக்கிற்கான ஐ. நா. வின் பொருளாதாரக்குழு (ECAFE) வின் பணிகளைக் குறிப்பிடலாம். பொதுச் சபையின் கொள்கைகளுக்கிணங்க பொருளாதார சமூக அவை

யின் மேற்பார்வையில் பதினாறு கிளை நிறுவனங்கள் சேவை புரிந்து வருகின்றன, உணவு உற்பத்தியைப் பெருக்குதல், வாணிபத்தை வளர்த்தல், பின் தங்கிய நாடுகளில் தொழிற் பயிற்சி அளித்தல் ஆகியவற்றில் இவை அக்கறை காட்டி வருகின்றன. ஐ. நா. வின் சமுதாயப் பணிகளும் போற்றுதற்குரியன. உலக சுகாதாரத்தைப் பேணுதல், தொத்து நோய்களை ஒழித்தல் போன்றவற்றில் உலக சுகாதார நிறுவனம் அரும்பணியாற்றி வருகின்றது. குழந்தைகள், பெண்கள், தொழிலாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்க அயராது உழைத்து வருகின்றது. பழம் பெரும் நாகரீகச் சின்னங்களைப் பாதுகாக்கும் பணியிலும் யுனெஸ்கோ ஈடுபட்டு வருகின்றது. வல்லரசுகள் தங்களது கெடுபிடிப் போருக்கான விவாதக் கூடமாக ஐ. நா. வை மாற்றுமல் உள்ளபடியே ஒத்துழைப்பதன் மூலமாகவும், உலகின் அமைதியின்மைக்கு முதற் காரணம் சமுதாய, பொருளாதார நெருக்கடியே என்பதை நன்குணர்ந்து வறுமையை ஓட்டி வளத்தைப் பெருக்குவதன் மூலமாகவும் மேலும் சிறந்த முறையில் மனித சமுதாயத்தின் பிரம்பாட்டிற்கு ஐ. நா. சபை பணியாற்ற முடியும். அதனிடம் சில பல குறைகள் காணப்படினும் போட்டியும், பொறுமையும் தன்னலமும் குறுகிய தேசியப் பற்றும் மலிந்த இன்றைய உலகில், உலக நாடுகளுக்கு, குறிப்பாகப் பின்தங்கிய நாடுகளுக்கும், சிறு நாடுகளுக்கும் நம்பிக்கை ஊட்டும் ஒரே நிறுவனம் ஐ. நா. என்பதில் ஐயம் ஏதுமில்லை.

22. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐரோப்பா

I

இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஐரோப்பிய நாடுகளின் நிலை என்ன? பழி வாங்கும் பண்பிலே உருவாகிப் பெரும் அழி வினைக் கொண்டு வந்த இப்போரின் பாதகமான விளைவுகளி லிருந்து அவை எப்படி மீண்டன? பழைமையிலேயே புரண்டு கொண்டிருந்தனவா அல்லது புத்துணர்ச்சி பெற்று புதுமைப் பொலிவுடன் திகழ்கின்றனவா? தனி நாடுகளின் தகு நிலை என்ன? நாடுகளிடையே ஒற்றுமை உருவாகியுள்ளதா? வேற் றுமை வளர்ந்திருக்கின்றதா? இவை குறித்து இவ்வியலில் சிறிது காண்போம். போரைத் தொடர்ந்து வந்த ஆண்டுகள் பெரும் பிரச்சினைகள் பலவற்றைத் தோற்றுவித்த ஆண்டுகளாகும். அரசியல் போராட்டம், பொருளாதார சமூகச் சீர்குலைவுகள், தனிப்பட்ட நாடுகளின் சொந்தச் சிக்கல்கள், அமைப்பு ரீதியான கோட்பாட்டு அளவிலான தடைகள் காரணமாக ஐரோப்பா இரண்டு பட்டதால் கடுமையாயின. வெற்றி பெற்ற நாடுகளும் தோல்வி கண்ட நாடுகளும் அழிவு என்னும் அரக்கன் பிடியில் சிக்கித் தவித்த வண்ண மிருந்தன. பகைமையை மறந்து புனர் நிர் மாணப் பணிகளில் நாட்டம் செலுத்தலாயின. சோவியத் ருஷியா வின் தலைமையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அரசியல் ஒற்றுமை யும் பொருளாதாரப் பொது நோக்கும் கொண்டு புது வாழ்வினை நோக்கிப் பயணம் செய்ய முற்பட்டன. அமெரிக்காவின் ஆதர வுடன் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஓரளவு பரிவுணர்வும், பொருளாதார ஒத்துழைப்பும் கொண்டு போரில் பெற்ற புண்களை ஆற்றி, புத்துயிர் பெற்றுப் பொலியத் தொடங்கின. வல்லரசாக விளங்கியவை வலுக்குன்றி இரண்டாம் தர, மூன்றும் தர சக்தி களாக மாறி உலகின் தலைமையிடத்தை அமெரிக்க ஐக்கிய நாடு களிடத்தும் சோவியத் ருஷியாவிடத்தும் தந்துவிட்டுத் தடுமாறும் நிலையும் தோன்றியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் தனி நாடுகள் சிலவற்றின் நிலை என்னவென்பதை இனிச் சிறிது காண்போம்.

II

கிரேட் பிரிட்டன்

போரில் வெற்றி பெற்ற போதிலும் பெரும் சேதத்திற்கு உள்ளாகியிருந்தது கிரேட் பிரிட்டன். அதன் பொருளாதாரம் சீர் குலைந்திருந்தது. அதன் வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்புகளெல்லாம் கரைந்து விட்டன. பொருளாதார வளங்கள் குன்றி விட்டன. இத்தகைய சூழ்நிலையில் போரின் கடைசி மாதங்களில் அங்கே அரசியல் மாற்றம் வந்தது. போரின்போது பெருந்தொண்டாற்றி நாட்டையும், நாட்டின் மானத்தையும் காத்த வெற்றி வீரர் வின்ஸ்டன் சர்ச்சில் 1945 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியுற்றுத் தொழிற் கட்சி அரசாங்கம் அட்லி (Atlee) யின் தலைமையில் இயங்கத் தொடங்கியது. நாட்டு மக்கள் செய்நன்றி மறந்து சர்ச்சிலைப் பதவியிலிருந்து இறக்கவில்லை. உண்மையில் அவரிடம் நம்பிக்கையும் பெருமதிப்பும் கொண்டிருந்தனர். இருப்பினும் பெரும்பான்மையான மக்கள் தீவிரமான பல சீர்திருத்தங்களை வேண்டி நின்றனர். கன்சர்வேடிவ் கட்சியின் பயனற்ற சமுதாயக் கொள்கையும், பொருளாதார ஜனநாயகக் கருத்தும் தொழிற் கட்சி வெற்றி பெற வாய்ப்பளித்தன. ஆறுண்டுகள் பதவியிலிருந்த அட்லியின் அரசாங்கம் சமுதாயச் சீர்திருத்தத் திட்டத்தின் மூலமாகவும் தொழிற்சாலைகளைத் திருத்தி அமைத்தல் வாயிலாகவும் வேண்வாக்களை ஒருவாறு நிறைவேற்றி வைக்க முனைந்தது. உள் நாட்டு வெளி நாட்டு விவகாரங்கள் தொடர்பான பெரிய சீர்திருத்தங்களைக் கொண்டுவர முற்பட்டது. அது சோசலிஸக் கொள்கையைக் கொண்டிருந்த போதிலும் சோவியத் யூனியனின் பொதுவுடைமைக் கொள்கையைக் கடைப் பிடிக்கவில்லை. பொதுநல அரசை (Welfare State) வலுப்படுத்துவதே அதன் அடிப்படைக் கொள்கையாக அமைந்தது. 1946 ஆம் ஆண்டு நிறைவேறிய தேசியக் காப்புறுதிச் சட்டம் (National Insurance Act) மக்களின் நல்வாழ்வு, முதுமையில் பாதுகாப்பு, வேலையற்றோருக்கு உதவி போன்றவற்றிற்கு வகை செய்தது. இதைத் தொடர்ந்து தேசிய உதவிச்சட்டம் தேசிய சுகாதாரப் பணிச் சட்டம் (National Health Service Act) ஆகியவற்றின் வாயிலாக மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்பட வாய்ப்பளிக்க முயன்றது. நாட்டின் வறுமையைப் போக்கி வளத்தைப் பெருக்குவதற்காக உற்பத்தி சாதனங்களை நவீனமாக்கித் திருத்தி அமைக்க முன் வந்தது. பல சட்டங்களைக் கொண்டு வந்து அடிப்படைத் தொழில்களைத் தேசிய மயமாக்கியது. இங்கிலாந்து பாங்க், விமானப் போக்குவரத்து, நிலக்கரிச் சுரங்கங்கள், சாலைப் போக்குவரத்து, இரும்பு எஃகுத்

தொழில் தேசீய மயமாயின. அமெரிக்கா, கனடா போன்ற நாடு களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு பொருளாதாரத்தைச் சீர் செய்வதிலும் தொழிற் கட்சி அரசாங்கம் அக்கறை காட்டியது. கிரேட் பிரிட்டனின் வெளிநாட்டுக் கொள்கைக்காகவும் வகுக்கப் பெற்ற திட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. எகிப்திலிருந்து படைகளை விலக்கிக் கொள்ளுதல், இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்குதல் போன்ற தனிச் சிறப்புடைய, கடினமான முடிவுகளை தொழிற் கட்சி அரசாங்கம் எடுத்தது. 1951ல் பதவிக்கு வந்த சர்ச்சிலின் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சியின் அரசாங்கம் எஃகுத் தொழில், சாலைப் போக்குவரத்து ஆகிய தொழில்களைத் தனியார் பொறுப்பில் கொண்டு வந்த போதிலும் பழைய முதலா வித்துவ முறையை மீட்கவில்லை. மிதமான புரட்சியை ஏற்றுக் கொண்டு விரிவான பொது நல அரசாங்கத்தை அமைத்தது. 1955ஆம் ஆண்டிலும், 1959ஆம் ஆண்டிலும் நடைபெற்ற தேர் தல்களில் கன்சர்வேடிவ் கட்சியே வெற்றி பெற்று அரசாங்கத்தை நிறுவியது. 1956ஆம் ஆண்டு சூயஸ் சிக்கல் எழுந்தது. எகிப் தில் தேசீய உணர்ச்சி பொங்க சூயஸ் கால்வாயை நாஸர் தேசிய மாக்கிய போது பிரான்ஸ், இஸ்ரேல் ஆகியவற்றுடன் இணைந்து பிரிட்டன் எகிப்தின் மீது போர் தொடுத்தது. ஆனால் ஐ. நா. வின் பயனுள்ள தலையீட்டினால் போர் நின்றது. சூயஸ் சிக்கல் காரணமாக பிரதமர் அந்தோணி ஈடன் (Anthony Eden) பதவி துறந்து ஹெரால்டு மாக் மில்லன் பிரதமராகி, நாடு பொருளா தாரச் செழிப்பை நோக்கிச் செல்வதைக் கண்டார். கட்டுப்பாடு களைத் தளர்த்தியும், வரிச்சுமையைக் குறைத்தும் வளம் பெருக வகை செய்தார். ஆயினும் ஆப்பிரிக்க விவகாரங்களில் குழப்பம், அமெரிக்கா உடனான பாதுகாப்பு ஒப்பந்தம், ஐரோப்பிய பொது வாணிக கூட்டில் சேரும் முயற்சியில் தோல்வி, பாதுகாப்பு அமைச்சர் ஜான் புரோபூமா (John Profumo) வின் காதல் லீலை கள் போன்றவற்றினாலும், பொருளாதார மந்தம் ஏற்பட்ட தாலும் மாக் மில்லனும் அவரது கன்சர்வேடிவ் கட்சியும் செல் வாக்கிழந்து ஹெரால்டு வில்சன் 1964ஆம் ஆண்டில் தொழிற் கட்சி அரசாங்கம் தோன்ற ஏதுவாயின. நடைமுறை சாத்திய மான கொள்கைகளை வகுத்த போதிலும் பொருளாதார மந்தம் நீங்காத நிலையில் நாணய மதிப்பு குறைப்பு, ரொடீஷிய சிக்கல், வட அயர்லாந்தில் அமைதிக் குலைவு ஆகியவற்றினால் தொழிற் கட்சி அரசாங்கம் வீழ்ந்து 1970ஆம் ஆண்டில் எட்வர்டு ஹீத் (Edwarrd Heath) தலைமையில் கன்சர்வேடிவ்கள் மீண்டும் பதவிக்கு வந்தனர். இங்ஙனம் போருக்குப் பின் பிரிட்டன் பல அரசியல் பொருளாதார நெருக்கடிகளைக் கடந்து தனது பேரரசுப் பகுதிகளை இழந்து இரண்டாந்தர வல்லரசாக மாறியபோதிலும்

உள்நாட்டில் தீவிரக் கொள்கைகளைத் தவிர்த்து முடியாட்சிச் சின்னத்திற்கு மதிப்பளித்து மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே பொது நல அரசாங்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருகின்றது.

III

பிரான்ஸ்

பேரவமானத்திலிருந்து தனது சுதந்திரத்தை மீட்க உயிர்த் தெழுந்த பிரான்ஸ் ஐ. நா. அமைவதற்கு இசைவளித்த ஐந்து வல்லரசுகளில் ஒன்றாக உருவெடுத்தது. அச்சு நாடுகளின் ஆக்ரமிப்பைக் கடுமையாக எதிர்த்து வந்த பிரான்ஸ் விடுதலை இயக்கத்தின் தலைவரான தளபதி சார்லஸ் டிகால் போரைத் தொடர்ந்து அரசாங்கத்தை அமைத்தார். ஜெர்மனியுடன் ஒத்துழைத்த விச்சி (Vichy) அரசாங்கத் தலைவர்கள் தண்டனைக்குள்ளானார்கள். வயது முதிர்ந்த மார்ஷல் பிடெய்ன் சிறைக்குச் சென்றார். அவரது துணைவர்களாக இருந்த லவால் போன்றவர்கள் கொல்லப்பட்டனர். போரின் அழிவுகளிலிருந்து பிரான்ஸை மீட்கும் பணியை டிகாலின் தலைமையிலான தற்காலிக அரசாங்கம் செய்யத் துவங்கியது. சுரங்கங்கள், அடிப்படைத் தொழில்கள் ஆகியவையும், பொருளாதாரப் புனர் நிர்மாணத்திற்கு வேண்டிய கடன் வசதிகளும் தேசியமயமாயின. பிரஞ்சு உரிமையை மீட்டு அதனை உயிர்ப்பிப்பதற்கு டிகாலின் பணியைப் பொதுவாக ஏற்றுக் கொண்ட போதிலும் நாட்டின் புது வாழ்வை அமைப்பதற்கு அவரைத் தலைவராக ஏற்க மக்கள் மறுத்தனர். புதிய அரசியல் அமைப்பை உருவாக்கப் புதிதாகக் கூடிய தேசிய அவை டிகாலின் திட்டத்தைப் புறக்கணித்து விட்டு நான்காவது பிரஞ்சு குடியரசு அமைப்பினை நாட்டிற்களித்தது. பன்னிரண்டாண்டுகள் விளங்கிய இக்குடியரசு அமைப்பின் கீழ் வியத்தகு முறையில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டது. அமெரிக்காவின் மார்ஷல் உதவித் திட்டம், அடிப்படைத் தொழில்களைத் தேசியமயமாக்குதல், பயிர்த் தொழிலிலும், தொழிற்சாலைகளிலும் நவீன முறைகளைப் புகுத்துதல் போன்றவற்றின் துணைகொண்டு போரினால் ஏற்பட்ட இழப்புக்களைச் சரிசெய்து வளமான வாழ்வை நோக்கி முன்னேறியது. நாட்டு உற்பத்தியில் 49 சதம் அதிகரித்தது. மக்கள் தொகை பெருகியது. மூலதனம் 142 சதவீதம் அதிகரித்தது. நாட்டு மக்கள் நம்பிக்கையுடன் நாகரீக வாழ்க்கையைத் துய்க்க முற்பட்டனர். பொருளாதாரத்தில் போற்றத் தகுந்த வளர்ச்சி ஏற்பட்டபோதிலும் அரசியலில் அமைதியின்மை, அரசாங்கத்தில்

உறுதியின்மை பிரான்ஸை வாட்டியது. பல்வேறு கட்சிகளின் பயனற்ற கூட்டு முயற்சியால் எழுந்த அமைச்சர் அவைகள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தன. நான்காவது குடியரசு அமைப்பு நடைமுறையிலிருந்த பன்னிரண்டு ஆண்டுகளில் இருபத்தைந்து மந்திரிசபைகள் பதவி ஏற்றன என்பதைக் காணும் போது அரசியல் அவலம் நன்கு விளங்கும். தேசிய அவை உறுப் பினர்களின் நேரமும் நினைப்பும் அரசாங்கம் அமைப்பதிலேயே கழிந்திருக்க வேண்டும். தங்கள் நாட்டிலோ அல்லது வெளிநாடு களிலோ நடப்பவை குறித்து அவர்கள் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. இதனால் பாராளுமன்ற நிறுவனங்களின் மதிப்பு குறைந்து நிர்வாகத் துறைகளின் செல்வாக்கு பெருகியது. பாராளுமன்றத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் பொறுப் புகளை ஏற்க முன்வரவில்லை. இந்தோசீன போன்ற விவகாரங் களில் மிகுந்த குழப்பமும், அல்ஜீரிய விவகாரத்தில் உறுதியற்ற நிலையும் புரட்சியைத் தோற்றுவித்தன. 1958 ஆம் ஆண்டில் அல்ஜியர்ஸில் ராணுவ அதிகாரிகள் ஆட்சியைக் கைப்பற்றி பிரஞ்சு அரசாங்கத்தை நடத்த டிகாலை அழைக்க வேண்டு மென்று வற்புறுத்தினர். டிகாலும் அரசியல் பொறுப்பேற்க முன் வந்தார். புதிய அரசியல் அமைப்பு ஒன்றை அவர் கொண்டு வந்து அதற்கு நாட்டு மக்களின் இசைவினைப் பெற்றார். இதுவே ஐந்தாவது குடியரசு என அழைக்கப்படுகின்றது. நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்பெற்ற சட்டமன்றம், மறைமுகத் தேர்தலின் மூலம் வரும் செனெட் சபை, ஏழாண்டுகளுக்கொரு முறை தேர்ந் தெடுக்கப் பெறும் அதிகாரம் மிகுந்த பிரசிடெண்ட் ஆகியவை புதிய அரசியமைப்பில் இடம் பெற்றன. பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற டிகாலின் அதிகாரங்கள் பெருகின. நிலையான அரசாங்கம் தோன்றியது. அல்ஜீரியப் பிரச்சினை தீர்ந்தது. பொருளாதார வளம் கொழித்தது. படைபலம் பெருகியது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் சக்தி வாய்ந்த நாடாக, சுதந்திரக் கொள்கை பின்பற்றும் நாடாக பீடு நடை போட்டது பிரான்ஸ். டிகாலின் அதிகார வளர்ச்சியைப் பொறுத மிதவாதிகளும் படைத்தலைவர்கள் சிலரும் அவரை அழிக்கும் சதித் திட்டங்களிலும் ஈடுபட்டபோதிலும் நாட்டுமக்கள் தங்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்தது பற்றியும் நாட்டின் மதிப்பு உயர்ந் தது குறித்தும் மன நிறைவு கொண்டனர். அதனால் டிகால் நினைத்தவாறு செயல்பட முடிந்தது. 1958 ஆம் ஆண்டில் பிராங் கின் மதிப்பைக் குறைத்தல், ஐரோப்பிய பொதுச் சந்தைக் கூட்டாளிகள் கோரியபடி பொருள்கள் மீதான வரிக்குறைப்பு செய்தல் போன்ற துணிகரத் திட்டங்களைக் கொண்டு வந்த அவர் உற்பத்தியை மேலும் பெருக்க உதவினார். பிரான்சின் வெளி

நாட்டு வாணிபம் இரண்டு மடங்காகப் பெருகியது. ஆயினும் பொருளாதாரப் பெருக்கம் மக்கள் அனைவரையும் சென்றடைய வில்லை. சமுதாய ஏற்றத் தாழ்வுகளும், பூர்ஷ்வாக்களின் தனி யுரிமை போன்றவையும் தொழிலாளரிடையேயும் சாதாரண மக்களிடையேயும் அதிருப்தியை வளர்த்தன. நாட்டின் செல்வ நிலையும் சிறிதளவு சீர் கெட்டது. 1968 ஆம் ஆண்டில் புதிய அர சியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து மக்களுடைய நம்பிக்கை வாக்கினை டிகால் கோரிய போது அவருக்குத் தோல்வி கிடைத்தது. எனவே பல தீராத பிரச்சினைகளுக் கிடையே அவர் 1969 ஆம் ஆண்டு பதவியிலிருந்து விலகினர். இருப்பினும் பல ஆண்டுகள் பிரான்ஸின் தலைமைப் பொறுப்பை ஏற்று, பொருளாதார வளத்தைப் பெருக்கி, அரசியலில் உறுதிப்பாட்டினை நிலைநாட்டி, அமெரிக்காவின் செல்வாக்கிற்கு உட்படாமல் தமது நாட்டை உள்ளபடியே வலிமை பொருந்திய நாடாக வளர்த்து விட்ட பெருமை டிகாலைச் சாரும்.

IV

பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், நார்வே, கிரீஸ்

பிரான்ஸைப் போலவே பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், நார்வே கிரீஸ் போன்ற நாடுகள் ஜெர்மானியரின் ஆதிக்கத்தில் பொம்மை அரசுகளின் ஆட்சிக்குட்பட்டு அவதியுற்றிருந்தன. ஐரோப்பாவின் மேற்கிலும் தெற்கிலும் இருந்த இச்சிறிய நாடுகள் நேச நாடுகளின் உதவியுடன் சுதந்திரம் பெற்றன. ஆயினும் சுதந்திரமும் சுயாட்சியும் பெற்ற இந்நாடுகள் பல அரசியல் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்கவேண்டிய நிலையில் இருந்தன. பெல்ஜியத்தில், போரின்போது மன்னர் மூன்றும் லியோபால்டின் செயல்கள் வன்மையாக எதிர்க்கப் பட்டன. அவரது வல்லாட்சி முயற்சிகளும், அரசியார் இறந்ததும் சாதாரண பிளீமியப் பெண்ணை அவர் மணந்ததும் மக்களிடையே அதிருப்தியை வளர்த் தன. 1950 ஆம் ஆண்டில் நடந்த பொது மக்கள் வாக்கெடுப் பில் அவருக்கு ஆதரவு கிடைத்த போதிலும் அதன் பிறகு நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களின் விளைவாக அடுத்த ஆண்டு அவர் பட்டம் துறக்க அவரது மகன் படோய்ன் (Boudovin) பதவி ஏற்றார். குடியேற்ற நாடான காங்கோவிற்கு விடுதலை வழங்கியபோது சில தொல்லைகள் எழுந்தபோதிலும் பொதுவாக அரசியலில் அமைதி ஏற்பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் மிக விரைவில் பொருளாதார வளம் கொழிக்கும் நாடாக மாறியது பெல்ஜியம் தான். ஹாலந்து, லக்சம்பர்க் போன்ற நாடுகளுடன் தடையிலா

வாணிபத்திற்கும், தொழிலாளர்கள் பரிமாற்றத்திற்கும் பெனிலக்ஸ் (Benelux) பொருளாதார ஒன்றியத்தை உருவாக்கி உலகம் வியக்கும் வளம் கொழிக்கும் நாடாக அது விளங்குகின்றது.

ஹாலந்தில் பழைய ஆட்சி மீட்கப்பட்டது. சட்ட வரம்பிற்குட்பட்ட முடியாட்சி அங்கு மீண்டும் ஏற்பட்டது. அரசி வில்ஹெமினு (Wilhelmina) சிறிது காலம் ஆட்சி செய்தபின் இளவரசி ஜூலியானுவிற்கு முடிசூட்டிவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டார். டச்சுப் பேரரசில் இணைந்திருந்த இந்தோனேஷியா விடுதலை பெற்றபோது நாட்டில் கொந்தளிப்பு இருந்தது. இந்தோனேஷியாவின் விடுதலை வேட்கையை அடக்குவதற்குச் செய்த முயற்சிகள் வீணாயின. ஐ. நா. வின் தலையீட்டினால் பெரும் போர் மூளுவது தடுக்கப்பெற்று இந்தோனேஷியா சுதந்திரம் பெற்றது. மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளைப்போலவே பொருளாதார ஒத்துழைப்புமூலமாக ஹாலந்தும் விரைவாக முன்னேறியது.

டென்மார்க்கிலும் நார்வேயிலும் கம்யூனிஸ்டுகள் எதிர்த்த போதும் முடியாட்சிகள் மீண்டும் தோன்றின. 1947ஆம் ஆண்டில் டென்மார்க் மன்னர் பத்தாம் கிறிஸ்டியன் இறந்ததும் அவரது மகன் ஒன்பதாம் பிரடரிக் எவ்வித இடருமின்றி அரசுகட்டில் ஏறினார். அவர் தமது நாட்டு மக்களின் நன்மதிப்பையும் பற்றுறுதியையும் பெற்று ஆட்சி செய்து வருகின்றார். நார்வேயிலும் முடியாட்சி விளங்கி வருகின்றது. அதன் அரசர் ஏழாம் ஹாகோன் (Haakon) 1957-ல் இறந்தபோது ஐந்தாம் ஓலாப் (Olaf V) பதவியேற்றார். இவ்விரண்டு நாடுகளும் ஜெர்மனியின் ஆக்ரமிப்பின் விளைவுகளிலிருந்து விரைவில் விடுபட்டன. நார்டிக் சுங்க ஒன்றியத்தின் மூலமாகப் பல நன்மைகள் பெற்று பொருளாதாரத் துறையில் முன்னேறி வருகின்றன.

போருக்குப் பிறகு கிரீஸின் நிலை அவ்வளவு நிறைவளிப்பதாக இல்லை. போரின் தொடக்கத்தில் இத்தாலியரை எதிர்த்துப் போராடியதற்காக முழுமையான பாராட்டுதலையும், பின்னர் ஜெர்மானியர் ஆதிக்கத்தினால் அனுபவித்த துன்பங்களைப்பற்றி இரக்கத்தையும் பெற்றபோதிலும், ஐரோப்பாவின் கிழக்கு மற்றும் மேற்கு வல்லரசுகளின் முரண்பாட்டினால் கிரீஸில் அமைதியான வளர்ச்சி ஏற்படுவது கடினமாகியது. ஜெர்மானியர் வெளியேறியவுடன் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைப்பற்றும் நிலை அங்கு இருந்தது. ஆனால், 1944ஆம் ஆண்டு பிரிட்டனின் தலையீட்டினால் அவ்வாறு நடைபெறவில்லை. ஏதென்ஸ் நகரம் மட்டும் கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டில் வந்திருக்குமானால் கிரீஸின் வரலாறு

வேறுவிதமாக அமைந்திருக்கும். உள் நாட்டுப் போர் எழுந்தது. சோவியத் யூனியனும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் கம்யூனிஸ்டுகளுக்கு உதவ வந்தனர். பிரிட்டனும் அமெரிக்காவும் கிரீஸின் ஆட்சியாளருக்கு உதவின; இறுதியில் கம்யூனிஸ்டுகள் ஒடுக்கப்பட்டனர். முதலாம் பால் மன்னர் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தினர். ஆயினும் சைப்ரஸ் சிக்கல் எழுந்தபோது தேசிய உணர்ச்சி பெருகியது. மன்னர் ஆதரித்த பழமை வாதிகளுக்கும் ஜனநாயக இடதுசாரிக் கட்சிகளுக்குமிடையே பூசல் எழுந்தது. 1964ஆம் ஆண்டில் கான்ஸ்டன்டைன் பட்டத்திற்கு வந்தபோது அவருக்கும் முதலமைச்சர் பாம்பட்ரூவுக்கும் இடையே பகைமை வளர்ந்து அடுத்த ஆண்டில் அமைச்சர் பதவி துறக்க வேண்டியதாயிற்று. நாடு குழப்பத்தில் ஆழ்ந்திருந்த சமயத்தில் 1967ஆம் ஆண்டு தேர்தல் நடந்தது. அப்போது சில ராணுவ அதிகாரிகள் அரசர் பேரால் ஆட்சியைக் கைப்பற்றினர். அவர்களது கெடுபிடி ஆட்சியை விரும்பாத மன்னர் கான்ஸ்டன்டைன் அவர்களுக்கு எதிராகப் புரட்சிசெய்ய முயன்று தாமே நாட்டை விட்டு வெளியேறினர். ராணுவ அதிகாரிகள் சர்வாதிகாரப்போக்கில் நாட்டை ஆளத் தொடங்கினர்.

V

இனி, போரின்போது நடுநிலைவகித்த நாடுகளான ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து, ஏரா (Eire), ஸ்பெயின், போர்த்துகல் ஆகியவற்றின் வளர்ச்சி குறித்துச் சிறிது பார்க்கலாம். ஸ்வீடனும் ஸ்விட்சர்லாந்தும் போரினால் பெரும் பயனடைந்தன. அவை உற்பத்தி செய்த சில முக்கியமான பொருள்களை ஜெர்மனியும் நேச நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு வாங்கியதால் அவற்றின் பொருளாதாரம் பெருகியது. போருக்குப் பிறகும் ஸ்விட்சர்லாந்தின் வளம் குன்றவில்லை. சோவியத் யூனியனுடன் நெருங்கிய வாணிபத் தொடர்பு கொண்டதால் ஸ்வீடனும் தொடர்ந்து செல்வ வளம் கொழிக்கும் நாடாக விளங்கியது. ஸ்வீடனில் ருஷியா உளவு வேலை பார்த்தது என்பதற்காக 1964ஆம் ஆண்டில் இவ்விரு நாடுகளுக்கிடையேயான உறவில் நெருக்கடி தோன்றியது. ஆனால், ருஷியப் பிரதமர் குருஷாவ் அவர்களே நேரில் சென்று நிலைமையைச் சரிசெய்தார். ஸ்வீடனில் முடியாட்சி விளங்கிய போதிலும் சோசலிசக் கட்சியின் தலைவர் எர்லாண்டர் 1970 வரையில் ஆதிக்கம் செலுத்தி வந்தார். செல்வ வளம் கொழிக்கும் ஸ்வீடன் நாடு பொது நல அரசாங்கமாகத் திகழ்ந்து வருகின்றது.

ஆயிரக்கணக்கான ஐரிஷ் வீரர்கள் பிரிட்டன் படையுடன் சேர்ந்து போரிட்டபோதிலும் ஏரா நடுநிலைமை வகிக்கும் நாடாகக் கருதப்பட்டது. பிரிடிஷ் காமன்வெல்த்தில் அங்கம் வகித்திருந்த அது 1949ஆம் ஆண்டில் அந்த அமைப்பிலிருந்து வெளியேறி அயர்லாந்து, குடியரசு எனும் பெயர் பெற்றது. ஐ. நா. வின் உறுப்பு நாடாகி, பயனுள்ள வகையில் செயல்பட்டு வருகின்றது.

ஹிட்லரின் கெடுபிடிக்கிடையேயும் ஸ்பெயின் நாட்டு அதிபர் பிராங்கோ போரில் நடுநிலை வகித்தார். இருப்பினும், போர் முடிந்ததும் 1945-ல் ஐ. நா. வில் ஸ்பெயினுக்கு இடந்தர நேச நாடுகள் இணங்கவில்லை. இதனால் ஸ்பெயினுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இணக்கம் ஏற்படக்கூடவில்லை. வல்லரசுகளுக்கிடையேயான கெடுபிடிப் போர் எழுந்தபோது ஸ்பெயினில் தளங்களை அமைக்க நேட்டோ நாடுகள் விரும்பின. அதனால் சிறிது சிறிதாக அமெரிக்கப் படை உதவியும் பணமும் அந் நாட்டிற்குக் கிடைக்கத் தொடங்கின. பொருளாதார வளர்ச்சியில் ஸ்பெயின் ஓரளவு பின்தங்கியே காணப்படுகிறது. 1947ஆம் ஆண்டு வந்த சட்டப்படி பிராங்கோ தமது ஆயுட்கால முழுவதும் தலைவராக இருக்க வேண்டுமென்றும் தமது வாரிசை அவரே தேர்ந்தெடுப்பது என்றும் முடிவாகியது. இங்ஙனம் பிராங்கோவின் சர்வாதிகாரம் ஸ்பெயினில் ஏற்பட்டது. இருப்பினும், அவ்வப்போது அவரது ஆட்சிக்கு எதிர்ப்புகள் எழுந்தவண்ணமிருந்தன. ஜன நாயகவாதிகளும், வணிகர்களும், தொழிலாளர்களும், மாணவர்களும் அரசாங்கத்திற் கெதிராகக் கிளர்ச்சி செய்தனர். 1955ஆம் ஆண்டில் மாட்ரிட் நகர மாணவர்கள் உரிமைகளுக்காகப் பெருங் கிளர்ச்சியி லீடுபட்டனர். அது ஒடுக்கப்பட்டது. 1967ஆம் ஆண்டில் சீர்திருத்தங்கள் வேண்டுமென்று பெரும் கலகம் எழுந்தது. அது அடக்கப் பெற்றபோதிலும் நிலையான அமைதி ஏற்பட வழியில்லை. 1969ஆம் ஆண்டில் போர்போன் அரச குலத்தைச் சேர்ந்த இளவரசர் ஜான் கார்லோ (Juan Carlos) என்பவரை பிராங்கோ தமது வாரிசாக நியமித்தார். பரந்த மனமும் பகுத்தறிவும் மிக்க இந்த இளவரசர் மக்களுடைய ஆதரவைப் பெற்று நல்லாட்சி நடத்துவார் என்று எதிர்பார்க்கப் பட்டது.

ஸ்பெயினைப்போலவே போர்த்துக்கலும் நடுநிலைமை நாடாயிருந்து நலம் பெற்றது. ஆனால், போர் முடிந்ததும் அதன் பொருளாதாரம் சீர்குலைந்தது. பயிர்த் தொழிலும் தொழில் வளமும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ற வகையில் பெருகவில்லை.

அதனால், அரசாங்கத்திற்கு எதிர்ப்பும் சில சமயங்களில் கிளர்ச்சிகளும் எழுந்தன. போர்த்துக்கல் நாட்டின் சர்வாதிகாரியாக விளங்கிய அன்டோனியோ கார்மோனவும் (Antonio Carmona) அவர் உருவாக்கிய சலசாரும் (Salazar) அடக்கு முறைகளைப் பயன்படுத்தி ஆட்சி செய்துவந்தனர். ஆயினும் 1951ஆம் ஆண்டில் கார்மோனா இறந்ததும் நடைபெற்ற அதிபர் தேர்தலில் சலசாருக்குக் கடுமையான எதிர்ப்பு தோன்றுமளவிற்கு நாட்டின் நிலை சீர்கெட்டிருந்தது. இருப்பினும் தேர்தலில் வெற்றிபெற்ற சலசார் அரசியல் எதிர்ப்பினை ஒடுக்கி, மக்களின் உரிமைகளை முழுதியாகக் கட்டுப்படுத்தி ஒருவகையான பாசிச ஆட்சியை உருவாக்கினார். இந்தியாவில் கோவாவிலும், ஆப்பிரிக்காக் கண்டத்தில் அங்கோலாவிலும் விடுதலை இயக்கங்களை ஒடுக்க முயன்று இறுதியில் தோல்வியே கண்டார். 1956ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தின் உறுதியான படை நடவடிக்கை கோவா விடுதலை பெற உதவியது. 1955ஆம் ஆண்டில் போர்த்துக்கல் ஐ. நா. வில் இடம் பெற்ற போதிலும், 1968ஆம் ஆண்டில் அதிபர் சலசார் ஓய்வெடுத்துக் கொண்டபோதிலும் போர்த்துக்கல் ஒரு சர்வாதிகார நாடாகவே இருந்து வருகின்றது.

VI

பிளவுபட்ட ஜெர்மனி

1945ஆம் ஆண்டு, மே மாதம், 7ஆம் தேதி ஜெர்மனி இறுதியாகச் சரணடைந்தது. அந்த நாடு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்ஸ், சோவியத் யூனியன் ஆகியவற்றின் ஆட்சி அங்கே ஏற்பட்டது. பெர்லின் நகரமும் நான்கு பிரிவுகளாகப் பிரிந்து நான்கு வல்லரசுகளின் படைத் தலைவர்களின் கூட்டுப் பொறுப்பில் வந்தது; பாழடைந்த பெர்லினில் நான்கு வல்லரசுகளின் கூட்டுக் கண்காணிப்புக் குழு உருவானது. ஜெர்மனி நாட்டுப் பிரிவுகளைப் பகிர்ந்துகொண்ட நாடுகள் பின்வரும் பொதுக் குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஜெர்மனியில் நாஸிக் கொள்கையை அழித்தல், படையொழிப்பு செய்தல், போர்த் தளவாடத் தொழிற்சாலைகளைச் சிதைத்தல், மக்களின் மனதை மாற்றுதல், மறு வாழ்விப்புப் பணிகள் நிறைவேறியவுடன் ஒன்றுபட்ட, உரிமை கொண்ட ஜெர்மனியை உருவாக்குதல்போன்ற நோக்கங்களை நேச நாடுகள் கொண்டிருந்தன. ஆனால், வெகு விரைவிலேயே நேச நாடுகளிடையே வேற்றுமை வளர்ந்ததால் இந்நோக்கங்கள் நிறைவேற வழியில்லாமல் போய்விட்டது. பொருளா

தூரப் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டி அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்ஸ் ஆகியவற்றின் ஆதிக்கத்தில் இருந்த ஜெர்மன் பகுதிகளை ஒன்றுக இணைத்துத் தனியாக ஓர் அரசை அமைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக 1949ஆம் ஆண்டு, மே மாதம் மேற்கு ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு (Federal Republic of Western Germany), பான் நகரைத் தலைமைப் பீடமாகக் கொண்டு உதயமாகியது. அதேபோன்று ருஷியாவின் ஆதிக்கத்திலிருந்த பகுதி, அதே ஆண்டு அக்டோபர்த் திங்களில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசாக (German Democratic Republic) உருவெடுத்தது. கிழக்கு பெர்லின் அதன் தலைநகரமாகியது. மேற்கு ஜெர்மனி அரசியல் அமைப்பை உருவாக்கிக் குடியாட்சியை ஏற்றது. 1949ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்று அடினூர் தலைமையில் அரசாங்கத்தை அமைத்தது. கிழக்கு ஜெர்மனியில் ருஷியாவின் ஆதிக்கத்திற்குட்பட்ட கம்யூனிஸ்ட் அரசாங்கம் ஏற்பட்டது. உலகப் போரைத் துவக்கிய ஜெர்மனி, அப்போரினால் பெரும் அழிவிற்குள்ளாகியது. அதன் நகரங்களும் தொழிற்சாலைகளும் நாசமாயின. பெர்லின் நகரம் அடியோடு அழிக்கப்பட்டது. 52 சதவிகிதம் உணவுப் பொருள்களையும் பெருமளவு நிலக்கரியையும் வழங்கிவந்த பகுதி போலந்திற்குச் சென்று விட்டது. அப் பகுதியிலிருந்து 12 மில்லியன் ஜெர்மானியர் அகதிகளாக மேற்கு ஜெர்மனிக்கு வந்தனர். இழப்பீடாகப் பெரும் பொருள் தரவேண்டியிருந்தது. இத்தகைய இடர்பாடுகளுக்கிடையே மேற்கு ஜெர்மனி பொருளாதாரத்தில் புத்துயிர் பெற்று மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே தொழில் வளம் பெற்ற வலிமை பொருந்திய நாடாக வளர்ச்சியடைந்தது விந்தைக் கதைபோலக் காட்சியளிக்கின்றது. ஆரம்ப காலத்தில் அமெரிக்க உதவியும், அரசாங்கத்தின் கொள்கையும், ஜெர்மன் மக்களின் அயராத உழைப்பும் சிக்கனமும் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தன. மார்ஷல் திட்டம் எனும் அமெரிக்க உதவித்திட்டம் ஆரம்பத்தில் கை கொடுத்தது, சான்சலராகப் பதவியேற்ற அடினூர் பதினைந்து ஆண்டுகளுக்கு அயராது உழைத்து, நடைமுறைக்கேற்ற கொள்கைகளை வகுத்து, தோல்வி கண்ட பகை நாட்டினை நன்மதிப்பு பெற்ற நட்பு நாடாக மாற்றியமைத்தார். தேசிய ஒற்றுமை எனும் கானல் நீரை நாடி அவர் ஓடவில்லை. சோவியத் ஆதிக்கத்திலிருந்த பதினேழு மில்லியன் ஜெர்மானியரை மீட்பதில் தமது சக்தியைச் செலவழிக்கவுமில்லை. நேச நாடுகள் விதித்திருந்த தடைகளை விவேகத்துடன் நீக்குவதிலும், நலிந்த நாட்டைச் செப்பனிடுவதிலும், பொருளாதாரத்தை வளர்ப்பதிலும் சக்திகளைச் செலவிட்டார். ஐரோப்பிய அண்டை நாடுகளுடன்

நல்லுறவுகொண்டு ஒத்துழைப்பதன்மூலம் நன்மைபெற முடியு மென அவர் நம்பினார். மேற்கு நாடுகளுடன் பீடர்ஸ்பர்க் உடன்பாட்டினைச் செய்துகொண்டதன் வாயிலாக ஜெர்மன் தொழிற்சாலைகள் அழிக்கப்படுவதைத் தடுத்தார். ரூர் பள்ளத் தாக்கில் பன்னாட்டுக் கண்காணிப்பை ஏற்றுக்கொண்டு அதன் மூலமாகப் பொருளாதார வளர்ச்சிக்கு வழி தேடுவதுடன் மேற்கத்திய நாடுகளின் நம்பிக்கையை வளர்ப்பதில் வெற்றி பெற்றார். ஐரோப்பிய நாடுகளிடையே ஒற்றுமையும் ஒத்துழைப் பும் இருந்தால்தான் புதிய ஐரோப்பாவை உருவாக்க முடியு மென்பது அவரது திடமான நம்பிக்கை. நிலக்கரி மற்றும் எஃகுக் கூட்டு, ஐரோப்பிய பாதுகாப்புக் கூட்டு, ஐரோப்பிய பொது வாணிபக்கூட்டு ஆகியவற்றில் ஆர்வத்தோடு பங்கு கொண்டார். இவற்றினூல் நாட்டு மக்களின் நீங்காத ஆதரவைப் பெற்றதுடன் நட்பு நாடுகளுடன் நல்லுறவை மேலும் வளர்த்துக் கொண்டார். அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்குமிடையேயான கெடு பிடிப்போரை தமது நாட்டிற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, மேற்கு நாடுகளின் கூட்டில் முக்கியமான இடத்தினைப் பெற்றார். 1953, 1957, 1961ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் தொடர்ந்து அவர் வெற்றி பெற்றது நாட்டு மக்க ளிடையே அவருக்கிருந்த செல்வாக்கினைப் பறைசாற்றுகின்றது. குறுகிய போர் ஆர்வமுள்ள தேசிய உணர்விற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஜனநாயகக் குடியரசை நிறுவி நாட்டை முன்னேற் றப்பாதையில் நடத்திச்சென்றார். இவற்றினுலெல்லாம் 1953 ஆம் ஆண்டில் மேற்கு நாடுகளிடையே மேற்கு ஜெர்மனி மூன்றா வது இடத்தை வகிக்க முடிந்தது. பதினைந்து ஆண்டுகளில் போருக்கு முன் இருந்ததைப்போல் இரண்டரை மடங்கு உற்பத்தி பெருகியது. ஏற்றுமதி 76 சதவீதம் உயர்ந்தது. பண வீக்கத் தொல்லையோ, தொழிலாளர் கிளர்ச்சிகளோ, இல்லாமல் செல்வம் கொழிக்கும் நாடாக மேற்கு ஜெர்மனி விளங்கியது. இத்தகைய பொருளாதார அதிசயம் அடினூர் தலைமையில் ஏற் பட்ட போதிலும் மக்களிடையே மன நிறைவின்மை தோன்றியது. பெர்லின் சுவர் எழுப்பத் தடை செய்வதில் அவர் உறுதியாக இல்லை என்பதும், புதிய கருத்துகளும் கொள்கைகளும் அடினூரின் மனதைக் கவரவில்லையென்பதும் அவரது செல்வாக்கு சரிவ தற்குக் காரணங்களாக இருந்திருக்கலாம். எவ்வாறெனினும் 1963ஆம் ஆண்டில் அவர் ஓய்வு பெற்று லட்ஜ்விக் எர்ஹார் டிடம் அதிகாரத்தை ஒப்படைத்தார். பின்னவர் தலைமையிலும் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து வந்தபோதிலும் அடினூரின் கவர்ச்சி புதிய சான்சலரிடம் இல்லை. மேலும் நாசிக் கொள்கை வலுப்பெற்றுப் பழைய நிலைமை மீண்டுவிடுமோ என்ற அச்சமும்

மக்களிடம் எழுந்தது. எனவே, 1969ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முதன்மையாக சோசலிஸ்டுகள் வெற்றிபெற்று வில்லி பிராண்ட் (Willi Brant) சான்சலராகப் பதவியேற்றார். இது மக்களாட்சிக்குக் கிடைத்த வெற்றியென்று கருதப்படுகின்றது.

மேற்கு ஜெர்மனி இங்ஙனம் முன்னேறிவந்த காலத்தில் கிழக்கு ஜெர்மனியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப் பட்டது. அங்கே ருஷிய பாணியில் குடியரசு அமைக்கப்பட்டது. நாட்டுத் தலைவர், பிரதமர், மக்கள் தேர்ந்தெடுத்த சட்டசபை ஆகிய அமைப்புகள் இருந்தபோதிலும் வால்டர் உல்பிரிச் (Walter Ulbricht) தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி பொலிட் பிரோவிடம் (Politburo) அதிகாரம் குவிந்தது. தல ஆட்சி அமைப்புகள் வலுவிழந்தன. அதிகாரங்கள் ஒரேவிடத்தில் குவிந்ததால் அடக்குமுறைகளும் பெருகின. சோவியத் யூனியனின் ஆதரவும் உதவியும் கொண்டு கிழக்கு ஜெர்மனி தொழில் துறையிலும் மற்றத் துறைகளிலும் மெச்சத்தகுந்த முன்னேற்றம் கண்டுள்ளது. இருப்பினும் கிழக்கு பெர்லினி லும் வேறுசில நகரங்களிலும் 1953ஆம் ஆண்டு ஆட்சியா ளரின் அடக்குமுறைக்கெதிராகக் கலகங்கள் எழுந்தன. 1955ஆம் ஆண்டில் ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு சுதந்திர நாடாகியது. ஆயினும் அங்கு ருஷியாவின் செல்வாக்கு ஓரளவிற்கு இருந்து வருகின்றது. பிளவுபட்ட பெர்லின் நகரம் பெரும் பிரச்சினை யாகவே இருந்து வருகின்றது. இந்த நகரம் கிழக்கு ஜெர்மன் நாட்டிற்குள் அமைந்துள்ளது என்றாலும் மேற்கு பெர்லின், மேற்கு ஜெர்மனியின் ஆதிக்கத்தில், நேச நாடுகளின் பாது காப்பில் இருந்து வருகின்றது. கிழக்கு பெர்லின்தான் ஜனநாய கக் குடியரசாக விளங்குகின்றது. கிழக்கிலிருந்து ஜெர்மானியர் மேற்கு பெர்லினுக்கு வந்து குடியேறுவதைக் கிழக்கு ஜெர்மனி விரும்பாததால் 1961ஆம் ஆண்டில் பெர்லின் சுவரைக் கட்டி மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்திவிட்டது. இச்சுவர் பெர்லின் நகர மக்களைப் பிரித்து வைப்பதைப்போல இரு ஜெர்மனிகளும் இணைவது எளிதல்ல என்பதை எடுத்துக் காட்டும் சின்னமாகவும் காட்சி தருகின்றது. மேற்கு நாடுகளின் உதவியுடன் வலிமை பெற்ற வளம் கொழிக்கும் நாட்டை உருவாக்குவதன்மூலம், வலிமையைப் பெருக்குவதின் மூலம் கிழக்கு ஜெர்மனியை இணைத்துக்கொள்ள முடியும் என மேற்கு ஜெர்மனி எண்ணி வருகின்றது. ஆனால், இரு ஜெர்மனி அரசாங்கங்களும் கலந்து பேசுவதன் மூலம்தான் ஜெர்மன் நாட்டு ஐக்கியம் ஏற்பட முடியும் என ருஷியத் தலைவர்கள் எண்ணுகின்றனர். எனவே, ஒன்றுபட்ட ஜெர்மனி உருவாவது அவ்வளவு எளிதானதாக இல்லை.

VII
இத்தாலி

போருக்குப்பின் இத்தாலிய ஒற்றுமை உறுதி செய்யப்பட்டது. அது அபிசீனியாவை இழந்ததுடன் குடியேற்றங்களைக் கொண்ட தனது பேரரசையும் துறந்தது. போரின் இறுதிக்கட்டத்தில் அந்த நாடு பேரழிவுகளுக்குட்பட்டது. அதன் பொருளாதாரம் சிதைந்தது. பாசிசக் கட்சியின் வீழ்ச்சி ஒருவகை அரசியல் சூனியத்தை ஏற்படுத்தியிருந்தது. அதனால் நல்ல அமைப்பினைக் கொண்ட கம்யூனிஸ்டுகள் தங்களது ஆட்சியை அங்கே ஏற்படுத்தும் வாய்ப்பிருந்தது. ஆனால், 1946 ஆம் ஆண்டில் நடந்த பொது மக்கள் வாக்கெடுப்பில் முடியாட்சி வேண்டாமென்றும் குடியரசு ஏற்பட வேண்டுமென்றும் மக்கள் விரும்பினர். பாராளுமன்ற அரசாங்க முறைக்கு நாடு திரும்பியது. செவாய் அரச குடும்பத்தினர் நாட்டை விட்டு வெளியேறினர். போருக்குப்பின் இத்தாலியில் தலைசிறந்து விளங்கிய காஸ்பரி (Gasperi) என்பார் 1953 ஆம் ஆண்டு வரையில் தலைமை அமைச்சராக விளங்கினர். ஆயினும், தொழிலாளர்களிடையே கம்யூனிஸ்டுகள் செல்வாக்கு பெற்றிருந்தனர். 1950 ஆண்டிற்குப் பிறகு புது பாசிசக் கொள்கை தலையெடுத்ததைக் கம்யூனிஸ்டுகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயன்றனர். 1960-ல் நாட்டில் கிளர்ச்சிகளும் கொந்தளிப்பும் தோன்றின. இருப்பினும் அமின்டோர் பான்பனி (Amintore Fanfani) பதவிக்கு வந்து பல பிரச்சினைகளைத் தீர்த்துவைத்து, மார்ஷல் திட்டத்தையும் ஐரோப்பியப் பொது வாணிபத் திட்டத்தையும் பயன்படுத்தி நிலைமையைச் சமாளித்தார். விவசாயத்தில் புதியமுறைகளைப் பயன்படுத்தியும் சிசிலி போன்ற இடங்களில் நடைபெற்ற திட்டமிட்ட குற்றங்களைத் தடுத்தும் ஓரளவு அமைதியும் வளமும் கொண்ட நாடாக இத்தாலியை மாற்றியுள்ளார்.

VIII
ஆஸ்திரியா

இரண்டாம் உலகப்போருக்கு முன்பிருந்தே ஆஸ்திரியாவின் நிலை சிறப்பானதாக இல்லை. கட்சிப் பூசல்களாலும் பொருளாதார மந்தத்தாலும் அது பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அங்கு ஜனநாயக அரசை அழித்துவிட்டு டால்பஸ் (Dollfuss) என்பார் 1934 ஆம் ஆண்டில் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தினர். ஆனால், நாஸிக் கட்சியினர் கலகம் செய்து அவரைக் கொன்றனர்.

அதைத் தொடர்ந்து சூச்நிக் (Schuschnigg) சர்வாதிகாரியானார். நான்காண்டுகளுக்குப் பின்னர் ஆஸ்திரியா நாஸிகளின் பிடியில் சிக்கியது. ஜெர்மானியரின் ஆதிக்கம் ஏற்பட்டது. போருக்குப் பின் 1945ஆம் ஆண்டில் சோசலிஸ்ட் கட்சித் தலைவரான கார்ல் ரென்னர் தலைமையில் தற்காலிக அரசு பதவியேற்றது. கம்யூனிஸ்ட் கட்சியினரும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். ருஷியாவின் பாதுகாப்பில் சிறிதுகாலம் இருந்தபோதிலும் ஆஸ்திரியா கம்யூனிஸ வழியில் செல்லவில்லை. கடந்தகால அனுபவத்தைக் கொண்டு சோசலிஸ்டுகளும் கிறிஸ்தவ சோசலிஸ்டுகளும் கூட்டு அமைச்சர் அவையை அமைக்க முன்வந்தனர். 1945ஆம் ஆண்டில் பதவிக்குவந்த இவ்விரு கட்சிகள் அரசாங்கம் அடுத்த இருபது ஆண்டுகளுக்கு ஆஸ்திரியாவை வழிநடத்திச் சென்றது. மிகக் கடினமான காலத்தில் கார்ல் ரென்னர் தலைவர் பதவியேற்று உறுதியுடன் திறமையாக வெளிநாட்டுக் கொள்கையை வகுத்து நேச நாடுகளின் நன்மதிப்பைப் பெற்று, ஆஸ்திரியாவை முழு உரிமைபெற்ற நடுநிலை நாடாக உருவாக்கினார். பாங்குகளையும், அடிப்படைத் தொழில்களையும், ரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து ஆகியவற்றையும் தேசியமாக்கியதுடன் உப்பு, புகையிலை, மது முதலியவற்றையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். இவற்றின் மூலமாக போருக்கு முன்பு இருந்ததைவிட மேன்மையான நிலையை ஆஸ்திரியா அடைய முடிந்தது. அமைதிக் கொள்கையும், உறுதியான அரசாங்கமும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் ஐரோப்பிய பொது வாணிபக் கூட்டு நாடுகளுடனான வாணிபமும் ஆஸ்திரியாவை இன்று நல்ல நிலைக்குக் கொண்டு வந்துள்ளன.

IX
சோவியத் ஒன்றியம்

போரின் தொடக்கத்தில் ஹிட்லருடன் நட்புக் கொண்டிருந்த சோவியத் யூனியன் மீது 1941ஆம் ஆண்டு ஜெர்மனி தாக்குதல் தொடர்ந்தது. வியப்பூட்டும் வெற்றிகள் சிலவற்றை ஜெர்மானியர் பெற்றதை முன்னரே கண்டோம். ஆனால், ஸ்டாலினின் தலைமையில் புதுவேகம் பெற்ற ருஷியர்கள் தீவிரமாகப் போராடி மாஸ்கோவிற்கும் ஸ்டாலின்கிராடிற்கும் வர இருந்த ஆபத்தைத் தவிர்த்து, நேசநாடுகளுடன் நெருங்கி ஒத்துழைத்து, ஜெர்மானியர் வசம் இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மீது எதிரடித் தாக்குதல் நடத்தி, இறுதியில் பெருவெள்ளமென ஜெர்மனியில் புகுந்து விரைவில் முன்னேறி, தலைநகரமாம் பெர்லின் உள்பட

ஜெர்மனி நாட்டின் பெரும்பகுதியைக் கைப்பற்றி, 1945ஆம் ஆண்டில் ஜெர்மானியரை நேச நாட்டினரிடம் சரணடையச் செய்யப் பெரிதும் உதவினர். போரின்போது சோவியத் ஒன்றியம் பெரும் இழப்பிற்கு ஆளானபோதிலும் வலிமையும் வளமும் பெற்ற வல்லரசாக அது வெளிப்பட்டது. போரின்போது மேற்கு நாடுகளுடன் நெருங்கி ஒத்துழைத்த ஸ்டாலின், 1946ஆம் ஆண்டில் மேற்கு முதலாளித்துவ நாடுகள் ருஷியாவை அழிக்க உறுதி பூண்டுள்ளன என்றும் அவற்றுடன் பொதுஉடைமை நாடான ருஷியா இறுதிவரை போரிட வேண்டுமென்றும் பழைய பாணியில் பேச முற்பட்டார். அதேபோன்று போரின்போது உள்நாட்டில் கட்டுப்பாடுகள் தளர்ந்திருந்த நிலைமாறி மீண்டும் கெடுபிடிகள் அதிகரித்தன. இருப்பினும் ருஷியாவின் பொருளாதார வளர்ச்சியும், படைப் பெருக்கமும், விஞ்ஞான வளர்ச்சியும் வியக்கத் தகுந்ததாக இருந்தன. புனர்நிர்மாணத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவியாகப் புதிய ஐந்தாண்டுத் திட்டங்கள் அங்கே செயல்படுத்தப்பட்டன. 'இயற்கையை மாற்றியமைக்கும் ஸ்டாலின் திட்டம்' போன்றவைகளின் மூலமாகக் காடுகளின் பெருக்கம், கால்வாய்களின் பெருக்கம், எஃகு சுரங்கப் பொருள்கள், எண்ணெய் முதலியவை பன்மடங்குப் பெருக்கம், அணுசக்தித் திட்டம் ஆகியவை போருக்குப் பிந்திய ருஷியாவின் சாதனைகள் ஆகும். ருஷியாவின் ஆதிக்கம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மீதும் சீனாவிலும் ஏற்பட்டது. இங்ஙனம் ருஷியாவை வலிமை பெற்ற நாடாக வளர்ப்பதில் வெற்றிகண்ட ஸ்டாலின், 1953ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மரணமடைந்தார். மாலங்கோவும் அவரது துணைவர்களான பேரியா (Beria), மாலடாவ், குருஷாவ் போன்றவர்களும் ஆட்சியைக் கைப்பற்றினர். புதிய அரசாங்கம் உள்நாட்டில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும், கூட்டுப்பண்ணை முறையை நெகிழ்வுள்ளதாகச் செய்யவும், நுகர்வுப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்கவும் முனைந்தது. ஆனால், விரைவிலேயே தலைவர்களுக்கிடையே அதிகாரப்போட்டி எழுந்து குருஷாவ் தலைமைப் பொறுப்பு ஏற்றார். மாலங்காவ், பேரியா, மார்ஷல் ஸுகாவ் (Marshal Zhukov), புல்கானின் போன்ற தலைவர்களை ஒருவர்பின் ஒருவராக நீக்கிவிட்டு 1958ஆம் ஆண்டில் குருஷாவ் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப் பதவியையும், நாட்டின் பிரதமர் பதவியையும் கைப்பற்றி ஸ்டாலினைப்போல சர்வாதிகாரம் செலுத்தத் தொடங்கினார். அவர் தன்னம்பிக்கையும் தளரா உறுதியும் கொண்டு புதிய, ஒருவகையில் நடைமுறை ஒழுங்கின் வயப்படாத (unconventional) கொள்கைகளைப் பின்பற்றி வல்லரசுப் போட்டியில் சோவியத் யூனியனின் நிலையை உயர்த்தினர். ஆரம்பத்தில் அமெரிக்காவுடனும், மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனுமான கெடு

பிடிப் போரில் தீவிரமாக இருந்தபோதிலும் கியூபாவில் ராணுவ தளங்களை ஏற்படுத்துதல் போன்றவற்றில் தோல்வி கண்டதாலும், சீன கம்யூனிஸ்ட் தலைவர்களுடனான முரண்பாடு காரணமாகக் கம்யூனிஸ்ட் நாடுகளிடையே பிளவு தோன்றியதாலும் நெகிழும் கொள்கையைப் பின்பற்றலானார். இதன் விளைவாக அமெரிக்காவுடன் ஒருவகையான சகஜ நிலையை உருவாக்கினார். விண்வெளி ஒத்துழைப்பு ஒப்பந்தம், அணு ஆயுதப் போரைத் தவிர்க்க என்று கிரம்ளின் வெள்ளை மாளிகைகளுக்கிடையே நேரடித் தொடர்பு (Hot Line), அணு ஆராய்ச்சித் தடை ஒப்பந்தம் ஆகியவை ருஷியாவின் வெளிநாட்டுக் கொள்கை மாற்றத்திற்கான எடுத்துக் காட்டுகள். ஆனால் கம்யூனிஸ்ட் சீனாவுடனான உறவு நெருக்கடியானது, உள்நாட்டிலும் ஓரளவு தாராளக் கொள்கை பின்பற்றப் பட்டது. அரசியல் மற்றும் சிந்தனைச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் சிறிது தளர்த்தப்பட்டன. ஆயினும் குருஷாவின் விவசாயக் கொள்கை தோல்வி கண்டதாலும், நுகர்வுப் பொருள் பெருக்கக் கொள்கையைக் கனரகத் தொழிலும் படைத் தலைவர்களும் எதிர்த்ததாலும், கட்சியிலிருந்த அவரது பகைவர்கள் ஒன்றிணைந்ததாலும் 1964ஆம் ஆண்டில் குருஷாவ் பதவி விலக நேரிட்டது. லியோனிட் பிரஷ்னேவும் (Leonid Brezhnev) அலக்ஸி கோசிகினும் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர்கள் ஸ்டாலின் நினைவை மீட்டபோதிலும், உள்நாட்டில் ஓரளவு கட்டுப்பாடுகளை அதிகரித்த போதிலும், குருஷாவைப்போலவே அமெரிக்காவுடன் மோதுவதைத் தவிர்த்து, சிலவற்றில் ஒத்துழைக்கவும் முன்வந்துள்ளனர். அணு ஆயுதப் பெருக்கத்தடை ஒப்பந்தம், கடலுக்கடியில் அணுகுண்டு பரிசோதனை நடத்துவதற்கெதிரான ஒப்பந்தம் ஆகியவற்றைச் செய்துகொண்டதுடன் விரிவான படைக் குறைப்பிற்கான பயனுள்ள பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபட்டனர். இங்ஙனம் போருக்குப்பின் சோவியத் யூனியன் கிழக்கு, தென்கிழக்கு ஐரோப்பாவில் தனது செல்வாக்கை நிலை நாட்டி மத்திய கிழக்கு நாடுகளிடையே தனது செல்வாக்கைப் பரப்புவதில் ஓரளவு வெற்றிபெற்று வளரும் வலிமையும் பெற்ற பெரும் சக்தியாகத் திகழ்ந்து வருகின்றது.

X

கிழக்கு ஐரோப்பிய நாடுகள்

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கிழக்கு ஐரோப்பிய நாடுகளான அல்பேனியா, ருமேனியா, பல்கேரியா, போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லவாக்கியா, கிழக்கு ஜெர்மனி, யூகோஸ்

லாவியா ஆகிய நாடுகளில் சோவியத் வழியைப் பின்பற்றி 'மக்கள் குடியரசுகள்' எனும் கம்யூனிஸ்ட் அரசாங்கங்கள் உருவாயின. 1945ஆம் ஆண்டிற்கும் 1948ஆம் ஆண்டிற்கும் இடையில் நூறு மில்லியன் மக்கள் கம்யூனிஸ்ட் ஆட்சிக்குட்பட்டனர். இப் புதிய அரசுகள் சோவியத் யூனியனின் தலைமையை ஏற்று அதன் ஆதரவில் வளரத் தொடங்கின. அல்பேனியாவும் யூகோஸ்லாவியாவும்தான் முதலில் கம்யூனிஸ்ட் ஆட்சியின்கீழ் வந்தன. கம்யூனிஸ்ட் எதிர்ப்பியத்தின் விளைவாக இந்நாடுகள் ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டதால் எவ்வித இடையூறுமின்றி கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது. சோவியத் ஒன்றியத்தைப் பின்பற்றி ஒருவகையான சர்வாதிகார ஆட்சி நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் சோவியத் ஒன்றியத்தின் பாதுகாப்பையும் பொருளாதார உதவியையும் பெற்று அதனுடைய தலைமையை ஏற்று துணைக்கிரகமாக இயங்கி வந்த அல்பேனியா சோவியத் ஒன்றியத்திற்கும் பொதுவுடைமைச் சீனாவிற்கு மிடையேயான பூசலைப் பயன்படுத்திக் கொண்டு முன்னதன் பிடியில் இருந்து விலகிச் சென்று சீனாவின் நட்பு நாடாக மாறியது. அதைப்போலவே யூகோஸ்லாவியாவும் புகழ் வாய்ந்த டிட்டோவின் (Tito) தலைமையில் சுதந்திரப் போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. அதனுடைய சுதந்திரப் போக்கு 1948ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியக் கூட்டிலிருந்து அதனை வெளியேறுமாறு செய்தது. மற்ற கம்யூனிஸ்ட் நாடுகள் கடைப்பிடித்த பொருளாதாரத் தடைகளும் படையெடுப்பு அச்சுறுத்தலும் பயனளிக்கவில்லை. நீண்ட கடற்கரையும் மேற்கு நாடுகளுடனான தொடர்பும் யூகோஸ்லாவியா தனித்து வாழ உதவின. அது ஒரு கம்யூனிஸ நாடாக இருந்த போதிலும் உலகக் கம்யூனிஸ்டு நாடுகளின் கூட்டில் சேராமல், கூட்டு சேரா நாடுகளிடையே முக்கிய இடத்தை வகித்து வருகின்றது. பேச்சுரிமை, கருத்து வெளியிடும் உரிமை போன்றவற்றில் கட்டுப்பாடுகள் மலிந்திருந்த போதிலும், பொருளாதார அமைப்புகளைப் பொறுத்த வரையில் டிட்டோ தாராள முறைகளைக் கையாண்டார். கூட்டுப்பண்ணை முறை கைவிடப்பட்டது. தல அதிகாரிகளுக்குச் சில அதிகாரங்கள் வழங்கப்பட்டன. தொழில்களிலும் சமூக சேவைகளிலும் முன்னேற்றம் காண வேண்டி இலாபத்தில் பங்கு தருதல் போன்ற ஊக்குவிப்புக்கள் அளிக்கப்பட்டன. இவ்வாறாக யூகோஸ்லாவியா, டிட்டோவின் தலைமையில் தரமான, தனிக்கொள்கையுடைய நடுநிலை நாடாக இயங்கி வருகின்றது.

ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியா, செக்கோஸ்லவாக்கியா ஆகிய நாடுகளில் தொடக்கத்தில் கம்யூனிஸ்டுகளின் ஆட்சி ஏற்

படவில்லை. ஆனால் மெள்ள மெள்ள அவர்கள் ஆட்சியைக் கைப் பற்றுவதில் வெற்றி பெற்றனர். 1945ஆம் ஆண்டில் பல்கேரிய அரசரை நீக்கிவிட்டு அங்கு அதிகாரத்தைக் கைப்பற்றினர். அதேபோன்று ருமேனியாவில் மைக்கேலை முடிதுறக்கச் செய்து, கம்யூனிஸ்ட் அல்லாத கட்சியினரைப் பிரித்து ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தனர். இவ்விரு நாடுகளும் சோவியத் ஒன்றியத்தின் தலைமையை ஏற்று வளர்ச்சியுற்றபோதிலும் 1960-க்குப் பிறகு ருமேனியாவின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. 'கோமிகோன்' (Comecon) மூலமாக உள்நாட்டுப் பொருளாதார திட்டத்தில் சோவியத் யூனியன் தலையிடுவதை விரும்பாமல் அத்திட்டத்தை ருமேனியர் எதிர்த்தனர். ருஷியாவிற்கு எதிராகப் புரட்சி செய்த அல்பேனியாவுடனும், யூகோஸ்லாவியாவுடனும் தொடர்பு கொண்டனர். மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் வாணிபம் செய்ய முன்வந்தனர். ருமேனிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான சியாசிஸ்கியூ (Ceausescu) 1969ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்குமளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் செக்கோஸ்லவாக்கியா முக்கிய இடத்தை வகிக்கின்றது. அது தொழில் வளம்மிக்க நாடு; வலிமை பொருந்திய ஜனநாயக கட்சிகள் செயல்படும் நிலையில் இருந்த நாடு. விடுதலைபெற உதவிய சோவியத் நாட்டிடம் மக்கள் நன்றி உணர்வுடன் கூடிய மதிப்பு வைத்திருந்தபோதிலும் உண்மையில் கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடைபேயான பால மாகத் தங்கள் நாடு விளங்க வேண்டுமென்று விரும்பினர். ஆனால், 1948ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டுகள் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றினர். ருஷியாவின் தலைமையை ஏற்று ஒழுகிவந்தனர். ஆயினும் 1968ஆம் ஆண்டில் உள்நாட்டில் அமைதியின்மையும், சோவியத் ராணுவத்தின் தலையீடும் நிகழ்ந்தன. செக் நாட்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக விளங்கிய நொவோட்னியின் கொள்கைகள் வர்த்தகர்களுக்கும், அறிஞர்களுக்கும் அதிருப்தி அளித்தன. ஆட்சியாளர் கண்டத்திற்குள்ளாயினர். நாட்டில் கொந்தளிக்கும் நிலையேற்பட்டது. அலெக்சாண்டர் துப்செக் (Dubcek) என்பாரின் தலைமையில் தாராளக் கொள்கையுடைய கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர்கள் புதிய தேர்தல் விதிகளையும், பல சீர்திருத்தங்களையும் கொண்டு வந்தனர். மக்களுக்கு உரிமைகள் வழங்க முன்வந்தனர். ஆனால், இச்செயல் கள் நாட்டில் ஒருசாராருக்கும், மற்றக் கிழக்கு ஐரோப்பிய நாடு களுக்கும் பிடிக்கவில்லை. சோவியத் ஒன்றியமும் அதன் துணைவர் களும் ராணுவ நடவடிக்கையில் இறங்கினர். படைகள் செக்

எல்லைக்குள் நுழைந்தன. 1969ஆம் ஆண்டில் துப்செக்கின் தலைமை நீங்கியது. நாட்டில் எழுந்த கலகங்கள் தடுக்கப் பட்டன. சோவியத் ஒன்றியத்திற்கு ஆதரவான கட்சிப் பிரிவினர் ஆட்சிக்கு வந்தனர். இந் நிகழ்ச்சிகள் சோவியத் ஒன்றியத்திற்கு அவப் பெயரைக் கொடுத்தன.

இனி போலந்து, ஹங்கேரி ஆகிய இரு நாடுகளின் வளர்ச்சி யைக் கவனிப்போம். போரின் தொடக்கத்தில் மேற்கிலிருந்து ஜெர்மானியப் படைகளாலும், கிழக்கிலிருந்து ருஷியர்களாலும் தாக்கப்பட்ட போலந்து, மரபு சார்ந்த வீரத்துடன் போரிட்ட போதிலும் பகைவரிடம் வீழ்ச்சியுற்றது. ஜெர்மனியும், ருஷியா வும் போலந்தைப் பங்கு போட்டுக் கொண்டன. போர்கால முழுவதும் போலந்தியர் பெரும் துன்பங்களுக்குள்ளாயினர். ஜெர்மனி ருஷியா மீது போர் தொடுத்த பிறகு போலந்து முழுதும் ஜெர்மானியர் வசம் வந்தது. நேச நாடுகளின் யால்டா பேச்சு வார்த்தைகளின்போது ஜெர்மனி, போலந்து எல்லைகள் வரையறுக்கப்பட்டதுடன் போலந்தில் ரஷ்யாவின் செல்வாக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. வெகு விரைவில் போலந்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி யேற்பட்டது. அது சோவியத் முகாமில் முக்கிய இடம் வகித்துவந்தது. அதன் தலைநகரமான வார்ஸா வில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகத்தான் சோவியத் யூனிய னின் தலைமையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒத்துழைப்பிற்கும் பாதுகாப்பிற்கும் வகை செய்து கொண்டன. சோவியத் உதவி யுடன் போலந்து பொருளாதாரத் துறையில் முன்னேறிய போதி லும், உட்பூசல்களும் சோவியத் தலைவர்களுடன் முரண்பாடு களும் எழாமலில்லை. சுதந்திரப் போக்கும் தேசிய உணர்வும் மிக்க பழம்பெரும் கம்யூனிஸ்ட் தலைவரான கோமுல்கா (Gomulka), 1949ஆம் ஆண்டு ஆட்சிக் குழுவிலிருந்து விலக்கப் பட்டார். ஆனால், 1956ஆம் ஆண்டு ஆட்சியாளருக்கெதிரான கிளர்ச்சிகள் எழுந்தபோது கோமுல்கா கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். இத்தகைய வளர்ச்சியைத் தடுக்க ருஷியத் தலைவர் குருஷாவ் விரும்பிய போதிலும் கோமுல்கா பதவிக்கு வருவதை ஏற்று, போலந்து நாட்டு மக்களுக்குச் சில சலுகைகள் வழங்குவதையும் தடை செய் யாமல் விட்டார். இதனால் பழைய ஸ்டாலின் கால அமைப்புகள் மாற்றியமைக்கப்பட்டன. கூட்டுப் பண்ணை முறை மாறியது. அரசியல் கைதிகள் விடுதலை அடைந்தனர். இருப்பினும் சோவியத் ஒன்றியத்துடனான உறவு கெடும் வகையிலோ அல்லது மக்கள் உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் அறவே நீங்கும் வகையிலோ சீர்திருத்தங்கள் வரவில்லை.

ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட ஹங்கேரியில் 1947ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்திற்கு வந்தது. மற்றக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் போல் ஹங்கேரியும் சோவியத் ஒன்றியத்தின் செல்வாக்கின்கீழ் வந்தது. ஆனால், 1956 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற் கெதிரான கிளர்ச்சிகள் எழுந்தன. புரட்சி ஏற்படும் சூழ்நிலை உருவாகியது. மாணவர்கள், தொழிலாளர்கள், நடுத்தர மக்கள், ஆகியோரிடையே மட்டுமன்றி காவற் படையினர், ராணுவத்தினரிடையேயும் புரட்சிக் கருத்துகள் பரவும் ஆபத்து இருந்தது. ருஷிய காவற் படைகள் வெளியேற வேண்டுமென்றும், பொது உரிமைகள் வேண்டுமென்றும், சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டுமென்றும் கோஷங்கள் கிளம்பின. இம்ரே நாசி (Imre Nagy) என்பவரின் தலைமையில் புரட்சி அரசாங்கம் அமைக்கப் பட்டது. அது ஐ. நா. வின் உதவியையும் நாடியது. ஆனால் சோவியத் படைகள் ஹங்கேரிக்குள் நுழைந்து புரட்சியை ஒடுக்கி கடாரின் (Kadar) தலைமையில் புதிய அரசாங்கத்தை நிலை நாட்டின. ஹங்கேரி விவகாரத்தில் ஐ. நா. தலையிடவில்லை. அதன் தோல்விகளில் இதுவும் ஒன்றாகும். எவ்வாறெனினும் கடாரின் அரசாங்கம் தாராளக் கொள்கையைக் கடைப்பிடிக்க முன்வந்தது. 1963ஆம் ஆண்டில் அரசியல் சிறைவாசிகளுக்கு விடுதலை வழங்கியது. திருச்சபையுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டது. ஆளுங் கட்சியைச் சாராதவர்களுக்கும் உயர் அரசாங்கப் பதவிகள் அளிக்கப் பெற்றன. இங்ஙனம் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் ஒன்றியத்தின் ஆதரவுடனும் உதவியுடனும் முன்னேறிய அதே நேரத்தில் அவை ருஷியாவின் வலிமைக்கும் வளத்திற்கும் உதவியுள்ளன. எப்படியும் கம்யூனிஸ்ட் நாடுகளிடையேயான ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நிலை நிறுத்திட வேண்டுமென்று சோவியத் ஒன்றியம் கருத்தாய் இருந்ததையும், கம்யூனிசக் கொள்கையை ஏற்கும் அதே நேரத்தில் தேசிய நலன்களைப் பாதுகாக்கவும் கூடுமானவரையில் உரிமைகளைப் பெறவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த மக்கள் விழைந்ததையும், இவ்விரு முரண்பாடுகளுக்கிடையே எழுந்த கருத்து வேற்றுமைகளும், கிளர்ச்சிகளும், கடுமையான நடவடிக்கைகளும் 1945 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மலிந்து கிடக்கின்றன.

23. ஒற்றுமையை நோக்கி ஐரோப்பா

I

தனிப்பட்ட ஐரோப்பிய நாடுகளைப்பற்றி சில செய்திகளைப் பார்த்தோம். ஆனால், நமது காலத்தில் ஒப்பற்ற குறியாய் இருப்பது உலகையும் மனித இனத்தையும் சேர்த்து முழுமையாகப் பார்க்க வேண்டுமென்பதேயாகும். இந்த அடிப்படையில் பார்க்கும்போது நாடுகளிடையே காணப்படும் பெரும் கருத்து வேற்றுமையும், இலட்சியங்கள்பற்றிய பிணக்கும் உலகை இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளன. ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துத் தனிமனித உரிமைகளைக் காப்பதில் நாட்டங்கொண்ட நாடுகள் ஒருபுறம்; தனிமனிதன் உரிமைகளை அரசிற்கு அர்ப்பணித்துப் பொது உடைமைக் கொள்கையைப் பேணித் தொழிலாளர்களின் அரசை நிறுவி முன்னேற்றம் காண்பதில் கருத்துடைய நாடுகள் மறுபுறம். முதலாளித்துவ நாடுகள் எனக் குறிப்பிடப்பெறும் அணிக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளும் (U. S. A.) கம்யூனிஸ நாடுகளின் முகாமிற்கு சோவியத் ஒன்றியமும் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் தங்களுக்குள் முரண்பட்டு, பகைமையை வளர்த்து, கெடுபிடிப்போரில் இறங்கி எந்த நேரத்திலும் உலக அமைதிக்கு ஊறு வந்துவிடுமோ எனும் அச்சத்தைத் தோற்றுவித்தன. பொருளாதார உதவி, படைப் பெருக்கம், அணுசக்தி, விண்வெளி வெற்றிகள் போன்ற அறிவியல் துறை வளர்ச்சி ஆகியவற்றிலும் வல்லரசுப் போட்டி மனப்பான்மையே மேலோங்கி நின்றது. உண்மையில் போரில் இறங்காத போதிலும் இரு துருவங்களாக, எதிர்ப்பின் எல்லையில் நின்று பிரச்சார சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்திப் 'பனிப்போர்' அல்லது கெடுபிடிப் போரில் (Cold War) இறங்கியுள்ள இவ்விரு சக்திகளும் தத்தமது கட்சியை வலுப்படுத்தப் பல நாடுகளைத் தம்பக்கம் இழுக்கும் பணியில் ஈடுபடலாயின. பொருளாதார உதவி, படை உதவி, வாணிப உரிமைகள், சலுகைகள், இன்னோரன்னவற்றைக் காட்டி நாடுகளைக் கூட்டுச் சேர்த்துக் கொள்வதில் குறியாக இருந்து வந்துள்ளன. இரண்டாவது உலகப்போரை அடுத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, யூகோஸ்லாவியா,

பல்கேரியா, அல்பேனியா, செக்கோஸ்ல வாக்கியா, ருமேனியா, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில் கம்யூனிசத்தைப் பரப்பி அவற்றைத் தனது சார்பு நாடுகளாக ஆக்குவதில் சோவியத் ஒன்றியம் வெற்றி பெற்றது. மேற்காசிய நாடுகளிடையே தனது செல்வாக்கைப் பரப்புவதிலும் அது ஓரளவு வெற்றி பெற்றது. சீனாவில் மாசேதுங்கின் தலைமையில் பொதுவுடமை அரசாங்கத்தை உருவாக்கியது பனிப்போரில் ருஷ்யாவிற்குக் கிடைத்த வெற்றி யெனலாம். அமெரிக்காவும் பின்தங்கிவிடவில்லை. கம்யூனிசத்தைக் கட்டுப்படுத்த என்று மார்ஷல் திட்டமெனும் பொருளாதாரத் திட்டங்கள் மூலமும் வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம் (NATO), தென்கிழக்காசிய ஒப்பந்த நிறுவனம் (SEATO), அமெரிக்க நாடுகளின் பரஸ்பர உதவி ஒப்பந்தம் (Inter American Treaty of Reciprocal Assistance) போன்ற பாதுகாப்பு ஒப்பந்தங்களின் மூலமாகவும் முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது. இவற்றிற்கு எதிரிடையாக வார்ஸா ஒப்பந்த நாடுகளின் இணைப்பு, கோமின்போர்ம் போன்றவைகளின் மூலமாக சோவியத் யூனியன் பதிலடி கொடுக்க முயன்றது. இந்த கெடுபிடிப்போர் உலக ஒற்றுமையையும் சமாதானத்தையும் வளர்க்கும் நோக்கத்துடன் உருவாக்கப் பெற்ற ஐ. நா. விற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஐ.நா. வைத் தங்கள் பிரசார பீரங்கிகள் முழங்குவதற்கு வாய்ப்பான கூட்டமாக மதித்து வல்லரசுகள் பல சமயங்களில் நடந்து வந்துள்ளன. பல பிரச்சினைகளைப் பனிப்போரின் அடிப்படையில் அணுகி, ஐ. நா. பயனுள்ளவகையில் செயல்பட முடியாமலும் செய்துள்ளன. ஹங்கேரியில் ருஷ்ய ஆக்ரமிப்பு, வியட்னாமில் அமெரிக்காவின் வீம்பான தலையீடு போன்றவற்றைக் குறிப்பிடலாம். 1960ஆம் ஆண்டிற்குப் பிறகு இவ்விரு பெரும் சக்திகளுக்கிடையேயான கெடுபிடி ஓரளவு தளர்ந்தது போல் காணப் பெற்றாலும் உலக அமைதி உறுதியில்லை. உலகப் போராக வெடிக்கும் பிரச்சினைகள் இல்லாமலில்லை.

II

இத்தகைய பின்னணியில் ஐரோப்பிய ஒற்றுமை முயற்சிகள் குறித்துச் சிறிது காண்போம். இரண்டாம் உலகப் போரினால் ஐரோப்பா பேரழிவிற்கு ஆளானது. இதற்குமுன் கண்டிராத அளவிற்கு வறுமை அங்கே தாண்டவமாடியது. போருக்கு முன்னால் விலைமதிப்புள்ள வாணிபப் பொருள்கள் குவிந்து கிடந்தனபோலத் தோன்றிய போதிலும் போருக்குப் பின் பற்றாக் குறை காணப்பட்டதுடன் மக்களுக்குத் தேவையான உணவுப்

பொருள்களும் போரில் பாழ்பட்டன. வாணிபம் ஸ்தம்பித்து நின்றது. போர்க்கால அழிவுகளாலும், மூலப்பொருள்கள், எரி பொருள்கள் தட்டுப்பாட்டினாலும் தொழில் உற்பத்தி தடை பட்டது. போக்குவரத்து மற்றும் செய்திப் பரிவர்த்தனைத் திட்டங்கள் பாழ்பட்டு நின்றன. ஐந்தாண்டுகளுக்கு ஐரோப்பா முழுவதிலும் ஆதிக்கம் செலுத்திய நாஸிசப் பேரரசு வீழ்ந்ததால் நாணய முறை தடுமாறியது. உணவு, எரிபொருள் பற்றாக்குறை உண்மையிலேயே பேராபத்தை விளைவிக்கக் கூடியதாக இருந்தது. அதிலும் போருக்குப் பின்வந்த படைக்கலைப்பினால் பல லட்சக் கணக்கானோர் வாழும் வகையின்றி வாடிய நிலையில் நிலைமை மிக வும் சீர்கெட்டிருந்தது. போரால் ஏற்பட்ட இத்தகைய அவலங் களிலிருந்து மீண்டு பழைய நிலையை எய்தவும், போரபாயங்களி லிருந்து தற்காத்துக் கொள்ளவும் ஐரோப்பிய நாடுகள் ஒற்றுமை யுடன் ஒன்றுபட்டே ஆகவேண்டுமென்ற எண்ணம் மேலோங்கி நின்றது. இத்தகைய எண்ணத்தின் அடிப்படையில், பல்வேறு உருவங்களில், பல அமைப்புக்கள் ஐரோப்பாவில், குறிப்பாக மேற்கு ஐரோப்பாவில் எழுந்தன. அவற்றினைப் பொதுவாக அரசியல் துறை, பொருளாதாரத் துறை, இராணுவத் துறை, அறிவியல் மற்றும் தொழில் நுணுக்கத் துறை என வகைப் படுத் தலாம்.

ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புடன் ஐரோப்பாவை ஒன்றுபடுத்த வேண்டுமெனும் முயற்சி இரண்டாம் உலகப் போருக்குப்பின் தீவிரமடைந்து ஓரளவு பயன்தரத் தொடங்கியது என்றாலும், இக்கருத்து புதுமையான ஒன்று அல்ல. பதினேழாம் நூற்றாண்டில் புகழ் பெற்று விளங்கிய பிரஞ்சு மன்னன் நான்காம் ஹென்றியின் நல்லமைச்சரான சல்லி (Sully) என்பார், ஐரோப் பாவில் போரைத் தவிர்ப்பதற்கும் ஒற்றுமை நிலவச் செய்வதற் கும் சீரிய திட்ட மொன்றை வெளியிட்டார். நெப்போலினியப் போரின் முடிவில் சார் மன்னர் முதலாம் அலெக்சாந்தரும் கிறித்தவ நாடுகளின் ஒன்றியத்திற்கான திட்ட மொன்றை வெளி யிட்டார். இங்கிலாந்தின் அயல்நாட்டு அமைச்சர் காசில்ரேயின் நெப்போலியனை எதிர்த்துப் போரிட்ட நான்கு சக்திகளின் நிரந்தரக் கூட்டமைப்புத் திட்டம் அமைதியைக் காக்க உதவும் என்று கருதப்பட்டது. 1818ஆம் ஆண்டில் அய்லா சாப்பல் மாநாட்டில் ஐரோப்பிய ஒற்றுமை எனும் கருத்தைச் செயல்படுத் தும் வகையில் சார் மன்னர் ஒரு திட்டத்தை அறிவித்தார். அதன் படி வியன்னா உடன்படிக்கையில் கையொப்பமிடும் நாடுகள் சட்ட நீதியான அரசரின் அரியணையையும் நாட்டையும் காப்பாற்றும் உத்திரவாதம் அளிக்க வேண்டும். ஆயினும் இத்தகைய திட்டங்

கள் பயன்தரவில்லை. 1929ஆம் ஆண்டில் பிரஞ்சுப் பிரதமரான பிரையன் (Briand), சல்லியின் திட்டத்தை காலத்திற் கேற்ப விளக்கி அதனை வலியுறுத்தினர். இரண்டாவது உலகப்போரின் போதும் அதன் பின்னரும் வின்ஸ்டன் சர்ச்சிலும் இதே கருத்தை மெருகூட்டி வற்புறுத்தினர். போரைத் தொடர்ந்து வந்த சில ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தங்களது தற்காப்பிற் காக உலக நிறுவனமாம் ஐ. நா. வை மட்டும் நம்பியிருக்கத் தயாராக இல்லாத காரணத்தால் ஐரோப்பிய நாடுகளின் ஒற்றுமை எனும் கருத்து ஆக்கம் பெற்றது.

இதற்கிடையில் ஐரோப்பியக் கூட்டரசுக் கொள்கை வலி யுறுத்தப்பட்டு வந்தது. போருக்கு முன்பிருந்தே இயங்கி வந்த கூட்டரசுக்குழு (Federal Union) ஐரோப்பிய ஒற்றுமையே உலக ஒற்றுமைக்கான முதற் படியாக அமைய முடியும் எனக் கூறி வந்தது. அதற்காக ஐரோப்பாவில் கூட்டரசு அமைக்கப்பட வேண்டு மென்றும், தனி நாடுகள் தங்களது இறைமையை விட்டுக் கொடுக்க வேண்டு மென்றும், அந்த இறைமை ஐரோப்பிய மக்களிடம் பொறுப்புள்ள அரசு ஒன்றிடம் பொதிந்து கிடக்க வேண்டுமென்றும் கூட்டரசுவாதிகள் (Federalists) விரும்பினர். உறுப்பு நாடுகளிடையே எழும் பூசல்களைத் தீர்த்து வைப்பதற் கென்று கூட்டரசிற்குத் துணையாகத் தலைமை நீதிமன்றம் அமைய வேண்டுமென்றும், இவ்வரசின் தீர்மானங்களைச் செயல்படுத்த வாய்ப்பாகக் காவற்படை ஒன்று இருக்க வேண்டுமென்றும் அவர் கள் விழைந்தனர். 1948ஆம் ஆண்டில் தி ஹேக் நகரில் கூடிய மாநாட்டில் ஐரோப்பிய நாடுகளின் ஒருங்கிணைப்பு பற்றிய பல கருத்துக்களும் நடைமுறைச் சிக்கல்களும் விவாதிக்கப்பட்டன. ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்றங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்கள் அடங்கிய ஐரோப்பிய அவையைக் கூட்டு வது என்றும் முடிவாகியது. அடுத்த ஆண்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், டென்மார்க், லக்சம்பர்க், அயர்லாந்து, இத்தாலி, நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளின் அயல்நாட்டு அமைச்சர்கள் கூடி ஐரோப்பிய கவுன்சில் (Council of Europe) அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இது ஸ்ட்ராஸ்பர்க் (Strasburg) நகரைத் தலைமைப் பீடமாகக் கொண்டு செயல்படத் துவங்கியது. இதில் அமைச்சர் குழு என்றும் ஆலோசனை அவை என்றும் இரு அம்சங்கள் உண்டு. ஐரோப்பிய மக்களின் கருத்துக்களையும் லட்சியங்களையும் எடுத்துச் சொல்லும் மன்றமாக ஆலோசனை அவை விளங்கும். நாடுகளுக் கிடையே ஒற்றுமையை வளர்க்கும் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துவது அமைச்சர் குழுவின் பணியாகும். உறுப்பு

நாடுகளிடையே உறவை வளர்க்கவும் கூட்டரசின் முடிவுகளை ஏற்குமாறு தூண்டவும் செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. ஐரோப்பாவில் அரசியல் ஒற்றுமையை வளர்க்கும் நோக்குடன் உருவாகியுள்ள இக்கவுன்சில் சில பயனுள்ள பணிகளைச் செய்துள்ளது. ஐரோப்பா முழுவதற்குமான சில சட்டங்களை இயற்றியுள்ளது. மனித உரிமைகளுக்கான விதிமுறைகளை வரைந்துள்ளது. சட்ட விளக்கங்களும் தந்துள்ளது. போருக்குப்பின் சார் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு பிரான்ஸிற்கும் ஜெர்மனிக்கு மிடையேயான சிக்கலை விடுவிக்க உதவியது. உறுப்பு நாடுகளுக்கிடையேயான எல்லைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் வெற்றி கண்டு வருகின்றது. இங்ஙனம் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்கிடையே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், குறிப்பிட்ட சில பொருள்கள் பற்றி பொதுவான கொள்கைகளை வகுக்கவும், பயனுள்ள நிறுவனமாக இயங்கி வருகின்றது ஐரோப்பிய கவுன்சில்.

III

போரின் அழிவிலிருந்து மீளவும், பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொள்ளவும் ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபடுவதும் ஒத்துழைப்பதும் அவசியமாயின. ஆயினும் ஒருவிதத் தயக்கம் இருந்து வந்தது. 1947 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ட்ரூமன் கொள்கை அறிவிப்பு வெளியாகியது. அதன்படி கிரீஸுக்கும் துருக்கிக்கும் பொருளாதார உதவி அளிப்பதாக அமெரிக்க அரசாங்கம் உறுதியளித்தது. அதைத் தொடர்ந்து ஜூன் மாதத்தில் மார்ஷல் திட்டம் வெளியிடப்பட்டது. கூட்டு முயற்சி மூலமாக ஐரோப்பிய மீட்பு முயற்சி எதற்கும் அமெரிக்க ஆதரவு தருவதே மார்ஷல் திட்டமாகும். ஐரோப்பிய நாடுகளுக்கு உதவ என்று பெருந்தொகை ஒன்றை அமெரிக்க அரசாங்கம் ஒதுக்கியது. இதன் பயனாக ஐரோப்பிய நாடுகளிடையே பொருளாதாரத் துறையில் அதுவரை யில்லாத பிணைப்பு ஏற்பட்டது. 1948 ஆம் ஆண்டில் ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுறவு நிறுவனம் அமைக்கப்பட்டது. தனிப்பட்ட நாடுகளின் குறிப்பிட்ட தேவைகளை வரையறுத்து ஐரோப்பாவின் பொருளாதார மீட்சிக்கு வேண்டிய நீண்ட காலத் திட்டங்களை வகுப்பது இந்த நிறுவனத்தின் முக்கிய பணிகளாக இருந்தன. பல உருவிலான பொருளாதாரக் கூட்டுறவிற்கான அமைப்புகள் தோன்றுவதற்கும் இது வழி வகுத்தது. 1950 ஆம் ஆண்டில் பெல்ஜியம், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, லக்ஸம்பர்க், நெதர்லாந்து ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஐரோப்பிய நிலக்கரி எஃகு (ECSC) சமுதாயம் எனும்

கூட்டு அமைப்பினை நிறுவின. வாணிபத் தடைகளை நீக்கி நிலக்கரி, எஃகு ஆகிய மூலப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கிப் பொருளாதாரத் துறையில் மேம்பாடு அடைவது இதன் நோக்க மாகும். சிறிது காலத்திற்குப் பிறகு இங்கிலாந்து இக்கூட்டு நிறுவனத்தில் இடம் பெற்றது.

மூலப் பொருள்கள் உற்பத்தியில் ஒத்துழைக்க முன்வந்த பெல்ஜியம் முதலான அந்த ஆறு நாடுகளும் பொருளாதாரத் துறையில் மேலும் நெருக்கமாக இணைய முன் வந்தன. 1955 ஆம் ஆண்டில் மெஸ்ஸினா எனும் நகரில் கூடி, அங்கே இதற்கான முடிவினை எடுத்தன. மெஸ்ஸினா நாடுகள் எனப் பெயர் பெற்ற இந்த ஆறு நாடுகளும் ரோம் நகரில் கூடி ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டன. அதன் விளைவு 1958 ஆம் ஆண்டு உருவான ஐரோப் பியப் பொருளாதாரச் சமுதாயம் ஆகும் (The European Economic Community). உறுப்பு நாடுகளிடையேயான பொருளாதாரத் தடைகள் யாவற்றையும் நீக்கி, தொழிளாளர்களும் மூலதனமும் தடையின்றி உலவ வகைசெய்து, மற்ற நாடுகளுடன் பொதுவான வாணிபக் கொள்கையைக் கடைபிடிக்க வழிவகுக்கும் நோக்கத் துடன் ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் உருவாக்கப் பட்டது. ஐரோப்பிய நாடாளு மன்றம் என வழங்கப் பெறும் பொது அவை, அமைச்சர் அவை, செயற்குழு ஆகியவை இந்த ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயம் நன் முறையில் இயங்க உதவுகின்றன. பொருளாதாரச் சமுதாய முதலீட்டுக் கொள்கை களை ஒருங்கிணைப்பதன் மூலமாகவும், வாணிகத் துறையில் பொதுச் சந்தையை (Common Market) நிறுவுவதன் மூலமாகவும் மேற் குறித்த ஆறு நாடுகளையும் ஒரு தனிப் பொருளாதாரக் கூட்டாக, பிரிவாக இயங்குமாறு செய்துள்ளது. பொதுச் சந்தை பல் வேறு சுங்கத் தீர்வைகளும், இறக்குமதிப் பொருள்களின் அளவின் மீதான கட்டுப்பாடுகளும் அற்ற ஒரு வணிகர் கூட்டமாகும். அதாவது ஏற்றுமதி வரி முறையும், இறக்குமதியாகும் பொருள் களின் மீதான கட்டுப்பாட்டு முறையும் அமுலில் இருக்கும். எடுத்துக்காட்டாக இந்த ஆறு உறுப்பு நாடுகளும் தங்களது உற்பத்திப் பொருள்களைத் தங்களுக்குள் பரிமாறிக் கொள்வதில் முதலில் 10 சதவீத வரிக்குறைப்பை ஏற்றுக் கொண்டன. பிறகு அதனை 40 சத வீதமாக உயர்த்தின. இந்த ஐரோப்பியப் பொரு ளாதாரச் சமுதாயத்தைப் பீடித்த பிரச்சினைகள் பல. ஆனால் அவற்றை யெல்லாம் மன உறுதியுடன் தீர்த்து அது முன்னேறி வருகின்றது. 1860 ஆம் ஆண்டில் தொடங்கிய தடையிலா வாணிபச் சகாப்தத்திற்குப் பிறகு அக்கம் பக்கமாக இருந்த ஐரோப்பிய நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு இருக்க

வேண்டியதின் அவசியத்தை உணர்ந்ததன் விளைவாகவே இச் சமுதாயம் உருவாகியது என்பதால் இதனுடைய பெரும்பான்மை யான உறுப்பு நாடுகள் மேலும் பல நாடுகளை இணைத்து இதனை விரிவு படுத்த முயன்று வந்தன. கிரீஸ்டனும், துருக்கியுடனும் இதற்கான ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன. இருப்பினும் இங்கிலாந்து இக்கூட்டில் எளிதாக இணைய முடியவில்லை. 1956 ஆம் ஆண்டிலேயே பிரிட்டன் இந்நிறுவனத்தில் சேர முன் வந்தது. ஆனல் ஆரம்பத்திலிருந்தே பிரான்ஸ் அதற்கு முட்டுக் கட்டையிட்டு வந்தது. அதன் அதிபர் டிகால் அமெரிக்காவையும் அதன் செல்வாக்கிற்கு உட்பட்ட சில ஐரோப்பிய நாடுகளையும் வெறுத்தார். ஐரோப்பாவில் அமெரிக்கா தலையிடுவதை, அதன் செல்வாக்கு வளர்வதை, விரும்பாத அவர் அமெரிக்க-இங்கிலாந்து ராணுவத் தற்காப்பு ஒப்பந்தத்தை வெறுத்ததில் வியப்பில்லை. எனவே அவர் தமது சக்தி முழுவதையும் செலவிட்டு பிரிட்டனைப் பொதுச் சந்தையில் புகவிடாமல் தடை செய்து வந்தார். பிரிட் டனின் நாணய முறை, விளை பொருள்களின் விலை, காமன்வெல்த் நாடுகளுடன் பிரிட்டன் கொண்டிருந்த தனி உறவு போன்ற பிரச்சினைகளைக் காட்டி பொதுச் சந்தையில் பிரிட்டன் இடம் பெறுதல் பொருத்தமுடையதாக இல்லை என்று வாதிட்டு வந்தார். இதற்கிடையில் பொதுச் சந்தையில் இடம் பெற பிரிட்டன் வேறு சில ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து ஐரோப்பியத் தடையிலா வாணிபச் சங்கத்தை (The European Free Trade Association) உருவாக்கியது. இதில் பிரிட்டனைத் தவிர ஆஸ்திரியா, டென் மார்க், நார்வே, போர்த்துகல், ஸ்வீடன், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் சேர்ந்தன. 1959 ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோம் நகரில் இந் நாடுகளின் பிரதிநிதிகள் கூடித் தங்கள் நாடுகளிடையே சுங்கத் தீர்வையை நீக்கிப் பொருளாதார முன்னேற்றம் காண முடிவெடுத் தனர். அவர்கள் பொதுச் சந்தையுடன் ஒத்துழைக்கவும் முன் வந்தனர். பொதுச் சந்தையும் ஐரோப்பியத் தடையிலா வாணிபக் கழகமும் தங்களுடைய உறுப்பு நாடுகள் வளர்ச்சிக்கும் நல் வாழ்விற்கும் பேருதவி புரிந்து வருகின்றன. பிரான்ஸும், இத்தாலியும் பொருளாதார வளம் பெற்றுத் திகழ்வதற்கு பொதுச் சந்தை பெரிதும் உதவியுள்ளது. 1969 ஆம் ஆண்டில் டிகால் பதவி விலகிய பிறகு பொதுச் சந்தையில் பிரிட்டன் இணையும் வாய்ப்பு ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே காணப்பெற்ற குறுகிய, தந்நல எண்ணங்கள் பொது நிறுவனங் கள் தோன்றி வளரத்தடைகளாக இருந்த போதிலும் பொதுச் சந்தை போன்ற கூட்டு முயற்சிகள் பொருளாதாரத் துறையில் பெரும் பயன் கூட்டி வந்துள்ளதைப் பார்க்க முடிகின்றது.

IV

பொருளாதார ஒத்துழைப்புடன் கூட்டுப் பாதுகாப்பிற்கான முயற்சிகளும் ஐரோப்பாவில் எழுந்தன. முக்கியமாக சோவியத் யூனியனின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சிய நிலையில், கம்யூனிஸம் பரவுவதைக் தடுக்க மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து ராணுவத்தடை ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியம் உணரப் பட்டது. 1948 ஆம் ஆண்டில் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க் ஆகிய நாடுகள் பிரசல்ஸ் ஒப்பந்தம் செய்து கொண்டன. அதன்படி இந்நாடுகளில் ஒன்று தாக்குதலுக் குள்ளானால் மற்றவையும் ஒன்று சேர்ந்து பாதுகாப்புத் தர வேண்டும். ஆயினும் அமெரிக்க உதவியின்றி இந்த ஐரோப்பிய நாடுகள் மட்டும் பெருமெடுப்பில் படை பலத்தைப் பெருக்கிக் கொள்ள முடியாதென்பது தெளிவாயிற்று. ட்ரூமன் கொள்கை அறிவிப்பிற்குப் பின்னர் பிரசல்ஸ் ஒப்பந்த நாடுகளுடன் ஒத்துழைக்க அமெரிக்க அரசாங்கம் முன்வந்தது. 1947 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நியூயார்க்கில் வட அட்லாண்டிக் உடன் படிக்கை உருவானது. அதில் பிரிட்டன் முதலான பிரசல்ஸ் ஒப் பந்த நாடுகளும், டென்மார்க், நார்வே, ஐஸ்லாந்து, இத்தாலி, போர்த்துக்கல், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் கை யொப்பமிட்டன. ஐரோப்பாவிலோ அல்லது வட அமெரிக்கா விலோ உள்ள இந்நாடுகள் மீது தாக்குதல் நேருமானால் இவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து பகை நாட்டின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்ஙனம் ஒன்றிற்கொன்று உதவி செய்தல், கூட்டுப் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வட அட்லாண் டிக் ஒப்பந்த நாடுகளின் நிறுவனம் உருவாகியது. அரசியல் பொருளாதாரப் பணிகளை இந் நிறுவனம் மேற் கொள்ள வேண்டு மென்று கூறப்பட்ட போதிலும் அது முழுக்க முழுக்க ராணுவக் கூட்டாக மாறியது. ஒப்பந்த நாடுகள் படைப் பிரிவுகளை பொதுப் பாதுகாப்பிற்காக வைத்திருக்க வேண்டுமென்று வற்புறுத்தப் பட்டது. முதலில் பாரீஸ் இந் நிறுவனத்தின் கேந்திரமாக இருந்தது. பிறகு பிரசல்ஸ் நகரை மையமாகக் கொண்டது. தொடக்க காலத்தில் இதன் படைபலம் அதிகமாக இல்லையென்றாலும் கொரியப் போருக்குப் பின்னர் இதன் படை வலிமை பெருகியது. அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை ஐரோப்பாவில் அதிகரித்தது. நேட்டோ படைகள் திருத்தி அமைக்கப் பட்டன. ஒருங்கிணைந்த பாதுகாப்பிற்காக உயர் படைத் தலைவர் பதவி ஏற்படுத்தப் பட்டது. 1952 ஆம் ஆண்டில் கிரீஸும், துருக்கியும் இந் நிறுவனத்தில் வந்து இணைந்தன. 1955 ஆம் ஆண்டில் மேற்கு ஜெர்மனியும் படைகளைத் திரட்டவும்

ஐரோப்பியப் பாதுகாப்பிற்கு உதவவும் வாய்ப்பளிக்கப் பட்டது. ஜெர்மனி படை திரட்டுவதை பிரான்ஸ் கடுமையாக எதிர்த்தது. அதனால் ஐரோப்பியப் படைகளை ஒருங்கிணைந்த படையாக உருவாக்கும் திட்டம் வந்தது. அதுவே ஐரோப்பியப் பாதுகாப்புச் சமுதாயம் (European Defence Community) எனப் பெயர் பெற்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பு நிறுவனமான நேட்டோவிற்கு எதிராக சோவியத் யூனியன் வார்ஸா ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. அதில் ருஷியாவின் தலைமையில் கூடிய எட்டு நாடுகளும் நட்பு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவற்றின் அடிப்படையில் இணைந்த ராணுவக் கூட்டிற்கு வழிவகுத்தன. அதில் சோவியத் ஒன்றியம், அல்பேனியா, பல்கேரியா, செக்கோஸ்லவாக்யா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஹங்கேரி, போலந்து, ருமேனியா ஆகிய நாடுகள் இணைந்தன.

1955 ஆம் ஆண்டிற்குப் பிறகு வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம் பல சோதனைகளுக்கு உள்ளாகி ஓரளவு வலிமை குன்றியது. ருஷியாவில் ஸ்டாலின் மரணத்திற்குப் பிறகு கிழக்கு, மேற்கு நாடுகளிடையே பகைமை குறைந்தது. ''ஜெனீவா உணர்வு'' (சமாதான உணர்வு) மேலோங்கி நின்றது. பிரான்சின் அல்ஜீரிய சிக்கல் காரணமாகப் பிரஞ்சுப் படைகள் வெளியேறின, மேலும் சைப்ரஸ் சிக்கலும், சூயஸ் பிரச்சினையும் நேட்டோ கூட்டாளிகளிடையே வேற்றுமையை வளர்த்தன. கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் பெருகியபோது வழக்கமாக இருக்கும் படைகள் அதிகம் ஐரோப்பாவில் இருக்கத் தேவையில்லை யென்றும் கருதப் பட்டது. சோவியத் ஒன்றியத்தின் அச்சுறுத்தல்களும் அமெரிக்கா அடைந்த வெல்திறத் தோல்விகளும் ஒப்பந்த நாடுகளிடையே ஒருவித நெகிழ்ச்சியை உண்டு பண்ணின. இவற்றிற் கெல்லாம் மேலாக அமெரிக்க செல்வாக்கு வளர்வதை விரும்பாத பிரஞ்சு அதிபர் டிகால், பிரான்ஸின் தலைமையில் வலிமை வாய்ந்த ஐரோப்பா உருவாக வேண்டுமென்று ஆசைப்பட்டார். அதனால் வட அட்லாண்டிக் ஒப்பந்தக் கூட்டிலிருந்து வெளியேறவும் அவர் தயாராக இருந்தார். கனடாவும், தான் அனுப்பி வைத்த படைகளைக் குறைக்கப் போவதாக 1969 ஆம் ஆண்டில் அறிவித்தது. இவற்றினாலெல்லாம் இந்த நிறுவனத்தின் சக்தி குறைந்துள்ளது. சமாதானத்தைக் காப்பதற்காக இந்த நிறுவனம் உருவாக்கப் பட்டது எனக் கூறப்பட்ட போதிலும் சில சமயங்களில் அது போர் சிக்கல் எழும் அபாயத்தை வளர்த்துள்ளது. எப்படியென்றாலும் ஐரோப்பிய நாடுகளிடையே பாதுகாப்பிற்கான ஒற்றுமை உணர்வை ஓரளவு வளர்த்தது வட அட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனம் எனலாம்.

V

அறிவியல் விஞ்ஞானத் துறைகளிலும் ஐரோப்பிய நாடுகள் ஒத்துழைக்க முன் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஐரோப்பிய அணுசக்தி குழுமம் (European Atomic Energy Community) உருவானது. அமைதிக்கால ஆக்கப் பணிகளுக்கு அணு சக்தியைப் பயன் படுத்திக் கொள்ளக் கூட்டு முயற்சி எடுப்பதற்கு இது அமைக்கப் பட்டது. நவீன கருவிகள் உற்பத்தியிலும் ஒத்துழைக்க சில ஐரோப்பிய நாடுகள் முன் வந்தன. கன்கார்டட் வகை ஆகாய விமானங்களைக் கட்ட பிரான்ஸும், இங்கிலாந்தும் இணைந்து செயலாற்ற முனைந்தன. விண்வெளி ஆராய்ச்சியில் மேற்கு நாடுகள் தங்களுக்குள் ஒத்துழைப்பதுடன் சோவியத் யூனியனுடனும் ஒத்துழைக்கவும் தயாராக உள்ளன. இங்ஙனம் பல துறைகளில் ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட்டு உழைத்து முன்வந்த போதிலும் அவற்றிற்கிடையேயான குறுகிய தேசிய உணர்ச்சி, தந்நலம் ஆகியவை முழு அளவிலான, நிரந்தரமான ஒற்றுமையை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. முக்கியமாக ஐரோப்பா பிளவுண்டு கிடக்கின்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகளும் சோவியத் யூனியனின் தலைமையில் உள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ஒன்றிற் கொன்று ஐயம் கொண்டு, போட்டி நாடுகளாக, ஓரளவு பகைமை கொண்ட நாடுகளாக இயங்கி வருவதால் ஒன்றுபட்ட ஐரோப்பா இன்னும் எட்டாத கனியாகவே இருந்து வருகின்றது.

24. தற்கால நாகரீகக் கூறுகள்

I

இரு பெரும் போர்களினூல் அலைக்கழிக்கப்பட்ட இருபதாம் நூற்றாண்டு பொருளாதார, தொழில் சார்ந்த நிறுவனங்களில் பெருமாறுதல்களைத் தோற்றுவித்திருப்பதுடன் விஞ்ஞானத்தில் புதுப்புனைவுச் செயல்களிலும் விஞ்சி நிற்கின்றது. மனிதனின் அடிப்படைக் கருத்துக்களில் பெருமாற்றங்களை விளைவித்து, புதிய ஆற்றல்களை வளர்த்து, இதற்கு முன் கற்பனைக்கும் எட்டாத, கனவிலும் காணமுடியாத பல அற்புதங்களைக் கொண்டு வந்து அரியதொரு நாகரீகத்தினை உருவாக்கியுள்ளது. இயற்கைச் சக்திகளின் மீது மனிதன் கொண்டிருக்கும் ஆட்சி எப்போதையும் விடத் தெளிவாக உள்ளது. வாழ்க்கை வசதிகள் பெருகிக் கட்டிடக் கலையில், இலக்கியத்தில், இன்கலைகளில் ஏற்றம் கண்டு நாகரீக வாழ்க்கையை நாநில மக்கள் துய்க்க வழி ஏற்பட்டுள்ளது. இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனிதனின் அடிப்படைக் கருத்துக்களில் பெருமாற்றங்கள் தோன்றியுள்ளன. முன் எப்போதும் இருந்ததைவிட தேசிய உணர்ச்சி கடுமையாகவும், பொறுமையற்றதாகவும் உள்ளது. தன்னாடு, தனது நாட்டு நலன் என்பன மக்கள் மனதில் மேலோங்கி நிற்கின்றன. ஆனால் தனிச் சுதந்திர அரசு, எவ்வாற்றானும் தொடர்பற்றுத் தனித்து வாழும் அரசு, இனி அமைவது அரிது. நாடுகள் ஒன்றை ஒன்று சார்ந்து ஒத்துழைப்பதன் மூலமே நலம் பெற முடியும். நாகரீகமும் வளமும் தனி அரசு ஒன்றின் அல்லது ஒரு கண்டத்தின் முயற்சிகளைச் சார்ந்தன அல்ல. தன்னேக்கம், எல்லை முதலியவற்றில் நவீன அரசியல், பன்னாட்டைச் சார்ந்ததாகவும், முழுமொத்தமாகவும் வளரும் பாங்கினைப் பெற்றுள்ளது. உலக நிறுவனமாம் ஐ. நா. உறுப்பு நாடுகளின் முழு நம்பிக்கையையும் ஆதரவையும் பெறவில்லை யென்றாலும் பன்னாட்டுணர்வு அடிப்படையில் பல நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படுவதைப் பார்க்கின்றோம். அமெரிக்காவின் தலைமையையேற்ற நாடுகளின் கூட்டம் ஒருபுறம்; ரஷியாவின் தலைமையிலான கம்யூனிச நாடுகளின் கூட்டம் ஒருபுறம்; இவற்றிற்கிடையே மூன்றாவது உலக சக்திகளாகக் கூட்டுச்சேரா நாடுகளின் கூட்டம் ஒருபுறம்.

இப்படியாக உலக நாடுகள் ஒன்றைஒன்று சார்ந்து நிற்கும் கூட்டங்களாக இயங்கி வருகின்றன. குடியேற்ற நாடுகளெனும் கீழான நிலைமாறி, பழைய காலனி ஆதிக்கம் ஒழிந்து பல்வேறு நாடுகள் உரிமை பெற்ற நாடுகளாக உலவ வழியேற்பட்டுள்ளது. ஆயினும் பொருளாதார ஒத்துழைப்பு, படைக்கல உதவி என்பன போன்ற போர்வையில் புதிய காலனி ஆதிக்கமும் உலகில் எழுந்து விடுமோ என்றும் அச்சம் எழுந்துள்ளது. இரு வல்லரசுகளின் தலையீடின்றி நாடுகள், குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகள், வாழ முடியுமா என்கின்ற ஐயப்பாடும் எழுந்துள்ளது. இவற்றிற் கிடையே கூட்டுச்சேரா நாடுகள் கூடுமானவரை சிறிய நாடுகளின் உரிமையை, தனித்தன்மையைக் காக்கும் சக்தியாக வளர்ந்து வருகின்றன.

பொருளாதார, மற்றும் தொழில் சார்ந்த நிறுவனங்களில் பெருமாறுதல்கள் தோன்றி வருகின்றன. உற்பத்தியில் புதிய உத்திகள், புதிய சாதனங்கள் ஆகியவை பொருள் பெருக்கத்திற்கு உதவியுள்ளன. ஒரு காலத்தில் பிரிட்டனுக்குப் பெரிதளவு செல்வத்தையும் வளத்தையும் அளித்த தனியுரிமைக் கொள்கை தோல்வியடைந்துள்ளது. அடிமைப்பட்டு அரசியல் ஆதிக்கத்திற் குட்பட்டிருந்த நாடுகள் பல விடுதலை பெற்றுப் பொருளாதாரத் துறையில் வல்லரசுகள் ஆட்டியபடியெல்லாம் ஆடி சுரண்டலுக் குள்ளாகி யிருந்த நிலைமாறி தங்கள் நாட்டு வளங்களைப் பெருக்கி வாழ வேண்டுமென்ற விருப்பத்தோடு செயல்பட்டு வருகின்றன. ''நாமெல்லாம் மற்றொன்றின் ஒன்றுன பகுதிகள்'' எனும் கூற்று புதிய பொருளைக் கொண்டுள்ளது. முதலாளித்துவக் கொள் கைக்கு ஒரு மாற்றுகப் பொது உடமைக் கொள்கை வந்த போதி லும் தனிநலம், கொள்ளை லாபம் ஆகியவை மறைந்து தொழி லாளர் நலம் காணப்படுகின்ற போதிலும் ருஷியாவின் பொது உடமைக் கொள்கை விரைவான மாறுதலை அடைந்து வருகின்றது. கொள்கைகள் சித்தாந்தங்கள் அடிப்படையில் கம்யூனிஸ உலகி லேயே வேற்றுமைகள் எழுந்து ருஷியாவும் சீனவும் பகைமை பாராட்டும் நிலை உருவாகியுள்ளது. இந்நாடுகளில் தொழில் களின் வளர்ச்சி, வாணிபக் கொள்கை போன்றவற்றிலும் பெரு மாறுதல்கள் எழுந்துள்ளன. மனித இனத்தின் பொருளாதார வாழ்க்கை தங்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவது என்ற நிலை மாறிவிட்டது. பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையாகத் தங்கத்தைத் தவிர வேறெதையும் வைக்க முடியாது என்று இருந்த நிலை மாறி இன்று உலகின் பெரிய நாடுகளெல்லாம் ''பொன் நாணயத் திட்டத்தைக்'' கைவிட்டுக் காகிதச் செலாவணித் திட்டத்தை

மேற்கொண்டு வருகின்றன. பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடுகளுக்குப் பொருளுதவி, தொழில் நுட்ப உதவி, வாணிபச் சலுகைகள் முதலானவைகளை அளித்து ஓரளவு முன்னேற்ற மடையச் செய்வது உலக அமைதிக்கு அவசியம் எனும் கருத்து மெள்ளத் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. வளர்ந்த நாடுகள், வல்லரசுகள் இத்தகைய பொருளாதார உதவியை ஒரு கொக்கி யாகப் பயன்படுத்திச் சில பல நாடுகளைத் தங்கள் பக்கம் இழுத்துத் தங்களது வலிமையைக் கூட்ட முற்படும் அதே சமயத்தில் இத் தகைய உதவிகளை இரு நாடுகளுக்கு மிடையேயான ஒப்பந்தங்கள் மூலமாகச் செய்வது என்றில்லாமல் பன்னாட்டு நிறுவனங்கள், அமைப்புக்கள் மூலமாகச் செய்தல் சாலச் சிறந்தது எனும் கருத்தும் வளர்ந்து வருகின்றது. உலக பாங்க், பன்னாட்டு நாணய நிதி நிறுவனம் (International Monetary Fund) முதலியவை இத்தகைய பணியில் ஈடுபட்டுள்ளன.

II

விஞ்ஞான தொழில்நுட்ப விந்தைகள்

இருபதாம் நூற்றாண்டு முரண்பாடுகளும் இரு உலகப் போர் களின் அழிவுகளும் மலிந்தது என்றாலும் ஆக்கபூர்வமான வெற்றி களும் கிடைத்த காலமாகும். சார்பியல் கொள்கையும் (Theory of Relativity) அணு ஆராய்ச்சியும் அண்டம் பற்றியும் (Universe) அதன் பகுதியான நில உலகம் பற்றியும் நாம் கொண்டிருந்த கருத்து பெரும் மாறுதலுக்குள்ளாகி யிருப்பதே இதற்குச் சிறந்த சான்றாகும். மருத்துவத் துறையில், மன இயல் துறையில், உள மருத்துவத்தில், உயிரியலில் வியத்தகு விந்தைகள் நிகழ்ந்துள்ளன. மேலும் மோட்டார் வாகனங்கள், ஆகாய விமானங்கள், வெள்ளித்திரை, வானொலி, தொலைக்காட்சி (Television) ஆகிய துறைகளில் ஏற்கெனவே இருந்தனவற்றைச் செம்மை செய்தும், புதியன புகுத்தியும் பெரும் புரட்சி யொன்றே நிகழ்ந்துள்ளது. இத்தகைய வியத்தகு விஞ்ஞான வெற்றிகள் ஐரோப்பாவிற்கு மட்டும் சொந்தமானவையல்ல எனினும் இதில் ஐரோப்பிய அறிஞர்கள் பங்கு பெரியது. இயற்பியல் துறையில் (Physics) பத்தொன்பதாம் நூற்றாண்டில் நியூட்டனின் கருத்துக்களுக்கும் கிளார்க் மாக்ஸ்வெல் (Clerk Maxwell) என்பாரது கொள்கைக்கு மிடையேயான முரண்பாட்டினைச் சரிசெய்யும் வகையில் ஜெர்மன் நாட்டு மேதையான ஆல்பர்ட் அய்ன்ஸ்டீன் சார்பியல் கொள்கையை உலகிற்களித்தார். இயற்கையை ஓரளவு விளங்கிக் கொள்ளவும் அதன் மீது ஆதிக்கம் செலுத்தவும் ஆன மற்று மொரு முயற்சி அணுசக்தி கண்டுபிடிப்பாகும். தாம் செய்த

கதிரியக்க ஆய்வுகளைக் கொண்டு அணு ஒரு திடப்பொருள் அல்ல, புரோடான் எலக்ட்ரான் எனும் மின்சக்திகளின் கூட்டே என்று ருத்தர்போர்டு (Rutherford) தந்த விளக்கத்தையும் பிளாங்க் என்பார் விட்டுச்சென்ற ஆற்றல்அலை வீச்சுக் கோட்பாட்டையும் (Quantum Theory) பயன்படுத்தி 1913ஆம் ஆண்டில் டேன் நீல்ஸ் போர் என்பார் அணுவின் அமைப்பு பற்றிய பொதுக் கோட்பாட்டினை உருவாக்கினர். இந்த அடிப்படையை வைத்துக் கொண்டுதான் வெர்னர் ஹிஸ்ன்பர்க், எர்வின் ஸ்குரோடிங்கர், வால்டன், சாட்விக் போன்ற பேரறிஞர்கள் அரிய ஆராய்ச்சிகள் செய்து அணுவைப்பிளந்து அதனுள் அடங்கிக்கிடக்கும் அளவிலாச் சக்தியை வெளிப்படுத்திக் காட்டினர். அணுவைப் பிளப்பதால் அஞ்சத் தக்க புதியதோர் ஆற்றலைப் படைக்க முடியும் என்ற விஞ்ஞானிகளின் கனவும் கற்பனை எழுத்தாளர்களின் புனைந்துரை யும் நனவாகும் காலம் வந்து விட்டது. இரண்டாவது உலகப் போரின் போது ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் விஞ்ஞானிகள் பெரிய அளவில் திட்டமிட்டு அணுஆயுத உற்பத்தியில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்தனர். ஒரு வேளை அணுகுண்டு செய்வதில் ஜெர்மனி முந்திக் கொண்டிருக்கக் கூடும். ஆனால் நார்வேயின் மீது ஏற்பட்ட துணிகர திடீர் தாக்குதலால் ஜெர்மனி அங்கு மறைத்து இருந்த ''கனநீர்'' (Heavy Water) அழிந்து விட்டது. எவ்வாறெனினும் 1945ஆம் ஆண்டில் பெரு நடுக்கத்தை ஊட்டும் அணுகுண்டு எனும் பூதம் அமெரிக்காவில் தோன்றியது. அந்த ஆண்டில் ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி ஆகியவற்றின் மீது இரு குண்டுகள் வீசப்பட்டன. அது வரையில் வானவூர்திப் படைகளாலும் பல டன் எடையுள்ள வெடிகுண்டு களாலும் விளைவிக்கக் கூடிய அழிவினை விஞ்சும் பேரழிவினை அணு குண்டு தோற்றுவித்தது. இதன் எல்லை பல மைல்களைக் கொண் டிருந்தது. நூறுயிரக் கணக்கானோர் இதற்குப் பலியாயினர். விஞ்ஞானம் தந்த இந்த பேரழிவுச் சக்தியை வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு பெருக்க முற்பட்டன. அணுகுண்டைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்த ஹைட்ரொஜன் குண்டுகளும், ஆளின்றியே அவற்றைத் தாங்கிச் சென்று நெடுந்தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கவல்ல கண்டம் விட்டுக் கண்டம் தாண்டும் ஏவுகணைகளும் கண்டுபிடிக்கப்பட்டு மனித சமுதாயமே கூண் டோடு அழிந்து விடுமோ எனும் அச்சம் எழுந்துள்ளது. இருப் பினும் அணுசக்தி அழிவிற்குத்தான் பயன்படவேண்டு மென்ப தில்லை. ஆக்கப் பணிகளுக்கும் அது அரிய வாய்ப்பாக வரமுடியும் என்பதை விஞ்ஞானிகள் காட்டி வருகின்றனர். அணுகுண்டு களைத் தொழிற்சாலை செய்முறைகளுக்கு சூழ்நிலைக்கேற்றவாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது.

நிலக்கரி, மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தி மின்சாரம் போன்ற பயனுள்ள பொருள்களை, சக்திகளைப் பெறக் கூடும் என்பதும் தெளிவாகியுள்ளது. இந்நூற்றாண்டின் முற்பகுதியின் சிறப்புக் கூறுகளில் ஒன்றாக இருந்தது வளி வெற்றியாகும் (Conquest of Air). பறவைகளைப் போல வானில் பறக்க வேண்டுமென்ற மனித இனத்தின் கனவு நனவாகியது. காற்றடைக்கப் பெற்ற ஸெப்ளின்கள் சிறிது காலம் பயன்பட்டு, பிறகு அவை மறைந்து ஆகாய விமானங்கள் பெருமளவில் பயன் படுத்தப் பட்டன. அவற்றின் அளவும் வேகமும் நாளுக்கு நாள் பெருகின. சில மணி நேரங்களில் உலகின் ஓர் மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு சென்றடையக் கூடிய நிலை வளர்ந்துள்ளது. போரின் போது இவ் வளர்ச்சிகளெல்லாம் மனிதனின் உயிர் மற்றும் செல்வம் முதலானவற்றை அழிப்பதை நோக்கமாகக் கொண்டுவந்த போதிலும் இவை உலக மக்களின் பொது நிலையான வாழ்வில் பெரும் பயன் கூட்ட வல்லனவாகவும் விளங்குகின்றன.

இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளியை வெற்றிகொண்ட மனிதன் விண்வெளியிலும் வெற்றியெனும் பாதையில் அடியெடுத்து வைத்துள்ளான். ஏவுகணைகள் ஆராய்ச்சியில் முன்னேறிச் செயற்கைக் கோள்களை விண் வெளியில் செலுத்தும் விந்தையைப் புரிந்துள்ளான். 1957ஆம் ஆண்டில் ஸ்புட்னிக் (Sputnik) எனும் விண்வெளிக் கலத்தைச் செலுத்திய ருஷியர்கள் உலகை வியப்பிலாழ்த்தினர். அதுமுதல் ருஷியாவும் அமெரிக்காவும் போட்டி போட்டுக்கொண்டு விண்வெளி ஆராய்ச்சியில் (Space Research) ஈடுபட்டுப் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றன. விண்ணில் பறப்பதுடன் நிலவுலகிற்குச் சென்று வரவும் செவ்வாய் கிரகத்திற்கும் கலன்களை அனுப்பி ஆராய்ச்சி செய்யவும் விஞ்ஞானம் வழி வகுத்துள்ளது. அரசியல் ஆதாயம், போரிடும் சக்திப் பெருக்கம் போன்ற நோக்கங்களுக்காக விண்வெளி ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன என்பது ஓரளவு உண்மையாயினும் அமைதிக் கான பணிகளில் மனித சமுதாயத்தின் வசதிக்கும் இத்தகைய ஆராய்ச்சிகள் பயன் தரத் தொடங்கி விட்டன. குறிப்பாக செய்திப் போக்கு வரத்தில் செயற்கைக் கோளங்கள் (Communication Satellites) சில அற்புதங்களை நிகழ்த்தி வருகின்றன.

உயிர் வேதியல், மருத்துவம், உயிரியல், மருத்துவ மற்றும் சமுதாய மன இயல் போன்ற பல அறிவியல் துறைகளிலும் அரிய கண்டுபிடிப்புகள், மனித வாழ்வைப் புரிந்து கொள்ளவும்

பொது நலத்தைப் பேணவும் உதவியுள்ளன. குறிப்பாக வைட்ட மின்கள், இன்சுலின், பெனிசிலின் போன்ற உயிர் காக்கும் மருந்து களும் ஸ்ட்ரெப்டோமைசின் (Streptomycin) ஆரியோமைசின் போன்ற நோய்க்கிருமிகளைக் கொல்லும் மருந்துகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அறுவை மருத்துவத்தில் இருதயம் முத லான நுட்மான உடலுறுப்புக்களை மாற்றியமைக்கும் அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மன மருத்துவ இயலில் சிக்மண்ட் ப்ரூயிட் (Sigmund Freud) போன்றவர்களும், சமுதாய இயலில் மாக்வெபர், வில்பிரடோ பரிடோ (Vilferedo Pareto) ஆகி யோரும் அரும்பணி யாற்றியுள்ளனர்.

III

இலக்கியம்

இலக்கியமெனும் பூங்காவில் எழில்மிகு மலர்கள், ஏற்றமிகு படைப்புக்கள் பல வெளி வந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டு தந்த எழுத்தாளர்களிற் பலர் இதற்கு முன் வாழ்ந்த தலைசிறந்த எழுத்தாளர்களுடன் ஒப்பிட்டுப் பேசும் தகுதி படைத்தவர்கள். தாமஸ் மான் (Thomas Mann), ஹெர்மன் ஹெஸ் (Herman Hess), மார்செல் புரௌஸ்ட் (Marcell Proust), ஆண்ட்ரே மால்ராக்ஸ் (Andre Malraux), டி. எச், லாரன்ஸ் ஜேம்ஸ் ஜாய்ஸ், மாக்ஸ் ஃபிரிச் (Max Frisch), அந்தோணி பவல், சார்ட்ரே (Sartre), சைமண்டி பிவொர் (Simon de Beauvoir), குந்தர் கிராஸ் (Gunter Grass), மார்டின் வல்சர், போரிஸ் பாஸ்டர்நாக், சோல்ஸனிட் ஸின் முதலான நாவலாசிரியர்கள் நாநிலம் போற்றும் தகுதி படைத்தவர்கள். ஹவுஸ்மேன் (A. E. Houseman), யீட்ஸ் (W. B. Yeats), டி. எஸ். எலியட், ஆடன் (W. H. Auden), பாவ லெரி, டைலன் தாமஸ், செயின்ட் ஜான் பெர்ஸ், மயாகோவ்ஸ்கி போன்ற தலை சிறந்த கவிஞர்கள் இக்காலத்தை அணி செய்தனர். இந்த இலக்கிய கர்த்தாக்களிற் பலர் பழமைக்கு எதிரான புரட் சியி லிறங்கியவர்கள். இவர்கள் சில சமயங்களில் புதுமையான, நடைமுறை ஒழுங்கு சாராத, பாணியைக் கடைப் பிடித்துள்ள னர். சிலர் சம கால ஐரோப்பாவை விட்டுவிட்டுத் தங்களது மன எழுச்சிக்காக, மையக் கருத்துகளுக்காக ஆப்பிரிக்காவையும் கிழக்கு நாடுகளையும் நோக்கினர்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு கவிதை இலக்கியத் தில் அத்தனை சீரிய படைப்புக்கள் வரவில்லையென்றாலும் நாவல், நாடகம், சினிமா போன்ற துறைகளில் உலகப் புகழ் பெற்ற படைப்புக்கள் தோன்றியுள்ளன. பிற நாடுகளுக்கு வழி காட்டி

யாக அமையும் வகையில் சில ஒப்பற்ற எழுத்தாளர்களும், நாடக ஆசிரியர்களும் திரைப்பட மேதைகளும் முன்னுக்கு வந்துள்ளனர். லாம்பசோவின் வரலாற்று நாவலான ''ரிசார்ஜிமென்டோ'', மாக் பிரிச்சின் ''ஸ்டில்லர்'', அந்தோணிபவலின் ''தி மியூசிக் ஆப் டைம்'', சைமன் டி பிவொரின் ''தி மண்டாரின்ஸ்'' மார்டின் வல்ஸ்ரின் ''ஹாப் டைம்'' (''Half Time'') கிராஸ் எழுதிய ''தி டின் ட்ரம்ஸ்'', போரிஸ் பாஸ்டர்நாக்கின் ''டாக்டர் ஷிவாகோ'', போன்றவை உலகப் பிரசித்தி பெற்ற நாவல்களிற் சில. நாடகத்துறையில், போருக்கு முன்னர் ஜார்ஜ் பெர்னட்ஷா, பால் கிளாடல் போன்றோர் சிறப்புற்று விளங்கினர். கிழக்கு ஜெர்மனியைச் சார்ந்த பெர்டோல்ட் பிரச் மேற்கத்திய நாடகாசிரியர் மீதும் செல்வாக்கு செலுத்தவல்ல மேதையாகத் திகழ்ந்துள்ளார். அவரது '' திரிபென்னி ஆபரா'' போன்றவையும், ஜான் ஒஸ்பார்னின் 'லுக் பேக் இன் ஆங்கர்'' போன்றவையும் நாடகத்துறையில் புரட்சியைத் தோற்றுவித்தன. அதைப் போலவே ''அபத்த நாடகங்கள்'' (Theatre of the Absurd) எனக்குறிப்பிடப் பெற்ற இயனெஸ்கோ எழுதிய ''தி சேர்ஸி'', ஹெரால்டுபிண்டர்ஸ் எழுதிய ''தி கேர்டேகர்'', டாம் டாப்பர்டு வரைந்த ''கில்டன்ஸ்டன்ர் ஆர் டெட்'' போன்றவை தனியிடத்தைப் பிடித்துக் கொண்டவை. திரைப்படத் துறையில் ஐரோப்பாவின் கேந்திரமாக விளங்கியது இத்தாலி. விட்டோரியோ டிசிகா, ரோசல்லனி ஆகியோர் இயக்குனர் திலகங்களாக விளங்கினர். ஸ்வீடனும் இங்கார் பர்க்மென் உருவாக்கிய ''செவந்த்சீல்'', ''வைல்டு ஸ்ட்ராபர்ரீஸ்'' போன்ற ஒப்பற்ற திரைப்படங்களை உலகிற்கு அளித்து உயர்ந்தது. பிரான்சில் ''காட் கிரியேடட் உமன்'' முதலான நியூவேவ் படங்களைத் தயார் செய்து புதிய பாணி ஒன்றும் உருவாக்கப் பட்டது. பீட்டர் செல்லர்ஸ், அலக்கினஸ் போன்ற திரையுலகக் கலைஞர்களின் சேவையால் இங்கிலாந்தும் இத்துறையில் தனக்கென ஓர் இடத்தைத் தேடிக்கொண்டுள்ளது.

IV

கட்டிடக் கலை, சிற்பம் ஓவியம்

இந் நூற்றாண்டுக் கலைகளில் உறுதிப்பாட்டையும் உயர் சாதனையையும் காண முடிகின்றது. இதைவிடக் கலைப் பொருள்களில் பழைய தோற்றம் (Form), பயன் தகுதி (Value) ஆகியவற்றில் புரட்சிகரமான மாறுதல்களைப் பார்க்க முடிகின்றது. கட்டிடக் கலையைப் பொறுத்தவரையில், புதிய கட்டுமானப் பொருள்களைப் பயன் படுத்துவதிலும் கட்டிடங்களின் பயனுக்கு

ஏற்ற தோற்றத்தினை அவற்றிற்கு அளிக்கும் உறுதியும் புதுமைகள் எனலாம். பெர்லின், வியன்னு, ஸ்டாக்ஹோம் ஆகிய ஐரோப்பிய நகரங்களில் புதிய பாணியில் அமைந்த கட்டிடங்கள் எழுந்துள்ளன. வால்டர் குரோபியஸ், லி கார்பூஸியர் (Le Corbusier) போன்ற கட்டிடக் கலை வல்லுநர்கள் முன்னோடிகளாக விளங்குகின்றனர். புதிய நகரங்கள் அமைப்பதிலும், பழைய நகரங்களைப் புதுப்பிப்பதிலும் லீ கார்பூஸியர், பக்கவாட்டில் வளர்வதைவிட மேல் நோக்கி வளர்வதை விரும்பினார். பிரேஸில் நகரமான ரியோடி ஜெனிரோ, ஜெர்மன் நகரமான பெர்லின், பஞ்சாபின் புதிய தலைநகரமான சண்டிகார் முதலியவற்றில் அவரது கைவண்ணத்தைக் காணலாம். எளிய ஆனால் இடம் நிறைந்த நகரங்கள், வானுயர்ந்த கட்டிடங்கள், அணைக் கட்டுகள், பாலங்கள், பொது மனைகள் இக்காலப் படைப்புகளில் இடம் பெறுகின்றன.

சிற்பக் கலையிலும் ஓவியத்திலும் ஏற்பட்டுள்ள பெருமாற்றங்கள் புரட்சிகரமானவை. அவற்றில் சில கலைப் படைப்புகளில் இயற்கையோடு இணைந்த தன்மையை (Naturalism) வேண்டுமென்றே புறக்கணிப்பதாக அமைந்துள்ளன. இயற்கைப் பொருள்களின் உருவைச் சிதைத்து, கலைஞன் தனது உணர்ச்சிகளைக் கோடிட்டுக் காட்டும் முறையில் இவை உருவாக்கப் பெற்றுள்ளன. இத்தகைய படைப்புகளைக் கண்டு அனுபவிப்பது ஓரளவு கடினமாக உள்ளதென்றாலும், ஒரு சிலவற்றைப் புரிந்து கொள்வதே பெரும்பாடாக இருக்கின்றது என்றாலும் இவற்றில் திண்மையும் செறிவும் பொதிந்துள்ளன. உள்ளுணர்வை வெளிப்படுத்தும் சாகலின் ஓவியங்களும் பிகாஸோவின் (Picasso) படைப்புகளும் சிரிகோ, டெலவாக்ஸ போன்றவர்களின் வரம்பில் அகவாய்மைக் கோட்பாட்டு (Surrealism) ஓவியங்களும் உலகப் புகழ் பெற்றனவை. எப்ஸ்டீன், ஹென்றி மூர் ஆகியோரின் சிற்பங்கள் இக்கால சிற்பக் கலையின் சிறப்பினைப் பறை சாற்றுகின்றன.

V

இசை, நடனம் போன்ற இன்கலைகளிலும் இருபதாம் நூற்றாண்டு குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் கண்டுள்ளது. இங்கேயும் புதுமைப் பாணி புகுந்துள்ளது. முக்கியமாக பீட்டில்கள் (The Beatles) என அழைக்கப்படும் லிவர்பூல் இசைக் குழுவினர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெரும் வரவேற்பு பெற்று ராக் இசைக்கு (Rock Music) உயிரூட்டியுள்ளனர். இந்த இசைப் பாணி, இன்றளவும் இளைஞர்களிடையே, குறிப்பாக மாணவர்களிடையே ஒரு பொது மொழிபோல் இயங்கி வருகின்றது. ஐரோப்பிய

நகரங்களில் இசைவாணர்களும், இசைக்கருவி கலைஞர்களின் குழுக்களும் (Orchestras) சிறப்புற்று விளங்குகின்றனர். ஹெர் பர்ட் வான் காஜான் தலைமையில் ''வியன்னா ஸ்டேட் ஆபரா'', ''பெர்லின் சிம்பனி'' ஆகிய இன் கலை நிறுவனங்கள் அருந் தொண்டாற்றி வந்துள்ளன. இசை நாடகங்கள், நாட்டியங்கள் இக்காலத்தே ஏற்றங் கண்டன. ''புரோமீதியஸ்'' போன்ற இசை நாடகங்களை உருவாக்கிய கலைஞர் கார்ல் ஓர்ப் (Carl Orff), ''எலிஜி ஃபார் எங் லவர்ஸ்'' முதலியவைகளைப் படைத்த ஹென்றி வான் கிறீஸ்ட் போன்றோர் இத்துறையை அணி செய்தனர். பாலே நடனங்களும் ஐரோப்பாவில், குறிப்பாக ருஷியாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. இங்ஙனம் எங்கே மூன்றாவது உலகப் போர் மூண்டு விடுமோ, மனித இனமே அழிந்து விடுமோ எனும் அச்சம் ஒரு புறம் இருந்த போதிலும் இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பா பல துறைகளிலும் உன்னதமான வளர்ச்சி பெற்று எதிர் காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்கும் நிலையில் உள்ளது.

துணை நூல்கள்

பொது

1. Grant and Temperley : *Europe in the 19th and 20th centuries, Sixth Edn.* (1952)
2. Hayes : *Political and Social History of Europe.* (1936)
3. Ketelbey : *History of Modern Times.* (1958)
4. Seignobos : *The Rise of European Civilisation.* (1944)

சிறப்பு

1. E. Emerton : *The Beginnings of Modern Europe* (1917)
2. D. B. W. Lewis : *King Spider, Louis XI.* (1929)
3. F. Schevill : *The Balkan Peninsula from the earliest times to the present day.* (1922)
4. G. E. Gillespie : *A History of Geographical Discovery,* 140 --1800. (1933)
5. A. P. Newton : *The Great Age of Discovery.* (1932)
6. C. V. Wedgwood : *The Thirty Years War.* (1939)
7. D. Ogg : *Europe in the Seventeenth Century.* (1925)
8. A. G. Grant : *French Monarchy* 1483–1789. (1920)
9. H. W. Van Loon : *Fall of the Dutch Republic.* (1924)
10. L. B. Packard : *Age of Louis XIV.* (1929)
11. C. T. Atkinson : *History of Germany* 1715–1815 (1908)
12. G. Brunoe : *The Enlightened Despots* 1763–1789 (1941)
13. L. Gershoy : *French Revolution.* (1935)
14. G. H. Rose : *Life of Napoleon.* (1934)
15. Sir Charles Webster : *Congress of Vienna* 1814–1815 (1920)
16. B, King : *History of Italian Unity.* (1899)
17. J. W. Headlam : *Bismarck and the Foundation of the German Empire.* (1899)
18. C. J. H. Hayes : *Contemporary Europe since* 1870 (1953)
19. M. T. Florinsky : *World Revolution and the U.S.S.R.* (1933)
20. C. J. Haines and R. J. S. Hoffman : *Origins and Background of the Second World War.* (1947)

கலைச்சொற்கள் அகராதி
(GLOSSARY OF TECHNICAL TERMS)

Aeroplane - வானக்கப்பல், ஆகாயவிமானம்.

Age of Despots - யதேச்சாதி காரிகளின் காலம்.

Archbishop - அதிமேற்றிராணி யார்,

Association for worship - ஆரா தனைச் சபை.

Balance of Power - வல்லரசு சம நிலை; சக்திச் சமநிலை.

Bartholomew Day Massacre - பார்த்தலமியோ நாள் படு கொலை.

Beneficent Autocracy - நன்மை பயக்கும் யதேச்சாதிகாரம்.

Benevolent Despotism - உணர்வு ஒளிர் வல்லரசு.

Bicycle - துவிச்சக்கரவண்டி.

Big Four - பெருநான்கு; நான்கு வல்லரசுகள்.

Biologists - உயிரியல் அறிஞர்.

Bishopric - மேற்றிராணிப் பட்டணம்,

Cabinet - அரசியல் குழு, கேபினெட் சபை.

Calvinism - கல்வினீயம்.

Cardinal - கர்தினல்.

Catholicism - கத்தோலிக்க சமயம்,

Central Executive - தலைமைச் செயற்குழு; மத்திய நிர்வாக சபை.

Chamber of Accounts - கணக் காய்வுக்குழு.

Chamber of Customs - சுங்கவரிக் குழு.

Church - திருச்சபை.

Code of Criminal and Civil Procedure - கிரிமினல், சிவில் முறைகள்.

Communion - அப்பம் மாறுதல்,

Communism - பொதுவுடைமைக் கொள்கை.

Concordat - திருச்சபை ஒப்பந்தம்.

Confederation - கூட்டுறவு நாடு; கூட்டிணைப்பு.

Continental System - ஐரோப்பிய வணிகமுறை: கண்டத் திட்டம்.

Constituent Assembly - அரசியல் நிர்ணய சபை.

Constitutional Kingship - சட்ட வரம்பிற்குட்பட்ட முடியாட்சி; சட்டப்படி இயங்கும் அரசு.

Consultative Association - சர்வதேச சிக்கல்களை விவாதிக்கும் சங்கம்.

Corridor - வழிப்பிரதேசம்.

Counter Reformation - சமய சீர்திருத்த மறுப்பியக்கம்,

Creed - கோட்பாடு.

Crusade - சிலுவைப் போர்.

Dark Ages - இருண்ட காலம்.

Dawes Plan - டாவஸ் திட்டம்.

Democracy - மக்கள் அரசு; ஜனநாயகம்.

Democrats - ஜனநாயகவாதிகள்.
Dictatorship - வல்லாட்சி; தனி மனிதனுட்சி.
Disarmament - படைக்குறைப்பு.
Economic Barriers - பொருளாதாரத் தடைகள்.
Enteule cordial - நேச ஒன்றிப்பு; நேச நாடுகளின் ஒப்பந்தம்.
Era - ஊழி.
Evolution - படிமுறை வளர்ச்சி.
Executive - அரசியல் மன்றம்.
Fascism - பாஸிஸம்.
Federal Council - கூட்டிணைப்புச் சபை.
Feudalism - நில மானிய முறை.
Flying bombs - பறக்கும் குண்டுகள்.
Free Trade - தடங்கலில்லா வாணிபக் கொள்கை; தடையிலா வாணிபம்.
General Assembly - பொதுச் சபை.
General Security Council - பாதுகாப்புக் கவுன்சில்; பாதுகாப்புச்சபை.
Grand Duke - பெரும் பிரபு.
Holy Alliance - தூய இணைப்பு; புனிதக் கூட்டுறவு.
Holy League - புனிதச் சங்கம்.
Holy Roman Empire - புனித உரோமப் பேரரசு.
Huguenot - ஹியுக்நோ.
Industrial Revolution - தொழிற் புரட்சி.
Inquisition - கடும் விசாரணை.
International Trade - நாடுகளுள் வாணிபம்; பன்னாட்டு வாணிபம்.
Internationalism - பன்னாட்டுறவுணர்ச்சி.
Judiciary - நியாய மன்றம்.
King's Council - அரசர் ஆலோசனைக் குழு.
League of Nations - சர்வதேச சங்கம்.
Legislature - சட்டமன்றம்.
Legitimists – நியாய வாதிகள்.
Local Self Government - தன்னாட்சிமுறை.
Logicians - தர்க்கவாதிகள்.
Manufacturers - பொருள் உண்டாக்குவோர்.
Mercenaries - கூலிப்படை.
Middle Ages - இடைக்காலம்.
Military Academy - படைப் பயிற்சிப்பள்ளி.
Military rule – படையாட்சி.
Ministers without portfolio - குறிப்பான பொறுப்பில்லாத அமைச்சர்கள்.
Monarchists - தனி அரசாதரவாளர்.
Munro Doctrine - மன்ரோக் கொள்கை.
Nationalism - தேசியம்.
National Constituent Assembly - அரசியல் அமைப்புச் சபை
National State - தேசிய நாடு. தேசிய அரசு.
National Workshops - தேசிய வேலை தருமிடங்கள்.
Natural Selection - இயற்கைத் தேர்தல்.
Nazism - நாஸிஸம்.
Nihilism - சூனிய வாதம்.
Ordinances of St. Claud - இளப்டுச் சட்டங்கள்.
Parliament - பாராளு மன்றம்.
Pope - போப்.
President - தலைவர்.
Presidium - பிரசீடியம்.
Protestant - புராட்டஸ்டன்ட்.
Puritans - கடுந்தூய சமயத்தினர்.
Reformation - சமயச் சீர்திருத்த இயக்கம்.

Reign of Terror - பயங்கர ஆட்சி
Renaissance - மறுமலர்ச்சி
Representative Government - பிரதிநிதித்துவ அரசு
Russian Socialist Federal Soviet Republic - ருஷ்ய கூடிவாழ் வுடமைக் கூட்டுக் குடியரசு.
Rule of the Proletariat - மக்களாட்சி, தொழிலாளர் ஆட்சி.
Senate - மேல்சபை, சேனட்.
Socialism - சமத்துவ உணர்ச்சி, சோசலிசம்.
Socialists - சமத்துவக் கொள் கையாளர்.
Social Contract - சமுதாய ஒப்பந்தம்.
Social Democratic Party - சமுதாய ஜனநாயகக்கட்சி
Solemn League and Covenant - நாடுகளின் சங்கமும், ஒப்பந்தப் பத்திரமும்.
Sovereignty - ஆட்சி முதன்மை
Soviet Peoples Commissars - மக்களவைக்குழு
Submarine-நீர்மூழ்கிக் கப்பல்
Supreme Court-தலைமை நீதி மன்றம்
Surgery-சருவிமுறை, அறுவை மருத்துவம்
Telephone-தொலைபேசி
Territorial Sovereignty-நில உரிமை ஆட்சி
Third French Republic-மூன்றும் பிரஞ்சுக் குடியரசு
Toleration-சமயப் பொறை
Trench Warefare-குழிச்சண்டை முறை
Tripple Alliance-முத்திறத்தார் ஒன்றிப்பு
U.N.O. - ஐக்கிய நாடுகள் சபை
Wealth of Nations-நாடுகளின் செல்வம்

அணு-Atoms
அதிமேற்றிராணியார்-Archbishop
அப்பம் மாறுதல்-Communion
அரசர் ஆலோசனைக்குழு-King's Council
அரசியல் அமைப்புச்சபை / அரசியல் நிருணயசபை -Constituent Assembly
அரசியல் மன்றம்-Executive
ஆகாய விமானம்-Aeroplane
ஆட்சி முதன்மை-Sovereignty
ஆராதனைச் சங்கம்-Association of Worship
இடைக்காலம்-Middle Ages
இயற்கைத் தேர்தல்-Natural Selection
இருண்ட காலம்-Dark Age
உணர்வுஒளிர் வல்லரசு-Benevolent Despotism
உயிரியல் அறிஞர்-Biologists
உலக நாடுகள் சங்கம்-U. N. O.
ஐரோப்பிய வணிக முறை-Continental System
கடுந்தூய சமயத்தினர்-Puritans
கடும் விசாரணை-Inquisitor
கணக்காய்வுக்குழு-Chamber of Accounts
கத்தோலிக்க மதம் - Catholicism
கர்தினல்-Cordinal
கருவி முறை-Surgery
கல்வினீயம்-Calvinism
கிரிமினல், சிவில் முறைகள்-Code of Criminal and Civil Procedure
குழிச்சண்டை முறை-Trench Warfare
குறிப்பான பொறுப்பில்லாத அமைச்சர்கள்-Ministers without Portfolio
கூட்டிணைப்புச் சபை-Federal Council

கூட்டிணைப்பு, கூட்டுறவு நாடு - Confederation
கூலிப்படை–Mercenaries
கோட்பாடு-Creed; Theory
சக்திச் சமநிலை-Balance of Power
சட்டப்படி இயங்குமரசு - Constitutional Kingship
சட்டமன்றம்–Legislature
சமத்துவ உணர்ச்சி–Socialism
சமத்துவக் கொள்கையினர் - Socialists
சமயச் சீர்திருத்த இயக்கம்-Reformation
சமயச் சீர்திருத்த மறுப்பியக்கம்-Counter Reformation
சமயப் பொறை-Toleration
சமுதாய ஒப்பந்தம்-Social Contract
சமுதாயப் புரட்சிக் கட்சி-Social Revolutionary Party
சமுதாய ஜனநாயகக் கட்சி-Social Democratic Party
சிலுவைப் போர் - Crusades.
சுங்க வரிக்குழு - Chamber of Customs.
சூனியவாதம் - Nihilism.
செனெட் சபை - Senate.
டாவஸ் திட்டம் - Dawes Plan.
தடையிலா வாணிபம்; தடங்கலில்லா வாணிபக் கொள்கை – Free Trade.
தர்க்கவாதிகள் - Logicians.
தலைமை நீதி மன்றம் - Supreme Court.
தலைமைச் செயற்குழு - Central Executive.
தலைவர் - President.
தன்னாட்சி முறை - Local Self Government.
தனி அரசாதரவாளர் - Monarchists.
தனி மனிதராட்சி - Dictatorship.
திருச்சபை - Church.
திருச்சபை ஒப்பந்தம் - Concordat.
துவிச்சக்கரவண்டி - Bicycle.
தூய இணைப்பு - Holy Alliance
தேசிய நாடு - National State.
தேசிய வேலை தருமிடங்கள் - National Workshops.
தொலைபேசிக் கருவி - Telephone.
தொழிற் சங்கங்கள் - Trade Unions.
தொழிற் புரட்சி - Industrial Revolution.
நாடுகளின் சங்கமும் ஒப்பந்தப் பத்திரமும் - Solemn League and Covenant.
நாடுகளின் செல்வம் - Wealth of Nations.
நாடுகளுள் வாணிகம் - International Trade.
நான்கு வல்லரசுகள் - Big Four.
நாஸிஸம் - Nazism.
நியாய மன்றம், நீதி மன்றம் - Judiciary.
நியாயவாதிகள் - Legitimists.
நில உரிமையாட்சி - Territorial Sovereignty.
நிலமானிய முறை - Feudalism.
நீர்மூழ்கிக் கப்பல் - Submarine.
நேச ஒன்றிப்பு; நேச நாடுகள் ஒப்பந்தம் - Enteule Cordial.
படிமுறை வளர்ச்சி - Evolution.
படைக் குறைப்பு - Disarmament.
படையாட்சி - Military Rule.
படையாளர் பயிற்சிப் பள்ளி - Military Academy.
பர்த்தலோமியோ நாள் படுகொலை - Bartholomew Day Massacre.
பயங்கர ஆட்சி - Reign of Terror.
பறக்கும் குண்டுகள் - Flying Bombs.

பன்னாட்டு வாணிபம் - International Trade.

பன்னாட்டு உறவு வளர்ச்சி - Internationalism.

பாதுகாப்புக் கவுன்சில்; பாதுகாப்பு சபை - Security Council.

பாஸிஸம் - Fascism.

பிரசீடியம் - Presidium.

பிரதி நிதித்துவ அரசு - Representative Government.

புரோடஸ்டன்ட் - Protestant.

புனித உரோமப் பேரரசு - Holy Roman Empire.

புனிதக் கூட்டுறவு - Holy Alliance.

புனிதச் சங்கம் - Holy League.

பெரும் பிரபு - Grand Duke.

பொதுச்சபை - General Assembly.

பொது வுடமைக் கொள்கை - Communism.

பொருள் உண்டாக்குவோர் - Manufacturers.

பொருளாதாரத் தடைகள் - Economic Barriers.

போப் - Pope.

மக்கள் அரசு - Democracy.

மக்களவைக் குழு - Soviet Peoples Commissars.

மறு மலர்ச்சி - Renaissance.

மன்ரோக் கொள்கை - Monroe Doctrine.

முத்திறத்தார் ஒன்றிப்பு - Triple Alliance.

மூன்றும் பிரஞ்சுக் குடியரசு - Third French Republic.

மேல் சபை - Senate.

மேற்றிராணிப் பட்டணம் - Bishopric.

யதேச் சாதிகாரிகளின் காலம் - Age of Despots.

வல்லரசு சம நிலை - Balance of Power.

வல்லாட்சி - Dictatorship.

வழிப் பிரதேசம் - Corridor.

வானக்கப்பல் - Aeroplane.

ஜனநாயகம் - Democracy.

ஹியுக்நோ - Huguenot.

ஐரோப்பிய மன்னர்களின் வம்சாவளி

தூய ரோமச் சக்கரவர்த்திகள்

மாக்சிமில்லியன் I	1493-1519
சார்லஸ் V	1519-1556
வெர்டினுன்ட் I	1556-1564
மாக்சிமில்லியன் II	1564-1576
ருடோல்வ் II	1576-1612
மத்தையாஸ்	1612-1619
வெர்டினுன்ட் II	1619-1637
வெர்டினுன்ட் III	1637-1657
லெயோபால்ட் I	1658-1705
ஜோசப் I	1705-1711
சார்லஸ் VI	1711-1745
பிரான்சீஸ் I	1745-1765
ஜோசப் II	1765-1790
லெயோபால்ட் II	1790-1792
பிரான்சீஸ் II	1792-1806

ஓட்டமான் துருக்கி மன்னர்கள்

மகம்மது II	1451-1481
பயசித் I	1481-1512
செலீம் I	1512-1520
சூலேமான் II	1520-1566
செலீம் II	1566-1574
மூராட் III	1574-1595
மகம்மது III	1595-1603
மூராட் IV	1623-1640
இப்ராஹிம்	1640-1648
மகம்மது IV	1648-1687
முஸ்டபா II	1695-1703
அகம்மது III	1703-1730
மாமூட் I	1730-1754
ஓட்மான் III	1754-1757
முஸ்டபா III	1757-1773
அப்துல் அமீது I	1773-1789
செலீம் III	1789-1807
மாமூட் II	1808-1839
அப்துல் மெட்ஷித்	1839-1861
அப்துல் அசீஸ்	1861-1876
அப்துல் அமீது II	1876-1909
மகம்மது V	1909-1918
மகம்மது VI	1918-1922

ருஷிய மன்னர்கள்

ஐவன் III (மாபெரும் ஐவன்)	1462-1505
பேசில் IV	1505-1533
ஐவன் IV (பயங்கர ஐவன்)	1533-1584
தியடோர் I	1584-1598
போரிஸ் கொடுநாவ்	1598-1605
மைக்கில் ரோமநாவ்	1613-1645
அலெச்சியுஸ்	1645-1676
தியடோர் II	1676-1682
ஐவன் V	1682-1689
பீட்டர் I (மாபெரும் பீட்டர்)	1682-1725
கேத்தரின் I	1725-1727
பீட்டர் II	1727-1730
அன்னு	1730-1740
ஐவன் VI	1740-1741
எலிசபெத்	1741-1762
பீட்டர் III	1762
கேத்தரின் II (மாபெரும் கேத்தரின்)	1762-1796
பால்	1796-1801
அலெக்சாந்தர் I	1801-1825
நிக்கோலாஸ் I	1825-1855
அலெக்சாந்தர் II	1855-1881
அலெக்சாந்தர் III	1881-1894
நிக்கோலாஸ் II	1894-1917

பிரஞ்சு மன்னர்கள்

லூயி XII	1498-1515
பிரான்சீஸ் I	1515-1547
ஹென்றி II	1547-1559
பிரான்சீஸ் II	1559-1560
சார்லஸ் IX	1560-1574
ஹென்றி III	1574-1589
ஹென்றி IV	1589-1610
லூயி XIII	1610-1643
லூயி XIV	1643-1715
லூயி XV	1715-1774
லூயி XVI	1774-1792

பிரஞ்சுப் புரட்சி

நெப்போலியன் I	1804-1814

லூயி XVIII	18141824
சார்லஸ் X	1824-1830
லூயி பிலிப்பே	1830-1848
நெப்போலியன் III	1852-1870

ஸ்பெய்ன் மன்னர்கள்

வெர்டினண்ட் V	1506-1516
சார்லஸ் I	1516-1556
பிலிப் II	1556-1598
பிலிப் III	1598-1621
பிலிப் IV	1621-1665
சார்லஸ் II	1665-1700
பிலிப் V	1700-1746
வெர்டினண்ட் VI	1746-1759
சார்லஸ் III	1759-1788
சார்லஸ் IV	1788-1808
ஜோசப்	1808-1813
வெர்டினண்ட் VII	1813-1833
இசபெல்லா II	1833-1868
அமெடேயோ	1870-1873
குடியரசு	1873-1874
அல்போன்சோ XII	1865-1885
அல்போன்சோ XIII	1886-1931

போர்த்துக்கல் மன்னர்கள்

ஜான் III	1521-1557
செபாஸ்டியன்	1557-1578
ஹென்றி	1578-1580
ஸ்பெய்னோடு கூடிய காலம்	1580-1640
ஜான் IV	1640-1656
அல்போன்சோ VI	1656-1667
பீட்டர் II	1667-1706
ஜான் V	1706-1750
ஜோசப்	1750-1777
பீட்டர் III	1777-1786
மரியா I	1786-1816
ஜான் VI	1816-1826
பீட்டர் IV	1826
மரியா II	1826-1853
பீட்டர் V	1853-1861
லூயி I	1861-1889
சார்லஸ் I	1889-1908
மேனுவல் II	1908-1910

ஸ்கேன்டிநேவியா மன்னர்கள்

ஹான்ஸ்	1483-1513
கிரிஸ்டியன் II	1513-1523
பிரடிரிக் I	1523-1533
கிரிஸ்டியன் III	1533-1559
பிரடிரிக் II	1559-1588
கிரிஸ்டியன் IV	1588-1648
பிரடிரிக் III	1648-1670
கிரிஸ்டியன் V	1670-1699
பிரடிரிக் IV	1699-1730
கிரிஸ்டியன் VI	1730-1746
பிரடிரிக் V	1746-1766
கிரிஸ்டியன் VII	1766-1808
பிரடிரிக் VI	1808-1839

டென்மார்க் மன்னர்கள்

கிரிஸ்டியன் VIII	1839-1848
பிரடிரிக் VII	1848-1863
கிரிஸ்டியன் IX	1863-1909
பிரிடிரிக் VIII	1906-1912
கிரிஸ்டியன் X	1912-1947

சுவீடன் மன்னர்கள்

குஸ்டாபஸ் I வாசா	1523-1560
எரிக் XIV	1560-1568
ஜான் III	1568-1591
குஸ்டாபஸ் II அடால்பஸ்	1611-1632
கிரஸ்டினு	1632-1654
சார்லஸ் X	1654-1660
சார்லஸ் XI	1660-1697
சார்லஸ் XII	1697-1718
பிரடிரிக் I	1720-1751
அடால்பஸ்	1751-1771
குஸ்டாபஸ் III	1771-1792
குஸ்டாபஸ் IV	1792-1809
சார்லஸ் XIII	1809-1818
சார்லஸ் XIV	1818-1844
ஆஸ்கர் I	1844-1859
சார்லஸ் XV	1859-1872
ஆஸ்கர் II	1872-1907
குஸ்டாபஸ் V	1907-1950

போலந்து மன்னர்கள்

ஹென்றிவாலுஆ	1573-1574
ஸ்டீபன் பததோரி	1575-1586
சிஜிஸ்மன்ட் III	1587-1632
லடிஸ்லாஸ் IV	1632-1648
ஜான் II காசிமிர்	1648-1668
ஜான் III சோபியஸ்கி	1674-1696
அகுஸ்டஸ் II (சேக்சனி)	1697-1733

அகுஸ்டஸ் III 1733-1763
ஸ்டனிஸ்லாஸ் II 1763-1765

பிரஷ்ய மன்னர்கள்

பிரடிரிக் I 1701-1713
பிரடிரிக் வில்லியம் I 1713-1740
பிரடிரிக் II (மாபெரும் பிரடிரிக்) 1740-1786
பிரடிரிக் வில்லியம் II 1786-1797
பிரடிரிக் வில்லியம் III 1797-1840
பிரடிரிக் வில்லியம் IV 1840-1861
வில்லியம் I 1861-1888
பிரடிரிக் III 1888
வில்லியம் II 1888-1918

சேவாய்-இத்தாலிய மன்னர்கள்

விக்டர் அமடேயுஸ் II 1675-1730
சார்லஸ் எம்மானுவேல் III 1730-1733
விக்டர் அமடேயுஸ் III 1773-1796
சார்லஸ் எம்மானுவேல் IV 1796-1802
விக்டர் எம்மானுவேல் I 1802-1821
சார்லஸ் பெலிக்ஸ் 1821-1831
சார்லஸ் ஆல்பர்ட் 1831-1849
விக்டர் எம்மானுவேல் II 1849-1878
ஹம்பர்ட் I 1878-1900
விக்டர் எம்மானுவேல் III 1900-1945
ஹம்பர்ட் II 1945-1946

ஆஸ்திரிய மன்னர்கள்

பிரான்சீஸ் I 1804-1835
பெர்டினண்ட் I 1835-1848
பிரான்சீஸ் ஜோசப் 1848-1916
சார்லஸ் I 1916-1918

பொருட் குறிப்பகராதி

அ

அகுஸ்டன்பெர்க் பிரபு, 195
அங்கோலா, 308
அச்சு நாடுகள், 285
அசோரஸ், 19
அஞ்சோ பிரபு, 57
அட்மிரல் பெயாட்டி, 237
அட்மிரல் ஸைர்டி, 237
அட்லாண்டிக் சமுத்திரம், 20, 21, 99, 169, 290
அட்லாண்டிக் சாசனம், 290
அட்லி, 300, 301
அட்ரியாடிக் கடல், 253
அடிரியா நோப்பிள், 228
அடிஞர், 310
அபிசீனியா, 18, 273, 274, 275, 276, 288
அமியன்ஸ் சமாதானம், 158, 159, 160
அமெரிக்க ஐக்கிய நாடுகள், 272, 283,
அமெரிக்கா, 21, 22, 23, 43, 49, 57, 59, 90, 141, 159, 177, 184, 232, 234, 245, 246, 247, 265, 267, 276, 279, 280, 281, 288, 289, 290, 293, 301, 302, 306, 309, 310, 315, 320, 321, 324, 326, 327, 330, 382
அமெரிக்கா தென், 20, 22, 93, 184
அமெரிக்காப் புரட்சி, 140
அமெரிக்கா வட, 133,
அமெரிக்காவில் கால்வின் கொள்கை, 43
அமெரிக்கோ வெஸ்புச்சி, 21
அயர்லாந்து, 323
அய்ன்ஸ்டீன், 332
அர்ஜன்டினு, 295
அர்சூடாய், 28
அர்பன், ஆறும், 11
அரகன், 9, 29, 30
அரியோஸ்டோ, 16
அரிஸ்டாட்டில், 4, 13
அரேபியா, 262
அல்காரவ், 19
அல்பேனியா, 289, 297, 315, 316, 328
அல்ஜியர்ஸ், 303
அல்போன்ஸோ, மூன்றும், 19
அல்போன்ஸோ, ஸ்பெயின் மன்னன், 265, 275
அல்மார், 188
அலெக்சாண்டர், 171
அலெக்சாண்டர், பிரேசில் மன்னன், 263
அலெக்சாண்டர், ஆறும், 23
அலெக்சாண்டர், முதலாம், (ருஷ்ய மன்னன்), 58, 162, 246, 322
அலெக்சாண்டர், இரண்டாம், (ருஷ்ய மன்னன்), 220, 221, 224
அலெக்சாண்டர், மூன்றும், (ருஷ்ய மன்னன்), 224
அலேய்ஸ் உடன்படிக்கை, 72
அவிக்ஞேன், 10, 11
அஸாவு, 106, 112, 116
அன்டோனியோ கர்மோனவ், 308

ஆ

ஆக்ஸ்பர்க் உறுதிப்பாடு, 44, 45, 61
ஆசியா, 246, 297

ஆசிய மைனர், 215, 262, 263
ஆஞ்சோ பிரபு, பிலிப், 93
ஆஞ்சோ பிரபு, பிலிப், ஐந்தாம் (ஸ்பெயின் மன்னன்), 97
ஆப்பிரிக்கா, 20, 44, 178, 231, 253, 279, 281, 283, 284, 285
ஆப்பிரிக்கா, வட, 30, 232, 284
ஆப்பிரிக்கா, தென், 202
ஆப்பிரிக்காப் பிரிவினை, 215
ஆம்ஸ்டர்டாம், 58, 89
ஆர்க், 52
ஆர்குரூ, 81
ஆர்க்கேஞ்சல், 239
ஆர்கோ, 28
ஆர்கோன்ஸ் மலைகள், 147
ஆர்மீனியா, 215, 216
ஆர்லியான்ஸ், 46, 49
ஆர்லியான்ஸ் பிரபு, 100, 141, 142
ஆர்லியான்ஸ் பிரபு, கேஸ்டன், 71, 72
ஆர்லியான்ஸ் பிரபு, பிலிப்பே, 178, 179, 180, 181
ஆரஞ்சு வில்லியம், மூன்றும் 89, 90, 91, 94
ஆஸ்கேன், 69, 91, 202, 210, 212, 246, 248
ஆஸ்கேன்—லொரென், 90, 211, 245
ஆல்ப்ஸ் மலை, 36, 78, 150, 153 158, 196, 204
ஆல்பர்ட்ஸ், 142
ஆல்வா, 44, 58
ஆல்ஜியர்ஸ், 181
ஆன்டார்ட்டகோர்டியஸ், 230
ஆஸ்டர்லிட்ஸ், 162
ஆஸ்டின் சேம்பர்லேன், 267
ஆஸ்திரியா, 40, 52, 70, 76, 77, 93, 94, 95, 96, 107, 115, 118, 119, 123, 124, 131, 137, 146, 147, 152, 154, 157, 162, 164, 165, 169, 170, 174, 175, 185, 190, 191, 192, 194, 195, 197, 199, 203, 204, 205, 225, 226, 227, 228, 229, 230, 231, 232, 239, 242, 245, 246, 251, 264, 271, 272, 274, 312, 313, 326.
ஆஸ்திரிய-பிரஷ்யப் போர், 189, 197, 234.
ஆஸ்திரிய-ஹங்கேரி, 199, 219, 220, 248.
ஆஸ்பெர்ன், 165.

இ

இக்னேஷியஸ் லோயோலா, 54
இங்கிரியா, 107
இங்கிலாந்து, 2, 5, 7, 11 33, 34, 36, 38, 41, 42, 47, 48, 52, 59, 72, 81, 85, 88, 91, 92, 97, 106, 107, 112, 139, 148, 152, 154, 157, 158, 162, 175, 176, 177, 178, 183, 184, 187, 189, 194, 202, 203, 204, 205, 206, 207, 208, 214, 225, 226, 230, 231, 234, 235, 237, 245, 247, 252, 272, 273, 277, 278, 280, 281, 282, 283, 285, 287, 288, 325, 327.
இங்கிலாந்து சர்ச்சில், 7, 80
இத்தாலி, 2, 8, 9, 10, 11, 15, 15, 17, 18, 19, 20, 26, 27, 29, 30, 31, 32, 34, 36, 38, 39, 41, 42, 43, 95, 101, 103, 112, 152, 153, 154,

158, 163, 167, 168, 170, 174, 175, 183, 188, 196, 203, 208, 226, 231, 232, 237, 243, 245, 247, 250, 251, 253, 254, 255, 256, 265, 267, 268, 273, 274, 276, 277, 281, 282, 284, 285, 286, 289, 312, 323, 324.

இத்தாலியில் தேசியம், 203-209

இத்தாலியில் முசோலினி தலைமையில் — இரண்டாவது உலகப்போர், 251-57, 278; 280, 284-87

இத்தாலிய—ஆஸ்திரியப் போர், 203

இந்தியக் கடல், 23, 86

இந்தியா, 1, 19, 21, 23, 123, 124, 125, 136, 139, 140, 154, 283, 296, 301

இந்தோ சீனா, 303

இந்தோனேஷியா, 296, 305

இப்ரஸ், 238, 243

இன்குயிசிஷன், 56, 130

இன்டென்டென்ட்ஸ், 78, 80

இஸபெல்லா, 9, 20, 30, 199

இஸ்ரேல், 301

ஈ

ஈடன் அந்தோனி, 301

உ

உக்ரேன், 122, 253

உட்ரெக்ட், 58

உட்ரெக்ட் உடன்படிக்கை, 58, 96, 97, 119

உல்பிரிச், 311,

உல்ம், 162

உலகப்போர், முதல், 261, 262

உலகப்போர், இரண்டாம், 256, 276, 277, 287, 288, 335

உள்ளுணர்வுக் கொள்கை (Mysticism), 11

எ

எக்கார்ட், 11,

எகிப்து, 1, 153, 154, 155, 235, 243, 262, 296, 297,

எம்மானுவேல், 204, 205,

எம்மானுவேல், மூன்றும், (சார்டீனியமன்னன்), 129, (1730-73)

எம்ஸ், 200,

எமில், 186

எரிட்ரியா, 288

எர்பெர்ட், 257

எய்க்ஸ் - லா - செப்பேல் உடன்படிக்கை, 123

எய்லோ, 162

எயின்ஸ்டீன், 260

எர்னர் குரோடிங்கர், 333

எராஸ்மஸ், 11

எராஸ்மஸ், டெசிடெரியஸ், 16, 22,

எராஸ்மஸ் குற்றத்தின் பெருமை 24

எல் ஆல் மேய்ன், 284

எல் கிரேக்கோ, 17

எர்லாண்டர், 307,

எல்ப் நதி, 107

எல்பா தீவு, 170

எலிசபத் (இங்கிலாந்து அரசி), 23, 52, 57

எலிசபத் (ருஷ்ய அரசி), 114

எவான்ஜெலிகல் யூனியன், 62

எஸ்தோனியா, 107, 242, 260

ஏ

ஏடம் ஸ்மித் "நாடுகளின் செல்வம்",

ஏண்ட்வெர்ப், 58

ஏதென்ஸ், 120, 306

ஏமியென்ஸ், 243

ஏய்க்ஸ், 28

ஏரஸ்,
ஏரா, 295
ஏழாண்டுப்போர், 125, 136
ஏன், (Anne), 76

ஐ

ஐரோப்பா, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 12, 13 15, 16, 19, 20, 23, 24, 25, 26, 27, 28, 29, 32, 34, 35, 39, 40, 42, 46, 54, 57, 58, 62, 64, 67, 68, 69, 70, 71, 73, 79, 76, 82, 83 84, 86, 90, 91, 96, 97, 98, 99, 101, 102, 104, 105, 106, 110, 111, 112, 113, 117, 118, 119, 123, 125, 126, 129, 130, 132, 133, 140, 141, 146, 150, 152, 160, 161, 163, 164, 166, 168, 170, 171, 173, 175, 176, 178, 179, 182, 183, 184, 185, 187, 189, 194, 195, 196, 199, 202, 203, 207, 209, 214, 215, 216, 220, 221, 222, 224, 225, 227, 229, 234, 240, 245, 246, 249, 250, 252, 254, 258, 260, 261, 262, 263, 264, 265, 268, 269, 270, 271, 272, 273, 277, 279, 289, 297, 299, 304, 305, 310, 315, 320, 321, 322, 323, 324, 326, 327, 328, 329, 335, 337.
ஐரோப்பா, இடைக்காலம், 2, 3, 4, 5, 6
ஐரோப்பா, மறுமலர்ச்சி, 13
ஐரோப்பா, வணிகமுறை,
ஐரோப்பா, வல்லரசு சமநிலை, 34, 38, 97, 98, 101
ஐக்கிய நாடுகளின் சபை, 279, 288, 290, 291, 292, 293, 294, 295, 296, 297, 298, 323, 305, 307, 308, 321, 302, 330,
ஐவ்ரி, (வெற்றி), 52
ஐவன், மூன்றும், 9, 103
ஐஸ்லாண்ட், 18, 327

ஒ

ஒலிவர் கிராம்வெல், 81
ஒலிவியர், 187

ஓ

ஓக்கிஞுவா, 286
ஓடர் ஆறு, 66
ஓடெஸ்ஸா, 281
ஓல்டன், பார்லே வெல்ட், 60
ஓர்லாண்டோ, 245
ஓஸ்டன்ட், 233

க்

க்வ், 183

க

கலூர், 203, 204, 205, 206, 207, 255, 256
கசால்,
'கடல் நாய்கள்', 23,
கடார், 318
கத்தரீன் டெ மெடிச்சி, 48
கத்தோலிக்கர், (கத்தோலிக்க மதம்), 43, 45, 46, 48, 49, 52, 53, 54, 62, 63, 64, 64, 66, 70, 71, 76, 119, 180, 211, 212, 217
கப்போரெட்டோ, 243
கர்திஞல் கரப்பா, 55
கர்திஞல் புஞரி, 139
கரிபால்டி, 183, 206, 207, 208, 255, 256
கருங்கடல், 106, 114, 280
கம்பெட்டா, 201, 216
கமால் பாச்சா, 110, 262

கல்வின், ஜான், 46, 47, 208
கல்வினீயம், 40, 45, 46, 47, 50, 60
கல்வினியர், 53
கல்வினியர் கட்சி, 60
கலிலேயோ, 18
கலீஷியா, 115, 219, 222, 242
கலே, 38, 286
கலை வளர்ச்சி (Renaissance), 13
கலோன், 143
கவுண்ட் ஸ்டேடியோன், 166
கவேய்க்நாக், 180
கன் சப்ஸ்டேன்ஷியேஷன், 46
கன்பிளான் ஒப்பந்தம், 28
கனடா, 120, 121, 122, 130, 132, 133, 134, 301
கனேரித் தீவுகள், 19, 93

கா

காகசஸ் மலை, 248, 283
காங்கோ, 297
கார்ல்ரென்னர், 313
காஸ்பரி, 316
காசிமோ டெ மெடிச்சி, 15
காசினே, 285
காட்டோ கம்பிரேசிஸ் உடன் படிக்கை, 39
காடலோனியா, 66, 76, 78, 95, 275
காப்டன், 183
காப்போனி, 16
காம்பிரேய், 34, 37
காம்பிரேய் திட்டம், 33
காம்பிரேய் உடன்படிக்கை, 35
கார்க்கோவ், 281, 282, 285
கார்சிகாத் தீவு, 151, 152, 276, 277
கார்ல்மார்க்ஸ், 240, 254
கார்லோவிட்ச் உடன்படிக்கை, 118
கால்மார் ஒன்றிப்பு, 9
காலிபோர்னியா, 93
கான்ஸ்டன்டைன், 2, 263
கான்ஸ்டன்ஸ், 10
கான்ஸ்டான்டி நோபிள், 15, 116, 118, 228, 246
கானிங், 176

கி

கிசோ, 179
கியாட்டோ, 17
கியோ-செள, 215
கியோவன்னி, 17
கிரகர் மெண்டெல், 223
கிரகரி, பதினேராம், 11
கிரனடா, 9, 26, 29, 30
கிரனடா உடன்படிக்கை, 33,
கிராக்கோ, 239, 240
கிராண்ட் அலெயன்ஸ், 92
கிராண்ட், 14, 15, அ. கு., 36, 41, 58, 141, 199, 213
கிராஞ்டைன்ஸ், 125
கிரிமியா, 173, 182, 184, 286, 285
கிரிமியாப்போர், 173, 194, 195
கிரின்வில், 22
கிரிஸ்டியன், 107
கிரிஸ்டியன் இரண்டாம், 107
கிரீட் தீவு, 227, 228,
கிரீஸ், 176, 177, 228, 246, 253, 262, 265, 266, 267, 268, 296, 304, 305, 324, 326, 327
கிரேக்க தேசம், 13
கிரேக்க நாகரிகம், 1, 130
கிரேக்க மக்கள், 3
கிரேக்க மொழி, 14, 15,
கில்பர்ட், 23
கிழக்கு இந்தியத் தீவுகள், 93, 94
கிழக்கு பொமரேனியா, 120

கிழக்கு ஜெர்மனி, 289, 296, 311, 315, 321
கிளமான்சோ, 216, 245, 252
கிளாடு சட்டங்கள், 178
கிளார்க் மாக்ஸ்வெல், 332
கிளவ்ஸ் சுலுடர், 18
கிளீவ்ஸ் 117, 119, 120
கிறிஸ்டியன், 107
கிறிஸ்டோபர் கொலம்பஸ், 20, 21, 23, 24, 30
கிறிஸ்து, 12, 13, 19, 44
கிறிஸ்து நாகரிகம், 1, 2
கிறிஸ்து ஊழி, 1
கிறிஸ்துமதக் கொள்கை, 24
கிறிஸ்துமஸ் பண்டிகை, 2
கிறிஸ்துவைப் பின்பற்றல், 12
கினிக்கரை, 19

கீ

கீல் கால்வாய், 217
கீவ், 285

கு

குடால் கெனல், 284
குப்லாய்கான், 104
குயில்ஹாம் பூதே, 16
குயின்டின், செயின்ட், 248
குயூபா, 94
குர்லேந்து, 239
குருஷாவ், 306, 314, 318
குரோஷியஸ், 59
குரோஷியர், 190
குஸ்டாவஸ் அடால் பஸ், 64, 65, 66, 76, 107
குஸ்டாவஸ் மூன்றும், (சுவீடன் மன்னன்), 129 [1771-92]
குஸ்டோசா, 208
குஸ்டோவஸ் வாஸா, 107
குஜூக்கைநார்ஜி உடன்படிக்கை, 116

கூ

கூட்ராஸ், 51
கூரெடாரோ, 185

கெ

கெக்ஸ்ஹோம், 107
கெட்டில்பி, 142 அ. கு.
கெமால், முஸ்தபா, 111
கெய்ரோ, 283, 286
கெர்சன், 285
கெரன்ஸ்கி, 241, 242
கெல்டிக், 268
கெல்வாக், 267
கென்ட் 58
கென்ட் சமாதானம், 58

கே

கேத்தரின், 114, 115
கேத்தரின் இரண்டாம், 127, 129
கேத்தரின் இரண்டாம், வெளி நாட்டுக் கொள்கை, 115
கேம்போ போர்மியோ உடன் படிக்கை, 153
'கேலிகன் சுதந்திரம்', அறிக்கை, 87
கேவண்டிஷ், 24
கேன்ஸ், 171
கேஸ்டைல், 9, 29
கேஸ்டெல் பிடார்டோச், 182
கேஸ்டெல் விடார்வோ, 207
கேஸ்டன் பிரபு, 72, 73

கை

கைஸ், 48, 49, 50, 51

கொ

கொமாரஸ், 60
கொரிக்னி, 50
கொரியா, 286
கொல்லி, 124
கொலோன், 91, 286
கொன்கார்டாட், 156

கோ

கோசுத், 189
கோடாய், 165
கோண்டே பிரபு, 78, 79, 80, 81, 84
கோப்பர் நீக்கஸ், 18, 20, 22
கோபன்ஹேகன்,
கோமுல்கா, 318
கோம்ட் டெ சோய்சான்ஸ், 73
கோர்னீல், 100
கோல்டன் புல் 8
கோல்பர், 84, 85. 86, 89,
கோல்பரும் நிதியும், 84-87
கோல்பரும் வாணிக நிலையும், 86-90
கோல்பரிசம், 85
கோனிக்கிராட்ஸ், 196
கோஷியஸ்கோ, 115

ச

சமயச் சீர்திருத்த இயக்கம், 35 36, 40, 43, 56
''சமூக நலச் சங்கம்'', 28
சர் ஆர்தர் வெல்லெஸ்லி, 167, 169
சர்ச்சில், 282, 283, 284, 285, 286, 290, 323
சர்ச்சில்-ரூஸ்வெல்ட் - ஸ்டாலின் மகாநாடு, 285
சர் டக்ளஸ் ஹேயக், 237
சர் பிரான்சிஸ் டிரேக், 23
சர்வ தேச சங்கம், 247, 249, 250, 251, 265, 266, 267, 268, 269. 274, 275
சர் ஜான் பிரஞ்சு, 237
சல்லி, 53
சல்பெரினே, 205
சலசார், 308
சலமன்கா, 168
சலோனிக்கா, 228, 229

சா

சாக்சனி, 61, 108, 109, 120, 124,
சாதாரண வாழ்க்கைச் சந்நியாசிகள் (Brethren of the Common life), 12
சார், 273
சார்டீனியா, 30, 44, 93, 130, 154, 170, 174. 189, 190
சார்லஸ், ஆரும் (ஆஸ்டிரியா), 123
சார்லஸ் (ஆஸ்டிரியா), 93, 94
சார்லஸ், முதலாம் (இங்கிலாந்து), 79, 194, 195
சார்லஸ் இரண்டாம் (இங்கிலாந்து), 89, 92. 135
சார்லஸ், பத்தாம் (சுவீடன்), 107
சார்லஸ், பன்னிரெண்டாம் (சுவீடன்), 108, 109
சார்லஸ், பதினென்காம் (சுவீடன்), 175
சார்லஸ், ஏழாம் (பிரான்ஸ்), 27
சார்லஸ், எட்டாம் (பிரான்ஸ்), 30, 31. 32. 33. 35
சார்லஸ் ஒன்பதாம் (பிரான்ஸ்), 50, 51
சார்லஸ், பத்தாம் (பிரான்ஸ்), 177, 179
சார்லஸ், ஐந்தாம் (போர்த்துகல்), 22
சார்லஸ், இரண்டாம் (ஸ்பெயின்). 93, 94,
சார்லஸ், மூன்றும் (ஸ்பெயின்), 95
சார்லஸ், நான்காம் ஸ்பெயின்)
சார்லஸ், நான்காம் (ஜெர்மனி), 8
சார்லஸ், ஐந்தாம் (ஜெர்மனி), 35, 42, 43, 44, 45 54, 77
சார்லஸ், ஐந்தாம் (ஜெர்மனி) முல்பெர்க் வெற்றி, 45
சார்லஸ், மூன்றும் (நேப்பிள்ஸ்), 129
சார்லமேகன், 26
சான்பிரான்சிஸ்கோ, 293

சி

சிக்மண்ட் பிரூயட், 333
சிங்கப்பூர், 283
சிங்டோ, 226
சிங்மார்ஸ் பிரபு, 73
சிசரோ, 14
சிசிலி, 9, 11, 42, 94, 95, 174, 285, 312
சியாங்-கேய்-ஷேக், 286
சிரக்கியூஸ், 285
சிரியா, 262, 297
சில்லி, 175
சிலுவைச் சண்டை, 18
சிஸ் ஆல்பைன் குடியரசு, 153
சிஜிஸ்மாண்ட், 11, 107

சீ

சீசர் போர்ஜியோ, 10
சீனு, 15, 18, 21, 22, 23, 103, 215, 226, 233, 276, 282, 285, 286, 287, 290, 302, 315, 331

சு

சுஆரெஸ், 184
சுவிங்கிலி, 45, 47.
சுவிட்சர்லாந்து, 9, 35, 45, 47, 49, 154, 236, 241, 242 295, 306
சுவீடன், 5, 8, 62, 64, 67, 68, 68, 89, 106, 107, 108, 109, 111, 115, 119, 129, 158, 162, 163, 164 170, 175, 295,
சுஷ்நிக், 272, 313, 326

சூ

சூயிரிச், 45

செ

செக்கோ-ஸ்லோவாக்கியா, 246, 265, 272, 273, 274. 275, 277, 280, 315, 321
செடான், 201
''செப்டம்பர் கொலைகள்'' (1782), 147
செபஸ்டபோல், 188. 283, 285
செபஸ்டியன் பிரான்ட், 16
செயின்ட் கு வின்டின், 38, 243
செயின்ட் சைமன், 179
செயின்ட் பீட்டர்ஸ்பர்க் 110
செயின்ட் வின்செண்ட், 125
செயின்ட் ஜெர்மேய்ன் உடன் படிக்கை, 49
செர்வீட்டஸ், 47
செர்பியா, 190, 224, 226, 228, 229, 230, 231, 234, 246, 248, 253
செராஜிவோ, 229
செவனீஸ், 95
சென் பிரான்சிஸ்கோ, 288
சென் ஸ்டெவானே, உடன் படிக்கை, 225
சென்டா, 118
சென்னே, 123
செனபன், 206
செனிகல் 19, 125

சே

சேக்ஸனி, 26, 39, 42, 44, 45, 64, 190, 210
''சேசு சபை,'' 54, 57, 64, 130, 137, 138
சேம்பர்லேன், நெவில், 272, 277, 278
சேவாய், 92, 118, 174, 204, 206

சை

சைபீரியா, 240, 261,
சைலீஷியா, 123, 125, 261

சோ

சோபியெஸ்கி, 91, 118
சோரம் ஆறு, 238
சோமாலிலாந்து, 288, 306, 323

ஞ

ஞான மார்க்க சந்நியாசிகள், (Spiritual Franciscans), 11

டச்சு, 135
டச்சுக்காரர், 87, 90, 91, 92, 95, 97, 166
டன்கெர்க், 81, 280
டஸ்கெனி, 129

டா

டாசிட்டஸ், 133
டார்ட்மண்ட், 285
டார்டனெல்ஸ், 116, 160, 246
டார்வின், சார்ல்ஸ், 223
டால் பஸ், 272, 312
டான், 128,
டான்டான், 142, 147, 149
டான்டே, 5, 13,
டான்சிக், 261, 277
டாஸ், 258, 266
டாஸ் திட்டம், 266

டி

டிட்டோ, 316
டிகால், சார்லஸ், 302, 303, 304 326
டியெப்பே, 53
டிரண்ட், 45, 54, 62
டிரபால்கர், 160
டிரஸ்டன், 177
டிராவெஸ், 146
டிரான் சப்ஸ்டேன்ஷியேஷன், 2, 12, 46
டிரான்சில்வேனியா, 118
டிரிப்போலி, 227
டிரேனியன் கடல், 207
டிரைப்பஸ், 218
டிரைப்பஸ் குழப்பம், 218
டிரோட்ஸ்கி, 240, 241, 261
டினீபர், 115
டிஸ்ரேலி, 226

டீ

டீன்ரஸ்க், 297

டு

டுமூரியே, 147
டுர்கோ, 143
டுரேன் பிரபு, 77, 78, 80, 81, 84
டுலியர்ஸ், 142
டுனிஸ், 226, 274

டூ

டூப்ளே, 136
டூபாரி அம்மையார், 136, 141
டூயரர், 17
டூல், 39, 68
டூலூன், 148
டூரின், 206
டூன்ஸ் போர், 81

டெ

டெ அனுன்சியோ,
டெகால்,
டெகோண்டி, 80
டெ செவிக்னி 100
டெ சே, 176
டெட்சல், 26, 41, 42, 43
டெட்டின்ஜன், 123
டெப்ட், 59
டெப்ரூக், 284
டென்மார்க், 5, 8, 62, 63, 82, 91, 107, 108, 110 120, 158, 163, 195, 280, 286, 304, 305, 323, 326,
டெனன்பெர்க், 236, 239
டெனியர்ஸ், 60
டெஸ்கார்டிஸ், 101
டெஹரான், 285

டே

டேரியன் மலை, 21
டேலிராண்ட், 170
டேவிட் ஹியும், 126
டேன்டன், 142, 146, 148
டேன்பர்க், 238
டேன்ஜீயர்ஸ், 19
டேனியர், 187
டேனியூப், 65, 118
டேனிஷ், 65, 66

டை

டைரேல், 131

டொ

டொபேகா, 125

டோ

டோப்ருஜா, 242
டோமினிக்கா, 125
டோர்டிசிலாஸ் பிரிவினை, 23
டோரிக் கட்சி, 96
டோவர் இரகசிய உடன் படிக்கை, 89
டோன் இனிகோ லோப்பஸ் டெரிகால்டே, 54

ட்

ட்ரூமன், 324, 327

தா

தாமஸ் அகுயினஸ், 4
தாமஸ் ஆ கெம்பிஸ், 4, 11
தாமஸ் ஹாப்ஸ், 126

தி

திதரோ, 126, 127
திப்பு சுல்தான், 154, 166
திபெத், 232
தியர்ஸ், 178, 216
திருச்சபை, 2, 3, 4, 8, 10, 11, 12, 13, 15, 24, 25, 27, 43, 45, 46, 47, 50, 68, 69, 150, 161, 218, 228
திருடர் தீவு, 22
தில்லி (Tilly), 63, 75
திஹேக், 323

தீ

தீசியன், 17

து

துப்செக், 317, 318
துருக்கி, 108, 109, 112, 118, 119, 187, 188, 228, 231, 243, 250, 251, 252, 262, 275, 324, 326, 327
துருக்கியர், 15, 91, 114, 116, 120, 131, 132, 153, 154, 176, 187, 188, 215, 225, 226, 228, 246, 248, 262, 263, 265
துலூஸ், 187

தொ

தொழிற் புரட்சி, 85

ந

நவ்கோரட், 9, 103
நவரீனே, 176
நவார், 48, 52
நவார், ஹென்றி, 51, 52
நவார், நாலாம் ஹென்றி, 52
நன்னம்பிக்கை முனை, 20, 21 அ. கு.

நா

நாக சாக்கி, 280, 287
நாமூர், 245
நார்வா, 112
நார்வீஜிய, 8
நார்வே, 107, 108, 172, 280, 304, 305, 323, 326, 327
நான்டஸ், 53, 150
நான்டஸ், ஆணை, 53, 71, 83, 88
நாஸர், 301
நாஸிஸம், 270, 271, 275, 285, 289

நி

நிக்கர், 143
நிக்கோலஸ், இரண்டாம், (ருஷ்ய), 224
நிக்கோலஸ், ஐந்தாம், 15
நிமகுவன் சமாதானம், 90
நியு ஆர்லியன்ஸ், 136
நியூட்டன், 126, 332
நியூ பவுண்ட்லாண்ட், 21, 96
நிலமானிய முறை, 7, 8, 28, 74
நிலமானியப் படை, 29
நிளவே, 243
நிஸ்டன் உடன்படிக்கை, 108

நீ

நீடன் நதி, 169

நீவா நதி, 109

நூ

நூரம்பர்க், 288

நூருண்டுப் போர், 3, 6, 7, 27

நெ

நெத்தர்லேண்ட்ஸ், 41, 44, 53, 56, 57, 59, 63, 64, 93, 95, 96, 97, 98, 131, 155; 160, 324, 327

நெத்தர்லேண்ட்ஸ் சண்டை, 56

நெப்போலியன், முதலாம், 125, 137, 142, 148, 149, 150, 151, 152, 153, 154, 155, 156, 157, 158, 159, 160, 161, 162, 163, 164, 165, 166, 167, 168, 169, 170, 171, 172, 173, 175, 181, 182, 183, 199, 203, 216, 252, 281, 282

நெப்போலியன் பிறப்பு, 151

நெப்போலியன், படைத்தலைவன், 152

நெப்போலியன் ஜோசப்பினைத் திருமணம் செய்தல், 152

நெப்போலியன், இத்தாலியப் படையெழுச்சி, 153

நெப்போலியன் கேம்போ-போர்மியோ உடன்படிக்கை, 153

நெப்போலியன், எகிப்து படையெழுச்சி, 153

நெப்போலியன், பிரமிட் சண்டையில் வெற்றி, 154

நெப்போலியன் முதல் ஆலோசகராதல், 155

நெப்போலியன் சீர்திருத்தங்கள், 155-157

நெப்போலியன்; இரண்டாம் இத்தாலியப் படையெழுச்சி, 158

நெப்போலியன், மாரென்கோ வெற்றி, 158

நெப்போலியன் ஹோயென்லின்டென் வெற்றி, 158

நெப்போலியன் நிரந்தர ஆலோசகராதல், 159

நெப்போலியன் அரசனுதல், 159

நெப்போலியன் டிரபால்கர் சண்டை, 160

நெப்போலியனும் இங்கிலாந்தும், 166

நெப்போலியன், ஐரோப்பிய வணிக முறை, 161

நெப்போலியன், ஆஸ்டிரலிட்ஸ் வெற்றி, 162

நெப்போலியன், ஜீனு சண்டை, 162

நெப்போலியன், ருஷ்ய வெற்றி, 164

நெப்போலியன், ஆஸ்பெர்ன் தோல்வி, 165

நெப்போலியன் மரியலூயிசாவை மணத்தல், 165

நெப்போலியன் தம்பி ஜோஸப் பை ஸ்பெயின் மன்னராக்கல், 166

நெப்போலியன் வீழ்ச்சி, 166-171

நெப்போலியன், ருஷ்யத் தோல்வி, 164

நெப்போலியன், டிரஸ்டன் சண்டையில் ஆஸ்டிரிய வெற்றி, 162

நெப்போலியன், லீப்சிக் தோல்வி, 169

நெப்போலியன், எல்பா தீவில், 170

நெப்போலியன், வாட்டர் லூ சண்டை, 171

நெப்போலியன், ஹெலினு தீவில், 171

நெப்போலியன் இறப்பு, 171

நெப்போலியன் லூயி (மூன்றும்), 168, 173, 175, 181, 182,

183, 184, 185, 186, 187, 188, 194, 199, 200, 202, 204, 205, 206, 208, 216

நெப்போலியன் லூயி பேரரசராதல், 182

நெப்போலியன் லூயி, உள்நாட்டு அரசியல், 186-188

நெப்போலியன் லூயி மெக்சிக்கோவில், 186

நெப்போலியன் லூயி, பிரஷ்ய-இத்தாலிய சண்டைகள், 187

நெப்போலியன் லூயி, கிரமியப் போர், 187

நெப்போலியன் லூயி வீழ்ச்சி, 200

நெப்போலியன் லூயி இறப்பு, 201

நெருப்புத் தீவுகள், 22

நெல்சன், 161

நே

நேச ஒன்றிப்பு, 227

நேச நாடுகள், 5, 35, 40, 51, 241

நேசப் படை, 280, 287

நேப்பிள்ஸ், 11, 28, 30, 31, 32, 33, 39, 42, 79, 94, 95, 129, 163, 172, 174, 207

நை

நைல் நதி, 6, 47, 154

நைஸ், 92, 152, 153, 204, 206, 274, 277

நொ

நொவாரா, 189

நோ

நோவாஸ்கோஷியா, 96

ப

பசிபிக் சமுத்திரம், 21, 22

படகோனியா, 22,

படோலியா, 118

பர்கண்டி, 28, 31

பர்கண்டி பிரபு, சார்லஸ், 27, 28, 29

பர்டினண்டு, இளவரசர், 239

பர்த்தலோமியோ டையஸ், 20, 21

பர்மா, 283

பரியான் வேர்ஷ், 252

பல்கலைக் கழகம், ஆக்ஸ்போர்டு, 5

பல்கலைக்கழகம், இத்தாலிய, 13

பல்கலைக்கழகம், எர்பர்ட், 26

பல்கலைக்கழகம், கோர்டோவா, சாலர்னே, 5

பல்கலைக்கழகம், பதுவா, 5

,, , பாரிஸ், 5

,, , பாவியா, 20

,, , லீடன், 60

பல்கேரியா, 226, 227, 228, 229, 230, 246, 265, 287, 289, 297, 315, 316, 321

பவேரியா, 63, 64, 65, 95, 96, 97, 123, 164, 166, 174, 190, 197, 209

பனமாக் கால்வாய், 21. 93

பா

பாகிஸ்தான், 296

பாக்தாத், 118, 227, 243

பாசல் உடன்படிக்கை, 152

பாபிலோன், 243

பாம்படூர் அம்மையார், 136

பார்சலோனை, 91, 275,

பார்மா, 56 57, 174, 204, 205

பாரிஸ், 27, 28, 40, 46, 51, 52, 80, 101, 125, 133, 145, 146, 147, 149, 154, 157, 159, 169, 179, 180, 182, 187, 201, 202, 217, 234, 245, 254, 256, 270, 285, 327

பாரீஸ் பார்லிமெண்ட் 78, 79, 84, 138, 143

பாரீஸ் உடன்படிக்கை (ஏழாண்டுப் போர் முடிவு), 125, 188

பாரீஸ் மாநாடு, (Second International), 222

பாராஸ், 153
பால்கன், 190, 224, 225, 226, 228, 229, 230, 232, 245, 246
பால்டிக் கடல், 6, 64, 86, 106, 167, 214, 280
பாலர்மோ, 207, 285
பாலஸ்தீனம், 246
பாலியாரித் தீவுகள், 93
பாவியாச் சண்டை, 36
பாஸ்டர், 223
பாஸ்பரஸ், 116
பாஸிஸம், 41, 253, 254, 255, 275, 289

பி

பிக்கர்ட், 28
பிக்கர்ட்ட, கர்னல், 218
பிக்காஸோ, 337
பிசர்ட்டா, 284
பிசா, 32
பிசா சமரசம், 11
பியட்மண்ட், 153, 158, 174, 189, 203, 204, 205
பிரஞ்சுப் புரட்சி, 132, 133, 134, 137, 140, 145, 146, 151, 152, 154, 156, 158; 160, 173, 182
பிரட்டனி, 29, 30
பிரடிரிக் வில்லியம், 88
பிரடிரிக் வில்லியம், நான்காம், 191, 192, 195
பிரடிரிக் ஹென்றி, 60
பிரடிரிக் பலடினேட் மன்னர், 61, 63, 64
பிரடிரிக், முதலாம், 117, 119, 120, 121
பிரடிரிக், இரண்டாம், பரிசுத்த ரோம சக்ரவர்த்தி, 8
பிரடிரிக், இரண்டாம் (பிரஷ்ய மன்னர்), 115, 121, 122, 123, 124, 125, 128, 129, 133
பிரடிரிக், இரண்டாம், பிரேக் வெற்றி, 124
பிரடிரிக், இரண்டாம், கொல்லின் தோல்வி, 124
பிரடிரிக், இரண்டாம், ரோங் பேக் வெற்றி, 124
பிரடிரிக், இரண்டாம், லூத்தன் வெற்றி, 125
பிரடிரிக், மூன்றும்(டென்மார்க்), 195
பிரசீடியம், 259
பிரமன், 67, 107
பிரமாண்டி, 18
பிரன்ஸ்விக் பிரபு, 147, 148
பிரஸ்ட், 286
பிரஸ்டர் ஜான், 19, 20
பிரஷ்யா, 10, 115, 116, 117, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 133, 137, 146, 147, 152, 158, 162, 163, 168, 169, 174, 175, 187, 189, 190, 191, 192, 194, 195, 196, 197, 199, 205, 208, 210, 211, 230, 236, 261, 277
பிரஷ்யா - பிரஞ்சுப் போர், 210
பிரஷ்னேவ், 315
பிராக்மாடிக் சேங்க்ஷன், 123
பிராங்கோ, 268, 275, 307, 308
பிராங்பர்ட், 190, 191, 202, 209
பிரான்செஸ்கோ பெட்ரார்க்கா, 14, 16
பிரான்டன்பர்க், 61, 65, 90, 117, 119, 120, 286
பிரான்ஷ-கோம்ட், 90
பிரான்ஸ், 2, 3, 5, 6, 7, 8, 10, 17, 18, 19, 27, 29, 31, 33, 36, 37, 39, 41, 46, 48, 53, 54, 56, 59, 62, 63, 66, 67, 69, 70, 71, 72, 74, 75, 76, 77, 78, 79, 82, 84, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93,

94, 95, 98, 99, 101, 102, 120, 123, 124, 125, 132, 135, 137, 139, 143, 146, 148, 151, 152, 154, 157, 158, 159, 162, 163, 164, 166, 167, 168, 169, 170, 171, 173, 174, 177, 178, 179, 180, 181, 182, 183, 184, 186, 189, 190, 194, 199, 200, 201, 204, 208, 209, 215, 216, 217, 218, 219, 222, 227, 230, 231, 234, 235, 236, 237, 238, 243, 245, 246, 247, 251, 252, 253, 266, 267, 269, 273, 274, 277, 278, 280, 281, 285, 287, 293, 296, 302, 303, 309, 323, 324, 326, 327, 329

பிரான்ஸ், நெப்போலியனுக்குப் பின், 173

பிரான்ஸ், லூயி பிலிப்பே ஆட்சியில், 178, 179, 180, 181

பிரான்ஸ், (1848), குடியரசு, 181

பிரான்ஸ், லூயி நெப்போலியன் தேர்வு, 181

பிரான்ஸ், மீண்டும் மன்னராட்சி, (மூன்றும் நெப்போலியன்), 182

பிரான்ஸ், பிரஷ்யச் சண்டை, 189

பிரான்ஸ், இத்தாலியச் சண்டை, 189

பிரான்ஸ், கிரிமியப் போர், 189, 190

பிரான்ஸ், மூன்றும் குடியரசு, 209, 216, 220

பிரான்ஸ், இரண்டாவது உலகப் போர், 292-99

பிரான்ஸ், பிரஷ்யப் போர், 200, 209, 234

பிரான்ஸ், ஆ ராபெல்லே, 18

பிரான்ஸ், ஆ வில்லோ, 18

பிரான்சிஸ், (பிரான்ஸ் மன்னர்), 34, 35, 40

பிரான்சிஸ், முதலாம், 35, 36, 37

பிரான்சிஸ், இரண்டாம் (ஆஸ்திரியா), 164, 165

பிரான்சிஸ், மேட்ரீட் உடன்படிக்கை, 36

பிரான்சிஸ், இறப்பு, 36

பிரான்சிஸ் ஜோஸப், 189, 220

பிரமிட் சண்டை, 154

பிரசல்ஸ், 327

பிரமிசல், 240, 241

பிரஸ்ட்-லிட்டோஸ்க் உடன் படிக்கை, 243

பிரான்கோ, 269

பிரியான், 252, 267

பிரினீஸ் மலை, 150, 169

பிரினீஸ் உடன்படிக்கை, 80, 81

பிரிட்டன், 289, 290, 293, 296, 300, 301, 306, 307, 309, 323, 326, 327, 331

பிரீட்டன் பெல்ட், 65

பிரீட்லேன், 162

பிரேக், 124, 189

பிரையன், 323

பிலிப், மிலான் கோமகன், 38

பிலிப், இரண்டாம் (ஸ்பெயின்), 38, 52, 56, 57, 58, 59

பிலிப் மூன்றும் (ஸ்பெயின்), 69

பிலிப், நான்காம் (பிரான்ஸ்), 11

பிலிப்பைன்ஸ், 22, 93, 283, 286

பிளமிங், 265

பிளன்ஹெய்ம் சண்டை, 95, 121

பிளாண்டர்ஸ், 17, 29

பிளாரன்ஸ், 5, 10, 14, 16, 17, 20, 31, 32, 36

பிளாரன்ஸ் நைட்டிங்கேல், 188

பிளாட்டோ, 14

பிஸாமத், 171

பின்லாந்து, 107, 163, 175, 241, 242, 287
பிஸ்மார்க், 189, 193, 194, 195, 196, 197, 198, 199, 200, 201, 205, 208, 209, 210, 211, 212, 213, 214, 215, 216, 226, 256
பிஸ்மார்க், அரசியலமைப்பு, 199, 257
பிஸ்மார்க், சேன்சலராக நியமனம், 192, 211
பிஸ்மார்க், முக்கிய கொள்கைகள், 193
பிஸ்மார்க், ஸ்லஷ்விக்-ஹோல்ஸ்டெய்ன் வெற்றி, 194
பிஸ்மார்க், ஆஸ்டிரிய-பிரஷ்யப் போர், 195
பிஸ்மார்க், அரசியல் அமைப்புத் திட்டம், 195-196
பிஸ்மார்க், எம்ஸ் தந்தி, 200, 201
பிஸ்மார்க், பிரஷ்ய-பிரெஞ்சுப் போர், 201
பிஸ்மார்க், உள்நாட்டுச் சீர்திருத்தங்கள், 210-214
பிஷர், 16, 75, அ.கு., 92, 99

பீ

பீசா நிக்கோலா, 19
பீட்டர், 25, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 117
பீட்டர், சீர்திருத்தங்கள், 110, 114
பீட்டர், மூன்றும், 114
பீட்டில்கள், 337
பீட்டர்ஸ் பர்க், 310

பு

புக்காரஸ்ட் உடன்படிக்கை, 242
புக்கோவினு, 239
புபெல்லா, 185
புருசில்லாவ், 239, 240
புரோடஸ்டான்ட், 44, 45, 47, 48, 49, 52, 58, 61, 66, 68, 70, 75, 87, 177, 212
புரோண்டேச் சண்டை, 78
புரோவென்ஸ், 28
புல்டோவா, 108, 109
புளுடார்க், 133
புளுஷர், 170
புளோம்பியர்ஸ், 204, 206
புளோம்பியர்ஸ் உடன்படிக்கை, 205, 206
புளாரிடா, 93
'புனித சங்கம்', 34, 113
புனித பர்தலோமியோ, 49
புனித பர்தலோமியோ படுகொலை, 49
புனித பீட்டர் மகாலயத் தொடக்கம், 25
புஷ், 170

பூ

பூட்ஸ், 39
பூர்போன் கர்தினல், 51
பூருஜெஸ், 58
பூனேய், 175

பெ

பெட்ரோகிராட், 109, 224
பெட்ரோ டெ கோவில்ஹாம், 19
பெர்க், 117, 119
பெர்குனுன்ட், 9, 30, 32
பெர்சிய வளைகுடா, 118
பெர்டினுன்ட், ஏழாம், (ஸ்பெயின்), 170
பெர்டினுன்ட், 32, 38, 43, 45
பெர்பெல்லன், 119,
பெர்லின், 68, 124, 128, 196, 226, 282, 286, 289, 308, 309, 336
பெர்ல் ஹார்பர், 281, 283
பெரால்ட், 101
பெரு, 177, 222

பெல்ஜியம், 66, 146, 172, 175, 177, 214, 216, 231, 234, 235, 236, 237, 248, 267, 280, 281, 282, 285, 304, 323, 324, 325
பெனகல், 93,
பெனலன், 97, 100, 142 அ.கு.
பெனிலக்ஸ், 305

பே

பேடன், 164, 197
பேய் தீவு, 218
பேலடினேட், 62, 63, 64, 65, 92

பை

பைரன், 176

பொ

பொக்காச்சியோ, 15
பொக்காச்சியோவின் டெ கேம ரோன், 15, 16
பொம்பாலின், 129
பொமரேனியா, 69, 110, 119
பொலான்ஷே, 216, 217
பொலான்ஷே எதிர்ப்பு, 216
பொலிடிக் கட்சி, 51, 52
பொலோன், 285
பொஹிமியா, 174

போ

போக்குவ, 84
போசுஏ, 101
போட்டிச்செல்லி, 17
போட்ஸ்டாம், 287, 291
போண்டினுபுளு, 169
போப், 2, 4, 10, 11, 12, 16, 18, 24, 32, 34, 35, 42, 43, 44 45, 54, 55, 63, 87, 130, 133 156, 159, 161, 163, 167 169, 183, 207, 208, 255, 256
போப், ஆறும் அலெக்ஸாண்டர், 22, 35
போப், ஏழாம் கிளமண்ட், 36
போப், ஏழாம் பியஸ், 159
போப், பத்தாம் லியோ, 25, 26
போப், இரண்டாம் ஜூலியஸ், 25, 26, 33, 34
போய்ன்கரே, 252
போர்டோ, 235
போர்த்துக்கல், 9, 20, 21, 23, 30, 77, 79, 95, 129, 165, 215, 295, 307, 308, 326, 327
போர்நோவோ, 32
போர்னியோ, 23
போலந்து, 18, 54, 64, 91, 104, 107, 108, 109, 111, 115, 118, 119, 129, 133, 137, 146, 167, 174, 194, 196, 239, 242, 246, 249, 250, 251, 260, 261, 262, 264, 265, 270, 272, 274, 277, 278, 239, 315, 318
போலந்து இரண்டாவது பாகப் பிரிவினை, 116
போலார்மோ, 285
போனிவேஸ், எட்டாம், 11
போஸ்னியா, 226, 228, 229
போஹேமியா, 3, 12, 40, 62, 63, 68, 124, 189, 219

ம

மங்கோலியா, 103, 104
மசப்பா, 108
மசாரின், 66, 69, 70, 77, 78, 79, 80, 81, 82, 109, 252
மசாரின் மக்கள் எதிர்ப்பு, 78
மசாரின் டூன்ஸ் வெற்றி, 81
மசானியெல்லோ, 78
மசீனி, 206
மத்தியதரைக் கடல், 30, 86, 162
மத்தியதரைத் தீவுகள், 94
மத்தியதரைப் பிரதேசம், 1, 9, 62
மத்தியாஸ், 62
மதஸ்கோ, 282

மன்சார்ட், 101
மன்ரோ, 185

மா

மாக்கியவல்லி, 9, 16, 151, 153
மாக்சிமில்லியன், 9, 32, 35, 42, 62
மாக்மோகன், 205
மாக்வெபர், 335
மாகியார்கள், 220
மாசேதுங், 315
மாட்ரிட், 275, 307
மார்க்கோபோலோ, 18, 103
மார்கோனி, 223
மார்கிரட், 8
மார்சலா, 207
மார்செய்ல், 187
மார்டின், ஐந்தாம், 11
மார்ன் நதி, 236, 238, 243
மார்ஸ் கடவுள், 122
மார்ஷல் வோஷ், 244, 252
மார்ஷல் ஹிண்டன்பர்க், 254
மாரட், 147
மாரிக்னே போர், 34
மாரிஸ் பிரபு, 44, 45, 60
மாரென்கோ, 158
மால்டா, 30
மால்ஷெர்ப், 149
மாஸ்கோ, 103, 168, 281, 282, 290
மாஜெண்டா, 205

மி

மிரூபோ, 142
மிலான், 10, 18, 32, 33, 37, 39, 93, 94, 97, 153, 189

மு

முசோலினி, பெனிட்டோ, 254, 255, 256, 261, 274, 275, 276, 277, 278, 279, 285, 286, 289
முத்திறத்தார் ஒன்றிப்பு, 226
முப்பதாண்டுப் போர், 56, 60, 61, 77
முப்பதாண்டுப் போர் முடிவு, 53, 67
முல்பெர்க், 45
முற்போக்குச் சமுதாயப் புரட்சியாளர், 241

மூ

மூனிச், 65, 273
மூவேந்தர் கூட்டிணைப்பு, 225

மெ

மெகலன், 21, 22, 23
மெகலன் குறுகிய கால்வாய், 22
மெக்சிக்கோ, 94, 175, 184, 185, 186, 199
மெசபோட்டேமியா, 1, 214, 262
மெட்டர்நிச், 170, 172, 175, 189
மெட்ஸ், 41, 67, 201, 202
மெட்ஸ், முற்றுகை, 38
மெடிச்சிப் பிரபுக்கள், 10
மெடிச்சி லாரன்ஸ், 10
மெய்ன்ஸ், 15

மே

மேக்கென்சென், 243
மேக்டேபர்க், 65, 119
மேக்மோஹன், 201
மேட்ரிட், 36, 57, 96, 165, 168
மேட்ரிட் உடன்படிக்கை, 36
மேடம் மரியக் கூரி, 223
மேன்டு ஆ, 153
மேய்ன், 64, 146
மேரி, பிலிப் திருமணம், 38
மேரிடெ மெடிச்சி, 69
மேரியாத் தெரேசா (ஆஸ்திரியா), 123, 124, 130
மேற்கிந்தியத் தீவுகள், 21, 30, 137
மேனுவல் சிரிசோலோ ராஸ், 15

மை
மைக்கல், 104
மைக்கல், ஆஞ்செலோ, 17
மைசூர், 166
மைனர்க்கா, 96, 125
மொ
மொரோக்கோ, 118, 227
மொலியர், 100
மொலுக்கஸ் தீவுகள், 23
மொடேனு, 174, 204
மொன்டெஸ்கியு, 127, 133, 134
மோ
மோண்ட் கோமரி, 283, 284
மோண்டே நீக்ரோ, 226, 228, 231, 246, 248
மோல்ட்கே, 196, 200
மோன்ட்காம், ஜெனரல், 136
மோன்ட் மொரன்சிப் பிரபு, 73
மோன்சியூர், 160
மோன்ஸ், 235
யா
யால்டா, 291, 287
யு
யுஜின் போஹர்நே, 163
யூ
யூகோஸ்லாவியா, 246, 251, 264, 265, 297, 316, 317, 320
யூஜின் இளவரசர், 94, 118
யூஜெனி மொன்டிஜோ, 182, 183
ர
ரங்கூன், 283
ரசீன், 100
ரபேல், 17
ரஸ்புடீன், 70
ரா
ராலே, 23
ரி
ரிச்சல்யு, 64, 65, 66, 69, 70, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 80, 81, 87, 109, 252
ரிச்சல்யு 'ஹியுக்நோக்களின் போர்', 72
ரிச்சல்யு ஹியுக்நோக்களுடன் போர், 73
ரிச்சல்யு லா ரொஷேல் வெற்றி, 73
ரிச்சல்யுவின் சீர்திருத்தங்கள், 74, 76
ரிஸ்விக் உடன்படிக்கை, 92, 98,
ரீ
ரீகா, 109, 242
ரீவோலி, 153
ரு
ருடோல்ப், இரண்டாம், 62
ருமேனியா, 190, 226, 232, 234, 239, 246, 248, 264, 265, 287, 289, 315, 316, 317, 321
ருஷியா (அல்லது சோவியத் யூனியன்), 69, 72, 83, 100, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 114, 115, 116, 117, 127, 137, 146, 154, 157, 158, 162, 163, 168, 175, 188, 192, 194, 219, 220, 221, 225, 226, 227, 229, 231, 234, 240, 241, 242, 246, 248, 251, 252, 258, 259, 260, 261, 265, 273, 275, 276, 277, 278, 279, 280, 281, 282, 283, 284, 287, 288, 289, 290, 297, 299, 309, 310, 313, 314, 315, 316, 317, 318, 319, 320, 321, 327, 328, 329, 331
ருஷியா, மறுமலர்ச்சி, 104
ருஷியா, வெள்ளை, 9
ருஷியாப் புரட்சி, 224, 240, 258
ருஷியா, சின்ன, 9
ருஷியா, துருக்கிப் போர், 225
ருஷியா, சென் ஸ்டெவானே உடன்படிக்கை, 225
ருஷியா, நேச ஒன்றிப்பு, 226

ருஷியாவும் பால்கனும், 229
ருஷியா, முதல் உலகப்போர், 239, 240
ருஷியா, பெரும் புரட்சி, 240-243, 257-260
ருஷியா, இரண்டாவது உலகப் போர், 279-285
ருஷிய டுனு, 114

ரூ

ரூஅன், 52
ரூசிலோன், 81
ரூமேலியா, 226
ரூர் ஆறு, 258
ரூன், 193, 200
ரூஸ்வெல்ட், 286, 287, 290
ரூஸோ, 127, 132, 133, 134, 152

ரெ

ரெட்டன் மார்க், 257
ரெம்பிரான்ட், 60
ரெய்மஸ், 238, 243
ரெவால், 108
ரென்ஸ், 218

ரே

ரேடிஸ்போன் கூட்டம், 90

ரை

ரைன், 65, 66, 150, 152
ரைன் நதிப் பிரதேசம், 11
ரைன் பிரதேச ஐக்கிய நாடுகள், 164
ரைஸ்விக் உடன்படிக்கை, 92, 92, 99

ரொ

ரொம்மல், 283

ரோ

ரோக்ராய், 66
ரோபஸ்பியர், 142, 148, 149, 150
ரோம், 2, 9, 11, 15, 17, 18, 24, 27, 32, 45, 152, 206, 207, 208, 209, 253, 325
ரோம், ஏகாதிபத்தியம், 8
ரோம், நாகரிகம், 1, 10, 35
ரோம், பரிசுத்த ரோமச் சக்ர வர்த்தி, 8
ரோமர், 4
ரோமஞப், 104
ரோமாக்ஞ, 204
ரோன்ட்ஜென், 223
ரோஸ்பேக், 124
ரோஜர் பேக்கன், 4, 18
ரோஜர்வான் டெர்வீடன், 17

ல

லங்கென் சால்சா, 196
லக்சம்பர்க், 90, 92, 304, 323, 324, 327
லட்சன், 65, 168
லத்தீன், 5, 11, 13, 13, 14, 15, 54
லம்பார்டி, 174, 204, 205
லம்பார்டியர், 39
லயன்ஸ், 148, 149, 187

லா

லாக்ஹார்ட், 81
லா பயட், 142
லா பெல்ட், 135
லா போன்டேய்ன், 100
லார்ட் கிட்சனர், 240
லா ரோஷ்புகால்ட், 101
லா வெண்டி, 148

லி

லிபியா, 288
லித்துவேனியா, 105, 239, 242, 242, 260
லியோ, பத்தாம், 25
லிவோனியா, 101, 102
லிஸ்டர், 223

லீ

லீப்சிக், 65
லீஜ், 235

லு

லுட்விக், 258

லூ

லூடென்டார்வ், 257
லூத்தர், மார்டின், 2, 26, 40, 42, 43, 44, 45, 46, 47, 48, 55, 61
லூத்தர், பிறப்பு, 25
லூத்தர் கட்சி, 63
லூத்தன், 124, 125
லூயி, பதினேராம், 'சிலந்தி மன்னர்', 8, 20, 24, 27, 28, 29, 31
லூயி பன்னிரண்டாம், 33, 34
லூயி, பதின்மூன்றும், 66, 69
லூயி, பதின்மூன்றும் இறப்பு, 76
லூயி, பதின்மூன்றும், ஏனுடன் திருமணம், 69
லூயி, பதினான்காம், 60, 81, 82, 83, 84, 85, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99, 100, 101, 104, 105, 106, 109, 113, 117, 132, 135, 137, 140, 141, 202
லூயி, பதினான்காம், திருமணம், 81
லூயி, பதினான்காம், உள்நாட்டு நிகழ்ச்சிகள், 82, 87
லூயி, பதினான்காம், சமயம், 85, 201
லூயி, பதினான்காம், முதற் சண்டை, ஸ்பெயினுடன், 87, 88
லூயி, பதினான்காம், டோவர் இரகசிய உடன்படிக்கை, 88
லூயி, பதினான்காம், வீழ்ச்சி, 90
லூயி பதினான்காம், கிராண்ட் அலையன்ஸ், 91
லூயி, பதினான்காம், பிளன் ஹெய்ம் தோல்வி, 95
லூயி, பதினான்காம், உட்ரெக்ட் உடன்படிக்கை, 95
லூயி, பதினான்காம். ராஸ்டட் உடன்படிக்கை, 95
லூயி, பதினான்காம், கூலப்பணி, 99-101
லூயி, பதினான்காம் பெருநூற் றாண்டு, 100
லூயி, பதினான்காம், 'கதிரவ மன்னன்' 101
லூயி, பதினான்காம், எதேச்சாதி காரம், 138-140
லூயி, பதினைந்தாம், 135, 141, 142
லூயி, பதினாறும், 141, 142, 146, 147, 150, 151, 152, 177, 197
லூயி, பதினாறும், பதவி நீக்கல், 149
லூயி, பதினாறும், தலை வெட்டப் படுதல், 148
லூயி, பதினெட்டாம், 170, 171, 177
லூயி பிலிப்பே, 178, 179, 180, 181, 182,
லூயி பிளாங், 179, 180
லூயி ஸியாஞ், 161
லூவர், 100
லூவோ, 84
லூன்வில் உடன்படிக்கை, 158

லெ

லெக் ஆற்றங்கரை, 66
லெ கிளார்க், 159
லெ நோத்ரு, 101
லெபஞன், 297
லெ பான்டோ, 187
லெ புரூன், 101
லெம்பர்க், 239, 240
லெயோ, மூன்றும், 2
லெயோ, பத்தாம், 43
லெயோபால்ட் (ஆஸ்திரியா), 118
லெயோபால்ட், முதலாம் (டஸ்கனி), 129
லெயோபால்ட், இரண்டாம், 94

லெயோபால்ட் (பெல்ஜியம்), 177, 207
'லெவியத்தன்', 126
லெவோ, 100
லென்ஸ், 71, 76
லெனின், 240, 241, 242, 250
லெனின் கிராட், 281
லெஹேவ்ர், 286

லே

லேட்வியா, 242, 260

லொ

லொரேன், 39, 90, 203, 245, 248

லோ

லோகர்னே, 267
லோப்பிடோல், 48
லோரன்ஸோ, 17

லௌ

லௌசேன் உடன்படிக்கை, 263

வ

வத்திகன், 257
வத்திகன், நூல் நிலையம், 15
வலூன், 265

வா

வாக்லாந்துத் தீவு, 237
வாசி, 48
வாட்டர்லூ, 170, 237
வாம்ஸ்டெயின், 168
வாமி, 147, 148, 150
வார்சா, 115, 239, 262
வார்சாச் சண்டை, 260
வால்டலீன் கணவாய், 76
வால்டெக்-ரூசோ, 216
வாலன்ஸ்டைன், 63, 65
வான் அய்க் சகோதரர்கள், 17
வான் குளுக், 235, 236
வான் மோல்ட் கீ, 236
வான் லூன், 6, 6 அ.கு.
வான் ஹின்டன்பர்க், 236
வாஸ்கோட காமா, 21
வாஸ்கோ நூனெஸ் டெ பல்பா, 21
வாஷிங்டன், 291

வி

விக்டர் இம்மானுவேல், முதல் (சார்டீனியா), 170, 190, 203, 205, 206, 207, 255
விக்லிவ், ஜான், 2, 12, 13, 40
விட்டன்பர்க், 27, 43
விட்டன்பர்க் கோயில், 26
வியட்நாம், 321
வியன்னை, 108, 153, 162, 173, 174, 337
வியன்னை, காங்கிரஸ், 173, 177, 178, 189, 190
வியூமே, 253
வில்கேட், 55
வில்லி பிராண்ட், 311
வில்பிரடோ, பரிடோ, 335
வில்லகோஸ், 190
வில்லானி, 16
வில்லியம், 120
வில்லியம், இரண்டாம், 60, 236
வில்லியம், சைலண்ட், 58, 59, 60, 90
வில்லியம், பிட், 162
வில்லியம், மார்ல்பரோ பிரபு, 94
வில்லியம் ஆப் ஒக்கேம், 12
வில்லியம் பிரடிரிக், முதலாம் (பிரஷ்யா), 117, 122, 129, 130, 192, 193, 210
வில்லியம் பிரடிரிக் முதலாம், கொள்கைகளும், சீர்திருத்தங்களும், 217–218
வில்லியம் பிரடிரிக், இரண்டாம், 209, 214
வில்லியம் பிரடிரிக், மூன்றும், 213, 214
வில்ஸன், வுட்ரோ, 245, 246, 247, 248, 249, 253, 256

வில்ஸன், வுட்ரோ, பதினைங்கு கருத்துகள், 248, 249, 250
விவிலிய நூல், 4, 12, 16, 17, 26, 43, 54

வீ

வீசர், 207

வு

வுட்ரோ வில்சன், 245, 246, 247, 248, 249
வுர்ட்டெம்பர்க், 164, 197
வுரூட், 259

வூ

வூரியே, 179

வெ

வெண்டல் வெல்கி, 'ஒரே உலகம்', 5
வெர்சேய்ல், 82, 101, 132, 142, 145, 202, 245
வெர்சாய் உடன்படிக்கை, 247, 249, 253, 261, 266, 270, 272, 273, 275
வெர்டன், 39, 67, 70, 107, 238, 239,
வெர்டினுன்ட், 190
வெர்வின்ஸ், 53
வெர்னர் ஹின்ஸ்பர்க், 333
வெர்ஜில், 13, 14
வெராகுரூஸ், 184
வெல்ஸ், எச். ஜி. 71, 71 அ.கு.
வெனிஸ், 6, 9, 17, 18, 32, 33, 34, 35, 36, 153, 189, 204, 208
வெனீஷியா, 174, 204, 205, 207
வெஸ்ட்பேலியா, 67, 78
வெஸ்ட்பேலியா உடன்படிக்கை, 66, 78, 79, 90, 108, 173, 174

வே

வேர்ட் முனை, 19
வேர்ட் தீவுகள், 19
வேய்காண், ஜெனரல், 262

வை

வைகௌண்டி பிரபுக்கள், 10
வைமார், பட்டினத்து பெர்ஞர்ட், 66

வொ

வொர்ம்ஸ், 2, 42, 44
வொர்மில் கூட்டம், 43
வொரே, 185

வோ

வோபான், 86, 97
வோல்கா ஆறு, 283
வோல்தர், 126, 127, 133
வோலினீயா, 239

ஸ்

ஸ்காட்லண்டு, 11, 21, 48
ஸ்கேண்டிநேவியா, 5, 269
ஸ்ட்ரால்சண்ட், 64, 109
ஸ்ட்ராஸ்பர்க், 90, 201, 202, 323
ஸ்டர்டி, 237
ஸ்டாலின், 285, 314, 315, 318
ஸ்டாலின்கிராட், 281
ஸ்டிரஸ்மேன், 258, 267
ஸ்டிரியா, 62
ஸ்டிரியா பெர்டினுன்ட், 62, 63
ஸ்பார்ட்டா, 121
ஸ்பியர், 43
ஸ்புட்னிக், 336
ஸ்பெயின், 6, 9, 11, 16, 17, 18, 20, 22, 23, 24, 27, 29, 30, 32, 33, 34, 38, 40, 41, 45, 47, 49, 52, 54, 55, 56, 69, 73, 76, 77, 78, 81, 86, 88, 90, 91, 92, 93, 94, 95, 96, 98, 129, 130, 133, 148, 159, 164, 165, 166, 168, 170, 171, 175, 176, 182, 184, 199, 200, 227, 265, 268, 275, 295, 307
ஸ்பெயின் நூற்றாண்டு, 69
ஸ்பெயின் வீழ்ச்சி, 81

ஸ்பெயின் அரசு வாரிசுச் சண்டை, 93, 120, 165
ஸ்மிர்னை, 262, 263
ஸ்மோலெல்ன்ஸ்க், 282
ஸ்லஷ்விக், 194–197
ஸ்லாவ், 189

ஸ

ஸஹாரா, 19

ஸோ

'ஸோஷியல் கான்டிராக்ட்', 127, 134

ஷா

ஷாட், 258
ஷாலராய், 235

ஷி

ஷிபுட்டி, 277

ஷூ

ஷூவார் சன்பெர்க், 191

ஷே

ஷேக்ஸ்பியர், 6

ஷ்

ஷ்மால் கால்டென், 44

ஜ

ஜகலன் பரம்பரை, 106
ஜட்லாந்து, 237
ஜப்பான், 21, 23, 231, 232, 245, 246, 247, 276, 279, 280, 281, 282, 283, 284, 288, 289, 333

ஜா

ஜான் கார்லோ, 307
ஜான் குட்டன் பர்க், 15
ஜான் சோபியஸ்கி, 107
ஜான் டெவிட், 60
ஜான் ருயிஸ் பிரேக், 12
ஜான் ருஷெலின், 16
ஜான் ரெய்னல்ட் பட்குட், 108
ஜான் லா, 141
ஜான் லாக், 126
ஜான் லூயிவிவெஸ், 16
ஜான், இரண்டாம், 8

ஜி

ஜிப்ரால்டர், 95, 96, 160, 284
ஜியார்ஜ் லவாவ், 251
ஜிரோவா, 19, 46

ஜீ

ஜீன்ப்ராசார், 16

ஜூ

ஜூலிச், 117
ஜூல்ஸ் பாவ்ரு, 201
ஜூலியஸ், இரண்டாம், 25, 33, 34
ஜூஸ்டினியன், 158

ஜெ

ஜெர்மனி, 5, 8, 11, 15, 17, 25, 26, 27, 35, 38, 40, 41, 42, 43, 44, 45, 46, 49, 54, 56, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 70, 75, 76, 81, 88, 107, 112, 120, 128, 131, 133, 147, 162, 163, 164, 168, 173, 174, 189, 190, 191, 192, 193, 194, 195, 197, 199, 200, 202, 209, 210, 211, 212, 214, 215, 218, 221, 222, 225, 226, 227, 231, 232, 235, 237, 240, 241, 242, 244, 245, 246, 250, 251, 252, 253, 256, 258, 259, 264, 265, 266, 267, 268, 269, 270, 271, 273, 275, 276, 277, 278, 280, 281, 282, 283, 284, 285, 286, 288, 289, 302, 305, 306, 308, 313, 314, 318, 319, 324, 327, 328, 333
ஜெர்மனியில் சமயச் சீர்திருத்த இயக்கம், 35, 38
ஜெர்மனி, மதமாற்ற இயக்கம், 41, 42
ஜெர்மனி, புரட்சி, 180
ஜெர்மனி, கூட்டுறவு நாடு, 190

ஜெர்மனியும் பிராங்வர்ட் சபையும், 190, 191, 200
ஜெர்மனி, பிரஷ்யாவின் தலைமையில், 192
ஜெர்மனி, தென் ஜெர்மன், நடு ஜெர்மன் இணைப்புகள், 293, 210
ஜெர்மனி, பிஸ்மார்க் தலைமையில், 193
ஜெர்மனி, ஸ்லஷ்விக்-ஹோல்ஸ்டெய்ன் வெற்றி, 194, 195
ஜெர்மனி, பிரஷ்ய-ஆஸ்டிரியப் போர், 196
ஜெர்மனி, வட ஜெர்மனி கூட்டிணைப்பு, 197
ஜெர்மனி, பிரஷ்ய-பிரஞ்சுப் போர், 199
ஜெர்மனி, முத்திறத்தார் ஒன்றிப்பு, 226
ஜெர்மனி, முதல் உலகப் போர், 230
ஜெர்மனி, முதல் உலகப் போருக்குப் பின், 257-259
ஜெர்மனி, ஹிட்லரின் தலைமையில், 268-273
ஜெர்மனி, இரண்டாவது உலகப் போர், 279-288
ஜெரார்ட் டூ, 60
ஜெரார்ட் குரூட், 11
ஜெருசெலம், 243
ஜெனரல் பிரான்கோ, 276

ஜே

ஜேம்ஸ், இரண்டாம் (இங்கிலாந்து), 91, 135
ஜேம்ஸ், மன்ரோ, 'மன்ரோ கொள்கை', 176
ஜேன்சென், 87
ஜேன்செனீயர், 87, 137

ஜோ

ஜோசப், முதலாம் (போர்த்துகல்), 129
ஜோசப், இரண்டாம் (ஆஸ்திரியா), 130, 132
ஜோசப் நெப்போலியன், 163, 165, 166
ஜோசப் பெர்டினென்ட், 92
ஜோசப் பில் சுட்ஸ்கி, 261
ஜோசப்பின் போஹர்நே, 152, 153, 165

ஹ

ஹங்கேரி, 118, 124, 131, 174, 189, 190, 199, 220, 245, 246, 251, 264, 287, 288, 289, 315, 316, 318, 319, 321
ஹனிபல், 158, 171, 197
ஹன்னிவர், 40
ஹஸ், 2, 40
ஹஸ்டன் பே, 97

ஹா

ஹாக்கின்ஸ், 23
ஹால்பேய்ன், 17
ஹால்ஸ், 60
ஹாலந்து, 12, 17, 18, 19, 48, 55, 59, 60, 63, 85, 88, 89, 90, 91, 94, 96, 97, 106, 112, 123, 148, 154, 175, 177, 181, 245, 280, 281, 284, 304, 305, 323
ஹான்ஸ் மெம்லிங், 17

ஹி

ஹிட்லர், 268, 269, 270, 271, 272, 273, 274, 275, 276, 277, 278, 279, 280, 281, 282, 286, 289
ஹியுக்நோ, 53, 54, 71, 72, 75, 84, 87, 98, 99, 120
ஹியுக்நோ படுகொலை, 50
ஹியுமானிசம், 14
ஹிரோஷிமா, 280, 287

ஹூ

ஹூத் எட்வர்டு, 301
ஹூவார்சன் பெர்க், 190

ஹெ

ஹெபர், 149
ஹெய்ல் செலசி, 274
ஹெர்செகோவினு, 226, 228, 229

ஹெலிகோலெண்ட், 214
ஹெலினுத் தீவு, 171, 173, 179
ஹென்றி, 'கப்பலோட்டும் காவலர்' 19, 20
ஹென்றி, இரண்டாம், 37, 38, 48
ஹென்றி, இரண்டாம், மேரியை மணத்தல், 38
ஹென்றி, இரண்டாம், எலிசபெத்தை மணத்தல், 38
ஹென்றி, மூன்றும், 51, 52
ஹென்றி நவார் (நான்காம்), 51, 52, 53, 56, 69, 81, 102, 104
ஹென்றி, ஆர்க் வெற்றி, 52
ஹென்றி, இறப்பு, 54
ஹெஸ்கேசல், 197

ஹே

ஹேக், 95
ஹேப்ஸ்பர்க், 35
ஹேய்டி தீவு, 159
ஹேய்ஸ், 7, 7 அ. கு.
ஹேஞ்ஞெவர், 121, 190
ஹேஸ், 42, 44, 45

ஹை

ஹைசஞ்ஞெவர், 284

ஹோ

ஹோ அன்சலெர்ன், 200
ஹோல்பேக், 126
ஹோல்ஸ்டைன், 120, 194, 195, 197
ஹோயென்லின்டென், 158
ஹோராஸ், 13